தாய்வீடு

231

ISSN 2369-3657

THAIVEEDU | JUNE | 2026

தாய்வீடு | ஜூன் | 2026

மட்டக்களப்புப் பொது நூலகம்:
தமிழரின் அறிவுசார் அடையாளம்
- ச. சத்தியதேவன்

சுயமாக எழுந்து நிற்கும் நமீபியா
- சிவா முருகுப்பிள்ளை

சீரிய திரைப்பட முன்னோடி
அருண் சிவகுமாரன்
- ரதன்

ISSN 2369-3657

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

தாய்வீடு

Publisher & Editor
PJ. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர்
பி.ஜெ. டிலிப்குமார்

நிறுவன வரைகலைஞர்
கருணா

ஆலோசகர் குழு
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பிரசாத் சொக்கலிங்கம்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா, சி. ரமேஷ்,
ச. சத்யதேவன்.

ஓவியங்கள்
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

தொழினுட்ப உதவி
சாம் டானியல்

நிர்வாக ஒருங்கிணைப்பு
சாம்பவி நிரோஷன்

அட்டைப்பட வடிவமைப்பு
பிரசாத் சொக்கலிங்கம்

வடிவமைப்பு
பிரசாத் சொக்கலிங்கம்,
tg. திருநெல்வேலி (இலங்கை),
தானா விஷ்ணு.

படங்கள்
istock.com,

ஒப்புநோக்கல்
கந்தசாமி கங்காதரன்,
ந. குகபரன், கௌரி,
தானா விஷ்ணு.

அஞ்சல் முகவரி
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Canada

Tel : +1 416 857 6406
Fax : +1 416 849 0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

ஆக்கங்கள் அனைத்துக்கும்
ஆக்கியோரே பொறுப்பு.
பெயர் தோற்றாத ஆக்கங்களுக்கு
ஆசிரியரே பொறுப்பு.

மனிதத்தை மீறும் மதச்சார்பு!

மதத்தலைவர்மார் என்போர், எந்தவொரு சமூகத்திலும், மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவர்களாகக் கருதப்படுவோர். ஒரு குறிப்பிட்ட மதத்தின்மீது நம்பிக்கை அற்றவர்களாக இருப்போர்கூட தமக்கு நம் பிக்கையற்ற அந்த மதஞ்சார்ந்த தலைவர்மாரை மதிப்புடன் நடத்துவதே உலகவழக்காக இருக்கிறது. கடவுள் நம்பிக்கையே அற்றோருங்கூட இந்த நடைமுறைக்கு விதிவிலக்காக இல்லாதிருப்பதைக் காண்கிறோம். இந்த நடைமுறை எப்போது தோன்றியதென்று குறிப்பிட்டுச் சொல்லவியலாத அளவுக்கு நெடிய வரலாற்றைக் கொண்டுள்ளது.

அதுபோன்றே, மதத்தலைவர்மார், சிறார் மீது பாலியல் வன்கொடுமைகள் புரியும் நிகழ்வுகளும் வர லாற்றின் நினைவுக்கெட்டிய காலந்தொட்டு இன்றுவரை தொடர்வது துன்பகரமானது. அது அனும திக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ, அசட்டைசெய்யவோ முடியாதது.

உலகளாவிய அளவிலே, சிறார் மீது இழைக்கப்படும் பாலியல் குற்றங்களுள் தொண்ணூறு விழுக்காட் டுக்கும் அதிகமானவை, பாதிக்கப்படும் சிறுவர் நன்கறிந்த, நம்பிக்கை வைத்துள்ள, அன்பு பாராட்டு கின்ற ஒருவராலேயே இழைக்கப்படுகின்றன என்பதற்கு வலுவான ஆதாரங்களுண்டு. இதன் காரண மாகவே, சிறார் தம்மீதான வன்முறையை வெளிப்படுத்தத் தயங்கியும் பயந்தும் குற்றச்செயல் தொடர அனுமதிக்கின்றனர்.

இந்தக் குற்றச்செயலைப் புரிபவர் ஒரு மதத்தலைவராக இருக்கும்போது, அவர் அந்தக் குழந்தையி னதும் குழந்தையின் குடும்பத்தினரினதும் மட்டுமன்றி, அந்தக் குழந்தை சார்ந்துள்ள சமூகத்தினதும் மதிப்புக்கு ஆளானவராய் இருக்கிறார். இது நிலைமையை மேலும் மோசமாக்குகிறது. குழந்தை தனது குடும்பத்தினருக்குத் தெரிவித்தாலும், குடும்பத்தினர் குற்றவாளியைச் சமூகத்துக்கு வெளிப்படுத்தத் தயங்குகின்றனர். இதனால் குற்றவாளி தனது குற்றச்செயலை ஏனைய குழந்தைகள் மீதும் திணிக்கத் துணிவுபெறுகிறார்.

இதையும் மீறி, எப்போதாவது ஒரு மதத்தலைவரின் குற்றச்செயல் வெளிப்பட்டால், அவர் சார்ந்த மதநிறு வனத்தின் முதன்மையான எதிர்வினை, குற்றவாளியைக் காப்பாற்றுவதாகவே இருக்கிறது. பாதிக்கப் பட்டோர் பற்றி மதபீடங்களோ மதத்தலைவர்களோ கரிசனைப்பட்டதற்கான சான்றுகள் இல்லவேயில்லை யெனக் கூறலாம். இது எல்லா மதங்களுக்கும் பொருந்தும் என்றபோதும், கத்தோலிக்கத் திருஅவையும் இங்கிலாந்துத் திருஅவையும் இத்தகையை செயற்பாடுகளில் பல தசாப்தங்களாக ஈடுபட்டமைக்கு ஆவ ணப்படுத்தப்பட்ட சான்றுகளுண்டு. பாலியற் குற்றஞ்சாட்டப்படும் மதத்தலைவர்மார், அவரவர் வாழும் நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு அமைய விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டுமென்பதே கத்தோ லிக்கத் திருஅவையின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாக இருந்தபோதும், நடைமுறையில் அவ்வாறு குற் றஞ்சாட்டப்படுபவர் மீதான விசாரணைகளை இரகசியமுறையில் திருஅவையின் சட்டங்களுக்கேற்ப மேற்கொண்டு, அவரைச் சட்டத்திடம் கையளிக்காது பாதுகாப்பதையே செய்துவந்துள்ளது.

அதனாற்றான், 2021-இலே திருத்தந்தை பிரான்சிஸ், கத்தோலிக்கத் திருஅவையின் சட்டங்களில் மாற்றங் களைக் கொண்டுவந்து பாலியல் துன்புறுத்தல் புரிவது மட்டுமல்ல, அதைப் புரியும் மதத்தலைவர்மாருக்குப் பாதுகாப்பு வழங்குவதும் குற்றமென அறிவித்தபோது, சிறுவர் நலன்சார் அமைப்புகளும், மனிதவுரிமை ஆர்வலரும் அதை மனதார வரவேற்று, பாலியற் குற்றங்களில் ஈடுபடும் மதத்தலைவர்மாருக்குத் தண்டனையும், பாதிக்கப்பட்டோருக்கு நீதியும் வழங்குவதில் ஒரு புதிய அத்தியாயம் திறக்கப்பட்டுள்ளதாக நம்பினர்.

இதன் பின்னணியில், பல்லேகம ஹேமரத்தன தேரர் மீதான குற்றச்சாட்டையடுத்து இலங்கை அரசின் நகர்வுகளும் நடவடிக்கைகளும் அதிர்ச்சியும் ஏமாற்றமும் ஊட்டுவன. உலகின் முன்னேற்றப்போக்கிலி ருந்து பின்வாங்கி, இலங்கை எதிர்த்திசையில் பயணிக்க முனைவதைச் சுட்டுவன. நாட்டின் மிகப்புனித மானவை எனக்கருதப்படும் எட்டு பௌத்த தலங்களின் அதிபதியான ஒருவருக்கெதிராகக் குற்றச் சாட்டை முன்வைக்க, பாதிக்கப்பட்டவருக்கு அசாத்திய துணிவு இருந்திருக்கவேண்டும். ஆனால், சட்டம் அந்தக் குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பாதுகாப்பதிலேயே முனைப்பாக இருப்பது, பாதிக்கப்பட்டவர்கள் ஏனைய குற்றவாளிகளை வெளிப்படுத்தத் தயங்குவதற்கே வழிவகுக்கும்.

இலங்கையில் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் முன்னூறு வரையிலாக பௌத்த பிக்குமார் மீது சிறுவர் மீதான பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகள் இருப்பதாகப் பொதுவெளியில் தரவுகளுண்டு. வெளிப்படுத்தப்பட்டவர்களைவிட வெளிப்படுத்தப்படாத குற்றவாளிகள் அதிகம் இருப்பர் என்பது நிச்சயம். ஆகவே, இது இலங்கையில் மிகப்பரவலான பிரச்சினையென்பது தெளிவு. இருந்தபோதும், குற் றஞ்சாட்டப்பட்டவரை விசாரிக்க, பௌத்த சங்க ஒழுக்க விதிமுறையை நாட்டின் ஜனாதிபதியே முன்மொ ழிவது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாதது. இது அரசின் மதச்சார்பின்மைச் சாயத்தை வெளுக்க வைத்துவிட்டது என்பதற்கப்பால், பாதிக்கப்பட்டோருக்காய், அவர்கள் சிறாராய் இருந்தபோதும், அரசு அக்கறை காட்டாதது மிகக் கொடுமையானது.

இதற்கு எதிராக நாட்டில் பரவலாக எழுந்திருக்கும் எதிர்ப்புக்குரல்களே ஒரே ஆறுதல். அந்தக் குரல்களை வலுப்படுத்தவேண்டியது நாகரிகமடைந்த ஒரு சமூகத்தின் அத்தியாவசியக் கடமை.

தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...

மனிதத்தை மீறும் மதச்சார்பு! 3

மட்டக்களப்புப் பொது நூலகம்: தமிழரின் அறிவுசார் அடையாளம் 5
- ச. சத்தியதேவன்

மத நம்பிக்கை அரசாலும் அந்நிய சக்திகளாலும் அழிக்கப்படும் லெபனான் 15
- ரதன்

சுயமாக எழுந்து நிற்கும் நமீபியா 20
- சிவா முருகுப்பிள்ளை

மத்திய கிழக்கில் அமெரிக்கப் படைத்தளங்கள், கூட்டணிகள்: ஈரானைச் சுற்றி வளைக்கும் அமெரிக்கா! 27
- ரவீந்திரன் துரைசிங்கம்

இருதுருவ அரசியலை மீறிய வாக்காளர் தீர்ப்பு: தமிழக வெற்றிக் கழகத்தின் எழுச்சியும் அதன் பின்னணிகளும் 32
- பொன்னையா விவேகானந்தன்

நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 38
- நெல்லை ஜெயசிங்

பேராசிரியர் ஜீ.எல். பீரிஸும் தந்தை செல்வா நினைவுப் பேருரையும் 42
- வீரகத்தி தனபாலசிங்கம்

1966: ரதனசார தேரர் முதலாவது மொழிப்போராட்டத் தியாகியா? 46
- என். சரவணன்

வர்க்க சக்தியாக மொழியும் ஆங்கிலம் பேசும் மேட்டுக்குடியினரும் 56
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

எப்ஸ்ரின் முத்த வியாதி 66
- போல் ஜோசேப்

மனவழுத்தமும் தற்கொலைகளும் – காரணிகளும் தீர்வுகளும் 68
- த. சிவபாலு

முதுமை மானுடரின் பொற்காலம் 72
- குமார் புனிதவேல்

கல்வியும் சூழல் கரிசனையும் 74
- அகமட் பிஸ்தாமி

பதின்ம வயதினரின் வாகனம் ஓட்டுதலும் மது, போதைப்பொருட் பயன்பாடும் 77
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

காப்புறுதி சீட்டிழுப்பு அல்ல! 82
- செந்தூரன் புனிதவேல்

வீட்டின் பெறுமதியைத் தக்கவைக்க ஒரே வழி – வீட்டுப் பராமரிப்பு 84
- வேலா சுப்ரமணியம்

சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஒற்றர்கள் 86
- சுப்ரமணியம் ஜெயசீலன்

விண்ணைத் தொட்ட வால்கள்! 90
- கிறிஸ்டி நல்லரெத்தினம்

அமெரிக்காவின் லஸ் வேகாஸ் 93
- குரு அரவிந்தன்

கழிவகற்றல் நோக்கிய மக்களின் மனப்பாங்கு 96
- சரவணன் லக்ஹரன்

எம்மூர் வரலாறுகளைச் சுவடிப்படுத்துதல் 100
- நடராசா சிறிரஞ்சன்

ஓர் ஈழ நாட்குறிப்பு – 4 101
- ஓவியர் ஜீவா

பச்சைமைப் புரட்சி: இளைஞர்களின் தைரியத்தின் புதிய முகம் 104
- பழனிநாதன் நிவேதனன்

அல்காரித ஏகாதிபத்தியம் 107
- அருள்கார்க்கி

உழைப்பின் முகம், சமூகத்தின் மறதி: தேயிலைத் தோட்டப் பெண்கள் 108
- பிரியதர்சினி யோகராசா

மணமுறிவு: பெண்களுக்குப் பேரனர்த்தமா? பெருங்கனவா? 114
- சிவா மாலதி

Adolescence: குறுந்திரைத்தொடர் குழந்தைகள் மீது ஆதிக்கம் செலுத்தும் சமூக ஊடகங்கள் 115
- ரூபன் சிவராஜா

நவீன நாடகங்களில் தமிழ்த்தொன்மங்கள் 121
- ம. கருணாநிதி

வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலையாக காமன் கூத்து 124
- அருணாசலம் லெட்சுமணன்

சிற்பி என்னும் இலக்கிய ஆளுமை 130
- வே. விவேகானந்தன்

முஸ்லிம் சமூகத்தின் சிந்தனை வளர்ச்சியும் மனிதநேயச் சமூகவியலும்: பேராசிரியர் ஏ.சீ.எல். அமீர் அலியின் வகிபாகம் 133
- இக்பால் அலி

வைத்திய கலாநிதி தி. ஞானசேகரன்: வாழ்க்கையும் ஐரோப்பியப் பயண அனுபவங்களும் 139
- சந்திரெகளரி சிவபாலன்

ஞானம் – ஞானசேகரன் நினைவுகள் 144
- முருகபூபதி

தோழர் வேலு: போராட்டம் எங்கேயோ அங்கே... 149
- மு. நித்தியானந்தன்

சீரிய திரைப்பட முன்னோடி அருண் சிவகுமாரன் 154
- ரதன்

அந்தனி ஜீவா: மலையக அடையாளத்தின் சமரசமற்ற குரல் 156
- எம்.எம். ஜெயசீலன்

டி.பி.எஸ். ஜெயராஜின் மறைவு: இதழியலில் இலங்கை தமிழர் அரசியல் உரிமைப் போராட்ட ஆவணப்படுத்தலின் ஒரு சகாப்தத்தின் முடிவு 160
- வீரகத்தி தனபாலசிங்கம்

'எங்கள் தொடர்புகள் இறுதிவரை தொடரட்டும்!' – டீ.பி.எஸ். ஜெயராஜ் ... 164
- எஸ்.எம். வரதராஜன்

மகாகவி அல்லாமா இக்பால் மற்றும் நீட்ஷே: சம்பூரண மானுடர் எதிர் அதிமானுடர் 171
- பீ.எம். ஜமாஹிர்

மாவிலி மைந்தன் சி. சண்முகராஜாவின் 'முனையிலே முகத்து நில்' நூலினை முன்வைத்து 178
- குமரகுரு கணபதிப்பிள்ளை

'பத்திரிகைத்துறையில் என்கதை' ஒரு வரலாற்று ஆவணம்! 182
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

அ. இரவி அவர்களின் 'பம்பாய் சைக்கிள்' நாவல் – ஒரு காலத்தின் கதை 184
- தாமரைச்செல்வி

குறியீடுகளால் கருத்தாடலை உருவாக்கும் படைப்பு: சாயாவனம் 186
- சு. வேணுகோபால்

கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும் தொல்காப்பியமும் ஏனைய மொழிகளும் 190
- நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் 193
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

காட்சி மொழியும் உளவியல் மெய்ப்பாடுகளும்: ஈழத்துப் பூதந்தேவனார் ஒரு மீள்வாசிப்பு 197
- சி. ரமேஷ்

மாயோகி கோவிந்தசாமியும் மகாகவி பாரதியாரும் 204
- கிருங்கை சேதுபதி

கம்பனின் கருவூலம் திறந்து... 208
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

முலையறுகாதை! பெண்துயரப் பெருங்கதை 213
- மா. சித்திவினாயகம்

சோலை வரி 216
- பஞ்சகல்யாணி

ஒரு நாள் கூத்து 218
- உஷாதீபன்

ஃப்ரெடிரிக்கோவின் வல்லூறு 224
- ஜியோவன்னி பொக்காஷியோ
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

prasadbatti@gmail.com

மட்டக்களப்புப் பொது நூலகம்: தமிழரின் அறிவுசார் அடையாளம்

ச. சத்தியதேவன்

மே 20, 2026 அன்று, இலங்கை கிழக்கு மாகாணத்தின் மையப்பகுதியான மட்டக்களப்பு, தனது சமூக-கலாசார வரலாற்றில் ஒரு தீர்க்கமான மைல்கல்லைக் கண்டது. பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர் அடித்தளமிடப்பட்டு, அரசியல் நிலையற்ற தன்மை, நிதிப் பற்றாக்குறை மற்றும் அதிகாரத்துவத் தடைகள் காரணமாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த நவீன பொது நூலக வளாகம் ஒருவழியாகப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டது. ஜனாதிபதி உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்களின் பங்கேற்பு மற்றும் நூலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத் தொடக்கம் என இந்த நிகழ்வு ஊடகங்களின் முதன்மைச் செய்தியாக மாறியது.

இருப்பினும், இந்த நிகழ்வின் ஆழமான பரிமாணம் என்பது வெறும் விழாக்காலக் கொண்டாட்டங்களுக்குப் பின்னால் இருப்பதல்ல; மாறாக, 21-ஆம் நூற்றாண்டின் எண்ணிம பேரிரைச்சலுக்கு மத்தியில் ஒவ்வொரு நவீன சமூகமும் எதிர்கொள்ளும் ஒரு முக்கியமான கேள்வியைப் பற்றியதாகும்: தகவல்கள் பெருக்கெடுத்து ஓடும் இந்த யுகத்தில், ஒரு பௌதிக நூலகக் கட்டடம் ஏன் இன்றும் அவசியமாகிறது?

இதற்கான விடை, பௌதிக நூலகங்கள் மனித சமூகத்திற்கு வழங்கும் தனித்துவமான சமூக மற்றும் தத்துவார்த்த மதிப்பில் அடங்கியுள்ளது. ஸ்மார்ட்போன்களும் செயற்கை நுண்ணறிவும் (AI) அறிவை விரல் நுனியில் கொண்டுவந்து சேர்த்த போதிலும், அவை மனிதர்கள் நேரில் சங்கமிக்கும் ஒரு பௌதிக வெளியின் தேவையை ஒருபோதும் குறைத்துவிடுவதில்லை. ஏனெனில், ஒரு பௌதிக நூலகக் கட்டடம் என்பது வெறும் புத்தகங்களைச் சேமித்து வைக்கும் கிடங்கு அல்ல; மாறாக, அது இணையத்தின் தனிமைக்குள்ளும் அல்காரிதங்களின் (Algorithms) வரம்புகளுக்குள்ளும் சுருங்கிவிடும் மனிதர்களை, சமூகத்தோடு பிணைக்கும் ஓர் உன்னதமான கூட்டு வெளி ஆகும்.

இணையத்தில் தகவல்கள் பெருக்கெடுத்து ஓடினாலும், அங்கு நாம் தேடும் தரவுகள் மட்டுமே நமக்குக் கிடைக்கும்; ஆனால், ஒரு பௌதிக நூலகத்தின் அலுமாரிகளுக்குள் உலா வரும் போது தான், நாம் தேடாத பல அரிய அறிவுக் கருவூலங்களைத் தற்செயலாகக் கண்டடையும் (Serendipity) வியத்தகு அனுபவம் சாத்தியமாகிறது. இணையத் திரைகளால் ஒரு போதும் தந்துவிட முடியாத இந்த அறிவுசார் நேர்படலையும், சமூகப் பிணைப்பையும்தான் ஒரு பௌதிக நூலகக் கட்டடம் நமக்கு இன்றும் சாத்தியமாக்குகிறது. அதனால்தான், லொஸ் ஏஞ்சல்ஸ் பொது நூலகம், ரொரண்டோ பொது நூலகம், சிங்கப்பூர் தேசிய நூலக சபை போன்ற உலகளாவிய நிறுவனங்கள் இன்று கடந்த கால வரலாற்றின் எச்சங்களாக முடங்கிவிடாமல், துடிப்புடன் செழித்து வளரும் அறிவு மையங்களாகத் திகழ்கின்றன.

ஒரு நூலகத்தின் வெற்றியும் தோல்வியும்:

ஒரு நூலகத்தின் வெற்றி அல்லது தோல்வி என்பது வெறும் தொழில்நுட்ப வளர்ச்சியால் தீர்மானிக்கப்படுவதில்லை; மாறாக, அரசாங்கங்கள் அதன் மீது செலுத்தும் முதலீட்டிலும் காட்டும் தொலைநோக்குப் பார்வையிலும்தான் தங்கியுள்ளது என்பதற்குச் சர்வதேச அளவில் இருவேறு முரணான உதாரணங்கள் உள்ளன.

தொழில்நுட்பத்தின் உச்சத்தில் இருக்கும் சீனாவின் ஷென்சென் (Shenzhen) நகரம், நூலகங்களை அறிவுப் பொருளாதாரத்தின் இன்றியமையாத உள்கட்டமைப்பாக ஏற்றுக் கொண்டு பெருமளவில் முதலீடு செய்தது. 2024-ஆம் ஆண்டின் இறுதியில், அந்நகரம் 925 பொது நூலகங்களையும், 322 சுயசேவை நூலக நிலையங்களையும் நிறுவி, ஒட்டு மொத்தமாக 68.3 மில்லியன் ஆவணங்களின் சேகரிப்பை உருவாக்கியது. இதன் விளைவாக, கடந்த 2025-இல் மட்டும் நூலகங்களுக்கான வருகையாளர் எண்ணிக்கை 54.3 மில்லியனாகவும், பௌதிகப் புத்தக இரவல் வழங்கல் 29.5 மில்லியனாகவும் அதிரடியாக அதிகரித்தன. ஒரு அதிநவீன தொழில்நுட்ப மையத்திற்கு நூலகங்கள் என்பது முன்னேற்றத்தைத் தடுக்கும் கவனச்சிதறல் அல்ல; மாறாக, அத்தகையதொரு கண்டுபிடிப்புப் பொருளாதாரத்தின் (Innovation Economy) சிந்தனைத் திறனையும், படைப்பாற்றலையும் தூண்டுகின்ற அறிவு அடித்தளம் என்பதை ஷென்சென் நகரம் உலகிற்கு எடுத்துக் காட்டியது.

மறுபுறம், ஹொங்ஹொங் பொது நூலகங்கள் கடுமையான வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன. கடந்த 2014-ஆம் ஆண்டில் 38.8 மில்லியனாக இருந்த அந்நூலகங்களின் வருகையாளர் எண்ணிக்கை, 2024-இல் 23.8 மில்லியனாக வீழ்ந்துள்ளதுடன், அங்குள்ள மக்களில் 83 சதவீதத்தினர் அவற்றைச் சமகாலத்திற்கு ஒவ்வாத கவர்ச்சியற்றவை எனக் கருதுகின்றனர்.

இந்த வீழ்ச்சிக்குக் காரணம் தொழில்நுட்பப் புரட்சி அல்ல; மாறாக, அங்கு நிலவும் நிர்வாகத் தேக்கநிலையே ஆகும். ஷென்சென் நகரம் இரவு 9 அல்லது 11 மணி வரை நூலகங்களைத் திறந்து வைத்தல், நெகிழ்வான நவீன இடவமைப்புகள் (Flexible spaces), ஒருங்கிணைந்த எண்ணிமச் சேவைகள் எனத் தொடர்ந்து முதலீடு செய்தபோது, ஹொங்ஹொங் நூலகங்களோ போதிய இருக்கை வசதிகளின்றி, மாலை 8 மணிக்கே மூடப்படும் காலாவதியான வளாகங்களாகத் தேங்கின. உண்மையில், பொது நூலகங்கள் ஒருபோதும் தானாகத் தோல்வியடைவதில்லை; சமூகங்களும் அரசாங்கங்களுமே தங்களின் முறையற்ற புறக்கணிப்பு மற்றும் குறைந்த முதலீடுகள் மூலம் அவற்றைத் தோல்வியடையச் செய்கின்றன.

“ஒரு நூலகத்தின் வெற்றி அல்லது தோல்வி என்பது வெறும் தொழில்நுட்ப வளர்ச்சியால் தீர்மானிக்கப்படுவதில்லை; மாறாக, அரசாங்கங்கள் அதன் மீது செலுத்தும் முதலீட்டிலும் காட்டும் தொலைநோக்குப் பார்வையிலும்தான் தங்கியுள்ளது”

1994 யுனெஸ்கோவின் பொது நூலக அறிக்கை:

பொது நூலகங்களின் இந்த அத்தியாவசியப் பங்கையும், அவை எவ்வாறு இயங்க வேண்டும் என்பதற்கான சர்வதேசக் கட்டளையையும் யுனெஸ்கோ (UNESCO) தனது பொது நூலக அறிக்கையில் (1994) மிகத் தெளிவாக வரையறுத்துள்ளது. அதன் பார்வையில், சுதந்திரம், செழிப்பு மற்றும் சமூக மேம்பாடு போன்ற அடிப்படை மனித மதிப்புகளை அடைவதற்கு, தங்களின் ஜனநாயக உரிமைகளை உணர்ந்த குடிமக்கள் அவசியமாகின்றனர். எனவேதான், பொது நூலகம் என்பது வெறும் புத்தகங்களின் கிடங்கு அல்ல; மாறாக, அது ஜனநாயகத்தை நிலைநிறுத்தும் ஓர் உயிருள்ள சக்தி (Living force) என்று யுனெஸ்கோ பிரகடனப்படுத்துகிறது. மேலும், வயது, இனம், பாலினம், மதம் அல்லது சமூக நிலை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், இலவச மற்றும் சமமான அணுகல் அனைவருக்கும் தங்கு தடையின்றி வழங்கப்பட வேண்டும் என்றும் அது வலியுறுத்துகிறது.

சர்வதேச அளவிலான இந்த அறிக்கை நீண்டதொரு போருக்குப் பிந்தைய, மொழிச் சிறுபான்மையினரைக் கொண்ட, குறிப்பிடத்தக்க சமூக-பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் நிலவுகின்ற மட்டக்களப்பு போன்றதொரு சூழலுக்கு மிக அவசியமானதாகும். வர்க்க வேறுபாடுகளால் கல்வி மற்றும் தகவல் உரிமைகள் சாமானியர்களுக்கு மறுக்கப்படும் ஒரு சூழலில், சமூகப் படிநிலையின் மேல்மட்டத்தில் இருப்பவர்களுக்கும் கீழ்மட்டத்தில் இருப்பவர்களுக்கும் இடையேயான அறிவுசார் இடைவெளியைக் குறைத்து, சம வாய்ப்புக் களத்தை உருவாக்கும் மிகச் சில பொது நிறுவனங்களில் ஒன்றாக பொது நூலகம் செயற்பட வேண்டியுள்ளதை இது மிக அழுத்தமாக வலியுறுத்துகிறது.

யுனெஸ்கோ முன்வைக்கும் ஒரு பொது நூலகத்திற்கான 12 முக்கியப் பணிகளின் பின்னணியில், மட்டக்களப்பின் புதிய நூலகத்தின் தற்போதைய கட்டமைப்பை மதிப்பிடுவது அவசியமாகும். இருப்பினும், யுனெஸ்கோவின் முழுமையான இலக்குகளை அடைந்து ஒரு சர்வதேசத் தரத்திலான நிறுவனமாக நிமிர, மட்டக்களப்பு நூலகம் இன்னும் பல மைல்கற்களை எட்ட வேண்டியுள்ளது. முதலாவதாக, வாசகர்களின் தனிப்பட்ட படைப்பு அபிவிருத்திக்கான பரந்த வாய்ப்புகளையும், அவர்களின் கற்பனைத் திறனைத் தூண்டக்கூடிய நவீன வெளிகளையும் (Creative Spaces) இந்நூலகம் உருவாக்க வேண்டும்.

அடுத்ததாக, பல்லின மக்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தின் நீண்டகாலச் சமூக நல்லிணக்கத்திற்கு மிக இன்றியமையாததான, கலாசாரங்களுக்கு இடையிலான உரையாடல்களையும் கலாசார பன்முகத்தன்மையையும் வளர்த்தெடுக்கும் ஒரு பொது மேடையாக இது மாற வேண்டியுள்ளது. அத்துடன், பிராந்தியத்தின் தனித்துவமான வாய்மொழி மரபுகளை ஆவணப்படுத்தி ஆதரிப்பதோடு, குடிமக்களுக்கான அன்றாடச் சமூகத் தகவல்களை உடனுக்குடன் வழங்குதல் மற்றும் உள்ளூர் வணிகங்களுக்கான பிரத்யேக தகவல் சேவைகளை விரிவாக்குதல் போன்ற பன்முகப் பரிமாணங்களையும் மட்டக்களப்பு பொது நூலகம் தனது எதிர்காலச் செயற்பாடுகளில் உள்ளீர்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

அரசியல் தடைகளும் மட்டக்களப்பின் கூட்டு மீள்வல்லமையும்:

இந்த உலகளாவிய மற்றும் கொள்கை ரீதியான பின்னணியில் வைத்துப் பார்க்கும்போதுதான், மட்டக்களப்பு பொது நூலகத் திறப்பின் உண்மையான அரசியல் முக்கியத்துவம் முழுமையாகத் துலக்கமடைகிறது. பதினாறு ஆண்டுகள், நான்கு வெவ்வேறு அரசாங்கங்களின் மாறுபட்ட அரசியல் முன்னுரிமைகள், எண்ணற்ற உள்ளூர் அதிகாரத்துவப் போராட்டங்களைக் கடந்துதான் இந்த வளாகம் இன்று சாத்தியமாகியுள்ளது.

இலங்கையின் போருக்குப் பிந்தைய சூழலில், குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில், ஒரு கலாசார நிறுவனத்தை அல்லது அறிவுசார் வெளியை நிறுவுவது என்பது வெறுமனே செங்கல் மற்றும் சிமெந்தினால் ஆன கட்டுமானப் பணி மட்டுமல்ல; மாறாக, அது அரசியல் அதிகாரம், நிதிப் பகிர்வு, பிராந்தியப் பிரதிநிதித்துவம் ஆகியவற்றுடன் நேரடியாகப் பிணைக்கப்பட்ட ஒரு தீர்க்கமான சமூக-அரசியல் செயல்முறையாகும். மட்டக்களப்பு நூலகத்தின் இந்தத் தசாப்த காலத் தாமதம் என்பது, இலங்கையின் தமிழர் பகுதிகளில் உள்ள பொதுச் சேவை நிறுவனங்கள் எதிர்கொள்ளும் மைய அரசின் கட்டமைப்புச் சார்ந்த புறக்கணிப்பையும் உள்ளூர் சுயலாப அரசியல் வேறுபாடுகளையும் அப்பட்டமாகப் பிரதிபலிக்கிறது. எனவே, இந்நூலகத்தின் திறப்பு விழா என்பது அரச இயந்திரத்தின் தாராள மனப்பான்மையால் கிடைத்த கொடையல்ல; மாறாக, தங்களுக்குரிய அறிவுசார் வெளியைப் பெற்றுத் தீர வேண்டும் என்ற மட்டக்களப்பு மக்களின் கூட்டு மீள்வல்லமையின் வெற்றியாகும்.

ஜனநாயகப்படுத்துதலும் சமூக அடையாளமும்:

அரசியல் ரீதியாகப் பொது நூலகங்கள் என்பவை சமூகத்தின் மிக முக்கியமான ஜனநாயக வெளிகள் ஆகும். சாதி, மத, வர்க்க அல்லது மொழி வேறுபாடுகளின்றி, சமூகத்தின் அத்தனை தரப்பு மக்களும் சமத்

துவமாகப் பயன்படுத்தக்கூடிய மிகச் சில பொது இடங்களில் நூலகமும் ஒன்று. ஹொங்ஹொங் போலல்லாமல், ஷென்சென் நகரைப் போல மட்டக்களப்பு நூலகமும் நெகிழ்வான இடவமைப்புகளையும், விரிவான நேர எல்லைகளையும், பல்லினச் சமூகங்களை ஒருங்கிணைக்கும் பன்மைத்துவ நல்லிணக்க வெளிகளையும் உருவாக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

இது, நிறுவனமயப்பட்ட மறதிக்கு (Institutional amnesia) எதிரான ஒரு கூட்டு நினைவகத்தின் அரணாகும். நீண்டதொரு போருக்குப் பிந்தைய சமூகம் தனது வரலாற்றை, இலக்கியத்தை மற்றும் கூட்டுப் பதிவுகளைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இத்தகைய பௌதிக நிறுவனங்கள் முற்றிலும் அத்தியாவசியமானவை. இன்றைய எண்ணிமத் தளங்கள் அல்காரிதம்களால் (Algorithms) கட்டுப்படுத்தப்பட்டு, வாசகர்களைத் தனித்தனித் தீவுகளாகவும் சுயவிருப்ப வட்டங்களுக்குள்ளும் (Filter bubbles) முடக்கும் வேளையில், பொது நூலகம் மக்களை நேருக்கு நேர் சந்திக்க வைக்கும் ஒரு துடிப்புமிக்க கூட்டுப் பொதுவெளியாகச் செயற்படுகிறது.

மட்டக்களப்பு மாநகர சபையின் இந்தப் புதிய பொது நூலகம், தனது உத்தியோக பூர்வ இணையத்தளத்தின் வழியே எண்ணிம உலகிற்குள் காலடி எடுத்து வைக்கும் அதே வேளையில், அதன் பௌதிகக் கட்டடம் மூலம் இம்மண்ணின் சமூக யதார்த்தத்துடன் தன்னை இறுக்கமாகப் பிணைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த பிரம்மாண்டமான கட்டடம் என்பது வெறும் திறப்பு விழா ஆடம்பரங்களுக்கு அப்பாற்பட்டது. போதிய நிதி முதலீடும், சமகால வாசகர்களின் தேவைக்கேற்ற தொடர்ச்சியான வடிவமைப்பு மாற்றங்களும் இல்லையெனில், எத்தகைய வரலாற்றுப் பெருமைமிக்க நிறுவனமும் முடங்கிவிடும் என்பதையே ஹொங்ஹொங்கின் வீழ்ச்சி நமக்கு எச்சரிக்கையாக உணர்த்துகிறது. எனவே, மட்டக்களப்பு பொது நூலகம் என்பது வெறும் புத்தகக் காப்பகமாகவோ, அருங்காட்சியகமாகவோ சுருங்கிவிடக் கூடாது. அது, சமூகத்தின் மாற்றுச் சிந்தனைகளை உருவாக்குவதற்கும், குடிமக்களுக்கு அறிவின் வழியே அதிகாரமளிப்பதற்கும், தற்காலப் பன்மைத்துவ அடையாளத்தைத் தாங்கி நிற்கும் ஒரு துடிப்புமிக்க சமூக உட்கட்டமைப்பாக மாற வேண்டும். அப்போதுதான், மட்டக்களப்பு மக்களின் பதினாறு ஆண்டுகால நீண்ட காத்திருப்பின் உண்மையான சமூக-அரசியல் நோக்கம் முழுமையடையும்.

“மட்டக்களப்பு பொது நூலகம், சமூகத்தின் மாற்றுச் சிந்தனைகளை உருவாக்குவதற்கும், குடிமக்களுக்கு அறிவின் வழியே அதிகாரமளிப்பதற்கும், தற்காலப் பன்மைத்துவ அடையாளத்தைத் தாங்கி நிற்கும் ஒரு துடிப்புமிக்க சமூக உட்கட்டமைப்பாக மாற வேண்டும்”

சமூகத் தனிமையை எதிர்கொள்ளும் புகலிடம்:

சமகாலச் சூழலில் நூலகங்களின் பங்கு என்பது வெறும் அறிவுசார் தேடலோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. Chartered Institute of Library and Information Professionals (CILIP) அமைப்பின் அண்மைக்காலப் போக்கு அறிக்கை சுட்டிக்காட்டுவது போல, நவீன நூலகங்கள் சமூகத் தனிமையை எதிர்கொள்ளும் முக்கிய இடங்களாக உருவெடுத்துள்ளன.

முதியவர்கள், இளைஞர்கள், விளிம்புநிலை மனிதர்கள் எனச் சமூகத்தின் அத்தனை தரப்பினருக்கும் எவ்விதப் பாகுபாடுமற்ற ஒரு நடுநிலைத் தளமாக, நுகர்வோர் கலாசாரத்தின் அழுத்தங்கள் இன்றி, பணம் செலவழிக்க வேண்டும் என்ற கட்டாயமோ எதிர்பார்ப்போ இல்லாத சமூகத்தின் ஒரேயொரு புகலிடமாக இன்று பொது நூலகங்களே எஞ்சியுள்ளன.

தவறான தகவல்களின் யுகத்தில் தகவல் கல்வியறிவு:

செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்ட உள்ளடக்கங்கள் (AI generated content), போலியான செய்திகள் (Misinformation) மற்றும் திட்டமிட்டுப் பரப்பப்படும் தீங்கான தகவல்கள் (Disinformation) ஆகியவற்றால் ஒட்டுமொத்தத் தகவல் சூழலும் மாசுபட்டுள்ள ஒரு யுகத்தில் நாம் வாழ்கிறோம். இத்தகையதொரு நச்சுச் சூழலில், ஒரு தகவலின் நம்பகத்தன்மையையும் அதன் மூலங்களையும் பகுத்தறிந்து மதிப்பிடுகின்ற ‘தகவல் கல்வியறிவு’ என்பது வெறும் கல்வி சார்ந்த தகுதி மட்டுமல்ல; அது இந்த எண்ணிம யுகத்தில் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான அடிப்படை உயிர்வாழ்வுத் திறனாகும்.

இங்குதான் நூலகர்கள் என்பவர்கள் வெறும் புத்தகங்களை எடுத்துத் தருபவர்களாக மட்டும் நின்றுவிடாமல், தகவல் விஞ்ஞானத்தில் பயிற்றுவிக்கப்பட்ட, பயனர்களுக்கும் அறிவு வளங்களுக்கும் இடையிலான தீவிரமான இடைத்தரகர் களாக மாறுகிறார்கள். மால்டோவா கருத்தரங்கின் முடிவுகள் வலியுறுத்தியது போல, சமூகத்தில் தவறான தகவல்களை எதிர்த்தல் மற்றும் பாதுகாப்பான எண்ணிமச் சூழலை ஊக் குவிப்பதில் பொது நூலகங்களுக்கு முதன்மையான அரசியல் மற்றும் சமூகப் பொறுப்பு உண்டு.

மனித மூலதனம் மற்றும் சமூகத்தின் பொருளாதார மீள்திறன் மீதான முதலீடு:

யுனெஸ்கோ அறிக்கையின்படி, உள்ளூர் வணிகங்க ளுக்கும் உற்பத்திகளுக்கும் போதுமான தகவல் சேவை களை வழங்குவது ஒரு பொது நூலகத்தின் முதன்மைக் கட மைகளில் ஒன்றாகும். 2022-ஆம் ஆண்டின் கடுமையான பொருளாதார நெருக்கடியின் கூட்டு வடுக்களிலிருந்து இன்னும் முழுமையாக மீளாத சூழலில், இந்த நூலகம் என்பது வெறும் அரசாங்கச் செலவினம் அல்ல; மாறாக, அது மனித மூலதனம் மற்றும் சமூகத்தின் பொருளாதார மீள்திறன் மீதான முதலீடாகும்.

இன்று மட்டக்களப்பு பிராந்தியத்தில் சுயதொழில் முயற்சி களும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களும் கணிசமாக அதிகரித்து வருகின்றன. இத்தகைய சூழலில், இங்குள்ள சிறு வணிக உரிமையா ளர்களுக்குச் சந்தை ஆராய்ச்சித் தரவு களும், இளம் தொழில்முனை வோருக்கு வணிகத் திட்ட மாதிரிகளும், விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள் ளோருக்கு நவீன தொழில்நுட்பத் தகவல்களும் வாழ்வாதார அத்தியாவசியங் களாகும். இந்தத் தேவைகளை மட்டக்களப்பு பொது நூலகம் வெறும் புத்தகங்களாக மட்டுமன்றி, பிரத்யேக வழிகாட்டல் கருத்தரங்குகள் மற்றும் எண்ணிமத் தரவுத்தளங்கள் மூலம் தங்குதடையின்றி வழங்கும்போது, அது பிராந்தியப் பொருளாதார வளர்ச்சியை உந்தித்தள்ளும் ஒரு முக்கிய உள்கட்டமைப்பாக மாறுகிறது.

பிராந்திய அடையாளமாக நூலகம்:

அரசியல் மற்றும் சமூக அடையாளத்தின் குறியீடாகப் பொது நூலகங்களைக் கருதும் கோட்பாடு நீண்ட வர லாற்றுப் பின்னணியைக் கொண்டது. ஒரு பொது நூலகத் திற்கு அரசாங்கமே முழுமையாக நிதி வழங்கிப் பராமரிக்க வேண்டும் என்ற சிந்தனையை வரலாற்றில் முதன்முதலில் விதைத்தவர் இத்தாலியக் கவிஞரான பெட்ரார்க் (Petrarch) ஆவார்.

அவர் தனது அரிய புத்தகச் சேகரிப்புகளை, 'அவை பாது காப்பான இடத்தில் முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும்' என்ற நிபந்தனையுடன் வெனிஸ் குடியரசுக்கு உயில் மூலம் எழுதிக் கொடுத்தார். அப்போது அவர் தீர்க்கதரிசனமாகப் பின்வருமாறு கூறினார்:

'இந்த வெனிஸ் நகரம், பொதுச் செலவில் மேலும் பல புத்த கங்களைச் சேர்க்கும். இவ்வழியில், வரலாற்றின் பழங்கால உலகப் புகழ்பெற்ற நூலகங்களுக்கு இணையான ஒரு மாபெரும் பொது நூலகத்தை நம்மால் நிறுவ முடியும்.'

அவரது அந்தத் தொலைநோக்குப் பார்வையின் விளைவாகவே, இன்று இத்தாலி தேசம் மட்டும் எட்டு புகழ் பெற்ற தேசிய நூலகங்களைத் தனது கலாசார அடையா ளங்களாகத் தாங்கி நிற்கிறது.

உலகளாவிய இந்த வரலாற்றுப் பின்னணிக்கு, இலங் கையின் மிகச் சிறந்த சமகால உதாரணம் யாழ்ப்பாணப் பொது நூலகம் ஆகும். ஒரு பொது நிறுவனம் எவ்வாறு ஒரு ஒட்டுமொத்தப் பிரதேசத்தின் முதன்மையான வரலாற்று மற்றும் கலாசார முகவரியாக மாற முடியும் என்பதற்கு யாழ். பொது நூலகத்தின் வரலாறு ஒரு சிறந்த சான்றாகும்.

யாழ். பொது நூலகம் வட மாகாணத்தின் ஒரு முக்கிய அடையாளமாகத் திகழ்வதைப் போல, கிழக்கின் த னித்துவ ம ான வரலாற்றுப் பதிவுகளையும்,

பன்மைத்துவப் பண்பாட்டையும் ஆவணப்படுத்தும் ஒரு பிராந்திய அடையாளமாக இந்த மட்டக்களப்பு பொது நூலகம் பரிணமிக்க வேண்டிய தேவையுள்ளது.

பெட்ரார்க்கின் இந்தத் தொலைநோக்குச் சிந்தனையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றவர் இத்தாலியில் பிறந்து இங்கிலாந்தில் பணியாற்றிய அன்டோனியோ பனிஸி (Antonio Panizzi) ஆவார். இத்தாலியப் புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காகச் சொந்த நாட்டில் கைது அச்சுறுத்தலுக்கு உள்ளான பனிஸி, இங்கிலாந்திற்குத் தப்பிச் சென்றார்.

அங்கு, 1831-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் ஓர் உதவி நூலகராகத் தனது பணியைத் தொடங்கினார். 1836-ஆம் ஆண்டு ஜூலை 14 அன்று அவர் சமர்ப்பித்த அறிக்கை, பொது நூலகங்களின் அடிப்படைத் தத்துவத்தில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியது. அதில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

‘புத்தகங்களைப் பொறுத்தவரை, இந்த நாட்டின் மிகப்பெரிய கோடீஸ்வரருக்கு என்னென்ன வாய்ப்புகள் கிடைக்கிறதோ, அதே போன்ற வாய்ப்புகள் ஒரு ஏழை மாணவருக்கும் கிடைக்க வேண்டும். அந்த ஏழை மாணவருக்கான தகவல் தேவைகளைத் தாராள மாக வழங்க வேண்டியது அரசாங்கத்தின் தார்மீகக் கடமையாகும்.’

1856-இல் முதன்மை நூலகராக உயர்ந்த பனிஸி, தனது இலக்குகளை அடைய நான்கு முக்கிய நடைமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டார்:

- நூற்பட்டியலாக்கம் மற்றும் விவரணக் காப்பு: புத்தகங்களை அறிவியல் பூர்வமாக வகைப்படுத்தி, உலகளாவிய தரத்திற்கு ஏற்ப அட்டவணைப்படுத்துவதற்கான முறையான நூற்பட்டியலாக்க விதிகளைத் திட்டமிட்டுத் தொடங்கினார்.
- சட்டப்படியான ஆவண ஒப்படைப்பு: பிரிட்டனில் அச்சிடப்படும் ஒவ்வொரு வெளியீட்டின் ஒரு பிரதி கட்டாயமாகத் தேசிய நூலகத்திற்கு வழங்கப்பட வேண்டும் என்ற ‘சட்டப்படியான ஆவண ஒப்படைப்பு’ விதியை, பதிப்புரிமைச் சட்டத்தின் கீழ் கண்டிப்புடன் அமல்படுத்தினார்.
- வளத்திரட்டலும் நிதியொதுக்கீடும்: நூலக உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் நிதியொதுக்கீட்டை வெற்றிகரமாகப் பலமடங்கு அதிகரித்தார்.
- பணியாளர் மேம்பாடும் தொழில்முறை அங்கீகாரமும்: நூலகப் பணியாளர்களைத் தகுதிவாய்ந்த அரசு ஊழியர்களாக அங்கீகரிக்கச் செய்ததன் மூலம், நூலகத் துறையை ஒரு மதிப்புமிக்க தொழில்முறைப் பணியாக முறைப்படுத்தினார்.

இவற்றுடன், நூலகத்தில் எந்தெந்தப் புத்தகங்களைச் சேர்க்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் ‘சேகரிப்பு மேம்பாட்டுக் கொள்கையை’ வலுப்படுத்த மூன்று முக்கிய இலக்குகளை அவர் வகுத்தார்:

- தேசிய ஆவணவாக்கம்: உள்ளூர் (பிரிட்டிஷ்) படைப்புகள் மற்றும் பேரரசு தொடர்பான அனைத்து நூல்களையும் தவறாமல் திரட்டுவது
- அரிய நூல்களைப் பாதுகாத்தல்: பழங்காலத்துச் செவ்வியல் இலக்கியங்

“புத்தகங்களைப் பொறுத்தவரை, இந்த நாட்டின் மிகப்பெரிய கோடீஸ்வரருக்கு என்னென்ன வாய்ப்புகள் கிடைக்கிறதோ, அதே போன்ற வாய்ப்புகள் ஒரு ஏழை மாணவருக்கும் கிடைக்க வேண்டும். அந்த ஏழை மாணவருக்கான தகவல் தேவைகளைத் தாராள மாக வழங்க வேண்டியது அரசாங்கத்தின் தார்மீகக் கடமையாகும்”

களின் அரிய பதிப்புகள் வாசகர்களுக்கு எளிதாகக் கிடைப்பதை உறுதி செய்வது.

- உலகளாவிய அறிவை இணைத்தல்: சர்வதேச அளவிலான சிறந்த இலக்கியங்கள், கலைகள் மற்றும் அறிவியல் துறை சார்ந்த படைப்பு களைத் தேடித் திரட்டுவது.

பனிஸி நூலகத்தை வெறும் புத்தகங்களை அடுக்கி வைக்கும் ஒரு காப்பகமாகப் பார்க்க வில்லை; மாறாக, அதனைத் தேசத்தின் ஒட்டு மொத்த அறிவுசார் மற்றும் கலாசார ஆன்மாவைப் பிரதிபலிக்கும் ஒரு சித்திரமாகவே கருதினார்.

கிழக்கின் அறிவுசார் மையமாக மட்டக்க ளப்பு நூலகத்தை மாற்றுவதற்கான வழி முறைகள்:

பதினாறு ஆண்டுகால நீண்ட காத்திருப்பிற்குப் பின் திறக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு பொது நூலகம், ஹொங்ஹொங்கின் வீழ்ச்சியைத் தவிர்த்து, ஷென்சென் நகரின் வெற்றியை நோக்கிப் பயணிக்க வேண்டுமாயின், எதிர்காலத்தில் பின்வரும் உத்தி களை நடைமுறைப்படுத்த வேண்டும்:

▸ நீட்டிக்கப்பட்ட நேர முகாமைத்துவம் மற்றும் அணுகல் வசதி:

பொது நூலகப் பயன்பாட்டில் ஹொங்ஹொங் பின்னடைவைச் சந்தித்ததற்குக் காரணம், அதன் மாலை 8 மணி மூடல் கொள்கையாகும். ஆனால், ஷென்சென் நகரம் தனது நூலகங்களை இரவு 9 மணி முதல் 11 மணி வரை திறந்து வைத்திருந் ததன் மூலம் வாசகர் எண்ணிக்கையை வெற்றிக ரமாக அதிகரித்தது. மட்டக்களப்பு நூலகமும் பின் தங்கிய சூழலில் உள்ள மாணவர்களையும், வேலைக்குச் செல்லும் தொழில் வல்லுநர்களையும் சென்றடைய வேண்டுமாயின் பின்வரும் நடைமு றைகளைச் சாத்தியப்படுத்த வேண்டும்:

- மாலை நேர சேவை நீட்டிப்பு: கல்வி மற்றும் வேலை நேரங்களுக்குப் பிந்தைய வாசகர் களின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு, வாரத்தில் குறைந்தது 3 நாட்களாவது நூல கத்தின் சேவை நேரத்தை மாலை அல்லது இரவு வரை நீட்டிக்க வேண்டும்
- வார இறுதிச் சிறப்புச் சேவைகள்: குடும்பங்க ளையும் மாணவர்களையும் ஈர்க்கும் வகையில், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கி ழமைகளில் பிரத்யேக கற்றல் மற்றும் வாசிப்புத் திட்டங்களை வடிவமைக்க வேண்டும்.
- சுய-சேவை வசதி: பிரதான நூலகம் மூடப் பட்ட பின்னரும் வாசகர்கள் நூல்களைப் பயன்படுத்துவதற்கும் திருப்பி ஒப்படைப்ப தற்கும் ஏதுவாக, தனியான சுய-சேவைப் பகுதியை உருவாக்க வேண்டும்.

▸ நெகிழ்வான, பல்செயற்பாட்டு பகுதிகள்:

வெறும் மௌனமான வாசிப்பு அறைகளை மட்டுமே கொண்ட பாரம்பரிய நூலக மாதிரிகள் இன்று உலகளவில் வழக்கொழிந்துவருகின்றன. மட்டக்களப்பு நூலகம் ஒரு துடிப்புமிக்க நவீன சமூக உள்கட்டமைப்பாக மாற வேண்டுமாயின், பல்வேறு தேவைகளுக்கான பின்வரும் நெகிழ் வான இடவமைப்புகளை உருவாக்க வேண்டும்:

- கூட்டுக் கற்றல் வெளிகள்: மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இணைந்து கல்விச் சார்ந்த விவாதங்களை நடத்துவதற்கான தனித்துவமான 'குழு விவாத அறைகள்' (Group discussion rooms).
- ஆரம்பப் பருவக் கற்றல் மையம் (Early Childhood Space): குழந்தைகளைக் கவரும் வகையிலான வண்ணமயமான வடிவமைப்பு மற்றும் ஊடாடும் கல்விப் பொருட்களைக் (Interactive educational materials) கொண்ட குழந்தைகள் பகுதி.
- வளரிளம் பருவத்தினருக்கான வாசிப்புப் பகுதி (Young Adult Zone): நவீன தொழில் நுட்ப வசதிகள் மற்றும் வசதியான தகவல் தொடர்புப் பரிமாற்றங்களைக் கொண்ட வளரிளம் பருவத்தினருக்கான பிரத்தியேக பகுதி.
- தனிநபர் கற்றல் பகுதி: பல்கலைக்கழக மற்றும் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கான அமைதியான தனிப் படிப்புப் பகுதி.
- பொதுக் கலந்துரையாடல் கூடம்: உள்ளூர் கலாசார, இலக்கிய அமைப்புகள் மற்றும் சிவில் சமூகங்கள் ஒன்றுகூடி நிகழ்வுகளை நடத்துவதற்கான சமூகக் கூட்ட அறை.
- எண்ணிம ஊடக பகுதி (Digital Media Space): இன்றைய இளைஞர்கள் ஆக்கபூர் வமான புதிய உள்ளடக்கங்களை உருவாக்கு வதற்கும், கணினித் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் உதவும் நவீன பகுதி.

தற்போதைய இலங்கையின் பொருளாதாரச் சூழல், மனிதவள கட்டுப்பாடுகள் போன்ற நடைமுறை யதார்த்தங்களின் பின்னணியில், மேலே குறிப்பிட்ட நீட்டிக்கப்பட்ட நேர முகாமைத் துவத்தையோ அல்லது அதிநவீன உட்கட்ட மைப்பு வெளிகளையோ உடனடியாக முழுமை யாக அமல்படுத்துவது சவாலான காரியமே என்ப தில் ஐயமில்லை.

எனினும், இச்சவால்களை ஒரு முடக்கமாகப் பார்க் காமல், ஆரம்பக் கட்டத்தில் குறைந்த செலவி லான மாற்று உத்திகள் (உதாரணமாக தன்னார்வ லர்களைக் கொண்டு மாலை நேரங்களை முகா மைத்துவம் செய்வது, இருக்கும் இடங்களை தற்கா லிகமாகப் பகிர்ந்தளிப்பது) மூலம் படிப்படியாக இந்த இலக்குகளை நோக்கிப் பயணிக்க வேண்டி யது அவசியமாகும். இன்றைய உலகளாவிய போட் டித்தன்மை வாய்ந்த அறிவுப் பொருளாதாரத்தில் மட்டக்களப்பு பிராந்தியம் முன்னணி பெற வேண்டு மாயின், இந்தத் தொலைநோக்குத் திட்டங்களை நோக்கிய நகர்வே நீண்டகாலப் பலனைத் தரும் நேர்மறையான முதலீடாகும்.

▸ துடிப்புமிக்கச் சேவைகள் மற்றும் செயற் பாட்டுத் திட்டங்கள்:

நூலகம் என்பது வெறும் புத்தகங்களைச் சேமித்து வைக்கும் ஒரு செயலற்ற இடமாக இருக்கக் கூடாது; மாறாக, அது தொடர்ச்சியான சமூக, கல்விச் செயற்பாடுகள் நிகழும் ஓர் உயிருள்ள களமாக மாற வேண்டும். இதற்கெனப் பின்வரும் ஆக்கபூர்வமான திட்டங்களை நடைமுறைப்படுத் தலாம்:

- குழந்தைகளுக்கான கதை சொல்லும் நேரங்கள் மற்றும் விளையாட்டு வழி கற்றல் மூலமாக ஆரம்பக் கல்வியறிவுத் திட்டங்களை ஊக்குவித்தல்.
- பாடசாலை விடுமுறை நாட்களைப் பயனுள் ளதாக மாற்றும் வகையில், மாணவர்க ளுக்கான சிறப்பு வாசிப்புப் போட்டிகள் மற்றும் சவால்களை ஒருங்கிணைத்தல்.
- சமகாலத் தொழில்நுட்ப யுகத்திற்கு அவசி யமான எண்ணிமக் கல்வியறிவு மற்றும் இணையப் பாதுகாப்பு வழிகாட்டல் வகுப்பு களைத் தொடங்குதல்.
- சுயதொழில் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்க உதவும் சுயவிவரக் குறிப்புத் தயா ரிப்புப் பாசறைகள் (Resume workshops) மற்றும் நேர்காணல் பயிற்சிகளை வழங்குதல்.
- பின்தங்கிய சூழலிலிருந்து வரும் மாணவர் களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கில், மாலை நேர வீட்டுப்பாட உதவிகள் மற்றும் இலவசப் பயிற்சி வகுப்புகளை ஏற்பாடு செய்தல்.
- உள்ளூர் எழுத்தாளர்கள், கலைஞர்களை ஒருங்கிணைக்கும் கலாசார நிகழ்வுகளைத் தொடர்ந்து நடத்துதல்.

▸ தொழில்முறை நூலகர்களை உருவாக்குதல் / வினைத்திறனாக்குதல்:

யுனெஸ்கோ அறிக்கை வலியுறுத்துவது போல, 'நூலகப் பணியாளர்களின் தொடர்ச்சியான தொழில்முறைக் கல்வி மற்றும் பயிற்சி இன்றியமை யாதது.' ஒரு பொது நூலகத்தில் பணியாற்றுப வர்கள் வெறும் புத்தகங்களை அடுக்குபவர்களோ அல்லது எழுதுவினைஞர்களோ அல்ல. மாறாக, நவீன நூலகவியலின்படி அவர்கள் பின்வரும் பொறுப்புகளைக் கொண்ட வல்லுநர்களாவர்:

- தேவைப்பகுப்பாய்வு அடிப்படையிலான சேகரிப்பு விருத்தியாளர்கள் (Collection Developers): சமூகத்தின் உண்மையான தேவை களையும், பிராந்தியத்தின் வாசிப்புப் போக்கு களையும் துல்லியமாகக் கண்டறிந்து, நூலகத் திரட்டுகளைத் திட்டமிடும் நிபுணர்கள்.
- தகவல் அறிவுத்திறன் பயிற்றுவிப்பாளர்கள்: போலிச் செய்திகளுக்கும் துல்லியமான தரவுக ளுக்கும் இடையிலான வேறுபாடுகளை இனங் கண்டு, பொதுமக்களுக்கு முறையான தகவல் அறிவுத்திறன்களைக் கற்பிக்கும் ஆசிரி யர்கள்.
- உசாத்துணை வழிகாட்டிகள் (Reference Specialists): ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவ சியத் தரவுகளையும் ஆவணங்களையும் கண் டறிந்து வழங்கும் தரமான உசாத்துணை சேவைகளை (Reference Services) முன்னெ டுக்கும் வழிகாட்டிகள்.
- எண்ணிம வள முகாமைத்துவ வல்லுநர்கள் (Digital Resource Managers): சமூக மாற்றத் திற்கான புத்தாக்கச் செயல்வடிவத் திட் டங்களை உருவாக்குவதுடன், மின்-நூலகம் (E-library) மற்றும் இணையவழி எண்ணிம வளங்களை முறைப்படி முகாமைத்துவம் செய்யும் உத்தியோகத்தர்கள்.

எனவே, மட்டக்களப்பு பொது நூலகத்தின் உள்கட் டமைப்புப் பயன்களை முழுமையாக அறுவடை செய்ய வேண்டுமாயின், அதன் நூலகர்கள், பணியா ளர்களின் தொழில்சார் தகைமைகளை மேம்படுத் துவதிலும் தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்குவ திலும் உள்ளூராட்சி மன்றங்களும் பொறுப் பான நிறுவனங்களும் முதலீடு செய்ய வேண்டியது இன் றியமையாததாகும்.

▸ சமூகப் பங்களிப்பும் தொடர்ச்சியான தேவைப்பகுப்பாய்வும்:

பொது நூலகம் என்பது அதன் அடிப்படையிலேயே சமூகத்திற்கு முழுமையாகச் சொந்தமான ஒரு பொதுவெளி (Public Sphere) ஆகும். அது எந்த வொரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கும், தற்கா லிகத் தனிநபர்களுக்கோ அல்லது ஆளும் அர சாங்கத்திற்கோ மட்டும் சொந்தமான ஒரு நிறுவனம் அல்ல. அரசியல் மற்றும் அதிகார மாற்றங்களுக்கு

அப்பால், நூலகம் சமூகத்தோடு பின்னிப்பிணைந்து செழிக்க வேண்டுமாயின், ஒரு கூட்டுத் 'தேவைப்பகுப் பாய்வு முறைமை' (Needs Assessment Framework) கட் டாயமாக்கப்பட வேண்டும்.

நூலகப் பயன்பாடு, மாறிவரும் தேவைகள் மற்றும் குறைபா டுகளைக் கண்டறியத் தகுந்த கால இடைவெளிகளில் முறையான சமூகக் கணக்கெடுப்புகள் நடத்தப்பட வேண்டும்.

மாணவர்கள், முதியவர்கள், சிறு வணிகர்கள் மற்றும் பெண்கள் எனப் வெவ்வேறு பயனர் குழுக்களுடன் பிரத்தி யேகக் கலந்துரையாடல்களை நிகழ்த்தி அவர்களின் எதிர் பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

நூலகத்தின் நிர்வாகம், கொள்கை முடிவுகள் மற்றும் எதிர் காலத் திட்டமிடலில் சமூகத்தின் பலதரப்பட்ட நிலப்ப ரப்பைப் பிரதிபலிக்கும் கல்வியாளர்கள், சமூக ஆர்வ லர்கள் மற்றும் வாசகர்களை உள்ளடக்கிய ஆலோசனைக் குழுக் கள் நிறுவப்பட்டு அவற்றின் பங்களிப்பு உறுதி செய் யப்பட வேண்டும்.

நூலகமே அடையாளம்
அந்த அடையாளத்தைப் பாதுகாப்போம்!

ஒரு பொது நிறுவனத்தின் வரலாற்றில், அதன் தொடக்கக் காலப் பெயர்ப் பலகைகளும், கல்வெட்டுகளில் பொறிக் கப்படும் பெயர்களும், அரசியல் சூழல்களால் ஏற்படும் தற்காலிக மாற்றங்களும் வரலாற்றின் கடந்துபோகும் பக் கங்கள் மட்டுமேயாயினும் இந்த நவீனப் பிரம்மாண்டத்தின் உள்கட்டமைப்பைக் கொண்டாடும் அதேவேளையில், மட் டக்களப்பு பொது நூலகத்தை அதன் ஆரம்பக் காலத்து எளிய அடித்தளத்திலிருந்து, எத்தனையோ சவால்களுக்கு மத்தியிலும் அர்ப்பணிப்புடன் பேணிப் பாதுகாத்து வந்த முன்னோடி நூலகர்களையும், ஏனைய உத்தியோகத்தர்க ளையும் நாம் இந்தத் தருணத்தில் நன்றியோடு நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கின்றோம். அரசியல் அலைகளி னதும் நிர்வாக மாற்றங்களினதும் மத்தியிலும், நூலகத்தின் ஆன்மா சிதைந்துவிடாமல் காத்த பெருமை இவர்களையே சாரும்.

அதேபோன்று, கிழக்கின் முதன்மை அறிவுசார் மையமாக மட்டக்களப்பு பொது நூலகத்தை நிலைநிறுத்த வேண்டும் என்ற தூரநோக்கோடு சிந்தித்து, அதற்காகப் பல்வேறு வழிகளிலும் கொள்கை ரீதியாகவும் நடைமுறை ரீதியா கவும் முன்னின்று உழைத்த அன்றைய அரசியல் ஆளுமை களையும் அவர்களுக்குப் பக்கபலமாக நின்று, வழிநடத்தி, ஆலோசனைகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கிய துறைசார் வல்லுநர்களையும் நாம் ஒருபோதும் கடந்து போய்விட முடியாது.

எல்லாவற்றிற்கும் மேலாக, இந்நூலகத்தின் சிறப்புமிக்க நூற்றிரட்டுகளுக்காகத் தங்களின் சொந்தச் சேகரிப்பில் இருந்த அரிய ஆவணங்களையும் நூல்களையும் மனமு வந்து வழங்கிய கொடையாளர்கள், உள்ளூர், வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து அறிவுப் பொக்கி ஷங்களை அரும்பாடுபட்டுச் சேகரித்துக் கொடுத்த நூலக வியலாளர்கள், ஆர்வலர்கள், மற்றும் இதன் அவசியத்தை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதற்காக உழைத்த சமூகச் செயற்பாட்டாளர்கள் என அனைவரையும் நாம் நெஞ்சாரப் போற்ற வேண்டும்.

அவர்களின் கூட்டுப் பங்களிப்பும், தூரநோக்கும் சிந் தனையும் இல்லாது போயிருந்தால் இன்று நாம் காணும் இந்த அறிவுக்கோட்டை சாத்தியமாகி இருக்காது. வர லாற்றின் பக்கங்களில் பெயர்கள் பதியப்பட்டோ அல்லது விடுபட்டோ போயிருக்கலாம்; ஆனால், அவர்களின் பங்க ளிப்புகள் இந்த நூலகத்தின் சுவர்களில் என்றும் உயிர்ப் புடன் வாழும் என்பதை நினைவிற் கொள்வது நமது தார்மீகப் பொறுப்பாகும்.

இத்தகைய கூட்டு உழைப்பினதும் தூரநோக்கினதும் அறு வடையான இந்த நவீன நூலகத்தின் வாயிலைக் கடந்து உள்ளே நுழையும் சிறுவரும், இளையோரும், முதியவரும் பெற்றுக்கொள்ளும் அறிவு என்பது அவர்களின் வாழ்வையே மாற்றியமைக்கும் பேராற்றல் கொண்டது. அந்தத் தனிமனித மாற்றங்களே ஒட்டுமொத்த மட்டக்க ளப்பு சமூகத்தின் கூட்டு அடையாளத்தையும் அதன் அறிவுசார் மட்டத்தையும் உலக அரங்கில் மேலும் உயர்த்தும்.

நவீன நூலக தத்துவத்தின் சிற்பி அன்டோனியோ பனிஸி அன்று லண்டனில் முழங்கியது போல: 'இந்த நாட்டின் மிகப் பெரிய கோடீஸ்வரருக்கு என்னென்ன அறிவுசார் வாய்ப் புகள் கிடைக்கிறதோ, அதே போன்ற சமமான வாய்ப்புகள் ஒரு ஏழை மாணவருக்கும் இந்த நூலகத்தில் கிடைக்க வேண்டும்.' ஏனெனில், அந்த நூலகப் படிக்கட்டுகளில் ஏறிவரும் ஏழை மாணவர்தான் நாளைய சமூகத்தின் அறிவிய லாளராக, பொறியியலாளராக, சிறந்த தலைவராக உருவெ டுக்கப் போகின்றார். அவர்களுக்காகவே இந்த அறிவுக் கோட்டை எழுப்பப்பட்டுள்ளது. அவர்களின் அறிவுசார் அடையாளமே இந்த நூலகத்தின் உண்மையான, அழியாத புகழாகும்.

மட்டக்களப்பு மாநகர சபையின் இந்தப் புதிய பொது நூலகம் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட அரிய ஆங்கில நூல் களையும், எண்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மொத்தப் புத்தகச் சேகரிப்புகளையும், குழந்தைகளுக்கான தனித்து வமான அறிவியல் பகுதியையும், உலகளாவிய உத்தியோக பூர்வ இணையத்தளத்தையும் கொண்டு நவீன வசதிகளுடன் மிளிர்கிறது. ஆனால், ஒரு பொது நூலகம் என்பது வெறும் பிரம்மாண்ட கட்டடத்தாலோ, விலையுயர்ந்த தளபாடங்கள், கருவிகளாலோ, அடுக்கி வைக்கப்பட்டுள்ள புத்தகங் களாலோ மட்டும் உயிர்வாழ்வதில்லை; அது மக்களால், அவர்களின் தொடர்ச்சியான வாசிப்பால், அதன் வழியே விளையும் அறிவால், சமூகத்தின் கூட்டு அடையாளத்தால் மட்டுமே உயிர்ப்புடன் வாழ்கிறது.

நூலகம் என்பது ஒரு சமூகத்தின் அறிவுசார் ஆன்மாவி னதும், அதன் நாகரிகத்தினதும் கூட்டுப் பிரதிபலிப்பாகும். தற்காலிக அரசியல் ஆதிக்கங்களுக்கும், அதிகார மாற்றங் களுக்கும் அப்பால், இந்த அறிவுசார் அடையாளத்தைப் போற்றிப் பாதுகாப்பதும் அடுத்த தலைமுறைக்குக் கடத்து வதும் ஒரு முற்போக்குச் சமூகத்தின் தார்மீகக் கடமை யாகும். வந்தாரை இன்முகத்தோடு வரவேற்று வாழவைக்கும் பெருமைமிக்க மட்டக்களப்பு பிராந்தியம், தனது அறிவுசார் பாரம்பரியத்தின் சான்றாக இந்த புதிய அறிவுக்கோட்டையை நிமிர்த்தியுள்ளது. காலங்காலமாக இம்மண்ணின் ஆளுமை களும் சான்றோர்களும் உலகிற்குத் தந்த அறிவுப் பங்க ளிப்பின் தொடர்ச்சியாக, இந்நிறுவனம் கிழக்கு மாகா ணத்தின் அறிவுப் புரட்சியை உலகளாவிய ரீதியில் கொண்டு சேர்க்கும் உந்துசக்தியாக திகழ வேண்டும். மட்டக்களப்பின் எதிர்காலத் தலைமுறையினர் தங்களை உலகளாவிய ஆளு மைகளாகவும் சாதனையாளர்களாகவும் செதுக்கிக் கொள்வ தற்கு இந்த நூலகம் தனது தொழில்முறைச் சேவையைத் தங்குதடையின்றி ஆற்றட்டும்.

sathiyathevan.s@thaiveedu.com



tg.theeban@gmail.com

மத நம்பிக்கை அரசாலும் அந்நிய சக்திகளாலும் அழிக்கப்படும் லெபனான்

ரதன்

கடந்த ஐம்பது வருடங்களாக நடைபெற்றுவரும் மத்திய கிழக்கு அல்லது மேற்கு ஆசிய யுத்தங்களில் அதிகளவு பாதிக்கப்பட்ட நாடு லெபனான். லெபனானை நாம் விளங்கிக் கொள்வது அவசியம். பல நாடுகளின் தேசிய இனப் பிரச்சினை யுடன் ஒத்த வடிவத்தை லெபனான் கொண்டிருந்தபோதும், லெபனானின் இறை யாண்மை சவால்களை எதிர்கொண்டு வருகின்றது.

அல்பேர்ட்டா – லெபனான்:

அல்பேர்ட்டா கனடாவின் ஒரு மாகாணம். கனடா பிரித்தானிய சாம்ராச்சியத்தின் ஒரு நாடு. அதன் தலைவர் பிரித்தானிய அரசராவார். கனடா மற்றும் வட-அமெ ரிக்கா, மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய பிரதேசங்கள் பூர்வீகக் குடி களின் நிலத்தில் உருவாக்கப்பட்ட நாடுகளாகும். இன்றும் பூர்வீகக் குடிகளுக்கும், அந்த அந்த நாடுகளுக்குமிடையில் ஒப்பந்தங்கள் உள்ளன. இவை அந்த நாடு களின் யாப்பில் உள்ளது. ஒரு நாட்டிலிருந்து ஒரு மாகாணம் அல்லது மாநிலம் பிரிந்து செல்ல வேண்டுமாயின் அவற்றிற்குப் பூர்வீக குடிகளின் அங்கீகாரம் அரசுக்கு அவசியம். அண்மையில் அல்பேர்ட்டா மாநிலத்தில் உள்ள பிரிவினைவா திகள் ஒரு சர்வசன வாக்கெடுப்பிற்கான ஒரு கேள்விக்கொத்தைத் தயாரித்தனர். இதற்கு அல்பேர்ட்டா மாகாண சபையும் அங்கீகாரம் வழங்கியிருந்தது. இதனை எதிர்த்துப் பூர்வீகக் குடிகள் நீதிமன்றம் சென்றனர். நீதிமன்றம் பூர்வீகக் குடிக ளுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கியது. இங்கு இரண்டு விடயங்களைக் கவனிக்க வேண்டும். ஒன்று பூர்வீகக் குடிகளின் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள கனடாவில் ஒரு மாகாணம் பிரிந்து செல்லவேண்டுமாயின், அதற்கு நிலத்தின் சொந்தக்காரர் அங்கீகாரம் வழங்கவேண்டும். இது சட்டரீதியானது. கனடாவில் உள்ள சட்டங்கள் இதற்கான வரைவை தெளிவாக முன்வைத்துள்ளன. இரண்டாவது ஒரு மாகாணம் அந்த நாட்டிலிருந்து ஏன் பிரிந்து செல்ல விரும்புகின்றது ?

இங்கு தான் லெபனானுக்கும் அல்போர்ட்டாவுக்கும் ஓர் ஒற்றுமை ஏற்படுகின்றது. அல்பேர்ட்டா மக்கள் கனடாவை தங்களுக்கான நாடாகக் கருதவில்லை. இதற்குப் பல காரணங்களிருக்கலாம். அதே போன்றே லெபனானிலும் பல மாநிலங்கள் தங் களை லெபனானின் ஓர் அங்கமாகக் கருதவில்லை.

> ***நவம்பர் 22, 1943-இல் லெபனான் சுதந்திரம் பெற்றபோது, பெரும்பான்மை ஷியா முஸ்லிம்களைப் பிரதிநிதிப்படுத்த முறையான அனுபவமுள்ள, கல்வி கற்ற தலைவர்கள் இல்லை. இது மற்றைய சிறுபான்மை மத சமூகங்களுக்கு சார்பாக அமைந்தது. சுனி சமூகத்தைச் சேர்ந்தவர் பிரதமராக இருக்கவும், மரோனைட் சமூகத்தை சேர்ந்தவர் ஜனாதிபதியாகவும் இருக்க ஒப்பந்தமிடப்பட்டது. சியாவிற்கு நாடாளுமன்றத் தலைவர் பதவியே வழங்கப்பட்டது.***

லெபனான் சுதந்திரத்தின் பின்னர்:

பொ.ஆ.பி. 636-இல் சமகால லெபனானில் உள்ள பகுதிகளின் கட்டுப்பாட்டை முஸ்லிம் ஆட்சியாளர்கள் கைப்பற்றினர். லெபனானின் தற்போதைய பிரதேசம் 1516 முதல் 1861 வரை உதுமானியப் பேரரசின் (Ottoman empire) சிரியா மாகாணத் திற்குச் சொந்தமானது. 1861-ஆம் ஆண்டில், ஆறு ஐரோப் பிய சக்திகள் உதுமானியப் பேரரசை லெபனான் மலையில் - மலைகள் நிரம்பிய பிரதேசம் - ஒரு கிறீஸ்தவ ஆளுநருடன் ஒரு தன்னாட்சிப் பிராந்தியத்தை உருவாக்கக் கட்டாயப் படுத்தின, இது லெபனானின் தற்போதைய பிரதேசத்திற்கு அடிப்படையை உருவாக்கியது.

மதக் கூறுகளைக் கொண்ட சமூகங்களின் பிரதிநிதிகளே 1861 காலப்பகுதியிலிருந்து அரசில் அங்கம் பெற்றனர். (Maronites, Greek Orthodox, Catholics, Druzes, Shias and Sunnis). ஒவ்வொரு மத சமூகத்துக்கும் இரு அங்கத்தவர்கள் அரச நிர்வாக சபையில் அங்கம் வகித்தனர். இங்கு கவனிக் கப்படவேண்டிய விடயம் மத சமூகங்கள், அரசியல் சமூகங் களாக மாறின என் பதனைத்தான். பெரும்பான்மை மத சமூக மான ஷியா முஸ்லிம் சமூகமும் இரு அங்கத்தவர்களையே கொண்டிருந்தது. நவம்பர் 22, 1943-இல் லெபனான் சுதந்திரம் பெற்றபோது, பெரும்பான்மை ஷியா முஸ்லிம்களைப் பிரதிநி திப்படுத்த முறையான அனுபவமுள்ள, கல்வி கற்ற தலை வர்கள் இல்லை. இது மற்றைய சிறுபான்மை மத சமூகங் களுக்கு சார்பாக அமைந்தது. சுனி சமூகத்தைச் சேர்ந்தவர் பிரதமராக இருக்கவும், மரோனைட் சமூகத்தை சேர்ந்தவர் ஜனாதிபதியாகவும் இருக்க ஒப்பந்தமிடப்பட்டது. சியாவிற்கு நாடாளுமன்றத் தலைவர் பதவியே வழங்கப்பட்டது. நாடாளு மன்ற அங்கத்தவர்கள் எண்ணிக்கையிலும் சியா முஸ்லிம் கள் புறக்கணிக்கப்பட்டனர்.

சுதந்திரத்துக்குப் பின்னான லெபனானின் அரசுகள் தேசிய மட்டத்தில் அதாவது உள் நாட்டில் நடைபெறும் நடவடிக்கைகளை கட் டுப்படுத்தும் வலிமை அந்த நாட்டு அர சுக்கு இருக்கவேண்டும். அரசு பலவீனமா கும் பொழுது, வெளிநாட்டின் தலையீடும், அச்சுறுத்தல்களும் இருக்கும். இங்கு சர்வ தேச சட்டங்களைத் தலையீடு செய்யும் நாடு கள் மதிக்காமல் செயற்படும். இதனை எதிர்க்ககூடிய சக்தி அரசுக்கு இருக்க வேண்டும். இவை இல்லாதபோது அங்கு உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்படுகின்றன. இதற்கு வெளிநாட்டு சக்திகளின் உதவியும் தூண்டுதலும் காரணமாகவும் உள்ளது.

லெபனானில் ஓர் உள்நாட்டு யுத்தம் 1975-இல் தொடங்கியது. இதற்கு முன்பாக 1967-இல் நடைபெற்ற பாலஸ்தீனிய-இஸ்ரேல் யுத்தம் மேலும் ஒரு புதிய விடயத்தை லெப னானுக்கு ஏற்படுத்தியது. அது பாலஸ்தீனிய அகதிகளின் வருகையாகும். 1975 உள் நாட்டு யுத்தத்திற்கு மற்றொரு காரணியாக பாலஸ்தீனிய அகதிகளும் கருதப்பட்டனர். இப்போரில் ஷியா முஸ்லிம்களின் பங்களிப் புக் குறைவாகவேயிருந்தது. பாலஸ்தீனிய வருகையை மேற்கில் உள்ள குறிப்பாக ஐரோப்பிய நாடுகள், லெபனானின் ஆட்சியிலிருந்த கிறீஸ்தவ மேலாதிக்கத்துக் கான சவாலாக அல்லது அதன் வீழ்ச்சிக்கான ஆரம்பமாகக் கருதினர். உள்நாட்டுப் போரின் பின்னர் 1989-இல் ஏற்படுத் தப்பட்ட Taif ஒப்பந்தமும் ஒரு முறையான அரசியல் தீர்வை முன்வைக்கவில்லை. தொடர்ச்சியாக ஷியா முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டனர்.

> ***"மத சமூகங்கள், அரசியல் சமூகங்களாக மாறியமையினால், மத சமூகத் தலைவர்கள் தங்களது சமூகப் பொருளாதாரத்துக்கே முக்கியத்துவம் கொடுத்தனர். இது மத சமூகக் குடிமக்கள் தங்களை அந்த சமூகத்தின் பிரதிநிதி யாகவே பார்த்தனர். நாட்டின் பிரஜையாகப் பார்க்கவில்லை. ஒரு கூட்டு முயற்சியாகப் பொருளாதார முன்னேற்றம் ஏற்படு வதற்கு இது தடையாக இருந்தது."***

லெபனானின் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக செல்வந்தர்களே விளங்கினர். அரசு தலையீடு செய்ய முடி யாமல் இருந்தது. மத சமூகங்கள், அரசியல் சமூகங்களாக மாறியமையினால், மத சமூகத் தலைவர்கள் தங்களது சமூ கப் பொருளாதாரத்துக்கே முக்கியத்துவம் கொடுத்தனர். இது மத சமூகக் குடிமக்கள் தங்களை அந்த சமூகத்தின் பிர திநிதியாகவே பார்த்தனர். நாட்டின் பிரஜையாகப் பார்க்க வில்லை. ஒரு கூட்டு முயற்சியாகப் பொருளாதார முன்னேற் றம் ஏற்படுவதற்கு இது தடையாகவிருந்தது. இதற்குப் பிர தான காரணம் முறையற்ற அரசியல் அமைப்பாகும்.

ஹிஸ்புல்லாவின் தோற்றம்:

ஏற்கனவே 16-ஆம் நூற்றாண்டிலேயே Safavid Empire உடன் லெபனானிய ஷியாக்களுக்கு நெருக்கமான உறவிருந்தது. அன்றிலிருந்து இன்று வரை அது தொடர்கின்றது.

1960-களில் ஈரானில் பிறந்த ஷியா மதகுருவான மூசா அல் சதார் லெபனானிய ஷியாக்களுக்கான அரசியல் விடுதலையை கவனத்திற்கொண்டு செயற்பட்டார். இவர் ஷியா முஸ்லிம்க ளுக்கு ஒரு சிறந்த அரசியல் தலைமையும், இயக்கமும் அவசி யம் என லெபனான் ஷியா முஸ்லிம்களின் முக்கியஸ்தர்க ளுக்கு அறிவுறுத்தினார். 1975-இல் லெபனா னில் உள்நாட்டு யுத்தம் வெடித்தது. அத னைத் தொடர்ந்து ஷியா முஸ்லிம்களுக்கான ஆயுத அமைப்பான அமல் (AMAL) தொடங் கப்பட்டது. தெற்கு லெபனானை இஸ்ரேல் ஆக்கிரமித்தமையும், ஈரானில் 1979-இல் ஈரா னியப் புரட்சி வெற்றி பெற்றதும் அமல் அமைப் பிற்கு ஷியா மதகுமார்களின் அதிகளவு ஆத ரவு கிடைத்தது. 1980-களின் நடுப்பகுதியில் ஹிஸ்புல்லா அமைப்பின் ஆரம்பத்திற்கு இது வழிவகுத்தது. 1982-இல் தான் அதிகாரபூர்வ மாக ஹெஸ்புல்லா ஆரம்பிக்கப்பட்டது. ஹிஸ் புல்லாவின் ஆரம்ப நோக்கம் லெபனானில் உள்ள ஷியா முஸ்லிம்களுக்கு விடுதலை பெற்றுத் தருவதாகும். அதாவது லெபனா னில் ஷியாக்கள் ஆட்சி பீடம் அமைப்பதா கும். ஹிஸ்புல்லாவிற்கு மற்றொரு நோக்கமு மிருந்தது. அது இஸ்ரேலை முற்றாக அழிப்ப தாகும். ஷியாக்கள் (ஈரான், லெபனான்) தவ றாக உருவாக்கப்பட்ட அமைப்பு என இஸ்ரே லியர் கருதினர். இஸ்ரேலை அழிப்பது தங்க ளது மதக் கடமை என ஷியாக்கள் கருதி னார்கள். ஈரானிய அரசியல் மதத் தலைவ ரான அயதொல்லா கொமெய்னியை லெபனா னிய ஷியாக்களும் தங்களது தலைவராக ஏற் றுக்கொண்டனர். ஹெஸ்புல்லாவின் ஒவ்வொரு வளர்ச்சிக்கும் ஈரான் உறுதுணையாகவிருந்தது.

ஆயுதப் பயிற்சி, மதக் கல்வி, நிதியுதவி என ஈரானின் உதவி கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இஸ்ரேலின் லெபனான் மீதான தாக்குதல்கள்:

- 1978 – Operation Litani:

UN Security Council Resolution 242-ஐ ஏற்றுக்கொண்டன எகிப்தும், ஜோர்டானும். அது இஸ்ரேலை அங்கீகரிப்பதாகும். இதனைப் பாலஸ்தீனம் ஏற்றுக்கொள்ளவில்லை. பாலஸ் தீனிய தீவிரவாதிகள் ஐந்து விமானங்களைக் கடத்தினார்கள். இதில் மூன்று ஜோர்டானில் தரையிறக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து 1970 செப்ரெம்பர் 17-இல் ஜோர்டானிய அரசர் குசெயின் ஜோர்டானில் தங்கியிருந்த ஐம்பதாயிரம் பாலஸ்தீ னியத் தீவிரவாதிகளை வெளியேற்றுமாறு உத்தரவிட்டனர். பாலஸ்தீனிய தீவிரவாதிகள் தெற்கு லெபனானுக்கு நகர்ந் தனர். அப்போது தெற்கு லெபனான் லெபனானிய அரசின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இல்லை. பாலஸ்தீனிய தீவி ரவாதிகள் இஸ்ரேல் மீது தாக்குதலை மேற்கொண்டனர். இஸ்ரேல் தெற்கு லெபனானின் லற்றானின் நதிப்பிரதேசத் துக்கு அப்பால் பாலஸ்தீனிய தீவிரவாதிகளை நகர்த்தும் நோக்குடனும், தீவிரவாதிகளை அழிக்கும் நோக்கத்துடனும் தாக்குதல்களை நடத்தியது.

- 1982 – Operation Peace for Galilee:

இத்தாக்குதல் பெய்ரூத்வரை நடைபெற்றது. இதுவும் பாலஸ் தீனிய தீவிரவாதிகளை அழிக்கும் நோக்குடனேயே இஸ்ரே லால் நடத்தப்பட்டது. பாலஸ்தீனிய தீவிரவாதிகள் பெய்ரூத்தி லிருந்து பின்வாங்கினார்கள். 1983-இன் பிற்பகுதிவரை தெற்கு லெபனானின் பல பகுதிகளை இஸ்ரேல் தனது கட்டுப்பாட் டுக்குள் வைத்திருந்தது. இதே காலகட்டத்தில் ஷியா முஸ்லிம் களின் இரு இராணுவ அமைப்புகளான ஹிஸ்புல்லாவிற்கும் அமலுக்குமிடையில் சண்டைகள் நடைபெற்றன. இது 1989-வரை தொடர்ந்தது.

இங்கு ஒன்றைக் கவனிக்கவேண்டும் ஒரே நோக்கத்துடன் உருவாக்கப்படும் அமைப்புகளுக்கிடையிலான சண்டைகள், அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தை அழிப்பதுடன் அவ் அமைப்புகளையும் அழித்துவிடும். இது பாலஸ்தீனிய அமைப்பு களுக்கிடையிலும் நடைபெற்றது. தீவிர முஸ்லிம் அமைப்புக ளுக்குமிடையிலும் நடைபெற்றது. தமிழ் தேசியத்தின் தோல் விக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்திருந்தது.

- 1993 Operation Accountability:

இது ஹிஸ்புல்லா அமைப்பிற்கு எதிராக ஏழு நாட்கள் இஸ்ரே லால் நடத்தப்பட்ட தாக்குதல்களாகும்.

- 1996 Operation Grapes of Wrath:

1993 யுத்தத்தின் தொடர்ச்சியாகவே இது தொடர்ந்தது. இஸ் ரேலிய மக்கள் மீதான ஹிஸ்புல்லாவின் தாக்குதலுக்குப் பதி லடியாகவே இது நடத்தப்பட்டது என இஸ்ரேல் தெரிவித்தி ருந்தது. இத்தாக்குதல்கள் 17 நாட்கள் நீண்டிருந்தன. இதன் பின்னர் இஸ்ரேலிய பொதுத் தேர்தல் நடைபெற்றது குறிப் பிடத்தக்கது.

QANA-வில் அமைந்திருந்த ஐ.நா. அலுவலகம் இஸ்ரேலிய தாக்குதலுக்குள்ளானது. இங்கு தங்கியிருந்த 106 லெபனானி யர்கள் கொல்லப்பட்டனர்.

- 2006 Second Lebanon War:

யூலை 12-க்கும் ஓகஸ்ட் 14-க்குமிடையில் இஸ்ரேல், ஹிஸ் புல்லா மீது தாக்குதலை நடத்தியது.

2006–இன் பின்னர்...

இன்று வரை இஸ்ரேலுக்கும் தெற்கு லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பிற்குமிடையில் போர்கள் தொடர்கின் றன. தெற்கு லெபனான் மக்களுக்கு இது பழக்கப்பட்டுவிட் டது. தாக்குதல் நடைபெறும் பொழுது வெளியேறுவதும் பின்னர் திரும்புவதுமாக இவர்கள் தங்கள் வாழ்வை தொடர் கின்றனர். உள்ளூர் மக்கள் பல்வேறு ஆயுதக் குழுக்கள் மற்றும் இராணுவங்களால் துன்புறுத்தப்பட்டனர், மிரட்டப்பட் டனர், மற்றும் ஒடுக்கப்பட்டனர்.

நிலம், சொத்து மற்றும் உயிர்களின் இழப்பு தெற்கத்திய மக்களைக் காயப்படுத்தியுள்ளது, இருப்பினும் ஒவ்வொரு

முறையும் ஒரு பலவீனமான அமைதி வெளிப்படும்போது அவர்கள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்புகிறார்கள். ஏனெனில், நாட்டின் இந்த பகுதி சூடாகவும், வளமாகவும், அதிர்ச்சியூட்டும் வகையில் அழகாகவும் உள்ளது.

லெபனானின் இனப் பரம்பல்:

லெபனானில் அதிகளவாக இருந்த ஷியாக்களின் தொகை இன்று சுனிகளின் தொகையுடன் சமமாகவுள்ளது. சுமார் 68 வீதமான முஸ்லிம்களில் சமமான அளவு ஷியாவும், சுனியும் உள்ளனர். முப்பது வீதமான கிறிஸ்தவர்களும் வாழ்கின்றனர். இதனை விட பாலஸ்தீனிய அகதிகளும் அதிகளவு வாழ்கின்றனர்.

லெபனானில் பிறந்த பாலஸ்தீனிய அகதிகளின் பிள்ளைகளுக்கும் பலத்த கட்டுப்பாடுகள் உள்ளன. இவர்கள் இன்னமும் மருத்துவம், சட்டம், கல்வி போன்ற துறைகளில் கல்விகற்க முடியாமல் உள்ளனர். இது தற்போது சிரிய அகதிகளுக்கும் ஏற்பட்டுள்ளது. அமைச்சரவையில் கட்டுப்பாடு தளர்வு அறிவிக்கப்பட்டாலும், நாடாளுமன்றத்தில் சட்டமாக்கப்படவில்லை.

லெபனானிய அரசியல் அமைப்பு:

லெபனானிய அரசியல் அமைப்பின் பிரகாரம் அதன் ஜனாதிபதியாக Maronite கிறீஸ்தவரே இருக்க முடியும். அதன் பிரதமராக சுனி முஸ்லிம் ஒருவரே இருக்கலாம். நாடாளுமன்ற சபாநாயகராக ஷியா முஸ்லிம் இருப்பார். இது ஷியா முஸ்லிம்களுக்கும், சுனி முஸ்லிம்களுக்குமான அதிகாரவரம்பைக் கட்டுப்படுத்துவதுடன் அவர்களது பிரதிநிதித்துவத்தையும் கட்டுப்படுத்துகின்றது. இன்றுவரை மேற்கு நாடுகள் இதற்கு எதிராக குரலெழுப்பவில்லை. ஹிஸ்புல்லாவின் நடவடிக்கைகளை விமர்சிக்கும் மேற்கு நாடுகள் லெபானான் அரசியல் அமைப்பில் உள்ள இனப் பாகுபாட்டினை விமர்சிப்பதில்லை.

லெபனானிய இராணுவமும் ஹிஸ்புல்லாவும்:

லெபனானின் தேசிய இராணுவத்தை (LAF) விட ஹிஸ்புல்லா பல மடங்கு வலிமையானது. ஈரான் மற்றும் சிரியாவின் இராணுவ உதவிகள் பயிற்சிகள், புதிய ஆயுத உபகரணங்கள், ட்ரோன்ஸ், பீரங்கிகள், ஏவுகணைகள் என ஹிஸ்புல்லா மிகப் பலமானதாகவுள்ளது. இது லெபனானின் மிகப் பலவீனமான விடயமாகும். லெபனானின் இராணுவத்தால் ஒருபோதும் நாட்டைப் பாதுகாக்க முடியவில்லை. ஏனெனில், அது ஒரு எதிரியை வரையறுக்க முடியவில்லை. ஹிஸ்புல்லாவிற்கும் இஸ்ரேலுக்குமான யுத்தத்தில் லெபனானிய இராணுவத்தால் எதுவும் செய்ய முடியாமல் உள்ளது. லெபனான் தேசிய இராணுவத்தின் மீது ஹிஸ்புல்லாவின் ஆதிக்கம் நிறைந்துள்ளது. பல சமயங்களில் லெபனான் இராணுவம் ஹிஸ்புல்லாவுடன் ஒத்துழைத்து அதனைப் பின்பற்றியுள்ளது. அமல் இராணுவத்திற்கும் ஹிஸ்புல்லாவிற்குமிடையில் முரண்பாடுகள் இருப்பினும், அவை கருத்துரீதியாக ஒத்த கருத்தியலையே கொண்டுள்ளன. இவ்விரு இராணுவ அமைப்புகளும் லெபனானிய அரச படைகளைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றன.

> ***“லெபனானின் தேசிய இராணுவத்தை (LAF) விட ஹிஸ்புல்லா பல மடங்கு வலிமையானது. ஈரான் மற்றும் சிரியாவின் இராணுவ உதவிகள் பயிற்சிகள், புதிய ஆயுத உபகரணங்கள், ட்ரோன்ஸ், பீரங்கிகள், ஏவுகணைகள் என ஹிஸ்புல்லா மிகப் பலமானதாகவுள்ளது. இது லெபனானின் மிகப் பலவீனமான விடயமாகும்.”***

லெபனானிய பொருளாதாரம்:

லெபனானிய பொருளாதாரம் பெருமளவு சேவைகளிலேயே தங்கியுள்ளது. குறிப்பாக உல்லாசத்துறையே லெபனானின் தேசிய உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கின்றது. இதனை விட நிதிச் சேவை மற்றும் வணிக நடவடிக்கைகள் தேசிய உற்பத்தியின் 75 வீதத்தை உள்ளடக்குகின்றது. உள்ளூர் உற்பத்திகள் சிமெண்ட், உடைகள், இராசயன உற்பத்தி 20 வீதத்தை உள்ளடக்குகின்றது. மிகுதி ஐந்து வீதம் விவசாயமாகும். லெபனானில் நடைபெறும் போர்கள் தேசிய உற்பத்தியை அதிகளவு பாதிக்கின்றது.

லெபனானின் இன்றைய நிலை:

லெபனானின் நாணயமான லிரா 98 வீதமான பெறுமதியை இழந்துள்ளது. இன்றைய நிலையில் ஒரு லிரா 0.000011 அமெரிக்க டொலர்களாகும். லெபனானின் பணவீக்கம் 17 வீதமாகவுள்ளது. 2024-ஆம் ஆண்டளவில் இது சுமார் 175 - 200 வீதம்வரை சென்றிருந்தது. வேலையற்றோர் வீதம் 12.5 வீதமாகும். இது அரசாங்கத்தில் பதிவு செய்தோர் தொகையின் கணிப்பாகும். இன்று பாலஸ்தீனிய அகதிகளுடன், சிரிய அகதிகளும் லெபனானில் உள்ளனர். இதனால் சிறு தொழில்களில் இவர்கள் குறைந்த வேதனத்திற்கு வேலை செய்கின்றனர். சட்டரீதியாக இவர்கள் வேலை செய்வது கட்டுப்படுத்தப்பட்டிருப்பினும் சிறு முதலாளிகள் இவர்களையே விரும்புகின்றனர்.

சுமார் 80 வீதமான லெபனானியர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். 81 வீதமான லெபனானியர்கள் வீட்டுக் கடன்களை கட்டமுடியாமல் உள்ளனர்.

ஹிஸ்புல்லா ஷியா மக்களுக்கு இலவச சேவைகளை வழங்குகின்றது. மருத்துவமனைகள், பாடசாலைகள், குறைந்த கட்டணத்தில் வீடுகள், வீட்டுக் கடன்கள், சமூக பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற பலவற்றை வழங்குகின்றது. ஒரு ஷியா நிழல் அரசாகச் செயற்படுகின்றது. இவ்வாறான சேவைகளை லெபனானிய அரசே செய்யமுடியாமல் உள்ளது. இன்று ஈரான் போரின் பின்னர் ஹிஸ்புல்லாவிற்கு ஈரானிடமிருந்து பெறும் நிதியளவு குறையும். எனினும் ஹிஸ்புல்லாவின் இராணுவ மற்றும் அரசியல், சமூகக் கட்டமைப்பினை இஸ்ரேலாலும், மேற்காலும் உடைக்கமுடியாமல் உள்ளது. அதனால் ஹிஸ்புல்லா தொடர்ந்து ஒரு தனி அரசாகவே லெபனானில் செயற்படும்.

காசாவை எவ்வாறு குண்டுகள் வீசி அழித்ததோ அதே முறையில் தெற்கு லெபனானின் பல பகுதிகளை இஸ்ரேல் அழித்து வருகின்றது. அதாவது தரைமட்டமாக்கி வருகின்றது. Naquoura, Alta al Shaab, Rmelsh, Alaroun, Shebaa, Khiam,

Taybeh, Ahyata போன்ற பல நகரங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

சுமார் 10-14 வீதமான லெபனான் இஸ்ரேலின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. மஞ்சள் கோடு அமைத்து அதனை மீறி லெபனானியர்கள் வரக்கூடாது என இஸ்ரேல் அறிவித்துள்ளது. ஹிஸ்புல்லா அழிக்கப்படும் வரை இஸ்ரேல் தனது தாக்குதல்களை நிறுத்தாது. அது மட்டுமல்லாமல் அகண்ட இஸ்ரேலுக்கான நிலப்பிரதேசத்தை லெபனானிடமிருந்தும் ஆக்கிரமிக்கின்றது. எகிப்தும், ஜோர்டானும் இஸ்ரேலுடன் இணக்கமாக விருப்பதனால் அந்த நாடுகளின் நிலத்தை அபகரிக்க இஸ்ரேல் முயலாது. மாறாக சிரியா, லெபனான் நாடுகளை தாக்கி அந்நிலங்களை அபகரிக்கின்றது.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பானது பல இனக்குழுமங்களைக் கொண்டுள்ள லெபனானில் இனங்களுக்கிடையில் உறவுச் சிக்கல்களையும் ஏற்படுத்தியுள்ளது. ஷியா முஸ்லிம்களை ஷியா முஸ்லிம் அதிகளவு வாழும் பகுதிகளிலிருந்து வேறு பகுதிகளுக்கு இடம்பெயரும் பொழுது, ஒரு சந்தேகக் கண்ணுடன் பார்ப்பது அதிகரித்துள்ளது. சமூகங்களே, சமூகங்களுக் கிடையிலான தடைகளை ஏற்படுத்தியுள்ளன. புதியவர்களை வரவேற்கத் தயங்குகின்றார்கள். இது பாதுகாப்புக் காரணங்களுக்காக மட்டுமல்ல, தங்களது வேலைகள் இல்லாமல் போய்விடும் என்ற அச்சமும் உள்ளது. இவ்வாறான இனங்களுக்கிடையிலான பிரச்சினையை அரசு சுமூகமாக்க முயலவில்லை. இது வெளிநாட்டுச் சக்திகள் உட்புக வழிவகுக்கின்றது.

> ***“லெபனானில் இறையாண்மை ஒரு தெளிவற்ற கருத்தாகவே உள்ளது. ஹிஸ்புல்லா ‘ஒரு நாட்டிற்குள் ஒரு நாடு’ என்ற நிலையில் ஷியா முஸ்லிம்களை ஆட்சி செய்து வருகின்றது. ஆனாலும் ஹிஸ்புல்லா லெபனானை அழிக்க முயற்சிக்கவில்லை. லெபனானிய அரசு தனது மக்களின் நலன்களைக் கருதி செயற்படவில்லை. அதே சமயம் ஹிஸ்புல்லா தனது மக்களுக்காக பல நல்வழித்திட்டங்களை செய்துவருகின்றது.”***

லெபனானிற்கு அரசியல் தீர்வு என்ன?

லெபனானின் இறையாண்மை என்பது வெளிநாடுகளிலேயே தங்கியுள்ளது. இஸ்ரேல், அமெரிக்கா, ஈரான் போன்ற நாடுகளின் ஆதிக்கம் லெபனானில் தொடர்கின்றது. ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு இனத்தின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது. மரோனைட் கிறீஸ்தவர்கள் மவுன்ட் லெபனான் (மலைகள் அடங்கிய பகுதி) Keserwan, Jbeil (Byblos), Metn கிறீக் கத்தோலிக்கர்கள் Koura, Zahle ஆமேனியர்கள், Bourj Hammoud, Dora சுனி முஸ்லிம்கள் - Akkar, Tripoli, Sidon (Saida) ஷியா முஸ்லிம்கள் - தெற்கு லெபனான், Nabatieh Governorate, Baalbek-Hermel பெய்ரூத்தில் சகல இனங்களும் வாழ்கின்றனர். இவர்களுடன் பாலஸ்தீனிய அகதிகள், சிரிய அகதிகளும் பெய்ரூத்தில் வாழ்கின்றனர்.

சகல இனங்களுக்குமான ஓர் அரசியல் அமைப்பு உருவாக்கப்படவில்லை. ஒரு கிறீஸ்தவர்தான் ஜனாதிபதியாக இருக்க வேண்டும், ஒரு சுனி முஸ்லிம் தான் பிரதமராக இருக்க வேண்டும் எனவுள்ள அரசியல் அமைப்பினால் இனங்களுக் கிடையிலான சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

லெபனானின் மற்றொரு பிரச்சினை இஸ்ரேல். இஸ்ரேல்-பாலஸ்தீன சமாதானம் ஏற்படுத்தும்வரை லெபனானும் அரசியல் மற்றும் இராணுவரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாகிக் கொண்டேயிருக்கும். பாலஸ்தீனத்துக்கான சமாதானம் அல்லது அவர்களுக்கான நாடு என்பது லெபனானின் சமாதானத்துக்கு அவசியம். இல்லையேல் ஹிஸ்புல்லா-இஸ்ரேல் மோதல்கள் தொடர்வது தவிர்க்கமுடியாதது.

லெபனான் தனது பொருளாதார வளர்ச்சிக்குப் போர் இன்றிய சூழல் அவசியம். இதனை அமெரிக்காவால் அல்லது மேற்கு நாடுகளால் ஏற்படுத்த முடியாது. ஒவ்வொரு இனமும் வன்முறையற்ற சமூகமாக மாறுவதன் அவசியத்தை உணரவேண்டும். தங்களது சமூகத்துக்கான சமூக மற்றும் அரசியல் உணர்வு, சக்தி லெபனான் என்ற நாட்டின் மீதும் வைக்கவேண்டும். இனங்களுக்கிடையிலான சமூகத் தடைகள் இல்லாது ஒழிக்கப்படவேண்டும்.

லெபனானின் இராணுவத்தால் ஒருபோதும் நாட்டைப் பாதுகாக்க முடியவில்லை. லெபனானின் தேசிய இராணுவத்தை விட, ஹிஸ்புல்லா, அமல், சுனி முஸ்லிம்களின் ஆயுத அமைப்பு Nabatieh Governorate, Baalbek-Hermel, Abdallah Azzam Brigades, Fatah al-Islam கிறீஸ்தவர்களின் Soldiers of God (Junud al-Rab) போன்ற அமைப்புகள் பலம்வாய்ந்தனவாகவுள்ளன. இது லெபனானுக்கு ஆபத்தானது.

லெபனானில் இறையாண்மை ஒரு தெளிவற்ற கருத்தாகவே உள்ளது. ஹிஸ்புல்லா ‘ஒரு நாட்டிற்குள் ஒரு நாடு’ என்ற நிலையில் ஷியா முஸ்லிம்களை ஆட்சி செய்து வருகின்றது. ஆனாலும் ஹிஸ்புல்லா லெபனானை அழிக்க முயற்சிக்கவில்லை. லெபனானிய அரசு தனது மக்களின் நலன்களைக் கருதி செயற்படவில்லை. அதே சமயம் ஹிஸ்புல்லா தனது மக்களுக்காக பல நல்வழித்திட்டங்களை செய்துவருகின்றது. இன்று லெபனானின் பிரச்சினை லெபனானின் தேசிய அரசாங்கம் என்ற பெயரில் இயங்கும் மத நம்பிக்கை சார்ந்த அரசு.

லெபனானில் லெபனானிய அரசினாலும், சர்வதேச சக்திகளாலும் ஏற்படுத்தப்பட்டுள்ள வெற்றிடம் நீக்கப்படவேண்டும். இன்றைய நிலையில் அது சாத்தியமற்றது.

rathan@thaiveedu.com

சிவா முருகுப்பிள்ளை

சுயமாக எழுந்து நிற்கும் நமீபியா

வளர்ந்து வரும் மூன்றாம் உலக நாடுகளுக்கு நிதியைக் கையாளுதல் கடனைத் திரும்பிச் செலுத்துதல் என்பதில் மிகவும் நம்பிக்கைக்குரிய செயற்பாட்டை அண்மையில் நிகழ்த்திக் காட்டி இருக்கின்றது ஆபிரிக்கத் தேசமான நமீபியா. இந்த செய்தி இன்றைக்கு இலங்கையிற்கும் அதன் பொருளாதாரத்திற்கும் மிக முக்கியமான பாடமாக, செய்தியாக, வழி காட்டியாக இருக்கும் என்பதாக உணருவதால் நமீபியா பற்றிய பதிவு ஒன்றை தருவதற்கு முற்படுகின்றேன்.

வளர்ச்சியடைந்த நாடுகள், வளர்ந்து வரும் நாடுகள், வறுமையின் பிடியில் சிக்கியுள்ள ஏழை நாடுகள் என உலக வரைபடத்தில் உள்ள அனைத்துத் தேசங்களுமே, ஏதோ ஒரு கால கட்டத்தில் ஏதோ ஒரு வழியில் கடன் என்ற பெயரில் நிதியைப் பெற்றுக்கொள்வது என்பது இன்றைய உலகப் பொருளாதார அமைப்பில் மிகவும் இயல்பான ஒரு பொதுவான செயற்பாடாகும். இந்த நிதியானது உள்நாட்டு மூலதனச் சந்தையிலோ அல்லது வெளிநாட்டுப் பொது நிதி அமைப்புகளிலோ கடனாகப் பெறப்படலாம். இந்த பூமிப் பந்தின் ஒட்டுமொத்த இயக்கத்திற்கும், நாடுகளின் பொருளாதாரக் கட்டமைப்புப் பராமரிப்பிற்கும் 'கடன் வாங்குதல்' என்பது தவிர்க்க முடியாத ஒரு நாணயப் பரிமாற்றப் பொறிமுறையாகவே உருவெடுத்துள்ளது. ஆனால், இங்கு மிக முக்கியமான நிபந்தனை என்னவெனில், அவ்வாறு பெறப்படும் கடனானது முறையான பொருளாதார வளர்ச்சி மற்றும் உட்கட்டமைப்பு முதலீடுகள் மூலம் உற்பத்தித் திறனாக மாற்றப்பட்டு, துல்லியமாக வரையறுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள், தவணைத் தொகையாகத் திருப்பிச் செலுத்தப்படும் வகையில் அமைய வேண்டும். இதற்கேற்ற உத்தியோகபூர்வமான கடன் மேலாண்மைப் பொறிமுறைகளையும், நீண்டகாலப் பொருளாதாரத் திட்டங்களையும் ஒரு தேசம் தன்னிடம் கொண்டிருப்பது இன்றியமையாததாகும்.

இது நாடுகளுக்கு அப்பால் நிறுவனங்கள், குடும்பங்கள், தனிநபர் என்றாக எல்லா இடத்திலும் பொருந்திப் போகும் முறையான நடைமுறையாக இருக்க வேண்டும் என்பதே சரியானது. அன்றேல் இதே கடனில் மூழ்கிச் சுயத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுவிடும். இவ்வாறு இன்று திட்டமிட்டுத் தனது கடன்களை முழுமையாகத் திருப்பிச் செலுத்திய நமீபியாவின் ஆரம்பகால வரலாறு மிகவும் கடினமானதாகவே அமைந்திருந்ததை வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

நமீபியாவின் வறண்ட நிலங்கள் வரலாற்றின் ஆரம்ப காலங்களில் சான், டமாரா மற்றும் நாமா மக்களின் வசிப்பிடமாக இருந்திருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, தென்னாபிரிக்கக் கண்டத்தின் கோய்சான் (கோய்கோய் + சான்) மக்கள் நாடோடி வாழ்க்கையைத் தொடர்ந்தனர். கோய்கோய் மக்கள் கால்நடை மேய்ப்பவர்களாகவும், சான் மக்கள் வேட்டையாடி உணவு சேகரிப்பவர்களாகவும் இருந்தனர். 15-ஆம் நூற்றாண்டின் இறுதியில் போர்த்துக்கீச மாலுமிகள் கடல் மார்க்கமாக தற்போதைய நமீபியாவில் தரை இறங்கிப் பொருளாதார வாய்ப்புகளுக்கான ஆய்வுகள் மேற்கொண்டனர். ஆனால் அவர்கள் அந்த வறண்ட பிரதேசத்தில் தொடர்ந்து தங்கியிருந்து அவ்விடங்களை உரிமை கோரவில்லை. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து, கேப் காலனியைச் சேர்ந்த ஊர்லாம் மக்கள் ஆரஞ்சு நதியைக் கடந்து, இன்று தெற்கு நமீபியாவாக இருக்கும் பகுதிக்குக் குடிபெயர்ந்தனர். நாடோடி நாமா பழங்குடியினருடனான அவர்களின் சந்திப்புகள் ஆரம்பத்தில் பெரும்பாலும் அமைதியானவையாக இருந்தன. ஆனால் அந்த மக்களுடன் வந்த மதபோதகர்களை ஆதி குடியினர் அதிகம் வரவேற்கவில்லை மாறாக எதிர்க்கத் தொடங்கினர். இதனால் 1880-இல் நாமா - ஹெரெரோ போர் வெடித்தது. ஜேர்மன் பேரரசு சர்ச்சைக்குரிய இடங்களுக்குத் தனது படைகளை அனுப்பி, நாமா, ஊர்லாம் மற்றும் ஹெரெரோ மக்களிடையே இருந்த முறுகல் நிலையைத் தணித்தது.

அக்காலத்தில் வர்த்தகர்களும், குடியேறிகளும் முக்கியமாக ஜேர்மனி மற்றும் ஸ்வீடனில் இருந்தே நமீபியாவிற்கு வந்தனர். 1870-இல், பின்லாந்து மதபோதகர்கள் நமீபியாவின் வடக்குப் பகுதிக்கு வந்து ஓவாம்போ மற்றும் கவாங்கோ மக்களிடையே லூதரன் மதத்தைப் பரப்பினர். கூடவே 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், டோர்ஸ்லாண்ட் ட்ரெக்கர்ஸ், டிரான்ஸ்வாலில் இருந்து அங்கோலா செல்லும் வழியில் நாடோடி மக்கள் இப்பகுதியைக் கடந்தனர். அவர்களில் சிலர் தங்கள் பயணத்தைத் தொடராமல் நமீபியாவில் குடியேறினர்.

அண்டை நாடான தென்னாபிரிக்காவைத் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த பிரித்தானியப் பேரரசின் ஆக்கிரமிப்பு விரிவாக்கத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக, 1884-ஆம் ஆண்டில் நமீபியா தன்னை ஒரு ஜேர்மனியப் பாதுகாப்புப்

tg.theeban@gmail.com

பிராந்தியமாக (German Protectorate) மாற்றிக்கொண்டது. இதன் விளைவாக, இந்நிலப்பரப்பிற்கு ஜேர்மனியக் காலனித்துவ ஆட்சியாளர்கள் 'ஜேர்மன் தென்மேற்கு ஆபிரிக்கா' என்று புதிய பெயரிட்டனர். இத்தகைய காலனித்துவச் சூழலுக்கு மத்தியில், 1897-ஆம் ஆண்டில் இப்பிராந்தியத்தில் மிகக் கொடூரமாகப் பரவிய 'கால்நடைக் கொள்ளை நோய்' தெற்கு மற்றும் மத்திய நமீபியாவில் வாழ்ந்த பூர்வீக மக்களின் சுமார் 95% கால்நடைகள் மொத்தமாக மடிவதற்குக் காரணமாக அமைந்தது. இக்கோரத் தொற்றினால் பாதிக்கப்பட்ட கால் நடைகளையும், அவற்றைப் பராமரிக்கும் பூர்வீகக் கால்நடை வளர்ப்பாளர்களையும் மற்றப் பகுதிகளிலிருந்து முற்றிலும் துண்டித்துத் தனிமைப்படுத்தும் (Quarantine) நோக்குடன், ஜேர்மனியக் காலனித்துவவாதிகள் ஒரு பிரம்மாண்டமான பாதுகாப்பு வேலியை அமைத்தனர். உலக வரலாற்றில் இத்த டுப்பு வேலியே 'சிவப்புக் கோடு' என்று இன்றும் அழைக்கப் படுகிறது.

1907-ஆம் ஆண்டில் கால்நடை நோய் பரவலைக் கட்டுப் படுத்துதல் என்ற போர்வையில் ஜேர்மனியர்களால் உருவாக் கப்பட்ட இந்தத் தடுப்பு வேலியானது, உலக வரலாற்றிலேயே முதன்முறையாக ஒட்டுமொத்தப் பூர்வீக மக்களைத் திறந் தவெளி வதைமுகாம்களுக்குள் அடைத்து வைப்பதற்கான ஒரு கொடூரமான காவல் மண்டலமாக (Police Zone) விரி வாக்கம் பெற்றது. தங்களின் வாழ்விடங்களையும் வாழ்வாதா ரங்களையும் பறித்த இந்த அடக்குமுறைக்கு எதிராக, நமீபி யாவின் பூர்வீகப் பழங்குடி இனங்களான 'ஹெரெரோ' மற்றும் 'நாமா' மக்கள் ஜேர்மனியக் காலனித்துவக் குடியேற்றவாதிக ளுக்கு எதிராக ஆயுதம் ஏந்தித் தங்களின் மிகத் தீவிரமான எதிர்ப்பைப் பதிவு செய்தனர். எனினும், இந்த நியாயமான எழுச்சிக்குப் பதிலடியாக, ஜேர்மனியப் பேரரசின் இராணுவம் அந்தப் பூர்வீக மக்களைக் திட்டமிட்டு இனப்படுகொலை செய்து முற்றிலும் அழித்தொழிக்கும் கொடூரமான இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்தது. இக்கோரத் தாண்டவமே, உலக வரலாற்றுப் பக்கங்களில் 'இருபதாம் நூற்றாண்டின் முதலாவது இனப்படுகொலை' என்று அடையாளப்படுத்தப் படுகிறது.

இந்தக் கொடூரமான இராணுவ நடவடிக்கையின் போது, ஜேர் மனியர்கள் திட்டமிட்டு ஏறத்தாழ 10,000 நாமா மக்களை (அவர்களின் மொத்த மக்கள் தொகையில் பாதி) மற்றும் சுமார் 65,000 ஹெரெரோ மக்களை (அவர்களின் மொத்த மக்கள் தொகையில் 80 சதவீதம்) மிகக் கொடூரமாகக் கொன் றொழித்தனர். அதுமட்டுமன்றி, வதை முகாம்களின் தடுப்புக் காவலில் இருந்து தப்பிப் பிழைத்த பூர்வீக மக்கள், 1948-ஆம் ஆண்டில் தென்னாபிரிக்காவினால் அதிகாரபூர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட 'இன ஒதுக்கல்' கொள்கையின் அடிப் படையில் - கட்டாய உழைப்பு, நாடுகடத்தல் மற்றும் கடுமை யான இனப் பிரிவினைவாத முறைமைகளை எதிர்கொள்ள நேரிட்டது.

இக்காலகட்டத்தில், பெரும்பாலான ஆபிரிக்கப் பூர்வீகக் குடிகள் அவர்களின் சொந்தப் பூர்வீக நிலங்களிலேயே 'திறந் தவெளிச் சிறை' (Open-air Prison System) முறையின் கீழ் அடைக்கப்பட்டனர். இந்தத் திறந்தவெளிச் சிறை வலயங் களே, 1949-ஆம் ஆண்டிற்குப் பிறகு தென்னாபிரிக்காவின் வெள்ளையின சிறுபான்மை ஆட்சியின் கீழ் 'தாய்நாடுகள்' அல்லது 'பண்டுஸ்தான்கள்' என்று அழைக்கப்பட்ட இன ஒதுக்கல் பிராந்தியங்களாக மாற்றமடைந்தன. நமீபிய மண் ணில் நிகழ்த்தப்பட்ட இந்த ஹெரெரோ மற்றும் நாமா இனப் படுகொலைகள்தான், பிற்காலத்தில் ஐரோப்பாவில் நாஜிக் கள் நிகழ்த்திய 'ஹோலோகாஸ்ட்' எனப்படும் யூதப் பேரழிப் பிற்கு மிக முதன்மையானதொரு வரலாற்று முன்மாதிரியா கவும், சோதனைக்களமாகவும் அமைந்ததாக சமகால வர லாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இவ்வாறு, தொடக்கத் தில் ஜேர்மனியரிடமும், பின்னர் தென்னாபிரிக்காவைத் தளமா கக் கொண்ட பிரித்தானியக் காலனிய ஆதிக்கத்தின் கீழும் ஒரு அடிமைப்பட்ட பிரதேசமாகவே நமீபியாவின் கடந்த காலம் அமைந்திருந்தது.

நீண்டகாலப் போராட்டங்களுக்குப் பின்னர், நமீபியா தேசம் 1990-ஆம் ஆண்டில் தென்னாபிரிக்காவின் பிடியிலிருந்து தனது முழுமையான விடுதலையைப் பெற்றது. அதுவரை, ஒருவகையான பிராந்திய அளவிலான சார்புக் காலனித்துவ ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடாகவே அது திகழ்ந்தது. இன்று, அதிகாரபூர்வமாக 'நமீபியா குடியரசு' (Republic of Namibia) என்று அழைக் கப்படும் இந்நாடு, தெற்கு ஆபிரிக் காவின் அட்லாண்டிக் பெருங் கடல் கடற்கரையில் அமைந் துள்ள ஒரு சுதந்திரமான இறையாண்மை கொண்ட தேசமாகும்.

நமீபியாவின் தற்போதைய ஒட்டுமொத்த மக்கள் தொகை தோராயமாக 30 லட்சமாகும். பரப்பளவோடு ஒப்பிடுகையில், இது உலகிலேயே மிகக் குறைந்த மக்கள் தொகை அடர்த்தியைக் கொண்ட நாடுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. நமீபியா என்பது பல்வேறு இனக்குழுக்களும், பல மொழிகளும் பேசப்படும் ஒரு பல்லினப் பன்முகத்தன்மை கொண்ட நாடாகும். நாட்டின் நிர்வாக வசதிக்காக 'ஆங்கிலம்' மட்டுமே ஒரே உத்தியோகபூர்வ மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், பூர்வீக மொழியான 'ஒசிவாம்போ' (Oshiwambo) நாட்டின் பெரும்பான்மையான மக்களால் (சுமார் 50%) பேசப்படும் முதன்மை மொழியாகத் திகழ்கிறது. அதே வேளை, காலனித்துவக் காலத்தின் எச்சமான 'ஆபிரிக்கான்ஸ்' மொழி, அங்கு பொதுவான வணிக மொழியாகவும், பலரின் இரண்டாவது மொழியாகவும் இன்றும் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

இவை தவிர, பிற வட்டார மொழிகளாக நாமா / தமாரா, கவாங்கோ, ஹெரெரோ ஆகிய பூர்வீக மொழிகளும் இங்கு புழக்கத்தில் உள்ளன என்றும், ஒரு காலத்தில் இந்நாடு ஜேர்மனியக் காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் இருந்ததன் நேரடி விளைவாக, 'ஜேர்மன்' மொழியும் இன்றுவரை இங்கு பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது என்றும் வரலாற்றுத் தரவுகள் குறிப்பிடுகின்றன. சமகால நமீபியா என்பது ஐரோப்பியக் குடியேற்றவாசிகள் அதிகம் இல்லாத ஒரு நாடாகும்; அதன் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் ஆபிரிக்கப் பழங்குடியினரே மிக உன்னதமான பெரும்பான்மையாக விளங்குகின்றனர். அதாவது, நாட்டின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 93.2% பேர் ஆபிரிக்கப் பூர்வகுடி இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், அவர்களுள் 'ஓவாம்போ' இனத்தவரே நாட்டின் மிகப்பெரிய முதன்மைக் குழுவினராகத் திகழ்கின்றனர். எஞ்சிய மக்கள் தொகையில் கலப்பு இனத்தவர் சுமார் 3.6% பேராகவும், குறிப்பாக ஜேர்மன் மற்றும் டச்சு வம்சாவளியைச் சேர்ந்த வெள்ளையின மக்கள் சுமார் 1.8% பேராகவும், ஆசியர்கள் மற்றும் ஏனைய பிரிவினர் சுமார் 1.4% பேராகவும் வாழ்ந்து வருகின்றனர்.

மதக் கட்டமைப்பைப் பொறுத்தவரை, நமீபியா ஒரு கிறிஸ்தவப் பெரும்பான்மை நாடாகும்; அதன் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் சுமார் 90% வரை கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுகின்றனர் என்பதுடன், அவர்களுள் லூத்தரன் மற்றும் உரோமன் கத்தோலிக்க திருச்சபைகளைச் சேர்ந்தவர்களே மிகப் பெரிய பிரிவினராக விளங்குகின்றனர். அதேவேளை, சான் மற்றும் ஹிம்பா போன்ற சிறுபான்மைப் பழங்குடி இன மக்கள் தங்களின் பூர்வீக பாரம்பரிய ஆபிரிக்க ஆன்மீக நம்பிக்கைகளை இன்றும் தொடர்கின்றனர் என்றும், இஸ்லாம், பௌத்தம் மற்றும் யூத மதம் போன்ற பிற மதங்கள் அங்கு மிகச் சிறிய அளவில் (1%-க்கும் குறைவாகவே) பின்பற்றப்படுகின்றன என்றும் தரவுகள் குறிப்பிடுகின்றன. புவியியல் ரீதியாக இந்நாடு, தனது எல்லைகளை மேற்கில் அட்லாண்டிக் பெருங்கடலுடனும், வடக்கில் அங்கோலா மற்றும் சாம்பியாவுடனும், கிழக்கில் போட்ஸ்வானாவுடனும், தெற்கில் தென்னாபிரிக்காவுடனும் பகிர்ந்து கொள்கின்றது.

நாலு பக்கங்களை உடைய கிட்டத்தட்ட நாற்பக்கலாக தோற்றம் கொண்ட இந்த நாட்டின் வட கிழக்கு மூலையில் மெலிதான ஆனால் நீண்டதான மான் ஒன்றின் கொம்பு போன்ற தோற்றம் கொண்ட பகுதி இந்நாட்டுடன் இணைந்திருப்பது இந்த நாட்டின் பிரதியேக தோற்றமாக உணரப்படுகின்து. இதனால் தனது தரை வழித் தொடர்பை சாம்பியா, சிம்பாபே போன்ற நாடுகளுடன் ஏற்படுத்தியும் கொண்டிருக்கின்றது. இந்தப் பகுதி சாம்பியாவின் நகரமான கசுங்குலா அருகே ஜாம்பேசி ஆற்றின் ஓரமாக 200 மீற்றருக்கும் குறைவான தூரத்தில் அமையப் பெற்று, இந்நாட்டின் வர்த்தகப் போக்கு வரத்துப் பாதையாகத் திகழ்கின்றது..

நாட்டின் மத்திய பகுதியல் அமைந்துள்ள விந்தோக் இதன் தலைநகரமும் மிகப்பெரிய நகரமும் ஆகும். உலகின் மிகப் பழமையான பாலைவனங்களில் ஒன்றான நமீப் பாலைவனத்தின் பெயரைத் தழுவி நமீபியா என்று பெயரிடப்பட்டது. தனது அரசியலமைப்பிலேயே சுற்றுச்சூழல் பாதுகாப்பைச் சேர்த்த முதல் ஆபிரிக்க நாடு நமீபியா ஆகும். நாட்டின் 40%-க்கும் அதிகமான நிலப்பரப்பு பாதுகாக்கப்பட்ட பகுதியாக உள்ளது. இது இன்றை உலகின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றான பூமி வெப்ப மடைத்தல் என்ற சுற்றுச் சூழல் விடயத்தில் உலக நாடுகளுக்கு முன் உதாரணமாகியும் உள்ளது.

ஆபிரிக்கக் கண்டமானது அடர்ந்த வனங்களுக்கும், அவற்றில் வாழும் அரிய வகை வனவிலங்குகளுக்கும் உலகளாவிய அடையாளமாகத் திகழும் சூழல் நிலவுவது நாம் அனைவரும் அறிந்ததே. இதற்கு ஒத்திசைவாக, நமீபியாவின் புகழ்பெற்ற 'எடோசா தேசிய பூங்கா' போன்ற இயற்கைச் சரணாலயங்களில் ஆபிரிக்க யானைகள், காண்டாமிருகங்கள் மற்றும் சிங்கங்கள் போன்ற விலங்கினங்கள் மிக அதிக அளவில் காணப்படுகின்றன. மேலும், அமெரிக்காவின் கிராண்ட் கேன்யனுக்கு அடுத்தபடியாக, உலகின் மிகப்பெரிய மற்றும் ஆழமான பள்ளத்தாக்குகளில் ஒன்றாகக் கருதப்படும் 'மீன் நதிப் பள்ளத்தாக்கு', மற்றும் பிரம்மாண்ட மணல் மேடுகளால் சூழப்பட்டு, காலப்போக்கில் மனிதர்களால் கைவிடப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க 'கோல்மான்ஸ்காப்' எனப்படும் 'பேய் நகரம்' ஆகிய அரிய சுற்றுலாத் தளங்களும் இந்நாட்டிலேயே அமையப் பெற்றுள்ளன. 'கோல்மான்ஸ்காப்' ஒரு காலத்தில் வைரம் தோண்டியெடுக்கப்பட்ட பணக்கார நகரமாகும். 1950-களில் வைரம் தீர்ந்தவுடன் மக்கள் இந்த நகரத்தைக் கைவிட்டனர். இன்று பாலைவன மணல் அந்த வீடுகளுக்குள் புகுந்து, உலகிலேயே மிக விசித்திரமான ஒரு 'பேய் நகரமாக' அதனை மாற்றியுள்ளதுடன், வருடந்தோறும் லட்சக்கணக்கான சர்வதேசப் பயணிகளை ஈர்த்து நமீபியாவிற்குப் பாரிய வெளிநாட்டு நாணயத்தை ஈட்டித் தரும் தளமாக மாறியுள்ளது.

நமீபியா சகாரா பாலைவனத்திற்குத் தெற்கே உள்ள மிகவும் வறண்ட நாடாக இருப்பதினால் பெருமளவில் நிலத்தடி நீரைச் சார்ந்துள்ள நாடு. ஆண்டுக்குச் சராசரியாக சுமார் 350

"நமீபியா சகாரா பாலைவனத்திற்குத் தெற்கே உள்ள மிகவும் வறண்ட நாடாக இருப்பதினால் பெருமளவில் நிலத்தடி நீரைச் சார்ந்துள்ள நாடு. ஆண்டுக்குச் சராசரியாக சுமார் 350 மி.மீ (14 அங்குலம்) மழைப்பொழிவு மட்டுமே கொண்டுள்ளது."

"நமீபியாவின் வருவாயில் 25% பங்களிக்கும் சுரங்கத் தொழில், மிக முக்கியமான பொருளாதார வளம் ஆகும். ஆபிரிக்காவில் எரிபொருள் அல்லாத கனிமங்களை ஏற்றுமதி செய்யும் நான்காவது பெரிய நாடாக நமீபியா உள்ளது, மேலும் உலகின் நான்காவது பெரிய யுரேனியம் உற்பத்தியாளராகவும் இருக்கின்றது."

மி.மீ (14 அங்குலம்) மழைப்பொழிவு மட்டுமே கொண்டுள்ளது. தென்னாபிரிக்கா, அங்கோலா, சாம்பியா ஆகிய நாடுகளுடனான தேசிய எல்லைகளிலும், கப்ரவி பகுதியில் உள்ள போட்ஸ்வானாவுடனான குறுகிய எல்லையிலும் மட்டுமே வற்றாத ஆறுகள் காணப்படுகின்றன. ஆனால், வருடத்தில் சில காலங்களில் நாட்டில் ஏற்படும் அசாதாரண மழைப்பொழிவுக்குப் பிறகு ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும். கோடை மாதங்களில் மட்டுமே நிலத்திற்கு மேலான நீர் கிடைக்கிறது.

மற்றைய காலங்களில் இந்தப் பருவகால வெள்ளங்களையும் அவற்றின் வழிந்தோடும் நீரையும் தேக்கி வைக்கும் சில பெரிய நீர்த்தேக்க அணைகளுக்கு மட்டுமே மேற்பரப்பு நீர் கிடைக்கிறது. வற்றாத ஆறுகளுக்கு அருகில் வசிக்காத அல்லது நீர்த்தேக்க அணைகளைப் பயன்படுத்தாத மக்கள், நிலத்தடி நீரை மட்டும் எதிர்பார்த்திருக்கும் இலங்கையின் யாழ்ப்பாணத்து மக்களுக்கு ஒப்பானவர்களாகக் காணப்படுகின்றனர்.

கடந்த நூற்றாண்டில் நமீபியாவில் 100,000-க்கும் மேற்பட்ட ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இந்த ஆழ்துளைக் கிணறுகளில் மூன்றில் ஒரு பங்கு வறண்ட நிலப்பரப்பிலேயே தோண்டப்பட்டுள்ளன. அங்கோலா - நமீபியா எல்லையின் இருபுறமும் உள்ள ஓஹாங்வெனா என்ற நீர்ப்படுகை 2012-இல் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போதைய (2018) நுகர்வு விகிதத்தில், இது வடக்கில் உள்ள 800,000 மக்களுக்கு 400 ஆண்டுகளுக்கு நீர் வழங்கும் திறன் கொண்டது என மதிப்பிடப்பட்டுள்ளது. கூடவே நமீபியாவில் 7,720 கன கி.மீ நிலத்தடி நீர் இருப்பதாக நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர். வறண்ட பூமியான நமீபியா நீர் முகாமைத்துவத்தில் அதிக சிரத்தையுடன் செயற்படும் நாடுகளில் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இங்கு வாழும் மக்களின் செயற்பாடு இலங்கையில் உள்ள வறண்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கான ஒரு பாடமாகவும் முன் உதாரணமாகவும் நாம் கொள்ளலாம். வளரும் நாடுகள் தங்களின் தட்பவெப்ப நிலை மற்றும் காலநிலைச் சவால்களைக் கடந்து எவ்வாறு திட்டமிட வேண்டும் என்பதற்கு நமீபியாவின் நீர் முகாமைத்துவம் ஒரு நல்ல சான்றாகும். மேற்பரப்பு நீர் பற்றாக்குறை காரணமாக, நமீபியா உலகிலேயே மிக விசித்திரமான முறையில் 'கடல் நீரைக் குடிநீராக்கும்' தொழினுட்பத்தையும், 'பயன்படுத்திய கழிவுநீரை முழுமையாகச் சுத்திகரித்து மீண்டும் நேரடியாகக் குடிநீராக மாற்றுவதில்' உலக முன்னோடியாகவும் திகழ்கிறது. அதன் வெளிப்பாடாக, நாட்டின் தலைநகரான விண்ட்ஹோக், கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக இத்தகைய அதிநவீன முறையில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரையே தங்களின் பிரதான குடிநீராகப் பயன்படுத்தி, உலகிற்கு உன்னதமானதொரு முன்மாதிரியாக விளங்கி வருகிறது.

தங்களின் இத்தகைய அசாத்திய நீர் மேலாண்மைத் திட்டங்களுக்குச் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன், 2023-ஆம் ஆண்டு ஜூன் 8-ஆம் தேதியன்று, எல்லை தாண்டிய நீர்வழிகள் மற்றும் சர்வதேச ஏரிகளின் பாதுகாப்பு மற்றும் பயன்பாடு தொடர்பான மாநாட்டில் இணைந்த முதலாவது தென்னாபிரிக்க நாடாகவும், ஒட்டு மொத்த ஆபிரிக்கக் கண்டத்தின் எட்டாவது நாடாகவும் நமீபியா தன்னை உத்தியோகபூர்வமாக இணைத்துக்கொண்டது. சமூகப் பொருளாதார ரீதியாக, இந்நாட்டின் ஒட்டு மொத்த மக்கள் தொகையில் சுமார் பாதிப் பேர் தங்களின் அன்றாட வாழ்வாதாரத்திற்காக விவசாயத்தையே (பெரும் பாலும் வாழ்வாதாரத் தன்னிறைவு விவசாயம்) சார்ந்துள்ளனர்; இருப்பினும், உலகின் ஏனைய நாடுகளைப் போலவே நமீபியாவும் தனது உணவுத் தேவையின் ஒரு பகுதியை இன்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயத்திலேயே உள்ளது. எனினும், ஆபிரிக்காவின் ஏனைய ஏழ்மையான நாடுகளின் சராசரி தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட, நமீபியாவின் தனிநபர் வருமானம் கிட்டத்தட்ட ஐந்து மடங்கு அதிகமாகக் காணப்படுவது அதன் பொருளாதார பலத்தைக் காட்டுகிறது. இத்தகைய உயர் வருமானப் பின்னணி இருந்தபோதிலும், நாட்டின் வருமானப் பகிர்வில் நிலவும் கட்டமைப்பு ரீதியான முரண்பாடுகள் காரணமாக, நமீபியாவின் பெரும்பான்மையான மக்கள் இன்னும் கிராமப்புறங்களிலேயே வசித்து வருவதுடன், தங்களின் பாரம்பரிய தன்னிறைவு வாழ்க்கை முறையையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

அதே வேளை உலகில் மிக உயர்ந்த வருமான ஏற்றத்தாழ்வு விகிதங்களில் ஒன்றை நமீபியா கொண்டுள்ளது. இதற்குக் காரணம் நகர்ப்புறப் பணம் புழங்கும் பொருளாதாரமும், கிராமப்புறங்களில் நிலவும் பணமில்லாப் பொருளாதாரமுமே ஆகும்.

மக்களாட்சி நாடான நமீபியா விவசாயம், சுற்றுலா மற்றும் வைரம், யுரேனியம், தங்கம், வெள்ளி மற்றும் அடிப்படை உலோகங்கள் உள்ளிட்ட சுரங்கத் தொழில் ஆகியவை அதன் பொருளாதாரத்தின் அடித்தளமாக அமைகின்றன, அதே சமயம் உற்பத்தித்துறை ஒப்பீட்டளவில் சிறியதாக உள்ளது.

நமீபியாவின் வருவாயில் 25% பங்களிக்கும் சுரங்கத் தொழில், மிக முக்கியமான பொருளாதார வளம் ஆகும். ஆபிரிக்காவில் எரிபொருள் அல்லாத கனிமங்களை ஏற்றுமதி செய்யும் நான்காவது பெரிய நாடாக நமீபியா உள்ளது, மேலும் உலகின் நான்காவது பெரிய யுரேனியம் உற்பத்தியாளராகவும் இருக்கின்றது. 2015-ஆம் ஆண்டிற்குள் யுரேனியத்தின் மிகப்பெரிய ஏற்றுமதியாளராக மாற நமீபியா திட்டமிட்டிருந்தது. ஆனால் அந்த இலக்கை அடைய முடியவில்லை. இது போட்டி நிறைந்த உலக சந்தையில் உள்ள சராசரியை விட சிறிய ஏற்றுமதியாளராக நமீபியாவை இன்று வரை வைத்திருக்கின்றது. கூடவே வளமான வண்டல் பிரதேச வைரப் படிவுகள், நமீபியாவை இரத்தினத்தர வைரங்களுக்கான ஒரு

முதன்மை ஆதாரமாக விளங்க வைக்கின்றது. நமீபியா முக்கியமாக அதன் இரத்தின வைர மற்றும் யுரேனியப் படிவுகளுக்காக அறியப்பட்டாலும், ஈயம், டங்ஸ்டன், தங்கம், தகரம், ஃபுளோர்ஸ்பார், மாங்கனீசு, பளிங்கு, தாமிரம் மற்றும் துத்தநாகம் போன்ற பல கனிமங்கள் தொழில்துறை ரீதியாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஆண்டில் நாட்டின் தங்க உற்பத்தி 6 மெட்ரிக் டன்களாக இருந்தது. அட்லாண்டிக் பெருங்கடலில் கடலுக்கு அப்பால் எரிவாயு இருப்புக்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவை எதிர்காலத்தில் பிரித்தெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. நமீபியாவின் பசுமைத் தொழில்மயமாக்கல் செயற்றிட்டம் மற்றும் கால நிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய வேளாண்மை வணிகத்திற்கு உலக வங்கி தீவிரமாக ஆதரவளித்து வருகிறது. ஒரு பில்லியன் மக்களின் நீர் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட 'வாட்டர் ஃபார்வர்ட்' முன்னெடுப்பை உலக வங்கி அறிமுகப்படுத்தியது. இது வறட்சியால் பாதிக்கப்படக்கூடிய நமீபியாவிற்கு குறிப்பாகப் பொருத்தமான திட்டம் ஆகும்.

வாங்கும் கடன் அல்லது அதனை வழங்கும் அமைப்புகள், கடன் வாங்கும் நாட்டைத் தனது நலன்களின் அடிப்படையில் கட்டுப்படுத்தாது இருப்பது முக்கியம் ஆகும். இந்த நிதியங்களின் கட்டுப்பாடுகள் அதிகம் நாடுகளின் மக்கள் நலத் திட்டங்களை ஒவ்வொன்றாக இல்லாது செய்வதும் அரசுடமையாக்கப்பட்ட நாட்டின் நிறுவனங்கள், வளங்கள் தனியார் மயமாக்கப்படுதல் போன்ற வேலைத் திட்டங்கள் ஊடாக உட்புகுதல் அதிகம் நடைபெறுகின்றன. எல்லாவற்றிற்கும் அப்பால் வாங்கும் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாது வட்டியை மட்டும் செலுத்திக் கொண்டிருக்கும் நிபந்தனைகளும் விதிகளும் இங்கு முக்கியம் கவனிப்புக்குள்ளாக்கப்படவேண்டியது.

அசலைத் திருப்பிச் செலுத்தும் நிலை ஏற்பட்டால் அந்த அசலை வைத்துக் கொண்டு வட்டியைச் சுரண்டுவதை தொடர்ந்துசெய்யமுடியாது என்பதால் இத்தகைய சூக்குமத்தைக் கடன் வழங்கும் நாடுகள் கைக் கொள்கின்றன.

வட்டியை உலகிற்கு அறிமுகப்படுத்தி நிதியைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கையாளுவதற்கு முன்நிற்கும் இஸ்ரேலின் சியோனிச சிந்தனையின் வழி வலுப்பெற்று வரும் முதலாளித்துவத்தின் செயற்பாடுதான் இது. ஆனால் நமீபியா அப்படியில்லாமல் அத்தகைய பொறியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டுள்ளது.

தனது நாட்டின் அபிவிருத்திக்காகப் பெறப்பட்ட சர்வதேசக் கடன்களை நமீபியா தற்போது முழுமையாகத் திருப்பிச் செலுத்தி, உலக அரங்கில் ஒரு மாபெரும் நிதியியல் மைல் கல்லை எட்டியுள்ளது. குறிப்பாக, சர்வதேச நாணய நிதியத்திற்குச் (I.M.F) செலுத்த வேண்டிய ஒட்டுமொத்தக் கடன் தொகையையும் நமீபியா அண்மையில் முழுமையாக மறு செலுத்துகை செய்துள்ளதுடன், மே 2026-இன் தற்போதைய நிலவரப்படி, அதன் கடன் நிலுவைத் தொகையைப் பூஜ்ஜியமாக மாற்றி அசாத்தியச் சாதனை படைத்துள்ளது.

கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் தங்களின் பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்காகப் பெறப்பட்ட அவசரகால நிதியுதவியை நிறைவு செய்யும் பொருட்டு, அந்நாடு சுமார் 23.9 மில்லியன் அமெரிக்க டாலர்களை (ஏறக்குறைய 400 மில்லியன் நமீபிய டாலர்கள் - N$) இறுதித் தவணையாகச் செலுத்தி முடித்துள்ளது. இத்தகைய அவசரகாலக் கடன்களையும், அதனுடன் சேர்த்து சர்வதேசச் சந்தையில் வாங்கியிருந்த 750 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள யூரோ பொண்ட் (Eurobond) கடனையும் முழுமையாகச் செலுத்தி முடித்ததன் மூலம், நமீபியா சர்வதேச நாணய நிதியத்தின் செயற்பாட்டில் உள்ள திட்டக் கட்டுப்பாடுகளிலிருந்து முற்றிலும் திறம்பட வெளியேறியுள்ளது. இத்தகைய அதிரடி நகர்வானது, நமீபியா எட்டியுள்ள மிக உயர்ந்த பொருளாதார இறையாண்மையையும், 'நிதி ஒருங்கிணைப்பை' நோக்கிய அதன் தீர்க்கமான பயணத்தையும் உலகிற்குப் பறைசாற்றுகிறது. எனினும், தனது சர்வதேசக் கடன்களை இவ்வாறாக வெற்றிகரமாகத் தீர்த்து முடித்துள்ள போதிலும், நமீபியா தற்போதைய சூழலில் உள்நாட்டில் விரிவடைந்து வரும் வர்த்தகப் பற்றாக்குறை மற்றும் மிகக் கடுமையான வேலையின்மைப் பிரச்சினை போன்ற சவால்களைத் தொடர்ந்து எதிர்

"சர்வதேச நாணய நிதியத்திற்குச் (I.M.F) செலுத்த வேண்டிய ஒட்டுமொத்தக் கடன் தொகையையும் நமீபியா அண்மையில் முழுமையாக மறு செலுத்துகை செய்துள்ளதுடன், மே 2026-இன் தற்போதைய நிலவரப்படி, அதன் கடன் நிலுவைத் தொகையைப் பூஜ்ஜியமாக மாற்றி அசாத்தியச் சாதனை படைத்துள்ளது."

கொண்டுதான் வருகின்றது; குறிப்பாக, அந்நாட்டின் ஒட்டு மொத்த வேலையின்மை விகிதம் 36.9 சதவீதமாகவும், இளைஞர்களிடையேயான வேலையின்மை விகிதம் 44.4 சதவீதமாகவும் மதிப்பிடப்பட்டிருப்பது, மேக்ரோ மட்டத்திலான கடன் முகாமைத்துவத்திற்கு அப்பால் உள்நாட்டுக் கட்டமைப்பைச் சீரமைக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது.

நாட்டின் நிதி முகாமைத்துவம் மற்றும் தன்னாதிக்கத்தை வலுப்படுத்துவதற்கு நமீபியா அரசு மேற்கொண்டுள்ள செயற்றிட்டங்கள்:

இத்தகைய சவால்களுக்கு மத்தியிலும், நமீபியா எவ்விதப் புதிய சர்வதேசக் கடன்களையும் பெற்றுக்கொள்ளாமல், தங்களின் உள்நாட்டுப் பொருளாதார வளங்களைச் சீரமைத்த 'பொருத்தமான நிதி ஒருங்கிணைப்பு' உத்திகள் மூலமாகவே இந்த ஒட்டுமொத்தக் கடன்களையும் தீர்த்து முடித்துள்ளது என்பது அதன் அசாத்திய நிதி ஒழுக்கத்தைக் காட்டுகிறது. இம்முழுமையான கடன் அடைப்பின் விளைவாக, நாட்டின் உள்நாட்டுப் பொருளாதாரக் கொள்கை வகுப்புகளில் சர்வதேச நிதியமைப்புகளின் தேவையற்ற தலையீடுகளும், இறையாண்மையைப் பாதிக்கும் கடுமையான நிபந்தனைகளும் முற்றிலுமாகத் தவிர்க்கப்பட்டு, தேசத்தின் 'நிதித் தன்னாதிக்கம்' பன்மடங்கு அதிகரித்துள்ளது.

இதன் மூலம், ஆபிரிக்கக் கண்டத்திலேயே சர்வதேச நாணய நிதியத்தின் (I.M.F) கடன்களை முழுமையாக அடைத்துத் தீர்த்த ஒரு சில குறிப்பிட்ட நாடுகளின் மிக உயரிய வரிசையில் நமீபியா தற்பொழுது இணைந்துள்ளதுடன், உலகளாவிய முதலீட்டாளர்கள் மற்றும் சர்வதேசச் சந்தை மதிப்பீட்டு நிறுவனங்கள் மத்தியில் நாட்டின் நன்மதிப்பையும், கடன் தகுதியையும் அது பெருமளவு உயர்த்தியுள்ளது. இவ்வாறாகத் தனது ஐ.எம்.எஃப் கடன் நிலுவைகளைப் பூஜ்ஜியமாக்கியதைத் தொடர்ந்து, நமீபிய அரசு தனது தேசியப் பொருளாதாரத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லப் பல்வேறு உத்திசார் நிதிச் சீர்திருத்தங்களையும், நீண்டகாலப் பொருளாதார இலக்குகளையும் தற்பொழுது வகுத்துள்ளது. அவற்றின் விரிவான விபரங்கள் பின்வருமாறு:

• நிதிச் சீர்திருத்தங்கள்:

- அரசாங்கச் செலவினக் குறைப்பு: நிதிப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்த, அமைச்சரவைச் செலவுகளைக் குறைத்தல் மற்றும் தேவையற்ற பொதுச் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் போன்ற கடுமையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

- உள்நாட்டுக் கடன் மேலாண்மை: வெளிநாட்டு நாணயங்களின் மீதான நம்பகத்தன்மையைக் குறைக்க, நமீபியா தனது கடன் வாங்கும் உத்தியை வெளிநாட்டுச் சந்தைகளிலிருந்து உள்நாட்டு வங்கிச் சந்தை நோக்கி மாற்றியுள்ளது.

- வரி வசூல் மேம்பாடு: நமீபியா வருவாய் முகாமை மூலம் சுரங்கத்துறை மற்றும் முறைசாரா வணிகங்களிடமிருந்து முறையான வரி வசூலை உறுதி செய்வதற்கான தீவிரக் கண்காணிப்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

• முக்கிய பொருளாதார இலக்குகள் (2026 – 2027):

- பொருளாதார வளர்ச்சி: வைரச் சந்தையில் நிலவும் உலகளாவிய மந்தநிலை காரணமாக 2025-இல் நாட்டின் வளர்ச்சி 1.74% ஆகக் குறைந்திருந்தது. இருப்பினும், நமீபியா மத்திய வங்கியின் கணிப்புப்படி யூரேனியம், தங்கம் மற்றும் போக்குவரத்துத் துறைகளின் வலுவான பங்களிப்பால் 2026-இல் நாட்டின் வளர்ச்சி 2.6% முதல் 3.1% ஆக உயரும் என இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

- பணவீக்கக் கட்டுப்பாடு: 2026-ஆம் ஆண்டிற்கான சராசரி பணவீக்கத்தை 3.5% என்ற அளவில் நிலையாக வைத்திருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

- நிதிப் பற்றாக்குறைக் குறைப்பு: நாட்டின் ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறையை அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தற்போதைய அளவிலிருந்து 5.5% ஆகக் குறைக்க 2026/2027 தேசிய பட்ஜெட்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

• புதிய முதலீட்டு உத்திகள்:

- எண்ணெய் மற்றும் எரிவாயு: ஆரஞ்சு பேசின் போன்ற கடலோரப் பகுதிகளில் முன்னணி சர்வதேச நிறுவனங்களின் முதலீடுகளுடன் அதிவேக எரிசக்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- பசுமை ஹைட்ரஜன்: ஆபிரிக்காவின் முதன்மை பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மையமாக மாறுவதற்குத் தேவையான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை நமீபியா ஈர்த்து வருகிறது.

நமீபியா நாட்டின் பொருளியல் வளர்ச்சியைத் தீர்மானிக்கக் கூடிய இரண்டு முக்கியத் துறைகளான பசுமை ஹைட்ரஜன் திட்டங்கள் மற்றும் ஆரஞ்சு பேசின் எண்ணெய் - எரிவாயு முதலீடுகள் ஆகியவற்றின் அண்மைக்கால (2026) முக்கிய முன்னேற்றங்கள்:

• பசுமை ஹைட்ரஜன் திட்டங்கள்:

நமீபியா ஆபிரிக்கக் கண்டத்தின் முதன்மை, தூய்மையான எரிசக்தி மையமாக மாறுவதற்குத் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது.

- ஃபிளாக்ஷிப் ஹைபன் திட்டம்: ஹைபன் ஹைட்ரஜன் எனர்ஜி நிறுவனத்துடன் இணைந்து $10 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான பிரம்மாண்டத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதில் நமீபிய அரசு 24% நேரடி பங்குகளைக் கொண்டுள்ளது.

- அதிவேக இலக்குகள்: இந்தத் திட்டத்தின் முதற்கட்ட சோதனைப் பணிகள் 2026-ஆம் ஆண்டு இறுதிக்குள் தொடங்குவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முழுத் திறனை எட்டும்போது ஆண்டுக்கு 300,000 டன் பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்ய முடியும்.

- புதிய பசுமைத் தொழில்துறை கவுன்சில்: நமீபியாவின் பசுமைத் தொழில்மயமாக்கல் உத்திகளை மேலும் வலுப்படுத்த, அதிபர் நெதும்போ நந்தி-ந்தைத்வா தலைமையில்



புதிய பசுமைத் தொழில்துறை கவுன்சில் உருவாக்கத் திற்கு மே 2026-இல் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- போக்குவரத்தில் மாற்றம்: வால்விஸ் பே துறைமுகத்தில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பசுமை ஹைட்ரஜனைக் கொண்டு இயங்கும் ஆபிரிக்காவின் முதல் ஹைட்ரஜன் ரயில் மற்றும் கப்பல் போக்குவரத்துச் சோதனைகள் 2026-இல் விரிவாக்கப்பட உள்ளன.

- **ஆரஞ்சு பேசின் எண்ணெய் மற்றும் எரிவாயு முத லீடுகள்**

நமீபியாவின் கடலோரப் பகுதியான ஆரஞ்சு பேசின், தற் போது உலகிலேயே மிக வேகமாக வளர்ந்து வரும் ஆழ்கடல் எரிசக்தி மண்டலமாக மாறியுள்ளது.

- வீனஸ் திட்டம்: பிரெஞ்சு எரிசக்தி நிறுவனமான டோட்டல் எனர்ஜிஸ் தனது 'வீனஸ்' திட்டத்திற்கான இறுதி முதலீட்டு முடிவை 2026-ஆம் ஆண்டிற்குள் எடுக்கத் திட்டமிட்டுள் ளது. இத்திட்டம் மூலம் 2030 வாக்கில் நாளொன்றுக்கு 150,000 பேரல் எண்ணெய் உற்பத்தி செய்ய இலக்கு வைக் கப்பட்டுள்ளது.

- ஸெல் நிறுவனத்தின் புதிய துளையிடல்: ஸெல் நிறுவனம், கத்தார் எனர்ஜி மற்றும் நமீபியாவின் நம்கோர் ஆகியவற் றுடன் இணைந்து ஏப்பிரல் 2026 முதல் 39 பிளாக்கில் புதிய ஆழ்கடல் எண்ணெய் துளையிடும் பணிகளை மீண் டும் தொடங்கியுள்ளது.

- பன்னாட்டு நிறுவனங்களின் வருகை: பிபி நிறுவனம் ஏப் பிரல் 2026-இல் ஒரு முக்கிய உத்தியாக 60% பங்குகளைப் பெற்று உள்நுழைந்துள்ளது. செவ்ரான் மற்றும் ரினோ ரிசோர்சஸ் ஆகிய நிறுவனங்களும் 2026-இன் பிற்பகுதி யில் புதிய கிணறுகளைத் துளையிடத் தயாராகி வருகின்றன.

- **கிரிட்டிக்கல் மினரல்ஸ் மற்றும் சுரங்கத் துறை:**

தூய்மையான எரிசக்தி மாற்றத்திற்குத் தேவையான லித்தி யம், கோபால்ட் மற்றும் கிராஃபைட் போன்ற முக்கியத் தாதுக் களை உலக நாடுகளுக்கு வழங்கும் உன்னதப் பங்காளியாக நமீபியா உருவெடுத்துள்ளது. ஐரோப்பிய ஒன்றிய அமைப்பு களுடன் இணைந்து இதற்கான புதிய வர்த்தக ஒப்பந்தங்கள் 2026-இல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறாகத் தனது நாட்டில் உள்ள வளங்களை இனம் கண்டு அதனைப் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத் தும் செயற்பாட்டில் இறங்கி உள்ளது. இதன் மூலம் வெளி நாட்டு நிதி நிறுவனங்களிடம் கடன் வாங்காத பொரு ளாதார சுதந்திரத்தை தனக்குள் அமைத்துக் கொண்டுள்ளது.

ஏதாவது சூழலில் கடன் வாங்கும் நிலை ஏற்படின் அது உள்ளூர் நிதிக் கடனாகப் பெறும் அணுகுமுறையை மேற் கொள்வதன் சுயசார்புப் பொருளாதாரத்தைத் தனக்குள் கொண்ட வறண்ட பிரதேசமான நமீபியா போன்று இலங்கை போன்ற வறிய நாடுகள் கடனில் இருந்து விடுபட சுயசார்புப் பொருளாதாரத்தை, உற்பத்தி சார்ந்து செயற்படுதல் அவசிய மாகின்றது என்பதை நம்பிக்கையுடன் எம் முன்னே காட்டி நிற் கின்றது.

தற்போதைய சூழலில் இலங்கை போன்ற நாடுகள் தமது கடனை மீளச் செலுத்துவதற்கான செயற்பாடுகளை நமீபி யாவை முன்னுதாரனமாகக் கொண்டு அவை என்ன செய் தன, எப்படிச் செயற்பட்டன என்பதனை ஒப்பு நோக்கித் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியமாகின்றது.

நமீபியா அளவிற்கு எம்மிடம் நிலத்தடிக் கனிம வளங்கள் இல்லாவிட்டாலும் எம்தேசத்தின் நிலத்திற்கு மேலாக உள்ள வளங்களைக் கையாண்டு வறட்சி குறைவான எமது நாட்டின் நீர்வளத்தையும் பாவித்து உற்பத்திகளைப் பெருக்க வேண் டும். இதன் மூலம் இறக்குமதிகளைக் குறைத்து ஏற்றுமதி களைக் கூட்டி எமது சொந்தக் காலில் நிற்கும் பொருளாதார சுபீட்சம் பெற்ற நாடாகக் கட்டியமைக்க நமீபியாவின் 36 வருட சுதந்திர நாட்டு வரலாற்றை ஆழமாக அறிவோம் பின் பற்றுவோம்.

James@thaiveedu.com

■ ரவீந்திரன் துரைசிங்கம்

மத்திய கிழக்கில் அமெரிக்கப் படைத்தளங்கள், கூட்டணிகள்: ஈரானைச் சுற்றி வளைக்கும் அமெரிக்கா!

Prince Sultan Air Base என்பது Saudi Arabia நாட்டில் அமைந்துள்ள அமெரிக்காவின் முக்கியமான விமானப்படைத் தளங்களில் ஒன்றாகும். இது குறிப்பாக பாதுகாப்பு மற்றும் ஏவுகணை எதிர்ப்பு (missile defense) நடவடிக்கைகளுக்கான முக்கிய மையமாக செயற்படுகிறது.

இந்த தளம் ரியாத் நகரத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இது அமெரிக்கா மற்றும் சவுதி அரேபியா இடையிலான இராணுவ ஒத்துழைப்பின் முக்கிய சின்னமாகவும் விளங்குகிறது. 2000-களின் பிற்பகுதியில் அமெரிக்கா இந்தத் தளத்தை குறைத்து பயன்படுத்தியிருந்தாலும், மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்தபோது மீண்டும் இந்தத் தளம் முக்கியத்துவம் பெற்றது.

Prince Sultan Air Base-இன் முக்கிய பணி, வான்வழி பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாடு ஆகும். இங்கு விமான கண்காணிப்பு அமைப்புகள், ஏவுகணை கண்டறிதல் (missile detection systems), Patriot போன்ற ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த தளம் ஒரு 'air defense hub' ஆகச் செயற்படுகிறது. அதாவது எதிரி ஏவுகணைகளைக் கண்டறிதல், அவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது, கூட்டணி நாடுகளின் வான்வழி பாதுகாப்பை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகள் இங்கிருந்து மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், இந்த தளம் அமெரிக்க விமானப்படைக்கு ஒரு முக்கிய கட்டுப்பாட்டு மையமாக உள்ளது. வான்வழி நடவடிக்கைகள் (air operations) இங்கிருந்து ஒருங்கிணைக்கப்படுகின்றன. இது Al Udeid போன்ற தளங்களுடன் இணைந்து செயற்படுகிறது.

போர் சூழ்நிலையில் Prince Sultan Air Base மிக முக்கியமானதாக மாறுகிறது. காரணம் எதிரியின் ஏவுகணைத் தாக்குதல்களைத் தடுக்கும் முக்கிய மையம், பிராந்திய பாதுகாப்பை நிலைநிறுத்தும் மையம், வான்வழி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் கட்டுப்பாட்டு அமைப்பு இது.

2026 ஈரான் தொடர்பான பதற்றங்களில், இந்த தளம் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக, ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளில் இது மையமாக உள்ளது. மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க மற்றும் கூட்டணி தளங்களை பாதுகாக்கும் முக்கிய கட்டமைப்பாக இது செயற்படுகிறது. மேலும், இந்த தளம் கூட்டணி நாடுகளின் விமானப்படைகளுடன் இணைந்து செயற்படுகிறது. இதனால், ஓர் ஒருங்கிணைந்த பாதுகாப்பு வலையமைப்பு (integrated defense network) உருவாகிறது.

மொத்தத்தில், Prince Sultan Air Base என்பது தாக்குதல் தளம் அல்ல; ஆனால் 'பாதுகாப்பின் இதயம்' (heart of air defense) என்று சொல்லக்கூடிய அளவுக்கு முக்கியமானது. இது மத்திய கிழக்கில் அமெரிக்காவின் வான்வழி பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பின் முக்கிய மையமாக செயற்படுகிறது.

Duqm Port ஓமானில் உள்ளது:

ஓமானில் அமெரிக்கா பயன்படுத்தும் முக்கியமான தளம் Duqm Port ஆகும். இது Oman நாட்டின் தெற்குக் கடற்கரையில், அரேபியக் கடலை நோக்கி அமைந்துள்ளது. இது பாரம்பரியமான 'air base' அல்ல; ஆனால் மிகவும் முக்கியமான கடற்படை மற்றும் லாஜிஸ்டிக்ஸ் தளமாக செயற்படுகிறது.

prasadbatti@gmail.com

"Duqm Port என்பது நேரடி போர்தளம் அல்ல; ஆனால் 'மாற்று கடற்படை உயிர்க்கோடு' ஆக செயற்படுகிறது. Hormuz போன்ற முக்கிய கடற்பாதைகள் அபத்தில் இருந்தாலும் அமெரிக்கா தனது கடற்படை நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்த இந்த தளம் முக்கிய ஆதாரமாக உள்ளது"

Duqm தளம் அமெரிக்கா மட்டுமல்லாமல் United Kingdom போன்ற கூட்டணி நாடுகளாலும் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக, இந்த தளம் பெரிய போர்க்கப்பல்கள் மற்றும் விமானம் ஏற்றிச் செல்லும் கப்பல்களை (aircraft carriers) பழுது பார்க்க (maintenance) மற்றும் எரிபொருள் நிரப்ப (re-fueling) பயன்படுகிறது.

இந்தத் தளத்தின் மிகப்பெரிய முக்கியத்துவம் அதன் இருப் பிடத்தில் உள்ளது. இது Strait of Hormuz அருகில் இருந் தாலும், அந்த நெருக்கமான chokepoint-இற்கு வெளியே (outside) உள்ளது. அதனால் Hormuz முடக்கப்பட்டாலும் இந்த தளம் செயற்பட முடியும், பாதுகாப்பான மாற்று கடற் படை மையமாக இருக்கும்.

Duqm Port-இன் முக்கிய பணி: கடற்படை கப்பல்களுக்கு ஆதரவு (logistics support), பழுது பார்க்கும் வசதி (dry dock facilities), எரிபொருள் மற்றும் பொருட்கள் விநி யோகம், நீண்டகால கடற்படை இருப்பை உறுதி செய்தல்.

போர் சூழ்நிலைகளில், Duqm மிகவும் முக்கியமான 'backup hub' ஆக மாறுகிறது. குறிப்பாக, பெர்சியன் வளைகுடாவில் பதற்றம் அதிகரித்தால், Hormuz வழி ஆபத்தானதாக மாறினால், இந்த தளம் பாதுகாப்பான மாற்று மையமாக செயற்படுகிறது.

2026 ஈரான் தொடர்பான பதற்றங்களில், Duqm தளம் மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. ஏனெனில், அமெரிக்க கடற் படைக்கு பாதுகாப்பான தங்கும் இடம், நீண்டகால நடவடிக் கைகளுக்கான ஆதரவு, மாற்று லாஜிஸ்டிக்ஸ் பாதை இந்த தளத்தின் மூலம் கிடைக்கிறது. மேலும், Duqm Port அமெரிக் காவின் 'distributed military strategy' (பிரித்து வைத்தி ருக்கும் இராணுவ அமைப்பு) என்ற தந்திரத்தின் ஒரு பகுதி யாகும். அதாவது, அனைத்து தளங்களையும் ஒரே இடத்தில் வைத்திருப்பதைவிட, பல நாடுகளில் பரப்பி வைத்திருப்பது பாதுகாப்பை அதிகரிக்கிறது.

மொத்தத்தில், Duqm Port என்பது நேரடி போர்தளம் அல்ல; ஆனால் 'மாற்று கடற்படை உயிர்க்கோடு' (strategic backup lifeline) ஆக செயற்படுகிறது. Hormuz போன்ற முக்கிய கடற்பாதைகள் ஆபத்தில் இருந்தாலும், அமெரிக்கா தனது கடற்படை நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்த இந்த தளம் முக்கிய ஆதாரமாக உள்ளது.

மற்ற நாடுகள்:

Gulf நாடுகளைத் தாண்டியும், அமெரிக்கா பல்வேறு பிராந்தி யங்களிலிருந்து ஈரானை நோக்கி தாக்குதல் அல்லது தாக்கு தலுக்கு ஆதரவான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திறனைக் கொண்டுள்ளது. இது ஒரு நாட்டை மட்டுமே சார்ந்த அமை ப்பு அல்ல; மாறாக, உலகளாவிய ரீதியில் இணைக்கப்பட்ட இராணுவ வலையமைப்பின் மூலம் நடைபெறும் செயல்மு றையாகும்.

இந்தப் பின்னணியில், Diego Garcia தளம் மிக முக்கியமான தாகும். இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள இந்த தளம், நீண்ட தூரத்தை கடந்தும் தாக்குதல் நடத்தக்கூடிய B-2, B-52 போன்ற ரகசிய மற்றும் கனரக குண்டுவீச்சு விமானங்க ளுக்கு மையமாக உள்ளது. இந்த தளத்திலிருந்து புறப்படும் விமானங்கள் நேரடியாக ஈரானின் உள்நாட்டுப் பகுதிகளை அடையக்கூடிய திறனை கொண்டவை. எனவே, இது அமெ ரிக்காவின் 'long-range strike capability'யின் முதுகெ லும்பாக கருதப்படுகிறது.

அதேபோல், Turkey நாட்டிலுள்ள Incirlik விமான தளம், நேரடி தாக்குதல்களுக்கு எப்போதும் பயன்படுத்தப்பட வில்லை என்றாலும், முக்கியமான ஆதரவு மற்றும் முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளுக்கான மையமாகச் செயற்படு கிறது. இங்கு இருந்து புறப்படும் விமானங்கள் கண்கா ணிப்பு, refueling மற்றும் logistics பணிகளை மேற்கொண்டு, தாக்குதல்களின் தொடர்ச்சியை உறுதிசெய்கின்றன.

Syria பகுதியில் உள்ள அமெரிக்க சிறிய தளங்கள், குறிப்பாக intelligence, surveillance, reconnaissance (ISR) மற்றும் drone நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவை நேரடி பெரிய தாக்குதல்களை நடத்தாவிட்டாலும், இலக்குகளைத் தேர்வு செய்வதில் மற்றும் தரவு சேகரிப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

"அமெரிக்காவின் தாக்குதல் அமைப்பு பிராந்தியத்தை மட்டும் சார்ந்ததல்ல. கல்ஃப் நாடுகள் முக்கியமான முன்னணி தளங்களாக இருந்தாலும், Diego Garcia, Turkey, Syria, Israel, Cyprus போன்ற பகுதிகளும், அதற்கு மேலாக கடற்படையும் இணைந்து செயல்படும் ஒரு பரந்த வலையமைப்பே அமெரிக்காவின் உண்மையான இராணுவ வலிமையாகும்"

மேலும், Israel உடன் அமெரிக்கா மேற்கொள்ளும் பாதுகாப்பு மற்றும் இராணுவ ஒருங்கிணைப்பு மிக முக்கிய மானது. இஸ்ரேல் தளங்கள் நேரடியாக அமெரிக்க தளங் களாக இல்லாவிட்டாலும், தகவல் பகிர்வு, ஏவுகணை பாது காப்பு அமைப்புகள் மற்றும் கூட்டு நடவடிக்கைகள் மூலம் தாக்குதல்களின் திட்டமிடலில் பங்காற்றுகின்றன.

ஐரோப்பிய பரிமாணத்தில், United Kingdom உடைய RAF Akrotiri (சைப்ரஸ் பகுதியில்) தளம் முக்கியமான ஆதரவு மையமாக உள்ளது. இங்கிருந்து reconnaissance விமானங்கள், refueling aircraft மற்றும் சில சமயங்களில் தாக்குதல் விமா னங்களும் புறப்படுகின்றன. இது மத்திய கிழக்கிற்கும் ஐரோப் பாவிற்கும் இடையிலான இணைப்புத் தளமாகச் செயற்படுகிறது.

இவை அனைத்தையும் விட, கடலில் உள்ள அமெரிக்க கடற்படை அமைப்புகள் மிக அதிக நெகிழ்வுத்தன்மையைக் கொண்டவை. Aircraft carriers (விமானம் ஏந்தி செல்லும் கப்பல்கள்) மற்றும் nuclear submarines ஆகியவை எந்த நிலப்பரப்பையும் சாராமல், நேரடியாக கடலிலிருந்தே cruise missiles மற்றும் fighter jets மூலம் ஈரானை தாக்கக்கூ டியவை. இந்த 'mobile strike platforms' அமெரிக்காவின் தாக்குதல் திறனை இன்னும் விரிவாக்குகின்றன.

மொத்தத்தில் பார்க்கும்போது, அமெரிக்காவின் தாக்குதல் அமைப்பு ஒரு தனி நாட்டை அல்லது ஒரு பிராந்தியத்தை மட்டும் சார்ந்ததல்ல. கல்ஃப் நாடுகள் முக்கியமான முன்னணி தளங்களாக இருந்தாலும், Diego Garcia, Turkey, Syria, Israel, Cyprus போன்ற பகுதிகளும், அதற்கு மேலாக கடற்ப டையும் இணைந்து செயற்படும் ஒரு பரந்த வலையமைப்பே அமெரிக்காவின் உண்மையான இராணுவ வலிமையாகும். இதுவே ஈரானை நோக்கி மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக் கையும் பல திசைகளிலிருந்து ஒருங்கிணைக்கப்பட்டதாக இருக்கும் என்பதைக் காட்டுகிறது.

Muwaffaq al Salti Air Base என்பது Jordan நாட்டில் உள்ளது:

Muwaffaq al Salti Air Base என்பது Jordan நாட்டில் அமைந்துள்ள முக்கிய அமெரிக்க மற்றும் கூட்டணி விமா னப்படை தளங்களில் ஒன்றாகும். இது Azraq பகுதியின் அருகில் அமைந்துள்ளது. மத்திய கிழக்கில் நடைபெறும் பல இராணுவ நடவடிக்கைகளுக்கான முக்கிய முன்னணி (forward) விமானத் தளமாக இது செயற்படுகிறது.

இந்த தளம் குறிப்பாக வான்வழி தாக்குதல் (air strike) மற்றும் கண்காணிப்பு (surveillance) நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகள் இங்கிருந்து சிரியா மற்றும் ஈராக் பகுதிகளில் உள்ள இலக்குகளைக் கண்காணித்து, தேவையான போது தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

Muwaffaq al Salti தளம் 'forward operating base' என்ற வகையில் மிகவும் முக்கியமானது. அதாவது, இது போரின் முன்பகுதிக்கு அருகில் இருப்பதால் விரைவான தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும், குறுகிய நேரத்தில் விமானங்களை அனுப்ப முடியும், முன்னணியில் உள்ள படைகளுக்கு நேரடி ஆதரவு வழங்க முடியும்.

இந்த தளத்தில் பல்வேறு வகையான போர் விமானங்கள் மற்றும் ட்ரோன்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, F-16 போன்ற போர் விமானங்கள், ட்ரோன் கண்காணிப்பு விமா னங்கள், உளவுத்துறை சேகரிப்பு விமானங்கள், இவை எல் லாம் இங்கிருந்து இயக்கப்படுகின்றன.

இந்த தளத்தின் முக்கிய பணி, ISIS போன்ற ஆயுதக் குழுக் களுக்கு எதிரான நடவடிக்கைகளை ஆதரிப்பதாகும். மேலும், பிராந்தியத்தில் நிலைத்தன்மையை பராமரிக்கும் நடவடிக்கைகளிலும் இது பங்கு வகிக்கிறது.

போர் சூழ்நிலைகளில் Muwaffaq al Salti Air Base மிக முக் கியமானதாகிறது. காரணம் முன்னணிக்கு அருகிலுள்ள தாக்குதல் தளம், விரைவான பதில் (rapid response) வழங்கும் திறன், கண்காணிப்பு மற்றும் உளவு தகவல் சேகரிப்பு.

2026 ஈரான் தொடர்பான பதற்றங்களில், இந்த தளம் ஒரு முக்கிய முன்னணி வான்வழி மையமாக செயற்படுகிறது. குறிப் பாக, ஈரான் ஆதரவு கொண்ட குழுக்கள் மற்றும் பிராந்திய மோதல்களைக் கண்காணிக்க இது பயன்படுகிறது.

"Muwaffaq al Salti Air Base என்பது மத்திய கிழக்கில் 'முன்னணி தாக்குதல் மற்றும் கண்காணிப்பு மையம்' ஆக செயல்படுகிறது. இது வான்வழி நடவடிக்கைகளில் விரைவான முடிவெடுக்கும் திறனை வழங்கும் முக்கிய தளமாகும்"

மேலும், இந்த தளம் அமெரிக்கா மற்றும் ஜோர்டான் இடையிலான இராணுவ ஒத்துழைப்பின் முக்கிய அடையாள மாகும். கூட்டணி நாடுகளின் விமானங்களும் இங்கு செயற் பட்டு, ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள் கின்றன.

மொத்தத்தில், Muwaffaq al Salti Air Base என்பது மத்திய கிழக்கில் 'முன்னணி தாக்குதல் மற்றும் கண்காணிப்பு மையம்' (forward strike & surveillance hub) ஆக செயற்ப டுகிறது. இது வான்வழி நடவடிக்கைகளில் விரைவான முடி வெடுக்கும் திறனை வழங்கும் முக்கிய தளமாகும்.

Erbil Air Base என்பது Erbil நகரத்திற்கு அருகில், Iraq நாட்டில் உள்ளது:

Erbil Air Base என்பது Erbil நகரத்திற்கு அருகில், Iraq நாட்டின் குர்திஸ்தான் (Kurdistan) பகுதியில் அமைந்துள்ள முக்கிய அமெரிக்க மற்றும் கூட்டணி இராணுவ தளமாகும். இது பொதுவாக Erbil International Airport-இன் ஒரு பகுதி யுடன் இணைந்து செயற்படுகிறது.

இந்த தளம் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகளின் 'forward operating base' ஆகச் செயற்படுகிறது. அதாவது, முன்னணி நடவடிக்கைகளுக்கான முன்பகுதி கட்டுப்பாட்டு மற்றும் ஆதரவு மையமாக இது பயன்படுகிறது. குறிப்பாக, ஈராக் மற்றும் சிரியா பகுதிகளில் நடைபெறும் நடவடிக்கைக ளுக்கு இது மிக அருகிலுள்ள முக்கிய தளமாகும்.

Erbil Air Base-இன் முக்கிய பணி, ISIS (இஸ்லாமிக் ஸ்டேட்) போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிரான நடவடிக் கைகளை ஆதரிப்பதாகும். இதற்காக உளவுத்துறை தகவல் சேகரிப்பு, வான்வழி தாக்குதல்களுக்கு எதிர் ஆதரவு, உள்ளூர் குர்திஷ் படைகளுக்கு பயிற்சி மற்றும் ஆலோசனை போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த தளம் முழுமையான பெரிய விமான தளம் அல்ல; ஆனால் மிகவும் முக்கியமான tactical base ஆகும். இங்கு ட்ரோன்கள், ஹெலிகாப்டர்கள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விமானங்கள், பயன்படுத்தப்படுகின்றன.

போர் சூழ்நிலைகளில் Erbil Air Base மிக முக்கியமான இட மாகிறது. காரணம் முன்னணிக்கு மிக அருகில் இருப்பது, விரைவான தாக்குதல் மற்றும் கண்காணிப்பு செய்ய முடிவு, உள்ளூர் கூட்டணி படைகளுடன் நேரடி ஒத்துழைப்பு.

2026 ஈரான் தொடர்பான பதற்றங்களில், இந்த தளம் ஒரு முக்கிய முன்னணி கண்காணிப்பு மற்றும் ஆதரவு மையமாக உள்ளது. குறிப்பாக, ஈரான் ஆதரவு கொண்ட ஆயுதக் குழுக் களின் இயக்கங்களை கண்காணிக்க இது பயன்படுகிறது.

மேலும், இந்த தளம் அமெரிக்கா மற்றும் குர்திஸ்தான் பிராந்திய அரசாங்கம் (KRG) இடையிலான இராணுவ ஒத்து ழைப்பின் முக்கிய சின்னமாகவும் உள்ளது. இது அந்தப் பகுதியில் அமெரிக்காவின் நிலைத்தன்மை மற்றும் தாக்கத்தை காட்டுகிறது.

ஆனால், இந்த தளம் பாதுகாப்பு அபாயத்திற்கும் உட்பட்ட தாகும். ஏனெனில், ஈரான் ஆதரவு கொண்ட மிலிடியா குழுக்கள் பலமுறை இந்த தளத்தை ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களால் இலக்காகக் கொண்டுள்ளன.

மொத்தத்தில், Erbil Air Base என்பது பெரிய தாக்குதல் மையமாக இல்லாவிட்டாலும், 'முன்னணி கண்கள் மற்றும் ஆதரவு மையம்' (frontline support & surveillance hub) ஆக செயற்படுகிறது. இது மத்திய கிழக்கில் அமெரிக்காவின் தரை மற்றும் வான்வழி நடவடிக்கைகளை இணைக்கும் முக்கிய தளமாகும்.

ஈரானால் Gulf–இற்கு வெளியே தாக்கப்பட்ட இடங்கள்:

ஈரான் Gulf-இல் உள்ள நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவ அமைப்புகள் மற்றும் ஆதரவு கட்டமைப்புகளைத் தாக்கியுள்ளது. இதில் Jordan, Saudi Arabia மற்றும் United Arab Emirates ஆகிய நாடுகளில் உள்ள THAAD ரேடார் மற்றும் ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகள் இலக்காக எடுக் கப்பட்டன. இதில் குறைந்தது ஒரு ரேடார் அமைப்பு அழிக் கப்பட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன.

"இந்த மோதல் இரு பிராந்திய அரசியல் விவகாரம் மட்டுமல்ல;
இது மதப் பிரிவுகள், உலகளாவிய சக்தி சமநிலை, மற்றும் இஸ்ரேல் – பாலஸ்தீனம் போன்ற
பெரிய அரசியல் கேள்விகளுடனும் தொடர்புடையது"

Gulf-இற்கு வெளியே உள்ள மிக முக்கிய தாக்குதல் இலக்குகளில் ஒன்று Diego Garcia ஆகும். இந்தியப் பெருங்கடலில் உள்ள இந்த அமெரிக்கா- பிரிட்டன் கூட்டு தளத்தை நோக்கி ஈரான் ஏவுகணைகள் செலுத்தியதாக அறிக்கைகள் கூறுகின்றன. சில ஏவுகணைகள் தடுக்கப்பட்டதாகவும், சில இலக்கை அடையவில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது ஈரான் தனது தாக்குதலை கல்ஃப் பிராந்தியத்தைத் தாண்டி விரிவுபடுத்தியதற்கான முக்கிய சான்றாகும்.

அதேபோல், சைப்ரஸில் உள்ள RAF Akrotiri தளம் (பிரிட்டன் தளம் ஆனால் அமெரிக்க ஆதரவுடன் செயற்படும்) ஈரான் ட்ரோன் தாக்குதலுக்கு உள்ளானது. ஒரு ட்ரோன் தளத்தை தாக்கி சிறிய சேதத்தை ஏற்படுத்தியதாகவும், பல தாக்குதல்கள் தடுக்கப்பட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

Iraq வடபகுதியில் உள்ள எர்பில் (Erbil) பகுதியும் முக்கிய இலக்காக இருந்தது. இங்கு அமெரிக்கா மற்றும் கூட்டணி தளங்கள் மீது ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. குறிப்பாக, அமெரிக்க தூதரகம் மற்றும் விமான நிலையம் அருகிலுள்ள இராணுவ வசதிகள் இலக்காக எடுக்கப்பட்டன.

இதற்கு மேலாக, Turkey போன்ற பகுதிகளில் உள்ள NATO தளங்களின் அருகில் ஈரான் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் தடுக்கப்பட்டதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த தாக்குதல் நேரடியாக இல்லாவிட்டாலும், அந்த தளங்கள் ஈரானின் தாக்குதல் பரப்பிற்குள் வந்திருப்பதை காட்டுகிறது.

மொத்தத்தில் பார்க்கும்போது, ஈரான் தனது தாக்குதலை Gulf நாடுகளுக்குள் மட்டுமே கட்டுப்படுத்தவில்லை. Diego Garcia போன்ற தொலைதூர தளங்களையும், Cyprus போன்ற ஐரோப்பிய இணைத் தளங்களையும், Iraq போன்ற முன்னணி தளங்களையும் இலக்காகக் கொண்டு பல திசைகளில் தாக்குதலை விரிவுபடுத்தியுள்ளது. இது இந்தப் போர் ஒரு 'பிராந்திய மோதல்' மட்டுமல்ல; பல நாடுகளையும் தாண்டி பரவியுள்ள பன்முக இராணுவ மோதல்' என்பதை தெளிவாக காட்டுகிறது.

அயல் நாடுகளுடனான உறவு:
United Arab Emirates:

போருக்கு முன்பு, United Arab Emirates மற்றும் Iran இடையே வணிக உறவுகள் மிகவும் வலுவாக இருந்தன. அரசியல் ரீதியாக கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், துபாய் போன்ற நகரங்கள் ஈரானுக்கான முக்கிய வர்த்தக வாயிலாகச் செயற்பட்டன. குறிப்பாக, சர்வதேச தடைகள் இருந்த காலத்திலும் UAE ஒரு 're-export hub' ஆக இருந்து, ஈரான் பொருளாதாரத்திற்கு மறைமுக ஆதரவாக இருந்தது.

இந்த அரசியல் கருத்து வேறுபாடுகள் பல அடிப்படைகளில் இருந்தன. முதலில், Iran ஒரு ஷியா (Shia) மத அரசாகவும், United Arab Emirates சுன்னி (Sunni) ஆதிக்க அரசியல் அமைப்பாகவும் உள்ளது. இதனால் பிராந்தியத்தில் மத அடிப்படையிலான செல்வாக்கு போட்டி நிலவியது. இரண்டாவது, யேமன், சிரியா போன்ற இடங்களில் இரு நாடுகளும் வேறு வேறு தரப்புகளை ஆதரித்தன. மூன்றாவது, பெர்சியன் வளைகுடாவில் உள்ள Abu Musa மற்றும் Greater & Lesser Tunb தீவுகள் குறித்து நில உரிமைத் தகராறு நீண்டகாலமாக உள்ளது. நான்காவது, ஈரான் மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்திருந்தாலும், UAE அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளுடன் நெருங்கிய கூட்டாண்மை வைத்திருந்தது.

இப்போது, போரின் சூழ்நிலையில் United Arab Emirates மிகவும் எச்சரிக்கையான மற்றும் கணக்கிட்ட நிலைப்பாட்டை எடுத்துள்ளது. அதன் நாட்டில் உள்ள Al Dhafra Air Base போன்ற அமெரிக்க தளங்கள் காரணமாக, அது பாதுகாப்பு அழுத்தத்திற்குள் உள்ளது. அதே நேரத்தில், ஈரானுடன் நேரடி மோதலைத் தவிர்க்கும் நோக்கில், வெளிப்படையான எதிர்ப்பு காட்டாமல் 'low-profile diplomacy' முறையை பின்பற்றுகிறது. இதற்குக் காரணம், போர் தீவிரமடைந்தால் துபாய் போன்ற உலக வர்த்தக மையங்கள் கடுமையாக பாதிக்கப்படும் அபாயம், மேலும் எண்ணெய், கப்பல் போக்குவரத்து மற்றும் நிதி துறைகள் நேரடியாகத் தாக்கம் அடையும் என்பதுதான்.

இந்தப் பகுதியில், Gulf மற்றும் அயல் நாடுகள் - Saudi Arabia, UAE, Qatar, Oman, Iraq, Jordan, Turkey போன்றவை - ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான மோதலில் எவ்வாறு தங்கள் நிலைப்பாடுகளைச் சமநிலைப்படுத்துகின்றன என்பதையும், அந்த முடிவுகளின் பின்னணியில் உள்ள அரசியல் மற்றும் பாதுகாப்பு கணக்கீடுகளையும் ஆராய்ந்தோம். இருப்பினும், இந்த மோதல் ஒரு பிராந்திய அரசியல் விவகாரம் மட்டுமல்ல; இது மதப் பிரிவுகள், உலகளாவிய சக்தி சமநிலை, மற்றும் இஸ்ரேல் - பாலஸ்தீனம் போன்ற பெரிய அரசியல் கேள்விகளுடனும் தொடர்புடையது. அடுத்த பகுதியில், Sunni - Shia பிரிவின் தாக்கம், உலக முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அமைப்பு, மற்றும் இந்த நாடுகளின் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் குறித்த நிலைப்பாடுகள் ஆகியவற்றை விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்போகிறோம்.

Raveendran.T@thaiveedu.com

பொன்னையா விவேகானந்தன்

இருதுருவ அரசியலை மீறிய வாக்காளர் தீர்ப்பு:

தமிழக வெற்றிக் கழகத்தின் எழுச்சியும் அதன் பின்னணிகளும்

tg.theeban@gmail.com

“விஜய் – இரு தசாப்தங்களுக்கும் மேலாகத் திரையுலகில் முன்னணி ஆளுமையாக விளங்கிய ஓர் உச்ச நடிகர். பொதுவெளிகளில் தீவிர அரசியல் நகர்வுகளையோ அல்லது அரசியல் கருத்துகளையோ வெளிப்படுத்தாத ஒருவராகவே அவர் நீண்டகாலமாக இருந்து வந்தார். பொதுவாக, தனது திரைப் பிம்பத்திற்கு அப்பால், சமூகத் தேவைகளுக்கெனத் தனக்கென ஒரு தனித்துவமான அரசியல் அல்லது தத்துவார்த்தக் கொள்கை, கோட்பாடுகளை அவர் பொதுவெளியில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.”

பல்வேறுபட்ட எதிர்பார்ப்புகளுக்கு நடுவே, கடந்த மே 4-ஆம் நாள் வெளியான தமிழகச் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் மரபுவழி அரசியல் தடங்களை மாற்றியபடி வெளிப் பட்டன. அரசியல் பரப்பு சார்ந்த பட்டறிவும் முதிர்ச்சியும் மிக்க ஆய்வாளர்கள், கள அவதானிகள் என அனைத்துத் தரப் பினருக்குமே வியப்பையும் ஆச்சரியத்தையும் ஏற்ப டுத்தின.

பொதுவாகவே, தேர்தல் காலத்துக் கணிப்புகளும் நடைமுறை அவதா னிப்புகளும் மக்களின் அன்றாட எண்ண ஓட்டங்களையும் கடந்தகால வரலாற்று ஒழுங்குகள் கற்றுக்கொடுத்த அரசியல் கோட்பாடுகளின் அடிப்படையிலுமே பெரும்பாலும் வெளிப்படுவது வழமை என்ற விதியை இத்தேர்தல் முடிவுகள் முற்றிலுமாக மாற்றியமைத்துள்ளன. தேர்த லுக்கு முந்திய பெரும்பாலான கருத்துக்கணிப்புகளும் ஊடக விவாதங் களும் வழக்கமான இருதுருவ அரசியல் அணுகுமுறைகளின் அடிப் படையிலேயே அமைந்திருந்தன. ஆயினும், ஏறக்குறைய 35 விழுக்காடு வாக்கு வங்கியுடன் புதிதாகத் தோற்றம் கொண்ட கட்சி, கூட்டு அரசாங் கத்தை அமைத்துள்ள வரலாற்றுப் பின்னணி, பாரம்பரிய அரசியல் கணக்குகளைக் கடந்து புதியதொரு அரசியல் நடைமுறை ஒழுங்கைத் தோற்றுவித்துள்ளது.

தமிழக வெற்றிக் கழகம் என்ற இந்த அரசியல் இயக்கத்தின் தோற்றமும் தேர்தலுக்கு முந்திய அதன் பரவலாக்கமும் ‘திரைக் கவர்ச்சி’ என்ற பிம் பத்தினால் ஈர்க்கப்பட்ட பெரும் இரசிகர் கட்டமைப்பினால் குறுகிய காலப் பகுதிக்குள் கட்டமைக்கப்பட்ட ஒரு கட்சியாகவே தொடக்கத்தில் அவதானிக்கப்பட்டது.

சினிமாவில் இருந்து பலரும் அரசியலுக்கு வரும் வழக்கமான நகர்வா கவே இது பார்க்கப்பட்டதோடு, உணர்ச்சிவசப்பட்ட இளையோர் கூட்டமே இதன் முதன்மைப் பலம் என்ற கணிப்பையே பலரும் கொண்டிருந்தனர்.

எனினும் தேர்தலுக்குப் பின்னான சமகால அரசியல் சூழல், இக்கட்சி பாரம்பரிய அரசியல் கட்சிகளின் வாக்குவங்கிப் பலத்தையும் வியூகங்களையும் கடந்து, குறுகிய காலத்திற்குள் அடைந்துள்ள வாக்கு வீத அசுர வளர்ச்சியானது, இது வெறும் 'திரைக் கவர்ச்சி' என்ற எல்லைகளுக்குள் மட்டும் சுருங்கிவிடவில்லை என்பதையே தற்போதைய வெளிப் படுத்தியுள்ளது.

விஜய் - இரு தசாப்தங்களுக்கும் மேலாகத் திரையுலகில் முன்னணி ஆளுமையாக விளங்கிய ஓர் உச்ச நடிகர். பொது வெளிகளில் தீவிர அரசியல் நகர்வுகளையோ அல்லது அரசியல் கருத்துகளையோ வெளிப்படுத்தாத ஒருவராகவே அவர் நீண்டகாலமாக இருந்து வந்தார். பொதுவாக, தனது திரைப் பிம்பத்திற்கு அப்பால், சமூகத் தேவைகளுக்கெனத் தனக்கென ஒரு தனித்துவமான அரசியல் அல்லது தத்து வார்த்தக் கொள்கை, கோட்பாடுகளை அவர் பொதுவெளி யில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. திரையில் அவர் வெளிப் படுத்திய சமூகக் கருத்துகளைக் கூட, பொதுவெளிகளில் சமூக நலனை முன்னிட்டுத் தனிப்பட்ட முறையில் விரிவாகப் பேசாதவராகவே அவர் அவதானிக்கப்பட்டார். இவ்வாறான தொரு சமூக-அரசியல் பின்னணியைக் கொண்ட ஒரு திரை ஆளுமை, திடீரென ஒரு அரசியல் இயக்கத்தைத் தோற்று வித்து, தேர்தல் களத்தில் இந்தளவிற்குப் பாரிய வாக்கு வீதத் தாக்கத்தை ஏற்படுத்துவார் என்பதை மரபுவழி அரசி யல் அவதானிகள் எவருமே முன்கூட்டியே கணித்திருக்க வில்லை.

ஏனைய சில திரை நட்சத்திரங்களைப் போலன்றி, தனது அரசியல் வருகை குறித்த நீண்டகால இழுபறி நிலைப்பாடு களைத் தவிர்த்து, கடந்த 2024 ஆம் ஆண்டில் மக்கள் இயக் கமாக இயங்கிவந்த தனது இரசிகர் நற்பணிக் கட்டமைப்பை 'தமிழக வெற்றிக் கழகம்' என்ற அரசியல் இயக்கமாக விஜய் அவர்கள் அதிகாரப்பூர்வமாகப் பிரகடனப்படுத்தி, மரபுவழி அரசியலுக்குள் கால் பதித்தார்.

அதன் தொடர்ச்சியாக, அண்மையில் நடந்து முடிந்த 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் நேரடியாகக் களமிறங்கிப் போட் டியிட்டதன் ஊடாக, தற்போதைய சமகால அரசியல் பரப்பில் தனக்குரிய வாக்கு வங் கிப் பலத்தை அவர் உறுதிப்படுத்தினார்.

விஜய்யின் அரசியல் நுழைவு குறித்த விவாதங்கள் நீண்டகாலமாகவே நிலவி வந்த போதிலும் தனது இரசிகர் கட்ட மைப்பை மாத்திரம் முதன்மையாகக் கொண்டு மிகக்குறுகிய காலப்பகுதிக்குள் ஓர் அரசியல் இயக்கத்தைப் வலுப்படுத்தி, இரண்டாண்டுகளுக்குள்ளேயே பொதுத் தேர்தலைச் சந்திப்பதாக அவர் அறிவித்த மையானது, மரபுவழி அரசியல் பட்டறிவும் முதிர்ச்சியும் மிக்க ஆய்வாளர்களிடையே ஆரம்பத்தில் ஒரு சவாலான அல்லது நடைமுறைச் சாத்தியமற்ற நகர்வாகவே பார்க்கப்பட்டது. பாரம்பரிய அரசியல் கட்டமைப்புகளின் ஆழத்தையும், தேர்தல் களங்களின் வியூகங்களையும் முன் னிறுத்தி அவர்கள் அவ்வாறு கணித்திருந்ததில் எவ்விதத் தவறும் இருந்திருக்கவில்லை.

வெறும் 'திரைக் கவர்ச்சி' என்ற காரணியை மாத்திரம் கொண்டு அரசியல் களத்தில் வாக்குகளை முழுமையாகப் பெற்றுவிட முடியாது என்பதற்குத் தமிழக அரசியல் வரலாற் றில் பல சான்றுகள் உள்ளன. திரைவழி அரசியல் தொடர் பில், எம்.ஜி.ஆர் (M.G.R) ஒரு சிறப்பு அரசியல் பின்னணி யைக் கொண்ட ஆளுமையாவார். ஏனெனில், அவர் முதல மைச்சராவதற்கு முன்பதாகவே ஏறத்தாழ இருபது ஆண்டு காலம் அண்ணா, கலைஞர் ஆகியோரின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகச் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு, நாடாளுமன்ற/சட்டமன்ற மேலவை, பேரவை உறுப் பினராகப் பணியாற்றிய நீண்ட அரசியல் முதிர்ச்சியைக் கொண்டிருந்தார். அவருக்குப் பின்னர், தனியாக ஓர் அரசி யல் இயக்கத்தைத் தோற்றுவித்து, ஆரம்பத்தில் எவ்விதக் கூட்டணியுமின்றித் தனித்துப் போட்டியிட்டு, மக்களிடையே தனக்கானதொரு வாக்குவங்கியையும் அரசியல் அங்கீகாரத் தையும் நிலைநிறுத்திய ஆளுமையாக நடிகர் விஜயகாந்த் விளங்கியிருந்தார்.

அரசியல் கட்சி தொடங்கிய சிவாஜி கணேசன், கமல்ஹாசன் ஆகியோர் தாங்கள் போட்டியிட்ட தொகுதிகளிலேயே தோல் வியைத் தழுவியிருந்தனர். அதிலும் கமல்ஹாசன் அவர்கள், தனது மக்கள் நீதி மய்யம் கட்சியைப் நாடாளுமன்றத் தேர் தல்களின் போது ஏனைய முதன்மைக் கட்சிகளின் கூட்ட ணியோடு இணைத்துப் பயணிக்கும் நிலைக்குத் தள்ளப்பட் டார். இதேவேளை கே.பாக்கியராஜ், டி.ராஜேந்தர், கார்த்திக் எனத் தனிக்கட்சி தொடங்கி, அதனைத் தொடர்ந்து கொண் டுசெல்ல முடியாமல் இடைநடுவில் கைவிட்ட திரைத்துறை யினர் பலர் உள்ளனர். மறுபுறம் சரத்குமார், கருணாஸ் போன்றோர் தங்களது கட்சிகளைப் பிரதான கூட்டணிகளின் கீழ் உதிரிக் கட்சிகளாக இணைத்துத் தங் களது அரசியல் இருப்பைத் தக்கவைத்தி ருக்கின்றனர். திரைத்துறையினரின் இத்த கைய நீண்டகால வரலாற்றுப் பின்னடைவு களின் பின்னணியில்தான், விஜய்யின் ஆரம்பகால அரசியல் நகர்வுகளும் அரசி யல் அவதானிகளால் நோக்கப்பட்டிருந்தன.

"தனது அரசியல் வருகை குறித்த நீண்டகால இழுபறி நிலைப்பாடுகளைத் தவிர்த்து, கடந்த 2024 ஆம் ஆண்டில் மக்கள் இயக் கமாக இயங்கிவந்த தனது இரசிகர் நற்பணிக் கட்டமைப்பை 'தமிழக வெற்றிக் கழகம்' என்ற அரசியல் இயக்கமாக விஜய் அவர்கள் அதிகாரப் பூர்வமாகப் பிரகடனப்ப டுத்தி, மரபுவழி அரசிய லுக்குள் கால் பதித்தார்."

இவ்வாறான வரலாற்றுப் பின்னணியில், விஜய் அவர்களின் அரசியல் நுழைவு என் பது ஆரம்பத்தில் மரபுவழி அரசியல் பட்ட றிவும் முதிர்ச்சியும் மிக்கோரால் ஓர் அரசி யல் சவாலாகக் கருதப்படவில்லையென்றே கூறவேண்டும். விஜய் தனக்குரிய இரசிகர் கட்டமைப்பை முதன்மையாகக் கொண்டு உருவாக்கிய அரசியல் இயக்கத்தில், விடு தலைச் சிறுத்தைகள் கட்சியிலிருந்து வில கிவந்த தேர்தல் வியூக வகுப்பாளரான ஆதவ் அர்ஜுனா, தொடக்கத்திலிருந்தே அவருடன் இயங்கும் பொதுச்செயலாளர் என். ஆனந்த் (புஸ்ஸி ஆனந்த்), மற்றும்

தகவல் தொழில்நுட்பப் பிரிவின் நிர்மல்குமார் போன்றோரே கட்சியின் தொடக்கத்தில் முதன்மை முகங்களாகத் தொழிற்பட்டனர். இதேவேளை, பல்வேறு மாவட்டங்களிலும் ஏனைய பாரம்பரிய அரசியல் கட்சிகளின் உட்கட்சிப் பூசல்களால் ஒதுக்கப்பட்டிருந்த பல அரசியலாளர் அடையாளம் காணப்பட்டுத் த.வெ.கட்சிக்குள் உள்வாங்கப்பட்டனர். இவ்வாறானோர் கொள்கை ஈர்ப்பைக் காட்டிலும் தங்களது அரசியல் மறுவாழ்விற்கான ஒரு பாதுகாப்பான தளத்தை நோக்கியே த.வெ.க-வுடன் இணைந்திருந்தனர்.

இவ்வாறான சூழலில், சட்டமன்றத் தேர்தல் களத்திற்கு முன்பதாக, அதிமுகவின் மூத்த தலைவராக விளங்கிய கே. ஏ. செங்கோட்டையன், பழுத்த அரசியல் பேச்சாளரான நாஞ்சில் சம்பத் போன்ற பிரமுகர்களும் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தமை அரசியல் தளத்தில் பரவலான விவாதங்களை ஏற்படுத்தியிருந்தது. இவ்வாறான உத்திகள், துரிதமான கட்டமைப்பு நகர்வுகளின் ஊடாகவே, கடந்த இரண்டு ஆண்டு காலப்பகுதிக்குள் தமிழக வெற்றிக் கழகம் தன் கட்சிக் கட்டமைப்பைப் பலப்படுத்தியிருந்தது.

எம்மால் முன்வைக்கப்பட்ட அவதானிப்புகள் உட்பட பல்வேறு தரப்பினராலும், சுமார் ஏழு கோடி மக்களை ஆளப்போகும் ஒரு மாநிலத் தலைமைப் பொறுப்புக்கு, வெறுமனே திரைப் பிம்பத்தை மாத்திரம் முதன்மையாகக் கொண்டு தேர்தலை எதிர்கொள்ளத் துணிந்த விஜய் அவர்களின் அரசியல் நகர்வுகள் எதிராளிகளால் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாயின. பல்வேறு எதிர்மறையான (தற்குறி, அணில்) சொல்லாடல்களும் வெற்றிக் கழகத்தை நோக்கிப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. எனினும், இத்தகைய கடுமையான விமர்சனங்களையும் கடந்து, விஜய் அவர்கள் பொதுமக்களைத் தன்பால் பெருமளவில் ஈர்த்து வருகின்றார் என்ற உளவுத்துறைத் தகவல்களும் தனியார் கள ஆய்வறிக்கைகளும் ஏனைய போட்டி அரசியல் கட்சிகளின் தலைமைகளுக்குச் தொடர்ச்சியாகச் சென்றுகொண்டே இருந்தன.

அரசியல் அரங்கில் வியூகங்களும் சவால்களும் இயல்பான நிகழ்வுகளாகும். இதன் பின்னணியில்தான், தேர்தல்களம் தீவிரமடைந்த வேளையில் விஜய் அவர்களின் 'ஜனநாயகன்' திரைப்பட வெளியீடு திட்டமிட்டுத் தாமதப்படுத்தப்பட்டதுடன், த.வெ.க-வின் கரூர் பொதுக்கூட்டத்தில் ஏற்பட்ட ஏற்கமுடியாத உயிரிழப்புகள் காரணமாக மத்திய புலனாய்வுத் துறை (CBI) விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு அவருக்குப் பல்வேறு நெருக்கடிகளும் கொடுக்கப்பட்டிருந்தன. மறுபுறம் அவரது தனிப்பட்ட வாழ்வை மையப்படுத்தியும் பல்வேறு செய்திகள் பரப்பப்பட்டன; குறிப்பாக, தனிப்பட்ட தொடர்புகள் குறித்த செய்திகளை, முதன்மை அரசியல் கட்சிகளின் ஆதரவுப் பெற்ற ஊடகங்கள் முன்னிலைப்படுத்திக் கடும் பரப்புரைகளைச் செய்திருந்தன.

"தேர்தல்களம் தீவிரமடைந்த வேளையில் விஜய் அவர்களின் 'ஜன நாயகன்' திரைப்பட வெளியீடு திட்டமிட்டுத் தாமதப்படுத்தப்பட்டதுடன், த.வெ.க–வின் கரூர் பொதுக்கூட்டத்தில் ஏற்பட்ட ஏற்கமுடியாத உயிரிழப்புகள் காரணமாக மத்திய புலனாய்வுத் துறை (CBI) விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு அவருக்குப் பல்வேறு நெருக்கடிகளும் கொடுக்கப்பட்டிருந்தன. மறுபுறம் அவரது தனிப்பட்ட வாழ்வை மையப் படுத்தியும் பல்வேறு செய்திகள் பரப்பப்பட்டன."

இச்சம்பவங்கள் யாவும் தற்செயலாக நிகழ்ந்திருக்கலாம் அல்லது திட்டமிடப்பட்ட அரசியல் பின்னணிகளைக் கொண்டிருக்கலாம். எவ்வாறாயினும், இத்தகைய தொடர்ச்சியான ஏற்பட்ட இடர்கள் யாவும் விஜய்யின் தேர்தல்கால அரசியல் நகர்வுகளுக்குப் பெரும் தடையாக அமைந்திருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. ஒரு புதிய அரசியல் இயக்கத்தைத் தோற்றுவித்து, அதனை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்க வேண்டிய மிக முக்கிய காலகட்டத்தில், இவ்வாறான தனிப்பட்ட, பொதுவெளித் தாக்கங்கள் அவரது கட்சிசார் இயக்கத்தின் வேகத்தைக் குறைத்துச் சற்றே மடைமாற்ற முயன்றன என்பதே நடைமுறை உண்மையாகும்.

தேர்தல் முடிவுகள் வெளியாவதற்குச் சில நாட்களுக்கு முன்னர், தேர்தல் கருத்துக் கணிப்புகளில் தமிழகப் பரப்பில் பரவலாக அறியப்பட்ட ஒரு பேராசிரியர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: "தி.மு.க-வே அதிக இடங்களைக் கைப்பற்றி மீண்டும் ஆட்சி அமைக்கும். அ.தி.மு.க இரண்டாம் இடத்தைப் பெற்று முதன்மை எதிர்க்கட்சியாக வரும். த.வெ.க-வைப் பொறுத்தவரை, பெரம்பலூர் தொகுதியில் மாத்திரம் விஜய் சில ஆயிரம் வாக்குகள் வேறுபாட்டில் வெற்றி பெறலாம் அல்லது தோல்வியைத் தழுவலாம்." பாரம்பரியக் கருத்துக்கணிப்பாளரின் இத்தகைய மதிப்பீடுகள், அடிமட்டத்தில் உருவாகிக்கொண்டிருந்த புதிய அரசியல் மாற்றங்களை அவர்கள் எந்தளவிற்குப் புறநிலையாகக் கணிக்கத் தவறியிருந்தார்கள் என்பதையே வெளிப்படுத்துகின்றன.

அரசியல் அவதானிகள் பெரும்பாலோரின் கணிப்புகளும் இத்தகைய மதிப்பீடுகளின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. இதன் காரணமாக ஆளுங்கட்சித் தரப்பானது தங்களது புதிய அமைச்சரவைக்கான சாத்தியப்பாடுகள் குறித்தும் முன்கூட்டியே திட்டமிட்டிருந்ததாகக் கூறப்பட்டது. மறுபுறம், தேர்தல் முடிவுகள் விஜய்க்குச் சாதகமாக அமையாது என்ற கணிப்புகளின் பின்னணியில், 'தேர்தல் தோல்விக்குப் பின்னர் விஜய் தனது 'ஜனநாயகன்' திரைப்படத் தயாரிப்பாளருக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வதற்காக, மீண்டும் ஒரு திரைப்படத்தில் நடித்துக் கொடுப்பார்' என்ற ஊகங்களும் செய்திகளும் கூட பரவலாகப் பேசப்பட்டிருந்தன.

தமிழ்நாட்டில் மீண்டும் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான நிருவாகமே ஆட்சி அமைக்கும் என்ற பரவலான எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில்தான் மே 4-ஆம் நாள் வாக்கு எண்ணிக்கை ஆரம்பமாகியிருந்தது. ஆயினும், வாக்கு எண்ணிக்கை முடிவுகள் வெளிவரத் தொடங்கி சில மணித்தியாலங்களுக்குள்ளேயே தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் முன்னிலை நிலவரங்கள் உறுதிப்பட்டன. தமிழகத்தின்

இருபெரும் பாரம்பரியக் கட்சிகளாகத் திகழ்ந்த தி.மு.க , அ.தி.மு.க ஆகிய முதன்மைக் கட்சிகள் இத்தேர்தலில் எதிர் பாராத பின்னடைவைச் சந்தித்தன. முதலமைச்சர் மு.க.ஸ் டாலின் உட்பட முன்னனி அமைச்சர்கள் பதினைந்து பேர் தத்தமது தொகுதிகளில் தோல்வியைத் தழுவினர். தி.மு.க-வின் நீண்டகால வாக்குவங்கித் தளமாகக் கருதப்பட்ட சென்னையின் பெரும்பாலான தொகுதிகள் த.வெ.க-வின் தேர்தல் அலையினால் மாற்றியமைக்கப்பட்டன. நீண்டகால அரசியல் அனுபவம் மிக்க வேட்பாளர் பலரும் தோல்வியுற, மக்கள் மத்தியில் புதிய முகங்களாக விளங்கிய இளையோர் பலர் பெருவெற்றி பெற்றனர். இதன் மூலம் தமிழக அரசியல் வரலாற்றில் புதியதொரு அதிகாரப் பகிர்வுக்கான சூழல் உருவானது. விஜய் அவர்களின் தலைமையிலான த.வெ.க, தான் சந்தித்த முதலாவது பொதுத்தேர்தலிலேயே ஒட்டு மொத்தமாகச் ஏறக்குறைய 35 விழுக்காடு வாக்குவங்கி யினைப் பெற்றுக் கூட்டு அரசாங்கத்தை அமைக்கும் முதன் மைச் கட்சியாக உருவெடுத்தது.

பாரம்பரிய அரசியல் அணுகுமுறைகளையும் பல தசாப்த கால வாக்குவங்கி மரபுகளையும் கடந்து, வாக்காளர்கள் வழங்கியுள்ள இந்த எதிர்பாராத தீர்ப்பானது, தமிழக அரசி யல் திசையினை முற்றிலும் புதியதொரு பாதையை நோக் கித் திருப்பியுள்ளதோடு, சமகால அரசியல் பரப்பில் உற்று நோக்கத்தக்க பிரதான பேசுபொருளாகவும் மாறியுள்ளது.

தேர்தல் கால அன்பளிப்புகளையும் பண வழங்கலையும் முதன்மையாகக் கொண்ட பாரம்பரிய அரசியல் கட்சிகளைத் தேர்தல் களத்தில் புறந்தள்ளிவிட்டு, அத்தகைய சலுகை களை வழங்காத தமிழக வெற்றிக் கழகத்திற்கு வாக்கா ளர்கள் ஏன் தங்களது பேராதரவை வழங்கினார்கள் ? என்ற வினா இன்று சமகால அரசியல் அரங்கில் அவதானிப்புக் குரிய ஒன்றாக நோக்கப்படுகின்றது.

தமிழக வாக்காளர்கள் வெறும் 'திரைக்க வர்ச்சி'க்கு மாத் திரம் மயங்கி இந்தத் தீர்ப்பை வழங்கவில்லை. மாறாக, பல பத்து ஆண்டுகளாகத் தொடரும் பண பலம் சார்ந்த தேர்தல் நடைமுறைக்கு எதிராக, அடிமட்டத்தில் நிலவிய ஓர் 'அமைதியான அரசியல் விழிப்புணர்வே' இதன் மூலகாரணமாகக் கருதப்படுகின் றது. தேர்தல் காலங்களில் வழங்கப்படும் தற்காலிகச் சலுகைகள் தங்களது வாழ் வாதாரத்தையோ, கல்வி மற்றும் சுகாதா ரக் கட்டமைப்பையோ எவ்விதத்திலும் உயர்த்திவிடப் போவதில்லை என்ற சிந் தனை முதிர்ச்சி, குறிப்பாகப் பெண் வாக் காளர்களிடம் ஆழமாக மேலோங்கத் தொடங்கியிருந்தமையும் இத்தேர்தல் முடி வுகளின் ஊடாக வெளிப்பட்டிருப்பதாக அரசியல் ஆய்வாளர் சுட்டிக்காட்டுகின் றனர்.

வாக்காளரின் இந்த எதிர்பாராத மனமாற் றமும் எண்ணவோட்டமும் பாரம்பரிய அரசியல் கருத்துக்கணிப்பாளர்களாலும் ஆய்வாளர்களா லும் இறுதிவரை துல்லியமாகக் கணிக்கப்படாமல் போன மைக்கு, அவர்களின் மரபுவழித் தரவுச் சேகரிப்பு முறை களில் காணப்பட்ட பலவீனங்களே முதன்மைக் காரணங்க ளாகும். கருத்துக்கணிப்பாளர் வழக்கமாக நகர்ப்புறப் பகுதி களிலும் முதன்மை ஊடகங்களின் அணுகுமுறைகளுக்கு உட்பட்டும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினரிடமுமே தங்களது மாதிரிகளைத் (Samples) திரட்டினர். ஆனால், சமூக வலைத் தளங்களின் விவாதங்களுக்கு அப்பால், கள யதார்த்தங் களின் பின்னணியில் தங்களது உண்மையான அரசியல் விருப்பை பொதுவெளியில் வெளிப்படுத்தாது மௌனம் காத்த 'அமைதியான வாக்காளரை' (Silent Voters) அவர் களது தரவுச் சேகரிப்பு உத்திகளால் துல்லியமாக அளவிட முடியாமல் போனது. அத்துடன், கருணாநிதி, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா போன்ற ஆளுமைகள் இல்லாத சமகாலச் சூழலிலும் முதன்மைத் திராவிடக் கட்சிகளின் வாக்குவங்கி எவ்வித மாற்றமுமின்றி நிலைத்திருக்கும் என்ற அவர்களின் மரபுவழிக் கோட்பாட்டு நம்பிக்கையும் சமகால இளைய தலைமுறையினரின் கட்டமைப்புசார் எதிர்பார்ப்புகளை அவர் கள் சரியாகப் புரிந்துகொள்ளத் தவறியமையுமே இத்தகைய கணிப்புகள் வழமையான நடைமுறைகளில் இருந்து மாறுபட் டமைக்குக் காரணமாய் அமைந்தன.

கடந்த எழுபது ஆண்டு காலமாகத் திராவிடக் கட்சிகள் தமி ழகத்தில் நிலைநிறுத்தியிருந்த அரசியல் கோட்பாடுகளைக் கடந்து, புதியதொரு அரசியல்நகர்வை நோக்கிய வாக்கா ளரின் நகர்வுக்குப் பின்னால் பல்வேறு சமூக, பொருளா தாரக் காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. இன் றைய 18 முதல் 35 வயதுக்குட்பட்ட இளந்தலைமுறை வாக் காளர்களுக்கு, 1960-களின் மொழிப் போராட்டங்களோ அல் லது இருதுருவ மரபுவழித் தத்துவக் கோட்பாடுகளோ தங்களது சமகால வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குரிய முதன்மைத் தீர்வாகத் தென்படவில்லை. அவர்களுக்குத் தேவை யானது தரமான உலகளாவிய கல்வி, புதிய வேலை வாய்ப்புகள், ஊழலற்ற வெளிப்படை யான அரச ஆளுகை முறைமையாகும். அந்த வகையில், வாரிசு அரசியல், மரபு வழிக் கோட்பாட்டுத் தீவிரத்தன்மை ஆகிய வரையறைகளுக்கு நடுவில் மாற்று அரசியலை எதிர்பார்த்திருந்த வாக்காளருக்குத் தமிழக வெற்றிக் கழ கம் முன்வைத்த 'மதசார்பற்ற சமூக நீதிப் பார்வை' என்பது ஒரு புதிய தெரி வாக அமைந்தது. இந்த இளையோர் பங்களிப்பும் அரசியல் மாற்றத்திற்கான வாக்காளரின் எதிர்பார்ப்புமே நீண்ட காலப் பாரம்பரிய அரசியல் கட்டமைப்பு களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தின. புதியதோர் அரசியல் சூழலைத் தோற்று வித்துள்ளன.

இத்தகைய வினாக்களுக்கான துல்லி யமான காரணிகளைத் தேடிப் பல்வேறு அரசியல் ஆய்வாளரும் கள அவதானி களும் தற்பொழுது விரிவான ஆய்வுகளை

"இன்றைய 18 முதல் 35 வயதுக்குட்பட்ட இளந்தலை முறை வாக்காளர்களுக்கு, 1960–களின் மொழிப் போராட்டங்களோ அல்லது இருதுருவ மரபுவழித் தத்துவக் கோட்பாடுகளோ தங்களது சமகால வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குரிய முதன்மைத் தீர்வாகத் தென்படவில்லை. அவர்களுக்குத் தேவையானது தரமான உலகளாவிய கல்வி, புதிய வேலைவாய்ப்புகள், ஊழலற்ற வெளிப்படையான அரச ஆளுகை முறைமையாகும்."

முன்னெடுத்து வருகின்றனர். தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் புதிதாகத் தோற்றம் பெற்ற ஓர் அரசியல் இயக்கம், நீண்டகாலமாக நிலவி வந்த மரபுவழிப்பட்ட இருதுருவ அரசியலின் கட்டமைப்புகளைக் கடந்து, தான் சந்தித்த முதலாவது பொதுத்தேர்தலிலேயே பெருவெற்றி பெற்றமைக்கான காரணங்களைப் பின்வருமாறு விரிவாக நோக்கலாம்.

விஜய் அவர்களின் தலைமையிலான த.வெ.க-விற்குப் பதிவான வாக்குகள் யாவுமே வெறும் இரசிகர்களின் வாக்குகள் என்றோ, அல்லது ஆரம்பத்தில் விமர்சகர்களால் எதிர்மறையாகக் குறிப்பிடப்பட்ட தரப்பினரின் வாக்குகள் மாத்திரமே என்றோ எவ்விதத்திலும் வரையறுத்துவிட முடியாது. ஏனெனில், ஒரு திரை ஆளுமையின் தனிப்பட்ட ஈர்ப்பை மாத்திரம் முதலாகக் கொண்டு எந்தவொரு தேர்தல் களத்திலும் சுமார் 35% விழுக்காடு வாக்கு வங்கியினைப் பெற்றுவிட முடியாது. அரசியல் ஆய்வுகளின்படி, ஒரு திரை நடிகரின் மீதான ஈர்ப்பு, அதனால் கட்டமைக்கட்ட தீவிர ரசிகர் கூட்டத்தின் ஊடாக ஆகக்கூடுதலாகப் 10% முதல் 12% வரையான வாக்குகளை மாத்திரமே திரட்டலாம். எனவே, எஞ்சிய ஏறக்குறைய 23% வாக்குகளை வழங்கி இந்த அரசியல் மாற்றத்தைத் தீர்மானித்த ஏனைய வாக்காளர் எவருமே இரசிகர் கட்டமைப்பைச் சார்ந்தோர் அல்லர். மாறாக, அவர்கள் தற்போதைய அரசியல் சூழலைச் சீர்தூக்கிப் பார்த்து வாக்களித்த பொதுமக்களாவர்.

இவர்களில் ஒரு பகுதியினர் ஏனைய பாரம்பரிய அரசியல் கட்சிகளின் தேர்தல் கால வழங்கல்களை எதிர்கொண்டவர்களாக இருந்திருக்கலாம் என்பது கள யதார்த்தமாகும். எனினும், தேர்தலுக்குச் சில நாட்களுக்கு முன்பதாக, தங்களது வாக்குகளைத் தமிழக வெற்றிக் கழகத்துக்கு அளிக்க வேண்டும் என்ற தீர்க்கமான முடிவுக்கு அவர்கள் ஏன் வந்தார்கள்? என்ற வினாவிற்கு, வலுவான சில சமூகவியல் அனுமானங்களையும் பகுப்பாய்வுகளையும் முன்வைக்க முடியும்.

பொதுவாகவே, பெற்றோருக்குத் தங்களது பிள்ளைகளின் விருப்பங்களையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவதில் ஒரு இயல்பான ஆர்வம் இருப்பதுண்டு. அந்த வகையில், விஜய் அவர்கள் தனது திரை ஆளுமையின் ஊடாகச் சிறுவர்கள், இளம்பருவத்தினரிடையே கணிசமான ஈர்ப்பைக் ஏற்படுத்தியிருந்தார் என்பதை அவதானிக்க முடிகின்றது. இவர்களுள் சமூக ஊடகப் பயன்பாடு, நாட்டு நடப்புகள் குறித்த ஓரளவிலான புரிதலைக் கொண்ட தரப்பினர், சமூக வலைத்தளங்கள் ஊடாகத் தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பரப்புரைகளால் எளிதில் ஈர்க்கப்பட்டிருந்தனர். குடும்பக் கட்டமைப்பில் இளைய தலைமுறையினரின் விருப்பங்கள் பெற்றோரின் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்தும் என்ற சமூகவியல் யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு, த.வெ.க-வின் சமூக வலைத்தளப் பிரிவானது இந்த இளம் வயதினரை நோக்கியே தனது பரப்புரை உத்திகளை முதன்மையாக வடிவமைத்திருந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

தேர்தல் காலத்தில் குடும்பக் கட்டமைப்பிற்குள் ஏற்பட்ட சில உணர்ச்சிவசப்பட்ட விவாதங்கள் குறித்த செய்திகள் கூட, இந்த இளையோர் ஈர்ப்பின் தீவிரத்தன்மையைக் வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன. இவ்வாறான இளம்பருவத்தினரின் உணர்ச்சிப்பூர்வமான வேண்டுகோள்களும் எதிர்பார்ப்புகளும் குறிப்பிடத்தக்க பெற்றோரின் வாக்குப்பதிவுத் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தின என்ற கூற்று கள யதார்த்தத்திற்கு நெருக்கமானதாகும். இதனை உறுதிப்படுத்தும் முகமாகவே, சிறுவர்களின் இந்த மறைமுகப் பங்களிப்பு இல்லாமல் இந்தத் தேர்தல் வெற்றி சாத்தியமாகியிருக்காது என்பதை விஜய் அவர்கள் தனது முதலமைச்சராகப் பதவியேற்கும் விழாவிலும் நன்றியறிதலுடன் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, மாற்று அரசியல் சக்தியொன்றை எதிர்பார்த்திருந்த இன்னுமொரு முக்கிய தரப்பினர், தமிழகத்தை மாறி மாறி ஆட்சி செய்து வந்த பாரம்பரியக் கட்சிகளின் ஆளுமைக் கட்டமைப்புகள் குறித்தும், ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்தும் மிகக் கடுமையான விமர்சனங்களைக் கொண்டிருந்தனர். இத்தகைய ஏமாற்றங்களின் பின்னணியில், அவர்கள் ஒரு காத்திரமான அரசியல் மாற்றத்திற்கான நல்வாய்ப்பைத் தீவிரமாகத் தேடிக் கொண்டிருந்தனர் என்பதை அவதானிக்க முடிகின்றது. சுருக்கமாகக் கூறின், பல ஆண்டுகாலத் திராவிடக் கட்சிகளின் தொடர்ச்சியான ஆளுமை முறைகளிலும், அவர்களின் வாக்குறுதிகளிலும் முழுமையாக நிறைடையாத ஒரு பாரிய வெறுப்பாளர் கூட்டமாகவே இவர்களைக் கருத வேண்டியுள்ளது. இவர்களது கூட்டு ஏமாற்றமும் மாற்று அரசியல் தேவையுமே, எவ்வித பாரம்பரிய அரசியல் பின்புலமும் இல்லாத ஒரு புதிய இயக்கத்துக்குத் தங்களது வாக்குகளை ஒட்டுமொத்தமாக வழங்குவதற்கு முதன்மை ஊக்கியாகத் தொழிற்பட்டது எனவும் கருதலாம்.

மாற்று அரசியலை நோக்கிய வாக்காளர்களின் இந்த நகர்வை ஏற்கும் அதேவேளை, 'அவர்கள் ஏன் மாற்று அரசியல் தளத்தில் இயங்கும் சீமான் அவர்களின் தலைமையிலான நாம் தமிழர் கட்சியைத் தெரிவு செய்யவில்லை?' என்ற

வினாவும் இங்கு எழக்கூடும். இதற்கான முதன்மைக் காரணி யாக, சீமான் அவர்கள் கடந்த பதினைந்து ஆண்டுகாலத் தீவிர அரசியலில் ஈடுபட்டிருந்த போதிலும், தேர்தல் அணுகு முறை சார்ந்த வெற்றியைப் பெறக்கூடிய சாத்தியப்பாட் டையோ அல்லது ஒரு பலமான மாற்று ஆட்சியை உருவாக் கக்கூடிய நிருவாகப் பிம்பத்தையோ பொதுமக்களிடையே பரவலாக நிலைநிறுத்தத் தவறியமையைக் குறிப்பிடலாம். மேலும், தமிழக வாக்காளருள் கணிசமான பகுதியினர் சிக்கலான தத்துவார்த்தக் கோட்பாடுகளையோ அல்லது தீவிரக் கொள்கை சார்ந்த விவாதங்களையோ விட, தங் களை எளிதில் கவரக்கூடிய ஈர்ப்பும் ஆளுமையும் மிக்க நடைமுறை அணுகுமுறையையே அதிகம் நாடுகின்றனர் என்பதும் கள அவதானிப்பாகும். அதோடு தென் தமிழகம் தவிர்ந்த ஏனைய கிராமப்புற அடித்தட்டு மக்களிடையே நாம் தமிழர் கட்சியின் கட்டமைப்பு இன்னும் முழுமையாகச் சென் றடையவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. இவற் றுக்கு மேலாக, கடந்த ஐந்து ஆண்டு காலப்பகுதிக்குள் புதிதாக வாக்களிக்கத் தகுதி பெற்ற இளந்தலைமுறை வாக் காளர்களின் ஒட்டுமொத்த வாக்குகளில், ஏறக்குறைய 80 விழுக்காடானவை தமிழக வெற்றிக் கழகத்தைச் சென்றடைந் துள்ளன என்ற வலுவான புள்ளிவிவரக் கணிப்புகளும் தற் போது வெளியாகியுள்ளன.

தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டுக்குள் வாழ்ந்துவருகின்ற அடித்தட்டுப் பொதுமக்களின் பெரும்பான்மையான வாக்கு கள் இம்முறை தமிழக வெற்றிக் கழகத்தைச் சென்றடைந்தி ருக்கின்றன. குறிப்பாக, பொருளாதாரத்தளத்தில் பின்தங்கிய விளிம்புநிலை மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து கணிசமான வாக்குகள் த.வெ.க-வுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த அடிமட்ட வாக்கு மாற்றத்துக்குச் சான்றாக, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ அவர்களின் இல்லத்தில் நீண்டகால மாகப் பணிபுரியும் பெண்கள் கூட, தங்களது பாரம்பரிய அரசியல் விசுவாசங்களைக் கடந்து இம்முறை விஜய் அவர் களின் தலைமையிலான இயக்கத்திற்கே தங்களது வாக்கு களை வழங்கியிருந்தனர் என்ற தகவலை, வைகோவின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான துரை வைகோ அவர்கள் விஜய் அவர்களை நேரில் சந்தித்தபோது குறிப்பிட் டிருந்த காணொளிப் பதிவு ஒன்று சமூக வலைத்தளங்களில் பரவலாக அவதானிக்கப்பட்டது. இதனைச் சமகால அரசியல் அவதானிகள் பலரும் ஒரு முக்கிய கள யதார்த்தமாகச் சுட் டிக்காட்டி வருகின்றனர்.

தங்களது ஊடக வணிகப் பரப்பளவை விரிவுபடுத்தி, வாசகர், பார்வையாளர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள் ளும் நோக்கில் சிறிய. பெரிய ஊடக நிறுவனங்கள் யாவும் விஜய் அவர்களின் ஒவ்வொரு நகர்வுக்கும் வெவ்வேறான அரசியல் அர்த்தங்களைக் கற்பித்து, தங்களது வருவாயைப் பாரியளவில் அதிகரித்துக்கொண்டன. குறிப்பாக, சமகாலத் தில் பெரும் செல்வாக்குச் செலுத்திவரும் யூடியூப் (YouTube) தள உள்ளடக்க உருவாக்குநர்களின் (Content Creators) வணிக வருமானம் இக்காலப்பகுதியில் கணிசமாக உயர்ந்தி ருந்தது. ஊடகங்களின் இத்தகைய வணிகப் போக்கு, மறை முகமாக விஜய் அவர்களின் அரசியல் செய்திகள் இதுவரை சென்றடையாத குக்கிராமங்களையும் விளிம்புநிலை நிலப்ப ரப்புகளையும் மிக எளிதாகச் சென்றடைவதற்குக் முதன் மைக் காரணியாக அமைந்திருந்தது.

இதேவேளை, தமிழக வெற்றிக் கழகத்தின் தகவல் தொழில் நுட்பத் தொடர்புப் பிரிவினர் (IT Wing) வாக்காளர்களைக் குறிவைத்துக் கையாண்ட சமூக வலைத்தள உத்திகள் யாவும் அதியுயர் தொழில்நுட்பத் தரம் வாய்ந்தவை என அரசியல் வியூக வகுப்பாளர் சுட்டிக்காட்டுகின்றனர். சமூக ஊடகப் பயன்பாடுகளில் அதிக நேரத்தைச் செலவிடும் புதிய தலை முறையினரை மிகத் துல்லியமாக இலக்கு வைத்துத் த.வெ.க தன் பரப்புரைகளை முன்னெடுத்திருந்தது. இதன் விளை வாக, ஏனைய பாரம்பரியக் கட்சிகளின் மரபுவழி அரசியல் மேடைப் பரப்புரைகளைக் கடந்து, பெண் வாக்காளர்களும் இளையோரைக் கொண்ட குடும்பக் கட்டமைப்புகளும் த.வெ.க-வின் டிஜிட்டல் வலைப்பின்னலுக்குள் எளிதாக உள் வாங்கப்பட்டனர்.

எது எவ்வாறாயினும், முந்தைய அரசியல் நிருவாகக் கணிப்பு களைக் கடந்து விஜய் அவர்களின் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் இத்தேர்தலில் தனது முதன்மை வெற்றி யைப் பதிவு செய்துள்ளது. அதன் தொடர்ச்சியாகத் தமிழக வெற்றிக் கழகமானது, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி (விசிக), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (IUML), மனிதநேய மக்கள் கட்சி (MMK) ஆகிய கட்சிகள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - மார்க்சிஸ்ட் (CPI-M) ஆகிய இடதுசாரிக் கட்சிகள் உள்ளிட்ட கூட்டணிக் கட்சி களின் ஆதரவோடு புதியதொரு கூட்டு அரசாங்கத்தை (Co-alition Government) அமைத்துள்ளது.

இப்புதிய அமைச்சரவையில் தமிழக வெற்றிக் கழகத்துடன் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி (விசிக), முஸ்லிம் கட்சிகளின் உறுப்பினர்கள் இணைந்து ஆட்சிப் பொறுப்புகளைப் பகிர்ந் துகொண்டுள்ள அதேவேளை, இரு இடதுசாரிக் கட்சிகளும் விஜய் அரசாங்கத்துக்கு வெளியிலிருந்து தங்களது கொள் கைசார் ஆதரவை வழங்குகின்றமை, தமிழக அரசியல் வர லாற்றில் ஒரு புதிய அதிகாரப் பகிர்வு மாதிரியையும் கூட்டு நிர்வாகப் பண்பாட்டையும் தோற்றுவித்துள்ளது. இப்புதிய ஆட்சிக் கட்டமைப்பு அமையப்பெற்று மூன்று வாரங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், கூட்டணிக் கட்சிகளுக்கு இடை யிலான கொள்கை ஒருங்கிணைப்பு, அமைச்சரவை இலாகா ஒதுக்கீடுகள், இடதுசாரிகளின் வெளியிலிருந்தான ஆதரவு நிலைப்பாடு போன்ற பல்வேறு நகர்வுகள் சமகால அரசியல் பரப்பில் உற்றுநோக்கத்தக்க விடயங்களாகக் காணப்படு கின்றன. இத்தகையதொரு கூட்டு அரசாங்கத்தின் ஆரம்ப கால அரசியல் நடைமுறை உத்திகளும் அணுகுமுறைகளும் தமிழகத்தின் நீண்டகால சமூக-பொருளாதாரக் கட்டமைப் பில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தவுள்ளன என்பது சமகால அரசியல் அவதானிகளால் உற்றுநோக்கப்படும் முதன்மைப் பேசுபொருளாக மாறியுள்ளது.

vivekanandan.p@thaiveedu.com

—— நெல்லை ஜெயசிங் ——

நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்

7 கோடிக்கு மேல் மக்கள் தொகை உள்ள தமிழ்நாட்டில் கடந்த ஏப்பிரல் 23-ஆம் நாள் 17-வது சட்டமன்றத்திற்கான தேர்தல் நடைபெற்றது. 5,74,11,793 வாக்காளர்களில் 4,93,89,958 பேர் வாக்களித்தனர். 234 தொகுதிகளுக்கு, கட்சி சார்பிலும், சுயேச்சையாகவும் 4023 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தேர்தல் முடிவுகள் 11 நாட்கள் கடந்து, மே 4-ஆம் நாள் அறிவிக்கப்பட்டன. தவெக தலைவர் நடிகர் விஜய் இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றிபெற்றமையால், ஒரு தொகுதி நீங்கலாக, 233 உறுப்பினர்கள் தேர்வாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

தற்போதைய தேர்தலில் வழக்கத்திற்கு மாறாக நான்கு முனைப்போட்டி நிலவிய தால், எந்த ஒரு கட்சியும் ஆட்சி அமைப்பதற்கான தனிப்பெரும்பான்மை என்ற 118 எண்ணிக்கையை பெறவில்லை. திமுக, அதிமுக, நாம் தமிழர் ஆகிய கூட்டணிகள் தவிர, புதிய வரவாக நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றி கழகம் போட்டி யிட, வாக்குகள் இக்கூட்டணிகளுக்கிடையில் பிரியலாயின. சிறப்பு வாக்காளர் திருத்தம் முடிவடைந்த நிலையில், இதுவரை இல்லாத அளவில் 86.05 வீத வாக்கு கள் பதிவானபோதும் எந்த ஒரு கட்சியாலும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை.

கட்சிகள் பெற்ற இடங்கள் மற்றும் வாக்கு சதவீதம்:

கட்சி	*பெற்ற இடங்கள்*	*வாக்கு சதவீதம்*
தமிழக வெற்றி கழகம்	108 (-1)	34.92
திராவிட முன்னேற்றக் கழகம்	59	24.19
அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்	47	21.21
இந்திய தேசிய காங்கிரஸ்	5	3.37
பாட்டாளி மக்கள் கட்சி	4	2.17
இந்திய யூனியன் முஸ்லீம் லீக்	2	0.29
இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்)	2	0.60
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி	2	0.66
விடுதலை சிறுத்தைகள் கட்சி	2	1.09
தேசிய முற்போக்கு திராவிட கழகம்	1	1.20
அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்	1	0.87
பாரதிய ஜனதா கட்சி	1	2.97
நாம் தமிழர் கட்சி	0	4.00

“நீண்டகாலம் ஆட்சியில் இருந்த அதிமுக, இத்தேர்தலில் ஆளும் கட்சியாக அல்லது எதிர்க்கட்சியாக வெற்றி பெறும் என எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் தேர்தல் முடிவுகள் அக்கட்சிக்கு பெரும் பின்னடைவைத் தந்துள்ளன. கடந்த தேர்தலில் 33.29 சதவீத வாக்குகளுடன் 66 தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்த இக்கட்சி, இம்முறை 21.21 சதவீத வாக்குகளுடன், 47 ஆசனங்களை மட்டுமே பெற்று, மூன்றாம் இடத்திற்கு நகர்த்தப்பட்டுள்ளது.”

tg.theeban@gmail.com

திமுக அல்லது அதிமுக, ஆட்சி அமைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் பிரபல நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றி கழகம், 108 இடங்களைப் பெற்று தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்று, திராவிட கட்சிகளுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளது. கட்சி ஆரம்பித்த மூன்றே வருடங்களில் தேர்தலை சந்தித்து, 108 ஆசனங்களைப் பெற்று அரசியல் விமர்சகர்களின் கணிப்பையும் பொய்யாக்கியுள்ளது. 15 சதவீத அளவில் வாக்குகளைப் பெறும் எனப் பலராலும் கூறப்பட்ட நிலையில், த.வெ.க. தனியாகப் போட்டியிட்டு 34.92 சதவீத வாக்குகளை முதற் தேர்தலிலேயே பெற்றமை தமிழக அரசியல் வரலாற்றில் எதிர்பாராத நிகழ்வாகும்.

17-வது சட்டமன்றத் தேர்தலில் திமுக அல்லது அதிமுக வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இரு திராவிட கட்சிகளும் தோல்வி அடைந்தன. கடந்த 2021-ஆம் ஆண்டு தேர்தலில் 133 தொகுதிகளில் போட்டியிட்டு, 37.70 சதவீத வாக்குகளைப் பெற்று, 5 வருடம் ஆட்சிக்கட்டில் இருந்த திமுக இத்தேர்தலில், 59 ஆசனங்களுடன், 24.19 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்று தோல்வியை சந்தித்துள்ளது. திமுக கூட்டணியில் இணைந்திருந்த காங்கிரஸ் உள்ளடக்கிய கூட்டணிக் கட்சிகளும், பெரிய அளவில் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. 21 கட்சிகள் திமுக கூட்டணியில் இருந்தபோதும், 6 கட்சிகள் மட்டுமே, 14 ஆசனங்களில் வெற்றி பெற்றன. இக்கட்சிகள் பெற்ற வாக்கு சதவிகிதம் 7.21 ஆகும். இந்நிலையில் தேர்தல் முடிவுகளுக்கமைய திமுக, தமிழக சட்டமன்றத்தில் முதன்மையான எதிர்க்கட்சியாக செயற்பட தேர்வாகியுள்ளது.

நீண்டகாலம் ஆட்சியில் இருந்த அதிமுக, இத்தேர்தலில் ஆளும் கட்சியாக அல்லது எதிர்க்கட்சியாக வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தேர்தல் முடிவுகள் அக்கட்சிக்கு பெரும் பின்னடைவைத் தந்துள்ளன. கடந்த தேர்தலில் 33.29 சதவீத வாக்குகளுடன் 66 தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்த இக்கட்சி, இம்முறை 21.21 சதவீத வாக்குகளுடன், 47 ஆசனங்களை மட்டுமே பெற்று, மூன்றாம் இடத்திற்கு நகர்த்தப்பட்டுள்ளது. 105 இடங்களில் அதிமுக கூட்டணி மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டதுடன், அதிமுக 16 தொகுதிகளில் வைப்புத் தொகையையும் (deposit) இழந்துள்ளது. இவ்வாறு அதிமுக இத்தேர்தலில் எதிர்ப்பாராத வகையில் பாரம்பரியமாக இருந்த, அவர்களது வாக்குவங்கியில் பெரும் சரிவைச் சந்தித்துள்ளது.

அதிமுக-வை ஆதரித்து வந்த கூட்டணிக் கட்சிகளும், குறிப்பிடத்தக்க வெற்றியை இத்தேர்தலில் பெறவில்லை. குறிப்பாக 2024 மக்களவைத் தேர்தலில் தனித்து போட்டியிட்டு 11.24 சதவீத வாக்குகளைப் பெற்ற, தற்போது மத்தியில் ஆளும் பாஜக, இத்தேர்தலில் ஒரு ஆசனத்துடன் 2.97 வாக்குகளை மட்டுமே பெற்று படுதோல்வியை சந்தித்துள்ளமை கவனிக்கத்தக்க விடயமாகும். கூட்டணி வெற்றிக்கு பெருமளவு உறுதுணையாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட பாட்டாளி மக்கள் கட்சியும், வெறும் 4 இடங்களில் மட்டுமே வெற்றிபெற முடிந்தது.

இத்தேர்தல் முடிவில் கவனிக்கவேண்டிய மற்றொரு அம்சம் சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சியின் தோல்வியாகும். கடந்த தேர்தலில் 8 சதவீத வாக்குகளைப் பெற்ற இக்கட்சி, 234 தொகுதிகளிலும் தனித்து போட்டியிட்டு, இம்முறை 4 சதவீத வாக்குகளையே பெற முடிந்தது. ஒரு தொகுதியில்கூட வெற்றிபெறாதபோதும் தவெக, திமுக, அதிமுக, கட்சிகளுக்கு அடுத்து அதிக வாக்குகளைப் பெற்ற கட்சியாக நாம்தமிழர் கட்சி வந்திருப்பது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. மேலும், நான்காவது பெரிய கட்சியாக 5 ஆசனங்களை பெற்றிருக்கும் காங்கிரஸ் கட்சி, பெற்ற வாக்குகளைவிட, 19 இலட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கும் நாம்தமிழர் கட்சிக்கு பிரதிநிதித்துவம் இல்லாது போனமைக்கு விகிதாசார தேர்தல் முறைமை, இந்தியாவில் இல்லாமையே காரணமாக பார்க்கப்படுகிறது.

தவெக கட்சியின் வெற்றி:

விஜய் அவர்களின் தமிழக வெற்றி கழகம் ஆரம்பித்த 3 வருடங்களில் சந்தித்த முதற் தேர்தலிலேயே, 34 சதவீத வாக்குகளைப்பெற்று ஆட்சியை பிடித்திருப்பது எதிர்ப்பாராத ஒன்று. அதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

திரைத்துறையில் உச்சம் தொட்ட நடிகர் என்பதால், அவரது சினிமா கவர்ச்சியில் ஈர்க்கப்பட்ட சில பெரியவர்கள், ஏராளமான இரசிகர்கள், இளம் ஆண்கள், பெண்கள் விஜய்க்கு வாக்களிக்க ஆர்வமுடன் இருந்துள்ளனர்.

பொதுமக்கள், குறிப்பாக இளைய தலைமுறை, அதிக கவனம் செலுத்தும், சமூக வலைதள பக்கங்களை மிகச் சாதுரியமாக தேர்தல் பிரச்சாரத்திற்கு தவெக பயன்படுத்தியது.

மாற்றம் ஒன்று வேண்டும் என்ற எண்ணம், எதிர்பார்ப்பு, அதிக அளவில் மக்களிடம் இருந்துள்ளதை, தவெக கவனிக்க தவறவில்லை.

ஆட்சிக்கு எதிரான மக்கள் மனநிலையை விஜய் பயன்படுத்திக்கொள்ள தவறவில்லை.

திமுக-வின் வாரிசு அரசியல், தவெக-வின் எதிர் பிரச்சாரத்துக்கு உதவிகரமாக இருந்துள்ளது.

புதிய வாக்காளர்கள் 12 இலட்சத்தை உள்ளடக்கி, 18 வயது முதல் 29 வரை, வயதுள்ள ஒரு கோடி வாக்காளர்கள் இருந்தமை தவெக-விற்கு சாதகமாகியது

திமுக–வின் தோல்வி:

கடந்த 5 வருடங்களாக ஆட்சியில் இருந்த திமுக, கூட்டணி கட்சிகளின் துணையுடன் போட்டியிட்டு 1,54,82,782 வாக்குகளைப் பெற்று தோல்வி கண்டது. இக்கூட்டணிக்கும், தவெக-விற்குமான வாக்கு வித்தியாசம் 17,43,427 ஆகும். திமுக ஆட்சி, இந்தியாவின் ஏனைய மாநிலங்களைவிட தமிழகத்தை, முன்னேற்றத்தில் முதன்மைப்படுத்தி, பல்வேறு சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றியபோதும், தேர்தலில் திமுக தோல்வி அடையலாயிற்று அதற்கு பல காரணங்கள் கூறப்பட்டன.

- விஜய் அவர்களின் வருகையின் பிறகு மாறிய அரசியல் சூழ்நிலையை, திமுக புரிந்து கொள்ளத் தவறியது. குறிப்பாக ஸ்டாலின் அவர்கள் தவெக-வை புறக்கணித்ததுடன், அதன் எழுச்சியை சரியாக கணிக்கவும் தவறிவிட்டார்.

- விஜய்க்கு எதிராக களமாடாமல், அதிமுக-வை நோக்கிய பார்வை மட்டுமே திமுக-விற்கு இருந்தது, தவறான யுக்தி யாகும்.
- தனது மகனான உதயநிதியை, மிக அவசரமாக துணை முதல்வராக்கி, ரொம்பவும் முக்கியத்துவம் கொடுத்ததை மக்கள் இரசிக்கவில்லை.
- அரசின் நலத்திட்டங்களை ஸ்டாலினைத் தவிர மற்றவர் கள், மக்களிடம் கொண்டுசேர்க்க தவறிவிட்டனர்.
- கட்சி தொண்டர்களுடனான உரையாடல் குறைந்து, இடை வெளி அதிகரித்ததை மேலிடம் கவனிக்கத் தவறிவிட்டது.
- புதிய வாக்காளர்கள், மற்றும் இளைஞர்களை ஈர்க்க தவறி யதுடன், சமூக வலைதளங்களை பயன்படுத்தியதில் தொய்வு.
- தொகுதிப் பங்கீட்டில் கூட்டணி கட்சிகளுக்கு முக்கியத் துவம் தராமை, அதனால் வாக்களிப்பில் பரஸ்பரம் வாக்கு கள் இடம் மாறாமை.
- இலஞ்சம், ஊழல் அதிகரித்து வருவதை, அரசு கவனத்தில் கொள்ளத் தவறிவிட்டது.

அதிமுக–வின் தோல்வி:

- கட்சியில் இரண்டாம் கட்ட ஆரம்பகால தலைவர்கள் நீக் கப்பட்டமை. குறிப்பாக முன்னாள் முதல்வர் பன்னீர்செல் வம், திருமதி சசிகலா திரு. செங்கோட்டையன் போன்ற வர்களை எடப்பாடி அவர்கள் அரவணைத்துச் செல்லத் தவறியமை.
- திமுக போன்று அதிமுக-வும் விஜய் அவர்களின் செயல் பாட்டை கணிக்கத் தவறியமை.
- சமூக வலைதள வலிமையைவிட, தனியொருவரின் பிரச் சாரம் (திரு. எடப்பாடி பழனிச்சாமி) பலனளிக்கவில்லை.
- இளையோர்களை அதிகம் ஈர்க்கும் திட்டத்தில் கவனம் செலுத்தாது, சமூக வாக்குகளை அதிகம் நம்பியிருந்தமை.
- கூட்டணி பலம் இல்லாமை.
- பாஜக-வுடனான அதிமுக கூட்டணியை மக்கள் ஏற்காமை. இதனால் வாக்குகள் சிதறலாயின.

இவ்வாறு திமுக, அதிமுக உட்பட அனைத்து கட்சிகளும் வாக்காளர்களின் எண்ணவோட்டத்தை சரியாக கணிக்கத்தவ றியதன் காரணமாக, தவெக வெற்றியைப் பெறலாயிற்று.

முக்கிய நிகழ்வுகள்:

- சாதி, மதம், பணம், மூன்றும் இதுவரை தேர்தல் முடிவு களை தீர்மானித்துவந்த வரலாறு, இத்தேர்தலில் முறியடிக் கப்பட்டுள்ளது.
- கட்சி கட்டமைப்பு இல்லாமல், பிரச்சாரம் செய்யாமல், தகுதியான வேட்பாளர்கள் இல்லாமல், தமிழக தேர்தல் வர லாற்றில் புதிதாக வந்த ஒரு கட்சி (தவெக) வெற்றி பெற் றுள்ளது.
- வேட்பாளர் பெயர், அறிமுகம் இல்லாமலேயே தேர்தலில் வாக்களிக்கும் முறையில் (Voting pattern) மாற்றம் நிகழ்ந் துள்ளது.
- 29 வயதுக்கு உட்பட்ட, ஒரு கோடிக்கு மேற்பட்ட இளைஞர் களில் கணிசமானவர்கள், பார்வையாளர்களாக இருந்து, இம்முறை பங்கேற்பாளர்கள் என்ற நிலைக்கு மாறியுள் ளதை காணமுடிகிறது.
- முதல் தேர்தலிலேயே தவெக, தமிழகத்தில் இருந்த 46 தனித்தொகுதிகளில், (Reserved) 24 தொகுதிகளில் வெற் றியடைந்துள்ளது. அதே போன்று இக்கட்சியில் அதிகமான பெண் உறுப்பினர்களும், 40 வயதுக்கு உட்பட்ட உறுப்பி னர்களும் அதிக அளவில் இடம்பெற்றுள்ளமை கவனம் ஈர்த்த விடயமாகும்.
- தவெக பெரும் வெற்றியை பெற்றபோதும், முழு தமிழகத் தையும் பிரதிநிதித்துவம் வகிக்காது, 8 மாவட்டங்களில் வெற்றி பெறாமை கவனிக்கத்தக்கதாகும்.
- ஒவ்வொரு முறையும் யாருக்கும் வாக்களிக்க விரும்பாதோர் (None of the above) எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், இம்முறை தவெக-வின் வருகையால், அவ் வெண்ணிக்கை குறைந்துள்ளமையைக் காணலாம். 2021-ஆம் ஆண்டு 0.75 சதவீதமாக இருந்த இவ்வெண்ணிக்கை, இத்தேர்தலில் 0.41 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- வழக்கமான மரபுகள் உடைத்தெறியப்பட்ட இத்தேர்தலில், சிறுபான்மை மதத்தைச் சார்ந்த ஒருவர் (கிறிஸ்தவர்) முதல் வராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை தமிழக தேர்தல் வர லாற்றில் முக்கியமான ஒன்றாகும்.
- இதுவரை இருதுருவ அரசியலாக இருந்துவந்த தமிழக அரசியல், தவெக-வின் வருகையுடன், முக்கோண அரசிய லாக புதிய வடிவம் பெற்றுள்ளது.
- SIR எனப்படும் வாக்காளர் சிறப்புத் தீவிர திருத்தம் காரண மாக, 70 இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் தேர்த லுக்கு முன் நீக்கப்பட்டமை, EVM எனப்படும் வாக்கு எண்ணும் இயந்திரத்தின் செயற்பாடு, என்பனவும் தேர்தல் முடிவுகளை தீர்மானித்தன என கூறப்பட்டபோதும், அதனை நிரூபிக்கும் வகையில் எந்த ஆதாரங்களும் கிடைக்கப் பெறவில்லை என்ற கருத்தும் நிலவுகிறது.
- தவெக, போதிய பெரும்பான்மை பெறாத நிலையில், திமுக கூட்டணியில் இடம்பெற்றிருந்த சில கட்சிகள் ஆதரவு அளித்ததன் அடிப்படையில், விஜய் ஆட்சி அமைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு 2026-ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத் தேர்தல் புதியதொரு பரிமாணத்தை தந்துவிட்டுச் சென்றுள்ளது.

jeyasingh@thaiveedu.com

அறைகூவலை ஏற்று
முன்வாருங்கள்.
ஒன்ராறியோ பேரிடர் மீட்புப்
படையுடன் கைகோர்த்திடுங்கள்.
ontario.ca/OntarioCorps பக்கத்தில்
இன்றே பதிவு செய்யுங்கள்
ஒன்ராறியோ அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வெளியிடப்பட்டது
ONTARIO CORPS
CORPS DE L'ONTARIO
Ontario

நாள்: 19, 20
செப்டம்பர், 2026
இடம்: ஸ்கார்புரோ,
டொலரோண்டோ, கனடா
தொல்காப்பிய மன்றம் - கனடா
www.tolkappiyam.ca
2 ஆவது
உலகத் தொல்காப்பிய
ஆராய்ச்சி மாநாடு
கனடா 2026
மாநாட்டுக் கருப்பொருள்
தொல்காப்பியத்தை நாம் ஏன்
கற்க-கற்பிக்க,
கொண்டாட-பரவலாக்க வேண்டும்?

பேராசிரியர் ஜீ.எல். பீரிஸும் தந்தை செல்வா நினைவுப் பேருரையும்

வீரகத்தி தனபாலசிங்கம்

முதுபெரும் தமிழ் அரசியல் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் (தந்தை செல்வா) 49-வது நினைவு தினத்தை முன்னிட்டு இலங்கை தமிழரசுக் கட்சியும் தந்தை செல்வா அறக்கட்டளையும் இணைந்து யாழ் நகரில் தந்தை செல்வா கலையரங்கத்தில் 2026 ஏப்பிரல் 26-ஆம் திகதி நினைவுப் பேருரை நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் பல்வேறு அரசாங்கங்களில் அரசியலமைப்பு விவகார அமைச்சர் மற்றும் வெளியுறவு அமைச்சர் போன்ற முக்கிய பதவிகளை வகித்த பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் 'கூட்டாட்சி (சமஷ்டி) முறையும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கான பாதைகளும்' என்ற தொனிப்பொருளில் அந்த நினைவுப் பேருரையை நிகழ்த்தினார்.

பேராசிரியரை அழைத்தமை குறித்துத் தமிழர்கள் மத்தியில் சில வட்டாரங்களில் இருந்து குறிப்பாக சமூக ஊடகங்கள் வழியாகப் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. நினைவு நிகழ்வில் வரவேற்புரையை நிகழ்த்திய தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன், உள்ளக சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்திக் கூட்டாட்சி முறையின் அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்பதே இன்று சகல தமிழ் அரசியல் கட்சிகளினதும் ஏகோபித்த நிலைப்பாடாக இருக்கும் நிலையில் நினைவுப் பேருரையை நிழத்துவதற்கு அவரைத் தந்தை செல்வா அறக்கட்டளை அழைத்திருப்பது முக்கியமான ஒரு தருணம் என்று குறிப்பிட்டார்.

ஒரு தேசிய இனத்தவர்களான இலங்கைத் தமிழ் மக்கள் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சுயாட்சியைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள் என்ற கருத்தியலை அந்த மக்கள் மத்தியில் முதன் முதலில் விதைத்தவர் தந்தை செல்வா என்று கூறிய சுமந்திரன் நினைவுப் பேருரையை நிகழ்த்துவதற்கு பேராசிரியர் பீரிஸை விடவும் சிறந்த ஒருவர் இருக்க முடியாது என்பதை நியாயப்படுத்துவதற்கு அவரின் இரு முக்கியமான பங்களிப்புகளை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சிகளின்போது பேராசிரியர் பீரிஸ் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அரசியலமைப்புச் சட்ட நிபுணருமான கலாநிதி நீலன் திருச்செல்வத்துடன் சேர்ந்து தயாரித்த முக்கியமான

tg.theeban@gmail.com

ஆவணம் பெருமளவுக்கு கூட்டாட்சி முறையின் அம்சங்களை உள்ளடக்கியதாக இருந்தது என்று கூறிய சுமந்திரன், இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேராசிரியர் தலைமையிலான இலங்கை அரசாங்கத் தூதுக்குழு நடத்திய தொடர்ச்சியான பல பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் செய்யப்பட்ட பிரகடனத்தில் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் கூட்டாட்சி முறையில் அரசியல் தீர்வைக் காண்பதற்கான சாத்தியங்கள் குறித்து ஆராய்வதற்கு இரு தரப்புகளும் இணங்கிக் கொண்டதையும் சுட்டிக்காட்டினார்.

உள்நாட்டுப் போர்க் காலத்தில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வு ஒன்றைக் காணும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சிகள் சகலவற்றுக்குள்ளும் பேராசிரியர் பீரிஸும் நீலனும் இணைந்து தயாரித்த ஆவணமே ஓப்பீட்டளவில் மிகவும் சிறந்ததாக விளங்கியது என்பதில் சந்தேகமில்லை.

அந்த நேரத்தில் அந்த முன்மொழிவுகள் தமிழ் மக்கள் மத்தியில் உகந்த முறையில் எடுத்துச் சொல்லப்படுவதற்கு வாய்ப்பு இருந்திருக்குமானால், அவர்களின் பரந்தளவிலான ஆதரவை நிச்சயமாக அது பெற்றிருக்கும். நீலனைப் போன்ற ஒருவரை தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலமாக படுகொலை செய்வதற்கு விடுதலைப் புலிகள் தீர்மானித்ததில் இருந்து அந்த ஆவணம் தங்களது நிகழ்ச்சித் திட்டத்துக்கு எந்தளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது என அவர்கள் புரிந்து கொண்டார்கள் என்பதை உணரக்கூடியதாக இருக்கிறது.

அரசாங்கம் கொண்டுவருகின்ற அரசியல் தீர்வு யோசனைகளை எதிர்க்கட்சி எதிர்க்கின்றதும் அரசாங்கங்கள் அரசியல் துணிவாற்றலை வெளிப்படுத்தாமல் அடிபணிந்து போவதுமான தென்னிலங்கையின் பாரம்பரியமான அரசியல் கலாசாரத்துக்கு சந்திரிகா அரசாங்கத்தின் ஆவணமும் பலியானது. அந்த ஆவணம் குறித்தும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளின்போது செய்யப்பட்ட ஒஸ்லோ பிரகடனம் குறித்தும் பேராசிரியர் பீரிஸ் தனதுரையில் சுருக்கமாக விளக்கிக் கூறியிருந்தார். இன்றைய இளைய தலைமுறையினர் அவற்றைப் பற்றி அறிய வேண்டியது அவசியம் என்பதால் பொருத்தமான பகுதிகள் மீள்பிரசுரம் செய்யப்படுகின்றன.

‘கூட்டாட்சி (Federalism) என்பது ஒரு தத்துவம் என்ற வகையில் பிளவுகளை ஏற்படுத்துவதை விடவும் பரந்த ஒரு பரிமாணத்தையே குறித்து நிற்கிறது. 1995 - 1997 காலப்பகுதியில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட மூன்று அரசியலமைப்பு முன்மொழிவுகளில் இது தெளிவாக வெளிப்பட்டது. முறையான ஓர் அரசியலமைப்புத் திட்டத்தில், மத்திய அரசாங்கத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையிலான அதிகாரப் பகிர்வு எல்லையை நிர்ணயிப்பதில் இந்த முன்மொழிவுகள் அந்தப் பரிமாணத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரை ஊசலாடின.

‘அரசியலமைப்பு விவகாரங்கள், இன விவகாரங்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராக இருந்த என்னுடன் இணைந்து 1995, 1996, 1997 ஆண்டுகளின் முன்மொழிவுகளை உருவாக்கிய எனது மதிப்பிற்குரிய நண்பர் கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களின் மரபுக்கு இந்த இடத்தில் நான் அஞ்சலி செலுத்த விரும்புகிறேன். கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன உட்பட பலரின் ஆதரவும் இதற்கு இருந்தது. நீலனும் நானும் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சக மாணவர்களாக இருந்தோம். நான் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ரோட்ஸ் புலமைப்பரிசில் (Rhodes Scholarship) பெற்ற போது, அவர் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திற்கு சென்றார். நாங்கள் இருவரும் 1994 ஆகஸ்ட் மாதம் ஒன்றாகவே இலங்கைப் பாராளுமன்றத்திற்குள் நுழைந்தோம் என்பது இன்னொரு தற்செயலான நிகழ்வாகும்.’

தமிழ் மக்களின் நலன்களையும் அபிலாசைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏகபோக உரிமை தமக்கே உண்டு என்ற விடுதலைப் புலிகளின் உரிமை கோரலுக்கு நீலன் தடையாக இருந்ததால், அவர் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார். அவர் உயிரோடு இருந்திருந்தால் எதிர்காலம் ஒருவேளை வேறு விதமாக அமைந்திருக்கக்கூடும்.

1995 அரசியலமைப்பு முன்மொழிவுகள் கூட்டாட்சியின் வலுவான அம்சங்களைக் கொண்டிருந்தன, உண்மையில் அதற்கும் மேலாகச் சென்றன என்றும் கூறலாம். முன்மொழிவுகளின் சாரமாக அமைந்த பிராந்திய சபைகளுக்கு (Regional Councils), ஒதுக்கப்பட்ட விடயங்களில் நிறைவேற்று, சட்டவாக்க மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. முக்கியமான சகல துறைகளிலும் இந்த அதிகாரங்கள் மத்திய அரசின் தலையீட்டிலிருந்து பாதுகாக்கப்படவிருந்தன.

நிதி தொடர்பாக, பிராந்திய சபைகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம், சர்வதேச கடன் பெறுதல், வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல், சர்வதேச மானியங்களையும் அபிவிருத்தி உதவிகளையும் பெறுவதற்கான அதிகாரம் ஆகியவை வழங்கப்படவிருந்தன. சட்டம், ஒழுங்கு மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் போன்ற முக்கியமான துறையில், முதலமைச்சரால் நியமிக்கப்படும் பிராந்திய பொலிஸ் ஆணையாளரின் தலைமையிலான பிராந்திய பொலிஸ் சேவைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிலம் என்பது தெளிவாகப் பகிரப்பட வேண்டிய ஒரு விடயமாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. மத்திய அரசாங்கத்தின் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு சில இடங்களைத் தவிர, ஒரு பிராந்தியத்திற்குள் உள்ள அரச நிலங்கள் அனைத்தும் அந்தப் பிராந்திய சபையிடமே ஒப்படைக்கப்பட விருந்தன. இலங்கையின் முழுமையான அரசியல் பரிணாம வளர்ச்சியில், கூட்டாட்சி கட்டமைப்பை நோக்கிய மிகவும் வலுவான நகர்வை இந்த ஆவணம் பிரதிபலித்தது.

1995 முன்மொழிவுகள் 1996-ஆம் ஆண்டில் விரிவான ஒரு வரைவின் மூலமாக மாற்றியமைக்கப்பட்டது ஒரு பின்னடைவான வளர்ச்சியாக அமைந்தது. ஜனாதிபதிக்கு அதீத அதிகாரங்கள் வழங்கப்பட்டமையே அதன் அடிப்படைப் பலவீனமாகும். மத்திய அரசுக்கும் பிராந்தியங்களுக்கும் இடையிலான அதிகார சமநிலையை அது அடிப்படை ரீதியாக மாற்றியமைத்ததுடன் பிராந்தியங்களின் அதிகாரங்கள் ஜனாதிபதியின் தன்னிச்சையான தீர்மானங்களுக்குப் பலியாகும் நிலைக்கு வழிவகுப்பதாக அமைந்தது.

அரசியலமைப்பு ஏற்பாடுகளினால் பாதுகாக்கப்பட்ட பிராந்தியங்களின் முழுமையான அதிகாரங்கள் மத்திய அரசின் நிறைவேற்று நடவடிக்கையினால் இரத்துச் செய்யப்படும் போது, அதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடும் வாய்ப்புக்கூட பிராந்தியங்களுக்கு வழங்கப்படவில்லை. இது நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமையவில்லை.

இதை திருத்தியமைக்கும் ஒரு நடவடிக்கையாக 1997-ஆம் ஆண்டில் இன்னொரு முன்மொழிவுத் தொகுப்பு வெளியிடப் பட்டது. அதிகாரப் பகிர்வு தொடர்பான அரசியலமைப்பின் அத் தியாயத்தின் உள்ளடக்கத்தினதும் மத்திய அரசுக்கும் பிராந் தியங்களுக்கும் அதிகாரப் பகிர்வைக் கையாளும் இரு அட்ட வணைகளினதும் உள்ளடக்கங்களில் திருத்தங்களைக் கொண்டு வருவதைத் தடுக்கும் 'வீட்டோ' அதிகாரத்தைப் பிராந்தியங்க ளுக்கு வழங்கும் ஏற்பாடு அதில் உள்ளடக்கப்பட்டது.

இது பாராளுமன்றத்தின் அதிகாரங்களைப் பாரியளவில் குறைப்பதாக அமைந்ததுடன், ஒரு தீவிர நிலையிலிருந்து மற்றொரு தீவிர நிலைக்குச் செல்வதாக அமைந்தது. தன்னிச் சையான நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பு மத்தியிலி ருந்து பிராந்தியங்களுக்கு நகர்த்தப்பட்டது. இந்த முன்மொ ழிவுகள் அவற்றுக்கு உள்ளேயே அழிவுக்கான விதைகளைக் கொண்டிருப்பதாகக் கருதப்பட்டதில் ஆச்சரியமில்லை.

2000 ஆகஸ்ட் 3-ஆம் திகதி அரசியலமைப்பு விவகார அமைச் சர் என்ற முறையில் நான் ஜனாதிபதி குமாரதுங்க சார்பில் சமர்ப்பித்த 'அரசியலமைப்புச் சட்டமூலம்' (Constitution Bill) அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கான விரிவானதும் முழுமை யானதுமான முயற்சியாக அமைந்தது. அதில் 'கூட்டாட்சி' என்ற சொல் நேரடியாகப் பயன்படுத்தப்படாவிட்டாலும், அதன் சாராம்சம் உள்வாங்கப்பட்டிருந்தது. 'இலங்கைக் குடியரசு மத்திய மற்றும் பிராந்திய நிறுவனங்களைக் கொண்டது' என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. மக்களின் சட்டவாக்க அதிகா ரம் பாராளுமன்றத்தினாலும் பிராந்திய சபைகளினாலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியால் மட்டுமல்லாது முதலமைச்சர்கள் மற்றும் பிராந்திய அமைச்சரவைகளின் ஆலோசனையின் பேரில் செயற்படும் ஆளுநர்களாலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது.

பிராந்திய ஆளுநர்கள் 'பிரதமருடனான கலந்தாலோசனை மற்றும் பிராந்திய முதலமைச்சரின் உடன்பாட்டுடன்' ஜனாதி பதியால் நியமிக்கப்படவிருந்தனர். அதிகாரங்கள் ஒதுக்கப் பட்ட விடயங்களில் பிராந்தியங்களுக்கான சட்டவாக்க அதிகா ரம் தெளிவாக குறிப்பிடப்பட்டது.

நிலம் மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் போன்ற சர்ச்சைக் குரிய விடயங்களில் எந்தவித ஒளிவுமறைவுமற்ற அணுகு முறை கடைப்பிடிக்கப்பட்டது. நிலம் தொடர்பாக, 'ஒவ்வொரு பிராந்தியமும் அதற்குள் உள்ள சகல அரச நிலங்களையும் சுவீகரித்து பிராந்தியப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த நோக்கங்களுக்காக பிராந்திய நிர்வாகத்தின் வசம் வைத்தி ருக்க முடியும்' என்றும் பொலிஸ் அதிகாரம் குறித்து, 'ஒவ் வொரு பிராந்தியத்திற்கும் ஒரு பிராந்திய பொலிஸ் சேவை இருக்கும், அதன் ஆணையாளர் பிராந்திய அமைச்சரவை யின் உடன்பாட்டுடன் பிராந்திய பொலிஸ் ஆணைக்குழு வினால் நியமிக்கப்படுவார்' என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அதேபோன்று, நிதி விடயத்தில் பிராந்தியத் திரட்டு நிதியத் தின் (Consolidated Fund of the region) ஊடாக வழங்கப் பட்ட அதிகாரத்தின் அளவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இந்த முன்மொழிவுகளை ஓர் அரசியல் தீர்வாக நடைமுறைப் படுத்துவதற்கான அதன் கடுமையான எதிர்ப்பை விடுதலைப் புலிகள் இயக்கம் கலாநிதி நீலன் திருச்செல்வத்தைக் கொடூரப் படுகொலை செய்ததன் மூலம் வெளிப்படுத்தியது. இது நீலன் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்த பாராளுமன் றத்தின் பிரதான கட்சிகளிலொன்றான தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் (TULF) பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

பிரதான எதிர்க்கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி 1999 டிசம்பர் ஜனாதிபதித் தேர்தலில் குறுகிய வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்த பிறகு, ஒத்துழைக்க விரும்பாத மனப்பான் மையைக் கொண்டிருந்ததால் இந்தப் பிரச்சினைகள் மேலும் சிக்கலாகின. இது தேசத்தின் துரதிர்ஷ்டமாகும். ஒரு தேசிய முயற்சியை விடவும் 'எதிர்க்கட்சி அரசியல் கலாசாரம்' மேலோங்கியிருந்ததால், பாராளுமன்ற விவாதத்தின் போதே அரசாங்கம் அந்தச் சட்டமூலத்தைத் திரும்பப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டது.'

ஒஸ்லோ பிரகடனம்:

'சமாதானப் பேச்சுவார்த்தைகளின் ஒரு தீர்க்கமான கட்டத் தில், விடுதலைப் புலிகள் இயக்கம் வெளியக சுயநிர்ணய உரிமையை (External self-determination) வேண்டுமென்றே கைவிட்டனர் என்ற கருத்தியல் முழுமையான ஒரு மாயை யாகும். நோர்வே தலைநகரில் மூன்றாம் கட்டப் பேச்சுவார்த் தையின் போது உருவான 'ஓஸ்லோ பிரகடனம்' (Oslo Declaration) என்பதைச் சுற்றியே இந்தத் கட்டுக்கதை நிலவியது.

இந்த அமர்வின் முடிவில், நோர்வே அனுசரணையாளர்களி னால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில், 'ஒருங் கிணைந்த இலங்கைக்குள் கூட்டாட்சி கட்டமைப்பின் அடிப்ப டையில், தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ் விடப் பகுதிகளில், உள்ளக சுயநிர்ணய உரிமைத் (Internal self-determination) தத்துவத்தின் கீழ் ஒரு தீர்வைக் கண்ட றிய இரு தரப்பினரும் இணங்கிக் கொண்டனர்' என்று குறிப்பி டப்பட்டது.

இருப்பினும், 'உள்ளக சுயநிர்ணய உரிமை' என்பது குறித்து விடுதலை புலிகளின் புரிதல் பின்வருமாறு தெளிவாகக் குறிப் பிடப்பட்டிருந்தது; 'எமது தாயகத்தில் எமது உள்ளக சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில், கணிசமான பிராந்திய சுயாட்சி மற்றும் சுயராச்சியத்தை (Self-government) வழங் கக்கூடிய ஓர் அரசியல் கட்டமைப்பைச் சாதகமாகப் பரிசீ லிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.'

ஆனால், இந்த நிலைப்பாட்டுடன் ஓர் எச்சரிக்கையும் எப் போதும் இணைந்தே இருந்தது. மிக அழுத்தமாக ஒரு நிபந் தனை சேர்க்கப்பட்டது. 'உள்ளக சுயநிர்ணய உரிமையின் இந்த அம்சம் தடுக்கப்பட்டு மறுக்கப்படுமானால், மற்றும் பிராந்திய சுயநிர்ணயக் கோரிக்கை (Self-rule) நிராகரிக்கப்ப டுமானால், பிரிந்து சென்று ஒரு சுதந்திர அரசை உருவாக்கு வதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை.'

எனவே, விடுதலைப் புலிகள் வெளியக சுயநிர்ணய உரிமை (தனிநாடு) என்ற தெரிவைத் திறந்தே வைத்திருந்தனர். 1970-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் 'நாடுகளுக்கிடை யிலான நட்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்புக் குறித்த சர்வதேச சட்டக் கோட்பாடுகள்' பற்றிய பிரகடனம், 1998-ஆம் ஆண்டு கியூபெக் பிரிவினை வழக்கில் (Quebec Secession case) கனடா உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஆகியவற்றி லிருந்தே தங்களது நிலைப்பாட்டிற்கான ஆதாரத்தைப் பெறு வதாக அவர்கள் வாதிட்டனர்.



விடுதலைப் புலிகளின் இந்த உறுதியான நிலைப்பாடு, அவர்கள் முன்மொழிந்த 'இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை' யிலும் அதற்கான விரிவான அதிகார வரம்புகள் குறித்த திட்டத்திலும் துல்லியமாக வெளிப்படுத்தப்பட்டது: 'மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மேம்பாடு, தற்போதுள்ள சேவைகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துதல், வரிகள் மற்றும் வரிவிதிப்புகள் உட்பட வருவாய் திரட்டுதல், சட்டம் ஒழுங்கு மற்றும் நிலம் தொடர்பான அதிகாரங்கள் உட்பட வடக்கு-கிழக்கின் நிர்வாகத்திற்கான முழுமையான அதிகாரத்தை இடைக்கால தன்னாட்சி அதிகார சபை கொண்டிருக்கும்.'

மேலும், 'இலங்கை அரசாங்கத்தினால் வடக்கு-கிழக்கிற்கு எனப் பயன்படுத்தப்படும் பிராந்திய நிர்வாகம் தொடர்பான அனைத்து அதிகாரங்களும் செயற்பாடுகளும் இதில் உள்ளடங்கும்' என்றும் தெளிவாகக் கூறப்பட்டது.

இது, பெயரளவில் இல்லாவிட்டாலும், நடைமுறையில் ஒரு தனி நாட்டுக்கான வரைபடமாகவே இருந்தது. செல்வநாயகம் அவர்கள் தனது அரசியல் முதிர்ச்சியின் அடிப்படையில் எமது நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார சூழலில் சாத்தியமானது எனக் கருதிய தீர்வுக்கு அப்பாற்பட்டதாக இது அமைந்திருந்தது.

மாகாணசபை குறித்து ஒரு வார்த்தை இல்லை:

தனதுரையில் 1931 டொனமூர் அரசியலமைப்பு, 1848 சோல்பரி அரசியலமைப்பு, 1957 பண்டா - செல்வா ஒப்பந்தம், 1965 டட்லி - செல்வா ஒப்பந்தம், 1972 முலாவது குடியரசு அரசியலமைப்பு, 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம், 1981 மாவட்ட சபைகள் சட்டம், 1983 கறுப்பு ஜூலை, 1991 மங்கள முனசிங்க தெரிவுக்குழு, நோர்வே அனுசரணையுடனான சமாதான முயற்சிகள் (2002 - 2006), 2004 சுனாமி நிவாரணக் கட்டமைப்பு என்று வரிசையாக சகல முயற்சிகளையும் பட்டியலிட்ட பேராசிரியர் பீரிஸ், 1987 இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கை, அரசியலமைப்புக்கான 13-வது திருத்தம் மற்றும் மாகாணசபைகள் குறித்து எதையும் குறிப்பிடவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உள்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சகல முயற்சிகளுமே தோல்வி கண்ட நிலையில், இந்தியாவின் நேரடித் தலையீட்டையடுத்து கொண்டுவரப்பட்ட மாகாணசபைகள் முறைதான் (கடந்த பத்து வருடங்களாக தேர்தல்கள் நடத்தப்படாவிட்டாலும் கூட) கடந்த 38 வருடங்களாக நடைமுறையில் இருந்து வருகிறது. அந்த சபைகளை அமைப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட 13-வது திருத்தம் இன்னமும் அரசியலமைப்பில் இருக்கிறது.

மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டும் என்று தென்னிலங்கையில் எதிரணி கட்சிகளுடன் சேர்ந்து குரல் கொடுத்து வரும் பேராசிரியர் அது குறித்து யாழ்ப்பாணத்தில் எதையும் குறிப்பிடாமல் விட்டது திட்டமிட்ட ஒரு செயல் என்ற சந்தேகம் எழுகிறது.

நினைவுப் பேருரையை நிகழ்த்துவதற்கு முதல் நாள் யாழ்ப்பாணத்தில் சுமந்திரனின் இல்லத்தில் தமிழரசு கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் பீரிஸ் மாகாணசபைத் தேர்தல்கள் குறித்து ஆராய்ந்தார்.

அத்துடன் மாகாணசபை தேர்தல்களை தாமதமின்றி நடத்த வேண்டும் என்று தென்னிலங்கையில் இடையறாது குரல் கொடுத்துவரும் முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜெயசூரியவுடன் சேர்ந்து அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுப்பதற்கான மக்கள் இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற யோசனையையும் பேராசிரியர் அந்தச் சந்திப்பில் வலயுறுத்தியதாகவும் நம்பகமாகத் தெரியவருகிறது.

13-வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற பெரும்பாலான தமிழ்க் கட்சிகளின் கோரிக்கையுடன் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ள விரும்பாத காரணத்தினால்தான் அந்த விடயங்கள் குறித்துப் பேசுவதைத் திட்டமிட்டு அவர் தவிர்த்திருக்கிறார் போலும். மாகாணசபைத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று தென்னிலங்கையில் எதிரணி கட்சிகள் கோருவது 2025 உள்ளூராட்சி தேர்தல்களில் சந்தித்ததை விடவும் மோசமான வாக்கு வீழ்ச்சிக்கு தேசிய மக்கள் சக்தி முகங்கொடுக்க வேண்டிவரும் என்ற எதிர்பார்ப்பிலேயே அன்றி மாகாணங்களின் நிர்வாகங்கள் மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற ஜனநாயக அக்கறையில் அல்ல.

'பேராசிரியர் நிகழ்த்தப் போகும் தந்தை செல்வா நினைவுப் பேருரை அந்த மண்டபத்திற்குள் மாத்திரமல்ல, வெளியிலும் நீண்ட காலத்துக்கு எதிரொலிக்கும்' என்று சுமந்திரன் வரவேற்புரையில் கூறினார். பீரிஸின் உரை வெளியில் எதிரொலிக்கிறதோ இல்லையோ மாகாண சபைகள் தொடர்பிலான அவரின் மௌனம் மாத்திரம் தெளிவாகக் கேட்டது.

Thanabalasingham.V@thaiveedu.com

என். சரவணன்

1966 ரதனசார தேரர் முதலாவது மொழிப்போராட்டத் தியாகியா ?

2



ரதனசார தேரர்: ஒரு தியாகியான விதம்

தம்பராவே ரதனசார தேரர் ஒரு பல்கலைக்கழக மாணவர் என ஆரம்பத்தில் செய்திகள் பரப்பப்பட்டன. ஆனால், அவர் ஒரு சாதாரண பிக்கு என்பது பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது. அவரது மரணத்தை எதிர்க்கட்சிகள் ஒரு மிகப்பாரிய அரசியல் ஆயுதமாக மாற்றின. 'சிங்கள மொழிக்காக உயிர்நீத்த முதல் பிக்கு' என்ற பிம்பம் அவருக்கு வழங்கப்பட்டது.

மறுபுறம், இந்த மரணமானது தமிழ் மொழி விசேட ஏற்பாடுகளுக்கு எதிரான போராட்டத்தை ஒரு 'புனிதப் போராக' மாற்றியது. அரசாங்கம் அமைத்த விசாரணைக் குழுவின் அறிக்கையின்படி, பொலிஸார் தற்காப்புக்காகவே சுட்டனர் எனக் கூறப்பட்ட போதிலும், தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை இச்சம்பவத்தால் ஆட்டம் கண்டது. ஜனவரி 8 நிகழ்வானது இலங்கையில் 'தெருவோர ஜனநாயகம்' எவ்வாறு நாடாளுமன்ற ஜனநாயகத்தை அச்சுறுத்தியது என்பதற்கான சான்றாகும்.

போராட்டக்காரர்கள் மத்தியில் 'ஏஜெண்ட் புரொவகேட்டர்ஸ்' எனப்படும் அரசாங்கத்தின் ஆட்கள் ஊடுருவி வன்முறையைத் தூண்டினார்களா ? அல்லது எதிர்க்கட்சிகள் ஒரு தியாகியை உருவாக்கத் திட்டமிட்டே பொலிஸாரைச் சீண்டினார்களா ? என்பது இன்றும் விவாதத்திற்குரியது.

இந்தத் துப்பாக்கிச் சூடு, சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான இடைவெளியை இன்னும் அதிகரித்தது. தமிழர்களுக்கு உரிமை வழங்க முற்படும் எந்தவொரு சிங்களத் தலைவரும் 'துரோகி' என முத்திரை குத்தப்படுவார் என்ற அரசியல் கலாசாரம் இங்கேயே வேரூன்றியது. இந்த வன்முறைகளுக்கு மத்தியிலும், நாடாளுமன்றத்தில் தமிழ் மொழிப் பிரமாணங்கள் பற்றிய சட்டம் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

1966 ஜனவரி 8-ஆம் திகதி கொள்ளுப்பிட்டியில் சிந்தப்பட்ட இரத்தம், இலங்கையின் அரசியல் கலாசாரத்தில் ஒரு பாரிய வடுவை ஏற்படுத்தியது. தம்பராவே ரதனசார தேரரின் மரணத்தைத் தொடர்ந்து, டட்லி சேனாநாயக்க தலைமையிலான தேசிய அரசாங்கம் தற்காப்பு நிலையில் இருந்து ஆக்ரோஷமான அடக்கு முறை நிலைக்கு மாறியது. இச்சம்பவம் வெறும் ஒரு பொலிஸ் துப்பாக்கிச் சூடாக மட்டும் அமையாது, அரச இயந்திரத்திற்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் ஒரு நீண்டகாலப் பகையை உருவாக்கியதுடன், பேரினவாதப் பிரச்சாரங்களுக்குப் புதியதொரு உயிரோட்டத்தையும் வழங்கியது.

துப்பாக்கிச் சூடு நடந்த சில மணிநேரங்களிலேயே, ஜனவரி 8-ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு நாடு முழுவதும் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில் சுதந்திர இலங்கையில் மிகக் கடுமையான முறையில் அமுல்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டங்களில் ஒன்றாக அது கருதப்பட்டது. கொழும்பு மாநகரம் இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது. வீதி ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டதுடன், எதிர்க்கட்சிக் கூட்டங்களை நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

அரசாங்கம் இதனை எதிர் கொள்வதற்காக முதலில் 'பத்திரிகைத் தணிக்கை'யை அமுல்படுத்தியது. எதிர்க்கட்சிகளின் பிரச்சாரக் குரல்களை ஒடுக்குவதற்காக 'லேக் ஹவுஸ்' (Lake House) உள்ளிட்ட பிரதான ஊடக நிறுவனங்கள் தணிக்கை அதிகாரியின் நேரடி மேற்பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டன. இதன் விளைவாக, ரதனசார தேரரின் மரணம் தொடர்பான செய்திகளும் எதிர்க்கட்சித் தலைவர்களின் அறிக்கைகளும் மக்கள் மத்தியில் சென்றடைவது தடுக்கப்பட்டன. எஞ்சிய செய்திகள் கறுப்பு மையால் பூசப்பட்ட நிலையி லேயே பத்திரிகைகளில் வெளிவந்தன.

prasadbatti@gmail.com

ஜனவரி 9-ஆம் திகதி பீட்டர் கெனமன் ஆற்றிய உரையில் 'ஒரு பௌத்த பிக்குவும், பொதுமக்களில் இருவரும் கொல்லப் பட்டிருப்பதாகவும் 55 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் மிகக் கடுமையான நடவடிக்கை அரச ஊழியர் களுக்கு எதிராக அமைந்தது. ஜனவரி 8-ஆம் திகதி வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்ட அல்லது அதற்கு ஆதரவு வழங்கிய சுமார் 40,000 அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன.

பல தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் தீவிரமான செயற்பாட்டாளர்கள் உடனடியாகப் பணியிலிருந்து நீக்கப் பட்டனர். மேலும் வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்ட சாதாரண ஊழியர்களுக்குப் பதவி உயர்வுகள் மறுக்கப் பட்டதுடன், அவர்கள் தூர இடங்களுக்குப் பழிவாங்கும் நோக்கில் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

முக்கியமாக, இலங்கை போக்குவரத்துச் சபை (CTB), தபால் மற்றும் தந்தித் துறை, அரச எழுதுவினைஞர் சங்கம் ஆகியவற்றின் சிங்கள உறுப்பினர்களே இதில் அதிகம் பாதிக்கப்பட்டனர். தமிழ் மொழிக்கு உரிமை வழங்குவதை எதிர்த்துப் போராடிய சிங்களத் தொழிலாளர்கள், ஒரு சிங்களத் தலைவரின் அரசாங்கத்தாலேயே ஒடுக்கப் பட்டனர். இது சிங்களத் தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் டட்லி சேனாநாயக்க மீது தீராத வெறுப்பை விதைத்தது.

'மகா சங்காரய': பேரினவாதப் புனைவின் உருவாக்கம்:

அரசாங்கம் சட்ட ரீதியான ஒடுக்குமுறையை ஏவிய அதேவேளை, எதிர்க்கட்சிகள் உளவியல் ரீதியான தாக்குதலைத் தொடங்கின. இந்த இடத்தில்தான் 'மகா சங்காரய' எனும் தலைப்பிலான அந்தப் புகழ்பெற்ற சிறுபிரசுரம் முக்கியத்துவம் பெறுகிறது. அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல, பொலிஸார் 'கொலைகாரர் களாக' சித்திரிக்கப்பட்டனர்.

ரதனசார தேரரின் மரணம் என்பது தமிழ் மொழிக்கு உரிமை வழங்கப்படுவதைத் தடுத்த ஒரு 'புனிதத் தியாகமாக' உருவகப்படுத்தப்பட்டது. இந்தப் பிரசுரங்கள் நாடெங்கும் இரகசியமாக விநியோகிக்கப்பட்டன. 'ஒரு பிக்குவின் இரத்தம் கறைபடிந்த நாடாளுமன்றம் சிங்கள மக்களுக்குத் தேவையா?' என்ற கேள்வி பௌத்த கிராமங்களுக்குள் கொண்டு செல்லப்பட்டது. பௌத்த பீடங்கள் அரசியலில் நேரடியாகத் தலையிட்டு, நாடாளுமன்ற ஜனநாயகத்தை வீதி வன்முறை மூலம் கட்டுப்படுத்த முடியும் என்ற முன்னுதாரணத்தை இச்சம்பவமே உறுதி செய்தது.

மறுபுறம், அரசாங்கம் தனது செயல்களை நியாயப் படுத்துவதற்கு 'சட்டத்தின் ஆட்சி' என்ற தர்க்கத்தைப் பயன்படுத்தியது. 1966 ஜனவரி 16-ஆம் திகதி வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில், 'அரசாங்கம் கும்பல் ஆட்சிக்கு அடிபணியாது; மக்களின் ஜனநாயக உரிமை களைப் பாதுகாக்கவே வன்முறையாளர்கள் ஒடுக்கப் பட்டனர்' எனக் குறிப்பிட்டது.

பிரதமர் டட்லி சேனாநாயக்க நாடாளுமன்றத்தில் பேசுகை யில், 'எதிர்க்கட்சிகள் அப்பாவிப் பிக்குக்களை முன்னிறுத்தித் தமது அரசியல் இலாபத்திற்காகப் பலிகொடுத்து விட்டன' என்று குற்றம் சாட்டினார். எனினும், ஒரு பிக்குவின் மரணம் என்பது சிங்கள பௌத்த சமூகத்தில் ஏற்படுத்திய அதிர்வை இந்தத் தர்க்க ரீதியான விளக்கங்களால் ஈடு செய்ய முடியவில்லை.

மறுபுறம் 1966-இன் இந்த அடக்குமுறையானது டட்லி அரசாங்கத்தின் இறுதி வீழ்ச்சிக்கு அடிகோலியது எனலாம். ஒருபுறம் தமிழ் மக்கள் டட்லி-செல்வா ஒப்பந்தத்தால் ஓரளவு நம்பிக்கை கொண்டிருந்தாலும், தென்னிலங்கையில் நிலவிய கசப்புணர்வு அந்த நம்பிக்கையைச் சிதைத்தது.

ரதனசார தேரர் சம்பவம் 1970 பொதுத் தேர்தலில் மிக விரிவாகப் பயன்படுத்தப்பட்டது. 'ஐக்கிய தேசியக் கட்சி பிக்குக்களைச் சுட்டுக் கொல்லும் கட்சி' என்ற பிரச்சாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாரிய வெற்றிக்கு வழி வகுத்தது. அவர் ஒரு அரசியல்மயப்படுத்தப்பட்ட தியாகி யானார்.

விசாரணைக் குழுவின் அறிக்கை (Sessional Paper V of 1966) பொலிஸாரைப் பாதுகாக்கிற ஒன்றாக இருந்தது. 1966-இல் அரசாங்கம் எடுத்த இந்த 'கடும்போக்கு' நிலைப்பாடு, உண்மையில் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்டதல்ல; மாறாகத் தனது அதிகாரத் தக்கவைப்பிற்காக எடுக்கப்பட்ட ஒரு சந்தர்ப்பவாத நகர்வே ஆகும்.

கொள்ளுப்பிட்டி வீதிகளில் கண்ணீர்ப்புகையும் துப்பாக்கி ரவைகளும் ஒரு பிக்குவின் உயிரைப் பறித்துக் கொண்டி ருந்த வேளையில், அதன் அதிர்வுகள் நாட்டின் அதியுயர் சபையான நாடாளுமன்றத்தை ஒரு போர்க்களமாக மாற்றி யிருந்தன. 1966 ஜனவரி 8 மற்றும் 9-ஆம் திகதிகளில் நடைபெற்ற நாடாளுமன்ற விவாதங்கள், இலங்கையின் இனவாத அரசியலின் உச்சக்கட்டத்தையும், தனிநபர் அரசியல் ஆளுமைகள் எவ்வாறு உணர்ச்சிகரமான பிம்பங்களைக் கட்டமைத்தனர் என்பதையும் நிரூபித்தன. ஹபராதுவ தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பிரின்ஸ் குணசேகரவின் ஆக்ரோஷமான உரையும், செயல்களும் பெரிய அளவில் பேசுபொருளானது.

1966 ஜனவரி 8-ஆம் திகதி காலை, பிரதமர் டட்லி சேனாநாயக்க 'தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) பிரமாணங்களை' சபையில் சமர்ப்பித்தார். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கருப்புப் பட்டி அணிந்து சபைக்கு வந்திருந்ததுடன், ஆரம்பத்திலிருந்தே சபையின் நடவடிக்கை களுக்கு இடையூறு விளைவித்தனர். வீதியில் பிக்குகள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாகச் செய்திகள் வரத் தொடங்கியதும், சபை கட்டுக்கடங்காத நிலைக்குச் சென்றது.

இந்தத் தருணத்தில்தான், ஹபராதுவ தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான பிரின்ஸ் குணசேகரவின் செயற்பாடு வரலாற்றில் ஒரு கறைபடிந்த அல்லது 'தீவிரமான'

பதிவாக மாறியது. அவர் சிங்கள தேசியவாதப் போக்குடையவராகவும், அக்காலகட்டத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் கூட்டணிக்குத் துணை நின்றவராகவும் இருந்தார். சபை நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்தக் கோரி எதிர்க் கட்சிகள் கூச்சலிட்டன.

சபையில் இரத்தம் தோய்ந்த காவியுடை:

நாடாளுமன்ற வரலாற்றில் மிகவும் உணர்ச்சிகரமான மற்றும் சர்ச்சைக்குரிய ஒரு காட்சி ஜனவரி 9-ஆம் திகதி அரங்கேறியது. முந்தைய நாள் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து, பின்னர் மரணமடைந்த தம்பராவே ரதனசார தேரரின் இரத்தம் தோய்ந்திருந்த காவியுடை ஒன்றின் துண்டினை பிரின்ஸ் குணசேகர சபைக்குள் கொண்டு வந்தார்.

அவர் அந்த இரத்தக் கறை படிந்த துணியை ஏனைய உறுப்பினர்களுக்கும் சபாநாயகருக்கும் தெரியும் வகையில் உயர்த்திப் பிடித்து முழங்கினார்: 'இதோ பாருங்கள்! ஒரு பௌத்த பிக்குவின் இரத்தம்! சிங்கள மொழிக்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்த ஒரு புனிதரின் இரத்தம் உங்கள் கைகளில் படிந்திருக்கிறது. இந்த அரசாங்கம் தமிழர்களுக்கு அடிபணிந்து ஒரு பிக்குவைக் கொன்று விட்டது.' இந்தச் செயல் சபையில் பெரும் கூச்சலையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியது. பிரின்ஸ் குணசேகரவின் இந்தச் செயல் ஒரு 'அரசியல் நாடகமாக' தெரிந்தாலும், அது தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கம் அளவிட முடியாதது. ஒரு தியாகியின் இரத்தத்தை நேரடியாகச் சபைக்குக் கொண்டு வந்தமை, டட்லி சேனநாயக்கவின் அரசாங்கத்தை 'சிங்கள எதிர்ப்பு' அரசாங்கமாகச் சித்திரிக்க உதவியது.

பிரின்ஸ் குணசேகர தனது உரையில் முன்வைத்த தர்க்கங்கள் பின்வருமாறு அமைந்திருந்தன:

தடையுத்தரவு பிறப்பித்து அமைதியான ஊர்வலத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியமை ஜனநாயகப் படுகொலை என அவர் வாதிட்டார்.

தமிழ் மொழிக்கு வழங்கப்படும் சிறு அங்கீகாரமும் சிங்கள மொழியின் அந்தஸ்தைக் குறைத்துவிடும் என்ற பேரினவாத அச்சத்தை அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்.

டட்லி-செல்வா ஒப்பந்தம் என்பது இலங்கையைப் பிரிப்பதற்கான ஒரு 'இரகசிய நிகழ்ச்சி நிரல்' என்றும், அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி விலைபோய்விட்டது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இருப்பினும், பிரின்ஸ் குணசேகரவின் கடந்த காலத்தை நோக்கும்போது, அவர் ஒரு முற்போக்குவாதியாகத் தன்னைக் காட்டிக்கொண்டாலும், இனவாதப்பொறிக்குள் சிக்கிய ஒருவராகவே நம்மால் இனம் காண முடியும். அவர் ஒருபுறம் மனித உரிமைகள் பற்றிப் பேசினாலும், 1966-இல் தமிழ் மக்களின் மொழி உரிமையை எதிர்க்கப் பேரினவாதத்தையே தனது பிரதான ஆயுதமாகக் கையாண்டார்.

அரசாங்கத்தின் பதிலடியும் சபாநாயகரின் வகிபாகமும்:

எதிர்க்கட்சியின் இந்தப் பாரிய எதிர்ப்பிற்கு மத்தியில், சபாநாயகர் சர் அல்பேர்ட் பீரிஸ் சபையை வழிநடத்துவதில் பெரும் சவால்களை எதிர்கொண்டார். எதிர்க்கட்சிகள் சபாநாயகருக்கு எதிராக 'நம்பிக்கையில்லாத் தீர்மானம்' ஒன்றையும் கொண்டு வந்தன. அவர் அரசாங்கத்திற்குச் சார்பாகச் செயற்படுகிறார் என்பதே அவர்களின் குற்றச் சாட்டாகும்.

பிரதமர் டட்லி சேனாநாயக்க, பிரின்ஸ் குணசேகரவின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் போது, மிகவும் நிதானமாகப் பேசினார். 'வீதியில் வன்முறையைத் தூண்டி விட்டு, இப்போது சபையில் இரத்தம் தோய்ந்த துணியைக் காட்டுவது அரசியல் நாகரிகமல்ல. தடையை மீறிய கூட்டத்தைக் கலைக்கவே பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்' என அவர் குறிப்பிட்டார். ஆனால், பிரின்ஸ் குணசேகர போன்றவர்களின் ஆக்ரோஷமான பேச்சுகள், டட்லியின் தர்க்க ரீதியான விளக்கங்களைச் சாதாரண சிங்கள மக்களிடம் சென்றடைய விடாமல் தடுத்தன.

9-ஆம் திகதி நாடாளுமன்ற விவாத ஹன்சார்டின் 336-ஆம் பக்கத்தில் இவ்வாறு காணப்படுகிறது.

சபாநாயகர்: தயவுசெய்து அமைதியாக இருங்கள். ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது. கௌரவ உறுப்பினர்களே, நீங்கள் தீர்ப்பளிக்கப் போகிறீர்களா? அல்லது நான் தீர்ப்பளிக்க வேண்டுமா? நான் தீர்ப்பளிக்க வேண்டுமென்றால், நான் அவருக்குச் செவிசாய்க்க வேண்டும்... ஆம், உங்களது ஒழுங்குப் பிரச்சினை என்ன?

"தடையுத்தரவு பிறப்பித்து அமைதியான ஊர்வலத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியமை ஜனநாயகப் படுகொலை என பிரின்ஸ் குணசேகர வாதிட்டார். தமிழ் மொழிக்கு வழங்கப்படும் சிறு அங்கீகாரமும் சிங்கள மொழியின் அந்தஸ்தைக் குறைத்துவிடும் என்ற பேரினவாத அச்சத்தை அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்."

பிரின்ஸ் குணசேகர: இந்த மரணம் தொடர்பாக இன்று மதியம் விசாரணை நடத்தப்பட்டது. இன்னும் அது குறித்துத் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. அவ்வாறிருக்கையில், வேறொருவர் குண்டு வீசி இதைக் கொலை செய்ததாக இந்த உறுப்பினர் (பிரேமதாச) கூறுகிறார். தற்போது விசாரணையில் உள்ள ஒரு விடயம் குறித்து இவ்வாறு பேசுவது, நீதிமன்ற விசாரணைகளில் தலையிடுவதாகும் என்பதே எனது தர்க்கம்.

சபாநாயகர்: அவ்வாறானதொரு விசாரணை நடக்குமாயின்...

பிரேமதாச: அந்த சட்டப் பிரச்சினை குறித்து நான் ஒரு வார்த்தை கூற வேண்டும். நேற்று யட்டியாந்தோட்டை கௌரவ உறுப்பினர் இது பற்றிப் பேசினார். இந்த உறுப்பினர் இந்தச் சபைக்கு ஒரு 'சிவுறு' (காவியுடை) கொண்டு வந்து காட்டினார். அப்போது விசாரணை குறித்து எந்தப் பிரச்சினையும் எழவில்லை. இன்று நான் இது பற்றிப் பேசும்போதே விசாரணை குறித்த பிரச்சினை எழுகின்றது. இந்த மரணம் தொடர்பான விசாரணைக்கு மிகவும் அவசியமான ஒன்று, அந்தத் தேரர் போர்த்தியிருந்த அந்தக் காவியுடை ஆகும். அதனை இந்தச் சபைக்குக் கொண்டு வராமல் மறைப்பது விசாரணைக்குத் தடையாக அமையும். திருடுவது திருடப்பட வேண்டியதே. ஆனால் இறந்த ஒரு தேரரின் காவியுடை திருடப்படுவது சரிதானா ?

1966 ஜனவரி 8,9,10,11 ஆகிய திகதிகளில் நிகழ்ந்த நாடாளுமன்ற விவாதம் என்பது இலங்கையில் 'உணர்ச்சிகர அரசியல்' தர்க்க ரீதியான அரசியலை எவ்வாறு வெற்றிகொண்டது என்பதற்கான ஒரு முக்கிய பாடமாகும். பிரின்ஸ் குணசேகர போன்றவர்களின் வகிபாகம், இலங்கையின் இன முரண்பாட்டை மேலும் பட்டை தீட்டி வளர்த்தெடுத்தது என்பதற்கு உதாரணங்களாகப் பதிவா கின்றன.

ரதனசார தேரரின் மரணத்தைச் சுற்றிப் பின்னிப் பிணைக்கப்பட்ட இந்தப் புனைவுகள், 1970 தேர்தலில் டட்லி சேனாநாயக்கவின் படுதோல்விக்கு மிக முக்கியமான காரணமாக அமைந்தன. ஒரு பிக்குவின் மரணம், பத்தாயிரம் தர்க்கங்களை விடவும் வலிமையானது என்பதைப் பேரினவாத சக்திகள் இங்கேயே கற்றுக் கொண்டன.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் சில தனிநபர்கள் வாழ்ந்த காலத்தை விடவும், அவர்களது மரணத்திற்குப் பின்னரான பிம்பங்களே வரலாற்றின் போக்கை மாற்றி யமைத்துள்ளன. அந்த வகையில், தம்பராவே ரதனசார தேரர் என்பவர் வெறும் ஒரு பௌத்த பிக்குவாக அல்லாமல், சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஒரு 'புனிதப் போர் வீரராக' வரலாற்றில் உருவகப்படுத்தப் பட்டார். அவரது உண்மையான பின்னணி மற்றும் அவரது மரணம் எவ்வாறு ஒரு அரசியல் ஆயுதமாகத் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டது என்பதை இங்கே இன்னும் கூர்ந்து கவனிக்கலாம்.

யார் இந்த ரதனசார தேரர்?

1966 ஜனவரி 8 சம்பவத்தின் போது கொல்லப்பட்ட தம்பராவே ரதனசார தேரர், பலரால் ஒரு பல்கலைக்கழக மாணவர் என்று ஆரம்பத்தில் தவறாகக் கருதப்பட்டார். ஆனால், அவர் கொழும்புக்கு அருகில் இருந்த ஒரு விகாரையைச் சேர்ந்த சாதாரண பிக்கு ஆவார். அவரது தந்தை தனது மகனின் மரணத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது, 'தனது மகன் அரசியலில் ஈடுபாடு கொண்டிருக்க வில்லை; ஆனால் பிக்குகள் என்ற ரீதியில் தார்மீகக் கடமைக்காகவே அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டார்' எனப் பிற்காலத்தில் வருத்தத்துடன் பதிவு செய்துள்ளார்.

அவர் கொல்லப்பட்ட இடம் கொள்ளுப்பிட்டி அமெரிக்கத் தூதரகத்திற்கு அருகிலுள்ள ஒரு பகுதியாகும். அந்த இடத்தில் இன்றும் அவருக்கு ஒரு நினைவுத் தூபி அமைக்கப்பட்டுள்ளது. எனினும், அந்தத் தூபி எதற்காக அமைக்கப்பட்டது என்பது அதை நாளாந்தம் கடந்து செல்கிற இன்றைய தலைமுறைக்கு ஒரு புதிராகவே இருக்கும். அது உண்மையில் இலங்கையின் இனத்துவ அரசியலின் அடையாளங்களில் ஒன்றென அந்தத் தூபி மௌனமாகப் பறைசாற்றுகிறது.

எதிர்க்கட்சிக் கூட்டணி (SLFP-LSSP-CP) ரதனசார தேரரின் மரணத்தை மிக நுணுக்கமாக ஒரு 'அரசியல் குறியீடாக'

தனசார தேரரின் மரணத்தைச் சுற்றிப் பின்னிப் பிணைக்கப்பட்ட இந்தப் புனைவுகள், 1970 தேர்தலில் டட்லி சேனாநாயக்கவின் படுதோல்விக்கு மிக முக்கியமான காரணமாக அமைந்தன. ஒரு பிக்குவின் மரணம், பத்தாயிரம் தர்க்கங்களை விடவும் வலிமையானது என்பதைப் பேரினவாத சக்திகள் இங்கேயே கற்றுக்கொண்டன.

மாற்றியது. ஒரு பிக்கு கொல்லப்பட்டார் என்பது சிங்கள பௌத்த மனநிலையில் ஒரு பாரிய குற்றவுணர்வையும் ஆத்திரத்தையும் தூண்டும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். அவர் சாதாரண ஒரு போராட்டகாரராக அன்றி, 'சிங்கள மொழி காக்க வந்த புத்த புத்திரர்' எனப் போற்றப்பட்டார். புனித அடையாளமாக ஆக்கப்பட்டார்.

மேலே சொன்னது போல, பிரின்ஸ் குணசேகர நாடாளுமன்றத்தில் அவரது இரத்தம் தோய்ந்த காவியுடையைக் காட்டியமை, இந்த 'புனிதப்படுத்துதல்' செயன்முறையின் ஒரு அங்கமேயாகும். அவரது மரணம் நிகழ்ந்த இடத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி, ஐக்கிய தேசியக் கட்சியின் 'அடக்குமுறைக்கு' ஒரு நிரந்தரச் சான்றாக மாற்றப்பட்டது. பிற்காலத்தில் மகிந்த ஜனாதிபதியாக அந்த அலரிமாளிகையை பயன்படுத்திய காலத்தில் 2011-ஆம் ஆண்டு மகிந்தவால் புதுப்பிக்கப்பட்டு சிங்கள பௌத்த தேசியவாதத்தின் அடையாளங்களில் ஒன்றாக மாற்றப்பட்டது.

'மகா சங்காரய' – உளவியல் போரின் உச்சம்:

ரதனசார தேரரின் மரணத்தை மையமாக வைத்து வெளியிடப்பட்ட 'மகா சங்காரய' எனும் சிறுபிரசுரம், ஒரு மாபெரும் உளவியல் போரைத் தென்னிலங்கையில் நிகழ்த்தியது. 'ஒரு பிக்குவின் உயிரை விடவும் தமிழ் மொழிக்கு வழங்கப்படும் உரிமை பெரியதா?' என்ற தர்க்கமற்ற ஆனால் உணர்ச்சிகரமான கேள்வி மக்களிடம் விதைக்கப்பட்டது. இந்தப் பிரசுரத்தில் பொலிஸார் 'கொலைகாரர்களாகவும்', அரசாங்கம் 'சிங்கள விரோத சக்தியாகவும்' சித்திரிக்கப்பட்டது.

இது வெறும் ஒரு பிக்குவின் மரணம் பற்றிய செய்தி மட்டுமல்ல; இது சிங்கள பௌத்த நாகரிகமே ஆபத்தில் இருக்கிறது என்ற 'இருத்தலியல் அச்சத்தை' வளர்ப்பதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, தர்க்க ரீதியாக டட்லி-செல்வா ஒப்பந்தத்தை அணுகியவர்கள் கூட, 'பிக்குவின் மரணம்' என்ற ஒற்றைப் புள்ளியில் அரசாங்கத்தை வெறுக்கத் தொடங்கினர்.

ரதனசார தேரரின் மரணம் ஏற்படுத்திய சமூகத் தாக்கம் பல தசாப்தங்களுக்கு நீடித்தது. 1956-இல் ஆரம்பித்த பிக்குமார்களின் அரசியல் பிரவேசம், 1966-இன் இந்தத் 'தியாகி' உருவாக்கத்திற்குப் பிறகு ஒரு நிறுவனமயப்பட்ட வடிவத்தைப் பெற்றது.

1970 தேர்தல் வெற்றி: 1970 பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்கு, ரதனசார தேரரின் மரணத்தை மையமாக வைத்துச் செய்யப்பட்ட பிரசாரங்களே பிரதான காரணமாக அமைந்தன.

இந்தத் தியாகி உருவாக்கத்தின் விளைவாக ஏற்பட்ட அழுத்தமே, பிற்காலத்தில் 1972-ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பில் 'பௌத்தத்திற்கு முன்னுரிமை' வழங்கும் சரத்துச் சேர்க்கப்படுவதற்கு ஒரு வரலாற்றுத் தூண்டுதலாக அமைந்தது.

ரதனசார தேரர் என்பவர் ஒரு தனிநபராகப் பலியானதை விட, தென்னிலங்கையின் இரு பிரதான அரசியல் கட்சிகளுக்கு இடையிலான அதிகாரப் போட்டியில் ஒரு 'பகடைக்காயாக' பயன்படுத்தப்பட்டார் என்பதே உண்மையாகும். அவரது மரணம் தமிழ் மக்களின் நியாயமான மொழி உரிமைகளை மழுங்கடிக்கச் செய்வதற்கு ஒரு போர்வையாகப் பயன்படுத்தப்பட்டது.

'ஒரு பிக்குவின் மரணம் என்பது பத்தாயிரம் தர்க்கங்களை விடவும் வலிமையானது' என்ற பேரினவாதத் தந்திரோபாயம், இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுகளை முடக்குவதில் இன்றுவரை ஒரு வெற்றிகரமான சூத்திரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இடதுசாரிகளின் வரலாற்றுத் துரோகம்:

1966 ஜனவரி 8 நிகழ்வுகள் இலங்கையின் நாடாளுமன்ற அரசியலில் ஒரு திருப்புமுனையாக அமைந்த அதே வேளை, அதற்கு இணையானதொரு பாரிய மாற்றம் இடதுசாரி இயக்கங்களின் அடித்தளத்திலும் நிகழ்ந்து கொண்டிருந்தது. குறிப்பாக, பழைய இடதுசாரிகள் (LSSP, CP) பேரினவாதத்துடன் சமரசம் செய்துகொண்ட சூழலில், அதிலிருந்து விலகித் தீவிரவாதப் பாதையைத் தேர்ந்தெடுத்த சக்திகளாக உருப்பெற்றன.

"பிரின்ஸ் குணசேகர, தடையுத்தரவு பிறப்பித்து அமைதியான ஊர்வலத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியமை ஜனநாயகப் படுகொலை என அவர் வாதிட்டார். தமிழ் மொழிக்கு வழங்கப்படும் சிறு அங்கீகாரமும் சிங்கள மொழியின் அந்தஸ்தைக் குறைத்துவிடும் என்ற பேரினவாத அச்சத்தை அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்."

தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் ஒழுங்குவிதிகளுக்கு எதிராக இடதுசாரிகளும் எதிர்க்கட்சியில் இருந்த பேரினவாத கூட்டுடன் இணைந்தார்கள். இந்த வாக்கெடுப்பின் போது 96 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 53 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தார்கள். அவ்வாறு வாக்களித்தவர்களில் முக்கியமான இடதுசாரித் தலைவர்களை அவர்களின் கட்சி அடிப்படையில் இங்கே பட்டியலிட்டிருக்கிறேன். இவர்கள் அனைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அந்தப் போராட்டத்தை முன்னெடுத்த 'ஐக்கிய முன்னணி' அங்கத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அச்சட்டத்திற்கு எதிராக வாக்களித்த இடதுசாரித் தலைவர்கள்:

- **லங்கா சமசமாஜக் கட்சி:**
  - என்.எம். பெரேரா - கட்சியின் தலைவர்.
  - கொல்வின் ஆர். டி சில்வா - பின்னாளில் 1972 அரசியலமைப்பை வடிவமைத்தவர்.
  - லெஸ்லி குணவர்தன
  - விவியன் குணவர்தன
  - பேர்ணாட் சொய்சா
  - சமன்லி குணவர்தன

- **இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி**
  - பீட்டர் கெனமன் - கட்சியின் பொதுச்செயலாளர்.

- **மகாஜன எக்சத் பெரமுன – Philip Gunawardena பிரிவு அல்லாத ஏனைய இடதுசாரிகள்:**
  - பிரின்ஸ் குணசேகர - இவர் தான் தம்பராவே ரதனசார தேரரின் இரத்தம் தோய்ந்த காவியுடையை நாடாளுமன்றத்தில் காண்பித்து உரையாற்றியவர்.

இந்த வாக்கெடுப்பில் ஒரு சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், இடதுசாரி இயக்கத்தின் பிதாமகர்களில் ஒருவரான பிலிப் குணவர்தன, டட்லி சேனாநாயக்கவின் தேசிய அரசாங்கத்தில் அமைச்சராக இருந்ததால், இந்த ஒழுங்குவிதிகளுக்கு ஆதரவாக வாக்களித்தார். அவரது பெயர் 'ஆதரவளித்தவர்கள்' பட்டியலில் முதற்பக்கத்திலேயே காணப்படுகிறது.

சுதந்திரன்

முல்லையில் பிக்குகள்

மரணதண்டனை எதிர்க்க

எதிர்க் கட்சி தந்திரம்

தலை நகரில் எட்டாம் திகதி

ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை?

அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை

அதேவேளை, சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியின் பீக்கிங் பிரிவு (Peking Wing) நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் வெளியில் இருந்து இப்போராட்டத்தை விமர்சித்தனர். ஆனால் அக்கட்சியைச் சேர்ந்த ரோகண விஜேவீர இனவாத எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டார்.

இலங்கை இடதுசாரி இயக்கத்தின் முன்னோடிகளாகக் கருதப்பட்ட தலைவர்கள், அன்று சிங்களப் பேரினவாதக் கோரிக்கைகளுக்குப் பணிந்து சிறுபான்மையினரின் மொழி உரிமைகளுக்கு எதிராக வாக்களித்தனர்'

என்.எம். பெரேரா (LSSP - யட்டியாந்தோட்டை) அன்றைய விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய போது அவர், அரசாங்கம் கொண்டுவந்துள்ள இந்த விதிமுறைகள் 1958-ஆம் ஆண்டின் தமிழ் மொழிச் சட்டத்தின் வரம்புகளை மீறிச் செல்வதாகக் குறிப்பிட்டார். இந்த விதிமுறைகள் 'சிங்களம் மட்டும்' சட்டத்தைச் செயலிழக்கச் செய்து, தமிழ் மொழிக்கு இணை அந்தஸ்து வழங்குவதற்கான ஒரு மறைமுக முயற்சி என அவர் வாதிட்டார்.

பீட்டர் கெனமன் (Communist Party - கொழும்பு மத்திய தொகுதி) அவ்விவாதத்தின் போது குறுக்கிட்டுப் பேசும்போது கொழும்பு நகரில் நிலவும் பதற்றமான சூழலையும், பொலிஸார் பொதுமக்களுக்கு எதிராக முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளையும் சுட்டிக்காட்டியதுடன் நாடாளுமன்றத்திற்கு வெளியே மக்கள் அமைதியான முறையில் தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்க முயலும்போது, அவசர காலச் சட்டத்தைப் பிரயோகித்து ஜனநாயக உரிமைகளை நசுக்கக் கூடாது என்று அவர் வாதிட்டார்.

கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா (LSSP - அகலவத்தை) இந்த விவாதத்தில் சட்ட ரீதியான நுணுக்கங்களை முன்வைத்து 1958-ஆம் ஆண்டின் சட்டத்தில் இல்லாத அதிகாரங்களை இந்தப் புதிய விதிமுறைகள் மூலம் அரசாங்கம் உருவாக்க முயல்வதாகக் குற்றம் சாட்டினார். குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாகத் தமிழ் அமையும் விதம் குறித்து அவர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

பிரின்ஸ் குணசேகர (ஹபராதுவ) உரையாற்றும்போது, வெளியே போராட்டக்காரர்கள் மீது நடத்தப்படும் அடக்கு

"

'மகா சங்காரய' எனும் தலைப்பிலான பிரசுரங்கள், தனசார தேரரின் மரணம் என்பது தமிழ் மொழிக்கு உரிமை வழங்கப்படுவதைத் தடுத்த ஒரு 'புனிதத் தியாகமாக' உருவகப்படுத்தப்பட்டது. இந்தப் நாடெங்கும் இரகசியமாக விநியோகிக்கப்பட்டன. 'ஒரு பிக்குவின் இரத்தம் கறைபடிந்த நாடாளுமன்றம் சிங்கள மக்களுக்குத் தேவையா?' என்ற கேள்வி பௌத்த கிராமங்களுக்குள் கொண்டு செல்லப்பட்டது.

"

முறைகள் பற்றி குறிப்பிட்டு பௌத்த பிக்குகள் மீதான பொலிஸ் நடவடிக்கை குறித்து ஆவேசமாகப் பேசியனார். இது ஹன்சார்ட்டில் பதிவாகியுள்ளது.

1958-ஆம் ஆண்டின் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டமானது 'டட்லி-செல்வா' ஒப்பந்தத்தின் ஒரு அங்கமே தவிர, நாட்டின் பொதுவான மொழிக் கொள்கையல்ல என்பதே இவர்களின் உரைகளின் சாரமாக இருந்தன.

இதில் சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் (Peking Wing) தலைவரான என். சண்முகதாசன் அத்துடன் அவரது சீடராகத் திகழ்ந்த ரோஹண விஜேவீர ஆகியோரின் வகிபாகம் மிக முக்கியமானது.

இலங்கையின் பாரம்பரிய இடதுசாரித் தலைவர்கள் 1960-களில் வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு, 'ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி'யின் (SLFP) பங்காளிகளாக மாறினர். 1956-இல் மொழி சமத்துவத்திற்காக நின்றவர்கள், 1966-இல் தமிழ் மொழி விசேட ஏற்பாடுகளுக்கு எதிராக வீதியில் நின்றமை வரலாற்றின் பாரிய முரண்நகையாகும். இவர்களின் இந்தத் தடம்மாற்றம், இடதுசாரி இளைஞர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

எதிர்கட்சிகளின் ஆர்ப்பாட்டங்களை சண்முகதாசன் கடுமையாக எதிர்த்ததுடன் கட்சியின் தலைமையிலான இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் (கொழும்பில் மட்டும் பல ஆயிரத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது மேற்படி வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்வதில்லை என முடிவு செய்து இது ஒரு இனவாத வேலை நிறுத்தம் என்பதைச் சுட்டிக் காட்டிப் பல ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை சிங்களம் தமிழ் மொழிகளில் அச்சிட்டு எல்லாத் தொழிற்சாலைகளிலும் பொது இடங்களிலும் விநியோகித்தது. இவ்வேலை நிறுத்தத்தின் போது சண் நாட்டில் இருக்கவில்லை. அவர் அல்பேனியாவில் இடம் பெற்ற கட்சி மாநாட்டிற்கு சென்றிருந்தார். ஆனால் கட்சித் தலைமை உறுதியான தீர்மானத்தை எடுத்து எதிர்த்து நின்றது. மேலும் கட்சியின் முடிவை மீறியே அன்று கட்சியிலும் வாலிபர் இயக்கத்திலும் இருந்து வந்த ரோகண விஜயவீர மேற்படி இனவாத ஊர்வலத்தில் பங்கு கொண்டு இனவாத முழக்கங்களை முழங்கிச் சென்றார். அதனாலேயே கட்சி அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கட்சியிலிருந்து நீக்கியது.

சண்முகதாசன் தலைமையிலான 'சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சி' மட்டுமே ஓரளவுக்குத் தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரித்த போதிலும், அவர்களாலும் தென்னிலங்கையில் நிலவிய பேரினவாத அலையை முழுமையாக எதிர்கொள்ள முடியவில்லை. இக்காலகட்டத்தில் தான், மொஸ்கோவில் கல்வி பயின்று திரும்பிய இளம் புரட்சியாளர் ரோஹண விஜேவீர, சண்முகதாசனின் கட்சியில் தீவிரமாக இயங்கத் தொடங்கினார்.

சண்முகதாசன் மற்றும் விஜேவீர: குரு–சீடர் உறவின் விரிசல்:

ரோஹண விஜேவீர ஆரம்பத்தில் சண்முகதாசனின் மிக விசுவாசமான சீடராகவே இருந்தார். சண்முகதாசன் முன்னெடுத்த 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்' அத்துடன் யாழ்ப்பாணத்தில் சாதியத்திற்கு எதிராக அவர் நடத்திய போராட்டங்கள் விஜேவீரவைக் கவர்ந்தன. எனினும், இருவருக்கும் இடையிலான தர்க்கரீதியான விரிசலை பின் வரும் மூன்று புள்ளிகளால் விளக்கலாம்.

- புரட்சிகரப் பாதை: சண்முகதாசன் தொழிலாளர் வர்க்கத்தின் ஊடாக புரட்சியை முன்னெடுக்க வேண்டும் என நம்பினார். ஆனால், விஜேவீர இலங்கையின் கிராமப்புறச் சிங்கள இளைஞர்களே புரட்சியின் முதுகெலும்பாக இருக்க முடியும் என வாதிட்டார்.
- இனத்துவ நிலைப்பாடு: சண்முகதாசன் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஓரளவுக்கு ஆதரித்தார். ஆனால் விஜேவீர, தமிழ் தேசியவாதம் என்பது 'ஏகாதிபத்தியத்தின் சதி' என நம்பியதுடன், மலையகத் தமிழ் மக்கள் இந்திய விசுவாசிகள் என விமர்சித்தார்.
- அதிகாரப் போட்டி: விஜேவீர கட்சிக் கட்டுப்பாட்டை மீறி இளைஞர்களைத் தனியாகத் திரட்டியமை சண்முகதாசனுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது.

"ரோஹண விஜேவீர ஆரம்பத்தில் சண்முகதாசனின் மிக விசுவாசமான சீடராகவே இருந்தார். சண்முகதாசன் முன்னெடுத்த 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்' அத்துடன் யாழ்ப்பாணத்தில் சாதியத்திற்கு எதிராக அவர் நடத்திய போராட்டங்கள் விஜேவீரவைக் கவர்ந்தன."

விஜேவீர ஏன் வெளியேற்றப்பட்டார்? 1966 மே தினத் திருப்பம்:

1966 ஜனவரி சம்பவங்களுக்குப் பிறகு, சண்முகதாசனின் கட்சியில் விஜேவீரவின் செல்வாக்கு அதிகரித்தது. ஆனால், அவர் கட்சிக்குள் ஒரு 'இரகசியக் குழுவை' நடத்தி வருவ தாகச் சண்முகதாசன் குற்றம் சாட்டினார். குறிப்பாக, 1966 மே தினக் கொண்டாட்டங்களின் போது விஜேவீரவின் ஆதரவாளர்கள் சண்முகதாசனுக்கு எதிராகக் கோஷ மிட்டனர்.

இறுதியாக, 1967-ஆம் ஆண்டு விஜேவீர சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து உத்தியோகபூர்வமாக நீக்கப் பட்டார். சண்முகதாசன் அவரை 'ஒரு குட்டி முதலாளித்துவ சாகசக்காரர்' என்று வர்ணித்தார். ஆனால், விஜேவீரவோ சண்முகதாசன் 'கிராமப்புற இளைஞர்களின் யதார்த்தத் தைப் புரியாத ஒரு மேட்டுக்குடி மார்க்சியவாதி' எனச் சாடினார். இந்த வெளியேற்றமே மக்கள் விடுதலை முன்னணியின் (JVP) உதயத்திற்குப் பிள்ளையார் சுழி போட்டது.

கட்சியிலிருந்து வெளியேறிய விஜேவீர, தனது சொந்த அரசியல் தத்துவமான 'ஐந்து வகுப்புகளை' உருவாக் கினார். இதில் ஐந்தாவது வகுப்பு 'இந்திய விரிவாக்கம்' பற்றியது. விஜேவீர தனது தத்துவத்தின் மூலம் மலையகத் தமிழ் தொழிலாளர்களை 'இந்தியாவின் ஐந்தாம் படை' எனச் சித்திரித்தார். இது ஜேவிபியின் இளைஞர்களை ஒருவகையில் மறைமுக தமிழர் விரோத மனநிலையைப் பேண வழிவகுத்தது.

1966-இல் மரபான இடதுசாரிகள் தமிழ் மொழிக்கு எதிராகப் போராடியபோது, விஜேவீர அச்சக்திகளுக்கு சாதகமாக இயங்கினார். தனது மறைமுகப் பிரசாரங்கள் மூலம் சிங்கள தேசியவாதத்தைத் தொழிலாளர் வர்க்க அரசியலுடன் கலந்தார்.

இது சண்முகதாசனின் 'சர்வதேசவாத' கொள்கைக்கு முற்றிலும் முரணானது. சண்முகதாசன் யாழ்ப்பாணத்தில் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிக் கொண்டி ருந்தபோது, விஜேவீர தென்னிலங்கையில் சிங்கள இளைஞர்களிடையே 'நாடு அந்நியர்களிடம் (தமிழர்களிடம் / இந்தியர்களிடம்) அடகு வைக்கப்படுகிறது' என்ற அச்சத்தை விதைத்தார்.

1966 - 1968 காலகட்டத்தில் இடதுசாரி இயக்கம் மூன்று துண்டுகளாகப் பிளவுபட்டது:

- பழைய இடதுசாரிகள் (LSSP/CP): சிறிமாவோவுடன் இணைந்து பேரினவாத அரசியலில் கரைந்தனர்.
- சண்முகதாசன் அணி: மார்க்சியத் தூய்மையைப் பேண முயன்றாலும், தென்னிலங்கை வெகுஜன ஆதரவை இழந்தனர்.
- விஜேவீரவின் ஜே.வி.பி: மார்க்சிய போர்வையில் ஒரு புதிய வகை 'சிங்கள-பௌத்த மார்க்சியத்தை' உருவாக்கி, பிற்காலத்தில் ஆயுதப் போராட்டத்திற்கு வழிவகுத்தனர்.

சண்முகதாசனிடமிருந்து விஜேவீர பிரிந்தமையானது, இலங்கையின் இடதுசாரி அரசியலில் இருந்த 'இன நல்லிணக்கத்திற்கான' கடைசிப் பாலத்தையும் தகர்த் தெறிந்தது எனலாம். சண்முகதாசன் இனங்களுக்கு இடையிலான சமத்துவத்தைப் பேசினார்; விஜேவீர இனங்களுக்கு இடையிலான அதிகாரப் போட்டியைப் பேசினார்.

டட்லி அரசாங்கத்தின் வீழ்ச்சியும் 1970 தேர்தலை நோக்கிய நகர்வும்:

1966 ஜனவரி 8 சம்பவங்களுக்குப் பிறகு, டட்லி சேனாநாயக்க தலைமையிலான 'ஏழு கட்சி கூட்டணி' அல்லது 'தேசிய அரசாங்கம்' தனது அரசியல் அறத்தை இழக்கத் தொடங்கியது. தமிழ் மக்களின் மொழி உரிமைகளுக்காக ஒரு பிக்குவின் உயிர் பலிகொடுக்கப் பட்டது என்ற பிரச்சாரம், தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அடித்தளத்தையே உலுக்கியது. ஒரு தியாகியின் பிம்பம் தேர்தல் களத்தில் ஒரு பேராயுதமாக மாற்றப்பட்டது.

"சண்முகதாசனிடமிருந்து விஜேவீர பிரிந்தமையானது, இலங்கையின் இடதுசாரி அரசியலில் இருந்த 'இன நல்லிணக்கத்திற்கான' கடைசிப் பாலத்தையும் தகர்த் தெறிந்தது எனலாம். சண்முகதாசன் இனங்களுக்கு இடையிலான சமத்துவத்தைப் பேசினார்; விஜேவீர இனங்களுக்கு இடையிலான அதிகாரப் போட்டியைப் பேசினார்."

1970 பொதுத்தேர்தல் பிரச்சாரங்கள் ஆரம்பமானபோது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான 'ஐக்கிய முன்னணி' ரதனசார தேரரின் மரணத்தை மையப் பொருளாக மாற்றியது. தேர்தல் மேடைகளில் ரத்தக் கறை படிந்த காவியுடையின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப் பட்டன. 'இந்த ரத்தம் யாருடையது? சிங்கள பௌத்தத்தின் காவலனுடையது' என்ற முழக்கம் கிராமங்கள் தோறும் கொண்டு செல்லப்பட்டது.
பௌத்த பிக்குகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் அரசியல் களத்தில் குதித்தனர். டட்லி சேனாநாயக்கவைத் 'துரோகி' என வர்ணிக்கும் துண்டுப்பிரசுரங்கள் விகாரைகள் ஊடாக விநியோகிக்கப்பட்டன. குறிப்பாகச் சிங்களப் பெண்கள் மத்தியில், 'ஒரு பிள்ளையைக் கொன்ற அரசாங்கம்' என்ற உணர்ச்சிகரமான பிம்பத்தை உருவாக்குவதில் சிறிமாவோ பண்டாரநாயக்க வெற்றி கண்டார். ரதனசார தேரரின் மரணம் ஒரு உணர்ச்சிகரமானதாக இருந்த போதிலும், டட்லி அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குத் தார்மீக மற்ற பொருளாதாரக் கொள்கைகளும் முக்கியக் காரணங் களாகும்.

டட்லி அரசாங்கம் அரிசி விநியோகத்தைக் குறைத்தமை அல்லது விலையை உயர்த்தியமை சாதாரண மக்களைப் பாதித்தது. 'அரிசியும் மொழியும்' என்ற இரு முனைகளில் அரசாங்கம் தாக்குதலுக்கு உள்ளானது. விஜேவீரவின் எழுச்சிக்குக் காரணமாக இருந்த வேலையில்லாத் திண்டாட்டம், டட்லி அரசாங்கத்தின் மீதான இளைஞர் களின் நம்பிக்கையைச் சிதைத்தது. 1966 வேலை நிறுத்தத்தின் போது 40,000 ஊழியர்கள் மீது எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள், தொழிலாளர் வர்க்கத்தின் வாக்குகளை அரசாங்கத்திற்கு எதிராகத் திருப்பியது.

டட்லி சேனாநாயக்கவின் அரசாங்கம் பலதரப்பட்ட கட்சிகளின் கலவையாக இருந்தது. தமிழரசுக் கட்சியுட னான உடன்படிக்கையை முழுமையாக நிறை வேற்ற முடியாத நிலை டட்லிக்கு ஏற்பட்டது. டட்லி-செல்வா ஒப்பந்தத்தின் ஒரு அங்கமான 'மாவட்ட சபைகள்' அமைக்கும் முயற்சியைத் தென்னிலங்கை அழுத்தங்கள் காரணமாக டட்லி கைவிட்டபோது, தமிழரசுக் கட்சி அரசாங்கத் திலிருந்து விலகியது.

ஒருபுறம் தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமையும், மறுபுறம் தமிழர்களுக்கு ஆதரவானவர் என்ற சிங்கள மக்களின் விமர்சனமும் டட்லியை ஒரு அரசியல் முட்டுச்சந்தில் நிறுத்தியது. 1970 மே மாதம் நடைபெற்ற தேர்தலில், சிறிமாவோ பண்டார நாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் (116 இடங்கள்) மாபெரும் வெற்றி பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி வெறும் 17 இடங்களை மட்டுமே பெற்றுப் படுதோல்வியடைந்தது. இந்த வெற்றிக்குக் காரணம் ரதனசார தேரரின் மரணத்தால் தூண்டப்பட்ட சிங்கள தேசியவாதமும் சிங்கள-பௌத்த ஒருமைப்பாடுமாகும்.

மார்க்சியக் கட்சிகள் பேரினவாதத்துடன் கைகோர்த்தமை தொழிலாளர் வாக்குகளை ஒன்றுதிரட்டியது. ஊடகத் தணிக்கை மற்றும் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களை ஒடுக்கியமைக்கு எதிராக ஐதேக கூட்டணிக்கு மக்கள் வழங்கிய தீர்ப்பு. 1966-இலிருந்து 1970 வரையிலான காலம் இலங்கையில் 'மிதவாத அரசியலின்' முடிவாகவும், 'தீவிரவாத தேசியவாதத்தின்' ஆரம்பமாகவும் அமைந்தது. டட்லி சேனாநாயக்க தனது அரசியல் சந்தர்ப்பவாதத்துக்காகவாவது ஒரு இன நல்லிணக்க முயற்சியை எடுத்தார்; ஆனால், அவரது கட்சியே அதனைத் தற்காக்கத் தவறியது.

ரதனசார தேரரின் மரணம் என்பது ஒரு விபத்தாகவோ அல்லது தற்செயலான நிகழ்வாகவோ இருக்கலாம். ஆனால், அதன் அரசியல் பயன்பாடு என்பது திட்டமிடப் பட்ட ஒரு பேரினவாதச் சதி. இதுவே பிற்காலத்தில் 1972-ஆம் ஆண்டு பௌத்தத்திற்கு முதலிடம் வழங்கும் அரசியலமைப்பு உருவாவதற்கான உளவியல் அடித் தளத்தை இட்டது.

"1970 மே மாதம் நடைபெற்ற தேர்தலில், சிறிமாவோ பண்டார நாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மாபெரும் வெற்றி பெற்றது. இந்த வெற்றிக்குக் காரணம் ரதனசார தேரரின் மரணத்தால் தூண்டப்பட்ட சிங்கள தேசியவாதமும் சிங்கள-பௌத்த ஒருமைப்பாடுமாகும்."

“

ரதனசார தேரரின் மரணம் நிகழ்ந்த கொள்ளுப்பிட்டி சந்தி, இன்றும் இலங்கையின் அரசியலில் ஒரு எச்சரிக்கைக் குறியீடாகவே உள்ளது: ‘அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள முற்படும் எவரும், வீதி வன்முறைகளாலும் மதவாதத்தாலும் தூக்கியெறியப் படுவர்’ என்பதே அந்த எச்சரிக்கை.

”

1972 அரசியலமைப்பு: பேரினவாதத்தின் சட்டபூர்வ வடிவம்:

1966 ஜனவரி 8-ஆம் திகதி கொள்ளுப்பிட்டி வீதிகளில் சிந்தப்பட்ட இரத்தம், வெறுமனே ஒரு தனிநபரின் மரணத்துடன் முடிந்துவிடவில்லை. அது இலங்கையின் நவீன வரலாற்றில் ‘மிதவாத அரசியலின்’ சவப்பெட்டிக்கு அடிக் கப்பட்ட கடைசி ஆணியாகும்.

1966-இன் வன்முறைகள் எவ்வாறு 1972-ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பிற்கு வித்திட்டன என்பதையும், அது இன்றைய இலங்கையின் இன மற்றும் மத முரண்பாடுகளை எவ்வாறு தீர்க்க முடியாத ஒரு சிக்கலாக மாற்றியது என்பதையும் கவனிக்க வேண்டிய ஒன்று.

1966-இல் தென்னிலங்கையில் எழுந்த ‘மகா சங்காரய’ எனும் பேரினவாத அலை, 1970 தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அதன் இடதுசாரிக் கூட்டணி களுக்கும் ஒரு தெளிவான செய்தியை வழங்கியது: ‘சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தும் அரசாங்கமே நீடிக்க முடியும்.’ இதன்படியே, 1972-ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டபோது, 1966 போராட்டத்தின் கோரிக்கைகள் அனைத்தும் சட்ட வடிவம் பெற்றன.

1966-இல் ரதனசார தேரரின் மரணம் ஏற்படுத்திய உளவியல் தாக்கம், பௌத்தத்திற்கு ‘முதன்மையான இடத்தை’ அரசியலமைப்பின் சரத்து 6-இன் மூலம் வழங்க வேண்டிய கட்டாயத்தை உருவாக்கியது. இது இலங் கையை ஒரு மதச்சார்பற்ற நாடாக அல்லாமல், ஒரு மதவாத அரசாக மாற்றியது.

1966-இல் டட்லி சேனாநாயக்க கொண்டுவர முயன்ற தமிழ் மொழி விசேட பிரமாணங்கள், 1972 அரசியலமைப்பில் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டன. இதன் மூலம், தமிழ் மக்கள் ஒரு ‘இரண்டாம் தரப் பிரஜைகளாக’ உத்தியோக பூர்வமாக மாற்றப்பட்டனர்.

1966 ஜனவரி 8-இற்குப் பின்னரான காலம், தமிழ் - சிங்கள இனங்களுக்கு இடையிலான ‘நம்பிக்கை’ எனும் பாலத்தை முற்றாகத் தகர்த்தது.

டட்லி சேனாநாயக்க போன்ற ஒரு மிதவாத சிங்களத் தலைவராலேயே ஒரு சிறிய மொழி உரிமையைக் கூட வழங்க முடியவில்லையெனில், இனி சிங்களத் தலைவர் களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமில்லை என்ற முடிவுக்கே தமிழரசுக் கட்சி வந்தது. இதுவே பிற்காலத்தில் ‘வட்டுக்கோட்டைத் தீர்மானம்’ (1976) மற்றும் தனிநாட்டுக் கோரிக்கை உருவாவதற்குப் பிரதான வினையூக்கியாக அமைந்தது.

சிறுபான்மையினருக்கு வழங்கப்படும் எந்தவொரு உரிமையும் ‘நாட்டைப் பிரிக்கும் சூழ்ச்சி’ என்ற மனோநிலை நிலைபெற்றது. ஒரு பிக்குவின் உயிரைக் காவு வாங்கி யாவது இந்த உரிமைகளைத் தடுக்க வேண்டும் என்ற போராட்ட குணம் சிங்களத் தேசியவாதத்திற்குள் வேரூன் றியது.

1966-இன் நிகழ்வுகள் ‘பௌத்த பிக்குகள்’ அரசியலின் தீர்மானிக்கும் சக்தியாக மாறுவதை உறுதி செய்தன. இன்று இலங்கையில் எந்தவொரு அரசியல் தீர்வும் பௌத்த பீடங்களின் அங்கீகாரமின்றி முன்னெடுக்கப்பட முடியாது என்ற நிலைமைக்கு 1966 போராட்ட நிகழ்ச்சிகள் தள்ளின.

தம்பராவே ரதனசார தேரர் ஒரு ‘புனித தியாகியாக’ மாற்றப்பட்ட விதம், பிற்காலத்தில் ஞானசார தேரர் அல்லது இன்றைய ரத்தன தேரர் போன்றவர்களின் எழுச்சிக்கு முன்னுதாரணமாக அமைந்தது. அரசியலில் மதத்தின் தலையீடு என்பது சட்டத்தை விடவும் மேலானது என்ற தர்க்கம் இங்கேயே பலப்படுத்தப்பட்டது.

இனப் பிரச்சினைக்கான தீர்வாக முன்வைக்கப்படும் 13-ஆவது திருத்தம் போன்ற எந்தவொரு அதிகாரப் பகிர்வு முயற்சியும், 1966-இன் அதே பாணியிலான ‘தியாகி’ பிம்பங்கள் மற்றும் ‘மகா சங்காரய’ கோஷங்கள் மூலம் இன்றும் முறியடிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் எதிர்காலத்தை 1966 ஜனவரி 8 தீர்மானித்தது என்பது மிகையல்ல. அது வர்க்க அரசியலை அழித்து இனவாத அரசியலை நிலைநிறுத்தியது. இன்றைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும், இலங்கையில் இன - மத ரீதியான முரண்பாடுகள் தணியாமல் இருப்பதற்குக் காரணம், 1966-இல் பலப் படுத்தப்பட்ட அந்த ‘பேரினவாதக் கோட்டை’ இன்னும் உடையாமல் இருப்பதேயாகும். ரதனசார தேரரின் மரணம் நிகழ்ந்த கொள்ளுப்பிட்டி சந்தி, இன்றும் இலங்கையின் அரசியலில் ஒரு எச்சரிக்கைக் குறியீடாகவே உள்ளது: ‘அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள முற்படும் எவரும், வீதி வன்முறைகளாலும் மதவாதத்தாலும் தூக்கியெறியப் படுவர்’ என்பதே அந்த எச்சரிக்கை.

sarawanan.n@thaiveedu.com

மொழியின் அரசியல் : 3

வர்க்க சக்தியாக மொழியும் ஆங்கிலம் பேசும் மேட்டுக்குடியினரும்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

தொடக்கக் குறிப்புகள்:

காலனித்துவ இலங்கையில், மொழி என்பது வெறும் தகவல் தொடர்பு ஊடகமாக மட்டும் இருக்கவில்லை. அது பேரரசின் அரசியல் பொருளாதாரத்தில் பொதிந்திருந்த ஓர் அதிகாரக் கட்டமைப்பாக இருந்தது. காலனித்துவ அதிகாரம் செலுத்தப்படுவதற்கும் சமூகப் படி நிலைகள் ஒழுங்கமைக்கப்படுவதற்கும் பொருளாதார வாய்ப்புகள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கும் ஆங்கிலம் ஒரு தீர்க்கமான கருவியாகச் செயற்பட்டது. ஆங்கிலம் பேசுவது என்பது வெறுமனே ஒரு திறமையைக் கொண்டிருப்பது மட்டுமல்ல. அது, படிநிலைப்படுத்தப்பட்ட சிறப்புரிமை வரிசையில் ஒரு நிலையில் இருப்பதாகும். இதற்கு மாறாக, ஆங்கிலம் தெரியாதிருப்பது என்பது அதிகார வட்டங்களுக்கு வெளியே நிலைநிறுத்தப்படுவதாகும். அது வேலை வாய்ப்பிலிருந்து மட்டுமல்லாமல், அரசிலேயே அர்த்தமுள்ள பங்களிப்பிலிருந்தும் விலக்கப்படுவதாகும்.

> ***“ஆங்கில வழிப் பாடசாலைகள் வெறுமனே ஒரு மொழியைக் கற்பிக்கவில்லை. அவை காலனித்துவ ஆட்சியுடன் இணைந்த மனப்பான்மைகள், பழக்கவழக்கங்கள், அறிவு வடிவங்களை வளர்த்தன. ஆங்கிலத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள் எழுத்தர் பணி, அதுசார் தொழில்கள், நிர்வாகப் பதவிகளில் நுழைவதற்குத் தயாரானார்கள், அதன் மூலம் காலனித்துவ அரசை நிலைநிறுத்தினர்.”***

காலனித்துவத்தின் கீழ் மொழி ஒரு வர்க்க சக்தியாகச் செயற்பட்டது. அது கல்விக்கான அணுகலை வடிவமைத்தது, அதிகார வர்க்கத்தில் நுழைவதைக் கட்டமைத்தது, ஆள்பவருக்கும் ஆளப்படுபவருக்கும் இடையிலான உறவில் ஒரு பாலமாகச் செயற்பட்டது என்பதை நிறுவுவதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வகையில், மொழி சொத்தைப் போலவே செயற்பட்டது. அதைச் சேகரிக்கவும், தலைமுறைகள் கடந்து கடத்தவும், பொருள்சார் நன்மையாக மாற்றவும் முடிந்தது. ஆங்கிலம் நடுநிலையானதாக இருக்கவில்லை. அது சமூகத்தின் ஒரு சிறிய பிரிவினரால் கட்டுப்படுத்தப்பட்டு, அதன் பற்றாக்குறையை உறுதிசெய்த நிறுவன ஏற்பாடுகளால் பாதுகாக்கப்பட்ட ஓர் ஏகபோக வளமாக இருந்தது.

மார்க்சியக் கண்ணோட்டத்தில், காலனித்துவ மொழி ஆட்சிமுறையை சமூக மீளுருவாக்கத்தின் பரந்த கட்டமைப்பின் ஒரு பகுதியாகப் புரிந்து கொள்ளலாம். கல்வி முறையானது, ஒரு சமத்துவமான இடமாக இருப்பதற்குப் பதிலாக, வர்க்கப் பிரிவுகளை மீளுருவாக்கம் செய்யும் ஒரு கருத்தியல், பொருளாதாரப் பொறிமுறையாகச் செயற்பட்டது. ஆங்கில வழிப் பாடசாலைகள் வெறுமனே ஒரு மொழியைக் கற்பிக்கவில்லை. அவை காலனித்துவ ஆட்சியுடன் இணைந்த மனப்பான்மைகள், பழக்கவழக்கங்கள், அறிவு வடிவங்களை வளர்த்தன. ஆங்கிலத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள் எழுத்தர் பணி, அதுசார் தொழில்கள், நிர்வாகப் பதவிகளில் நுழைவதற்குத் தயாரானார்கள், அதன் மூலம் காலனித்துவ அரசை நிலைநிறுத்தினர். சிங்களம் அல்லது தமிழில் கல்வி கற்றவர்கள் இந்தப் பாதைகளிலிருந்து பெருமளவில் விலக்கப்பட்டு, முறைசார் பொருளாதாரத்தின் விளிம்புகளுக்குத் தள்ளப்பட்டனர்.

இது ஒரு தனித்துவமான வர்க்க அமைப்பை உருவாக்கியது. அது சிங்களவர்கள், தமிழர்கள், பறங்கியர்கள், முஸ்லிம்களை உள்ளடக்கிய, ஆங்கிலம் பேசும் ஓர் இடைநிலை உயரடுக்காக இருந்தது. இவர்களின் அதிகாரம், நிலம் அல்லது மூலதனத்தின் உரிமையிலிருந்து குறைவாகவும் அவர்களின் மொழித் திறமையிலிருந்து அதிகமாகவும் பெறப்பட்டது. காலனித்துவ அரசுக்கும் பரந்த மக்களுக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்வதே அவர்களின் பங்காக இருந்தது. அவர்கள் மொழியை மட்டுமல்லாமல், சட்டம், கொள்கை, நிர்வாகத்தர்க்கத்தையும் மொழி பெயர்த்தனர். ஆயினும், இந்த மத்தியஸ்தம் சமச்சீரற்றதாக இருந்தது. அவர்கள் ஆட்சியைச் சாத்தியமாக்கிய அதே வேளையில், பெரும்பான்மையினருக்கு அணுகலை மறுத்த ஒரு அமைப்பின் வெளிப்படையான முகமாக மாறி, புறக்கணிப்பின் உருவகமாகவும் திகழ்ந்தனர்.

அதே நேரத்தில், இலங்கையின் மக்கள் தொகையில் பெரும்பான்மையானோர் இந்த மொழிப் பொருளாதாரத்திற்கு வெளியே இருந்தனர். கிராமப்புற சிங்கள விவசாயிகள், தமிழ் விவசாய சமூகங்கள், மலையகத் தோட்டத் தொழிலாளர்கள், அரசிலிருந்து கட்டமைப்பு ரீதியாகத் துண்டிக்கப்பட்டிருந்த வட்டார மொழி உலகங்களுக்குள் வாழ்ந்தனர். நீதிமன்றங்கள், வருவாய் அலுவலகங்கள் அல்லது நிர்வாக நிறுவனங்கள் என எதுவாக இருந்தாலும், அதிகாரத்துடனான அவர்களின் சந்திப்புகள், அவர்கள் கட்டுப்படுத்தாத ஒரு மொழியின் மூலமாகவே மத்தியஸ்தம் செய்யப்பட்டன. இது வெறும் ஒரு தொழினுட்பத் தடையாக இருக்கவில்லை. அது அவர்களைச் சார்ந்திருப்பவர்களாகவும், பாதிக்கப்படக்கூடியவர்களாகவும், பெரும்பாலும் அவமானப்படுத்தப்பட்டவர்களாகவும் ஆக்கிய ஒரு வகையான ஆதிக்கமாக இருந்தது.

எனவே, மொழியின் சக்தி அதன் பொருள் சார்ந்த விளைவுகளில் மட்டுமல்ல, அதன் குறியீட்டு வன்முறையிலும் அடங்கியிருந்தது. ஆங்கிலம் அறிவு, நவீனத்துவம் மற்றும் அதிகாரத்தைக் குறிக்கத் தொடங்கியது, அதே நேரத்தில் சிங்களமும் தமிழும் மரபு, பின்தங்கிய நிலை மற்றும் அடிமைத்தனத்துடன் தொடர்புபடுத்தப்பட்டன. இந்தத் தொடர்புகள் உள்வாங்கப்பட்டு, சமூகத்தில் தனிநபர்கள் தங்கள் இடத்தைப் புரிந்துகொள்ளும் விதத்தை வடிவமைத்தன. மொழி தகுதியின் அடையாளமாகவும், திறமையின் அளவுகோலாகவும், ஆள்பவர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையிலான எல்லையாகவும் மாறியது.

> ***மொழியின் சக்தி அதன் பொருள் சார்ந்த விளைவுகளில் மட்டுமல்ல, அதன் குறியீட்டு வன்முறையிலும் அடங்கியிருந்தது. ஆங்கிலம் அறிவு, நவீனத்துவம் மற்றும் அதிகாரத்தைக் குறிக்கத் தொடங்கியது, அதே நேரத்தில் சிங்களமும் தமிழும் மரபு, பின்தங்கிய நிலை மற்றும் அடிமைத்தனத்துடன் தொடர்புபடுத்தப்பட்டன.***

ஆயினும், இந்த அமைப்பு நிலையானதாக இருக்கவில்லை. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், காலனித்துவக் கட்டமைப்பிற்குள் அடக்க முடியாத பதற்றங்களை அது உருவாக்கியது. கல்வியின் விரிவாக்கம், அனைவருக்கும் வாக்குரிமை அறிமுகம், உள்ளூர் அரசியல் இயக்கங்களின் எழுச்சி ஆகியவை தாய் மொழி பேசும் மக்களிடையே புதிய எதிர்பார்ப்புகளை உருவாக்கின. யார் ஆங்கிலம் பேசுகிறார்கள் என்பது மட்டுமல்ல, அதிகாரத்தைப் பெறுவதற்கான வாய்ப்பை ஆங்கிலம் ஏன் தீர்மானிக்க வேண்டும் போன்ற கேள்விகள் அதிகளவில் எழத் தொடங்கின.

இங்குதான் மனக்கசப்பு வலுப்பெறத் தொடங்கியது. முக்கியமாக, இந்த மனக்கசப்பு ஆரம்பத்தில் காலனித்துவ முதலாளித்துவத்தை ஓர் அமைப்பாகக் கருதிச் செலுத்தப்படவில்லை. மாறாக அதன் மிகத் தெளிவாகத் தெரிந்த பயனாளிகளான ஆங்கிலம் பேசும் மேட்டுக்குடியினர் மீது செலுத்தப்பட்டது. இது ஒரு முக்கியமான பகுப்பாய்வுப் புள்ளியாகும். காலனித்துவ அரசியல் பொருளாதாரத்தின் முரண்பாடுகள் ஒரு சிறிய சலுகை பெற்ற வர்க்கத்திற்கும், ஒதுக்கப்பட்ட ஒரு பெரிய பெரும்பான்மையினருக்கும் இடையிலானவை வர்க்க சமத்துவமின்மையாகக் கருதப்படாமல், மொழி அநீதியாகத் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டன. ஆழமான கட்டமைப்பு ரீதியான குறைகள் வெளிப்படுத்தப்படும் களமாக மொழி மாறியது.

இந்தத் தவறான புரிதல் ஆழமான விளைவுகளை ஏற்படுத்தியது. சமத்துவமின்மையின் அடிப்படைக் கட்டமைப்புகளை மாற்றாமல், ஆங்கிலேயச் சலுகைகளைத் தகர்க்க முயன்ற ஓர் அரசியல் திட்டத்தின் தோற்றத்திற்கு இதுவழிவகுத்தது. வேறுவிதமாகக் கூறினால், மொழி ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டம், அமைப்பைக் குறிவைக்காமல் அதன் அறிகுறிகளை மட்டுமே குறிவைக்கும் ஒரு பகுதி விமர்சனமாக மாறியது. இது ஒரு முரண்பாடான இயக்கவியலை உருவாக்கியது. ஆங்கிலம் வெறுக்கப்பட்டும் விரும்பப்பட்டும் வந்தது. அது புறக்கணிப்பின் சின்னமாக நிராகரிக்கப்பட்டாலும், வாய்ப்புகளுக்கான ஒரு பாதையாகப் பின்தொடரப்பட்டது. இவ்வாறு, புறக்கணிப்புக்கும் இலட்சியத்திற்கும், அவமானத்திற்கும் இலட்சியத்திற்கும் இடையிலான ஒரு பதற்றமான களத்திலிருந்து மொழி அரசியல் உருவானது.

1948-இல் இலங்கை சுதந்திரத்தை நெருங்கிய நேரத்தில், இந்தப் பதட்டங்கள் ஒரு முக்கியமான கட்டத்தை எட்டியிருந்தன. காலனித்துவ அரசு, அதிகாரத்தைப் பெறுவதற்கான வழியை மொழி கட்டமைக்கும் ஒரு சமூகத்தை உருவாக்கியிருந்தது. ஆனால் அந்த அதிகாரத்தை சமமாக மறுபகிர்வு செய்வதற்கான ஒரு வழிமுறையை அது வழங்கவில்லை. காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசு இந்த முரண்பாட்டைப் பெற்றது. அது, அனைவரையும் உள்ளடக்குதல், கண்ணியம் மற்றும் வாய்ப்புகளைக் கோரும் ஒரு மக்கள் தொகையை எதிர்கொண்டது. ஆனால் சமத்துவமின்மையின் மொழியியல் அடிப்படைகளைக் கையாள்வதற்கான ஒரு சீரான கட்டமைப்பு அதனிடம் இல்லை.

இந்தக் கட்டுரை, ஆங்கில எதிர்ப்பு உணர்வின் எழுச்சியையும் மொழியியல் சீர்திருத்தத்திற்கான கோரிக்கையையும் இந்த பரந்த வரலாற்றுச் சூழலில் நிலைநிறுத்துகிறது. சிங்களம் மட்டும் இயக்கத்தை வெறுமனே கலாசார தேசியவாதமாகப் புரிந்துகொள்ளாமல், மொழியியல் ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு புறக்கணிப்பு அமைப்புக்கு எதிரான வர்க்கம் சார்ந்த ஒரு எதிர்வினையாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்று இது வாதிடுகிறது. இருப்பினும், இங்கு விளக்க

விருப்பது போல, வர்க்கக் குறைகள் மொழியியல் அரசியலாக உருமாறியது. அது தனக்கே உரிய முரண்பாடுகளைக் கொண்டிருந்தது. அவை இலங்கையின் காலனித்துவத்திற்குப் பிந்தைய வரலாற்றின் போக்கை வடிவமைத்தன.

கல்வி, வர்க்க உருவாக்கம் மற்றும் ஆங்கிலம் பேசும் மேட்டுக்குடியினரை ஆய்வு செய்வதன் மூலம், இக்கட்டுரை மொழியியல் அரசியலின் பொருள் சார் அடித்தளங்களை வெளிக்கொணர முயல்கிறது. இது அடையாளம், கலாசாரம் குறித்த விவரிப்புகளுக்கு அப்பால் சென்று, மொழி எவ்வாறு அதிகாரக் கட்டமைப்புகளில் வேரூன்றியது என்பதையும், மொழி மீதான போராட்டம் அதன் சாரத்தில், ஆளவும், பணியாற்றவும், ஒரு சமூகத்தில் அங்கம் வகிக்கவும் யாருக்கு உரிமை உண்டு என்பதற்கான போராட்டமாக எவ்வாறு இருந்தது என்பதையும் காட்டுகிறது.

காலனித்துவக் கல்வியும் சமமற்ற வாய்ப்பும்:

இலங்கையில் காலனித்துவக் கல்வி என்பது தற்செயலானதோ நன்மை பயக்கும் நோக்கமுடையதோ அல்ல. அது, காலனியாதிக்க ஆட்சிக்குத் தேவையான ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அதிகாரிகளை உருவாக்கும் அதே வேளையில், பெரும்பான்மையான மக்களை முறையான அதிகார வட்டங்களுக்கு வெளியே விட்டுவிடும் வகையில் வடிவமைக்கப்பட்ட, ஓர் உத்திசார்ந்த சமமற்ற அமைப்பாகும். இந்த அர்த்தத்தில், கல்வியை அனைவருக்குமான பொது நன்மையாகக் கருதாமல், காலனித்துவ முதலாளித்துவத்தின் தேவைகளுடன் இணைந்த ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட முதலீடாகவே புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த அமைப்பின் மையத்தில் ஒரு அடிப்படை முரண்பாடு இருந்தது. காலனித்துவ அரசு தனது விரிவடைந்து வரும் பொருளாதார, அதிகாரத்துவ அமைப்புகளை நிர்வகிக்க எழுத்தறிவும் ஒழுக்கமும் கொண்ட ஒரு தொழிலாளர் படையை நாடியது. அதே சமயம், அது அறிவு, அணுகல் ஆகிய வற்றின் படிநிலைகளைப் பேணுவதையும் சார்ந்திருந்தது.

> ***இலங்கையில் ஆங்கிலக் கல்வியின் விரிவாக்கமானது, பெரும்பாலும் கிறிஸ்தவ மிஷனரிகளால் முன்னெடுக்கப்பட்டது. அவற்றின் கல்வி நிறுவனங்கள், மொழி மற்றும் சமூக நகர்வுக்கான முதன்மை வழிகளாகத் திகழ்ந்தன. இருப்பினும், இந்த விரிவாக்கம் நாடு முழுவதும் சீரற்ற முறையில் பரவியிருந்தது.***

அனைவருக்குமான கல்வி, மேட்டுக்குடியினரின் சிறப்புரிமை சார்ந்திருந்த பற்றாக்குறையை அரித்து, இந்தப் படிநிலையைச் சீர்குலைத்திருக்கும். இது நன்குணரப்பட்டதால், ஓர் இரட்டை அமைப்பு உருவானது. ஒரு சிலருக்கு உயர்தர ஆங்கில வழிக் கல்வியும், பலருக்கு வரையறுக்கப்பட்ட தாய்மொழிக் கல்வியும் சாத்தியமாக்கப் பட்டது.

இலங்கையில் ஆங்கிலக் கல்வியின் விரிவாக்கமானது, பெரும்பாலும் கிறிஸ்தவ மிஷனரிகளால் முன்னெடுக்கப்பட்டது. அவற்றின் கல்வி நிறுவனங்கள், மொழி மற்றும் சமூக நகர்வுக்கான முதன்மை வழிகளாகத் திகழ்ந்தன. இருப்பினும், இந்த விரிவாக்கம் நாடு முழுவதும் சீரற்ற முறையில் பரவியிருந்தது. கல்வி வாய்ப்புகளைப் புவியியல் எவ்வாறு வடிவமைத்தது என்பதற்கு யாழ்ப்பாணக் குடாநாடு மிகத் தெளிவான எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. அமெரிக்க ஐரோப்பிய மிஷனரிகள் இப்பகுதியில் பாடசாலைகளின் அடர்த்தியான வலையமைப்பை நிறுவி, ஆங்கிலக் கற்பித்தலில் பெருமளவில் முதலீடு செய்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், தெற்காசியாவிலேயே மிக உயர்ந்த எழுத்தறிவு விகிதங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் விளங்கியது. இது ஆழமான விளைவுகளை ஏற்படுத்தியது. இந்த நிறுவனங்களில் கல்விகற்ற தமிழ் மாணவர்களால் பின்வருவனவற்றைச் செய்யமுடிந்தது:

- எழுத்தர் மற்றும் நிர்வாகப் பணிகளில் சேருதல்
- மருத்துவம், சட்டம், மற்றும் பொறியியல் துறைகளில் உயர்கல்வியைத் தொடருதல்
- தொழில்முறைப் பணிகளுக்காக இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் இடம்பெயர்தல்

கட்டமைப்பு ரீதியான கண்ணோட்டத்தில், இது உள்ளார்ந்த அனுகூலத்தின் விளைவாக அல்ல, மாறாக வரலாற்று ரீதியாக நிறுவன வளங்களை அணுகுவதில் இருந்த தற்செயலான வாய்ப்புகளின் விளைவாகும். ஆயினும், பிற்கால அரசியல் உரையாடல்கள் நிரூபித்தபடி, இந்தச் சீரற்ற வளர்ச்சியானது கட்டமைப்பு ரீதியான கண்ணோட்டத்திற்குப் பதிலாக இன ரீதியான கண்ணோட்டத்தின் மூலமே விளக்கப் பட்டது.

சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பல கிராமப்புற மாவட்டங்களில், சமயப் பரப்புரையாளர்களின் இருப்பு குறைவாகவே இருந்தது. மேலும் கல்வியில் அரசாங்கத்தின் முதலீடும் குறைவாகவே இருந்தது. பாடசாலைகள் இருந்த போதிலும், அவற்றுக்கு பெரும்பாலும் போதிய நிதி ஒதுக்கப் படவில்லை, போதுமான பணியாளர்கள் இல்லை, மேலும் அவை முன்னேற்றத்தை விட அடிப்படை எழுத்தறிவை நோக்கியே அமைந்திருந்தன. ஒரு கிராமப் பாடசாலையில் சிங்களம் பேசும் குழந்தை, ஆங்கிலத்துடன் அர்த்தமுள்ள தொடர்பு ஏதுமின்றி ஆரம்பக் கல்வியை முடிக்கக்கூடும். ஆங்கிலம் அறிமுகப்படுத்தப்பட்டபோதும், அது பெரும் பாலும் ஆழ்ந்த ஈடுபாடோ அல்லது நடைமுறைப் பயன் பாடோ இன்றி, இயந்திரத்தனமாகவே கற்பிக்கப்பட்டது. அத் தகைய பாடசாலைகளிலிருந்து உயர்கல்வி அல்லது அரசு வேலை வாய்ப்பிற்கான பாதை கட்டமைப்பு ரீதியாகத் தடுக் கப்பட்டிருந்தது.

இவ்வாறு, புவியியலே விதியாக மாறியது. கல்வி வாய்ப்புகள் வகுப்புகளுக்கு இடையில் மட்டுமல்லாமல், பிராந்தியங்க ளுக்கு இடையேயும் சீரற்றதாக இருந்தன. இது மொழியிலும் அதிகாரத்திலும் ஓர் இடஞ்சார்ந்த ஏற்றத்தாழ்வை உருவாக் கியது. காலனித்துவக் கல்வி, பரந்த சமூகப் படிநிலைகளைப் பிரதிபலித்து வலுப்படுத்தும் வகையில், ஒரு தெளிவான படி நிலையாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. அதன் உச்சத்தில், விரிவான ஆங்கில வழிக் கல்வியை வழங்கிய உயர்தர நிறு வனங்களான அரசாங்கக் கல்லூரிகளும் நகர்ப்புற மையங் களில் உள்ள சமயப் பாடசாலைகளும் இருந்தன. இந்தப் பள்ளிகளில் பின்வருவன இருந்தன:

- தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் (பெரும்பாலும் பிரிட்டிஷ் கற் பித்தல் முறைகளில் பயிற்சி பெற்றவர்கள்)
- பாடப் புத்தகங்கள், ஆய்வகங்கள், பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளுக்கான அணுகல்
- பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்முறை வலைய மைப்புகளுடன் வலுவான தொடர்புகள்

அவற்றுக்குக் கீழே, சிங்களம் அல்லது தமிழில் இயங்கிய தாய் மொழிப் பாடசாலைகள் இருந்தன. இவை பொதுவான சில பண்புகளைக் கொண்டிருந்தன:

- அடிப்படை எழுத்தறிவு மற்றும் கணிதத்தில் மட்டும் கவனம் செலுத்தின
- வளங்களும் பயிற்சி பெற்ற பணியாளர்களும் பற்றாக்கு றையாக இருந்தன
- உயர்கல்விக்கு வரையறுக்கப்பட்ட முன்னேற்றத்தையே வழங்கின

ஆனால் 1930-களில் கொழும்பில் உள்ள ஒரு உயர்தர ஆங்கில வழிப் பாடசாலையில் சேரும் ஒரு மாணவர், நன்கு வரையறுக்கப்பட்ட ஒரு வழித்தடத்தின் வழியாக முன்னேறுவார்:

- ஆங்கிலத்தில் இடைநிலைக் கல்வி
- தரப்படுத்தப்பட்ட தேர்வுகளில் வெற்றி
- பல்கலைக்கழகம் அல்லது தொழில்முறைப் பயிற்சியில் நுழைவு
- அரசுப் பணி அல்லது தொழில்களில் வேலைவாய்ப்பு

இந்த வழித்தடம், மொழியை அதன் மைய வடிகட்டியாகக் கொண்டு, சலுகைகளின் ஒரு மூடிய சுற்றாகச் செயற்பட்டது. இதற்கு மாறாக, ஒரு தாய்மொழியில் பயிலும் மாணவர், துண்டுதுண்டான மற்றும் நிச்சயமற்ற ஒரு பாதையை எதிர் கொண்டார். மொழித் தேவைகள், தேர்வு வடிவங்கள் மற்றும் சமூக வலைப்பின்னல்கள் போன்ற நிறுவனத் தடைகள் மேல் நோக்கிய நகர்வைக் கட்டுப்படுத்தியதால், சிறப்பான செயற் றிறன் கூட முன்னேற்றத்திற்கு உத்தரவாதம் அளிக்கவில்லை. ஆங்கில மற்றும் தாய்மொழிக் கல்விக்கு இடையிலான பிளவு வெறும் மொழி சார்ந்ததாக மட்டும் இருக்கவில்லை. அது அறிவாராய்ச்சி சார்ந்ததாகவும் இருந்தது. ஆங்கில வழிக் கல்வி, அறிவியல், சட்டம், பொருளாதாரம் போன்ற உலகளாவிய அறிவு அமைப்புகளுக்கான அணுகலை வழங் கியது. அதேசமயம் தாய்மொழிக் கல்வி உள்ளூர் மற்றும் பெரும்பாலும் பாரம்பரியப் பாடங்களுக்குள் மட்டுமே கட்டுப் படுத்தப்பட்டிருந்தது. இது அறிவின் ஒரு படிநிலையை உரு வாக்கியது. ஆங்கிலத்தில் பயிற்சிபெற்றமாணவர்கள் காலனித் துவ ஆட்சியுடன் இணைந்த ஓர் உலகக் கண்ணோட்டத்தை உள்வாங்கிக் கொண்டனர், அதே சமயம் தாய்மொழிமாண வர்கள் அந்த அறிவுலகத்திலிருந்து விலக்கப்பட்டனர்.

உதாரணமாக, சட்டப் பயிற்சி ஆங்கிலத்தில் நடத்தப்பட்டது, மேலும் ஆங்கிலப் புலமை இல்லாதவர்களுக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் பெரும்பாலும் அணுக முடியாதவையாக இருந்தன. இதன் பொருள், சட்டத்தைப் புரிந்துகொள்வதற் கும் - அதனால் அதை எதிர்ப்பதற்கும் ஓர் ஆங்கில மொழிச் சூழலில் நுழைவது அவசியமாக இருந்தது. இவ்வாறு மொழி, வேலைகளுக்கான அணுகலை மட்டுமல்ல, அதிகாரத்தைப் பற்றிய அறிவிற்கான அணுகலையும் கட்டுப்படுத்தியது. காலனித்துவக் கல்வி வெறுமனே சமத்துவமின்மையை உரு வாக்கவில்லை. அது தலைமுறைகள் தோறும் அதை மீண் டும் மீண்டும் உருவாக்கியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலக் கல்வியைப் பெற்ற குடும்பங்கள், அந்த நன்மையை தங்கள் குழந்தைகளுக்குக் கடத்த முடிந் தது. ஆங்கிலம் பேசும் குடும்பங்கள்:

- முறையான கல்விக்கு மதிப்பளித்தன
- குழந்தைகளை உயர்தரப் பள்ளிகளுக்கு அனுப்பும் வளங்களைக் கொண்டிருந்தன
- வேலைவாய்ப்பை எளிதாக்கும் வலையமைப்புகளைப் பராமரித்தன

காலப்போக்கில், இது தன்னைத்தானே வலுப்படுத்திக்கொள் ளும் ஒரு மேட்டுக்குடியினரை உருவாக்கியது, அங்கு மொழி, கல்வி மற்றும் வர்க்க அந்தஸ்து ஆகியவை இறுக்கமாகப்

> ***காலனித்துவக் கல்வி பெரும்பாலும் தகுதியின் அடிப்படையில் - தேர்வுகள், செயற்றிறன் மற்றும் தனிப்பட்ட சாதனை ஆகியவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டது. ஆயினும், இந்தத் தகுதியாட்சி ஆழமான குறைபாடுகளைக் கொண்டிருந்தது. தேர்வுகள் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டு, ஏற்கனவே தேர்ச்சி பெற்றவர்களுக்குச் சலுகை அளிக்கப்பட்டது.***

பின்னிப் பிணைந்திருந்தன. இதற்கிடையில், தாய்மொழி பேசும் குடும்பங்களுக்கு இந்தச் சுழற்சிக்குள் நுழையத் தேவையான வளங்களும் நிறுவன ரீதியான அணுகலும் இல்லை. வாய்ப்புகள் விரிவடைந்தபோதும், மொழி மூல தனத்தில் இருந்த ஆரம்ப இடைவெளியைக் கடப்பது கடின மாக இருந்தது. இவ்வாறு மொழி, தகுதி என வேடமிட்டு, ஒரு பரம்பரைச் சலுகையாகச் செயற்பட்டது.

காலனித்துவக் கல்வி பெரும்பாலும் தகுதியின் அடிப்படையில் - தேர்வுகள், செயற்றிறன் மற்றும் தனிப்பட்ட சாதனை ஆகியவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டது. ஆயினும், இந்தத் தகுதியாட்சி ஆழமான குறைபாடுகளைக் கொண்டிருந்தது. தேர்வுகள் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டு, ஏற்கனவே தேர்ச்சி பெற்றவர்களுக்குச் சலுகை அளிக்கப்பட்டது. ஒரு மாணவரின் வெற்றி, அறிவுத்திறன் அல்லது முயற்சியை மட்டும் சார்ந்திருக்கவில்லை, மாறாக ஆங்கிலக் கல்விக்கான முந்தைய அணுகலையும் சார்ந்திருந்தது.

இது ஒரு வட்ட வடிவ தர்க்கத்தை உருவாக்கியது: ஆங்கிலக் கல்வி → தேர்வுகளில் வெற்றி → வாய்ப்புகளுக்கான அணுகல் → ஆங்கிலக் கல்வியை வலுப்படுத்துதல். இந்த வட்டத்திற்கு வெளியே இருந்தவர்கள், அவர்களின் திறமையைப் பொருட்படுத்தாமல், விலக்கப்பட்டனர். இந்த அமைப்பில், தகுதி என்பது கட்டமைப்பு ரீதியான சமத்துவமின்மைக்கான ஒரு கருத்தியல் மறைப்பாகச் செயற்பட்டது.

கல்விக்கும் வேலைவாய்ப்புக்கும் இடையிலான தொடர்பு நேரடியானதாக இருந்தது. காலனித்துவ அரசுக்கு எழுத்தறிவு பெற்ற அதிகார வர்க்கம் தேவைப்பட்டது, மேலும் ஆங்கிலக் கல்வி அதற்குத் தேவையான திறன்களை வழங்கியது. எழுத்தர் மற்றும் நிர்வாகப் பணிகள் உட்பட, அரசுப் பணியில் உள்ள பதவிகளுக்கு ஆங்கிலப் புலமை தேவைப்பட்டது. இதன் பொருள், கல்வி என்பது வேலைவாய்ப்புக்கான ஒரு தயாரிப்பு மட்டுமல்ல அது அரசில் நுழைவதற்கான ஒரு முன்நிபந்தனையாகவும் இருந்தது.

இவ்வாறு அரசு பின்வருவன இரண்டாகவும் ஆனது:

- ஒரு முக்கிய வேலையளிப்பவர்
- மொழிப் படிநிலையை மீண்டும் உருவாக்கும் ஒரு பொறிமுறை

அதன் கட்டமைப்பு விளைவுகளுக்கு அப்பால், காலனித்துவக் கல்வி ஒரு தனித்துவமான உணர்ச்சி நிலப்பரப்பை உருவாக்கியது. ஒதுக்கப்பட்டவர்களுக்கு, இந்த அமைப்பு பின்வரும் உணர்வுகளை உருவாக்கியது:

- தடுக்கப்பட்ட முன்னேற்றத்தால் ஏற்படும் விரக்தி
- ஆங்கிலம் பேசும் அதிகாரிகளுடனான தொடர்புகளில் ஏற்படும் அவமானம்
- தொலைவில் உள்ளவர்களாகவும், சிறப்புரிமை பெற்றவர்களாகவும் கருதப்படும் ஒரு மேட்டுக்குடியினரின் மீது ஏற்படும் மனக்கசப்பு

1940-களில் சிங்களத்தில் கல்வி கற்ற ஒரு பட்டதாரியிடம் எழுத்தறிவு, ஒழுக்கம் மற்றும் லட்சியம் இருக்கலாம், ஆனாலும் அவர் வரையறுக்கப்பட்ட வாய்ப்புகளையே எதிர்கொண்டார். பெரும்பாலும் இளையவராகவும், ஆனால் மொழி ரீதியாக சிறப்புரிமை பெற்றவராகவும் இருக்கும் ஓர் ஆங்கிலம் பேசும் அதிகாரியைச் சந்திப்பது, தனிப்பட்ட மற்றும் அரசியல் ரீதியான அநீதி உணர்வை ஏற்படுத்தக்கூடும். இந்த அன்றாட அனுபவங்கள் மனக்கசப்பின் ஒரு பரந்த உணர்ச்சிப் பொருளாதாரமாகத் திரண்டன, இது பின்னர் அரசியல் வாதிகளால் அணிதிரட்டப்பட்டது. இலங்கையில் காலனித்துவக் கல்வி ஒரு மேட்டுக்குடியினரை மட்டும் உருவாக்கவில்லை. அது மொழியின் மூலம் கட்டமைக்கப்பட்ட சமமற்ற வாய்ப்புகளின் ஒரு அமைப்பை உருவாக்கியது. இந்த அமைப்பு இடரீதியாக சீரற்றதாகவும், நிறுவன ரீதியாகப் படிநிலைப்படுத்தப்பட்டதாகவும், சமூக ரீதியாக மீண்டும் மீண்டும் உருவாக்கக் கூடியதாகவும் இருந்தது. அது கல்வியை வேலைவாய்ப்புடனும், மொழியை அதிகாரத்துடனும், அறிவை ஆளுமையுடனும் இணைத்தது.

முக்கியமாக, அது தனக்கே உரிய எதிர்ப்புகளுக்கான நிலைமைகளையும் உருவாக்கியது. கல்விக்கான அணுகல் விரிவடைந்து, அரசியல் பங்கேற்பு பெருகியபோது, மொழிப் புறக்கணிப்பை அடிப்படையாகக் கொண்ட ஓர் அமைப்பின் சட்டபூர்வத்தன்மை ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. மாற்றத்திற்கான கோரிக்கை வெறும் கலாசார ரீதியானது மட்டுமல்ல. அது சமத்துவமின்மையிலும் அநீதி குறித்த வாழ்வியல் அனுபவங்களிலும் வேரூன்றியிருந்தது. ஆயினும், இந்த அமைப்பின் மீதான விமர்சனம் அதன் கட்டமைப்பு அடித்தளங்களை முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை. மாறாக, அது மொழியைப் பிரச்சினையாகவும் தீர்வாகவும் கருதியது. அவ்வாறு செய்வதன் மூலம், அது படிநிலைகளைக் கலைக்காமல் அணுகலை மறுபகிர்வு செய்யும் ஓர் மாற்றத்திற்கான களத்தை அமைத்தது - அந்த மாற்றத்தின் விளைவுகள் இலங்கையின் அரசியல் மற்றும் சமூக நிலப்பரப்பைத் தொடர்ந்து வடிவமைத்து வருகின்றன.

பொருளாதார மூலதனமாக ஆங்கிலம்: அரசில் நுழைவதற்கான வழி:

இலங்கையில் காலனித்துவ அரசு என்பது வெறும் ஓர் அரசியல் அதிகார மையமாக மட்டுமன்றி, படித்த மனிதவளத்தை வேலைக்கு அமர்த்தும் மிக முதன்மையான, ஒரேயொரு பெருநிறுவனமாகவும் விளங்கியது. பெரும்பாலும் விவசாயத்தையே வாழ்வாதாரமாகக் கொண்ட, மிகக் குறைந்த அள

விலான தொழிற்துறை வளர்ச்சியைக் கொண்டிருந்த ஒரு பொருளாதாரச் சூழலில், அரசு வேலைவாய்ப்பைப் பெறுவது என்பது நிலையான வருமானம், சமூகப் படிநிலை உயர்வு மற்றும் நகர்மயமாக்கலுக்குள் ஒருங்கிணைதல் ஆகியவற்றிற்கான சில நம்பகமான வழிகளில் ஒன்றாக இருந்தது. ஆயினும், இந்த அதிகாரத்துவப் பாதை கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அரசின் நிர்வாக அமைப்பிற்குள் நுழைவது என்பது ஒருவரின் உள்ளார்ந்த அறிவுத்திறன், விடாமுயற்சி அல்லது முறையான கல்வி ஆகியவற்றால் மட்டும் தீர்மானிக்கப்படவில்லை; மாறாக, 'ஆங்கிலம்' என்ற பிரத்யேக மொழி மூலதனத்தைக் கொண்டிருப்பதன் மூலமே அது தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தேவை, ஆங்கிலத்தை ஒரு தீர்க்கமான பொருளாதாரச் சொத்தாக மாற்றியதுடன், அது இருவேறு உலகங்களுக்கு இடையிலான ஒரு 'வாயில் காப்பாளராகப்' பணியாற்றியது. ஒருபுறம், தாய்மொழி மட்டுமே பேசும் பெரும்பான்மை மக்களின் பாதுகாப்பற்ற, முறை சாரா, பெரும்பாலும் நிலையற்ற வாழ்வாதாரப் பொருளாதாரம்; மறுபுறம், முறையான சம்பளம், ஓய்வூதியம் மற்றும் நிறுவன ரீதியான பாதுகாப்பைக் கொண்ட அரசு வேலை வாய்ப்புத் துறை என அது சமூகத்தைப் பிளந்தது. காலனித்துவ அதிகாரத்துவமானது, அதன் உயர் பதவிகள் முதல் சாதாரண எழுதுவினைஞர் தளம் வரை, ஆங்கிலத்தையே அதன் அலுவல் மொழியாகவும், அதன் உள்ளார்ந்த தர்க்கமாகவும் கொண்டு இயங்கியது. எனவே, இந்த உலகிற்குள் நுழைவது என்பது வெறும் ஒரு வேலையைப் பெறுவது மட்டுமல்ல, மாறாக காலனித்துவ ஆட்சி அமைப்பிற்குள்ளேயே ஒரு கட்டமைப்பு ரீதியான அதிகாரப் பதவியைப் பெற்றுக் கொள்வதாகும்.

குறிப்பாக, எழுதுவினைஞர் பணி, மொழி எவ்வாறு ஒரு பொருளாதார மூலதனமாகச் செயற்பட்டது என்பதை விளக்குகிறது. எழுதுவினைஞர்கள் காலனித்துவ நிர்வாக அமைப்பின் முதுகெலும்பாக விளங்கினர். அவர்கள் பதிவேடுகளைப் பராமரித்தனர், கடிதங்களை வரைந்தனர், விண்ணப்பங்களைச் செயற்படுத்தினர், அரசாங்க அலுவலகங்களின் அன்றாடச் செயற்பாடுகளை உறுதி செய்தனர். உயர் அதிகாரப் பதவிகளில் இல்லாவிட்டாலும், காலனித்துவ அதிகாரத்தை மீண்டும் உருவாக்குவதற்கு எழுதுவினைஞர்கள் இன்றியமையாதவர்களாக இருந்தனர். அவர்களின் பணிக்குத் துல்லியம், அதிகாரத்துவ நடைமுறைகள் குறித்தபரிச்சயம், மிக முக்கியமாக, ஆங்கிலத்தில் சரளமான புலமை தேவைப்பட்டது.

1920-கள் முதல் 1940-கள் வரையிலான எழுதுவினைஞர் பணித் தேர்வுகள், மொழி மூலதனம் அரசை அணுகுவதற்கான வழியை எவ்வாறு கட்டமைத்தது என்பதற்கு ஒரு தெளிவான பார்வையை வழங்குகின்றன. இந்தத் தேர்வுகள் முழுவதுமாக ஆங்கிலத்தில் நடத்தப்பட்டன. அவை இலக்கணத் திறனைச் சோதித்தது மட்டுமல்லாமல், முறையான கடிதம் எழுதுதல், பதிவேடுகளைப் பராமரிக்கும் வடிவங்கள், அதிகாரத்துவ பகுத்தறிவு போன்ற நிர்வாக மரபுகளைப் பற்றிய புரிதலையும் தேர்வர்கள் வெளிப்படுத்த வேண்டியிருந்தது. ஆங்கில வழிக் கல்வி நிறுவனங்களில் கல்விகற்ற தேர்வர்களுக்கு, இது அவர்களின் பாடசாலைக் கல்வியின் ஒரு நீட்சியாக இருந்தது. தேர்வினால் எதிர்பார்க்கப்படும் மொழி வடிவங்கள் மற்றும் அறிவாற்றல் பாணிகள் அவர்களுக்கு ஏற்கனவே பரிச்சயமாக இருந்தன. அவர்களின் பயிற்சி, அத்தகைய பணிகளுக்கு அவர்களை மறைமுகமாகத் தயார் படுத்தியிருந்தது. அது அவர்களின் கல்வி அனுபவத்தை காலனித்துவ அரசின் தேவைகளுடன் சீரமைத்தது.

> ***தங்கள் சொந்த மொழிகளில் புத்திசாலிகளாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும், எழுத்தறிவு பெற்றவர்களாகவும் இருந்தவர்கள் கூட ஒரு கட்டமைப்புத் தடையை எதிர்கொண்டனர். தொடர்ச்சியான ஆங்கிலக் கல்விக்கான அணுகல் இல்லாததால், தேர்வுச் செயற்பாட்டில் அர்த்தமுள்ள பங்களிப்பிலிருந்து அவர்கள் திறம்பட விலக்கப்பட்டனர்.***

இருப்பினும், கிராமப்புற சிங்கள அல்லது தமிழ் பின்னணியைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு நிலைமை முற்றிலும் வேறுபட்டிருந்தது. தங்கள் சொந்த மொழிகளில் புத்திசாலிகளாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும், எழுத்தறிவு பெற்றவர்களாகவும் இருந்தவர்கள் கூட ஒரு கட்டமைப்புத் தடையை எதிர்கொண்டனர். தொடர்ச்சியான ஆங்கிலக் கல்விக்கான அணுகல் இல்லாததால், தேர்வுச் செயற்பாட்டில் அர்த்தமுள்ள பங்களிப்பிலிருந்து அவர்கள் திறம்பட விலக்கப்பட்டனர். பிரச்சினை வெறும் மொழிபெயர்ப்பு மட்டுமல்ல. அது மொழியியல் மூழ்கல் மற்றும் நிறுவனப் பரிச்சயமின்மை. காலனித்துவ நிர்வாகத்தின் மொழிநடைக்குள் சிந்திக்கவும், எழுதவும், பகுத்தறியவும் இயலாமை ஆகும்.

இந்த ஏற்றத்தாழ்வு, மொழிரீதியாக முன்கூட்டியே தகுதி பெற்ற ஒரு தொழிலாளர் குழுவை உருவாக்கியது. இத்தகைய தேர்வுகளில் பெறும் வெற்றி என்பது, தனிப்பட்ட தகுதியை மட்டும் பிரதிபலிப்பதில்லை; மாறாக அது வர்க்கம், புவியியல் மற்றும் கல்வி நிறுவனங்களின் வாய்ப்புகளால் தீர்மானிக்கப்படும் 'ஆங்கிலக் கல்விக்கான' முந்தைய அணுகலையே பிரதிபலிக்கிறது. ஆகவே, அந்தத் தேர்வு ஒரு நடுநிலையான மதிப்பீடாகச் செயல்படுவதற்குப் பதிலாக, ஆங்கிலம் பேசும் மேட்டுக்குடியினரின் சமூக மறுஉற்பத்திக்கான ஒரு கருவியாகவே அதிகம் செயல்பட்டது.

இந்தப் புறக்கணிப்பின் ஆழத்தைப் புரிந்துகொள்ள, 1930-களில் சிங்களத்தில் கல்விகற்ற ஒரு கிராமப்புற இளைஞர் ஒருவரின் பயணத்தைக் கருத்தில் கொள்ளுவோம். ஒரு தாய்மொழிக் கல்வி நிறுவனத்தில் தனது பாடசாலைக் கல்வியை முடித்திருந்ததால், அவர் சிங்களத்தில் வலுவான எழுத்தறிவையும், கணிதத்தில் நடைமுறை அறிவையும், ஒழுக்கமான பணி நெறிமுறையையும் பெற்றிருக்கலாம். ஆயினும், எழுதுவினைஞர் பணியில் நுழைய முயற்சிக்கும்போது, ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் திறனை எதிர்பார்க்கும் ஒரு தேர்வு முறையை அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பிற்காலத்தில் அவர் ஆங்கிலம் கற்க முயன்றாலும் தனிப்பட்ட படிப்பு மூலமாகவோ குறைந்த அளவிலான பயிற்சி மூலமாகவோ

அந்த இடைவெளியைக் குறைப்பது கடினமாக இருந்தது. அந்தக் காலகட்டத்தில் மொழி கையகப்படுத்துதல் என்பது வெறும் சொற்களஞ்சியத்தைப் பற்றியது மட்டுமல்ல. அது காலனித்துவ நெறிகளாலும் எதிர்பார்ப்புகளாலும் வடிவமைக் கப்பட்ட ஒரு முழுமையான வெளிப்பாட்டு முறையிலும் தேர்ச்சி பெறுவதை உள்ளடக்கியிருந்தது. ஆங்கிலம் அன்றாடம் பயன் படுத்தப்படும் சமூக, நிறுவனச் சூழல்களுக்கான அணுகல் இல்லாமல், அவரது வெற்றிவாய்ப்புகள் மிகக் குறைவாகவே இருந்தன.

இதன் விளைவாக, சமூக முன்னேற்றத்தில் ஒரு ஆழமான முடக்கம் ஏற்பட்டது. கல்வி, இளைஞர்களின் எதிர்பார்ப்பு களை உயர்த்தியிருந்ததே தவிர, அதற்கேற்ப வாய்ப்புகளின் கட்டமைப்பு மாறவில்லை. கிராமப்புற இளைஞர் ஒருவர் அரசு அதிகாரத்துவத்தின் வாசலில் நின்றார்; உள்ளே இருக் கும் சாத்தியக்கூறுகளை அவர் அறிந்திருந்த போதிலும், மொழித் தடை என்னும் வேலி அவரை உள்ளே நுழைய விடாமல் தடுத்தது. இதற்கு நேர்மாறாக, ஆங் கில வழிக் கல்விப் பின்னணியைக் கொண்ட ஒரு இளைஞர், இயல்பான சமூகக் கட்டமைப்புச் சாதகங்களுடன் அதே தேர்வை அணுகினார். அவரது பள்ளிப்படிப்பு அவருக்கு மொழியைத் தாண்டி, காலனித்துவ அதிகார வர்க்கம் போற்றிய பகுத்தறிவு, சிந்தனை முறை மற்றும் வெளிப் பாட்டு வடிவங்களையும் அனாயாசமாகப் பழகி யிருந்தது. அவரால் அதிகாரப்பூர்வ நடையில் கடிதங்களை எழுதவும், நிர்வாக நடைமுறைக ளைப் புரிந்து கொள்ளவும், தகவல் தொடர்பின் நுணுக்கங்களை லாவகமாகக் கையாளவும் முடிந் தது. மேலும், ஆசிரியர்கள், குடும்ப உறுப்பினர் கள் மற்றும் ஏற்கனவே அந்த அதிகார அமைப் பிற்குள் செல்வாக்குடன் இருந்த முன்னோடிகள் போன்ற 'சமூக வலையமைப்புகள்' அவருக்குக் கூடுதல் பலமாக அமைந்தன. தேர்வுகள், எதிர் பார்ப்புகள் மற்றும் தொழில் பாதைகள் குறித்த உள்விவரங்கள் இந்த வலயங்களுக்குள்ளேயே பரிமாறப்பட்டு, அவர்களின் அனுகூல நிலையை மேலும் வலுப்படுத்தின. சுருக்கமாகக் கூறின், இங்கு வெற்றி என்பது ஒரு தனிமனிதனின் உழைப் பால் உருவான சாதனையாக இருக்கவில்லை; மாறாக, அது சமூகத்தின் வர்க்கக் கட்டமைப் பால் முன்கூட்டியே திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்ட ஒரு செயல்முறையின் விளைவாகவே அமைந்தது.

“ஆங்கிலப் புலமை என்பது வெறும் தகுதியாக மட்டுமன்றி, ஒரு சமூக அங்கீகாரத்திற்கான சான்றாகவும் செயல்பட்டது. அது ஒருவரது மொழித் திறனை நிலைநாட்டுவதோடு நின்றுவிடாமல், அவர் அரசுடன் நெருக்கமானதொரு குறிப்பிட்ட சமூக அடுக்கைச் சேர்ந்தவர் என்பதையும் பிரகடனப்படுத்தியது.”

இத்தகைய சூழலில், ஆங்கிலப் புலமை என்பது வெறும் தகுதியாக மட்டுமன்றி, ஒரு சமூக அங்கீ காரத்திற்கான சான்றாகவும் செயல்பட்டது. அது ஒருவரது மொழித் திறனை நிலைநாட்டுவதோடு நின்றுவிடாமல், அவர் அரசுடன் நெருக்கமானதொரு குறிப்பிட்ட சமூக அடுக்கைச் சேர்ந்தவர் என்பதையும் பிரகடனப்படுத்தியது. இச்செயல்மு றைகளின் ஒட்டுமொத்த விளைவாக, இனரீதியாகப் பன்முகத் தன்மை கொண்ட, ஆனால் மொழிரீதியாக ஒரே மாதிரியான ஓர் அதிகாரத்துவக் கட்டமைப்பு உருவானது. அதிகாரிகள் சிங்களவராகவோ, தமிழராகவோ அல்லது பர்கர் (Burgher) சமூகத்தைச் சேர்ந்தவராகவோ இருந்தபோதிலும், அவர்கள் தங்களுக்குள் தொடர்புகொள்வதற்கான பொதுவான ஊடக மாக ஆங்கிலமே விளங்கியது. இது இன அடையாளங்களை விடவும், மொழியை மையமாகக் கொண்ட ஒரு புதிய வர்க்க அடையாளத்தை (Class Identity) உருவாக்கியது. இந்த அமைப்பின் மிக நீண்டகால எதிர்மறை விளைவுகளில் ஒன்று – தனிமனிதத் திறமையையும், ஆங்கிலச் சரளத்தையும் ஒன் றாகக் குழப்பிக் கொண்டமையாகும். ஒருவரின் நிர்வாகத் திறன், தொழில்முறைத் தகுதி மற்றும் நுண்ணறிவு ஆகியவை, அந் தத் தனிநபரின் உள்ளார்ந்த ஆற்றலாகப் பார்க்கப்படாமல், அவர் பேசும் மொழியின் தகுதியாகவே மதிப்பிடப்பட்டன.

இது முக்கியமான கருத்தியல் விளைவுகளை ஏற்படுத்தியது. இது ஆங்கிலம் பேசும் மேட்டுக்குடியினரின் ஆதிக்கத்தை இயல்பாக்கியது. அவர்களின் நிலையை அமைப்பு ரீதியான தல்லாமல், தகுதியின் விளைவாக முன்வைத்தது. அதே நேரத் தில், இதுதாய்மொழி பேசும் மக்களின் கோரிக்கைகளைச் செல்லாததாக்கியது. அவர்களின் விலக்கலை, அமைப்பு ரீதி யான சமத்துவமின்மையின் விளைவாகக் கருதுவதற்குப் பதி லாக, தகுதியின்மை எனக் கட்டமைக்க முடிந்தது. இந்த வகையில், எழுத்தர் பணித் தேர்வு என்பது ஒரு நடைமுறைத் தேர்வு முறையாக மட்டு மல்லாமல், ஆங்கிலமே திறமை மற்றும் ஆளுகையின் மொழி என்ற நம்பிக்கையை வலுப்படுத்தும் ஒரு கருத்தியல் கருவியா கவும் இருந்தது. எழுத்தர் பணியில் நுழை வதில் வெற்றி பெற்றவர்களுக்கு, கிடைத்த பலன்கள் மாற்றத்தை ஏற்படுத்துவதாக இருந்தன. ஓர் அரசாங்கப் பணி வருமா னத்தை மட்டுமல்ல, சமூக அடையாளத் தில் ஒரு மாற்றத்தையும் வழங்கியது. எழுத் தர், சம்பளம் பெறும் வர்க்கத்தின் ஒரு பகுதியாக ஆனார். பெரும்பாலும் நகர்ப் புற மையங்களுக்குக் குடிபெயர்ந்தார், புதிய சமூக வலைப்பின்னல்களில் பங் கேற்றார், மேட்டுக்குடி கலாசாரத்தின் அம் சங்களைத் தழுவினார். இந்த மாற்றம் தனி நபரைத் தாண்டியும் விரிவடைந்தது. அதி கரித்த வருமானம், அதிகமான கல்வி வாய்ப்புகளால் குடும்பங்கள் பயனடைந் தன. இது அடுத்த தலைமுறை தங்கள் நிலையை உறுதிப்படுத்தவும் விரிவுபடுத் தவும் உதவியது. காலப்போக்கில், இது ஆங்கிலப் புலமையை அடிப்படையாகக் கொண்ட, தன்னைத்தானே பெருக்கிக் கொள்ளும் ஒரு நிர்வாக வர்க்கத்தை உரு வாக்கியது.

நிர்வாக மொழியாக ஆங்கிலத்தை காலனித்துவ அரசு சார்ந் திருந்ததால், வேலைவாய்ப்பையும், அதன் நீட்சியாக அதிகா ரத்தையும் பெறுவதற்கான வழி, மொழி மூலதனத்தின் மூலம் தீர்மானிக்கப்படும் ஓர் அமைப்பு உருவானது. இந்த அமைப்பு எவ்வாறு செயற்பட்டது என்பதற்கு எழுதுவினைஞர் தேர்வு ஒரு தெளிவான உதாரணமாக விளங்குகிறது. அது தேர்வர் களைத் திறமையின் அடிப்படையில் மட்டுமல்லாமல், ஆங்கி லக் கல்வியில் அவர்கள் பெற்றிருந்த முன் அனுபவத்தின் அடிப்படையிலும் வடிகட்டியது. இந்த அமைப்பில், மொழி என்பது தகுதியிலிருந்து வேறுபடுத்த முடியாததாக மாறியது, மேலும் புறக்கணிப்பு என்பது தகுதியின்மையாக மறுவடிவம்

பெற்றது. உருவான அதிகார வர்க்கம் அதன் வரையறை களின் படி திறமையானதாக இருந்தது, ஆனால் அதன் அடித் தளங்களில் ஆழமான சமத்துவமற்றதாக இருந்தது.

ஆங்கிலத்தை ஒரு பொருளாதார மூலதனமாகப் புரிந்து கொள்வது, காலனித்துவ அரசு வாய்ப்புகளை எவ்வாறு திட்ட மிட்ட மற்றும் நீடித்த வழிகளில் கட்டமைத்தது என்பதைப் பார்க்க நமக்கு உதவுகிறது. இது மொழி சீர்திருத்தத்திற்கான காலனித்துவத்திற்குப் பிந்தைய கோரிக்கைகளின் தீவிரத்தை விளக்க உதவுகிறது. அரசை அணுகுவதற்கான வழி மொழி யின் மூலம் தீர்மானிக்கப்படும்போது, மொழிக்கான போராட் டம் என்பது, வேலை செய்வதற்கும், ஆட்சி செய்வதற்கும், ஒரு குழுவில் அங்கம் வகிப்பதற்கும் யாருக்கு உரிமை உண்டு என்பதற்கான போராட்டமாக, தவிர்க்க முடியாமல் மாறுகிறது.

யாழ்ப்பாணமும் தமிழ் பிரதிநிதித்துவப் பிரச்சினையும்:

இலங்கையில் காலனித்துவக் கல்வியின் அரசியல் ரீதியாக மிகவும் உணர்வுபூர்வமானதும், தொடர் விவாதங்களுக்குரிய துமான அம்சங்களில் ஒன்று – ஆங்கிலக் கல்வியைப் பெறுவ திலும், காலனித்துவ அரசின்கீழ் உயர் பதவிகளை அடைவ திலும் ஈழத்தமிழர்கள், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட் டைச் சேர்ந்தவர்கள் பெற்ற ஒப்பீட்டு வெற்றியாகும். இருப தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், யாழ்ப்பாணத் தமிழர்கள் எழுதுவினைஞர் பணிகள், தொழிற்துறைகள் மற்றும் நிர்வா கத்தின் கீழ்மட்டப் படிநிலைகளில் பெருமளவில் பரவிக் காணப்பட்டனர். இந்த நிருவாகப் பங்களிப்பு, பிற்காலத்தில் சிங்கள அரசியல் அதிருப்திகளின் மையப்புள்ளியாக மாறிய துடன், இது ஓர் இன ரீதியான சமத்துவமின்மை அல்லது பார பட்சத்தின் சான்றாகவும் கட்டமைக்கப்பட்டது. ஆயினும்,

> ***பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், யாழ்ப்பாணம் தெற்காசியாவின் கல்வியில் மிகவும் முன்னேறிய பிராந்தியங்களில் ஒன்றாகப் புகழ் பெற்றது. சமயப்பணிப் பள்ளிகள் ஆங்கிலத்தைக் கற்பித்தது மட்டுமல்லாமல், ஒழுக்கம், தேர்வு செயற்றிறன், தொழில்முறை லட்சியம் போன்ற பழக்கங்களையும் வளர்த்தன.***

இத்தகைய அரசியல் விளக்கங்கள், இந்த விளைவைத் தோற்றுவித்த ஆழமான கட்டமைப்பு இயக்கவியலை மறைத் துவிடுகின்றன. காலனித்துவ அரச அமைப்பில் ஆங்கிலம் பேசும் பிரிவுகளில் யாழ்ப்பாணத் தமிழர்கள் முக்கியத்துவம் பெற்றமை, காலனித்துவ ஆட்சியாளர்களால் அவர்களுக்குத் தன்னிச்சையாக அளிக்கப்பட்ட முன்னுரிமைச் சலுகைகளின் விளைவல்ல; மாறாக, கல்வி, சமூகக் கட்டமைப்பு மற்றும் சமயப் பரப்புரை வலையமைப்புகளின் மூலம் அங்கு வரலாற்று ரீதியாக உருவான பிரத்யேகச் சூழலின் விளைவாகும்.

யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக் கல்வியின் விரிவாக்கம், குறிப் பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, அமெரிக்க, ஐரோப்பிய கிறிஸ்தவ சமயப் பரப்புதல் மிஷனரி களின் செயற்பாடுகளுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டி ருந்தது. இந்த சமயப்பணிகள் தீபகற்பம் முழுவதும் பாடசா லைகளின் ஓர் அடர்த்தியான வலையமைப்பை நிறுவின. அவற்றில் பல, சமயம், மதச்சார்பற்ற பாடங்களுடன் ஆங்கி லத்திலும் தொடர்ச்சியான போதனைகளை வழங்கின. கல்வி வசதிகள் குறைவாகவும் சீரற்றதாகவும் இருந்த பல சிங்கள பெரும்பான்மை கிராமப்புறப் பகுதிகளைப் போலல்லாமல், யாழ்ப்பாணத்தில் கல்வி நிறுவனங்களின் செறிவு ஒப்பீட்ட ளவில் அதிகமாக இருந்தது. இது, எழுத்தறிவு விகிதங்கள் வேகமாக உயர்ந்த ஒரு உள்ளூர் சூழலை உருவாக்கியது. அங்கு ஆங்கிலக் கல்வி அனைவருக்கும் எளிதில் கிடைக் கக்கூடியதாகவும் சமூக ரீதியாக மதிக்கப்படக்கூடியதாகவும் ஆனது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், யாழ்ப்பாணம் தெற்காசியாவின் கல்வியில் மிகவும் முன்னேறிய பிராந்தியங் களில் ஒன்றாகப் புகழ் பெற்றது. சமயப்பணிப் பள்ளிகள் ஆங்கிலத்தைக் கற்பித்தது மட்டுமல்லாமல், ஒழுக்கம், தேர்வு செயற்றிறன், தொழில்முறை லட்சியம் போன்ற பழக்கங்களை யும் வளர்த்தன. இந்த நிறுவனங்களில் பயிற்சி பெற்றமாண வர்கள், எழுதுவினைஞர் பணிகளில் சேரவும், உயர் கல்வி கற்கவும், சட்டம், மருத்துவம், கற்பித்தல் போன்ற தொழில் முறைத் துறைகளில் தொழில் வாழ்க்கையை அடையவும் நல்ல நிலையில் இருந்தனர். இந்தக் கல்வி உள்கட்டமைப்பு ஒட்டுமொத்த விளைவுகளை ஏற்படுத்தியது. ஆங்கிலக் கல் வியை ஆரம்பத்திலேயே அணுகிப் பயனடைந்த குடும்பங் கள், அடுத்தடுத்த தலைமுறையினரின் கல்விக்காக மீண்டும் முதலீடு செய்தன. இது, தலைமுறை தலைமுறையாக மொழி மூலதனக் குவிப்பின் ஒரு சுழற்சியை உருவாக்கியது. காலப் போக்கில், யாழ்ப்பாண சமூகத்தின் சில பிரிவினரிடையே ஆங்கிலப் புலமை ஆழமாக வேரூன்றியது. இது காலனித் துவப் பொருளாதாரத்தில் அவர்கள் தொடர்ந்து பங்கேற்ப தற்கு வழிவகுத்தது. இருப்பினும், இந்த வளர்ச்சி தமிழ் சமூ கத்திற்குள்ளேயே கட்டமைப்பு ரீதியாக சீரற்றதாக இருந்தது என்பதை வலியுறுத்துவது மிகவும் அவசியம். சமயக் கல்விக் கான அணுகலும், அதன் விளைவாக ஆங்கிலத்திற்கான அணு கலும், சமமாகப் பகிரப்படவில்லை. அது வர்க்கம், புவியியல், முக்கியமாக, சாதி ஆகியவற்றால் தீர்மானிக்கப்பட்டது.

காலனித்துவக் கல்வியில் தமிழர்களின் வெற்றி குறித்த விவ ரிப்பு, சமூகத்திற்குள் கல்விக்கான அணுகலை வடிவமைத்த உள் படி நிலைகளை பெரும்பாலும் மறைத்துவிடுகிறது. யாழ்ப்பாணத்தில், பாரம்பரியமாக நில உடைமை மற்றும் சமூக அதிகாரத்துடன் தொடர்புடைய ஆதிக்க வெள்ளாளர் சாதியினர், சமயக் கல்வி மூலம் பயனடைய குறிப்பாக நல்ல நிலையில் இருந்தனர். அவர்களின் ஒப்பீட்டுப் பொருளாதார நிலைத்தன்மை, சமூக வலைப்பின்னல்கள், கல்வி நிறுவனங் களுடன் அவர்கள் முன்கூட்டியே கொண்டிருந்த ஈடுபாடு ஆகியவை, ஆங்கிலக் கல்விக்கான சமமற்ற அணுகலைப் பெற அவர்களுக்கு உதவின. இதற்கு மாறாக, ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த தமிழர்கள் குறிப்பிடத்தக்க தடைகளை எதிர்கொண்டனர். சமூகப் புறக்கணிப்பு, பொருளாதார நெருக் கடி, வரையறுக்கப்பட்ட கல்வி நிறுவன அணுகல் ஆகியவை கல்வி விரிவாக்கத்திலிருந்து பயனடையும் அவர்களின்

திறனைக் கட்டுப்படுத்தின. சில சமயங்களில், சமயக் கல்வி நிறுவனங்கள் விளிம்புநிலைக் குழுக்களுக்கு மேல்நோக்கிய முன்னேற்றத்திற்கான வழிகளை வழங்கின, ஆனால் இந்த வாய்ப்புகள் சீரற்றவையாகவும், பரந்த சமூக அமைப்பிற்குள் பெரும்பாலும் சர்ச்சைக்குரியவையாகவும் இருந்தன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், எழுதுவினைஞர் மற்றும் தொழில் முறைத் துறைகளில் நுழைந்த தமிழர்களில் கணிசமான விகிதத்தினர் வெள்ளாள சாதிப் பின்னணியிலிருந்து வந்தனர். இது வெறும் தகுதியின் பிரதிபலிப்பு மட்டுமல்ல, தமிழ் சமூகப் படிநிலைக்குள் இருந்த கட்டமைப்பு ரீதியான அனுகூலத்தின் வெளிப்பாடாகவும் இருந்தது. ஆங்கிலக் கல்வி, வாய்ப்புகளை விரிவுபடுத்திய அதே வேளையில், சமூகத்திற்குள் ஏற்கனவே இருந்த ஏற்றத்தாழ்வுகளையும் மீண்டும் உருவாக்கியது. இதன் விளைவாக, மொழி மூலதனமானது ஏற்கனவே ஓரளவு சலுகை பெற்றவர்களிடையே குவிக்கப்பட்டது. இவ்வாறு, அனைவரும் ஒரே சீராக அனுகூலம் பெற்ற தமிழ் மக்கள் என்ற பிம்பம், மிகவும் சிக்கலான ஒரு யதார்த்தத்தை மறைக்கிறது. காலனித்துவ நிர்வாகத்தில் யாழ்ப்பாணத் தமிழர்களின் வெற்றியானது, ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்த வெற்றியைக் காட்டிலும், ஓரளவிற்கு ஒரு குறிப்பிட்ட சாதி வர்க்க அமைப்பின் வெற்றியாகவே அமைந்தது. இந்த உள்ளக இயக்கவியல்கள் இருந்த போதிலும், குறிப்பாக சிங்கள மேட்டுக்குடியினரிடையே உருவான பரந்த அரசியல் கண்ணோட்டமானது, அரசாங்கப் பணிகளில் ஒட்டுமொத்த தமிழர்களும் விகிதாசாரத்திற்கு அதிகமாகப் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தனர் என்பதாகவே இருந்தது. எழுதுவினைஞர் மற்றும் தொழில்முறைப் பதவிகளுக்கான போட்டி தீவிரமடைந்ததால், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தக் கண்ணோட்டம் வலுப்பெற்றது.

கட்டமைப்பு ரீதியாகப் பார்த்தால், இந்த விளைவானது வேண்டுமென்றே காட்டப்பட்ட காலனித்துவச் சார்புநிலையைக் காட்டிலும், பிராந்தியங்கள் முழுவதும் ஆங்கிலக் கல்விக்கான சமமற்ற அணுகலின் விளைவாகவே இருந்தது. யாழ்ப்பாணத்தின் கல்வி உள்கட்டமைப்பும், கல்வியை முதன்மை மூலதனமாகக் கருதி அந்தச் சமூகம் செய்த முதலீடுகளும் இணைந்து, காலனித்துவ அதிகாரத்துவத்தின் தேவைகளுக்கு மிகக் கச்சிதமாகப் பொருந்தக்கூடிய தகுதியானதொரு மனிதவளத் தொகுப்பை (Talent Pool) உருவாக்கின. ஆனால், கல்வி நிறுவனங்களின் கட்டமைப்பு பலவீனமாக இருந்த சிங்களப் பெரும்பான்மைப் பிராந்தியங்களால், அத்தகைய தகுதியான வேட்பாளர்களை அந்த அளவுக்கு உருவாக்க முடியாமல் போனது. ஆயினும், பிற்கால அரசியல் உரையாடல்கள் இந்த ஏற்றத்தாழ்வைக் கட்டமைப்பு ரீதியான சமூகப் பிரச்சினையாகப் புரிந்துகொள்ளத் தவறின. மாறாக, அவை இதனை ஓர் 'இனச் சமநிலையின்மையாகவே' (Ethnic Imbalance) பொதுவெளியில் கட்டமைத்தன. சிங்களப் பெரும்பான்மையினருக்குச் சட்டப்பூர்வமாகச் சேர வேண்டிய பதவிகளைத் தமிழர்கள் பறித்துக் கொண்டதாக ஒரு பிம்பம் திட்டமிட்டுச் சித்தரிக்கப்பட்டது. இந்த அரசியல் நகர்வானது, 'கல்வி மற்றும் பிராந்தியச் சமத்துவமின்மை' குறித்த நியாயமான கேள்விகளை, இரு இனங்களுக்கு இடையிலான அதிகாரப் போட்டியாகத் திசைதிருப்பிவிட்டது.

காலனித்துவக் கொள்கை, சமயப் பிரசார நடவடிக்கைகள் மற்றும் உள்ளூர் சமூகக் கட்டமைப்பு ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட 'மொழி மூலதனத்தின்' சமமற்ற விநியோகமே இந்தப் பிரச்சினையின் ஆணிவேராக இருந்தது. இருப்பினும், இந்தக் கட்டமைப்பு ரீதியான சமத்துவமின்மையானது, திட்டமிட்ட முறையில் ஓர் இனப் பிரச்சினையாக மறுவிளக்கம் செய்யப்பட்டது. சிங்கள அரசியல் உரையாடல்கள், அரசாங்கப் பணிகளில் நிலவிய 'தமிழர்களின் மேலாதிக்கம்' குறித்துத் தொடர்ச்சியாகவும் பெருமளவிலும் பேசின. ஆனால், இத்தகைய மேலோட்டமான அரசியல் பரப்புரைகள் பின்வரும் மூன்று மிக முக்கியமான வரலாற்று எதார்த்தங்களை தந்திரமாக மறைத்துவிட்டன:

- பிராந்திய சமத்துவமின்மை: நவீன நவீனத்துவத்திற்கான திறவுகோலாக இருந்த ஆங்கிலக் கல்வியானது, நாட்டின் அனைத்துப் பிராந்தியங்களுக்கும் சமமாக விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.
- உள்முகச் சமூகப் படிநிலை: தமிழ் சமூகத்திற்குள்ளேயும் கூட கல்விக்கான அணுகலானது, சாதி மற்றும் வர்க்கப் படிநிலைகளின் அடிப்படையில் கடுமையாக அடுக்கப்பட்டிருந்தது; அதாவது குடாநாட்டின் நன்மைகளும் சலுகைகளும் அனைத்துத் தமிழர்களுக்கும் சமமாகக் கிடைத்திருக்கவில்லை.
- அதிகாரத்துவ அளவுகோல்: காலனித்துவ அரசானது, தன்னிச்சையான இனப் பாகுபாட்டின் அடிப்படையில் இயங்காமல், தனது நிர்வாகத் தேவைக்காக 'மொழித் திறனை மட்டுமே' முதன்மை அளவுகோலாகக் கொண்டு செயல்பட்டது

இவ்வாறாக, இந்த வரலாற்று உண்மைகள் திட்டமிட்டபடி மூடி மறைக்கப்பட்டு, ஒரு சமூக-பொருளாதாரப் பிரச்சினை முழுக்க முழுக்க ஓர் இனப் பகையாக உருமாற்றம் பெற்றது. சிக்கலான இந்த சமூகக் கட்டமைப்பு இயக்கவியலை 'இனச் சமநிலையின்மை' என்ற ஒற்றைப் புனைவுக்குள் சுருக்குவதன் மூலம், அரசியல்வாதிகள் சமத்துவமின்மையின் அமைப்பு ரீதியான வேர்களிலிருந்து பொதுமக்களின் கவனத்தைத் தந்திரமாகத் திசைதிருப்பி, அதனைச் சமூகங்களுக்கு இடையிலான போட்டி நோக்கியே முடுக்கிவிட்டனர். இதன் விளைவாகவே, எழுதுவினைஞர்கள் மற்றும் கீழ்மட்ட அலுவலர்கள் நியமனங்களுக்கான தேர்வுகளில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர்கள் தங்களின் முந்தைய ஆங்கிலக் கல்விப் பின்னணியின் காரணமாகப் பெருமளவில் சிறப்பாகச் செயல்பட்டுத் தேர்வாக முடிந்தது. அதற்கு நேர்மாறாக, அத்தகைய முன்தயாரிப்புகள் ஏதுமற்ற, முற்றிலும் தாய்மொழி வழிப் பள்ளிப் படிப்பை மட்டுமே கொண்ட கிராமப்புறச் சிங்கள இளைஞர்கள், அவ்வதிகாரத்துவ அமைப்பில் மிகக் குறைவாகவே பிரதிநிதித்துவம் பெற்றனர்.

தேர்வு முறையின் பாரபட்சமான கட்டமைப்பையோ அல்லது பிராந்தியங்களுக்கிடையிலான கல்வி வள விநியோகத்தையோ கேள்விக்குட்படுத்துவதற்குப் பதிலாக, அரசியல் உரையாடல்கள் இந்த நிலையைத் தமிழர்களின் 'மிகைப்பிரதிநிதித்துவத்திற்கான' அசைக்க முடியாத சான்றாகவே சித்தரித்தன. இத்தகையதொரு மேலோட்டமான கண்ணோட்டம், சமூகப் படிநிலைகளில் முன்னேற முடியாமல் தவித்த கல்விகற்ற சிங்களக் கீழ்-நடுத்தர வர்க்கத்தினரிடையே மிகத் தீவிரமான உணர்ச்சிப்பூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அரசாங்கப் பணிகளில் தமிழர்களின் மேலாதிக்கம் நிலவுகிறது

என்ற இந்த ஒற்றைப் புனைவு, பிற்காலத்தில் மிக ஆக்ரோஷ மான அரசியல் விளைவுகளைத் தோற்றுவித்தது. குறிப்பாக, பாரம்பரிய சிங்கள மேட்டுக்குடியினருக்கும், புதிதாக வளர்ந்து வந்த நடுத்தர வர்க்கத்தினருக்கும், இக்கண்ணோட்டம் பின் வரும் விடயங்களை உணர்த்துவதாக அமைந்தது:

- மக்கள் தொகையில் தாங்கள் பெரும்பான்மையாக இருந்த போதிலும், நாட்டின் உண்மையான அரச அதிகார மையங் களிலிருந்து தங்களின் வர்க்கம் திட்டமிட்டு விலக்கி வைக் கப்பட்டுள்ளது என்ற எண்ணம்.

- சுதந்திரம் அடைந்த பின்னரும், காலனித்துவ ஆட்சிக் காலம் தோற்றுவித்த கட்டமைப்பு ரீதியான சமூக-பொரு ளாதார ஏற்றத்தாழ்வுகளே இன்னும் தொடர்கின்றன என்ற அதிருப்தி.

- காலனித்துவக் கட்டமைப்புக்கு மாற்றாக, நாட்டின் வளங்க ளையும் வேலைவாய்ப்புகளையும் அனைத்துப் பிராந்தி யங்களுக்கும் சமமாக மறுபகிர்வு செய்வதில் சுதந்திர அர சாங்கம் தோல்வியடைந்துவிட்டது என்ற ஏமாற்றம்.

இந்தக் குறையுணர்வானது (Sense of Grievance) முற்றிலும் ஆதாரமற்றது அல்ல; ஆனால், அது துரதிர்ஷ்டவசமாகத் தவறான திசையில் செலுத்தப்பட்டது. இங்கு உண்மையான பிரச்சினை – அரசுப் பணிகளில் தமிழ் அலுவலர்கள் அதிக மாக இருந்ததில் இல்லை; மாறாக, தாய்மொழிக் கல்வியை விடவும் ஆங்கிலத்திற்கு மட்டுமே முன்னுரிமை அளித்த, சமத்துவமற்றதொரு 'வாய்ப்புகளின் கட்டமைப்பில்தான்' இருந்தது. இருப்பினும், வெகுஜன அரசியல் அணிதிரட்டல் என்பது, இத்தகைய சிக்கலான கட்டமைப்புப் பகுப்பாய்வு களின் அடிப்படையில் அரிதாகவே செயல்படுகிறது. அது எப்போதுமே, மக்களின் அன்றாட வாழ்வியல் அனுபவங் களுடன் சட்டென ஒத்துப் போகக்கூடிய எளிய புனைவுகள் / கதையாடல்கள் மூலமே இயங்குகிறது. அந்த வகையில், 'தமிழர் ஆதிக்கம்' எனும் கருத்தாக்கம் – பிராந்தியங்களுக் கும் வர்க்கங்களுக்கும் இடையே நிலவிய சிக்கலான சமூக ஏற்றத்தாழ்வுகளை, மிகத் தெளிவான, உணர்வுபூர்வமான ஒரு குற்றச்சாட்டாக எளிமைப்படுத்தி, சாதாரண சிங்கள மக்க ளுக்கான ஓர் அரசியல் கதையாடலைத் தாராளமாக வழங் கியது. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், இந்தக் கதையாடல் சிங்கள அரசியல் பொதுவெளியில் ஆழமாக வேரூன்றிவிட்டது. இதன் விளைவாக, பிற்காலத்தில் எழுந்த மொழிச் சீர்திருத்தத்திற்கான அழைப்புகள் என்பது, காலனித் துவ ஆங்கிலச் சிறப்புரிமையை நிராகரிப்பதற்கான ஒரு முழக்கமாக மட்டும் சுருங்காமல், தங்களுக்கு இழைக்கப் பட்ட 'இன ஏற்றத்தாழ்வைச்' சரிசெய்வதற்கான ஒரு வரலாற்று நீதியாகவே கட்டமைக்கப்பட்டது.

இவ்வாறு, சிங்களத்தை நாட்டின் ஒரே உத்தியோகபூர்வ மொழி யாகக் கோரிய அரசியல் நகர்வானது, இருவேறு அர்த்தங் களைத் தாங்கியிருந்தது:

- சிங்கள மொழி பேசுபவர்களுக்கான அணுகலை ஜனநாய கப்படுத்துதல்: அதுவரை ஆங்கிலம் தெரியாத காரணத் தால் புறக்கணிக்கப்பட்டிருந்த சாதாரண சிங்கள மொழி பேசும் மக்களுக்கு, அரச அதிகாரத்தையும் வாய்ப்புகளை யும் பரவலாக்குதல்

- அரச நிறுவனங்கள் மற்றும் நிருவாகக் கட்டமைப்பின் மீது பெரும்பான்மைச் சமூகத்தின் முழுமையான கட்டுப்பாட்டை மீண்டும் நிலைநாட்டுதல்.

இச்செயல்முறையின் விளைவாக, சமூகப் பொருளாதாரச் சமத்துவமின்மையின் உண்மையான கட்டமைப்பு ரீதியான ஆணிவேர்கள், 'அடையாள அரசியலின்' தந்திரமான திரைம றைப்பால் முற்றாக மறைக்கப்பட்டன. வர்க்க ரீதியான ஏமாற் றங்களையும், இன ரீதியான பதற்றங்களையும் ஒரே நேரத்தில் வெளிப்படுத்தும் ஒரு முதன்மை ஊடகமாக 'மொழி' மாறி யது. சுருக்கமாகக் கூறின், காலனித்துவ நிர்வாகத்தில் யாழ்ப் பாணத் தமிழர்கள் பெற்றிருந்த முக்கியத்துவத்தை, ஏதோ ஓர் இனப் பாரபட்சத்தின் விளைவாக உருவான சலுகையாகப் புரிந்து கொள்ளக் கூடாது; மாறாக, அதனை கல்வி உள்கட்ட மைப்பு, சமூக (சாதி) அமைப்பு மற்றும் மிஷனரி பரப்புரை வலையமைப்புகளுக்கான அணுகல் ஆகியவற்றின் வரலாற்று ரீதியான பிரத்யேகக் கட்டமைப்பு விளைவாகவே புரிந்து கொள்ள வேண்டும். அதேநேரம், தமிழ் சமூகத்திற்குள்ளேயும் கூட இந்த நன்மைகள் அனைவருக்கும் சமமாகப் பகிரப்பட வில்லை என்ற எதார்த்தம், ஆங்கிலக் கல்வியின் பயன்களை யார் அறுவடை செய்ய முடியும் என்பதைத் தீர்மானித்த 'உள் முகச் சமூகப் படிநிலைகளையே' பிரதிபலித்துக் காட்டுகிறது.

ஆயினும், பரந்த அரசியல் களத்தில், சிக்கலான இச்சமூக இயக்கவியல் அனைத்தும் 'இன ஏற்றத்தாழ்வு' என்ற மேலோட்டமான கதையாடலாகச் சுருக்கப்பட்டது. மொழி மூலதனத்தின் சமமற்ற விநியோகத்தில் வேரூன்றியிருந்த வர்க்க முரண்பாடானது, இரு இனங்களுக்கு இடையிலான அதிகாரப் போட்டியாகத் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது. இந்தத் தவறான புரிதல், பிற்கால மொழித் தேசியவாதத்தின் எழுச்சியில் ஒரு தீர்க்கமான பங்கை வகித்ததுடன், பெரும் பான்மை வாதத்தின் அடிப்படையில் வாய்ப்புகளை மறுபங் கீடு செய்ய முற்பட்ட கொள்கைகளுக்கான 'கருத்தியல் அடித் தளத்தையும்' வழங்கியது. எனவே, யாழ்ப்பாணத்தின் வரலாற் றுப் பின்னணி என்பது வெறும் கல்விசார் வெற்றி அல்லது தற்காலிக அரசியல் சர்ச்சை பற்றியது மட்டுமல்ல. மாறாக, அது - கட்டமைப்பு ரீதியான சமூக-பொருளாதார ஏற்றத்தாழ் வுகள், 'அடையாள அரசியலின்' கண்ணோட்டத்தின் மூலம் எவ்வாறு சுயலாபத்திற்காக மறுவிளக்கம் செய்யப்பட முடியும் என்பதையும், அது ஒட்டுமொத்த அரசியல் போராட்டக் களத் தையே எவ்வாறு தலைகீழாக மாற்றியமைக்க வல்லது என்ப தையும், அதன் தொடர்ச்சியாக வரவிருந்த தசாப்த கால ஆயுத மோதல்களுக்கு அது எவ்வாறு வித்திட்டது என்பதை யும் விவரிக்கும் ஒரு மிக முக்கியமான வரலாற்றுப் பாடமாகும்.

(தொடரும்...)

meenilankco@thaiveedu.com

எப்ஸ்ரின் முத்த வியாதி

போல் ஜோசேப்

tg.theeban@gmail.com

அண்மைக் காலங்களில் உலகில் அதிகம் உச்சரிக்கப் பட்ட பெயர் எப்ஸ்ரின் (Epstein). இணையத்தில் அதிகம் தேடப் படும் சொல்லும் ஊடகங்களுக்கு TRP என்ற இலக்கு மதிப் பீட்டுப் புள்ளியை உச்சம் தொடவைக்கு நபரும் இவர்தான். இந்த கட்டுரையில் அவரது தனிப்பட்ட வாழ்க்கையின் இருண்ட பக்கங்களை ஆராய்வது எனது நோக்கம் அல்ல, சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பெயரோடு எனக்கும் உள்ள தொடர்பு பற்றித்தான் எழுதப் போகிறேன். என்ன எனது பேரும் எப்ஸ்ரின் கோப்புகளில் இருக்குமோ என்ற எண்ணம் உங்கள் மனதில் தோன்றி இருக்குமே!

நான் மருத்துவத்துறையில் படிக்கும்போது Microbiology என்ற நுண்ணுயிரியியல் பாடத்தில் வந்த வினாத்தாளில் ஒரு கேள்வி, write briefly on Epstein-Barr virus. பொது வாக எல்லா மருத்துவர்களுக்கும் இந்தப் பெயரை கேட்டதும் இந்த வைரசும் அதனால் வரும் வியாதியும் நினைவுக்கு வந்துவிடும். இந் தப் பேரில் உள்ள மருத்துவர் சேர் அந் தோனி எப்ஸ்ரின் என்பவர் இங்கிலாந் தைச் சேர்ந்த நோயியல் மருத்து வப் பேராசிரியர் மற்றும் அயர்லாந் தைச் சேர்ந்த வைரஸ் நுண்ணு யிரியல் நிபுணர் யுவான் பார் இருவரும் இணைந்துதான் இந்த வைரஸை கண்டறிந்தனர். இத னால்தான் இருவரின் பெயரை யும் இணைத்து எப்ஸ்ரின் - பார் வைரஸ் என அழைக்கப்படுகிறது.

இந்த வைரஸ் Herpes குடும்பத் தைச் சார்ந்த டிஎன்ஏ வைரஸ் ஆகும். ஆச்சரியம் என்னவென்றால் உலக மக்கள் தொகையில் சுமார் 90% பேர் வாழ்க்கையில் ஏதோ ஒரு கட்டத்தில் கண்டிப்பாக Epstein-Barr syndrome or Epstein kissing disease என்று குறிப்பிடப்படும் இந்த நோய்க்கும் தொற் றுக்கும் ஆளாகி இருப்பார்கள், ஆனால் பலருக்குத் தொற்று ஏற்பட்டு இருந்தாலும் எந்த ஒரு அறிகுறியும் இல் லாது கடந்து போயிருப்பார்கள். ஆனால் அவர்களின் நோய் எதிர்ப்பு ஆற்றலை பொறுத்து உண்டாகும் நோய்களும் குணங் குறிகளும் அதன் பின்விளைவுகளும் வேறுபடலாம். இந்த வைரஸினால் பாதிக்கப்படுகிறபோது 'காதல் காய்ச்சல்' எனும் Infectious mononucleosis என்ற ஒரு நோய் உண்டாகிறது. இது சுரப்பிகளின் காய்ச்சல் (Glandular Fever) என்றும் அழைக் கப்படுகிறது.

இந்த வைரஸ் பெரும்பாலும் இளையோர் மற்றும் பதின்ம வயதினர் இடையே காதல் முத்தங்களால் அதிகம் பரவுகிறது. இது மட்டுமல்ல தொற்றுள்ளவர்களின் அன்பு முத்தங்களா லும் குழந்தைக்கும் மற்றவர்களுக்கும் இலகுவாகத் தொற் றிக்கொள்கிறது, உமிழ்நீர் தான் இந்த நோய் பரவுதலின் முக் கிய ஊடகமாக செயற்படுகிறது. அது மட்டுமல்ல தொற்றுள்ள ஒருவரிடம் இருந்து வெளியேறும் உடல் திரவங்கள் குறிப்பா கத் தாம்பத்திய உறவினாலும் மற்றும் குருதியின் மூலமும் பரவலாம்.

இந்த வைரஸ்கள் உடலில் நுழைந்தாலும் உடனே ஒருவருக் குக் குணங்குறிகளை அல்லது நோயை ஏற்படுத்தும் என்று உறுதியாகக் கூறமுடியாது. B Lymphocyte என்ற வெள்ளை அணுக்களில் நீண்டகாலம் குடியிருந்து, எதிர்ப்புச்சக்தி ஒரு வருக்கு ஏதோ ஒரு காரணங்களினால் குறையும்போது இந்தக் கிருமிகள் வீறு கொண்டு எழுந்து நோய்க்குறிகளை தோற்று விக்கலாம். அது மட்டுமல்ல சிலரின் மரபணுக்களை மாற்றி அதில் பிறழ்வுகளை உண்டாக்கியும் சில அரிய புற்று நோய் களையே உண்டாக்க வாய்ப்பு உள்ளது என்று ஆய்வுகள் தெரிவிக்கிறது.

> ***"இந்த வைரஸ் பெரும்பாலும் இளையோர் மற்றும் பதின்ம வயதினர் இடையே காதல் முத்தங்களால் அதிகம் பரவுகிறது. இது மட்டுமல்ல தொற்றுள்ளவர்களின் அன்பு முத்தங்களாலும் குழந்தைக்கும் மற்றவர்களுக்கும் இலகுவாகத் தொற்றிக் கொள்கிறது, உமிழ்நீர் தான் இந்த நோய் பரவுதலின் முக்கிய ஊடகமாக செயற்படுகிறது."***

வயது மற்றும் உடலின் நோய் எதிர்ப்பாற்றல் ஏற்கனவே உள்ள இணை நோய்கள் இவற்றின் தன்மையைப் பொறுத்தும் ஒரு வருக்கு நோய்க்குறிகளும் நோயின் தன்மையும் மாறுபடலாம். பொதுவாக இந்த நோயின் குணங்குறிகளாக, நீண்டநாள் லேசான காய்ச்சல், குளிர் காய்ச்சல், உடல் சோர்வும் வலியும், வாந்தி உணர்வு, தொண்டை அழற்சி, இருமல், ரொன்சில் வீக்கம் மற்றும் அழற்சி, தொண்டை நோவு, தலைவலி, தொண்டை மற்றும் கழுத்துப் பகுதிகளில் உள்ள நிணநீர் சுரப்பிகளின் வீக்கம் என்று இப்படியான குணங்குறிகள் தோன்றும். சிலருக்கு மண்ணீரல் மற்றும் கல்லீரல் வீக்கம் மஞ்சள்காமாலை போன்றவையும் அனிமியா என்ற ரத்த சிவப்பு அணுக்கள் குறைவதால் உண்டாகும் ரத்தச்சோகை மற்றும் சில வகை மூளை நரம்பு மண்டலப் பாதிப்புகளும் உண்டாகலாம்.

இந்த நோயில் Epstein-Barr வைரஸோடு சேர்ந்து இன்னொரு Cytomegalo virus என்ற கூட்டாளி வைரசும் கூட்டணி அமைத்து மேலும் பல சீரியசான குளறுபடிளுக்கு வழிவகுக்கலாம். இதுவும் முத்தங்களாலும் தொற்று உள்ளவர்களோடு தாம்பத்திய உறவுகள் வைத்துக் கொள்வதாலும் தொற்றிக் கொள்கிறது. குறிப்பாக பலரோடு தாம்பத்தியம் தொடர்புள்ள ஆணாகவோ அல்லது பெண்ணாக இருந்தாலும் நோய் தொற்றுவது உறுதி. இது ஜெஃப்ரி எப்ஸ்ரினுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் பொருந்தும்.



"இதுவரை இந்த வைரஸ் நோயைத் தடுக்க தடுப்பூசிகள் எதுவும் இல்லை, நம்மை நாம் தான் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இந்த வைரஸால் உண்டாகும் நோயில் உள்ள சிக்கல் என்னவென்றால் நோய்த் தொற்று உள்ளவர்கள் பலர் எந்தவித அறிகுறிகளும் இல்லாமல் வெறும் நோய்க்காவிகளாக மட்டுமே இருக்கிறார்கள்."

இதுவரை இந்த வைரஸ் நோயைத் தடுக்க தடுப்பூசிகள் எதுவும் இல்லை, நம்மை நாம் தான் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இந்த வைரஸால் உண்டாகும் நோயில் உள்ள சிக்கல் என்னவென்றால் நோய்த் தொற்று உள்ளவர்கள் பலர் எந்தவித அறிகுறிகளும் இல்லாமல் வெறும் நோய்க்காவிகளாக மட்டுமே இருக்கிறார்கள். அதனால் அவர்களோடு நேரடியாக தொடர்பு உள்ளவர்க்கும் குறிப்பாகக் காதல் முத்தங்களாலும், அன்பு முத்தங்களாலும் இது தொற்றிக் கொள்கிறது.

இது வராமல் தடுக்க ஒரே வழி அன்புக்குரியவர்களோடு மட்டும் அறத்தோடு வாழ்வதுதான். சந்தேகம் இருந்தால் குடும்ப மருத்துவரிடம் தொடர்பு கொண்டு இதற்கான சிறப்பு இரத்தப் பரிசோதனைகளைச் செய்து நோயால் பாதிக்கப்பட்டு உள்ளீர்களா என்று கண்டறிந்து கொள்ளலாம். இந்த வைரஸ்கள் உடலுக்குள்ளே நுழைந்ததும் உடல் உடனடியாக எதிர்ப்பினைக் காட்டும் வகையில் Antibodies - 'காப்பான் புரதம்' என்ற நோய் எதிர்ப்பணு புரதங்களை உற்பத்தியாகிவிடுகிறது. சில சிறப்புப் பரிசோதனைகள் அவற்றை கண்டறிந்து நோய்த் தொற்றினை உறுதி செய்து கொள்ளலாம், ஆனால் இதற்கான சிறப்புச் சிகிச்சைகள் என்று ஏதுமில்லை. தொற்றின் பின்பு உண்டாகும், மேலே குறிப்பிட்ட குணங்குறிகளின் அடிப்படையில் தான் சிகிச்சைகளை வழங்கும் முறை வழக்கத்தில் உள்ளது.

paul.joseph@thaiveedu.com

மனவழுத்தமும் தற்கொலைகளும்

காரணிகளும் தீர்வுகளும்

- த. சிவபாலு

அறிமுகம்:

மனவழுத்தம் மற்றும் தற்கொலை எண்ணங்கள் என்பன சமகால உலகில் மிகத் தீவிரமாக விவாதிக்கப்பட வேண்டிய முதன்மையான உளநலச் சவால்களாக உருவெடுத்துள்ளன. இத்தகைய சூழல் இளைஞர்கள் மட்டுமன்றி, முதியவர்கள் உள்ளிட்ட அனைத்து வயதினரிடமும் பரவலாகக் காணப்படுகிறது. உலக சுகாதார அமைப்பின் (WHO) அண்மைய உலகளாவிய புள்ளிவிவரங்களின்படி, பல்வேறு நாடுகளில் தற்கொலை விகிதம் கவலைக்கிடமான முறையில் உயர்ந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக, உலகளாவிய பதிவுகளின்படி (100,000 மக்கள் தொகைக்கு) லெசத்தோவில் 72.4, கயானாவில் 40.3, மற்றும் தென் கொரியாவில் 28.6 என்ற வீதத்தில் இந்நெருக்கடி பதிவாகியுள்ளது.

தற்கொலை என்பது ஒரு தனிநபரின் பலவீனம் அல்லது அகவயமான மனநிலை சார்ந்த விவகாரம் மட்டுமல்ல; மாறாக, அது நாம் வாழும் சமூக, குடும்ப, பொருளாதார மற்றும் கலாசார அமைப்புகளில் நிலவும் குறைபாடுகளின் கூட்டுப் பிரதிபலிப்பாகும். எனவே, இக்கட்டுரையானது தனிநபர்களை இத்தகைய தீவிர எல்லைக்குத் தள்ளும் சமூக-உளவியல் காரணிகளை ஆழமாக அடையாளம் காண்பதோடு, கூட்டுச் சமூக ஆதரவு மற்றும் மருத்துவ வழிகாட்டல்கள் மூலமான தடுப்பு நடவடிக்கைகளின் அவசியத்தையும் முதன்மைப்படுத்துகிறது.

தற்கொலை எண்ணங்களும் அதன் விளைவுகளும் இன்று உலகளாவிய பொதுச் சுகாதாரத்திற்கான ஒரு முதன்மைச் சவாலாக மாறியுள்ளன. இத்தகைய உளநல நெருக்கடிகள் தனிநபர்களையும் குடும்பங்களையும் பாதிப்பதோடு மட்டுமன்றி, ஒட்டுமொத்த சமூகத்திற்கும் ஒரு பெரும் பொருளாதார மற்றும் உற்பத்தித்திறன் இழப்பாகவும் அமைகின்றன. மனிதர்களின் தற்கொலை சார்ந்த நடத்தையானது சமூக-பண்பாட்டுச் சூழல், நரம்பியல் மற்றும் உளவியல் சவால்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய நோயுற்ற தன்மைகள் போன்ற பன்முகக் காரணிகளின் ஆழமான பின்னணியைக் கொண்டுள்ளது.

உணர்ச்சிகளின் உளவியல் அடிப்படை:

உளவியல் வல்லுநர்களின் பார்வையில், மனிதர்களின் மன வழுத்தத்திற்கு (Stress) உணர்ச்சிகளே மையப் புள்ளியாக விளங்குகின்றன. இருப்பினும், இது குறித்த ஆய்வுகள் யாவும் ஒரே மாதிரியான முடிவுகளைத் தருவதில்லை; ஏனெனில், தற்கொலை எண்ணங்களுக்குப் பின்னால் உள்ள காரணிகள் பன்முகத்தன்மையும் பல்லாயிரக்கணக்கான சிக்கலான தொடர்புகளையும் கொண்டவையாகும்.

prasadbatti@gmail.com

'பொதுவாக, 'உணர்ச்சிகள் என்பன உடலில் ஏற்படும் அனுபவங்கள், எண்ணங்கள் மற்றும் நினைவுகள் ஆகிய வற்றுக்கு மனித மனமும் உடலும் ஒருங்கே வெளிப்ப டுத்தும் எதிர் வினை நடத்தை வடிவங்களாகும்.'

இத்தகைய உணர்ச்சிகள் மனிதர்களின் அன்றாட நடத்தை, முடிவெடுக்கும் திறன், சமூக உறவுகள் மற்றும் ஒட்டு மொத்த உளநலம் ஆகியவற்றில் நேரடித் தாக்கத்தை ஏற் படுத்துகின்றன. இந்த உணர்ச்சிகளைச் சமநிலைப்படுத்தவோ அல்லது கையாள்வதோ சவாலாக மாறும் போது, அவை தீவிர உளநலக் கோளாறுகளாக உருவெடுக்கும் சாத்தி யக்கூறுகள் அதிகரிக்கின்றன.

மனவழுத்தத்தின் உயிரியல் அடிப்படை:

மனவழுத்தமானது மனித உடலில் தீவிரமான ஹார்மோன் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக, மூளையிலும் உடலிலும் உள்ள வேதிப்பொருட்களின் (Neurotransmitters) அளவு அதிகரிப்பதோ, குறைவதோ அல்லது அவற்றின் இயல்பான சமநிலை பாதிக்கப்படுவதோ உளநலச் சவால் களுக்கு முதன்மைக் காரணியாக அமைகிறது என்பது குழந்தை நல வல்லுநர்கள் மற்றும் உளவியலாளர்களின் ஒருங்கிணைந்த ஆய்வு முடிவாகும். குறிப்பாக, பின்வரும் மூன்று வேதிப்பொருட்களின் மாற்றங்கள் இதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

- கோட்டோசொல் (Cortisol) அதிகரிப்பு
- செரட்டோனின் (Serotonin) குறைதல்
- டொபாமின் (Dopamine) சமநிலை பாதிப்பு

மேற்குறிப்பிட்ட பதார்த்தங்கள் குறைவடைவதாலோ அன்றி அதிகரிப்பதாலோ சமநிலையைப் பாதிப்பதனால் மனச்சோர்வு, பதட்டம், கோபம், நம்பிக்கையின்மை போன்ற உணர்வுகளை அதிகரிக்கின்றன.

தற்கொலைக்கு வழிவகுக்கும் முக்கிய உளவியல் காரணிகள்:

✓ மனநலச் சவால்கள்:

மனச்சோர்வு (Depression), இருமுனைக் கோளாறு (Bipolar Disorder), மனச்சிதைவு நோய் (Schizophrenia) மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டுச் சவால்கள் போன்றவை ஒரு தனிநபரின் தற்கொலை எண்ணங்களை அதிகரிக்கும் முதன்மைக் காரணிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. உலக சுகாதார அமைப்பின் (WHO) உலகளாவிய ஆய்வு அறிக் கைகளின்படி:

'உளநெருக்கடியினால் தற்கொலைக்கு உள்ளாகுபவர் களில் சுமார் 90% பேரிடம் ஏதேனும் ஒருவகையான உளநலச் சவால்கள் அல்லது மனநலக் கோளாறுகள் கண் டறியப்பட்டுள்ளன.'

✓ தீவிர மனவழுத்தமும் மனமுறிவும்:

தனிநபர்கள் தங்களின் இலக்குகள் அல்லது முயற்சிகளில் தோல்வியடையும் போதோ, அல்லது தற்போதைய நெருக்கடி நிலையைத் தொடர்ந்து எதிர்கொள்ள முடியாத சூழல் ஏற்படும் போதோ தீவிர மனமுறிவுக்கு ஆளாகின் றனர். இதன் விளைவாகச் சுயநம்பிக்கையையும் அக அமைதியையும் இழந்து, பின்வரும் அபாயகரமான உளவியல் நிலைகளுக்கு அவர்கள் தள்ளப்படுகின்றனர்:

- நம்பிக்கையின்மை
- சுயமதிப்பு இழப்பு
- வாழ்க்கை அர்த்தமின்மை என்னும் எண்ணம்

✓ இருமுனைக் கோளாறு:

இப்பாதிப்புக்கு உள்ளாகும் நபர்களின் மனநிலை இருவேறு தீவிர முனைகளுக்கு இடையே (Extreme Mood Swings) சுழலும். அதிஉற்சாக நிலை (Mania) அளவுக்கு அதிகமான ஆற்றல் மற்றும் பதற்றமான மனச்சோர்வு நிலை (Depressive Episode) அதீத துயரம் மற்றும் வெறுமை உணர்வு. இவ்விரு தீவிர நிலைகளுமே ஒரு நபரின் உணர்ச்சிச் சமநிலையைக் குலைத்து, தற்கொலை எண்ணங்களை உருவாக்கும் அபாயத்தை மிக அதிகமாக அதிகரிக்கின்றன.

✓ மனச்சிதைவு நோய்:

மனச்சிதைவு என்பது சிந்தனை, உணர்ச்சி மற்றும் நடத்தை களைப் பாதிக்கும் ஒரு சிக்கலான நரம்பியல்-உளவியல் சவாலாகும். இது பெரும்பாலும் 20 முதல் 30 வயதுக்குட் பட்ட இளைஞர்களிடையே அதிகமாகக் கண்டறியப்படு வதாக உளவியல் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இவர்க ளிடம் பின்வரும் முக்கிய அறிகுறிகளைக் கண்டறியலாம்:

- மாயத்தோற்றங்கள் (Hallucinations): மற்றவர்களுக்குப் புலப்படாத விம்பங்களைக் காண்பது அல்லது ஒலிகளைக் (Voices) கேட்பது. இவ்வொலிகள் சிலச மயம் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொள்ளுமாறு அவர்களைத் தூண்டக்கூடும்.
- தவறான திடநம்பிக்கைகள் (Delusions): எவ்விதத் தர்க் கரீதியான ஆதாரமும் இன்றி, சூழல் குறித்தோ அல்லது மனிதர்கள் குறித்தோ தவறான எண்ணங்களைக் கொண் டிருத்தல்.
- சமூக விலகல் மற்றும் தனிமைப்படுத்தல்: மற்றவர்க ளுடன் தொடர்புகொள்வதைத் தவிர்த்து, தங்களைத் தாங்களே முழுமையாகத் தனிமைப்படுத்திக் கொள்ளுதல்.
- நடத்தை மற்றும் பேச்சுத் தடுமாற்றம்: பேச்சில் தெளிவின்மை, தேவையற்ற பதற்றம், ஊக்கமின்மை மற்றும் உணர்வற்ற மந்த நிலை (Flat affect).

✓ போதைக்கு அடிமைத்தனம்:

சமகாலத்தில் இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை அனைத்து வயதினரிடையேயும் போதைப்பொருள் பயன்பாடு என்பது ஒரு தீவிர உளநல மற்றும் சமூகச் சவாலாக உருவெடுத்துள்ளது. போதைப்பொருட்கள் மூளையின் இயல்பான நரம்பியல் வேதியியல் சமநி

லையைக் (Neurochemical Balance) குலைப்பதால், அதனைப் பயன்படுத்துவோரின் சிந்தனை மற்றும் நடத்தை களில் கடுமையான மாற்றங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய தீவிரப் பாதிப்புகள் தனிநபர்களைச் சுயகட்டுப் பாடற்ற நிலைக்குத் தள்ளுவதுடன், சில தருணங்களில் தங்களைத் தாங்களே துன்புறுத்திக் கொள்ளும் (Self-harm) அல்லது தற்கொலை எண்ணங்களை நோக்கியும் உந்தக்கூடிய அபாயத்தைக் கொண்டுள்ளன. மேலும், இச் சூழ்நிலை குடும்ப வன்முறைகளுக்கும் சமூகக் குற்றச்செ யல்களுக்கும் வழிவகுப்பதுடன், ஒட்டுமொத்தக் குடும்பக் கட்டமைப்பையே சிதைத்து விடுகிறது. தங்களின் அன்பிற் குரியவர்கள் இப்பாதையிலிருந்து மீள முடியாமல் தவிப் பதைக் கண்டு பெற்றோர்களும், நண்பர்களும் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

✓ நம்பிக்கையின்மை மற்றும் மனக் குழப்பம்:

நிதி நெருக்கடி, நெருங்கிய உறவுகளில் ஏற்படும் முறிவுகள், மற்றும் நாள்பட்ட அல்லது தீராத உடல்நலப் பிரச்சினைகள் போன்ற தீவிரமான வாழ்க்கைப் போராட் டங்கள் தனிநபர்களிடத்தில் நீண்டகால நம்பிக்கையின் மையைத் தோற்றுவிக்கின்றன. இத்தகைய சூழல் தொட ரும்போது, அது அவர்களின் அகத்தில் ஆழமான மனக்கு ழப்பத்தையும் (Mental Turmoil) பெரும் உளவியல் நெருக் கடியையும் உருவாக்குகிறது. தங்களின் தற்போதைய துயர நிலையிலிருந்து மீள்வதற்கு எவ்வித வழியுமில்லை என்ற தவறான முடிவுக்கு அவர்கள் தள்ளப்படும்போது, இந்த மனக்குழப்பமானது தற்கொலை எண்ணங்களை நோக்கிய தீவிர உந்துதலாக மாறக்கூடும்.

✓ போலித்தனம் (Imposter Syndrome / போலியாக உணரும் மனக்குறைபாடு):

போலித்தனம் என்பது தங்களின் திறமைகள், தகுதிகள் மற்றும் வெற்றிகளைத் தங்களால் முழுமையாக நம்ப முடியாமல் தவிக்கும் ஒரு தற்கால உளவியல் சவாலாகும். இத்தகைய பாதிப்புக்கு உள்ளானவர்கள், தாங்கள் எதையும் சாதித்த போதிலும் 'நான் இன்னும் போதுமா னவன் அல்ல' (Not good enough) என்ற எண்ணத்தையும், ஒருவேளை தங்களின் பலவீனங்களை மற்றவர்கள் கண்ட றிந்து தங்களைப் 'போலி' என முத்திரை குத்திவிடு வார்களோ என்ற தொடர் பயத்தையும் (Fear of being exposed as a fraud) அகத்தில் கொண்டிருப்பர். ஆய்வு ஆவ ணங்கள் சுட்டிக்காட்டுவது போல, இத்தகைய தொடர் சுய சந்தேகமும் (Self-doubt) தீவிர மனவழுத்தமும் தனிநபர் களின் மன அமைதியை முற்றிலும் சிதைக்கின்றன. இதன் தர்க்கரீதியான உச்சகட்டமாக, அவர்கள் தங்களின் இருப்பு குறித்த தீவிர விரக்திக்குத் தள்ளப்பட்டு, தற்கொலைச் சிந் தனைகளை நோக்கி உந்தப்படும் அபாயகரமான காரணியாக இது மாறுகிறது.

சமூக மற்றும் சுற்றுச்சூழல் அழுத்தங்கள்:

- கொடுமைப்படுத்தல்
- துன்புறுத்தல்
- தனிமை
- விவாகரத்து
- அன்புக்குரியவரை இழத்தல்

'சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்படுதல் அல்லது தனி மைப்படுத்தப்படுதல் (Social Isolation), நேரிடையாகவோ அல்லது இணைய வழியாகவோ (Cyber bullying) நிகழும் கொடுமைப்படுத்துதல்கள் மற்றும் தொடர் மன உளைச் சலை ஏற்படுத்தும் துன்புறுத்தல்கள் ஆகியன ஒரு தனிந பரைத் தற்கொலை எண்ணங்களை நோக்கி உந்தக்கூடிய மிக ஆபத்தான காரணிகளாக விளங்குகின்றன என்று உளவியல் வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். இத்தகைய ஒடுக்குமுறைகள் பாதிக்கப்பட்ட நபரின் அகத்தில் தாங்க வொண்ணாத் தனிமை உணர்வையும், தற்காப்பற்ற நிலையையும் (Helplessness) உருவாக்குகின்றன. தங்க ளுக்கு ஆதரவளிக்கவோ அல்லது தங்களைப் புரிந்து கொள்ளவோ சமூகத்தில் எவருமில்லை என்ற விரக்தி ஆழமாக வேரூன்றும்போது, அவர்கள் தங்களின் தற் காப்புப் பொறிமுறையை இழந்து, தற்கொலை போன்ற தீவிரமான முடிவுகளை நோக்கித் தள்ளப்படுகின்றனர்.

நீண்டநாள் நோய்கள்:

புற்றுநோய், இதய நோய், நீரிழிவு, மூட்டுவாதம் மற்றும் பக் கவாதம் போன்ற நாள்பட்ட நோய்கள் தனிநபர்களுக்குத் தொடர்ச்சியான உடல் ரீதியான வலியை ஏற்படுத்து வதோடு மட்டுமன்றி, கடுமையான மன வேதனையையும் தோற்றுவிக்கின்றன. மருத்துவ ஆய்வு ஆவணங்கள் சுட் டிக்காட்டுவது போல, தீராத உடல் உபாதைகளும், தங்களின் எதிர்கால நல்வாழ்வு குறித்த அச்சமும், பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய சூழலும் மனிதர்களைத் தீவிர விரக்திக்கு உள்ளாக்கி, தற்கொலை எண்ணங்களைத் தூண்டும் முதன்மைக் காரணிகளாக மாறுகின்றன.

திடீர் அதிர்ச்சி சம்பவங்கள்:

நெருங்கிய அன்புக்குரியவர்களின் திடீர் மரணம், எதிர் பாராத விபத்துகள் அல்லது வாழ்வின் பேரிழப்புகள் போன்ற அதிர்ச்சிச் சம்பவங்கள் ஒருவரது மனவழுத் தத்தைத் தீவிரப்படுத்துகின்றன. இத்தகைய சூழலில், பாதிப்புக்கு உள்ளானவர்கள் திடீரென யாரிடமும் பேசாமல் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொண்டு, தொடர் சிந்தனைகளில் (Rumination) மூழ்கியி ருக்கக்கூடும்.

ஆபத்தான காரணிகள் (Risk Factors):

- முந்தைய தற்கொலை முயற்சிகள்
- ஆண்களில் அதிக தற்கொலை நிறைவேற்றம்
- பெண்களில் அதிக முயற்சிகள்
- 15 - 29 வயதினரிடையே அதிக அபாயம்

இத்தகைய அறிகுறிகளைக் கொண்ட ஆளுமைகளுக்கு எவ்விதத் தாமதமுமின்றி உடனடி உளவியல் ஆலோசனைகளும் (Crisis Counseling) மனிதாபிமானப் பகிர்வுகளும் வழங்கப்பட வேண்டியது மிக அவசியமானதாகும். இத்தருணத்தில் வழங்கப்படும் சிறியதொரு ஆதரவும் முறையான மருத்துவ வழிகாட்டலும் ஒரு விலைமதிப்பற்ற மனித உயிரைக் காக்கும் உன்னதப் பாதுகாப்பு அரணாக விளங்கும்.

தற்கொலை தடுப்பு அணுகுமுறைகள் (Prevention Strategies):

✓ குடும்பத்தின் பங்களிப்பு:

தற்கொலைத் தடுப்பில் ஒரு தனிநபரின் முதன்மையான பாதுகாப்பு அரணாகக் குடும்பமே விளங்குகிறது. எனவே, குடும்ப உறுப்பினர்கள் தங்களின் வட்டத்தில் உள்ளவர்களின் வழக்கத்திற்கு மாறான தனிமை, அமைதி அல்லது திடீர் உணர்ச்சி வெடிப்புகள் போன்ற நடத்தை மாற்றங்களைக் கூர்ந்து கவனிப்பது அவசியமாகும். பிள்ளைகளின் நடத்தையில் ஏற்படும் மிகச் சிறிய மாற்றமாக இருந்தபோதிலும், அதனை அலட்சியப்படுத்தாமல் உளவியல் வல்லுநர்களிடம் அழைத்துச் சென்று தகுந்த வழிகாட்டல் பெறுவது இன்றியமையாததாகும். அத்துடன், எவ்விதத் தீர்ப்பும் வழங்கும் தொனியின்றி (Non-judgmental), அவர்களின் உணர்வுகளுக்கு முழுமையாக மதிப்பளித்துத் திறந்த உரையாடலை (Open Communication) அரவணைப்புடன் முன்னெடுப்பதோடு, தேவைப்படும் பட்சத்தில் எவ்விதத் தயக்கமுமின்றி முறையான உளவியல் ஆலோசனைக்காக அவர்களை உளநல மருத்துவர்களிடமோ அல்லது ஆலோசகர்களிடமோ அழைத்துச் செல்ல வேண்டும்.

✓ சமூக ஆதரவுக் கட்டமைப்பு:

ஆசிரியர்கள் மற்றும் உறவினர்கள் தங்கள் வட்டத்தில் உள்ள எவரேனும் தீவிர மனவழுத்தத்திற்கு உள்ளாகியிருப்பதை உணர்ந்தால், அவர்களை எவ்விதச் சூழலிலும் தனிமையில் விடாமல் தொடர் கண்காணிப்பிலும், அன்பான அரவணைப்பிலும் வைத்திருக்க வேண்டும். இத்தகைய கூட்டுச் சமூகக் கவனிப்பானது நெருக்கடியில் உள்ள ஆளுமைகளுக்குப் பாதுகாப்பானதொரு சூழலை உருவாக்குவதுடன், தங்களுக்கு ஆதரவளிக்கச் சமூகம் தயாராக இருக்கிறது என்ற நம்பிக்கையையும் அவர்களுக்குள் விதைக்கும்.

✓ மருத்துவ மற்றும் உளவியல் சிகிச்சைகள்:

தீவிர உளநெருக்கடிகளுக்கு அறிவியல் பூர்வமான மருத்துவ அணுகுமுறைகள் சிறந்த தீர்வைத் தருகின்றன; அந்தவகையில், தனிநபர்களின் எதிர்மறைச் சிந்தனை வடிவங்களை (Negative thought patterns) மாற்றி, ஆரோக்கியமான எதிர்கொள்ளும் திறனை (Coping mechanisms) வளர்க்கும் அறிவாற்றல் நடத்தைச் சிகிச்சை (Cognitive Behavioral Therapy - CBT) மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இவற்றுடன், தற்கொலை எண்ணம் தீவிரமாக இருக்கும் அவசரத் தருணங்களில் உடனடிப் பாதுகாப்பையும் உளவியல் முதலுதவியையும் வழங்கும் நெருக்கடி காலத் தலையீடுகளும் (Crisis Intervention), மூளையின் வேதியியல் சமநிலையின்மையைக் குணப்படுத்த மனநல மருத்துவர்களின் (Psychiatrists) ஆலோசனையோடு பாதுகாப்பான மருந்துகளைக் கையாளும் மருத்துவச் சிகிச்சைகளும் (Medical Treatment) இணைந்து ஒருவரை இத்தகைய தீவிர மனநிலையிலிருந்து முழுமையாக மீட்டெடுக்க உதவுகின்றன.

✓ உயிர்க்கொல்லி வகைகள் கிடைப்பதைக் கட்டுப்படுத்தல்:

தற்கொலைக்கு வழிவகுக்கக்கூடிய ஆபத்தான பொருட்கள், நச்சுப் பதார்த்தங்கள், மருந்துகள் மற்றும் ஆயுதங்கள் போன்றவற்றைத் தனிநபர்களுக்கு எளிதில் கிடைக்காத வண்ணம் விழிப்புணர்வுடன் பாதுகாப்பாக வைப்பது மிக அவசியமான பாதுகாப்பு ஏற்பாடாகும். அதனுடன், இன்று இளைய தலைமுறையினர் தற்கொலைக்கான ஆபத்தான வழிமுறைகளை இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் வழியே மிக எளிதாக அறிந்துகொள்வதால், இத்தகைய நச்சுத்தன்மை வாய்ந்த மற்றும் தற்கொலையைத் தூண்டும் தேடல்களையும் தகவல்களையும் எண்ணிம வெளியில் (Digital space) முழுமையாகத் தடை செய்வதும், உரிய இணையப் பாதுகாப்பை (Cyber safety) உலகளாவிய ரீதியில் உறுதிப்படுத்துவதும் காலத்தின் கட்டாயமாகும்.

தற்கொலை என்பது ஏதோவொரு தனித்த காரணத்தினால் நிகழும் ஒன்றல்ல; மாறாக, அது பல்வேறு அகவயமான உளவியல் சவால்களும் புறவயமான சமூக அழுத்தங்களும் இணைந்து உருவாக்கும் ஒரு சிக்கலான பன்முகப் பிரச்சினையாகும். மனநலக் கோளாறுகள், நாட்பட்ட உடல் நலப் பாதிப்புகள் மற்றும் சமூகப் புறக்கணிப்புகள் ஆகியன ஒருவரது மனநிலையைத் தீவிர எல்லைக்குத் தள்ளுகின்றன.

எனவே, தற்கொலைத் தடுப்பு என்பது வெறும் தனிநபரின் விவகாரமல்ல; அது குடும்பம், கல்வி நிறுவனங்கள், சமூக அமைப்புகள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் என அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய கூட்டுச் சமூகப் பொறுப்பாகும் (Collective Social Responsibility). தகுந்த நேரத்தில் வழங்கப்படும் மனிதாபிமான ஆதரவு, ஆழமான புரிதல் மற்றும் தடையற்ற மருத்துவ வழிகாட்டல்கள் மூலம் விலைமதிப்பற்ற பல மனித உயிர்களை நம்மால் நிச்சயம் காப்பாற்ற முடியும்.

sivapalu@thaiveedu.com

முதுமை மானுடரின் பொற்காலம்

- குமார் புனிதவேல்

மனிதரின் வாழ்வை ஆங்கிலக் கவிஞரான சேக்ஸ்பியர் ஏழு பருவங்களாகப் பிரித்து அதில் இறுதிப் பருவமான முதுமையை இரண்டாம் இளமைப் பருவம் எனக் குறிப்பிட்டார்.

மனிதர்கள் தமது ஒவ்வொரு பருவத்திலும் ஏதோவொரு தேவையை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். ஆரம்பத்தில் கல்வியில் சித்தியடைய வேண்டும் என்ற சிந்தனையைச் செலுத்தினோம். தொடர்ந்து ஒரு தொழிலைத் தேடி அடைந்து அதனில் முன்னேற்றம் அடைவதை இலக்காகக் கொண்டிருந்தோம். அதேவேளை ஆணும் பெண்ணும் தமக்குகந்த துணையைத் தேடி அலைந்தோம். அத்துடன் முடியவில்லை தேடல். திருமணமான பின் குழந்தைகளைப் பெற்று ஆளாக்கப் போராடினோம். இறுதியில் முதுமையை அடையும் வேளையில் ஓய்வூதியம் தந்து ஓட்டம் இனிக் காணும் ஓய்வு எடுங்கள் அரசாங்கம் பல வசதிகள் செய்துள்ளது என்ற முடிவுக்கு வருகிறோம். இதனால்தான் முதுமையை வாழ்வின் பெற்காலம் என்று உணர்ந்தேன். அதில் நான் பெற்ற அனுபவங்களை உங்களுடன் பகிர்வதால் நீங்களும் பயனடையலாம் என்று இங்கு பகிர்ந்து கொள்கிறேன். முன் அனுபவம் இல்லாது முதுமையை அடையும் வேளை கூடிய பயனை அனுபவிக்கலாம். உங்களுக்குப் பிடித்த விடயத்தை நீங்களே தேர்ந்து எடுங்கள்.

முதலாவதாக நான் குறிப்பிட விரும்புவது தன்னார்வத் தொண்டாகும். எக்காலத்திலும் உதவி வேண்டி இருப்பவர்களின் எண்ணிக்கைக்கு எல்லையே கிடையாது. அவர்களுக்கு ஆதரவாய் உதவுவதில் மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது. இன்று ரொறன்ரோ நகரில் உள்ள பொது ஸ்தாபனங்களில் ஆள் பற்றக்குறையால் பெரிதும் அவதியுறுகிறார்கள்.

அது வாசிகசாலையாக இருக்கலாம், அல்லாவிடில் வைத்திய சாலையாக இருக்கலாம், இன்னும் விளையாட்டுத் திடலாக இருக்கலாம். இப்படியான அமைப்புகளில் ஏதாவது உதவி வேண்டுமா ? எனக் கேட்கும் முன்பே அழைத்து நன்றி சொல் வார்கள்.

நீங்கள் உங்கள் நேரத்தைப் பயனுடையதாக பாவிப்பதுடன் நீங்கள் செய்த உதவிக்கு நன்றி தெரிவிக்கும் வேளை மனநிறைவு ஏற்படும். இத்தகைய தன்னார்வத் தொண்டுகள் முதியவர் அமைப்புகளிலும் பராமரிப்பு நிலையங்களிலும் செயற்படுத்தலாம்.

இரண்டாவதாக, உங்கள் அனுபவத்தைப் பகிர்வது ஒரு சிறந்த பொழுது போக்காகும். அனுபவம் என்பது விலைக்கு வாங்க முடியாது. ஏட்டில் சுரைக்காய் என்பது கறிக்கு உதவாது. எனவே உங்கள் அனுபவத்தை மற்றவர்களுக்கு பகிர்வதால் நீங்கள் வழிகாட்டியாய் இருப்பீர்கள். இளம் வயதில் கிரிக்கெட் அல்லது உதை பந்தாட்டம் விளையாடி இருந்தால் அருகில் உள்ள மைதானத்தில் அனுசரணையாளராக இருக்கலாம். விலை மதிப்பற்ற நேரம் உங்களிடம் உள்ளது. அனுபவசாலி களின் சேவை எல்லோருக்கும் தேவை.

மூன்றாவதாக நான் குறிப்பிட விரும்புவது பொழுது போக்குகள். இதை ஆங்கிலத்தில் Hobbies என்பார்கள். இளம் வயதில் நேரப்பளு, வேலைப்பளு மற்றும் பொருளா தாரத் தேவை காரணமாகப் பல பொழுது போக்குகளைத் தவற விட்டிருப்பீர்கள், அவற்றை நீங்கள் இப்போது செய்து கொள்ளலாம். எடுத்துக் காட்டாக இசை, வரைதல், விளையாட்டு போன்ற பொழுதுபோக்குகளைக் குறிப்பிடலாம்.

என் சொந்த அனுபவத்தை இங்கு குறிப்பிடலாம் என நம்பு கிறேன். நான் ஓய்வு பெற்றபின் சில பொழுது போக்குகளைப் பயின்றேன். அதில் ஒன்று டெரேரியம் (Terrarium) எனும் போத்தலில் பயிர் வளர்த்தல். இப்படிப் பயிரை வளர்த்தால் பல ஆண்டுகளுக்கு நீர் ஊற்றாமல் பயிர் உயிரோடிருக்கும்.

நான் 2018-ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவிற்குச் சென்ற வேளை என் உறவினர் வீட்டில் ஒரு போத்தலில் பயிரை நட்டுக் கொடுத்துவிட்டு வந்தேன். சென்ற வருடம் நான் உறவி னரைத் தொலைபேசியில் அழைத்துக் கதைத்த வேளையில் அந்த நண்பர் இவ்வளவு காலமும் நீர் ஊற்றாமல் அந்தப் பயிர் இருப்பதாகக் கூறியதைக் கேட்க பெரும் மகிழ்ச்சியுடன் சிரஞ்சீவி குளிசை குடித்த மாதிரி இருந்தது. எனவே முதுமை எனும் பொற்காலத்தில் நீங்களும் ஈடுபடலாம்.

நான்காவதாக, மனிதர்கள் குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சி அடைந்தவர்கள். ஆனால் நாம் வாழ்ந்த காலம் அனைத்தும் எதையோ நோக்கி ஓடிக்கொண்டே இருந்தோம். கூட்டாக வாழ்ந்த இனத்தவரான நாம் முன்பு, சிறு வீட்டில் பெரும் குடும் பமாக வாழ்ந்து வந்தோம். தற்போது பெரிய வீட்டில் தனிமையாக வாழ்ந்து காலத்தைக் கழிக்கிறோம். கணவன், மனைவி, பிள்ளைகள் கைத்தொலைபேசியில் கதைக்கும் நிலையிலேயே எமது நவீன வாழ்க்கை உள்ளது. இந்நி லையில் முதுமைப் பருவத்தில் உங்களோடு கதைப்பதற்கு யாருக்கும் நேரம் வராது. இது உங்களுக்கு மன அமைதியைக் குலைக்கும். இதனால் நீங்கள் தொண்டு நிறு வனங்களுடன் சேர்ந்து பொது வேலையில் ஈடுபட்டால் உங்கள் மனதைச் சிதைவுபடாமல் வைத்திருக்க முடியும்.

இறுதியாக நான் கூற உள்ள விடயம் இத்தகைய அமைப் புகள் உலகின் பல பாகங்களுக்கு பொழுது போக்குப் பய ணங்களை ஒழுங்கு செய்து அழைத்துப் போவார்கள். ஒத்த வயதினருடன் இத்தகைய பயணங்கள் மேற்கொள்வது மனதிற்கு உற்சாகத்தையும் உடலுக்கு வலுவையும் சேர்ப்ப தனால் இறுதிக் காலம் பெற்காலமாகும்.

சூரியன் அஸ்தமிக்கும் வேளையில் வானம் வண்ணங்களுடன் அழகாகக் காட்சி தருவதுபோல் உங்களது முதுமைப்பருவம் பொற்காலமாக அமைய வாழ்த்தி முடிக்கிறேன்.

kumar.punithavel@thaiveedu.com

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
"Empowering Financial Freedom"
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
creditsolutioncentre@gmail.com

கல்வியும் சூழல் கரிசனையும்

அகமட் பிஸ்தாமி

'சூழல்' என்பது மனிதர் வாழும் இயற்கைச் சூழலையும் சமூகச் சூழலையும் குறிக்கிறது. மனித வாழ்க்கை இயற்கையுடன் நெருங்கிய தொடர்புடையது. மரங்கள், ஆறுகள், மலைகள், காடுகள், விலங்குகள், பறவைகள், காற்று, நீர் போன்ற அனைத்தும் மனித வாழ்வின் அத்தியாவசிய அங்கங்களாகும். ஆனால், இன்றைய உலகில் தொழினுட்ப வளர்ச்சி மற்றும் மனிதனின் அளவுகடந்த தேவைகள் காரணமாக சூழல் பெரிதும் பாதிக்கப்படுகிறது. காடுகள் அழிக்கப்படுகின்றன, நீர் மாசுபடுகிறது, காற்று நஞ்சாகிறது, விலங்கினங்கள் அழிவின் விளிம்பில் தள்ளப்படுகின்றன. இந்நிலையை மாற்றுவதற்கும் மனிதர்களிடம் சூழல் பற்றிய பொறுப்புணர்வை உருவாக்குவதற்கும் கல்வி மிக முக்கியமான கருவியாகும். கல்விக் கூடாக மட்டுமே சூழலின் பசுமையை குளிர்ச்சியை பாதுகாப்பை ஆரம்பத்தில் இருந்தே உருவாக்கி வளர்க்க முடியும்.

கல்வி என்பது வெறும் புத்தக அறிவை மட்டுமே வழங்குவது அல்ல. மனிதரை நல்ல பண்புகளுடன் கூடிய சமூகப் பொறுப்புள்ள நபராக மாற்றுவதே உண்மையான கல்வியின் நோக்கமாகும். அதனால், கல்வியும் சூழல் கரிசனையும் ஒன்றோடொன்று தொடர்புடையவை.

கல்வியின் உண்மையான நோக்கம்:

கல்வியின் உண்மையான வெற்றி என்பது ஒரு மாணவர் தேர்வில் பெறும் மதிப்பெண்களில் மட்டும் அடங்கியிருக்கவில்லை; அது அவரது பண்பாட்டு எழுச்சியிலும் உயரிய ஆளுமையிலுமே வெளிப்படுகிறது. ஒருவர் கல்வியின் உச்சத்தைத் தொட்டாலும், அவர் வாழும் சூழல் மாசடைந்து, துர் நாற்றமும் நோய்களும் பரவும் நிலையில் இருக்குமானால், அக்கல்வி எவ்விதப் பயனும் அற்றதாகிவிடும். உண்மையான கல்வி என்பது கற்பவரை மனிதநேயம், ஒழுக்கம், சமூகப் பொறுப்புணர்வு மற்றும் இயற்கை மீது மாறாத அன்பு கொண்டவராக உருமாற்ற வேண்டும். தூய்மையான மற்றும் அழகிய சூழலில் வாழ்பவர்களிடம் நற்பண்புகளும், மென்மையான சுபாவமும், ஆழ்ந்த ரசனையுணர்வும், கலை ஆர்வமும் இயல்பாகவே மேலோங்கி நிற்கும். எனவே, செம்மையான சூழலே ஒரு மனிதரை முழுமையான பண்பாளனாகச் செதுக்கும் உன்னதக் கருவியாகத் திகழ்கிறது.

அறிவியல், கணிதம், மொழி மற்றும் தொழினுட்பப் பாடங்களுக்கு அளிக்கப்படும் அதே முக்கியத்துவம், இன்றைய கல்வி முறையில் சூழல் பாதுகாப்பு குறித்த நடைமுறை அறிவிற்கும் வழங்கப்பட வேண்டும். வெறும் ஏட்டுக்கல்வியாக அல்லாமல், சமகாலச் சூழலியல் நெருக்கடிகளைத் தீர்க்கும் வலிமை கொண்டதாக இக்கல்வி அமைய வேண்டும். மனித சிந்தனையை மாற்றியமைக்கும் மகத்தான சக்தி கல்விக்கு உண்டு; இருப்பினும், தான் வாழும் சூழலை நேசிக்கத் தெரியாத ஒருவருக்கு அக்கல்வியால் எவ்வித மாற்றமும் நிகழ்ந்துவிடப் போவதில்லை. ஒரு மாணவருக்குச் சிறுவயதிலிருந்தே மரங்களைப் பேணுதல், நீர் மேலாண்மை மற்றும் முறையான கழிவு அகற்றும் பழக்கவழக்கங்களைக் கற்பிப்பதன் மூலம் மட்டுமே, அவரை எதிர்காலத்தில் சூழல் பாதுகாப்பு மிக்க ஒரு பொறுப்புள்ள பிரஜையாக உருவாக்க முடியும். மாற்றத்திற்கான விதை வகுப்பறைகளிலிருந்தே தொடங்க வேண்டும்.

சூழல் பாதிப்புகளுக்கான காரணிகள்:

நாம் வாழும் இயற்கைச் சூழல் இன்று இயற்கை, செயற்கை மற்றும் தொழினுட்பக் காரணிகளால் முன்னெப்போதும் இல்லாத அளவிற்குப் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. தொழிற் சாலைகளின் நச்சுப் புகை, அளவுக்கதிகமான பிளாஸ்டிக் பயன்பாடு, காடழிப்பு மற்றும் நீர்நிலைகளில் கொட்டப்படும் கழிவுகள் ஆகியவை இப்பாதிப்பின் முதன்மைக் காரணிக ளாகும். மேலும், பெருகிவரும் மக்கள் தொகையும் வேகமான நகரமயமாக்கலும் இச்சிக்கலைத் தீவிரப்படுத்தியுள்ளன.

முன்னொரு காலத்தில் இயற்கையை மதித்து, அதனுடன் இணைந்து வாழ்ந்த மனிதர்கள், இன்று தன் வசதிக்காக இயற் கையைச் சிதைக்கத் தொடங்கியுள்ளனர்; குறிப்பாக, நவீன தொழினுட்பக் கழிவுகள் உலகை மிக மோசமாக மாசுபடுத்தி வருகின்றன. இதன் விளைவாகவே புவி வெப்பமடைதல், வறட்சி, வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த் தங்களை நாம் இன்று எதிர்கொண்டு வருகிறோம். இயற் கையோடு கொண்டிருந்த பிணைப்பை மனிதர் இழந்ததே இந்த ஒட்டுமொத்தச் சூழலியல் நெருக்கடிக்கும் அடிப்படை யாகும்.

கல்வி மூலம் சூழல் விழிப்புணர்வு:

சூழலைப் பாதுகாக்க வேண்டுமெனில் முதலில் மக்களிடம் அது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இந்த விழிப் புணர்வை உருவாக்குவதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. பள்ளிகளில் சூழல் தொடர்பான பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு மரநடுகை நிகழ்ச்சிகள், சுத்தம் செய்வது தொடர்பான நடவடிக்கைகள், மீள்சுழற்சி பற்றிய செயல்முறைகள் போன்றவை நடைமுறை அனுபவமாக வழங் கப்பட வேண்டும்.

சூழலியல் சார்ந்த கல்வியை ஓர் ஆசிரியர் வெறும் பாடமாக அன்றி, மாணவர்களின் அன்றாட வாழ்வியலோடு தொடர்புப டுத்தி நடைமுறை ரீதியில் கற்பிக்கும்போது அது அவர்கள் மனதில் ஆழமாகப் பதிகிறது. 'நீர் இல்லையேல் உயிரில்லை' போன்ற உன்னதக் கருத்துகளை வெறும் வாசகங்களாக மட்டும் நிறுத்தாமல், அவற்றைச் செயற்பாட்டு வடிவில் மாண வர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். தனது சுற்றுப்புறத்தில் உள்ள இயற்கை வளங்களை மையப்படுத்தி ஆசிரியர் வழங்கும் இத்தகைய நேரடிப் பயிற்சி, மாணவர்களிடம் சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அவர்கள் இயற்கையை நேசிக்கும் பண்பாளர்களாக வளரவும் வழிவ குக்கும்.

மாணவர்களின் பொறுப்பு:

மாணவர்கள் நாளைய நாட்டின் தலைவர்கள். அவர்கள் சூழலைப் பாதுகாக்கும் பொறுப்பை இன்றே உணர வேண்டும். பள்ளி வளாகத்தைச் சுத்தமாக வைத்திருத்தல், மரங்களை வளர்த்தல், பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்தல், மின்சாரத்தை வீணாக்காமல் பயன்படுத்தல் போன்ற செயல் களில் மாணவர்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும். இன்றைய மாணவர்கள் தொழினுட்ப உலகில் வாழ்கின்றனர். அவர்கள் சமூக ஊடகங்கள் மூலம் சூழல் பாதுகாப்பு பற்றிய செய்திகளைப் பரப்பலாம். சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்குகள், போட்டிகள், நாடகங்கள், யூ டியூப் வழியான குறுங்காணொளிகள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்றவற்றில் பங்கேற்கலாம்.

ஆசிரியர்களின் பங்கு:

சூழல் கரிசனையை வளர்ப்பதில் ஆசிரியர்களின் பங்கு மிகவும் முக்கியமானது. ஆசிரியர் ஒரு மாணவரின் வாழ்க் கையில் வழிகாட்டியாக இருக்கிறார். அவர் சொல்லும் வார்த் தைகள் மாணவர்களின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, ஆசிரியர்கள் பாடப்புத்தக அறிவுடன் மட்டுமல்லாமல் நடைமுறை வாழ்க்கை மதிப்புகளையும் மாணவர்களுக்கு வழங்க வேண்டும். ஒரு ஆசிரியர் பள்ளியில் மரநடுகை நிகழ்ச்சி நடத்தினால், மாணவர்கள் அதில் ஆர்வமாகப் பங் கேற்பார்கள். ஆசிரியர் தானே பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்த்தால், மாணவர்களும் அதைப் பின்பற்றுவார்கள். அதனால் ஆசிரியர்கள் செயலில் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

குடும்பமும் சமூகமும்:

சூழல் பாதுகாப்பு என்பது பள்ளியின் பொறுப்பு மட்டும் அல்ல. குடும்பமும் சமூகமும் இதில் பங்கு கொள்ள வேண்டும். பெற்றோர் குழந்தைகளுக்கு சிறுவயதிலிருந்தே சுத்தம், ஒழுங்கு, இயற்கை மீது அன்பு போன்றவற்றை கற்றுக் கொடுக்க வேண்டும். குடும்பத்தில் நீரை சேமிப்பது, மின்சா ரத்தை வீணாக்காமல் இருப்பது, மரங்களை வளர்ப்பது போன்ற பழக்கங்கள் குழந்தைகளுக்கு நல்ல முன்மாதிரியாக அமையும். சமூக அமைப்புகள் மற்றும் மத நிறுவனங்களும் சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யலாம்.

சமயமும் சூழல் பாதுகாப்பும்:

சமயங்கள் அனைத்தும் மனிதநேயத்தையே அடிப்படை யாகக் கொண்டவை; அவை இயற்கையை நேசிக்கவும், அதன் சமநிலையைப் பாதுகாக்கவும் நமக்குக் கற்றுக்கொடுக் கின்றன. இவ்வுலகு நாம் மட்டும் நுகர்ந்துவிட்டுச் செல்வ தற்கான இடமன்று; மாறாக, அடுத்த தலைமுறையினரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்க வேண்டிய ஒரு தார்மீகச் சொத்தாகும். மரங்களை வளர்ப்பதும், சக உயிரினங்களிடம் கருணை காட்டுவதும் வெறும் அறச்செயல்கள் மட்டுமல்ல, அவை சமயங்கள் வலியுறுத்தும் ஆன்மீகக் கடமைகளு மாகும். குறிப்பாக, பெரும்பாலான சமயக் கடமைகளுக்கு நீர் இன்றியமையாதது என்பதால், வழிபாட்டுத் தலங்களில் 'நீரை வீணாக்காதீர்' எனும் விழிப்புணர்வு வாசகங்களைக் காட்சிப்ப டுத்துவது அதன் மதிப்பைப் பல மடங்கு உயர்த்தும். ஒரு மரம் வளர்ப்பது என்பது இனம், மதம் கடந்து அனைத்து உயிர்களுக்கும் பயன் தரக்கூடியது. எனவே, சமயத் தலை வர்கள் இத்தகைய விழிப்புணர்வுகளை முன்னெடுக் கும்போது, சூழல் பாதுகாப்பு என்பது ஒரு சமூகப் பொறுப்பாக மட்டுமன்றி, உயர்ந்த ஆன்மீகப் பொறுப்பாகவும் மக்களால் உணரப்படும்.

தொழினுட்பமும் சூழலும்:

தொழினுட்ப வளர்ச்சி மனித வாழ்க்கையை எளிதாக்கியுள்ள அதே வேளையில், சூழலில் சில எதிர்மறைத் தாக்கங்க ளையும் ஏற்படுத்தியுள்ளது. தொழிற்சாலைகள், வாகனப் போக்குவரத்து மற்றும் மின்னணு சாதனங்களின் பெருக் கத்தால் காற்று மற்றும் நீர் நிலைகள் மாசடைந்து வருகின்றன. இருப்பினும், தொழினுட்பத்தைச் சரியான திசையில் கையாண்டால் சூழல் சிதைவைத் தடுத்து அதைப் பாதுகாக் கவும் இயலும். இதற்குச் சான்றாக, கார்பன் வெளியேற்றமற்ற சூரிய ஆற்றல், காற்றாலை மின்சாரம், மழைநீர் சேமிப்பு மற்றும் கழிவு மேலாண்மைக்கான மீள்சுழற்சி தொழினுட்பங் களைச் சொல்லலாம். இத்தகைய பசுமைத் தொழினுட்பங்கள் குறித்துக் கல்வி வழியாக மக்களிடம் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

எதிர்கால தலைமுறைக்கான பொறுப்பு:

நாம் வாழும் பூமி நமக்குச் சொந்தமானது மட்டும் அல்ல; அது எதிர்கால தலைமுறைகளின் உரிமையும் ஆகும். இன்று நாம் சூழலை அழித்தால் நாளைய குழந்தைகள் தூய காற்றையும் தூய நீரையும் இழந்து விடுவார்கள். எனவே எதிர்கால சந்ததி யினருக்காக சூழலைப் பாதுகாப்பது ஒவ்வொருவரின் கடமை யாகும். மரங்களை வெட்டுவதற்குப் பதிலாக புதிய மரங்களை நட வேண்டும். பிளாஸ்டிக் பொருட்களை குறைத்து இயற் கைக்கு ஏற்ற பொருட்களை பயன்படுத்த வேண்டும். நீர் வளங்களை பாதுகாக்க வேண்டும். இத்தகைய நல்ல பழக் கங்களை கல்வி மூலம் சமூகத்தில் பரப்ப முடியும்.

முடிவுரை:

கல்வியும் சூழல் பாதுகாப்பும் மனித வாழ்வியலின் பிரிக்க முடியாத இரு கூறுகளாகும். முறையான கல்வி இன்றிச் சூழல் விழிப்புணர்வு ஏற்பட வாய்ப்பில்லை; அதேவேளை, பாது காப்பான சூழல் இன்றி மனித குலம் நிலைத்திருக்கவும் வழியில்லை. எனவே, கல்வி நிறுவனங்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூக அமைப்புகள் என அனைவரும் ஒருங்கிணைந்து சூழல் பாதுகாப்பு எனும் அறப்பணியில் கரம் கோர்க்க வேண்டும். 'இயற்கையைப் பாதுகாப்பது என்பது மனித குலத்தைத் தற்காத்துக்கொள்வதற்குச் சமம்' என்ற நிதர்சனத்தை நாம் உணர வேண்டிய தருணம் இது. வெறும் அறிவை மட்டும் போதிக்காமல், சூழல் மீதான கரிசனையும் சமூகப் பொறுப்புணர்வும் கொண்ட ஒரு புதிய தலைமுறையை உருவாக்குவதே கல்வியின் உன்னத நோக்கமாக இருக்க வேண்டும். அத்தகைய மாற்றத்தினால் மட்டுமே, இந்தப் பூமி எதிர்காலத் தலைமுறையினரும் வாழ்வதற்கு உகந்த பசுமையான மற்றும் பாதுகாப்பான இடமாக நிலைத்திருக்கும்.

bisthamy.ahamed@thaiveedu.com

14

பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே

பதின்ம வயதினரின் வாகனம் ஓட்டுதலும்

மது, போதைப்பொருட் பயன்பாடும்-1

எஸ்.கே.விக்னேஸ்வரன்

பதின்ம வயதினரின் வாகனம் ஓட்டுதலும் பெற்றோரின் அச்சங்களும்:

பதின்ம வயதினர் வாகனம் ஓட்டலாமா? பதினாறு வயதில் திறமையுடனும் நம்பிக்கையுடனும் ஒரு வாகனத்தை கையாளக்கூடிய இளைஞர்கள் இருக்கிறார்கள், சில வேளைகளில் அவர்கள் தங்கள் பெற்றோரை விட சிறப்பாகவும் ஓட்டுகிறார்கள்.

இதற்கு மாறாக, பதினெட்டு வயதிலும் போதியளவு முதிர்ச்சியற்றவர்களும் இருக்கவே செய்கிறார்கள். அப்படிப்பட்ட இளைஞர்களை வாகனம் ஓட்ட அனுமதிப்பது பொறுப்பற்ற செயலாகும். தங்கள் பதின்ம வயது 'ஓட்டுநருக்கு' எவ்வளவு சுதந்திரத்தையும் பொறுப்பையும் கொடுக்கலாம் என்பது குறித்து பெற்றோர்கள் தம்முள் முரண்படுவதில் எத்தகைய ஆச்சரியமுமில்லை.

பதின்ம வயதினர்களது 'வாகனம் ஓட்டுதல்' என்ற பிரச்சினையைப் பற்றி விவாதிக்க ஒரு பெற்றோர் குழு கூடியிருந்தது. அவர்கள் தங்கள் கவலைகளை வெளிப்படுத்தினர், பிரச்சினைகளை விவரித்தனர், மற்றும் தீர்வுகளைத் தேடினர். அவர்களின் கூற்றுகளின் ஒரு மாதிரியை இங்கே காணலாம்:

திருமதி. A: கடந்த வாரம் என் மகன் ஓட்டுநர் தேர்வில் தேர்ச்சி பெற்றான். அன்று முதல், எனக்குத் தூக்கம் வரவில்லை. நேற்று, அவன் முதன்முறையாக என் காரைத் தனியாக ஓட்டினான். அது என் வாழ்நாளில் மிக நீண்ட பயணமாக இருந்தது. நான் எனது காரை ஓட்டுவதற்கு அவனை அனுமதித்ததற்காக அவன் ஆச்சரியப்பட்டான். ஆனால் மோட்டார் வாகனத் துறை அவன் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை, நான் எப்படி மறுக்க முடியும்?

திருமதி. B: நீங்கள் சொல்வதைக் கேட்கும்போது, 'சாரதி அனுமதிப் பத்திரங்களை' அரசு வழங்குவது ஓர் அதிர்ஷ்டம் என்றே எனக்குத் தோன்றுகிறது. அது தாய்மார்களின் கையில் இருந்திருந்தால், நம் பிள்ளைகள் ஒருபோதும் கார் ஓட்டத் தயாராகியிருக்க மாட்டார்கள்!.

திருமதி. C: என் மகன் ஒரு பொறுப்பற்ற 'ஓட்டுநர்'. அவனும் அவனுடைய நண்பர்களும் பைத்தியக்காரர்களைப் போல வண்டி ஓட்டுகிறார்கள். குழந்தைகள் நிறைந்த ஒரு தெருவில் அவர்கள் வேகமாகப் 'பறந்து' செல்கிறார்கள். வீதியின் ஒரு பக்கத்தி லிருந்து மறு பக்கத்திற்கு வாகனத்தை அங்கும் இங்கும் வளைத்து வளைத்து ஓட்டுகிறார்கள், வளைவுகளில் வாகனத்தைச் சறுக்கவிட்டுச் செல்கிறார்கள். அப்படிச் செய்வதை தமது கெட்டித்தனம் என்று நினைக்கிறார்கள். தங்கள் இந்தத் திறமைகளுக்காக மக்கள் தம்மைப் பாராட்ட வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

திருமதி. D: என் மகன் பொறுப்பற்ற முறையில் வாகனம் ஓட்டியதற்காகக் கைது செய்யப்பட்டான். அவன் தெருவில் மற்றொரு காருக்கு அருகாக, அந்த வாகனத்தின் ஓட்டுநருடன் பேசிக்கொண்டே மெதுவாகச் சென்றுகொண்டு இருக்கிறான். காவல்துறையினரால் பிடிக்கப்பட்டபோது அவன் ஆச்சரியப்பட்டான். அவன் 'எந்தத் தவறும் செய்யவில்லை,' என்றும், 'சும்மா பேசிக் கொண்டிருந்தேன்' என்றும் கூறினான். போக்கு வரத்து விதிமுறைகள் உட்பட, அவை தொடர்பான சட்ட ஒழுங்குகளுக்குக் கீழ்ப்

படிவது பலவீனத்தின் ஒரு அடையாளம் என்று என் மகன் நினைக்கிறான்.

திருமதி. E: எங்கள் பதினாறு வயது மகனை நாங்கள் வாகனம் ஓட்ட அனுமதிப்பதில்லை. நாங்கள் செய்தித்தாள் களைப் படிக்கிறோம், என்ன நடக்கும் என்று எங்களுக்குத் தெரி யும். அவன் ஒவ்வொரு முறை வாகனத்தை ஓட்டும்போதும் கவலைப்பட்டு நான் என் உயிரை மாய்த்துக்கொள்ளப் போவ தில்லை. அவன் கல்லூரிக்குச் செல்லும் காலம் வரும்போது, அவனுக்குக் கார் கிடைக்கும், அது எங்களிடமிருந்து வழங் கப்படும் ஒரு பரிசாக இருக்கும்.

திருமதி F: என் பதினைந்து வயது மகளை நானும் கார் ஓட்டிச் செல்ல அனுமதிப்பதில்லை. அவள் தனது 'டேற்றிங்'கு களுக்கும் நடந்தே செல்லலாம், பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தலாம் அல்லது இருவர் செல்லக்கூடிய ஒரு 'சைக் கிள்' வண்டியைக் கூடப் பயன்படுத்தலாம். என் மகளின் உயிரை யாரோ ஒரு 'துணிச்சல்கார' ஓட்டுநரின் கைகளில் நான் ஒப்படைக்கப் போவதில்லை.

திருமதி. G: எங்கள் பதினேழு வயது மகனுக்குக் கார் வாங்கு வதா வேண்டாமா என்பதில் எங்களுக்குள் ஒரு கருத்து வேறு பாடு இருந்தது. அப்போது, கார் வைத்திருப்பதும், நல்ல மதிப் பெண்களைப் பெறுவதும் ஒன்றிணைவதில்லை என்று குறிப் பிடும் ஒரு அறிக்கையைப் படித்தோம். நான், கார் வைத் திருப்பதற்கு நிறைய பணம் செலவாகும் என்றும் பணம் சம் பாதிக்க அவனுக்கு ஒரு நல்ல கல்வி தேவை என்றும் நல்ல கல்வி பெற, அவன் தற்காலிகமாகக் கார் வைத்திருப்பதைப் பிந்தள்ளிப் போட வேண்டும் என்றும் என் மகனிடம் சொன்னேன்.

திருமதி. H: வாகனம் ஓட்டுவது என் மகனிடம் ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அவன் அதிக பொறுப்புள்ள வனாகவும், சேர்ந்து வாழ்வதற்கு ஒத்துப்போகக் கூடியவனா கவும் மாறியுள்ளான். குடும்பக் காரைப் பெறுவதற்காக, அவன் தனது வீட்டுப்பாடங்களையும் வீட்டு வேலைகளையும் கூடச் சரியான நேரத்தில் செய்து முடிப்பான். அவன் காரை நன்றாகப் பராமரிக்கிறான் என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும். தான் இந்தக் காரை எப்படி விரும்புகிறேன் என்று சொல்வதென்றால் அது எனது காதலாகத்தான் இருக்கும் என்று அவன் சொல்வதை நான் ஒட்டுக் கேட்டேன்.

திருமதி. I: எங்கள் மகன் குடும்பக் காரை ஓட்ட அனுமதி கேட்டபோது, என் கணவர் அவனிடம் பின்வருவனவற்றை தான் பொறுப்பேற்பதாக அதில் அவன் கையெழுத்திட வேண் டும் என்று ஒரு ஒப்பந்தத்தைக் கொடுத்தார்:

- காரின் 'ஃபெண்டர்களில் (fenders) ஏற்படும் நெளிவுகள்.
- ற்றாங்கில் (Tank) உள்ள பெட்ரோலின் அளவு.
- ரையர்களில் இருக்கும் காற்றின் அளவு.
- ஓயிலின் அளவு, பற்றரியில் உள்ள தண்ணீர் அளவு மட்டம் பற்றிய கவனமான அவதானிப்பு.
- பாதைகளுக்கான வேக வரம்புகளைக் கடைப்பிடித்தல்.
- சரியான நேரத்தில் வீட்டிற்குத் திரும்புதல்.

என் கணவர், 'இந்தக் கடுமையான பொறுப்பை ஏற்றுக்கொண்டு நீ காரை ஓட்டலாம், அல்லது ஓட்டாமல் இருப்பதைத் தேர்வு செய்யலாம். முடிவு உன்னுடையது,' என்றார். எங்கள் மகன் பெருமூச்சு விட்டு, கையெழுத்திட்டான். ஒருமுறை எங்கள் மகன் மிகவும் தாமதமாக வீட்டிற்குத் திரும்பினான். என் கணவர், 'கார் ஓட்டும் உரிமையை நீ மறுபரிசீலனை செய்ய முடிவு செய்துவிட்டாய் போலிருக்கிறது' என்றார். எங்கள் மகன் மன்னிப்புக் கேட்டு, நிலைமையை விளக்கினான். அன்று முதல் எங்களுக்குப் பெரிய சிக்கல்கள் எதுவும் ஏற்படவில்லை.

இளம் வாகன ஓட்டுநர்களுக்கான வழிகாட்டுதல்கள்:

அனைத்து பெற்றோர்களும் தங்கள் பதின்பருவப் பிள்ளை கள் அனுபவம் வாய்ந்த பொறுப்பான ஓட்டுநர்களாக ஆக வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் நமது உதவி யின்றி அவர்களால் அவ்வாறு ஆகிவிட முடியாது. தெளிவான வரம்புகளையும் விவேகமான விதிமுறைகளையும் வகுக்கும் அதே வேளையில், பொறுப்பான ஓட்டுதலுக்கான வாய்ப்புக ளையும் நாம் வழங்க வேண்டும். பதின்பருவத்தினருக்கு ஒரு கார் தனித்துவமான குறியீட்டு மதிப்பை வழங்குகிறது. அதா வது, அது வயது வந்தோருக்கான சின்னமாக ஆகிறது. அது சுதந்திரம், ஆற்றல், வேகம், கிளர்ச்சி போன்றவற்றைக் குறிக் கும் சின்னமாகிறது. எனவே, முதிர்ச்சியற்றவர்களின் கைகளில் அது ஆபத்தானதாகவும் இருக்கும் வாய்ப்பையும் கொண்டி ருக்கக்கூடும்.

அக்கறையுள்ள பெற்றோர்களின் ஒரு குழுவால் பின்வரும் வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன:

- ஒவ்வொரு பதின்பருவத்தினருக்கும் ஓட்டுநர் கல்விப் படிப் புகளை மேற்கொள்ள வாய்ப்பு வழங்கப்படுதல் வேண்டும், பத்தாம் வகுப்புக்கு முன்பு வாகனம் ஓட்டும் பயிற்சி வகுப் புகள் வழங்கப்படக்கூடாது.
- உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் தடையற்ற உரிமம் பெறு வதற்கு முன்பு, குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்குள் கட் டுப்படுத்தப்பட்ட உரிமத்துடன் வாகனம் ஓட்டியிருக்க வேண்டும்.
- கார் உரிமையாளருக்கான குறைந்தபட்ச வயது பதினாறாக இருக்க வேண்டும்
- எந்தவொரு பதின்ம வயதினரும் தனது சொந்த வருமானத் தில் பணம் செலுத்திப் பராமரிக்க முடியாவிட்டால், அவர் ஒரு காரை வைத்திருக்கக்கூடாது. வசதியான வீடுகளில் கூட, சலுகைகளுடன் பொறுப்பும் சேர்ந்தே இருக்க வேண்டும்.
- போக்குவரத்து விதிகள் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண் டும். போக்குவரத்தில், ஒரு சிறு குற்றம்கூட ஒரு பெரும் குற் றத்தைப் போலவே ஆபத்தானது. உயிர் ஆபத்தில் இருக் கும்போது, இரண்டாவது மற்றும் மூன்றாவது வாய்ப்பு களுக்கு இடமில்லை. ஓட்டுநர் உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தினால், விரைவானதும் கடுமையானதுமான நட வடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
- பதின்ம வயது ஓட்டுநர்கள் தங்களின் சட்ட ரீதியான, நிதி ரீதியான பொறுப்புகளைத் தெளிவாக அறிந்திருக்க வேண்டும்.

குடிப்பழக்கம் (மதுப்பாவனைப் பழக்கம்):

சட்டரீதியான, சமூக ரீதியான நெறிமுறைகளைத் தவிர, பல பெற்றோர்களுக்கு மதுபானம் குறித்து வலுவான தனிப்பட்ட

உணர்வுகள் உள்ளன. இந்த உணர்வுகள் புறக்கணிக்கப் படக் கூடாது.

யாராவது ஒரு பெற்றோர் தயக்கத்துடன், 'எனது பதினேழு வயது மகன் குடிப்பது சரியா தவறா?' என்று கேட்கும்போது, அவருக்கு ஒரு எளிய பதிலை விட மேலான பதில் ஒன்று தேவைப்படுகிறது. அவர் தனது உணர்வுகளைத் தெளிவுப டுத்தி, அதன் மூலமாகத் தனது சொந்த முடிவுகளை எடுப்ப தற்கு, அவருக்கு உதவி தேவைப்படுகிறது.

பதின்ம வயதினரின் குடிப்பழக்கமும் பெற்றோரின் கவலைகளும்:

பதின்ம வயதினரின் குடிப்பழக்கப் பிரச்சினை குறித்து விவா திக்க ஒரு பெற்றோர் குழு கூடியது. இவை அவர்கள் முன் வைத்த கருத்துகள்:

திருமதி. A: பல மாதங்களாக நான் எதையும் கண்டுகொள் ளாமல் இருந்தேன். என் மகன் குடிப்பான் என்பதை நம்ப மறுத்தேன். நான் அவனை முழுமையாக நம்பினேன். நேற்று இரவு அவன் குடித்துவிட்டு வீட்டிற்கு வந்தான். அவன், 'அடடா, நான் நன்றாகக் குடித்துவிட்டேன்' என்றான்.

'அடடா, நான் நன்றாகக் குடித்துவிட்டேன்'. 'நான் படுமோச மாக இருக்கிறேன்.' என்பவற்றை அவன் ஏதோ ஒரு பாராட்டத் தக்க சாதனையைச் செய்தது போலச் சொன்னான். நான் அதிர்ச்சியில் உறைந்து போனேன். அவன் தந்தை அவனைப் பார்த்திருந்தால் கொன்றிருப்பார். பிரச்சினை என்னவென்றால், அவனுடைய நண்பர்களில் பெரும்பாலானோர் குடிப்பார்கள் என்பதுதான்'.

திருமதி. B: என் மகன் குடிப்பதைப் பற்றி எனக்குக் கவலை யில்லை; ஆனால் அவன் குடிக்கும் விதத்தைப் பற்றித்தான் எனக்குக் கவலை. அவனும் அவனுடைய நண்பர்களும் ஒன்று சேர்வதற்காகக் குடிப்பதில்லை. மாறாக, குடிப்ப தற்காகவே ஒன்று சேர்கிறார்கள். குடிப்பதுதான் அவர் களின் நோக்கம். வாரம் முழுவதும், அவர்கள் அந்த வெறித்தனமான குடிப்பழக்கத்திற்குத் திட்டமிடு கிறார்கள். ஒரு பையன், வயதில் மூத்தவன், ஒரு பெட்டி 'பியர்' வாங்குகிறான். இன்னொருவன் அவர் களை ஏதோ ஒரு ஒதுக்குப்புறமான இடத்திற்குக் காரில் அழைத்துச் செல்கிறான். பிறகு, போதை ஏற்று வதற்காக முடிந்தவரை வேகமாக அவர்கள் குடிக் கிறார்கள்.

திருமதி. C: இதைக் கட்டுப்படுத்த நம் மால் பெரிதாக எதுவும் செய்ய முடியாது. நான் என் மகனைக் கடிந்துகொண்டால், அவன் தான் குடிப்பது பற்றி எனக்குத் தெரியாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்கிறான். குடிப்பழக்கத்தின் ஆபத்துகளை நான் அவனுக்குச் சுட்டிக்காட்டியபோது, அவன் 'ராபெலேயின்' (Rabelais's) புகழ் பெற்ற கூற்றை என்னிடம் மேற் கோள் காட்டினான்: 'வயதான மருத்துவர்களை விட வயதான குடிகாரர்களே அதிகம்.'

திருமதி. D: எங்கள் பதினேழு வயது மகன் எப்போதாவது எங்களுடன் ஒரு 'கொக்டெய்ல்' (cocktail) அருந்துவதுண்டு. ஏதேனும் ஒரு இருண்ட 'மூலை முடுக்குகளுள்' நடக்கும் இரக சியக் கூட்டங்களில் குடிப்பதைக் காட்டிலும், வீட்டில் ஒரு சமூகச் சூழலில் அவன் மதுவைச் சமாளிக்கக் கற்றுக்கொள் வது சிறந்தது என்று நாங்கள் நம்புகிறோம்.

திருமதி. E: என் மகன் குடிப்பான் என்று எனக்குத் தெரிந்த போது, நான் அவனிடம் சொன்னேன்: 'நீ குடிக்கப் போகிறாய் என்றால், அதை வீட்டிலேயே குடிப்பதே மேல், ஏதோவொரு இடத்திலிருக்கும் ஒதுக்குப்புறமாகப் போகும் வீதியில் காரில் இருந்தபடி குடிக்காதே.' ஆனால், அவன் தன் தந்தையுடன், வீட்டில் 'பியர்' அருந்துவதில் ஆர்வம் காட்டவில்லை. அவன் தன் நண்பர்களுடன் குடிக்க விரும்புகிறான். அவனுடைய நண்பர்களை என் வீட்டிற்கு குடிக்க அழைக்க முடியாது. அது சட்டத்திற்குப் புறம்பானது.

திருமதி. C: நாம் என்ன சொன்னாலும் செய்தாலும் பதின் வயதினர் குடிக்கத்தான் போகிறார்கள். அவர்கள் மீது நமக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை.

திருமதி. E: மதுவினாலும் கார் விபத்துகளாலும் ஏற்படக் கூடிய பாதிப்புகளைப் பற்றி நான் கவலைப்படுகிறேன். குடி போதையில் இருக்கும் ஒரு பதின்மவயதினர்களது குழுவால் ஏற்படக்கூடிய சேட்டைகளைப் பற்றியும் நான் கவலைப்படு கிறேன்.

திருமதி. B: நான் படித்த அனைத்துக் கட்டுரைகளும் புத்த கங்களும், நான் கவலைப்பட ஒன்றுமில்லை என்று எனக்கு உறுதியளிக்கின்றன. குடிக்காதவர்கள் உள்ள ஒரு குடும்பத் தில், இளம் வயதினர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாவதற் கான வாய்ப்புக் குறைவு. குடிப்பழக்கம் ஒரு பிரச்சினையாக இல்லாத ஒரு குடும்பத்தில், மது குழந்தைகளுக்கு எந்த ஆபத்தையும் விளைவிப்பதில்லை.

ஆனால், நான் இந்த நூலாசிரியர்களிடம் ஒன்று இரண்டு விஷயங்களைச் சொல்ல விரும்பு கிறேன். என் பதினேழு வயது மகன் அள வுக்கு அதிகமாகக் குடிப்பான். அவனால் மதுவிலிருந்து விலகி இருக்கவே முடியாது. நாங்கள் வெறும் 'பழைமைவாதிகள்' என்று அவன் நினைக்கிறான்.

திருமதி. D: பதின்வயது விருந்தினர் களுக்கு மதுபானங்களை வழங்க வேண்டாம் என்று எங்களுக்கு எப்போதும் அறிவுறுத்தப்படு கிறது. நாங்கள் வழங்க வேண் டியதில்லை, அவர்கள் தங் கள் சொந்தப் போத்தல் களைக் கொண்டு வருகி றார்கள். தேவாலய, சமூ கக் கூட்டங்களில் பரிமா றப்படும் பழச்சாற்றுப் பானத்தில் கூட அவர் கள் போதைப்பொரு ளைக் கலக்கிறார்கள்.

திருமதி. B: பெற்றோர்கள் பெரும்பாலும் சகித்துக்கொள் ளக் கூடாததை அனுமதிக்கிறார்கள். பழச்சாற்றுப் பானத் தில் போதைப்பொருள் கலக்கப்படும்போதும், 'கோக்'(coke) போத் தல்களில் மதுபானம் நிரப்பப்படும்போதும், அது வேடிக்கை யானது என்று நாம் நினைப்பது போல் நடந்துகொள்கிறோம். நாம் குடிப்பழக்கத்திற்கு எதிரானவர்கள் என்றாலும் அதற்கு 'மௌன ஒப்புதல்' அளிக்கிறோம். நமது கொள்கைகளுக் காகக் கடுமையாகப் போராடி நிற்க நாம் அஞ்சுகிறோம்.

திருமதி. A: பையன்களுக்குத் தங்கள் திறமையால் பெண் களைக் கவர வேண்டும் என்ற தேவை அதிகமாக இருப்ப தால், பாராட்டைப் பெறுவதற்காக அவர்கள் மதுவை மட்டு மல்ல, சூடான நிலக்கரியைக் கூட விழுங்குவார்கள்.

திருமதி. E: அந்தப் பெண்கள் நமது மகள்கள். குடிக்கும் பையன்களுடன் பழக மறுத்தால், அவர்களும் குடிப்பதை நிறுத்திவிடுவார்கள். பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் விட, பையன்களின் நடத்தையில் பெண் பிள்ளைகளுக்கு அதிக செல்வாக்கு இருக்கிறது.

திருமதி. C: நமது பதின்மவயதினர் குடிப்பதை நான் குறை சொல்ல முடியாது. நமது தலைவர்களும் குடிக்கிறார்கள்: நமது அமைச்சர்களும் குடிக்கிறார்கள். நாமும் குடிக்கிறோம். காக்டெய்ல் விருந்துகளில் நமது விருந்தினர்களை உபசரிக் கிறோம். ஒரு பானம் வழங்குவது நமது விருந்தோம்பலைக் காட்டும் வழியாகும். நமது சிறு குழந்தைகள்கூட இதை அறிந் திருக்கிறார்கள். எங்கள் தேவாலயத்தில் நடந்த கிறிஸ்துமஸ் முன்தின நிகழ்ச்சியில், சத்திரக்காரனாக நடித்த சிறுவன், வசனத்திலிருந்து விலகி, இயல்பாகப் பேசினான். அவன் மரியாளையும் யோசேப்பையும் பார்த்து, 'சத்திரத்தில் உங்களுக்கு இடமில்லை. ஆனா லும், உள்ளே வந்து ஒரு பானம் அருந்த மாட்டீர்களா?' என்று கேட்டான். எங்களால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை, ஆனால் நாங்கள் அதிர்ச்சியடைந்தோம்.

பதின்ம வயதினர் ஏன் குடிக்கிறார்கள்:

ஒரு பதின்ம வயதினருக்கு, மது என் பது முதிர்ச்சியின் சின்னமாகும். அவன் நாகரிகமாகத் தோற்ற மளிக்கவும், அதிகாரத்தை மீற வும் குடிக்கிறான். குடிப்பது ஒரு துணிச்சலான செயலாகவும், ஆண்மையின் பிரகடனமாக வும், வயது வந்ததற்கான அறிவிப்பாகவும் விளங்கு கிறது. ஒரு பதின்ம வயதி னர் எந்த அளவிற்கு கிளர்ச் சியாளராக இருக்கிறாரோ, அந்த அளவிற்கு அவர் பெரியவர்களுக்காக ஒதுக் கப்பட்ட மது மற்றும் பிற இன்பங்களை முன்கூட்டியே நாடு வார். அதிகாரத்தின் மீதான வெறுப்பே குடிப்பதற்குத் தூண்டு கோலாக இருப்பதால், அதற்கு உடனடித் தீர்வுகள் எதுவும் இல்லை. மது என்பது எளிதில் கிடைக்கக்கூடியதும், ஒப்பீட் டளவில் விலை மலிவானதும், பாதுகாப்பானது போலவும் தோன்றுகிறது; அத்துடன் இன்பத்தைத் தருகிறது; கூடவே ஒருவகை அந்தஸ்தையும் அளிக்கிறது. இதனால், பதின்ம வயதினரை மது அருந்தாமல் இருக்கச் சம்மதிக்க வைப்பது ஒரு எளிமையான செயலாக இருப்பதில்லை.

இதைத் தடுப்பதற்கான இரண்டு வழிகள்:

மதுப் பழக்கமுள்ளவர்கள் பலரும் தனித்துவமான ஆளுமைப் பண்புகளைக் கொண்டிருப்பதாகச் சில ஆய்வுகள் குறிப்பிடு கின்றன. அவர்கள் மனக்கிளர்ச்சி உடையவர்களாகவும், ஆண்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்களாகவும், கூடவே தங்கள் கவலையையும் சார்புநிலையையும் மறுக்க முனைபவர்களாகவும் இருக்கிறார்கள்.

மதுப் பழக்கத்தைத் தடுப்பதற்கு இரண்டு வழிகள் இருக் கின்றன. ஒன்று, நமது இளைஞர்களின் ஆளுமையையும் குணத்தையும் வலுப்படுத்துவது. இரண்டாவது, மதுவுக்கு இருக்கும் அந்தஸ்தை இல்லாமல் ஆக்குவது. இரகசிய மாகக் குடிப்பது மதுவிற்கு ஒரு மர்மமான பொருளுக்குரிய கற்பிதத்தைக் கொடுக்கிறது; சமையலறையில் பரிமாறப் படும் ஒரு 'கொக்ரெயில் (cocktail - மதுக் கலவை), மதுவுக்கு இருக்கும் 'கவர்ச்சியை'ப் பறித்துவிடுகிறது. இரவு உணவு மேசையைச் சுற்றி மரியாதையுடன் பரிமாறப்படும் இந்தப் பானம், 'கெட்டித்தனம், மனக் கிளர்ச்சி என்பவற்றுடன் தொடர்பு படுத்தப்படுவதற்குப் பதிலாக, 'உரையாடல், நிதானத் தன்மை, குடும்ப சூழலின் நெருக்கமான ஐக்கிய உணர்வு ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தப்பட உதவலாம்.

இது தொடர்பான பரிந்துரைகள் மத்திய அரசாங்க அறிக்கை ஒன்றில் காணப்படுகின்றன. தேசிய மன நல நிறுவனத்தால் நிதியுதவி செய்யப்பட்ட ஒரு ஆணைக்குழு, தேவாலயக் கூட்டங்களில் இளை ஞர்களுக்கு மதுபானங்கள் பரிமாறப்பட வேண்டும் என்றும், கல்லூரி சிற்றுண்டிச் சாலைகளில் 'பியர்' (Bear) கிடைக்க வேண்டும் என்றும், நாடு முழுவதும் சட்ட பூர்வமாக மது அருந்துவதற்கான வய தெல்லை பதினெட்டாக இருக்க வேண் டும் என்றும் பரிந்துரைத்திருந்தது.

சில பெற்றோர்கள் இந்தப் பரிந் துரைகளை அதிர்ச்சியூட்டும் ஒன் றாகக் காணக்கூடும். அவர்கள், முழுமையான மதுவிலக்கை நம் புபவர்கள். மது மகிழ்ச்சியின் மைக்கு வழிவகுக்கிறது என்றும், குடிபோதையைத் தவிர்ப்பதற்கான

ஒரே வழி மது அருந்தாமல் இருப்பதுதான் என்றும் அவர்கள் கருதுகிறார்கள். மற்றைய பெற்றோர்கள், பதின்ம வயதினர் மது அருந்துகிறார்கள் என்ற உண்மையை ஏற்றுக்கொண்டு, பொறுப்புடன் மது அருந்துவது எப்படி என்று அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார்கள். வீட்டில் மட்டுமே ஒரு பதின்வய தினர் பாதுகாப்பாக மதுவைச் சோதித்துப் பார்க்கவும், அள வாகக் குடிக்கக் கற்றுக்கொள்ளவும் முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

குடிப்பதற்கும் குடிக்காமல் இருப்பதற்குமான வழி காட்டுதல்கள்:

ஒரு பதின்மவயதுப் பருவத்தவர், தனது குடிப்பழக்கத்துடன் வாழக் கற்றுக்கொள்ள நமது உதவி தேவைப்படுகிறது. ஒரு விருந்தில் பானங்கள் வழங்கப்படும்போது, 'வேண்டாம், நன்றி' என்று சொல்வதற்குத் தைரியம் வேண்டும். மன்னிப்பு, விளக்கம், வாதம் அல்லது சாக்குப்போக்கு இல்லாமல் அதைச் சொல்ல ஒருவர் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு தந்தை தனது பதினாறு வயது மகளிடம் கூறினார்: 'உன் னுடைய 'வேண்டாம், நன்றி' மதிக்கப்படும் என்று நம்பு. அதை உறுதியாகச் சொல். விளக்கம் அளிக்காதே, புகார் செய்யாதே. தயவுசெய்து ஒரு பெரிய குவளை இஞ்சிப் பானத் துக்கு மட்டும் 'ஓடர்' (order) கொடு.'

மற்றொரு தந்தை தன் மகனிடம் கூறினார்: 'மகிழ்ச்சிக்காகக் குடிப்பதற்கு, திறமை தேவை. ஒரு பானத்தை நிதானமாகக் குடிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அவசரமாகக் குடிக் காதே, மெதுவாக உறிஞ்சிக் குடி. ஒவ்வொரு பானத்தையும் குறைந்தது ஒரு மணி நேரமாவது நீடிக்கச் செய். குடிக்கும் போதே சாப்பிடு. பானங்களுக்கு இடையில் இடைவெளி விடு.'

ஒரு தாய் தன் மகளுக்கு அறிவுரை கூறினார்: 'ஒரு விருந்தில், குடிப்பதைப் பற்றி உன்னுடன் வருபவருடன் வாக்குவாதம் செய்யாதே. இது விவாதத்திற்குரிய நல்ல நேரமல்ல.' அவன் குடித்தால் அவனைத் தாக்காதே, அவன் குடிக்காவிட்டால் அவனைக் கேலி செய்யாதே. உன்னுடன் வந்தவர் அதிக மாகக் குடித்திருந்தால், வேறு யாரையாவது உன்னை வீட் டிற்கு அழைத்துச் செல்லச் சொல்.'

மற்றொரு தாய் தன் மகனிடம் கூறினாள்: 'எங்கள் வீட்டில், இரவு உணவிற்கு முன் மது அருந்துவதை நாங்கள் விரும்பு கிறோம். சில பெற்றோர்கள் மது அருந்துவதை எதிர்க்கிறார் கள். நீ அவர்கள் வீட்டிற்கு விருந்தினராகச் செல்லும்போது, அதன்மூலம் அவர்கள் எதை இழக்கிறார்கள் என்று அவர் களிடம் சொல்லாதே.'

ஒரு தந்தை தன் மகனுக்கு அறிவுரை கூறினார்: 'போதையில் இருப்பதை நீ உணர்ந்தால் வாகனம் ஓட்டாதே. உன்னுடன் வந்தவரை ஓட்டச் சொல், அல்லது ஒரு வாடகைக் காரை அழை, அல்லது போதையில்லாத ஒரு நண்பருடன் சேர்ந்து பயணம் செய். காலையில் உன் காரை நாம் திரும்ப எடுத்துக் கொள்ளலாம்.'

மற்றொரு தந்தை தன் மகளிடம் கூறினார்: 'யாரோ ஒருவர் கேட்கிறார் என்பதற்காக மட்டும், எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் மதுவை ஏற்றுக்கொள்ளாதே. நீதான் முடி வெடுக்க வேண்டும். குடிப்பதா வேண்டாமா என்பதுதான் உன்னிடமுள்ள கேள்வி. நீதான் அதற்குப் பதிலளிக்க வேண் டும். உன்னையே கேட்டுக்கொள்: எனக்கு உண்மையிலேயே குடிக்க வேண்டுமா ?.

ஒரு தாய் தன் மகளுக்கு இப்படி அறிவுரை கூறினாள்: 'ஒரு விருந்தில் நீ மட்டும்தான் குடிக்காதவளாக இருந்தால், உனக் கான (மதுக் கலப்பற்ற) பானத்தை நீயே தயாரித்துக்கொள், அதில் ஒரு 'செரிப் பழத்தைப் போட்டு, (மற்றவர்களுடன் இருந்து) மெதுவாகப் பருகு.'

மற்றொரு தாய் தன் மகனிடம் இப்படிக் கூறினாள்: 'குடித்துக் கொண்டிருக்கும்போது, அறை சுற்றுவது போல நீ உணர்ந் தால், பானத்தைக் கீழே வைத்துவிட்டு ஏதாவது சாப்பிடு. வாகனம் ஓட்டுவதற்கு முன் குறைந்தது ஒரு மணி நேரமாவது காத்திரு.'

மிதமான குடிப்பழக்கத்திற்கும் பொறுப்பற்ற குடிப்பழக்கத் திற்கும் உள்ள வேறுபாட்டை ஒரு பண்டைய 'எபிரேயப் புரா ணம்' இப்படிக் கூறுகிறது:

'நோவா திராட்சைக் கொடிகளை நட்டபோது, மதுவினால் ஏற் படக்கூடிய விளைவுகளைச் சாத்தான் அவருக்கு இவ்வாறான ஒரு செயல் மூலம் வெளிப்படுத்தினான்: முதலில் அவன் ஒரு ஆட்டுக்குட்டி, ஒரு சிங்கம், ஒரு குரங்கு ஒரு பன்றி என்ப வற்றைக் கொன்று, அவற்றை அவர்முன் வைத்தான். பின்னர் அவன் இவ்வாறு விளக்கினான்: 'முதற் கோப்பை மது உன்னை இந்த ஆட்டுக்குட்டியைப் போல சாந்தமாக்கும்; இரண்டாவது கோப்பை உன்னைச் சிங்கத்தைப் போலத் தைரியமாக்கும்; மூன்றாவது கோப்பை உன்னைக் குரங்கைப் போலச் செயற் பட வைக்கும்; நான்காவதோ, உன்னைப் பன்றியைப் போலச் சேற்றில் புரள வைக்கும்.'

ஒவ்வொரு பதின்பருவத்தினரும் மதுவினால் தமது ஆளுமை யிலும் நடத்தைப் பண்பிலும் ஏற்படக்கூடிய விளைவுகளைக் கற்றறிந்து கொள்ள வேண்டும்.

vickneaswaran.sk@thaiveedu.com

காப்புறுதி சீட்டிழுப்பு அல்ல!

- செந்தூரன் புனிதவேல்

ஒரு சில முதியவர்கள் தங்களின் முழங்கால் வாத வலியை வைத்தே அன்றைய வானிலை எப்படி இருக்கும் என்று கணித்துக் கூறுவதைப் போல, எனது நண்பர் ஒருவர் 'காப்புறுதி என்பது ஒரு வகையான சீட்டிழுப்பு போன்றது' என்று குறிப்பிட்டார். அதைவிட ஒரு தவறான கருத்து இருக்க முடியாது.

உதாரணத்திற்கு, ஒரு வீட்டுக் காப்புறுதியைக் கவனிப்போம். எவருமே காலையில் துயில் எழும்போது, 'இன்று நமது அடுப்பு டியில் தீப்பிடிக்க வேண்டும்' என்று எண்ணிக்கொண்டு எழுவ தில்லை. ஆனால், காப்புறுதித் தொகை என்பது தங்களைப் பணக்காரர் ஆக்கும் ஒரு வழிமுறை என்று எண்ணுபவர்கள் இன்றும் இருக்கவே செய்கிறார்கள். காப்புறுதி என்பது எதிர்பா ராமல் ஏற்படும் இழப்பீடுகளை ஈடு செய்வதற்கே அன்றி, இலாபம் ஈட்டுவதற்கு அல்ல என்பதை நாம் மறத்தலாகாது.

மற்றொரு உதாரணத்தைக் கவனித்தால், நமது காப்புறுதி முகாமையாளரை அழைத்து, 'நான் பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் காப்புறுதிக் கட்டணம் செலுத் தியுள்ளேன்; எனவே, இனி நான் காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து பணத்தைப் திரும்பப் பெறும் காலம் தொடங்கி விட்டது' என்று எவரும் கூற முடியாது. ஏனெனில், காப்புறுதித் துறை அவ்வாறு செயற்படுவதில்லை.

காப்புறுதி என்பது இழப்புகளை ஈடு செய்வதற்கே தவிர, முதலீடு செய்வதற்கோ அல்லது செல்வத்தைப் பெருக்குவ தற்கோ உரியது அல்ல. நீங்கள் பத்து ஆண்டுகள் ஒரு காப்பு றுதிக்கான தவணைக் கட்டணத்தைத் தவறாமல் செலுத்தியுள் ளீர்கள் என்றால், எந்தவொரு இயற்கை அனர்த்தமும் இன்றி அந்தப் பத்தாண்டுகள் உங்கள் கூரையின் கீழ் அமைதியாக வாழ்ந்தீர்கள் என்பதுதான் அதன் உண்மையான வெற்றி யாகும். உங்கள் வீடு இன்னும் சேதமடையாமல் கம்பீரமாக நிற்பதும், உங்கள் உடைமைகள் வீதிக்கு வராமல் வீட்டிற் குள்ளேயே பத்திரமாக இருக்கின்றன என்பதுமே உங்களது காப்புறுதிப் பாதுகாப்பின் வெற்றி என்று கொள்வதுதான் தகும்.

சில வாகனச் சாரதிகள் தங்களுக்கு ஏற்படும் சிறு விபத் துகளை, ஏதோ ஒரு பெரும் சீட்டிழுப்பில் கிடைத்த வெற்றியைப் போலத் தவறாகக் கருதுகின்றனர். 'இவ்வளவு காலமாகத் தொடர்ந்து காப்புறுதிக் கட்டணம் செலுத்தி விட்டோம்; இப்போதாவது அதிலிருந்து ஒரு தொகையைப் பெற்றுக்கொள்வோம்' என்ற எண்ணத்துடன் அவர்கள் இழப் பீடு கோர முற்படுகின்றனர். காப்புறுதியை ஓர் அதிர்ஷ்ட வாய்ப்பாகக் கருதி இத்தகைய முடிவை எடுக்கும் சாரதிகள், அதன் பின்னாலுள்ள நடைமுறைச் சவால்களையும் பொருளா தாரத் தாக்கங்களையும் எதிர்கொள்ளும் போதுதான் ஏமாற்ற மடைகின்றனர். ஏனெனில், இழப்பீட்டுக் கோரிக்கை சிறியதோ அல்லது பெரியதோ, காப்புறுதி ஒப்பந்தத்தின்படி சாரதி பொறுப்பேற்க வேண்டிய அடிப்படைக் கழிவுத்தொகை சமமாகவே இருக்கும். அத்துடன், அடுத்தடுத்த ஆண்டுக ளுக்கான காப்புறுதிக் கட்டணமும் கணிசமாக உயரும். மேலும், விபத்துப் பதிவொன்றின் பின்னர், மாற்றுப் பாது காப்புக் காரணங்களுக்காக வேறொரு காப்புறுதி நிறுவனத் திற்கு மாற முற்பட்டாலும், அவையும் மிகக் கூடிய கட்டணத் தொகையையே கோரும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தத் தவறான அணுகுமுறையானது, விலைமதிப்பற்ற ஒரு குடையை வாங்கிவிட்டு, 'அதனைப் பயன்படுத்துவதற்காகப் பெருமழை வராதா' என ஏங்குவதற்கு ஒப்பானதாகும். மழையி லிருந்து தற்காத்துக் கொள்ளக் குடை வாங்குவது விவேக மானது; ஆனால், குடைக்காக சேதத்தை விளைவிக்கும் பெரு மழைக்கு ஏங்குவது அர்த்தமற்றது. அதேபோலவே, காப்புறுதி என்பது ஒரு முதலீடோ அல்லது இலாபம் தரும் திட்டமோ அல்ல; அது ஆபத்துக் காலத்திற்கான ஒரு பாதுகாப்பு அரண் மட்டுமே என்பதை உணர்தல் வேண்டும்.

ஒன்ராறியோ மாகாணத்தில் பாதைகள் பனிக்கட்டியாக மாறும் வேளைகளில் விபத்துகள் அதிகரிப்பது இயல்பே. ஆனால் இதில் ஒருவரும் வெற்றிபெறுவதில்லை. காரணம் கேட்பன வுக்கு பத்திரங்கள் தயாரிப்பது எளிதான காரியமில்லை. அது மட்டுமல்ல காத்திருக்க வேண்டிய காலமும் உள்ளது. இதனைத் தொடர்ந்து உங்கள் மாதாந்த கட்டணத்தை செலுத்

துகையில் கடந்தகால விபத்து மனதை உறுத்தச் செய்யும்.

சில சந்தர்ப்பங்களில் காப்புறுதியில் பணம் பெறுவதிலும் சொந்தப் பணத்தில் சரி செய்வது சிறந்தது என்பதை நினைவில் வைத்திருத்தல் மிக அவசியமாகும். காரணம் அது உடனடியாக பிரச்சினையைத் தீர்ப்பது போல் இருப்பினும் புதுப் பிரச்சினைகளை உருவாக்கும்.

காப்புறுதித் துறையில் கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றுமொரு மிக முக்கியமான உண்மை யாதெனில், காப்புறுதி நிறுவனங்கள் என்பவை எவ்விதப் பரிசீலனையு மின்றி எப்போதுமே இழப்பீட்டுப் பணத்தை வாரி வழங்குவதற் காகக் காத்திருக்கும் அமைப்புகள் அல்ல என்பதாகும். அவர்கள் ஒவ்வொரு இழப்பீட்டுக் கோரிக்கையையும் தீவிர மாகப் பரிசீலிக்கத் தவறினால், அது ஒட்டுமொத்தக் காப்புறுதி அமைப்பிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். ஏனெனில், காப்புறுதி என்பது அடிப்படையில் 'பலரின் இழப்புகளைப் பலரும் பகிர்ந்துகொள்ளும்' ஒரு கூட்டுப் பொருளாதார அமைப்பாகும். எனவே, தகுதியற்ற அல்லது மோசடியான முறையில் இழப்பீடு கோரும் ஒருவருக்குக் காப்புறுதி நிறுவனம் பணத்தை வழங்குமாயின், அதன் விளைவாக நேர் மையாகக் கட்டணத்தைச் செலுத்தி வரும் மற்றைய அனைத்துக் காப்புறுதிதாரர்களின் மாதாந்தக் கட்டணத்திலும் (Premium) தேவையற்ற உயர்வு ஏற்படும். இது நேர்மையான வாடிக்கையாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். காப்புறுதி நிறுவனங்களின் முதன்மைக் கடமை என்பது, ஒவ்வொரு கோரிக்கையையும் நேர்மையாகவும் சட்டபூர்வமா கவும் கவனித்து, உண்மையாகவே இழப்பைச் சந்தித்த தகுதி யுடைய நபர்களுக்கு உரிய இழப்பீட்டை வழங்கி அவர்களைப் பாதுகாப்பதே ஆகும்.

சுருக்கமாகக் கூறின், காப்புறுதி மூலம் பெறப்படும் இழப்பீடு என்பது, ஒரு விபத்தோ அல்லது அனர்த்தமோ ஏற்படுவதற்கு முன்னர் ஒருவர் எத்தகைய பொருளாதார நிலையில் இருந்தாரோ, அதே நிலைக்கு அவர் மீண்டும் திரும்புவதற்கு உதவுவதாகும். மாறாக, சீட்டிழுப்பு என்பது ஒரு சீட்டினை வாங்கும்போது, அதன் மூலம் ஒருவர் புதியதொரு செல்வந் தராக உருவெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்ட தாகும். முந்தையதான காப்புறுதி என்பது, மனித வாழ்க்கையை எவ்விதத் தடையுமின்றிச் சலனமில்லாமல் முன்னெடுத்துச் செல்லப் பயன்படுகிறது; பிந்தையதான சீட்டி ழுப்போ, எதிர்பாராத ஒரு பெரு அதிர்ஷ்டம் தன் மீது திடீரெனக் கொட்டாதா என்று ஏங்க வைக்கிறது.

வாழ்க்கையில் சலனமின்றி அமைதியாக வாழ உதவுவது காப்புறுதி. வீட்டில் நெருப்பும் வேண்டாம் வெள்ளமும் வேண்டாம் சலனமின்றி மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு காப்புறுதி வழங்கி முடிக்கின்றேன்.

senthuran.p@thaiveedu.com

வீட்டின் பெறுமதியைத் தக்கவைக்க ஒரே வழி - வீட்டுப் பராமரிப்பு

- வேலா சுப்ரமணியம்

ஒழுங்கான முறையில் உங்கள் வீட்டை கண்காணிப்பதும் மற்றும் சிறந்த பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதும்தான், உங்கள் வீட்டிற்கு நீங்கள் போட்ட முதலீட்டை காப்பாற்றுவதற்குரிய மிகச்சிறந்த வழி. நீங்கள் ஒரு நேரத்தில் ஒரு சில வேலைகளை அல்லது பல வேலைகளை ஒரே தடவையாக செய்து முடிக்க வேண்டும் என்று நினைத்தாலும் இரண்டு வகையிலும் அவைகளை செய்துமுடிக்கும் பழக்கத்தை உண்டாக்குவது தான் மிகமுக்கியமானது ஆகும். உங்களுக்காக ஒரு வழக்கமான வேலை முறையை உருவாக்கி கொள்ளுங்கள். வேலை செய்வது என்பது நீங்கள் நினைத்தால் கடினமானதல்ல, மிகவும் சுலபம் மற்றும் அது மிகவும் நேரத்தை செலவழிக்கும் விஷயம் இல்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். பருவத்துக்கேற்றபடி மாறும் வீட்டு பராமரிப்பு செயல் குறிப்பு அட்டவணையைத் தயாரித்து அதை ஒழுங்காக பின்பற்றினால் மிகச் சாதாரணமான செலவுடன் வீட்டைப் பராமரிக்கலாம். செலவு அதிகமாகும் பிரச்சினைகளை அவை ஏற்படுத்துவதற்கு முன் நீங்கள் ஒரு முடிவுக்கு கொண்டுவர முடியும். தேவைப்பட்டால், பின்னால் முதிர்ச்சியின் காரணமாகவோ அல்லது புறச்சூழ்நிலை காரணமாகவோ ஏற்படக்கூடிய வேலைகளை கண்காணிப்பதற்கும், செய்து முடிப்பதற்கும் தேவையான அறிவுரைகளை ஒரு வல்லுனரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒரு புகைப்படக் கருவியைக் கொண்டு நீங்கள் குறிப்பிட்ட படங்களை எடுத்தால் உதவியாக இருக்கும்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை பின்பற்றுவதினால், நீங்கள் செலவிட்ட முதலீட்டை காப்பாற்றுவது பற்றியும் மேலும் உங்கள் வீட்டை ஒரு பாதுகாப்பான மற்றும் வாழ்வதற்கேற்ற ஆரோக்கியமான ஒரு இடமாக மாற்றுவது பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில வீட்டுப் பராமரிப்பு வேலைகளை செய்வதற்கு நீங்கள் சிரமப்பட்டால் அல்லது உங்களிடம் தேவையான, உதாரணமாக ஏணி போன்ற உபகரணங்கள் இல்லையென்றால், ஒரு தகுதி வாய்ந்த கைத்திறன் மிகுந்த ஒரு மனிதரை உங்களுடைய பணியாளராக உங்களுக்கு உதவ நீங்கள் நியமித்துக் கொள்ளுங்கள்.

பருவத்துக்கேற்றபடி வீட்டுப் பராமரிப்பு வேலைகளை செய்தல்:

அநேகமான வீட்டுப் பராமரிப்பு வேலைகள் எல்லாம் பருவகாலம் சம்பந்தமானது. வரப் போகும் இலையுதிர் காலத்திற்குரிய வேலைகளை செய்து முடிப்பதற்கு கோடை காலம் தான் சரியான நேரம். உங்கள் வீட்டில் எதாவது பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதா என்பதை கவனமாக சோதனை செய்து வெகுசீக்கிரத்தில் அவைகளை சரிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுப்பது அவசியம். வழக்கமான வீட்டு பராமரிப்பு செயல்முறைகளை நீங்கள் பின்பற்ற வேண்டியது முக்கியம்.

• கோடைகாலப் பராமரிப்பு:

- வீட்டின் ஈரப்பதனை கண்காணியுங்கள். மேலும் ஈரப்பதத்தின் அளவுகள் 60 சதவிகிதத்துக்கும் மேல் ஆவதை தடுத்து விடுங்கள். பாதுகாப்பான ஈரப்பதனை வைத்துக்கொள்வதற்கு ஒரு ஈரத்தை அகற்றும் கருவியை (Dehumidifier) பயன்படுத்துங்கள்.
- அடித்தளத்தில் இருக்கும் குழாய்களில் குளிர்ந்த நீர் தேங்கிவிடாமலும் மற்றும் சொட்டு சொட்டாக வடியாமலும் பார்த்துக் கொள்ளுங்கள். சரிப்படுத்தக்கூடிய செயல்களை மேற்கொள்ளுங்கள். உதாரணமாக ஈரப்பதனைக் குறையுங்கள். அல்லது குளிர்ச்சியான தண்ணீர்க் குழாய்களுக்கு வெப்பகாப்பு (insulate) செய்யுங்கள்.
- அடித்தளத்தின் தரையில் உள்ள சாக்கடை குழாயில் P-trap இருந்தால் அவற்றில் நீர் உள்ளதா என்பதை பாருங்கள். தேவைப்பட்டால் தண்ணீர் ஊற்றுங்கள்.
- கம்பளி விரிப்புகள் மற்றும் தரை விரிப்புகளை (Carpet) நன்றாக சுத்தம் செய்யுங்கள்.
- குளியலறை விசிறியின் தடுப்பை (grill) துப்பரவு செய்யுங்கள்.



- ஆடைகளை உலரவைக்கும் கருவியுடன் இணைக்கப் பட்டுள்ள குழாய் இணைப்பு உட்பட குழாயின் வெளி விளிம்பில் தங்கியிருக்கும் துணிக்கூறுகள், ஆடைகளை உலரவைக்கும் சாதனத்தைச் சுற்றியுள்ள இடங்கள் மற்றும் வெளிப்புறத்திலுள்ள உங்கள் உடை உலரவைக்கும் சாதனத்தின் வெளியேற்று வழி ஆகியவற்றைத் துப்புரவு செய்யுங்கள்.
- அனைத்து guardrails & handrails-களின் பாதுகாப்புத் தன்மையை சோதனை செய்யுங்கள்.
- அனைத்து ஜன்னல்களும் சுலபமாக இயங்குவதற்கு எண்ணெய் அல்லது கிரீஸ் தடவுங்கள்.
- கண்ணாடி சட்டங்களின் வெளிப்பக்கம் இருக்கும் ஜன்னல்க ளுக்குரிய Putty / Caulking-களைக் கண்காணியுங்கள். தேவைப்பட்டால் பிரதியீடு செய்யுங்கள்.
- கதவுகளின் பிணைச்சல்களில் எண்ணெய் அல்லது கிரீஸ் தடவுங்கள். மேலும் ஸ்குரூ ஆணிகள் இறுக்கமாக இருப் பதை உறுதி செய்யுங்கள்.
- வண்டிக் கொட்டகையின் கதவில் உள்ள இரும்பு சாதனங்களில் கிரீஸ் அல்லது எண்ணெய் தடவுங்கள். (Lubricate garage door) அது நல்ல முறையில் இயங்குவதை உறுதி செய்யுங்கள்.
- வண்டிக்கொட்டகையின் தானே திறக்கும் கருவியின் (Garagae door opener) மோட்டர்-சங்கிலி, ஆகியவைகளில் எண்ணெய் அல்லது கிரீஸ் போடுங்கள். மேலும் தானே மூடிக்கொள்ளும் (sensor) செயல்நுட்பம் சரிப்படுத்தப் பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யுங்கள்.
- வண்டிக்கொட்டகை மற்றும் வீட்டிற்கு இடையே உள்ள கதவு உள்ளிட்ட ஜன்னல்கள் மற்றும் கதவுகளை சுற்றி யுள்ள இடத்தில் உள்ள Caulking / weather stripes போன்றவைகளை சோதனை செய்யுங்கள். தேவைப்படின் பிரதியீடு செய்யுங்கள்.
- உங்கள் வீட்டிற்குள் நுழையும் மின்கம்பி இணைப்புகள் பாதுகாப்புடன் உள்ளனவா? என்பதை கண்காணியுங்கள். மேலும் மின் கம்பிகள் செல்லும் குழாய்களின் மீது தண்ணீர் கசிவுகள் ஏதேனும் உள்ளனவா என்பதை சோதனை செய்யுங்கள்.
- வெளிப்புறத்திலுள்ள மரப்பலகையிலான பக்கச்சுவர்கள் (Siding) மற்றும் trimings சேதமடைந்துள்ளனவா? என்பதை பாருங்கள். அவைகளை சுத்தப்படுத்துங்கள். பிரதியீடு செய்யுங்கள் அல்லது மீண்டும் புதுப்பியுங்கள்.
- வெளிப்புறத்தில் ஏதாவது ஓட்டைகள் இருந்தால் அதை அடைத்து விடுங்கள். ஏனென்றால் எலி போன்ற சிறிய பிராணிகள் வீட்டினுள்ளே அதன் வழியாக நுழைந்து விடும்.
- பக்கப்பாதை அல்லது அத்திவாரம், கூரை ஆகியவற்றைத் தொடும் மரம் அல்லது ஊடுரு வும் வேர்கள் ஆகியவற்றை அகற்றி விடுங்கள்.
- உங்கள் கூரையின் மேல் ஏறி அல்லது பைனாகுலர்களை பயன்படுத்தி கூரையின் பொதுவான நிலையை சோதனை செய்யுங்கள். பாரம் தாங்காது கூரை வளைந்து அல்லது தொய்ந்து போயிருந்தால், கூரையின் கட்டமைப்பில் பழுது கள் ஏற்பட்டுள்ளன என்று அர்த்தம். கூரையில் மேல்மாடி அறையின் (Attic) உள்ளே இருந்து புலனாய்வு செய்தால் தான் கூரையின் நிலைமையைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள முடியும். கூரையின் அனைத்து மரப்பலகை களையும் சோதனை செய்யுங்கள். பழுதுகள் ஏதாவது இருந்தால் சரிப்படுத்துங்கள் அல்லது அவை களை மாற்றியமையுங்கள். புகைபோக்கி மற்றும் கூரை இணைப்பு கள் போன்ற அனைத்து கூரைப்பகுதிகளிலும் ஏதாவது பிளவுகள் அல்லது கசிவுகள் உள்ளனவா என்பதை சோதனை செய்யுங்கள்.
- ஏதாவது விறகு அடுப்பு அல்லது கணப்பு அடுப்புடன் இணைக்கப்பட்டுள்ள புகை போக்கிகளை துப்புரவு செய்யுங்கள். பருவ காலத்தின் இறுதியில் அவைகளில் ஏற்படும் பிரச்சினைகளை கண்காணியுங்கள்.
- புகை போக்கியின் மூடி மற்றும் புகை போக்கி மற்றும் மூடிக்கிடையே உள்ள Caulking பூசி அடைக்கப் பட்டிருக்கும் ஓட்டையை சோதனை செய்யுங் கள்.
- வாகனப்பாதை மற்றும் நடைபாதைகளில் உள்ள பழுது களை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
- பாதுகாப்புக்கு பிரச்சினையாக ஏதாவது சேதமடைந்த படிகள் இருந்தால் அவைகளைக் கவனியுங்கள்.

velasubramaniam@thaiveedu.com

சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஒற்றர்கள்

சுப்ரமணியம் ஜெயசீலன்

மனிதரின் நாகரிக வளர்ச்சிப் பணிகளின் முதன்மை அடைவுகளில் ஒன்றாகப் போக்குவரத்துச் சாதனங்களின் கண்டுபிடிப்பும் அவற்றின் பிரயோகமும் இன்று வரையில் காணப்படுகின்றன என்றால் அது பிழையாகாது. அந்த வகையில் இந்த பூமிப்பந்தின் ஓர் முனையிலிருந்து இன்னொரு முனைக்குப் பயணங்கள் மேற்கொள்வது தற்பொழுது அத்துணை சிரமமான விடயமாக அமையப் பெறவில்லை. அந்த வகையில் போக்குவரத்துச் சாதனங்களில் கார்களுக்கு ஒரு தனி இடம் காணப்படுகின்றது. மனித வரலாற்றில் கார்கள் எப்போதும் வெறும் போக்குவரத்து சாதனங்களாக மட்டும் பார்க்கப்படவில்லை. அவை தனிமனித சுதந்திரத்தின் அடையாளமாகத் திகழ்ந்தன. ஒரு காலத்தில் காரின் சாவியைப் பெறுவது என்பது, பெற்றோரின் கண்காணிப்பிலிருந்து விடுபட்டு, தனக்கென ஒரு தனி உலகிற்குள் நுழையும் மைல்கல்லாகக் கருதப்பட்டது. ஆனால், தொழினுட்ப வளர்ச்சி அந்தப் பிம்பத்தை முற்றிலும் மாற்றி விட்டது. இன்றைய நவீன கார்கள் இயந்திரங்களால் ஆனவை அல்ல; அவை மென்பொருட்களால் இயங்கும் சக்கரங்கள் பொருத்தப்பட்ட அதிநவீன கணினிகள் என்றால் மிகைப்படாது. இன்று நாம் காருக்குள் நுழையும்போது, அந்தச் சுதந்திரம் முடிவுக்கு வந்துவிடுகிறது. நாம் எங்கே செல்கிறோம், எப்படி செலுத்துகிறோம், யாருடன் பேசுகிறோம் என்பது வரை அனைத்தும் கண்காணிக்கப்படுகின்றன.

இந்தப் பத்தி, நவீன வாகனங்கள் எவ்வாறு நம்மை வேவு பார்க்கின்றன, அவை சேகரிக்கும் தரவுகள் எங்கே செல்கின்றன மற்றும் நுகர்வோராக நாம் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன என்பதைப் பற்றி ஊடாடும் முயற்சியாக அமைந்துள்ளது.

உங்கள் கார் உங்களைப் பற்றி என்ன அறியும்?

நவீன வாகனங்கள் பல சென்சார்கள், கேமராக்கள், மைக்ரோஃபோன்கள் மற்றும் கணினி அமைப்புகளைக் கொண்டுள்ளன. இணைய இணைப்பு (Internet Connectivity) பொதுவானதாகிவிட்ட நிலையில், இந்தத் தரவுகள் அனைத்தும் கார் நிறுவனங்களின் சேவையகங்களுக்கு (Servers) இடைவிடாது அனுப்பப்படுகின்றன.

கார்கள் சேகரிக்கும் தரவுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

- இருப்பிடத் தரவுகள்: ஜிபிஎஸ் (GPS) மூலம் நீங்கள் செல்லும் ஒவ்வொரு இடம், பயண வரலாறு மற்றும் அடிக்கடி தங்கும் இடங்கள் துல்லியமாகப் பதியப்படுகின்றன.
- சாரதியின் நடத்தை: நீங்கள் எவ்வளவு வேகத்தில் செல்கிறீர்கள், எவ்வளவு கூர்மையாகத் திருப்புகிறீர்கள், திடீர் பிரேக் போடும் பழக்கம் மற்றும் எரிபொருள் பயன்பாடு ஆகியவை கண்காணிக்கப்படுகின்றன.
- உட்புறக் கண்காணிப்பு: பல நவீன கார்களில் ஓட்டுநரை நோக்கிய கேமராக்கள் உள்ளன. இவை உங்கள் முகபாவனைகள், கண் அசைவுகள் மற்றும் நீங்கள் விழிப்புடன் இருக்கிறீர்களா என்பதைக் கண்காணிக்கின்றன.
- அதிர்ச்சியூட்டும் அந்தரங்கங்கள்: மொஸில்லா (Mozilla) போன்ற கணினி இணையை உலாவி அமைப்புகளின் ஆய்வின்படி, சில நிறுவனங்கள் உங்கள் எடை, வயது, இனம் மற்றும் உங்கள் 'பாலியல் வாழ்க்கை' மற்றும் பொது ஆரோக்கியம் குறித்த விவரங்களைச் சேகரிக்கவும் தங்களுக்கு உரிமை உண்டு என்று தனியுரிமைக் கொள்கைகளில் குறிப்பிடுகின்றன.

நவீன கார்கள் என்னென்ன தரவுகளைச் சேகரிக்கின்றன?

- வாகனம் இருக்கும் இடம் மற்றும் பயண வரலாறு
- வேகம் மற்றும் பிரேக் போடும் விதம்

prasadbatti@gmail.com

- எரிபொருள் பயன்பாடு மற்றும் பேட்டரி செயற்றிறன்
- புளூடூத் மூலம் இணைக்கப்பட்ட போன் தொடர்புகள்
- காரிற்கு வழங்கப்படும் குரல் கட்டளைகள்
- சில மாடல்களில் உள்ள கேபின் கேமராக் காட்சிகள்
- ஓட்டுநரின் கவனம் மற்றும் கண் அசைவுகளைக் கண் காணிக்கும் முறைகள்
- பராமரிப்பு மற்றும் நோயறிதல் (Diagnostic) தக வல்கள்.

கார்கள் ஏன் இந்தத் தகவல்களைச் சேகரிக்கின்றன?

இந்தத் தரவுகள் பாதுகாப்பு, வசதி மற்றும் வாகனத்தின் செயற்றிறனை மேம்படுத்த உதவுகின்றன என்று உற்பத்தி யாளர்கள் கூறுகின்றனர். இதற்கான சில பொதுவான கார ணங்கள்:

- நிகழ்நேர வழிகாட்டுதல் மற்றும் போக்குவரத்து அறி விப்புகள்
- விபத்துக் கால அவசர உதவி அமைப்புகள்
- மொபைல் ஆப் மூலம் வாகனத்தைப் பூட்டுதல் மற்றும் கண்காணித்தல்
- பராமரிப்புத் தேவைகளை முன்கூட்டியே அறிவித்தல்
- மென்பொருள் மேம்படுத்தல்கள்
- தானியங்கி ஓட்டுதல் தொழினுட்பத்தை மேம்படுத்துதல்

காரில் இணைய இணைப்பின் அபாயங்கள்:

2021-ஆம் ஆண்டில் வீதியில் பயணம் செய்த கார்களில் 50%-மானவை இணைய இணைப்பைக் கொண்டிருந்தன. இது 2030-ஆம் ஆண்டிற்குள் 95%-ஆக உயரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. கார் இணையத்துடன் இணைக்கப் பட்டிருக்கும் வரை, உங்கள் தனியுரிமை என்பது ஒரு மாயையேயாகும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

மொஸில்லா நிறுவனம் மேற்கொண்ட உலகளாவிய ஆய் வின்படி, உலகின் 25 முன்னணிக் கார் தயாரிப்பு நிறுவனங் களின் தனியுரிமைக் கொள்கைகள் விரிவாக ஆராயப்பட்டன. இந்த ஆய்வின் முடிவில், நுகர்வோரின் தரவுப் பாதுகாப்பு மற்றும் தனியுரிமைத் தரத்தில் அனைத்து பிராண்டுகளுமே முற்றிலுமாகத் தோல்வியடைந்துள்ளதாக அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து மொஸில்லா நிறுவனம் எச்சரிக்கையில், 'தாங்கள் இதுவரை பல்வேறு துறைகளில் ஆய்வு செய்த தொழில்நுட்பக் கருவிக ளிலேயே, தனியுரிமைப் பாதுகாப்பில் மிக மோசமான உள் கட்டமைப்பைக் கொண்டவையாகக் கார் தயாரிப்பு வகைகள் மட்டுமே தரம்பிரிக்கப்பட்டுள்ளன' என்று பகிரங்கமாகக் குறிப்பிட்டுள்ளது. மேலும், நுகர்வோரின் அனுமதி மற்றும் பாதுகாப்பு வளையங்களைத் தாண்டி, தாங்கள் சேகரிக்கும் தனிப்பட்ட தரவுகளை வணிக நோக்கில் பிற தரப்பினருக்கு விற்கக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து 19 முன்னணிக் கார் நிறுவனங்கள் தங்களின் கொள்கை ஆவணங்க ளிலேயே ஒப்புக்கொண்டுள்ளதும் இந்த ஆய்வின் மூலம் அம்பலமாகியுள்ளது.

காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் தரவுத் தரகர்களின் பங்கு:

நவீனக் கார் தயாரிப்பு நிறுவனங்கள் நுகர்வோரிடம் இருந்து சட்டவிரோதமாகப் பெறும் தனிப்பட்ட தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் மிகப்பெரிய வாடிக்கையாளர்களில், காப்புறுதி நிறுவனங்கள் முதலிடத்தில் இருப்பது கண்டறியப்பட் டுள்ளது. இது வெறும் தனியுரிமை மீறல் மட்டுமல்லாமல், நேரடியாக எளிய நுகர்வோரின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் ஒரு பெரும் சமூகப் பிரச்சினையாக உருவெடுத் துள்ளது. கார்களின் மூலம் சேகரிக்கப்படும் ஓட்டுநரின் வேகம், பிரேக் பயன்படுத்தும் விதம் மற்றும் பயணப் பழக் கவழக்கங்கள் போன்ற நுட்பமான தரவுகளைக் கொண்டு, காப்புறுதி நிறுவனங்கள் தங்களின் மாதாந்திரக் கட்ட ணங்களை நுகர்வோருக்குச் சாதகமற்ற முறையில் தன்னிச் சையாக உயர்த்தி வருகின்றன. கார்ப்பரேட் நிறுவனங் களின் இத்தகைய ரகசியத் தரவுப் பரிமாற்றங்கள், நுகர் வோர் பாதுகாப்பு வளையங்களைத் தகர்த்து, அவர்களின் பொருளாதார உரிமைகளைச் சுரண்டும் ஒரு புதிய வர்க்கப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

ஜெனரல் மோட்டார்ஸ் (GM) உள்ளிட்ட உலகின் முன்னணி கார் உற்பத்தி நிறுவனங்கள், தங்களது நுகர்வோரின் தனிப் பட்ட பயண விபரங்களை 'லெக்ஸிஸ்நெக்ஸிஸ்' (Lexis-Nexis) போன்ற பன்னாட்டுத் தரவுத் தரகர்களிடம் வணிக நோக்கில் விற்றதாகக் கடுமையான குற்றச்சாட்டுகள் எழுந் துள்ளன. இதற்குச் சான்றாக, குறிப்பிட்ட ஒரு ஓட்டுநரின் ஆறு மாத காலப் பயண விபரங்களை உள்ளடக்கிய 130 பக்க ரகசிய அறிக்கையின் அடிப்படையில், அவருடைய காப்புறுதிக் கட்டணத் தொகை தன்னிச்சையாக 21 விழுக்காடு வரை உயர்த்தப்பட்டுள்ளது அம்பலமாகி யுள்ளது. வாகனங்களின் செயற்பாடுகளைக் கண்கா ணிக்கும் இத்தகைய 'டெலிமெட்ரிக்ஸ்' (Telematics) திட் டங்கள், பாதுகாப்பான ஓட்டுநர்களுக்குச் சலுகை வழங்கு வதாகப் பரப்புரை செய்யப்பட்டாலும், நடைமுறையில் அவை நுகர்வோரைத் தொடர் கண்காணிப்புக்கு உள்ளா க்கி, அவர்களிடம் இருந்து கூடுதல் கட்டணம் வசூலிப்ப தற்கான கார்ப்பரேட் உத்தியாகவே பயன்படுத்தப்படு கின்றன. அமெரிக்காவின் மேரிலேண்ட் மாநிலத்தில் நடத் தப்பட்ட தரவுசார் ஆய்வொன்றில், இத்தகைய கண்கா ணிப்புத் திட்டத்தினால் வெறும் 31 விழுக்காடு மக்களுக்கு மட்டுமே கட்டணக் குறைப்புச் சலுகை கிடைத்துள்ளது என்பதும், எஞ்சிய பெரும்பான்மையான மக்களுக்குக் காப் புறுதிக் கட்டணம் பெருமளவு உயர்ந்தோ அல்லது எந்த விதச் சாதகமான மாற்றமுமின்றியோ நுகர்வோர் உரிமை களைப் பறிப்பதாக அமைந்துள்ளது என்பதும் திட்டவட் டமாக நிரூபிக்கப்பட்டுள்ளது..

பாதுகாப்பின் பெயரால் நடக்கும் கண்காணிப்பு:

புதிய சட்டங்கள் மற்றும் பாதுகாப்பு விதிமுறைகள் இந்தத் தரவு சேகரிப்பை இன்னும் தீவிரமாக்குகின்றன. உதாரணமாக,

மது அருந்திவிட்டு ஓட்டுவதைத் தடுக்க இன்ஃப்ராரெட் பயோ மெட்ரிக் கேமராக்களை நிறுவும் சட்டங்கள் அமெரிக்கா போன்ற நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இவை மது அருந்தியிருக்கின்றார்களா? அல்லது சோர்வாக இருக்கின்றார்களா? என்பதை அறிய சாரதியின் உடல் மொழியையும் கண்களையும் கண்காணிக்கக் கூடிய வகையிலானது. இது பாதுகாப்பிற்கு அவசியம் என்றாலும், அந்தச் சட்டம் இந்தத் தரவுகள் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பது குறித்து எந்த விதிகளையும் கொண்டிருக்கவில்லை. இது கார் நிறுவனங்களுக்கு மக்களின் மருத்துவ ரீதியான தரவுகளை எவ்வித கட்டுப்பாடும் இன்றி கையாளும் வாய்ப்பை வழங்குகிறது.

நவீன வாகனங்கள் பின்வரும் முக்கியமான தனிப்பட்ட தக வல்களையும் சேமிக்கக்கூடும்:

- வீடு மற்றும் அலுவலக முகவரிகள்.
- அடிக்கடி செல்லும் இடங்கள்.
- இணைக்கப்பட்ட தொலைபேசிகளில் உள்ள தொடர் புகள் மற்றும் குறுஞ்செய்திகள்.
- குரல் பதிவுகள்.

வாகனங்கள் இணையத்துடன் அதிகம் இணைக்கப்படு வதால், சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் அதிகரித்து வருகின்றன. பாதுகாப்புக் குறைவாக உள்ள அமைப்புகள் ஹேக்கர்களால் ஊடுருவப்பட வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்.

கார்கள் ரகசியமாக ஒட்டுக் கேட்கின்றனவா?

பல சாரதிகள் தங்கள் காரில் உள்ள மைக்ரோஃபோன்கள் தங்களை ஒட்டுக் கேட்கின்றனவோ என்று கவலைப்படுகிறார்கள். குரல் வழி உதவியாளர்கள் (Voice Assistants) ஒரு கட்டளைக்குப் பிறகுதான் செயற்படும் என்று நிறுவனங்கள் கூறினாலும், அந்தச் சேவையை மேம்படுத்துவதற்காகப் பதிவுகள் தற்காலிகமாகச் சேமிக்கப்படுகின்றன. அதேபோல், உட்புற கேமராக்கள் ஒரு கண்காணிப்பு வளையத்தை உருவாக்கி, காரின் உட்புற அந்தரங்கத் தன்மையை (Privacy within the car) முற்றிலுமாக அழித்துவிடுகின்றன.

சட்டப் பாதுகாப்பும் நுகர்வோர் உரிமைகளும்:

தற்போது வரை, உலகளாவிய அளவில் வாகனத் தயாரிப்புத் துறையினருக்கான ஒருங்கிணைந்த தனியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் எதுவும் நடைமுறையில் இல்லை. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இங்கிலாந்து ஆகிய பிராந்தியங்களில் அமுலில் உள்ள 'பொதுத் தரவுப் பாதுகாப்பு ஒழுங்குமுறை' (GDPR) போன்ற உலகத்தரம் வாய்ந்த சட்

> **தொழினுட்ப வளர்ச்சியும் அதன் பயன்பாடுகளும் எவ்வளவு சௌகரியமானது என்பது வியக்கத்தக்க வகையில் காணப்பட்டாலும் அவற்றின் பின்னணியில் காணப்படும் தனிமனித சுதந்திரத்திற்கான கிடுக்குப் பிடிகளும், விலங்குகளும் எண்ணிலடங்காதவை என்பதை மறுதலித்து விட முடியாது.**

டங்கள் ஓரளவுக்கு நுகர்வோர் பாதுகாப்பு வளையத்தை ஏற் படுத்தினாலும், கார் உற்பத்தி நிறுவனங்கள் அந்த விதிகளை முழுமையாகப் பின்பற்றுவதில்லை என்ற குற்றச் சாட்டு பரவலாக எழுந்துள்ளது. உலகப் பொருளாதா ரத்தின் மையமான அமெரிக்காவில், இத்தகைய அத்துமீ றல்களைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய அளவிலான ஒருங்கிணைந்த கூட்டாட்சித் தரவுச் சட்டம் இல்லாதது பெரும் பலவீனமாக அமைந்துள்ளது. இச்சட்டப் பற்றாக்கு றையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் பன்னாட்டுக் கார் நிறுவனங்கள், நுகர்வோரின் தனிப்பட்டத் தரவுகளை எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றித் தங்களின் வணிக லாபத்திற்காகக் கையாண்டு வரு கின்றன.

காரைக் கொள்வனவு செய்யும்போதோ அல்லது மென் பொருளை இயக்கும்போதோ வரும் நீண்ட தனியுரிமைக் கொள்கைகளை யாரும் உன்னிப்பாக வாசிப்பதில்லை என்றே குறிப்பிட வேண்டும். இதையே தங்களுக்குச் சாதக மாகப் பயன்படுத்தும் நிறுவனங்கள், 'வாடிக்கையாளர் ஒப் புதலுடன்தான் தரவுகளைச் சேகரிக்கிறோம்' என்று வாதிடு கின்றன.

சாரதிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள என்ன செய்யலாம்?

இந்தத் தரவுப் பிரச்சினையை முழுமையாகத் தவிர்க்க முடியாது என்றாலும், விழிப்புணர்வுடன் செயற்படுவதன் மூலம் பாதிப்பைக் குறைக்கலாம்.

- தேவையற்ற சேவைகளைத் தவிர்க்கவும்: காப்புறுதி நிறுவனங்கள் வழங்கும் டெலிமெட்ரிக்ஸ் திட்டங்களில் இணைவது பாதக விளைவுகளை ஏற்படுத்தக் கூடும், லாபத்தை விடத் தனியுரிமை இழப்பு இதில் அதிக மாகக் காணப்படுகின்றது.
- அமைப்புகளைச் சரிபார்த்தல்: காரின் இன்ஃபோடெ யின்மென்ட் கட்டமைப்பில் உள்ள தனியுரிமை அமைப் புகளுக்குச் சென்று, தேவையற்ற தரவுப் பகிர்வை (Data Sharing) முடக்கவும்.
- ஸ்மார்ட்போன் இணைப்பு: காரின் புளூடூத் அல்லது ஆப்ஸ் மூலமாக போன் தொடர்புகளை இணைக் கும்போது எச்சரிக்கையாக இருக்கவும். தேவையற்ற தகவல்களைச் சின்க் (Sync) செய்ய வேண்டாம்.
- விற்பனைக்கு முன் சுத்தம்: உங்கள் காரை விற் கும்போதோ அல்லது குத்தகைக் காலம் முடிந்து திருப்பி ஒப்படைக்கும் போதோ, அதில் உள்ள உங்கள் தனிப்பட்ட தரவுகள் அனைத்தையும் 'பேக்டரி ரீசெட்' (Factory Reset) செய்து அழிக்கவும்.
- விருந்தினர் சுயவிவரம்: முடிந்தவரை 'Guest Profile' பயன்படுத்துங்கள், இது உங்கள் பெயரில் தரவுகள் சேமிக்கப்படுவதைக் குறைக்கலாம்.

எதிர்காலம்: ஸ்மார்ட் வாகனங்களும் தார்மீகக் கேள்விகளும்:

எதிர்காலத்தில் கார்கள் முழுமையாகத் தானியங்கி (Autonomous) மயமாக்கப்படும்போது, அவை இன்னும் கூடுதலான சென்சார்களையும் செயற்கை நுண்ணறிவையும் சார்ந்தி ருக்கும். இது வசதியையும் பாதுகாப்பையும் மேம்படுத்தி னாலும், தனிமனித உரிமைகள் மீதான தாக்குதலாகவே அமையும்.

நிபுணர்களின் கருத்துப்படி, உண்மையான சிக்கல், கார்கள் தரவுகளைச் சேகரிப்பதில் இல்லை; மாறாக, அந்தத் தரவுகள் மீது நுகர்வோருக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லா ததில்தான் இருக்கிறது. 'நாங்கள் எங்கள் தரவுகளின் உரி மையாளர்களாக மாறும் வரை, நிலைமை மோசமாகிக் கொண்டே தான் இருக்கும்' என்று தனியுரிமை ஆர்வலர்கள் எச்சரிக்கின்றனர்.

நவீன கார்கள் வசதிகளின் சொர்க்கமாகத் தெரிந்தாலும், அவை நம்மைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்கும் கருவி களாக மாறிவிட்டன. தொழினுட்பம் என்பது நமது வாழ்க்கையை எளிதாக்க வேண்டுமே தவிர, அது நம்மை அடிமையாக்கவோ அல்லது உளவு பார்க்கவோ கூடாது.

கார் நிறுவனங்கள் வெளிப்படைத்தன்மையைக் கடைபி டிக்க வேண்டியதும், அரசாங்கங்கள் கடுமையான தனியு ரிமைச் சட்டங்களைக் கொண்டு வர வேண்டியதும் இன்றைய காலத்தின் கட்டாயமாகும். அதுவரை, நமது காரின் 'ஸ்டீயரிங்' நம் கையில் இருக்கலாம், ஆனால் நமது 'தரவுகளின் ஸ்டீயரிங்' யாரிடம் இருக்கிறது என்பதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

எனவே இந்தத் தொழினுட்ப வளர்ச்சியும் அதன் பயன்பாடு களும் எவ்வளவு சௌகரியமானது என்பது வியக்கத்தக்க வகையில் காணப்பட்டாலும் அவற்றின் பின்னணியில் காணப்படும் தனிமனித சுதந்திரத்திற்கான கிடுக்குப் பிடிகளும், விலங்குகளும் எண்ணிலடங்காதவை என்பதை மறுதலித்து விட முடியாது. இந்த சாதனங்களைச் சாதுரி யமாக பயன்படுத்த நாம் இன்னும் பல பாடங்கள் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பதே நிதர்சனம்.

jeyaseelan.s@thaiveedu.com

விண்ணைத் தொட்ட வால்கள்!

ஈரான் - அமெரிக்க போர் உச்சக்கட்டத்தை எட்டி ஏவுகணைத் தாக்குதல்கள் உக்கிரமான நாள் 01 ஏப்ரல் 2026. அன்று புளோரிடாவில் உள்ள நாசாவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஓரியன் ராக்கெட் ஆர்டெமிஸ் 2 விண்கலத்துடன் சீறிக் கொண்டு விண்ணைக் கிழித்து தன் பத்து நாள் பயணத்தை ஆரம்பித்தது.

விண்கலத்தினுள் முடங்கிக்கொண்டு இருந்த நான்கு விண்வெளி வீரர்கள் தமது சந்திரனை நோக்கிய பயணத்தை அதுவும், ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு மனிதர்களை நிலவின் அருகில் கொண்டு செல்லும் இப்பயணத்தின் முக்கியத்துவத்தை எண்ணியவாறு அமர்ந்திருந்தனர்.

அவர்களுக்கு 69 ஆண்டுகளுக்கு முன் 1957-இல் நடந்த ஒரு பரீட்சாத்தமான விண்வெளிப் பயணம் இப்பயணத்திற்கு எந்த அளவு உதவிற்று என்பதை எண்ணிப்பார்த்திருக்க வாய்ப்பில்லை!

1957-ஆம் ஆண்டு...

அமெரிக்காவும் சோவியத் ஒன்றியமும் விண்ணாதிக்கத்தில் போட்டி போட்ட காலம் அது. இரு வல்லரசுகளும் விண்ணை ஆழ விஞ்ஞான வளர்ச்சியின் துணை கொண்டு பல மில்லியன் பணத்தை கொட்டித்தீர்த்த நாட்கள் அவை.

சோவியத் ஒன்றியம் எனும் கட்டமைப்பின் கீழ் ரஷ்ய நாடுகள் கூட்டுக்குடும்பம் நடத்திய ஐம்பதுகள்.

விண்வெளிக்கு முதல் மானுடரை யார் அனுப்புவது எனும் பனிப் போர் உக்கிரமடைந்திருந்த காலம் அது. 83 கிலோ எடையுள்ள ஸ்புட்னிக் 1 எனும் விண்கோளை ஒக்ரோபர் 1957- இல் சோவியத் ஒன்றியம் விண்ணுக்கு அனுப்பியிருந்தது. அது உலகை மூன்று வாரங்களுக்கு வெற்றிகரமாக வலம் வந்து மின்கலங்கள் சக்தியிழந்ததினால் 'சும்மா' பூமியை சுற்றித்திரிந்து ஜனவரி மாதம் 4-ஆம் திகதி 1958-இல் பூமியின் வான்வெளி எல்லைக்குள் நுழைந்து எரிந்து மறைந்தது.

ஸ்புட்னிக் 1-இன் இந்த வெற்றி அமெரிக்காவின் விஞ்ஞான சமூகத்தில் ஒரு பீதியை கிளப்பிற்று.

இதற்கு இன்னொரு காரணம் உண்டு. நவம்பர் 3, 1957-இல் சோவியத் ஒன்றியம் ஸ்புட்னிக் 2 எனும் 508 கிலோ எடையுள்ள செயற்கை விண்கோளை அனுப்ப இருப்பதாய் அறிவித்தது. ஆனால் இதில் ஒரு விசேஷம்!

மனித சரித்திரத்தில் முதல் தடவையாக ஓர் உயிரினத்தை விண்வெளிக்கு அனுப்பும் திட்டமே அது!

> "பூமியில் இருந்து 100 கி.மீ தொலைவில் உள்ள கர்மன் கோடு (Karman line) எனும் மாய எல்லையே புவியின் வளிமண்டலத்தையும் விண்வெளியையும் கூறு போடுகின்றது. சுமார் 120 கி.மீ உயரத்தில் ஒரு விண்கலம் விண்வெளியில் இருந்து வளிமண்டலத்தினுள் மீண்டும் நுழையும் போதே வளிமண்டல உரசலால் அபரிமித வெப்பத்தை வெளிக்கொணரும்."

tg.theeban@gmail.com

அச்சாதனையைப் படைத்த உயிரினம் லைக்கா எனும் நாய். 6 கிலோ எடையுள்ள ஹஸ்கி இனத்தை சேர்ந்த லைக்காவை மாஸ்கோ தெருவில் இருந்தே கண்டெடுத்தனர். இதற்கு ஒரு காரணம் இல்லாமல் இல்லை. தெரு நாய்கள் வாழ்வில் பல இன்னல்களில் சிக்குண்டு பல நாட்கள் போதிய உணவின்றித் தப்பிப்பிழைத்து போராடி வாழ்வன. என்றும் விண்வெளிப் பயணம் சொகுசுப் பயணம் அல்லவே. எனவே இந்த Rambo வாழ்க்கையே இந்நாய்களுக்கு எதற்கும் துணிந்த ஒரு மனப் பாங்கை வளர்த்து விடுகின்றன. மேலும் எந்த சோதனைகளையும் பயிற்சிகளையும் வெற்றிகரமாக முகம் கெடுக்கும் திறமை பெண் விலங்கினத்திற்கு இருந்ததால் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட எல்லா நாய்களும் பெண் நாய்களே!

இதற்கு முன்னரும் சோவியத் ஒன்றியம் 57 நாய்களை விண்ணுக்கு அனுப்பியிருந்தது. ஆனால் அவை பூமியை விட்டு தொலைதூரம் போகாத (100 கி.மீ உட்பட்ட) குறும் பயணங்களே.

பூமியில் இருந்து 100 கி.மீ தொலைவில் உள்ள கர்மன் கோடு (Karman line) எனும் மாய எல்லையே புவியின் வளிமண்டலத்தையும் விண்வெளியையும் கூறு போடுகின்றது. சுமார் 120 கி.மீ உயரத்தில் ஒரு விண்கலம் விண்வெளியில் இருந்து வளிமண்டலத்தினுள் மீண்டும் நுழையும் போதே வளிமண்டல உரசலால் அபரிமித வெப்பத்தை வெளிக்கொணரும்.

விஞ்ஞானிகள் வளிமண்டலத்தை நான்கு அடுக்குகளாக வகைப்படுத்தி பெயரிட்டுள்ளனர். உதாரணமாக சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையம் புவியில் இருந்து 330 - 410 கி.மீ தொலைவில் மிதந்த படி உள்ளது.

சரி, மீண்டும் இந்த விண் நாய்களைப் பற்றி பார்ப்போமா ?

1951-இல் அனுப்பப்பட்ட Dezik, Tsygan எனும் இரு நாய்களும் வெற்றிகரமாக பூமியை வலம் வந்தது ஊர் திரும்பின. ஆனால் அதே ஆண்டு Dezik மீண்டும் Lisa எனும் நாயுடன் பூமியை வலம் வந்து தரையிறங்கும் போது பாராசூட் விரியாததால் விபத்தில் மாட்டி மரித்தன.

பூமியில் இருந்து, ஆகக் கூடியது, 1,659 கி.மீ தூரத்திற்கு லைக்கா பயணிக்க வேண்டுமானதால் அதற்கு மற்ற நாய்களை விட கடுமையான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டியதாயிற்று. தொடர்ந்து 15 - 20 நாட்கள் வரை சிறு பெட்டியில் வாழ்தல், ஓடாமல் ஒரே இடத்தில் நீண்டநேரம் நிற்றல், குழாய்களில் இருந்து திரவ உணவை சிந்தாமல் உண்ணுதல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன. இவை அனைத்தையும் வெற்றிகரமாக பயின்று சித்தியடைந்தது லைக்கா.

லைக்காவுடன் பத்து நாய்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் லைக்காவே எல்லா பயிற்சிகளையும் வெற்றிகரமாக முடித்து முன்னணியில் நின்றது!

1957 நவம்பர் 03 நெருங்கிக் கொண்டிருந்தது. 30 மீட்டர் உயரமுள்ள ஸ்புட்னிக் ராக்கெட் தன் கூர்முனையில் 4 மீட்டர் கலசத்தை தாங்கி விறைத்து நின்றது. இக்கலசத்திற்குள்தான் எமது கதாநாயகி லைக்கா விண்வெளியில் பறந்து சரித்திரம் படைக்கப் போகிறாள்.

தன்னுடன் 12 உபகரணங்களையும் தனது இதயத் துடிப்பு, கதிரியக்க செறிவு காட்டி, பூமிக்கு சமிக்கைகள் அனுப்பும் உபகரணங்கள், லைக்காவை படமாக்க ஒரு தொலைக்காட்சி காமரா போன்றவற்றை எடுத்துச்சென்றது.

> மனித உடல் ஒரு விண்வெளிப் பயணத்தை எப்படி தாக்குப் பிடிக்கும் எனும் அறிவுத்தேடலில் பல உயிரினங்கள் தம் உயிரை தியாகம் செய்தன. இன்றைய காலங்களைப் போல் விண்வெளி பயணங்களில் மனிதனுக்கு ஏற்படும் இராசாயன, பௌதிக, உடல் மாற்றங்களைத் துல்லியமாய் கணக்கிடும் கணினிகள் அன்று இருந்திருந்தால் இது போன்ற உயிர் பலிகளை தவிர்த்திருக்கலாம் என்பது உண்மை.

மணி மதியம் 2.30. ஸ்புட்னிக் 2-இன் ராக்கெட்டுகள் சீறிக் கொண்டு வானை நோக்கி உந்திப் பாய்ந்தன. எங்கும் ஒரே வெப்பம், 90 நிமிடங்களுக்கு ஒரு முறை விண்கலம் பூமிக்கு சமிக்கைகளை அனுப்பிக் கொண்டு இருந்தது.

திட்டமிட்டபடியே விண்கலம் பூமியை மூன்று முறை வலம் வந்தது. எல்லோருக்கும் மகிழ்ச்சி!

நான்காவது சுற்றில் வந்தது வினை. விண்கலத்தினுள் வெப்ப நிலை 43 பாகையாக உயர்ந்தது. லைக்காவின் இதயத்து டிப்பு மூன்று மடங்காகவும் சுவாசம் நான்கு மடங்காகவும் அதிகரிக்கத் தொடங்கின. காதைப் பிளக்கும் ராக்கட் ஒலி வேறு. இவ்வேளையில் கரியமில வாயுவும் லைக்கா இருந்த கலத்தினுள் கசியத் தொடங்கியது.

எங்கும் அமைதி... துடித்த இதயம் அமைதியானது!

சோவியத் ஒன்றியம் இந்த அனர்த்தம் பற்றி உலகுக்கு அறி விக்காமல் நான்கு வாரங்களுக்கு லைக்கா சுகமாக பயணிப் பதாக உலகின் காதில் பூச்சொருகினர்.

நான்கு வாரத்தின் பின் லைக்கா மரித்த செய்தி வெளியிடப் பட்டது. இதற்கான காரணங்கள் பல முன்வைக்கப்பட்டன.

45 ஆண்டுகளின் பின், 2002-இல் ஸ்புட்னிக் திட்டத்தில் முன் னின்று உழைத்த விஞ்ஞானி டிமிட்ரி மலாஷென்கோவ் லைக்கா ஸ்புட்னிக் தன் நான்காவது சுழற்சியை மேற்கொள்ளும்போது, நான்கு மணி நேரத்திலேயே, வெப்பம் தாங்காமல் மரித்தது என்ற துயரச் செய்தியை வெளியிட்டார்.

முழு உலகமே சோகத்தில் மூழ்ந்தது. பல நாடுகள் லைக் காவை கௌரவிக்கும் வண்ணம் தபால் தலைகளை வெளி யிட்டன.

மனித உடல் ஒரு விண்வெளிப் பயணத்தை எப்படி தாக்குப் பிடிக்கும் எனும் அறிவுத்தேடலில் பல உயிரினங்கள் தம் உயிரை தியாகம் செய்தன. இப்பயணங்களில் கற்றுக் கொண்ட பாடங்களில் இருந்தே உலகின் முதல் விண்வெளி வீரனான யூரி ககாரின் 1961-இல் விண்ணைத் தொட்டார். இன்றைய காலங்களைப் போல் விண்வெளி பயணங்களில் மனிதனுக்கு ஏற்படும் இராசாயன, பௌதிக, உடல் மாற்றங் களைத் துல்லியமாய் கணக்கிடும் கணினிகள் அன்று இருந்தி ருந்தால் இது போன்ற உயிர் பலிகளை தவிர்த்திருக்கலாம் என்பது உண்மை.

விண்வெளிப் பயணத்தின் சவால்களைச் சமாளிக்க இந்த உயிரினங்கள் செய்த தியாகங்களின் வடுக்கள் நிச்சயம் ஆர்டெமிஸ் 2-இன் வெற்றியில் பதியப்போவதில்லை. ஆனால் இந்த உயிர் தியாகங்கள் நிச்சயம் இந்த நான்கு விண்வெளி வீரர்களின் பயண வெற்றியில் ஏதோ சிறு பங்களிப்பை ஆற்றி யிருக்கும் என நாம் நம்பலாம்!

விண்வெளி ஆராய்ச்சிக்காய் தம் உயிரை அர்ப்பணித்த பல உயிரினங்களின் நினைவுச் சின்னமாகவே 1997-ஆம் ஆண்டு மாஸ்கோவின் 'ஸ்டார் சிட்டியில்' நம் நாயகி லைக்கவுகாய் ஒரு சிலை எழுப்பப்பட்டது! கம்பீரமாய் எழுந்து நின்று எம் கண்களை உற்று நோக்கி லைக்கா எமக்கு சொல்லும் செய்தி 'உங்கள் மேன்மைக்காய் உயிர் துறந்தேன். சமாதா னத்துடன் வாழுங்கள்!'

christy.nallaratnam@thaiveedu.com

அமெரிக்காவின் லஸ் வேகாஸ்

- குரு அரவிந்தன்

அமெரிக்காவின் லஸ் வேகாஸ் நகரம், விருந்தோம்பலுக்கான ஒரு முக்கிய உலகளாவிய மையமாகத் திகழ்கிறது. உலகின் பல நாடுகளிலும் இருந்து பயணிகள் வருவதால், இங்குள்ள ஹாரி ரீட் சர்வதேச விமான நிலையம் எப்பொழுதும் பரபரப்பாகவே இருக்கின்றது. விமான நிலையத்தில் இறங்கி உள்ளே சென்றதும் வாசலில் காசினோ என்று சொல்லப்படுகின்ற விதம் விதமான சூதாட்ட மெசீன்களே உங்களை வரவேற்கின்றன. வண்ண விளக்குகளின் வெளிச்சத்தில் வித்தியாசமான உலகைப் பார்க்க வைக்கிறது. விமான நிலையத்தில் மட்டுமல்ல, எந்த ஹோட்டலுக்குச் சென்றாலும் வரவேற்புப் பகுதியில் முழுவதும் இத்தகைய மெசீன்களே நிறைந்து காணப்படுகின்றன.

லஸ் வேகாஸ் நகரம் அமெரிக்காவின் நெவாடா மாநிலத்தில் அதிக மக்கள் தொகை கொண்ட நகரமாக இருக்கின்றது. ரொறன்ரோவில் இருந்து சுமார் ஐந்து மணி நேரம் விமானப்பயணத்திற்கு எடுக்கின்றது. இந்த நகரம் கிளார்க் கவுண்டியின் தலைமையகமாகவும் உள்ளது. இது அமெரிக்காவின் 24-வது அதிக மக்கள் தொகை கொண்ட நகரமாகவும், சர்வதேச அளவில் புகழ்பெற்ற முதன்மையான சூதாட்ட, உல்லாச நகரமாகவும் இருக்கின்றது. இந்த இடங்களில் பெரும்பாலானவை லஸ் வேகாஸின் மையப்பகுதியிலேயே அமைந்துள்ளன, லஸ் வேகாஸ் பள்ளத்தாக்கு நெவாடாவின் முன்னணி நிதி, வணிக மற்றும் கலாசார மையமாக விளங்குகிறது.

இன்று உலகின் முக்கியமான பொழுது போக்கு நகரமாக இருக்கும் லஸ் வேகாஸ் 1905-ஆம் ஆண்டில் புதிதாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு புதுப்பிக்கப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டார்கள். இது அதன் ஆடம்பரமான மற்றும் பெரிய காசினோ - ஹோட்டல்களுக்குப் பிரபலமானது. இந்த நகரம் ஆண்டு தோறும் 40.8 மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. இது அமெரிக்காவில் அதிகம் பார்வையிடப்படும் நகரங்களில் ஒன்றாகவும், உலகின் சிறந்த சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகவும் தொடர்ந்து இடம்பிடித்து வருகிறது.

இது வணிக மாநாடுகளுக்கான மூன்றாவது மிகவும் பிரபலமான அமெரிக்க இடமாகும். மற்றும் விருந்தோம்பல் துறையில் உலகளாவிய முன்னணி நகரமாகும். வயது வந்தோருக்கான பல்வேறு வகையான பொழுதுபோக்குகளைக் கொண்ட நகரமாகவும் இருக்கின்றது. இது திரைப்படங்கள், இலக்கியம், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், விளம்பரங்கள் மற்றும் இசை வீடியோக்களுக்குப் பிரபலமான களமாக அமைந்துள்ளது.

லஸ் வேகாஸ் நகரத்தில் உள்ள ஒரு சிறப்பு என்னவென்றால் வெளிநாடுகளுக்குச் செல்லாதவர்களுக்காக முக்கியமான உலகின் பிரபல்யமான நகரங்களின் மாதிரிகளை இங்கே உருவாக்கி இருக்கிறார்கள். நியூயோர்க் நகரம், பாரிஸ் நகரம், எகிப்து, வெனீஸ் போன்ற நகரங்களின் மாதிரிகள் இங்கே செயற்கையாக உருவாக்கி அந்த நகரங்கள் எப்படி இருக்கும் என்பதைச் சுற்றுலாப் பயணிகள் அறிந்து கொள்ளக் கூடியதாக வடிவமைத்து இருக்கிறார்கள். நியூயோர்க்கின் லிபேர்ட்டி சிலை, பாரிஸின் ஈபெல் கோபுரம், எகிப்தின் பிரமீட், வெனீஸ் நகரத்தின் படகுச்சவாரிக் கால்வாய் போன்றவற்றை இங்கே உருவாக்கி இருக்கிறார்கள். நயாகராவில் உள்ள வாட் டர்பவுண்டின் போல இங்கும் இரவிலே வண்ணவிளக்கு வெளிச்சங்களைக் பார்க்கக்கூடியதாக இருந்தது.

1905-ஆம் ஆண்டு யூனியன் பசிபிக் தொடர்வண்டிப் பாதைக்கு அருகே இருந்த 110 ஏக்கர் நிலப்பரப்பில் லஸ் வேகாஸ் நகரம் உருவானது. அதனைத் தொடர்ந்து, 1911-ஆம் ஆண்டில் லஸ் வேகாஸ் ஒரு அதிகாரபூர்வ நகரமாக இணைக்கப்பட்டது. 1931-ஆம் ஆண்டு நெவாடா மாகாணம் சூதாட்டத்தைச் சட்டபூர்வமாக்கியது, இந்நகரத்தின் வர லாற்றில் மிக முக்கியத் திருப்புமுனையாக அமைந்தது. இதே ஆண்டில், அருகிலுள்ள ஹூவர் அணையின் சுரங்கப்பா தைகள் கட்டும் பணியும் தொடங்கியது. இக்கட்டுமானப் பணி களுக்காக வருகை தந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் வரவு, உலகப் பெரும் பொருளாதார மந்தநி லையின் போது லஸ் வேகாஸ் நகரம் பொருளாதாரப் பேரழி விற்கு உள்ளாவதைத் தவிர்க்கப் பெரும் துணையாக இருந்தது. இத்தகைய பிரம்மாண்டமான அணை கட்டுமானப் பணிகள் 1935-ஆம் ஆண்டு நிறைவடைந்தன.

1941-ஆம் ஆண்டின் பிற்பகுதியில், லஸ் வேகாஸ் இராணுவ விமானத்தளம் இங்கு நிறுவப்பட்டது. இரண்டாம் உலகப் போர்ச் சூழலில் முக்கியப் பங்காற்றிய இவ்விமானத்தளம், பின்னர் 1950-ஆம் ஆண்டில் 'நெல்லிஸ் விமானப்படைத் தளம்' எனப் பெயர் மாற்றம் பெற்றது. இது தற்போது அமெரிக்க விமானப்படையின் புகழ்பெற்ற 'தண்டர்பேர்ட்ஸ்' விமான சாகசக் குழுவின் முதன்மைத் தாயகமாக விளங்கி வருகிறது.

லஸ் வேகாஸ் நகரம், கடல் மட்டத்திலிருந்து சுமார் 2,000 அடி உயரத்தில் அமெரிக்காவின் மொஜாவே பாலைவனத்தில், மலைத்தொடர்களால் சூழப்பட்ட அடிவாரத்தில் உள்ள ஒரு பள்ளத்தில் அமைந்துள்ளது. லஸ் வேகாஸ், வட அமெரிக்கா விலேயே மிகவும் சூரிய ஒளி மிகுந்த, வறண்ட மற்றும் குறைந்த ஈரப்பதம் கொண்ட இடங்களில் ஒன்றாகும். எல்லாப் பருவங்களிலும் சூரிய ஒளி காணப்படும், டிசம்பர் மாதமே ஆண்டின் மிகவும் குளிரான மற்றும் மேகமூட்டமான மாதமாகும், நகரத்திற்கு வெளியே சென்றால், நிலப்பரப்பின் பெரும்பகுதி வறண்டதாகவும், பாறைகள் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. பாலைவனத் தாவரங்கள் மற்றும் வனவி லங்குகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அமெரிக் காவில் நில அதிர்வால் பாதிக்கப்படும் மாகாணங்களில் அலஸ்கா மற்றும் கலிபோர்னியாவிற்கு அடுத்ததாக, நெவாடா காணப்படுகின்றது.

மக்கள் தொகையைப் பொறுத்தவரையில் முதற்குடிகளான மெக்சிகன் மக்கள் அதிகம் வசிக்கிறார்கள். இதைவிட ஜேர்மன், பிலிப்பினோ, ஆங்கிலேயர், ஐரிஸ், இத்தாலியர், ஹவாயினர் போன்ற இனத்தவர்களும் இங்கு ஓரளவு வசிக் கின்றனர். நெவாடா மாகாணத்தின் திருமணச் சட்டங்களும், விவாகரத்துச் சட்டங்களும் இலகுபடுத்தப்பட்டதால், இதற் காகப் பிற மாகாணங்களில் இருந்து அதிக மக்கள் இங்கு வருவதால், அதிக அளவில் திருமணங்களும், விவாகரத்தும் இடம்பெறும் மாகாணமாக நெவாடா இருக்கின்றது.

லஸ் வேகாஸ் நகரத்தின் பொருளாதாரம் முக்கியமாகச் சுற்றுலா, சூதாட்டம் மற்றும் அங்கு சர்வதேச அளவில் ஏற்பாடு செய்யப்படும் வணிக மாநாடுகள் ஆகியவற்றையே பெரிதும் சார்ந்து இருக்கின்றது. இத்துறைகளின் அசுர வளர்ச் சியின் மூலம், இந்நகரத்தின் சில்லறை வணிகம் மற்றும் உணவகத் தொழில்களும் பெருமளவில் வளர்ச்சி அடை கின்றன. லஸ் வேகாஸ் நகரத்தின் முதன்மை ஈர்ப்புகளாக விளங்குபவை அங்குள்ள உலகத்தரம் வாய்ந்த சூதாட்ட விடு திகளும் பிரம்மாண்டமான ஹோட்டல்களுமே ஆகும். சுற்றுலாப் பயணிகள் எளிதாக நடந்து செல்லக்கூடிய தூரத் திலேயே பெரும்பாலான ஹோட்டல்களும், சூதாட்ட விடுதி களும், வணிக வளாகங்களும் ஒன்றோடொன்று இணைந்து மிக நேர்த்தியாக அமைந்துள்ளன. மேலும், நகர மையப் பகுதியில் அமைந்துள்ள பழைமையான மற்றும் புகழ்பெற்ற பெரும்பாலான சூதாட்ட விடுதிகள் 'ப்ரீமாண்ட்' வீதியிலேயே குவிந்துள்ளன.

எல்லா ஹோட்டல்களிலும் உள்ளே செல்லும் போது முதலில் சூதாட்ட மண்டபங்களே இருக்கின்றன. டேபிள் கேம்கள் மற்றும் ஸ்லாட் இயந்திரங்கள் முதல் ரேஸ் மற்றும் ஸ்போர்ட்ஸ் புக் வரை இங்கே இடம்பெறுகின்றன. இதற் காகவே அதிக சுற்றுலாப் பயணிகள் வருவதால், உங்கள் பணத்தைப் பணயம் வைக்க ஏராளமான வழிகள் இருக் கின்றன. இங்குள்ள அதிக பணயம் வைக்கும் சூதாட்ட

மேசைகள் காரணமாக, பல பெரும் பணக்காரர்களின் விருப்பமான இடமாகவும் இது விளங்குகிறது.

சூதாட்டங்களில் ஈடுபாடற்ற சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலான பல்வேறு உலகத்தரம் வாய்ந்த பொழுதுபோக்கு வசதிகளும் ஈர்ப்புகளும் இங்கு நிறைந்துள்ளன. அவற்றுள் மிக முக்கியமாக, இங்குள்ள பிரம்மாண்டமான நீரூற்றுகளைக் குறிப்பிடலாம். குறிப்பாக, புகழ்பெற்ற 'பெல்லாஜியோ' விடுதியின் வெளிப்புறத்தில், இசைக்கு ஏற்ப நுணுக்கமாக வடிவமைக்கப்பட்ட வர்ண விளக்குகளின் ஒளியோடு அரங்கேறும் 'நீர்நடன'க் காட்சிகளை எவரும் இலவசமாகக் கண்டு களிக்கலாம். இந்த நீர்நடன நிகழ்ச்சி பகல் மற்றும் மாலை வேளைகளில் ஒவ்வொரு 30 நிமிடங்களுக்கும், இரவு 8 மணிக்குப் பிறகு ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கும் அதிநவீனத் தொழில்நுட்பத்துடன் மிக நேர்த்தியாக நடைபெறுகிறது. பெல்லாஜியோ பெலோஜியோ ஹோட்டலின் மாடியறையின் யன்னல் ஊடாகத் தினமும் இந்த அற்புதக் காட்சியைக் காண முடிகிறது. 24 மணி நேரமும் திறந்திருக்கும் இவ்விடுதி வளாகத்தினுள், காண்போரைக் கவரும் வகையிலான மிக அழகான தாவரவியல் பூங்கா ஒன்றும் அமைந்துள்ளது.

பொழுதுபோக்குவதற்கு லஸ் வேகாஸில் வெனிசியனில் உள்ள மிகப்பெரிய கோளவடிவமான ஸ்பியர் என்ற கட்டடம் வித்தியாசமாக இருக்கிறது. 22-ஆம் நூற்றாண்டுத் தொழினுட்பத்தால் உயிரூட்டப்பட்டு, உலகின் தலைசிறந்த கலைஞர்களுடன் இணைந்து செயற்படுவதைக் காணமுடிந்தது. அது, இதற்கு முன் எப்போதும் இல்லாத வகையில் புலன்களைத் தட்டி எழுப்பும் ஒரு முழுமையான அனுபவமாக இருந்தது. அறிவியலும் அதிநவீன தொழினுட்பமும் கைகோர்த்தால் எவ்வளவு பிரம்மாண்டமாக இருக்கும் என்பதற்குச் சாட்சியாக விண்வெளி அதிசயத்தை 'முழுநிலவாக' காட்சியமைப்பில் கண்முன்னே நிறுத்தியது.

ஒரு நாள் லஸ் வேகாஸ் பகுதியில் உள்ள ரெட் ராக் கேன்யன் தேசிய பாதுகாப்புப் பகுதிக்குச் சென்றிருந்தேன். கிராண்ட் கேன்யன் என்பது லஸ் வேகாஸிலிருந்து மிக அருகில் உள்ள உலக இயற்கை அதிசயங்களில் ஒன்றான கிராண்ட் கேன்யனின் பகுதியாகும். இயற்கை அழகைக் கண்டு ரசிக்க விரும்புபவர்களுக்கு இது ஒரு வசதியான விருப்பமான இடமாக இருக்கின்றது. இந்தப் பள்ளத்தாக்கு ஒரு வளமான கலாசார வரலாற்றைக் கொண்டுள்ளது. இதைவிட இங்குள்ள பல பூர்வீக அமெரிக்கப் பழங்குடியினரால் ஒரு புனிதத் தலமாகக் கருதப்படுகிறது.

கிராண்ட் கேன்யனில் ஈகிள் பொயிண்ட் மற்றும் குவானோ பொயிண்ட் ஆகிய இரண்டு முக்கிய இடங்கள் இருக்கின்றன. ஈகிள் போயிண்டிலிருந்து, பாறைகள், குன்றுகள், மலைகள் போன்ற இயற்கையான அமைப்பைக் காணலாம். பல கோடி ஆண்டுகளின் புவியியல் வரலாற்றை வெளிப்படுத்தும் அடுக்கு அடுக்கான செந்நிறப் பாறைகள் மற்றும் ஒரு மைல் வரை பரந்து விரிந்த அதன் ஆழம் ஆகியவை அதிசயிக்க வைக்கின்றன. தனித்துவமான குவானோ பொயிண்டில், பார்வையாளர்கள் மிக உயரமான இடத்திற்குச் செல்லும் பாதையில் நடந்து சென்று, பள்ளத்தாக்கு மற்றும் சுற்றியுள்ள பகுதியின் காட்சியைக் கண்டு ரசிக்கலாம். இது பிரமிக்க வைக்கும் காட்சிகளைக் கொண்ட ஓர் அற்புதமான பகுதியாகும்.

லஸ் வேகாஸ் வயது வந்தவர்களுக்கான பொழுது போக்கும் இடமாகத்தான் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் விடுமுறைக்குக் குடும்பத்தோடு செல்பவர்களுக்காக இப்போது சிறுவர்கள் பொழுது போக்கக் கூடிய சில இடங்களையும் அமைத்திருக்கிறார்கள். குடும்பமாகச் சென்று கோல்ஃப் விளையாடக் கூடிய இடமும் இங்குண்டு. டாப்கோல்ஃப் லஸ் வேகாஸ் என்ற ஒரு உயர் தொழினுட்ப பயிற்சித் திடல் இங்குள்ளது. இங்கு விரும்பிய விளையாட்டு வீரர்கள் மாடியில் இருந்தே மைக்ரோ-சிப் பொருத்தப்பட்ட கோல்ஃப் பந்துகளை இலக்குகளில் அடித்து, புள்ளிகளைப் பெற்று, ஒருவருக்கொருவர் போட்டியிடலாம். இந்த இடம் பல்வேறு வகையான உணவு மற்றும் வேடிக்கையான கலகலப்பான சூழலையும் வழங்குகிறது. இது குடும்பத்துடன் பொழுதைக் கழிக்க ஒரு சிறந்த இடமாக இருக்கின்றது.

சார்க் ரீஃப் மீன் காட்சியகத்தில் 2,000-க்கும் மேற்பட்ட உயிரினங்களைப் பார்க்க முடிகின்றது. சுறாக்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் சுற்றிவர நீந்துவதை வித்தியாசமான கோணத்தில் காணக்கூடியதாக இருந்தது. இங்கு ஒரு சிறிய தொடு குளமும் இருக்கிறது. இதில் நீங்கள் உங்கள் விரல்களைத் தண்ணீரில் நனைத்து, அங்கு நீந்தி வரும் சில கடல்வாழ் உயிரினங்களான திருக்கை மீன்கள், சுறாக்கள் அல்லது நண்டுகளைத் தொட்டுப் பார்க்க அனுமதிக்கிறார்கள். உங்களுக்கு சூதாட்டத்தில் ஆர்வம் இல்லாவிட்டாலும், பொழுது போக்குவதற்காகச் செல்லக்கூடிய இடமாக லஸ் வேகாஸ் இருக்கின்றது.

kuruaravindan@thaiveedu.com

சரவணன் லக்ஷரன்

இன்றைய உலகில் நகராக்கம், தொழினுட்ப வளர்ச்சி மற்றும் சனத்தொகை பெருக்கம் ஆகிய காரணிகளால் கழிவுகளின் உற்பத்தி அதிகரித்து வருகின்றது, இது தினசரி 2.1 பில்லியன் டன் கழிவுகளை உருவாக்கி சுற்றுச் சூழல் சமநிலையை மீறுகிறது. குறிப்பாக, நகர்ப்புறங்களில் தினசரி உருவாகும் திண்மக்கழிவுகள் மனித ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது, ஏனெனில், இலங்கையில் நாளொன்றுக்கு ஆயிரக்கணக்கான மெட்ரிக் டன் கழிவுகள் சேமிக்கப்படுகின்றன. மக்கள் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள், உணவுக் கழிவுகள், மருத்துவக் கழிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் சரியான முறையில் முகாமை செய்யப்படாதபோது மண், நீர் மற்றும் காற்று மாசுபடுகின்றன, இதனால், துர்நாற்றம், பூச்சி பரவல் மற்றும் நீர் மாசுபாடு போன்றவை ஏற்படுகின்றன. இதன் விளைவாக, பல்வேறு தொற்றுநோய்கள், சுவாச நோய்கள் மற்றும் உளவியல் அழுத்தங்கள் கூட உருவாகின்றன, உதாரணமாக அசுத்த சூழல் மனஅழுத்தத்தையும் சமூக வெறுப்பையும் அதிகரிக்கிறது. இவ்வாறான சூழ்நிலையில் கழிவு முகாமைத்துவம் என்பது சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் மனித நலனுக்கும் அவசியமான செயல்முறையாக மாறியுள்ளது, ஏனெனில், சுத்தமான சூழல் மனநிம்மதி மற்றும் சமூக ஒற்றுமையை வழங்குகிறது.

சூழலியல் உளவியலின் அடிப்படையில் மனிதர்கள் வாழும் சூழல் அவர்களது நடத்தை, மனநிலை மற்றும் சமூக உறவுகளை நேரடியாகப் பாதிக்கின்றது, அதாவது, அசுத்தம், பயம் மற்றும் தனிமையை உருவாக்கி நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துகிறது. சுத்தமான சூழல் மனிதருக்கு மனநிம்மதி, பாதுகாப்பு உணர்வு மற்றும் நல்ல சமூக வாழ்வை வழங்குகின்றது, இது உளவியல் நலத்தை 30% வரை மேம்படுத்துகிறது. ஆனால், அசுத்தமான சூழல் மன அழுத்தம், வெறுப்பு உணர்வு மற்றும் சமூக சிக்கல்களை உருவாக்குகின்றது, உதாரணமாக யாழ்ப்பாணத்தில் குப்பை தேங்கிய வீடுகளில் வாழும் மக்கள், பதற்றத்தை அனுபவிக்கின்றனர். இதனால் கழிவு முகாமைத்துவம் என்பது சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினை மட்டுமல்லாமல் உளவியல் மற்றும் சமூகப் பிரச்சினையாகவும் கருதப்படுகிறது, ஏனெனில், மக்களின் பொறுப்புணர்வு குறைவு சவாலை அதிகரிக்கிறது. இந்த அடிப்படையில் யாழ் மாநகர சபையின் கழிவகற்றல் நுட்பங்களும், அதனை நோக்கிய மக்களின் மனப்பாங்கும் நடத்தையும் தொடர்பாக இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது.

'கழிவு' என்பது தேவையற்ற அல்லது பயன்படுத்த முடியாத பொருட்களைக் குறிக்கும், இவை திண்ம, திரவ மற்றும் வாயு வகைகளாக பிரிக்கப்படுகின்றன. திண்மக்கழிவுகள் சூழலுக்கும் மனித ஆரோக்கியத்திற்கும் அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன, ஏனெனில், அவை மண் மாசுபாட்டையும் நீர் மாசுபாட்டையும் உருவாக்குகின்றன. வீட்டுக்கழிவுகள், பிளாஸ்டிக் பொருட்கள், மருத்துவக்கழிவுகள், தொழிற்சாலைக்கழிவுகள் போன்றவை முக்கிய திண்மக்கழிவுகளாகும், இவை உணவுப் பழுது (ஆர்கானிக்), பிளாஸ்டிக் (டிரை), மின்சாதனங்கள் (ஹாசார்டஸ்) என வகைப்படுத்தப்படுகின்றன. கழிவு முகாமைத்துவம் என்பது கழிவுகளைச் சேகரித்தல், தரம் பிரித்தல், மீள்பயன்பாடு, மீள்சுழற்சி மற்றும் பாதுகாப்பான முறையில் அகற்றுதல் ஆகிய செயல்முறைகளை உள்ளடக்கியதாகும். இது சுற்றுச்சூழல் பாதிப்பை 50% வரை குறைக்க உதவுகிறது. உலகளவில் பின்பற்றப்படும் 4R முறைமையான தவிர்த்தல் (Refuse), குறைத்தல் (Reduce), மீள்பயன்பாடு (Reuse) மற்றும் மீள்சுழற்சி (Recycle) ஆகிய செயற்பாடுகள் கழிவுகளின் அளவைக் கட்டுப்படுத்தி சுற்றுச்சூழலைப் பாதுகாக்கின்றன; இம்முறைமை தற்போது இலங்கையிலும் பரவலாக்கப்பட்டு வருகின்றது.

prasadbatti@gmail.com

கழிவகற்றல் நோக்கிய மக்களின் மனப்பாங்கு

கழிவு முகாமைத்துவத்தில் 4R முறை பிரபலமாக பல நாடுகளில் பயன்படுத்தப் படுகிறது. 4R முறைமை என்பது வட்டப் பொருளாதாரத்தின் (Circular Economy) அடிப் படைத் தூணாகும். இதன் நோக்கம் கழிவுகளைக் குறைப் பதோடு மட்டுமல்லாமல், இயற்கை வளங்களை மிகத் திற மையாகப் பயன்படுத்துவதையும் உறுதி செய்கிறது.

கழிவு முகாமைத்துவத்தில் 'தவிர்த்தல்' மற்றும் 'குறைத்தல்' (Refuse & Reduce) ஆகியன மிக முக்கியமான ஆரம்பக் கட்டங்களாகும். இங்கு கழிவுப்பொருள் உருவாவதையே முற்றாகத் தவிர்ப்பது அல்லது அதன் அளவை மூலத் திலேயே குறைப்பது போன்ற நுட்பங்கள் கையாளப்படு கின்றன. இது தேவையற்ற நுகர்வைக் கட்டுப்படுத்தி, சூழல் மாசடைவதைப் பாரியளவில் குறைக்க உதவுகிறது. அதாவது பயன்படுத்திய ஒரு பொருளை முடியுமான தடவை மீண்டும் பயன்படுத்துதல். புதிதாக வாங்காமல் உடைந்த பொருட் களைச் சரிசெய்து மீண்டும் பயன்படுத்துவது, மீண்டும் உப யோகிக்க கூடிய வகையில் பொருட்களை வடிவமைப்பது, உதாரணமாக பிளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக துணியினால் செய்த பைகளை பயன்படுத்துவது, ஒரு முறை மாத்திரமே பயன்படுத்திவிட்டு அகற்றப்படும் பொருட்களை தவிர்ப்பது. ஒரே வகையான தேவைகளுக்காகத் தனித்தனிப் பொருட் களைப் பயன்படுத்துவதைக் குறைப்பதன் மூலம் கழிவு உற்பத்தியைக் கட்டுப்படுத்தலாம். மீள்பயன்பாடு (Reuse) என்பது, ஒரு பொருள் கழிவாக இனங்காணப்பட்ட பின்னர், அதனைச் சூழலுக்கு உகந்த வகையில் மாற்றியமைத்து மீண்டும் பயன்படுத்துவதைக் குறிக்கும்; குறிப்பாகப் பொலித்தீன், பிளாஸ்டிக், காகிதம் மற்றும் துணி போன்ற பொருட்களே இம்முறையில் அதிகளவில் பயன்படுத்தப்ப டுகின்றன.

மறுபுறம், சில கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி எரிபொருள் உற்பத்தி செய்தல், கழிவுகளைக் கொதிகலன் களில் (Boilers) எரிப்பதன் மூலம் உருவாகும் நீராவியைக் கொண்டு விசைச்சுழலிகள் (Turbines) வழியாக மின்சாரம் தயாரித்தல் மற்றும் திரவ, வாயு நிலைக்கழிவுகளை எரித்துச் சக்தி பெறுதல் போன்ற நவீன நுட்பங்கள் கையா ளப்படுகின்றன. மீள்சுழற்சி (Recycle) முறையைப் பொறுத் தவரை, பிவிசி (PVC), எல்டிபிஈ (LDPE), பிபி (PP) மற்றும் பிஎஸ் (PS) போன்ற பிளாஸ்டிக் வகைகள் பிரதான மானவை. இவையாவும் பொதுவாக ஒரே மாதிரியான உட் பொருட்களைக் கொண்டுள்ளதால், அவற்றைப் பயன்படுத்திப் புதிய பொருட்களை எளிதாக உற்பத்தி செய்ய முடியும்.

இலங்கையில் கழிவு முகாமைத்துவம்:

இலங்கையில் ஆரம்ப காலங்களில் வெளியேற்றப்பட்ட குப் பைகளின் அளவு குறைவாகவே இருந்தது. காலப்போக்கில் சனத் தொகையின் பெருக்கம் காரணமாக இலங்கையிலும் அனைத்து துறைகளிலும் வெளியேற்றப்படும் கழிவுகளின் அளவானது அதிகரித்த வண்ணம் காணப்பட்டது. 21% நிலத்தையும் 79% நீர்ப்பரப்பையும் கொண்ட இலங்கையில் குப்பைகளை முகாமைத்துவம் செய்வதில் பாரிய பிரச்சினை ஏற்பட்டது. இதற்காக இலங்கை அரசாங்கம் பல கழிவகற்றும் திட்டங்களை மேற்கொண்டது. இலங்கையில் கழிவகற்றல் முகாமைத்துவத்தைக் கையாளும் முழுப் பொறுப்பும் சட்டப்படி உள்ளூராட்சி நிர்வாகத்தையே சார்ந் ததாகும். மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை என்ப வற்றின் சட்டப்பிரமாணங்களுக்கமைய அந்தந்த உள்ளூ ராட்சி நிர்வாகம் கூடுதல் கவனமெடுத்து இயங்க வேண்டிய கடப்பாடு உள்ளது. வளர்ந்து வருகின்ற நாடாகிய இலங் கையில் ஒரு நாளில் 7000 மெற்றிக் தொன் கழிவுகள் உற் பத்தியாவதுடன் இவற்றில் 60 சதவீதமான கழிவுகள் மாகா ணத்திலிருந்தே உருவாக்கப்படுகின்றது.

அத்துடன் தலா ஒரு நபர் சராசரியாக ஒரு நாளில் 1 - 4 கிலோகிராம் அளவுடைய கழிவினை உருவாக்குகின்றார். (Environmental Foundation Limited) உற்பத்தியாகின்ற கழிவுகளில் 3500 மெற்றிக் தொன் கழிவுகள் மாத்திரமே இலங்கையில் நகர சபைகள், மாநகர சபைகள் மற்றும் பிர தேசசபைகள் ஊடாக சேகரிக்கப்படுகின்றது (Environmental Authority & Waste Management Authority, 2019). நிதிப்பற்றாக்குறை, கழிவகற்றலுக்கான போதிய திட்டமிட லின்மை, தொழினுட்ப வசதியின்மை, திறன் வாய்ந்த பயிற் றப்பட்ட தொழிலாளரின்மை, வாகன போக்குவரத்து வசதிக

“நிதிப்பற்றாக்குறை, கழிவகற்றலுக்கான போதிய திட்டமிடலின்மை, தொழினுட்ப வசதியின்மை, திறன் வாய்ந்த பயிற்றப்பட்ட தொழிலாளரின்மை, வாகன போக்குவரத்து வசதிகளின்மை போன்ற காரணங்களால் மேற்கூறப்பட்ட நிறுவனங்களால் வினைத்திறனான சேவைகளை வழங்க முடியாதுள்ளது.”

இலங்கையின் வருடாந்த கழிவு உருவாக்கம் 2016-ஆம் ஆண்டில் காணப்பட்ட 2.58 மில்லியன் மெற்றிக் தொன்னிலிருந்து, 2030-ஆம் ஆண்டில் 3.16 மில்லியன் மெற்றிக் தொன்னாக ஆதாவது 22% அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ளின்மை போன்ற காரணங்களால் மேற்கூறப்பட்ட நிறுவனங்களால் வினைத்திறனான சேவைகளை வழங்க முடியாதுள்ளது. இலங்கைக்கான சிறந்த திண்மக்கழிவு முகாமைத்துவத் தந்திரோபாயத்தினை வழங்கும் நோக்கில் நில நிரப்புகைத்திட்டம், சுகாதார கழிவுகளைச் சக்தியாக மாற்றுகின்ற செயற்றிட்டங்கள், கழிவுகளில்லாத இலங்கையை உருவாக்கும் திட்டம் என்பன மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையில் ஆரம்பகாலங்களில் கழிவகற்றும் நடைமுறைகளாக எரித்தல் மற்றும் புதைத்தல் போன்ற முறைகளே காணப்பட்டன. எனினும், தொழினுட்ப முன்னேற்றத்தின் விளைவாகக் கழிவகற்றல் முகாமைத்துவம் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. தற்போது 3R (Reduce, Reuse, Recycle) முறைமை பரவலாகப் பயன்படுத்தப்படுவதுடன், வீதிகளில் குப்பைகளைத் தரம் பிரித்து சேகரிப்பதற்கான கூடைகளும் வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாகச் சுற்றாடல் அமைச்சின் தரவுகளின்படி, இலங்கையில் நாளொன்றுக்குச் சுமார் 932 மெற்றிக் தொன் பிளாஸ்டிக் கழிவுகள் சுற்றுச்சூழலில் கலக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அதில் சுமார் 300.30 மெற்றிக் தொன்கள் சேகரிக்கப்பட்டு மீதி 632.18 மெற்றிக் தொன் பிளாஸ்டிக் கழிவுகள் சுற்றுச்சூழலுக்கு வெளியேற்றப்படுகிறது. சுற்றுச்சூழலுக்கு வெளியிடப்பட்ட 419.47 மெற்றிக் தொன்கள் திறந்த வெளியில் எரிக்கப்படுவதாகவும், இதில், 38.48 மெற்றிக் தொன்கள் மறுசுழற்சி செய்யப்படுவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் கழிவகற்றலுக்குப் பரவலாகக் குப்பை மேடுகளே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உலக வங்கியின் (2018) கணிப்பின்படி, இலங்கையின் வருடாந்த கழிவு உருவாக்கம் 2016-ஆம் ஆண்டில் காணப்பட்ட 2.58 மில்லியன் மெற்றிக் தொன்னிலிருந்து, 2030-ஆம் ஆண்டில் 3.16 மில்லியன் மெற்றிக் தொன்னாக (22% உயர்வு) அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. தற்போது சேகரிக்கப்படும் கழிவுகளில் சுமார் 48 சதவீதமானவை (தினம் 1,835 மெ.தொன்), மையப்படுத்தப்பட்ட கூட்டெருவாக்கம், தொம்பேயிலுள்ள சுகாதாரமான காணி நிரப்புகை மற்றும் 'Western Power' நிறுவனத்தின் எரியூட்டல் நிலையங்கள் ஊடாக விளைதிறனுடன் முகாமை செய்யப்படுகின்றன. இருப்பினும், நகர்ப்புறங்களில் பெருகிவரும் திண்மக்கழிவுகளை அகற்றுவது பெரும் சவாலாகவே நீடிக்கிறது. நிதி மற்றும் தொழினுட்பப் பற்றாக்குறை, போதிய வாகன வசதியின்மை மற்றும் பொதுமக்களின் குறைந்தளவு ஒத்துழைப்பு என்பன இதற்கு பிரதான காரணங்களாகும். உதாரணமாக, வவுனியா போன்ற பகுதிகளில் கழிவுகளைத் தரம் பிரிக்காமல் திறந்தவெளியில் கொட்டும் வழக்கம் நிலவுவதால், காற்று மாசடைவதுடன் நோய்த்தொற்று அபாயங்களும் அதிகரிக்கின்றன. குறிப்பாக, போர் பாதிப்புகளுக்கு உள்ளான யாழ் பிரதேசத்தில் இச்சூழ்நிலை மேலதிக உளவியல் அழுத்தத்தைத் தோற்றுவிக்கும் ஒரு காரணியாகவும் மாறியுள்ளது.

மத்திய அரசாங்கம் 'பிலிசரு' திட்டம், 3R / 4R முறைமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்கள் மூலம் பல முன்னேற்றங்களை முன்னெடுத்தாலும், பொது மக்களின் பங்களிப்பு இன்றிச் சேகரிப்பு நடவடிக்கைகள் 40% வரை தோல்வியடைகின்றன. எனவே, பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்தல், மீள்பயன்பாட்டை அதிகரித்தல் மற்றும் கழிவுகளைத் தரம் பிரித்து வழங்குதல் போன்ற பொறுப்புணர்வு மிக்க பழக்கவழக்கங்கள் சமூகத்தில் பரவலாக உருவாவது அவசியமாகும்.

குறிப்பாக யாழ் மாநகர சபையின் கழிவகற்றல் செயற்பாடுகளில் யாழ் மாநகர சபை 27 வட்டாரங்களை கொண்டுள்ளது, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தனித்தனி கழிவு சேகரிப்பு வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன, காலை 6 முதல் மதியம் 12 வரை செயற்படுகின்றன. காக்கைத்தீவு மீள்சுழற்சி நிலையத்தில் தினசரி பெருமளவு கழிவுகள் சேகரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்படுகின்றன, உயிரியல் கழிவுகள் பசளையாக மாற்றப்படுகின்றன. பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் போன்றவை மீள்சுழற்சிக்கு அனுப்பப்படுகின்றன, இது ஆண்டுக்கு 1000 டன் கழிவுகளை மீட்கிறது. கழிவு சேகரிப்பு நடவடிக்கைகள் காலையில் ஆரம்பிக்கப்பட்டு மதியம் வரை நடைபெறுகின்றன, இதற்காக பல தொழிலாளர்கள் கடின உழைப்புடன் பணியாற்றுகின்றனர். இருப்பினும் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவு, பாதுகாப்பு உபகரணங்களின் பற்றாக்குறை மற்றும் உடல் நலப் பிரச்சினைகள் போன்றவை அவர்களின் பணியைப் பாதிக்கின்றன, இது உளவியல் சோர்வை ஏற்படுத்துகிறது. யாழ்ப்பாணத்தில் போர் பாதிப்பால் உள்ளார்ந்த உளவியல் பிரச்சினைகள் ஊழியர்களின் திறனை குறைக்கின்றன.

மக்களின் மனப்பாங்கும் நடத்தையும்:

கழிவு முகாமைத்துவத்தின் வெற்றிக்கு மக்களின் மனப்பாங்கு மற்றும் நடத்தை மிக முக்கியமானதாகும், ஆய்வுகள் 70% தோல்வி மக்கள் ஒத்துழைப்பின்மை காரணமென்று காட்டுகின்றன. ஆய்வின் போது சில மக்கள் மாநகர சபை ஊழியர்கள் சரியான நேரத்தில் கழிவுகளை சேகரிக்க வருவதில்லை என்று குற்றம் சாட்டினர், இதன்

பொதுமக்களிடையே போதிய விழிப்புணர்வு இல்லாமை மற்றும் திறந்த வெளிகளில் குப்பைகளை கொட்டும் பழக்கம் சுற்றுச்சூழல் மாசுபாட்டை அதிகரிக்கின்றது, யாழ்ப்பாணத்தில் 60% கழிவுகள் திறந்தவெளியில் சேமிக்கப்படுகின்றன.

காரணமாக வீடுகளில் கழிவுகள் தேங்கி துர்நாற்றம் மற்றும் சுகாதார பிரச்சினைகள் உருவாகின்றன என அவர்கள் தெரிவித்தனர். அதேவேளை சிலர் தங்களது கழிவுகளை தரம் பிரிக்காமல் வழங்குவதும், வீதியோரங்களில் கொட்டுவதும் கண்டறியப்பட்டது, இது சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு குறைவைக் காட்டுகிறது. சில குடும்பங்கள் கழிவுகளை மீள்பயன்பாடு மற்றும் மீள்சுழற்சி செய்வதில் ஆர்வம் காட்டினாலும், பெரும்பாலான மக்களிடம் விழிப்புணர்வு குறைவாகவே காணப்பட்டது, குறிப்பாக பிளாஸ்டிக் பயன்பாடு அதிகரித்திருப்பது சுற்றுச்சூழலுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

சூழலியல் உளவியலின் அடிப்படையில் பார்க்கும்போது, மனிதர்கள் வாழும் சூழல் அவர்களது மனநிலையையும் நடத்தையையும் மாற்றுகின்றது, அசுத்த சூழல் PTSD போன்ற உளவியல் பிரச்சினைகளை அதிகரிக்கிறது. அசுத்தமான சூழலில் வாழும் மக்கள் மனஅழுத்தம் மற்றும் வெறுப்பு உணர்வுகளுக்கு ஆளாகின்றனர், ஆனால் சுத்தமான சூழல் மக்களிடையே ஒற்றுமை, ஆரோக்கியம் மற்றும் சமூக நலனை மேம்படுத்துகின்றது.

கழிவு முகாமைத்துவத்தில் காணப்படும் சவால்கள் என்னும் போது கழிவு முகாமைத்துவத்தில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன, மக்கள் கழிவுகளை தரம் பிரிக்காமல் வழங்குவது, கழிவு சேகரிப்பு வாகனங்களின் பற்றாக்குறை, தொழில்நுட்ப வசதியின்மை மற்றும் ஊழியர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்கள் குறைவாக இருப்பது போன்றவை முக்கிய சவால்களாகும். இதற்கு மேலாக, பொதுமக்களிடையே போதிய விழிப்புணர்வு இல்லாமை மற்றும் திறந்த வெளிகளில் குப்பைகளை கொட்டும் பழக்கம் சுற்றுச்சூழல் மாசுபாட்டை அதிகரிக்கின்றது, யாழ்ப்பாணத்தில் 60% கழிவுகள் திறந்தவெளியில் சேமிக்கப்படுகின்றன. குறிப்பாக பிளாஸ்டிக் கழிவுகளின் அதிகரிப்பு மனித ஆரோக்கியத்திற்கும் இயற்கை வளங்களுக்கும் தீங்கு விளைவிக்கின்றது, இது உளவியல் ரீதியாக சமூக பயத்தை உருவாக்குகிறது. இவ்வாறான சவால்கள் காரணமாக துர்நாற்றம், நோய்கள் பரவல் மற்றும் சமூக ஆரோக்கிய பாதிப்புகள் ஏற்படுகின்றன.

கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்தப் பாடசாலை மட்டத்திலிருந்தே முறையான சுற்றுச்சூழல் கல்வி வழங்கப்படுவதோடு, யோகா மற்றும் தியானம் போன்ற பயிற்சிகளோடு இணைந்த உளவியல் அணுகுமுறைகள் மூலம் மக்களிடையே சூழல் சார்ந்த பொறுப்புணர்வை வளர்க்க வேண்டும். சமூக ஊடகங்கள் வாயிலாகப் பொதுமக்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் விழிப்புணர்வுத் திட்டங்களை முன்னெடுப்பதுடன், வீடுகளிலேயே கழிவுகளைத் தரம் பிரிக்கும் நடைமுறையைத் தண்டனை மற்றும் ஊக்கத்தொகை முறையினூடாகக் கட்டாயப்படுத்த வேண்டும். மேலும், தூய்மைப் பணியாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள், சுகாதார வசதிகள் மற்றும் உளவியல் ஆதரவை உறுதிப்படுத்துவது அவசியமாகும். பிளாஸ்டிக் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் சட்டங்களைக் கடுமையாக அமுல்படுத்தி, காகிதப் பைகள் போன்ற மாற்றுப் பொருட்களை ஊக்குவிப்பதோடு, நவீன மீள்சுழற்சி தொழினுட்பங்கள் மற்றும் இயந்திரங்களின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும். இறுதியாக, அரச-தனியார் கூட்டுப் பங்களிப்பை வலுப்படுத்துவதுடன், சமூகக் கூட்டமைப்புகள் மூலம் பொதுமக்களுக்கும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கும் இடையே நெருக்கமான ஒத்துழைப்பை உருவாக்குவது நிலையான கழிவு முகாமைத்துவத்திற்கு வழிவகுக்கும்.

கழிவு முகாமைத்துவம் என்பது உள்ளூராட்சி மன்றங்கள் அல்லது அரசாங்கத்தின் பொறுப்பு மட்டுமல்ல; அது ஒவ்வொரு பிரஜையினதும் தார்மீகச் சமூகப் பொறுப்பாகும். யாழ் மாநகர சபை பல்வேறு கழிவகற்றல் திட்டங்களை முன்னெடுத்து வந்தாலும், பொதுமக்களின் முழுமையான ஒத்துழைப்பின்றி அவை வெற்றியடைய வாய்ப்பில்லை. குறிப்பாக, வீடுகளிலேயே கழிவுகளைத் தரம் பிரித்து வழங்குதல், பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வளர்த்தல் போன்ற நடவடிக்கைகள் தனிநபர் ஆரோக்கியத்தோடு உளவியல் நலத்தையும் மேம்படுத்த உதவுகின்றன. சூழலியல் உளவியல் (Environmental Psychology) நோக்கில், மனிதனின் மனநிலையும் சமூக நடத்தையும் அவன் வாழும் சூழலோடு நேரடித் தொடர்புடையவை என்பதால், சுத்தமான சூழலைப் பேணுவது உடல் மற்றும் உளநல முன்னேற்றத்திற்கு இன்றியமையாதாகும். எனவே, அரசு, மாநகர சபை, ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலமே நிலையான கழிவு முகாமைத்துவத்தை எட்ட முடியும்; இதுவே எதிர்கால சந்ததியினருக்குச் சுத்தமான மற்றும் பாதுகாப்பான சுற்றுச்சூழலை உறுதி செய்வதற்கான வழியாகும்.

laksharan.sarawanan@thaiveedu.com

நடராசா சிறிரஞ்சன்

எம்மூர் வரலாறுகளைச் சுவடிப்படுத்துதல்

எமது ஊர்களின் வரலாறுகளைச் சுவடிப்படுத்துதல் அவசியம் என்பதுடன் அது மிக விரைவாகச் செயற்படுத்தப்படுதல் வேண்டும். அதற்குக் காரணம் எமது ஊர்கள் பெருமளவுக்கு மாறிவிட்டன என்பதுடன் தொடர்ச்சியாக மாறி வருகின்றன. ஊர்கள் பெருமளவுக்கு மாறிவிட்டதற்கு முக்கிய காரணம் உள்நாட்டுக்குள் இடம்பெற்ற இடப்பெயர்வுகளும் புலப்பெயர்வு களுமாகும்.

யுத்த காலத்தில் மக்கள் முழுமையாக அல்லது பெருமளவுக்கு, தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த ஊர்களைவிட்டு செல்ல வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அவர்களில் கணி சமானவர்கள் ஆயுதம் மௌனிக்கப்பட்டதன் பின்னரும் தம் சொந்த ஊர்களுக்குத் திரும்பவில்லை.

மறுபக்கத்தில், யுத்ததின்போது ஊர்களில் இருந்த வீடுகள், கட்ட டங்கள், பொருட்கள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் சேதமா கியும், அழிந்தும் விட்டன. சில இடங்களில் தெருக்கள், வீடுகள், காணிகள் போன்றவற்றுக்குள் சென்று அவற்றைப் பார்க்கக்கூட முடியாதளவுக்கு பற்றைகள் வளர்ந்துவிட்டன. வீடு, காணி முதலியவற்றை துப்புரவு செய்து திருத்துபவர்கள் வேலி, படலை, காணி, வீடு போன்றவற்றில், அவை முன்னர் இருந்த நிலைகளில் இருந்தும் பாரியளவு மாற்றங்களைச் செய்கிறார்கள். இதனால் அவை ஒவ்வொன்றிலும் இருந்த தனித்துவம் இழக்கப்படுகிறது. வேலிகள் மதில்களாகவோ, முள்ளுக்கம்பி வேலியாகவோ அல்லது தகர வேலியாகவோ மாறுகின்றன.

இன்னொருபுறத்தில் வீடு, வளவு, வேலி, படலை போன்றவை திருத்தப்படும்போது அல்லது புதிதாகக் கட்டப்படும்போது, அவை முன்னர் இருந்த தன்மையில் இருந்து பெருமளவுக்கு மாறுபட்ட விதத்தில் அமைக்கப்படுகின்றன. இதனால் எமது பண்பாடு பாரம்பரியம் சார்ந்த பற்பல விடயங்கள் மறைந்து போய்விடுகின்றன.

ஊர்களில் முன்னர் இருந்த சனசமூக நிலையங்கள், கிராமச் சங் கங்கள், கமத்தொழில் சங்கங்கள், மீன்பிடிச் சங்கங்கள், நெசவு சாலைகள், விளையாட்டுச் சங்கங்கள், மாதர் சங்கங்கள், கலைக்குழுக்கள் போன்ற இன்னோரன்ன சமூக நிறுவனங்களில் பல தற்போது இல்லாது போய்விட்டன. அதே போன்று ஊர்களில் இருந்த கலை, இலக்கிய, கலாசாரக் குழுக்கள் பலவும் இல்லாது போய்விட்டன.

எமது வாழ்க்கையின் பல்தரப்பட்ட அம்சங்கள் பெருமளவுக்கு மாறிவிட்டன, வேறுசில விடயங்கள் இல்லாது போய்விட்டன. விவசாயம், மீன்பிடி, வணிகம் போன்ற பற்பல தொழில் முறைகள் நவீன இயந்திரத்திங்களின் அறிமுகத்தால் பெருமள வுக்கு மாறிவிட்டன. 'மாற்றம் ஒன்றே மாறாதது' என்பதை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொண்டு வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டோம். இவ்வாறான சூழ்நிலையில் எமது ஊர்களின் வரலாற்றை, குறிப்பாக இடம்பெயர்வுகளுக்கு முன்னர் இருந்த ஊரின் பல்தரப்பட்ட எமது பாரம்பரிய அடையாளங்களைச் சுவடிப்படுத்துதல் அவசியமாகும்.

ஒருசில ஊர்கள் தொடர்பில் நூல்கள் வெளிவந்துள்ளன. அவ்வாறான முன்னோடி முயற்சிகள் வரவேற்கத்தக்கவை, மற்ற வர்களுக்கும் வழிகாட்டியாக இருப்பவை. எவ்வாறாயினும் இவற்றில் சில தத்தமது ஊர்களின் பெருமைகளைப் பேசுவன வாகவே உள்ளன. பெருமைகள் பேசப்பட வேண்டியவைதான், என்றாலும் அவற்றுடன் எமது கலாசாரம், பண்பாடு, தனித்தன் மைகள், வரலாறு, அங்கு இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள், முன்னோடி நிகழ்வுகள், பிரச்சினைகள், அழிவுகள் மற்றும் சவால் ககளைக் கையாண்ட முறைகள் போன்ற இன்னோரன்ன விடயங் களைக் கொண்டவையாக ஊர் வரலாறுகள் அமைதல் வேண்டும்.

எமது ஊருக்கு அண்மையில் ஓர் ஊர் உள்ளது. அது சிறியதொரு ஊர். அந்த ஊரிலிருந்தவர்களில் பெரும்பான்மை யானவர்கள் வணிகர்கள், சிலர் மிகப்பெரும் வணிகர்கள். அந்த ஊர் 1960 - 1980 காலப்பகுதியில் இலங்கையிலேயே தலாவருமான அடிப்படையில் செல்வந்த ஊராக (நகரங்கள் தவிர்த்து) இருந்திருக்கலாம் என்பது ஒரு கணிப்பு. இன்று அந்த ஊர் அவ்வாறு இல்லை. அவ்வூரவர்கள் யாழ்ப்பாணம், கொழும்பு, புலம்பெயர் நாடுகள் என்று பற்பல இடங்களில் வாழு கிறார்கள். அவ்வூரவர் வீடுகளில், முன்னர் உதவியாளர்களாக இருந்தவர்கள்தான் இப்போது அங்கு பெருமளவற்கு வாழ்கின் றனர். அந்த ஊர் ஒருகாலத்தில் பெரும்பணக்கார ஊராக இருந்தது என்று சொன்னால் யாரும் நம்புவார்களா என்பது சந்தேகமே. இது போன்று வெவ்வேறு விடயங்களுக்குப் பேர்போன பல ஊர்கள் இருந்தன, இப்போதும் இருக்கின்றன.

பல ஊர்கள் மக்களே இல்லாமல் காடுபத்திப் போயிருக்கின்றன. உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்த, இப்போதும் இருக்கும் ஊர்களின் நிலை இப்போது எப்படியுள்ளது என்பதே சரியாகத் தெரியாத நிலையுள்ளது. மிக விரைவாக இவற்றின் வரலாறுகள் சுவடிப்படுத்தப்படுதல் வேண்டும். காலம் போகப் போக இவற்றின் வரலாறுகளை நன்கறிந்த முதியோர் இயற்கை எய்திவிடக்கூடும். 'ஒருவர் இறக்கும்போது ஒரு வரலாறும் இறந்து விடுகிறது' என்றதொரு பழமொழி உண்டு. அவர்களின் வாய்வழி அறியவேண்டிய பல விடயங்களை அறிந்துகொள்ள முடியாது போய்விடும்.

ஊர்களின் வரலாறுகளைச் சுவடிப்படுத்துவது தொடர்பில் அறிஞர் பெருமக்கள் ஒன்றிணைந்து ஒரு வழிகாட்டியை உருவாக்கி உதவுதல் வேண்டும். அது, இந்த வரலாற்றுப் பணியை மிக விரைவாகவும், இலகுவாகவும், பயனுள்ள முறையிலும் மேற்கொள்ள பெரிதும் உதவுவதாக அமையும். அவ்வாறு எழுதப்படும் வரலாறுகள் எமது எதிர்காலச் சந்ததியின ராலும், ஆய்வாளர்களாலும் குறிப்பாகச் சர்வதேச ஆய்வாளர்க ளாலும் பயன்படுத்தக்கூடிய விதத்திலும் தரத்தில் அமைதல் வேண்டும்.

Nadarasa.sriranjan@thaiveedu.com

ஓர் ஈழ நாட்குறிப்பு - 4

- ஓவியர் ஜீவா

முல்லைத்தீவிலிருந்து வண்டி சென்றது முள்ளிவாய்க்காலுக்கு. பெயரை கேட்டவுடனேயே சொல்ல இயலாத ஓர் உணர்ச்சியுடன் இதயம் விம்மியது. பரந்த மைதானத்தில் முள்ளிவாய்க்கால் நினைவிடம் சில சின்னங் களின் அடையாளங்களுடன் நின்றுகொண்டிருந்தது. கடல் அலைகளின் பேரோசை காதில் ஒலிக்க சமுத்திர வாடை நிறைந்திருந்த பகுதி!

இலங்கையில் 2009-இல் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை பெற்றன. 30 வருடகால போர் மிகவும் கொடூரமாக முடிவடைந்த இந்தப் பகுதியிலேயே லட்சக்கணக் கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது. போர் உச்சம் பெற்றபோது ஆயிரக்கணக்கான மக்கள் வீடி ழந்து பல்வேறு பகுதிகளிலிருந்து புலிகளின் பிடியில் இருந்த முள்ளிவாய்க்கால் பகுதியை நோக்கி கையில் கிடைத்த பொருட்களுடன், வாகனங்களிலும், கால்நடையாகவும் சென்று குவிந்தனர். லட்சக்கணக்கில் பெரும் மக்கள் சமுத்திரமாக அங்கு கூடியதால், உணவு, நீர், தங்குமிடம் அனைத்துக்கும் கடும் பஞ்சமாகிவிட புலிகளும் செய்வதறியாத நிலைக்கு சென்றுவிட்டனர். அங்கிருந்த வாகனங்களுக்கு அடியிலே குழி தோண்டி தஞ்சம் பெறும் நிலைகளும் ஏற்பட்டன. கடல் மார்க்க மாக வந்த கடற்படையினரும் தரை மார்க்கமாக சுற்றி வளைத்த தரைப்படையினரும் நடத்திய கண்மூடித்தனமான ஷெல் தாக்குதலில் ஆயிரக்கணக்கில்லை, லட்சக்கணக்கான பொதுமக்கள் மாண்டு போனதாகச் சொல்கிறார்கள். செய்வ தறியாது, இறந்து போன சடலங்களின் மீதெல்லாம் ஓடித் தவித்து கடைசியில் ராணுவத்திடமே சரணடைய வேண்டிய நிலை. உலக வரலாற்றில் பெரும் படுகொலைகள் நடந்த இடங்களில் முள்ளிவாய்க்காலும் ஒன்று என்று பெயர் பெற்றது.

இன்று கடற்கரையெங்கும் உடைந்து துருப்பிடித்த பழைய வாகனங்கள், உருளைகள், பெரிய வாகனங்களின் துண்டுப் பகுதிகள் என்று பழுப்பு நிறத்தில் அந்த கொடூர நினைவு களின் எச்சங்களாக காட்சி தந்துகொண்டிருக்கின்றன.

அடுத்த நாள் எழுத்தாளர் தீபச்செல்வன், தான் பணியாற்றும் கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரிக்கு என்னை அழைத்திருந்தார். தீபச்செல்வனை நீண்ட நாட்களாக அறி முகம் இருந்தாலும் இதுதான் நேரில் முதல் சந்திப்பு. அவ ருடைய நூல்களுக்காக அவரை பல கோட்டோவியங்கள் வரைந்து தந்திருக்கிறேன். அவரது நூல் வெளியீட்டு விழா சென்ற வருடம் ரொறன்ரோவில் நடைபெறும்போது இலங் கையில் இருந்த அவருடன் தொலைபேசியிலும் கதைத்திருக் கிறேன். கல்லூரி என்ற வார்த்தை அங்குள்ள பள்ளிகளுக் குதான் பயன்படுத்துகிறார்கள். கல்லூரிகளுக்கு பல்கலைக் கழகம் என்று பெயர். நான் சென்ற அன்று பள்ளியிறுதி மாண வர்களுக்கு இறுதித்தேர்வுக்கான ஹால் டிக்கெட் தரும் தினம். அரசுப்பள்ளியான அங்கு அன்று நிறுவப்பட்டிருந்த சுமார் பத்தடி உயரமுள்ள சரஸ்வதி சிலை முன்பு மாணவர்கள் அடுப்பு மூட்டி பொங்கல் வைத்துக்கொண்டிருந்தனர். அந்த வழிபாடு முடிந்தவுடன் ஹால் டிக்கெட்டுகள் வழங்கப்படும். சரஸ்வதி சிலை அருகே சிறிய அளவில் பாரதியார் சிலை ஒன்றும் இருப்பதைக் கண்டு வியந்தேன்.

tg.theeban@gmail.com

தமிழ்நாட்டில் எங்கள் ஊரை சார்ந்த அரசு பள்ளிகளுக்கெல்லாம் நான் சென்றிருக்கிறேன். சில சமூக ஆர்வலர்களுடன் இணைந்து அரசு பள்ளி சுவர்களில் ஓவியங்கள் வரைந்து பள்ளியை அழகுபடுத்தும் பணியில் அடிக்கடி ஈடுபடுவதால் இந்த அனுபவம். பொதுவாக இங்கு அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் மிக அதிகம். தரமான கல்வி தரும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் இவர்கள் வாங்கும் ஊதியத்தில் மூன்றில் ஒரு பங்கு கூட பெறுவதில்லை. அரசு பள்ளிகளில் அரசு பள்ளி ஆசிரியர்களே தங்கள் குழந்தைகளைச் சேர்ப்பதில்லை. கல்வித் தரமும் மெச்சும்படி கிடையாது. இலங்கையில் நான் அரசு பள்ளிகளை கண்டபோது ஆச்சரியத்தில் ஆழ்ந்தேன். இந்தியாவிலுள்ள தனியார் பள்ளிக்கூடங்களுக்கு இணையான கட்டட வசதிகள், நல்ல வகுப்பறைகள், தரமான ஆசிரியர்கள் இருப்பதை கண்டேன்.

கல்விக்கூடத்தின் அசெம்பிளி ஹாலில் காலை பிரார்த்தனையின்போது மாணவர்களிடம் உரையாற்றும் வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டது. தேவாரப் பாடலொன்றும், கத்தோலிக்க இறை வணக்கம் ஒன்றையும் மாணவிகள் இனிமையாக பாடியபின் தீபச்செல்வன் என்னை அறிமுகப்படுத்தி பேசினார். பேராசிரியர் விவேகானந்தனின் அருமையான உரைக்கு பிறகு ஓவியக் கலை குறித்து நானும் பேசினேன். பள்ளியின் அதிபர் (முதல்வர்) என்னுடைய வருகைக்கு நன்றி தெரிவித்தார். இந்த நிகழ்வுக்கு பிறகு மாணவர்களுக்கான ஓவியப்பட்டறை ஒன்றை நிகழ்த்தினேன். மனித உருவங்கள் வரைவது எப்படி என்ற அறிமுகத்துடன் நானும் வரைந்து மாணவர்களையும் வரைய வைத்து திருத்தியும் தந்தேன். பிறகு மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து அவர்களையும் இன்னொரு ஆசிரியரையும் ஓரிரு நிமிடங்களில் வரைந்து காட்டினேன். அவர்களுடைய ஓவிய ஆசிரியை ஓவியக்கல்லூரியின் பட்டப்படிப்பு படித்தவர். அவர் இந்த நிகழ்வின் பெருந்துணையாக திகழ்ந்தார். தீபச்செல்வன் அந்த கல்விக்கூடத்தில் 'ஊடகம்' குறித்து பாடங்கள் எடுக்கிறார். ஒரு புகழ் பெற்ற எழுத்தாளர் அங்கு பாடம் நடத்துவது மாணவர்கள் செய்த பாக்கியம். மேலும் அங்கு சைவ நெறி கூட ஒரு பாடமாக இருப்பது எனக்கு பெரும் ஆச்சரியம்.

இந்த நிகழ்வு நிறைவு பெறும்போது தாய்வீடு ஆசிரியர் டிலிப் குமாரும் கிளிநொச்சி வந்து கல்விக்கூடத்தில் எங்களுடன் சேர்ந்து கொண்டார்.

அன்றுதான் ஓவியர் மருது அவர்கள் தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணம் வருகிறார் என்பதால் அனைவரும் அவரை வரவேற்க யாழ். விமான நிலையத்திற்கு கிளம்பினோம். குறித்த நேரத்திற்கு விமானம் கீழே இறங்கிவிட்டாலும் தொழினுட்ப கருவிகள் வேலை செய்யாததால் இமிகிரேஷன் சடங்குகள் கொஞ்சம் நேரத்தை இழுத்துவிட்டன. மதிய உணவு கிளிநொச்சி பெரிய பரந்தன் விவேகானந்தன் சகோதரி வீட்டில் தயாராக இருந்ததால் அனைவரும் திரும்பி வந்தோம். முந்தைய தினம் முல்லைத்தீவிலிருந்து வாங்கி வந்திருந்த மீன் வகைகளின் அற்புதமான விருந்துக்கு பிறகு அடுத்த பயணத்துக்கு புறப்பட்டுவிட்டோம்.

திருகோணமலை செல்லும் வழியில் இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள ஹொரவப்பொத்தானை என்ற ஊரில் ஒரு டீக்கடையில் ஒதுங்கினோம். எங்கு சென்றாலும் அந்த ஊரில் சிறப்பு வாய்ந்த நொறுக்குத் தீனிகளை உண்டு மகிழ்வது நம் மரபல்லவா! அங்கு கிடைத்த வடை, சமோசா, பர்பி, ரோல்ஸ், அல்வா என்று எதையும் விட்டு வைக்காமல் தின்று ஒரு தேநீரையும் அருந்தி பயணத்தை தொடர்ந்தோம். அந்தி சாயும் நேரம் திருகோணமலையை அடைந்தோம். அங்கு கனடாவில் இருக்கும் ஒரு நண்பரின் வீடு எங்களுக்கான இரவுத்தங்கலுக்கு காத்திருந்தது. அங்கு ஆசுவாசப்படுத்திக்கொண்டு திருகோணமலையின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு குகதாசனின் அலுவலகத்திற்குப் புறப்பட்டோம். அவர் எங்களை இரவு உணவிற்காக அழைத்திருந்தார்.

குகதாசன் நீண்ட காலம் கனடாவில் தமிழாசிரியராக பணியாற்றியவர். அங்கு அரசியலிலும் சமூக சேவையிலும் பெரும் ஈடுபாடு கொண்டவர். இரட்டை குடியுரிமை பெற்று இலங்கையில் திரிகோணமலை தொகுதியில் தேர்தலில் நின்று வென்றவர். மக்கள் அன்பை பெற்றவர். மிகவும் எளிமையானவராக தோற்றமளித்தார். அவரே எங்களை அமரவைத்து உணவு பரிமாறினார். மருது அவர்களுக்கு ஏற்கனவே அறிமுகமானவர் என்பதால் மகிழ்ச்சியோடு உரையாடல் தொடர்ந்தது.

திருகோணமலையில் காலையில் ஊரைச் சுற்றிப்பார்க்கலாம் என்று நண்பர்களோடு நடைப்பயணம் கிளம்பினோம். அங்கு தெருக்களில் கண்ட காட்சி பெரும் ஆச்சரியத்தை தந்தது. இங்கு தெருநாய்கள் வீதிகளில் சுற்றுவதைப்போல அங்கு புள்ளிமான்கள் தெருவில் திரிகின்றன. பக்கத்தில் சென்று பெரும் ஆவலுடன் அவற்றைத் தடவினோம். பேருந்து நிலையம் சென்றால் அங்கு ஏராளமான புள்ளிமான்கள் குப்பைகளையும் உணவக மிச்சம் மீதிகளை தின்றுகொண்டு

அலைந்துகொண்டிருந்தன. வழக்கம்போல தேநீர்க்கடையில் புதுமையான உணவுவகை ஏதாவது இருக்கிறதா என்று தேடியதில் கிடைத்தது லவேரியா. இடியாப்பம் போல அரிசி மாவை பிழிந்து தேங்காய் துருவல், கருப்பட்டி குழைத்தது, ஏலக்காய் எல்லாம் நிரப்பிய ஒரு சிற்றுணவு. அருமையாக இருந்தது. அருகிலேயே மீன் சந்தையை ஒட்டிய அழகிய கடற்கரை, மீன வர்கள் வாழும் சிறிய குடியிருப்புகள், மீன் குடோன்கள், தூரத்தில் கடலை ஒட்டிய குன்றின் உச்சியில் தெரியும் கோவில் என்று அற்புதமான காட்சிகளோடு கழிந்தது காலை.

இலங்கைப்பயணத்தில் நான் வெகுவாக தேடியது திரைப்பட போஸ்டர்களைதான். இங்கு போல பரவலாக திரைப்பட சுவ ரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கும் என்ற நினைப்பில் ஏமாற்றம் தான். அப்படியும் கண்களில் விளக்கெண்ணெய் விட்டு ஒரு போஸ்டரை கண்டுபிடித்தேன், அது 'மை லார்ட்' என்ற, சசி குமார் நடித்த தமிழ்ப் படத்தின் போஸ்டர். அச்சிடப்படாமல், வண்ண மைகளைக்கொண்டு கையால் எழுதப்பட்ட போஸ் டர்! இந்த சுவர்களை நாசம் செய்யாத பண்பு என்னை மிக வும் கவர்ந்தது!

திருகோணமலையில் முக்கியமாக பார்க்கவேண்டிய ஓர் இடம் கடலின் அருகே குன்றின் மீதிருக்கும் திருக்கோணேச்சரம் கோவில். தற்போதுள்ள வரலாற்றுப் பதிவுகளின்படி தென் கைலாசம் என்றழைக்கப்படும் இந்தக் கோவில் பொ.ஆ. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து செழிப்பான நிலையில் இருந்த தாகக் குறிப்பிடப்படுகிறது. 1624-இல் போர்த்துக்கேயரால் இக்கோயில் அழிக்கப்பட்டது. பல காலம் சிதைந்த நிலை யில் காணப்பட்ட இக்கோயில், 1952-இல் மீண்டும் கட்டப் பட்டு உயர்ந்து நிற்கிறது. ஒரு புறம் திருகோணமலை நகரம், இன்னொரு பக்கம் உலகின் இயற்கை துறைமுகங்களில் நான்காவது பெரியது என்று சொல்லப்படும் கோகர்ண விரி குடா, மூன்றாவது பக்கம் இந்திய பெருங்கடல் என்ற சங்கம பிரதேசத்தில் அமைந்திருக்கிறது இந்த பாடல் பெற்ற ஸ்தலம். ஒரு காலத்தில் டச்சுக்கோட்டையாக இருந்த பகுதி தான் இந்த குன்றின் நுழைவாயிலாகத் திகழ்கிறது. குன்று ஏற ஏற இரு பக்கமும் சிறிய கடைகள் நினைவுப்பொருட்களும் விளையாட்டு பொம்மைகளும் விற்றுக்கொண்டிருக்கின்றன. அங்கங்கே மேயும் மான்களும் உண்டு. அழகான கோவில். கோவிலை ஒட்டிய வெளிகளிலிருந்து கீழே பார்த்தால் கட லின் அழகிய தோற்றம். ஞான சம்பந்தரும் அருணகிரிநா தரும் வியந்து ப ஸ்தலம்! இலங்கையின் முக்கியமான திருக் கோவிலான இதை இராவணன் வழிபட்டான் என்று சொல் வார்கள். இரண்டு பெரும் பாறைகள் பிளந்து நிற்கும் இடத் திற்கு பெயரே இராவணன் வெட்டு!

திருஞானசம்பந்தர் இயற்றிய தேவாரப் பதிகம்,

'நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும் நிமலர்நீ
றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர்
கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு மளப்பருங்
கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங் கோணமா
மலையமர்ந் தாரே.'

என்று இந்த ஆலயம் குறித்து போற்றுகிறது!

அங்கிருந்து வரும் வழியில் சூர்யநாராயணர் கோவிலுக்குள் ளும் சென்று பார்த்தோம். பழைமை சிறிதும் தென்படாத பள பளக்கும் ஆலயம். புதிதாகக் கட்டப்பட்டது என்று சொன் னார்கள். இயற்கை துறைமுகத்தையும் கண்டு வியந்தோம். பல நாடுகள் இந்தத் துறைமுகத்தைக் குறி வைத்திருப்பதாக நண்பர்கள் சொன்னார்கள். அவ்வளவு நேர்த்தியான, ஏராள மான கப்பல்கள் நிறுத்த வசதியான கடற்பரப்பு!

பயணம் தொடர்ந்தது, வழியில் கன்னியா வெந்நீரூற்றுகள் வரவேற்றன. அதுவும் ஒரு டூரிஸ்ட் இடமாக ஏராளமான சிறு கடைகளுடன் காட்சியளித்தது. உள்ளே நுழைய கட்டணம் உண்டு. வெளிநாட்டினருக்கு 5 மடங்கு கட்டணம். நாங்கள் அந்த நாட்டை சேர்ந்தவர்கள் போலவே இருந்ததால் அதே கட்டணத்தில் உள்ளே நுழைந்தோம். தொட்டிகளை போன்ற அமைப்பில் ஏழு நீரூற்றுகள். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சூட்டில் வெந்நீர் கொப்பளித்துக்கொண்டிருந்தது. பக்கெட்டு களில் மொண்டு மேலே ஊற்றி களிக்கலாம்! அங்கு பாது காவலராக இருந்தவர் ஒரு தமிழ்ப்பெண்!

jeeva@thaiveedu.com

பச்சைமைப் புரட்சி: இளைஞர்களின் தைரியத்தில் புதிய முகம்

பழனிநாதன் நிவேதனன்

ஒரு காலத்தில் சமூகத்தின் விளிம்புநிலை மனிதர்களினதும், சட்ட ஒழுங்கு சார்ந்த சிக்கல்களில் தொடர்புடையவர்களினதும் எதிர்மறை அடையாளமாக பார்க்கப்பட்ட 'பச்சை குத்துதல்' (Tattooing), இன்று உலகளாவிய இளைஞர்களிடையே ஒரு நவீன கலை வடிவமாகவும், சுய வெளிப்பாட்டின் வலிமையான ஊடகமாகவும் உருவெடுத்துள்ளது. அன்று சமூகத்தால் விலக்கப்பட்ட ஒரு பழக்கமாக ஒதுக்கப்பட்ட இக்கலை, இன்று எப்படி ஒரு நாகரிக வெளிப்பாடாகப் பரிணமித்தது? இம்மாற்றத்தின் பின்னணி, அதற்கான சமூகக் காரணிகள் மற்றும் அதன் விளைவுகள் குறித்து இக்கட்டுரை ஒரு சமூகவியல் கண்ணோட்டத்தில் ஆழமாகப் பகுப்பாய்வு செய்கிறது.

பச்சைமைப் புரட்சி:

இன்று நீங்கள் ஒரு கல்வி வளாகத்திற்கோ நகரின் பொது இடங்களுக்கோ சென்றால், இளைஞர்களின் தோல்களில் செதுக்கப்பட்டுள்ள சிக்கலான ஓவியங்கள், அர்த்தமுள்ள பெயர்கள் அல்லது ஆன்மீகக் குறியீடுகள் நிரந்தரமாகப் பதிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஒரு காலத்தில் கலகத்தின் அடையாளமாக அல்லது குற்ற உலகின் முத்திரையாகப் பார்க்கப்பட்டவை, இப்போது சுய வெளிப்பாட்டின் பிரதான ஊடகமாக மாறியுள்ளது. ஆனால், இத்தனை இளைஞர்கள் தங்கள் உடல்களை ஏன் ஒரு 'ஓவியத் திரையாக' மாற்ற விரும்புகிறார்கள்? இது இன்றைய இளைஞர் பண்பாட்டைப் பற்றி என்ன சொல்கிறது?

உப-பண்பாடும் அடையாள உருவாக்கமும்:

ஐக்கிய நாடுகள் சபையின் வரையறைப்படி, உலக மக்கள் தொகையில் சுமார் 16 சதவீதம் (அதாவது 1.2 பில்லியன்) பேர் 15 முதல் 24 வயதுக்குட்பட்ட (இலங்கை போன்ற நாடுகள் 29 அல்லது 35 வரை நீட்டித்தாலும்) இளைஞர்கள் ஆவர். இவர்கள் ஆற்றலும் ஆக்ரோஷமான இயக்க குணமும் கொண்டவர்கள். இளமை என்பது குழந்தைப் பருவத்திற்கும் முதிர் வயதிற்கும் இடையிலான பாலமாகும், இது தீவிர அடையாள உருவாக்கத்தின் காலமாகும். பெரும்பாலும், இவர்களின் பண்பாடு முதன்மைப் பண்பாட்டிலிருந்து வேறுபடுகிறது, இதை சமூகவியலாளர்கள் 'உப-பண்பாடு' (subculture) என அழைக்கிறார்கள். இந்த உப-பண்பாட்டுக்குள், பச்சை குத்துதல் ஒரு உலகளாவிய போக்காக உருவெடுத்துள்ளது.

5,000 வருட பழைமையான நடைமுறை:

பச்சை குத்துதல் புதியது அல்ல. இது கிட்டத்தட்ட 5,000 ஆண்டுகள் பழைமையான கலை. 3300-இல் வாழ்ந்த 'ஓட்சி பனிமனிதன்' என்பவனின் உடலில் பச்சை குத்தல்கள் இருந்தன, அவை பெரும்பாலும் மருத்துவ நோக்கங்களுக்காக செய்யப்பட்டிருக்கலாம். பண்டைய எகிப்தியர்கள் பச்சை குத்துதலைப் பயன்படுத்தினர், மேலும் இந்த நடைமுறை தென்னிந்தியா வழியாக கிரீஸ், அரேபியா மற்றும் ஜப்பான் வரை பரவியது.

இருப்பினும், வரலாறு பச்சை குத்துதலுக்கு கெட்ட பெயரைக் கொடுத்துள்ளது. பண்டைய கிரேக்கர்களும் ரோமானியர்களும் அடிமைகளுக்கும் குற்றவாளிகளுக்கும் பச்சை குத்தினார்கள், அவற்றை ஸ்டிக்மாட்டா (இழிவு முத்திரை) என்று அழைத்தார்கள். நூற்றாண்டுகளாக,

prasadbatti@gmail.com

பச்சை குத்துதல் கைதிகள் மற்றும் ஒதுக்கப்பட்டவர்களுடன் தொடர்புபடுத்தப்பட்டது. 18-ஆம் நூற்றாண்டில், கேப்டன் குக் போன்ற பிரிட்டிஷ் ஆய்வாளர்கள் பாலினேசிய கலாசாரங்களில் பச்சை குத்துதலைக் கவனித்தபோது, டாட்டூ (Tattoo) என்ற சொல்லை உருவாக்கினார். 1891-இல், சாமுவேல் ஓ'ரெய்லி முதல் மின்சார பச்சை குத்தும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். ஆனால் 20-ஆம் நூற்றாண்டின் பெரும்பகுதிக்கு, பச்சை குத்துதல் மாலுமிகள், பைக்கர் கும்பல்கள் மற்றும் கைதிகளுடன் மட்டுமே தொடர்புபடுத்தப்பட்டது.

பெரும் மாற்றம்: களங்கத்திலிருந்து ஃபேஷனுக்கு என்ன மாற்றம் ஏற்பட்டது? கடந்த 30 ஆண்டுகள் ஒரு வியத்தகு மாற்றத்தைக் கண்டுள்ளன. 1960 - 70-களில், இசை மற்றும் கலை கலாசாரங்கள் பச்சை குத்துதலைத் தழுவத் தொடங்கின. 1980 - 90-களில், பச்சை குத்துதல் வர்க்க எல்லைகளைக் கடக்கத் தொடங்கியது. இன்று, அமெரிக்காவில் 20%-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் குறைந்தபட்சம் ஒரு பச்சை குத்தியுள்ளனர். ஐரோப்பாவில், இந்த எண்ணிக்கை 15% முதல் 25% வரை இருக்கிறது.

ஆனால், இந்த உயர்வு சர்ச்சையின்றி இல்லை. இத்தாலி, மெக்சிகோ, துருக்கி, ஜெர்மனி மற்றும் தென் கொரியா போன்ற நாடுகளின் ஆராய்ச்சிகள் ஒரு சிக்கலான படத்தைக் காட்டுகின்றன. பல இளைஞர்களுக்குப் பச்சை குத்துதல் என்பது, 'நான் யார்' என்று சொல்வதற்கான ஒரு வழியாகவும், உடல் ஓர் ஓவியத் திரையாக (Canvas) மாறும் கலை மற்றும் அலங்காரமாகவும் அமைகிறது. மேலும், சில குழுக்கள், மோட்டார் சைக்கிள் சங்கங்கள் மற்றும் இசை ரசிகர்கள் தங்களின் குழு அடையாளத்தை வெளிப்படுத்தவும் இதைப் பயன்படுத்துகின்றனர். அதுமட்டுமன்றி, இந்துக் கடவுள்கள் முதல் கிறிஸ்தவச் சிலுவைகள் வரை, பச்சை குத்துதல் ஒருவரின் ஆழ்ந்த ஆன்மீக அல்லது கலாசார நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறது.

ஊசியின் இருண்ட பக்கம்:

பச்சை குத்துதல் ஒரு நவீன நாகரிகமாகப் பரவி வந்தாலும், குறிப்பாக இலங்கையின் தமிழ் சமூகம் போன்ற பாரம்பரியச் சமூகங்களில் நிலவும் கடுமையான சவால்களை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததற்குப் பின்னரான காலப்பகுதியில், தமிழ் இளைஞர்களிடையே பச்சை குத்தும் வழக்கம் கணிசமாக அதிகரித்துள்ளது. உலகமயமாக்கல், சமூக ஊடகங்களின் தாக்கம் மற்றும் புலம்பெயர்வு மூலம் வெளிநாட்டுக் கலாசாரங்களுடன் ஏற்பட்ட நேரடித் தொடர்பு ஆகியவை இதற்குக் காரணங்களாக அமைகின்றன. இருப்பினும், தமிழ் கலாசாரச் சூழலில் பச்சை குத்துதல் என்பது இன்றும் பெரும்பாலும் ஓர் 'விலகல் நடத்தை' (Deviant behavior) ஆகவே கருதப்படுகிறது. அதாவது, இது பொதுவான ஒழுக்க எல்லைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு செயலாகவே பார்க்கப்படுகிறது.
இளைஞர்களை பச்சை குத்தத் தூண்டும் பல 'உந்து காரணிகள்' வருமாறு:

- குடும்ப கண்காணிப்பு குறைவு: ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள் அல்லது புறக்கணிப்பு நிறைந்த வீடுகள் பெரும்பாலும் இளைஞர்களை வேறு இடங்களில் அடையாளம் தேட வைக்கின்றன.
- நண்பர்களின் செல்வாக்கு: பச்சை குத்திய நண்பர்கள் மற்றவர்களையும் ஊக்குவிக்கிறார்கள்.
- பாடசாலை இடைவிலகல்: பள்ளியை விட்டு வெளியேறுவது ஒழுங்கற்ற நேரத்தையும் எதிர்மறைத் தாக்கங்களையும் உருவாக்குகிறது.
- ஊடகம் & உலகமயமாக்கல்: Facebook, Instagram, YouTube, திரைப்படங்கள் பச்சை குத்துதலைக் கவர்ச்சிகரமாகக் காட்டுகின்றன. ஒரு பிரபல நடிகரையோ செல்வாக்காளரையோ பச்சையுடன் பார்ப்பது ஒரு வலுவான ஆசையை உருவாக்குகிறது.
- தனிப்பட்ட காரணிகள்: காதல் (காதலியின் பெயரைக் குத்துதல்), ஃபேஷன், 'கெத்து' (coolness), அல்லது காதல் தோல்வி யிலிருந்து மீள்வது.

நிரந்தர மையின் கனமான விலை:

பாரம்பரிய சமூகங்களில், குறிப்பாக இலங்கையில், பச்சை குத்திய இளைஞர்களின் விளைவுகள் கடுமையானவை. ஆய்வு இவற்றை நான்கு பகுதிகளாகப் பிரிக்கிறது:

- சமூக விளைவுகள்: பச்சை குத்தியவர்கள் பெரும்பாலும் சமூகக் களங்கத்தை எதிர்கொள்கிறார்கள். அவர்கள் 'ரவுடி', 'கிரிமினல்', அல்லது 'விலகல் நடத்தை கொண்டவர்கள்' என்று முத்திரை குத்தப்படுகிறார்கள். அவர்கள் சமூக புறக்கணிப்பு, விமர்சனம், மற்றும் ஆதரவின்மையை எதிர்கொள்கிறார்கள். தீவிர நிகழ்வுகளில், இது மனச்சோர்வு மற்றும் தற்கொலை எண்ணங்களுக்கு வழிவகுக்கிறது. மெக்சிகோவில், 31% இளைஞர்கள் தங்கள் பச்சை குத்தல்களால் வேலை பாகுபாட்டை எதிர்கொண்டதாகத் தெரிவித்துள்ளனர்.
- பொருளாதார விளைவுகள்: புலப்படும் ஒரு பச்சை குத்துதல் வேலை வாய்ப்புகளை மூடும். இலங்கையில், பச்சை குத்துதல் ஓர் இளைஞரை அரச வேலைகளில் (போலீஸ், இராணுவம், சிறைக் காவலர்) தகுதி நீக்கம் செய்யும். இது வேலையின்மை, வறுமை மற்றும் கடனுக்கு வழிவகுக்கிறது. பல இளைஞர்கள் பச்சை குத்தப் பணம் கடன் வாங்கி, திருப்பிச் செலுத்த முடியாமல் வறுமைச் சுழலில் சிக்குகிறார்கள்.
- உடல்நல அபாயங்கள்: பாதுகாப்பற்ற முறையில் பச்சை குத்துவது கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும்:
  - தொற்றுகள்: கிருமி நீக்கம் செய்யப்படாத ஊசிகளால் எச்.ஐ.வி / எய்ட்ஸ் மற்றும் ஹெபடைட்டிஸ்.
  - ஒவ்வாமை மற்றும் தோல் நோய்கள்: மைக்கான எதிர்வினைகள், கீலாய்டுகள் (தழும்புகள்), கடுமையான அழற்சி.
  - கன உலோக நச்சுத்தன்மை: மலிவான மைகளில் பெரும்பாலும் புற்றுநோயை உண்டாக்கும் கன உலோகங்கள் உள்ளன, அவை சிறுநீரக நோய், நரம்பு சேதம், மற்றும் தோல் புற்றுநோயைக்கூட ஏற்படுத்தும்.
  - பிற பிரச்சினைகள்: இரத்தப்போக்கு, குமட்டல், மயக்கம்.
- உளவியல் விளைவுகள்: களங்கம் கவலை, மன அழுத்தம், விரக்தி, தனிமை, கோபம் மற்றும் பயத்திற்கு வழிவகுக்கிறது. ஆய்வில் ஒரு மிகவும் வேதனையான கண்டுபிடிப்பு: சில இளைஞர்கள் காதலியின் பெயரைப் பச்சை குத்துகிறார்கள், உறவு முறிந்ததும், அந்த மையை அகற்ற முடியாமல், பச்சை குத்திய இடத்தை எரித்தல்

அல்லது வெட்டுதல் போன்ற சுய தீங்கு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

வடிவமைப்புகள் மற்றும் அர்த்தங்கள்:

என்ன வடிவங்களை அவர்கள் குத்துகிறார்கள்? ஆய்வு பட்டியலிடுகிறது: சிலுவைகள், தேள், சிலந்தி வலைகள், இதய வடிவங்கள், கஞ்சா இலைகள், பெற்றோர் அல்லது உடன்பிறந்தவர்களின் பெயர்கள், கடவுள்கள் (சிவன், இயேசு), கடற்கன்னிகள், மற்றும் ராக்ஷஸ உருவங்கள் கூட.

சுவாரஸ்யமாக, ஆராய்ச்சி ஒரு புதிய போக்கைக் கண்டறிந்தது: மதக் கலப்பு (syncretism). சில இளைஞர்கள் ஒரு கையில் இந்துக் கடவுளையும், மற்றொரு கையில் கிறிஸ்தவ சிலுவையையும் பச்சை குத்துகிறார்கள். காரணம் கேட்டபோது, அது 'மத சகிப்புத்தன்மையை' காட்டுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் ஆய்வு குறிப்பிடுவது, பலருக்கு இது ஆழ்ந்த நம்பிக்கை அல்ல; இது வெறுமனே கெத்து (ஸ்டைல்) அல்லது அலங்காரம் மட்டுமே.

வேறு சிலர் தங்கள் தொழிலின் கருவிகளை (உதாரணமாக, ஒரு தைப்பவருக்கு கத்தரிக்கோல்) பச்சை குத்தி, 'தொழில் பக்தியை' காட்டுகிறார்கள். சிலர் முறிந்த காதலைக் குறிக்க முட்கம்பி வடிவத்தைக் குத்துகிறார்கள். சிலர் தங்கள் அடிமை நிலை அல்லது போதைப் பழக்கத்திலிருந்து வெளியேற முடியாத நிலையைக் காட்ட கஞ்சா இலையைக் குத்துகிறார்கள்.

அடையாள உருவாக்கம்:

இந்த நிகழ்வை விளக்க இரண்டு முக்கிய சமூகவியல் கோட்பாடுகளைப் பயன்படுத்தலாம்:

- குறியீட்டு இடைவினைவாதம் (ஹெர்பெர்ட் மீட்): இந்தக் கோட்பாடு நாம் குறியீடுகள் மூலம் தொடர்புகொள்கிறோம் என்று கூறுகிறது. இந்த இளைஞர்களைப் பொறுத்தவரை, உடல் ஒரு விளம்பரப் பலகை (billboard) ஆகும். ஒரு பச்சை குத்துதல் வெறும் மை அல்ல; அது ஒரு கதையைச் சொல்லும் குறியீடு - 'நான் ஒரு தப்பிப்பிழைத்தவன்', 'நான் ஒரு பக்திமான்', அல்லது 'நான் தனித்துவமானவன்'.
- சுவை கோட்பாடு (பியர் போதியூ): சுவை என்பது சமூக ரீதியில் கட்டமைக்கப்படுகிறது. இளைஞர்கள் பச்சை குத்துதலைப் பயன்படுத்தி, முதிய தலைமுறையினரிடமிருந்தும், முதன்மைப் பண்பாட்டிலிருந்தும் தங்களை வேறுபடுத்திக் காட்டுகிறார்கள். இது ஒரு புதிய அடையாளத்தை - பாரம்பரிய குறியீடுகளையும் நவீன கலகத்தையும் கலக்கும் ஒரு 'கலப்பொட்டு அடையாளத்தை' உருவாக்குகிறது.

என்ன செய்ய வேண்டும்?

பச்சை குத்துதலை வெறுமனே கண்டிப்பது மட்டும் பதில் அல்ல. மாறாக, இளைஞர்களின் சுயாட்சியை மதிக்கும்போதே அவர்களைப் பாதுகாக்க ஒரு பலதரப்பட்ட அணுகுமுறை தேவை.

- கல்வியே முக்கியம்: ஒரு குழந்தை பச்சை குத்த முடிவு செய்வதற்கு முன்பே பள்ளிகள் உடல்நல அபாயங்கள் (எச்.ஐ.வி, புற்றுநோய், தொற்றுகள்) மற்றும் சமூக / பொருளாதார விளைவுகளைக் கற்பிக்க வேண்டும்.
- குத்துவதற்கு முன் சிந்தியுங்கள்: இளைஞர்கள் நீண்ட காலம் சிந்திக்க ஊக்குவிக்கப்பட வேண்டும். இந்த பச்சை குத்துதல் எனக்கு ஒரு வேலை இழப்பை ஏற்படுத்துமா? எனக்கு 40 வயதாகும்போது, என் கழுத்தில் என் பாட்டியின் பெயரை நான் விரும்புவேனா?
- சுகாதாரமே முக்கியம்: ஓர் இளைஞர் பச்சை குத்திக் கொள்ளவே விரும்பினால், அவர் ஒரு தொழில்முறை கடைக்குச் செல்ல வேண்டும், அங்கு புதிய ஊசிகள், கையுறைகள், மாஸ்க்குகள் மற்றும் கரிமயமாக்கப்பட்ட உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நண்பர்களின் வீடுகள் அல்லது 'வீட்டில் தயாரிக்கப்பட்ட' பச்சை குத்துதல்களைத் தவிர்க்க வேண்டும்.
- குடும்ப மற்றும் சமூக ஆதரவு: பெற்றோர்களும் சமூகங்களும் பச்சை குத்திய இளைஞர்களை உடனே ஒதுக்கித் தள்ளக்கூடாது. அவர்களைத் தள்ளிவிடுவது மனச்சோர்வையும் அபாயகரமான நடத்தையையும் அதிகரிக்கிறது. அதற்குப் பதிலாக, திறந்த உரையாடலும், உளவியல் ஆலோசனையும் உதவும்.
- சட்ட ஒழுங்குமுறை: மேற்கத்திய நாடுகளைப் போலவே, அரசாங்கங்கள் மருத்துவப் பாதுகாப்புத் தரங்களை உறுதிப்படுத்த பச்சை குத்தும் கடைகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று ஆய்வு பரிந்துரைக்கிறது.

தோலுக்கு அடியில் உள்ள உண்மை:

இளைஞர்களிடையே பச்சை குத்துதல் எங்கும் போவதில்லை. இது ஒரு முக்கிய உலகளாவிய உப-பண்பாடாக மாறிவிட்டது. இளைஞரைப் பொறுத்தவரை, அது அடையாளத்தை உருவாக்குவதற்கும், காதலை வெளிப்படுத்துவதற்கும், பக்தியைக் காட்டுவதற்கும், அல்லது வெறுமனே 'கெத்தாக' இருப்பதற்குமான ஒரு கருவியாகும். பெற்றோர்களுக்கும் சமூகத்திற்கும், இது பெரும்பாலும் பாரம்பரியத்திற்கு அச்சுறுத்தலாகவும், உடல்நல அபாயமாகவும், கலகத்தின் அடையாளமாகவுமே தெரிகிறது.

உண்மை இவற்றுக்கு இடையில் எங்கோ உள்ளது. ஒரு பச்சை குத்துதல் என்பது ஒரு நிலையற்ற மனநிலையில் எடுக்கப்படும் ஒரு நிரந்தர முடிவாகும். இது ஓர் அழகான கலை வடிவமாகவும், சுய வெளிப்பாட்டின் செல்லுபடியாகும் வழியாகவும் இருக்க முடியும் என்றாலும், ஆராய்ச்சி தெளிவாகக் காட்டுகிறது: இலங்கையின் தமிழ்ச் சமூகம் போன்ற சமூகங்களில், சமூக மற்றும் பொருளாதாரச் செலவுகள் இன்னும் மிக அதிகமாகவே உள்ளன. குறிக்கோள், இந்தக் கலையை ஒழிப்பதாக இருக்கக்கூடாது, மாறாக, இளைஞர்களை பாதுகாப்பான, புத்திசாலித்தனமான முடிவுகளை எடுக்க வழிநடத்துவதாக இருக்க வேண்டும் - இதனால் அவர்களின் உடலில் உள்ள மை அவர்களின் வாழ்க்கையின் துயரக் கதையாக அல்லாமல், அதிகாரப்படுத்தலின் கதையாக அமையும்.

nivethanan.p@thaiveedu.com



அருள்கார்க்கி

அல்காரித ஏகாதிபத்தியம்

தகவல் யுகத்தில் நாம் வாழ்வதாகக் கருதினாலும், உண்மையில் நாம் 'கவனம் சார்ந்த பொருளாதார' யுகத்திலேயே வாழ்கிறோம். இங்கு தரவுகளை விடவும், மனிதர்களின் 'நேரம்' மற்றும் 'கவனம்' என்பனவே விலையுயர்ந்த சந்தைப் பொருட்களாக மாறியுள்ளன. அல்காரிதம்கள் வெறும் கணிதச் சூத்திரங்கள் அல்ல; அவை மனிதரின் ஆழ்மனத் தேவைகளையும் பலவீனங்களையும் இலக்கு வைத்து வடிவமைக்கப்பட்ட ஒரு டிஜிட்டல் வலைப்பின்னலாகும்.

தொழினுட்ப உலகில் 'தகவல்' என்பது ஒரு மூலப்பொருள் மட்டுமே. ஆனால் அந்தத் தகவலை நுகர்வதற்கு நாம் செலவிடும் 'கவனம்' (Attention) என்பதே இன்று உலகளாவிய சந்தையில் பெரும் விலைக்கு விற்கப்படும் பொருளாக மாறியுள்ளது. இதனை 'கவனப் பொருளாதாரம்' (Attention Economy) என ஆய்வாளர்கள் அழைக்கின்றனர். ஒரு காலத்தில் மனிதர்கள் தமக்குத் தேவையான தகவல்களைத் தேடிச் சென்றனர். ஆனால் இன்று அல்காரிதம்கள் எனப்படும் நுணுக்கமான கணிதச் சூத்திரங்கள், மனிதர்களின் விருப்பு வெறுப்புகளைத் துல்லியமாகக் கணக்கிட்டு, அவர்களைத் திரைகளுக்கு முன்னால் கட்டிப்போடும் வேலையைச் செய்கின்றன. குறிப்பாக, ஒரு பாடசாலையில் மாணவர்கள் பாடங்களைக் கவனிக்கும் நேரத்தை விட, கைபேசித் திரைகளில் அல்காரிதம்கள் வழங்கும் தகவல்களைப் பார்ப்பதிலேயே அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். இந்த மாற்றமானது வெறும் தொழினுட்ப வளர்ச்சி மட்டுமல்ல, மனிதரின் சிந்தனை முறையையே மாற்றியமைக்கும் ஒரு பாரிய உளவியல் ஊடுருவலாகும்.

அல்காரிதம்களின் வடிவமைப்பு என்பது மனித மூளையின் பலவீனங்களைச் சுரண்டும் வகையில் மிகவும் நுணுக்கமாகத் திட்டமிடப்பட்டுள்ளது. 'டோபமைன்' (Dopamine) எனப்படும் மகிழ்ச்சியைத் தூண்டும் ஹோர்மோனை இலக்கு வைத்து இவை இயங்குகின்றன. உதாரணமாக, சமூக ஊடகங்களில் நாம் பயன்படுத்தும் 'முடிவிலி சுருள்' (Infinite Scroll) முறைமை, தகவல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்காமல் நம்மைத் தொடர்ந்து இயங்கச் செய்கிறது. இது ஒரு சூதாட்ட விடுதியில் உள்ள இயந்திரத்தைப் போன்றது. அடுத்த விநாடி என்ன சுவாரஸ்யமான தகவல் வரும் என்கிற எதிர்பார்ப்பே மனிதர்களை அந்தத் தளங்களிலிருந்து வெளியேற விடாமல் தடுக்கிறது. இந்த அல்காரிதம்கள் நாம் எதை விரும்புகிறோம் என்பதை விட, எது நம்மை உணர்ச்சி வசப்பட வைக்கும் என்பதில் அதிக அக்கறை காட்டுகின்றன. இதனால் ஆக்கபூர்வமான சிந்தனைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, தற்காலிகமான கிளர்ச்சியூட்டும் தகவல்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

இந்தத் தொடர்ச்சியான கவனச் சிதறல் மனித உளவியலில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. குறிப்பாக 'ஆழ்ந்த சிந்தனை' (Deep Thinking) செய்யும் ஆற்றல் இன்று வேகமாக மழுங்கி வருகின்றது. ஒரு நீண்ட கட்டுரையை வாசிப்பதற்கோ ஒரு சிக்கலான பிரச்சினையை ஆழமாக ஆராய்வதற்கோ தேவையான பொறுமை இன்றைய தலைமுறையிடம் குறைந்து வருவதற்கு இந்த அல்காரிதச் சூழலே முக்கிய காரணமாகும். தகவல்கள் துண்டு துண்டாக (Bite-sized information) வழங்கப்படுவதால், மூளையானது எதனையும் ஆழமாகப் பதியவிடாமல் மேலோட்டமாகத் தடவிச் செல்லும் பழக்கத்திற்கு ஆளாகிறது. இது கற்றல் செயன்முறையிலும் பாரிய பின்னடைவை ஏற்படுத்துகிறது. அத்துடன், அல்காரிதம்கள் உருவாக்கும் 'எக்கோ சேம்பர்ஸ்' (Echo Chambers) எனப்படும் ஒத்த கருத்துடையோரின் வளையங்கள், மனிதர்களை மாற்றுக்கருத்துகளை ஏற்க முடியாத பிடிவாதக்காரர்களாகவும் மாற்றுகின்றன.

நடைமுறைச் சூழலில் அவதானித்தால், அல்காரிதம்கள் எவ்வாறு நுகர்வோர் கலாசாரத்தையும் சமூக முரண்பாடுகளையும் தீர்மானிக்கின்றன என்பது புலப்படும். ஒரு பயனர் இணையத்தில் ஒரு குறிப்பிட்ட விடயத்தைத் தேடினால், அதன் பின்னர் அவருக்குக் காண்பிக்கப்படும் விளம்பரங்களும் செய்திகளும் அல்காரிதம்களால் முற்றாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. இது தனிநபர் சுதந்திரத்தைப் பறிக்கும் ஒரு செயலாகும். சமூக ரீதியாகப் பார்க்கும்போது, இன அல்லது மத ரீதியான முரண்பாடுகளைத் தூண்டக்கூடிய 'வெறுப்புப் பேச்சுகள்' அல்காரிதம்களால் அதிக ஈடுபாட்டை (Engagement) பெறுவதால், அவை உண்மையான செய்திகளை விட விரைவாக மக்களிடம் சென்றடைகின்றன. இது இலங்கையின் சமூகக் கட்டமைப்பிலும் அவ்வப்போது பாதிப்புகளை ஏற்படுத்துவதை நாம் காண்கிறோம். மனிதர்களின் உணர்ச்சிகளை மூலதனமாக்கி லாபம் ஈட்டும் இந்த அல்காரிதக் கட்டமைப்பு, சமூக ஒற்றுமைக்கும் தனிநபர் மனநலத்திற்கும் ஒரு சவாலாகவே உள்ளது.

அல்காரிதம்கள் மனிதரின் கவனத்தைத் திருடுவதிலிருந்து தற்காத்துக் கொள்வது என்பது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகும். தொழினுட்பத்தை முற்றாகத் தவிர்க்க முடியாது என்றாலும், அதன் இயங்குமுறையைப் புரிந்துகொண்டு விழிப்புணர்வுடன் பயன்படுத்துவது அவசியமானது. 'டிஜிட்டல் மினிமலிசம்' எனப்படும் தேவையற்ற இணையப் பயன்பாட்டைக் குறைக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்வதன் மூலமும், ஆக்கபூர்வமான வாசிப்பு மற்றும் களப்பணிகளில் ஈடுபடுவதன் மூலமும் நமது சிந்தனைத் திறனை மீட்க முடியும். அல்காரிதம்கள் நம்மை வழிநடத்த அனுமதிப்பதை விட, அவற்றை நமது வளர்ச்சிக்குரிய கருவியாக மட்டும் பயன்படுத்துவதே அறிவுடைமையாகும். மனித அவதானிப்பு என்பது விலைமதிப்பற்றது; அதனை அல்காரிதம்கள் ஆக்கிரமிக்க விடுவது என்பது நமது எதிர்காலச் சிந்தனைச் சுதந்திரத்தையே அடகு வைப்பதற்குச் சமமாகும்.

Arulkarki@thaiveedu.com

prasadbatti@gmail.com

உழைப்பின் முகம், சமூகத்தின் மறதி: தேயிலைத் தோட்டப் பெண்கள்

பிரியதர்சினி யோகராசா

இலங்கையின் மலைநாட்டு தேயிலைத் தோட்டப் பகுதிகளில் வாழும் பெண்கள், அந்நாட்டின் பொருளாதார வரலாற்றிலும், ஏற்றுமதி வருமானத்திலும், உலக சந்தையில் 'Ceylon Tea' என அறியப்படும் தேயிலைப் பிராண்டின் உருவாக்கத்திலும் மைய இடம் வகித்திருந்தாலும், அவர்களின் முகங்களும் தனிப்பட்ட வாழ்க்கைக் கதைகளும் சமூக ஊடகங்களிலும் பொதுக் காட்சியிலும் பரவலாக வெளிப்படுத்தப் படுவதில்லை என்பது ஒரு சாதாரண ஊடகச் சம்பவம் அல்ல. இது வரலாற்று புறக்கணிப்பு, வர்க்க ஒடுக்குமுறை, இன அரசியல், பாலின கட்டுப்பாடு, ஊடகங்களின் அழகியல் தேர்வு, டிஜிட்டல் சமத்துவமின்மை, மற்றும் 'யார் காட்சியளிக்கத் தகுதியானவர்?' என்ற அதிகார அரசியலின் தொடர்ச்சியான வெளிப்பாடாக பார்க்கப்பட வேண்டிய ஒன்று. தேயிலைத் தோட்டப் பெண்கள் பொதுவாக சமூக ஊடகங்களில் தோன்றும்போது கூட, அவர்கள் தனித்த அடையாளம் கொண்ட மனிதர்களாக அல்லாமல், 'தேயிலைப் பறிக்கும் பெண்' என்ற பொதுவான தொழிலாளர் சின்னமாகவே காட்சிப்படுத்தப்படுகிறார்கள். அவர்களின் முகங்களில் உள்ள சோர்வு, வாழ்க்கைச் சுமை, ஆசைகள், விரக்திகள், அரசியல் உணர்வுகள், காதல்கள், கனவுகள், உடல் வலி, குடும்பப் பொறுப்புகள் போன்ற மனித அடுக்குகள் பெரும்பாலும் மறைக்கப்படுகின்றன. அதற்கு பதிலாக, பனிமூட்டமிட்ட மலைகள், பச்சைத் தோட்டங்கள், முதுகில் தொங்கும் கூடை, தலைக்கவசம், வளைந்த உடல் போன்ற காட்சிகளே உலகிற்கு விற்கப்படுகின்றன. இதனால், அவர்கள் ஒரு தனிநபராக அல்லாமல் 'உழைப்பின் பின்னணி அழகு' என மாற்றப்படுகிறார்கள்.

இந்த தற்கால நிலையைப் புரிந்துகொள்ள, முதலில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலத்தின் வரலாற்றுப் பின்னணியில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். இலங்கையில் மலைநாட்டுத் தோட்டப் பொருளாதாரம் உருவாக்கப்பட்ட போது, தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட தமிழ்த் தொழிலாளர்கள், வெறும் உழைப்புச் சக்தியாக மட்டுமே ஆவணப்படுத்தப்பட்டனர். அவர்களின் மனித வாழ்க்கை, குடும்பக் கட்டமைப்பு, பண்பாடு மற்றும் உணர்ச்சி உலகம் ஆகியவை பிரதான வரலாற்றுப் பதிவுகளில் புறக்கணிக்கப்பட்டன. அவர்களின் உழைப்பு தேயிலையாக உலகச் சந்தையைச் சென்றடைந்ததே தவிர, அந்த உழைப்புக்குச் சொந்தக்காரர்களான மனிதர்களின் முகங்கள் உலகளாவிய கூட்டு நினைவகத்தில் பதிய வைக்கப்படவில்லை. இத்தகைய வரலாற்று ரீதியான மறைப்பு அல்லது விளிம்புநிலைப்படுத்தல் இன்றும் தொடர்கிறது. இன்று சமூக ஊடகங்கள் தனிநபர்களுக்கு குரல் அளிக்கின்றன என்று சொல்லப்பட்டாலும், எல்லோருக்கும் சம அளவில் காட்சியளிக்கும் உரிமை கிடைப்பதில்லை. டிஜிட்டல்

tg.theeban@gmail.com

உலகமும் சமூக அதிகார அமைப்புகளின் பிரதிபலிப்பாகவே இயங்குகிறது. நகர மையங்களைச் சேர்ந்த, ஆங்கிலம் பேசும், நடுத்தர அல்லது மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் சமூக ஊடகங்களில் எளிதாக 'காட்சிப் புலப்பாடு (visible)' ஆகிறார்கள். ஆனால் தோட்டத் தொழிலாளிப் பெண்களின் வாழ்க்கை இன்னும் பின்னணியில் இன்றைய டிஜிட்டல் யுகத்தில், சமூக ஊடகங்கள் தனிநபர்கள் அனைவருக்கும் சமமான குரலை வழங்குகின்றன என்று பரவலாகச் சொல்லப்பட்டாலும், நடைமுறையில் எல்லோருக்கும் சம அளவில் காட்சிப் புலப்பாட்டு (Visibility) உரிமையோ வாய்ப்போ கிடைப்பதில்லை. ஏனெனில், டிஜிட்டல் உலகமும் நிலவும் சமூக அதிகார அமைப்புகளின் ஒரு துல்லியமான பிரதிபலிப்பாகவே இயங்குகிறது. குறிப்பாக, நகர மையங்களைச் சேர்ந்த, ஆங்கில மொழிப்புலமை வாய்ந்த, நடுத்தர அல்லது மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே சமூக ஊடகப் பரப்பில் தங்களை எளிதாக முன்னிலைப்படுத்திக் கொள்ள முடிகிறது. அதேவேளையில், காலங்காலமாகப் பொருளாதார மற்றும் சமூக ஒடுக்குமுறைகளை எதிர்கொண்டு வரும் தோட்டத் தொழிலாளிப் பெண்களின் அன்றாட வாழ்வியலும், அவர்களின் உழைப்பும் தற்கால இணைய உலகிலும் இன்னும் பின்னணியில் தள்ளப்பட்டு, கண்ணுக்குத் தெரியாதவையாகவே ஆக்கப்படுகின்றன.

இதற்கு காரணமான மற்றொரு முக்கிய அம்சம் ஊடகங்களின் அழகியல் அரசியல் ஆகும். தற்காலச் சமூக ஊடகங்களில் அதிகமாக முன்னிறுத்தப்படும் பெண்மையின் உருவம் பெரும்பாலும் குறிப்பிட்ட தரநிலைகளைப் பின்பற்றுகிறது எனலாம். அதாவது வெளிர் நிறத் தோல், நகர வாழ்க்கை முறை, நவீன உடை, மேக்கப் கலாச்சாரம் போன்றவைகளே அதிகமாக முன்னிறுத்தப்படுகின்றன. இதற்கு நேர்மாறாக, தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்களின் கடினமான உடல் உழைப்பு, இயற்கை சார்ந்த கருமை நிறத் தோல், நீண்ட உழைப்பினால் ஏற்படும் களைப்பான முகம், வயதுக்கு முன்பே சோர்வடைந்த உடல்வாகு, எளிய உடை, வேலை நேரத்துக்கே உரிய தனித்துவமான உடல்மொழி போன்றவை தற்காலச் 'சமூக ஊடக அழகியல் பொருளாதாரத்துடன்' பொருந்தாதவையாகக் கருதப்படுகின்றன. இதன் விளைவாக, அவர்கள் இந்தத் தற்கால அழகியல் வரையறைகளுக்கு வெளியே திட்டமிட்டுத் தள்ளப்படுகிறார்கள். இது வெறும் புற அழகு சார்ந்த விவகாரம் மட்டுமல்ல; மாறாக, ஒரு சமூகத்தில் யாருடைய முகங்கள் மதிப்புமிக்கவையாகக் கருதப்பட வேண்டும், யாருடைய முகங்கள் வெறும் உழைப்புச் சக்தியின் அடையாளமாக மட்டுமே சுருக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் ஆழமான சமூக அதிகாரக் கட்டமைப்பாகும்.

அதே நேரத்தில் நிலவும் பாலினக் கட்டுப்பாடுகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. பல தோட்டப் பகுதிகளில், பெண்களின் உடலும் முகமும் இன்னும் குடும்பத் தார்மீக மரியாதையுடனும் மரபுகளுடனும் பிணைக்கப்பட்டுள்ளன. 'பெண்ணின் நிழற்படம் பொதுவெளிக்குச் செல்லக்கூடாது', 'அவளை யாராவது தவறாகப் பார்ப்பார்கள்', 'சமூக ஊடகங்களில் பதிவேற்றினால் தேவையற்ற சிக்கல்கள் தோன்றும்' போன்ற ஆணாதிக்க மற்றும் மரபுவழி எண்ணங்கள் இன்றும் பல குடும்பங்களில் நிலவுகின்றன. இத்தகைய கட்டுப்பாடுகள், ஒரு தளத்தில் பெண்களைப் பாதுகாக்கும் முயற்சியாகப் புறவயமாகத் தோன்றினாலும், மறுதளத்தில் பெண்களின் சுதந்திரமான காட்சியளிக்கும் உரிமையைக் கட்டுப்படுத்தும் ஒடுக்குமுறையாகவே செயற்படுகின்றன. குறிப்பாக, சமூக ஊடகப் பரப்பில் பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் துன்புறுத்தல்கள் (Sexual harassment), உருவக் கேலி (Body shaming), போலிப் பக்கங்கள் (Fake accounts), படங்களைத் தவறாகப் பயன்படுத்துதல் (Image misuse) மற்றும் இணைய வன்புணர்வுத் தாக்குதல்கள் (Trolling) போன்ற எதிர்மறை அனுபவங்கள் இந்த அச்சத்தை மேலும் தீவிரப்படுத்துகின்றன. நகரப் பின்னணியைக் கொண்ட பெண்களுக்கே இணையவெளி ஒரு சவாலாக இருக்கும் போது, சமூகப் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் விழிப்புணர்வு குறைவாக உள்ள தோட்டப் பகுதிகளில் இந்த அச்சம் இன்னும் பல மடங்காகக் காணப்படுகிறது. இதன் விளைவாக, பல பெண்கள் சமூக ஊடகங்களில் தங்கள் முகத்தை வெளிப்படுத்தத் தயங்கி, குழுப் படங்களாக மட்டுமே தோன்றுவது அல்லது தங்களின் கணக்குகளைத் தனிப்பட்டதாக (Private accounts) வைத்துக் கொள்வது போன்ற தற்காப்பு வழிமுறைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறார்கள்.

மேலும், தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்கள் ஊடகங்களில் எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார்கள் என்பதிலும் ஒரு நுட்பமான அரசியல் ஆதிக்கம் செலுத்துகிறது. சுற்றுலா விளம்பரங்கள், தேயிலை நிறுவனங்களின் விளம்பரங்கள், ஆவணப்படங்கள், புகைப்படக் கண்காட்சிகள் போன்றவற்றில் அவர்கள் பெரும்பாலும் 'அந்நியமயப்பட்ட உழைப்புச் சக்தி' (Exotic labour) என்ற புறக்கணிப்புப் பார்வையிலேயே காட்சிப்படுத்தப்படுகிறார்கள். அதாவது, அவர்களின் இருப்பு என்பது வெறும் வறுமை மற்றும் உழைப்பின் அழகியல் சின்னமாக மட்டுமே சுருக்கப்படுகிறது. பசுமையான மலைக் குன்றுகளுக்கு நடுவே, கொழுந்து பறித்தபடி புன்னகைத்துக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் நிழற்படம் உலகச் சந்தையில் தேயிலை எனும் வணிகப் பொருளை 'மனிதநேயம் மிக்கதாகக்' காட்டுவதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், அந்தப் புன்னகையின் பின்னால் மறைந்திருக்கும் அந்தப் பெண்ணின் யதார்த்தமான வாழ்வியல் சவால்கள் முற்றிலும் மூடிமறைக்கப்படுகின்றன. குறிப்பாக, மிகக் குறைந்த ஊதியம், தொடர்ச்சியான உடல் உபாதைகள், கல்விக்கான தடைகள், குடும்ப மற்றும் வாழ்விட நெருக்கடிகள், வீட்டு வன்முறை மற்றும் பாலின அடிப்படையிலான ஒடுக்குமுறைகள், கடுமையான மனஅழுத்தம், அரசியல் ரீதியான புறக்கணிப்பு போன்ற எதார்த்தப் பிரச்சினைகள் இந்த அழகியல் காட்சிக்கு பின்னால் காணாமல் போகின்றன. இதன் விளைவாக, அவர்கள் உலகிற்குத் தொடர்ந்து 'காட்சிப்படுத்தப்படுகிறார்களே' தவிர, உண்மையில் அவர்களின் அகவாழ்வு எவராலும் 'புரிந்து கொள்ளப்படுவதில்லை' என்பதே கசப்பான உண்மையாகும்.

இதை மேலும் ஆழமாகப் பார்க்கும்போது, 'காட்சியளிப்பதே அதிகாரம்' என்ற தத்துவார்த்தக் கருத்து முதன்மையாகிறது. ஒரு சமூகத்தில் எவருடைய இருப்பு அல்லது முகம் அதிக அளவில் காட்சிப்படுத்தப்படுகிறதோ, அவர்களுடைய வாழ்வியலே முதன்மையானதாகவும் 'முக்கியத்துவம் வாய்ந்ததாகவும்' பொதுப் புத்தியால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. துரதிர்ஷ்டவசமாக, சமூக ஊடகங்களில் தொடர்ந்து முன்னிலைப்படுத்தப்படும் முகங்கள், பெரும்பாலும் ஏற்கனவே சமூக அதிகாரத்தைக் கையில் வைத்துள்ள வர்க்கத்தினரின் முகங்களாகவே இருக்கின்றன. தேயிலைத் தோட்டப் பெண்

கள் நீண்டகாலமாக நாட்டின் அரசியல் மையங்களிலிருந்தும், உயர்கல்வி வாய்ப்புகளிலிருந்தும், பிரதான ஊடகத் துறையிலிருந்தும் திட்டமிட்டு விலக்கி வைக்கப்பட்டிருந்ததால், தங்களின் சொந்தக் கதைகளைத் தாங்களே உலகிற்கு எடுத்துரைக்கும் வாய்ப்பு அவர்களுக்கு மிகக் குறைவாகவே இருந்தது. அவர்களைப் பற்றி மற்றவர்கள் பேசியிருக்கிறார்கள்; ஆனால் அவர்கள் தாங்களாகப் பேசிய இடங்கள் குறைவு. இந்த தேக்க நிலையில் சமூக ஊடகங்கள் ஒரு புதிய வாய்ப்பைத் திறந்துள்ளன. தோட்டப் சமூகத்தின் இளம் தலைமுறைப் பெண்கள் இன்று TikTok, Facebook Reels, Instagram மற்றும் YouTube போன்ற நவீன டிஜிட்டல் தளங்களின் வாயிலாகத் தங்களது அன்றாட வாழ்க்கையைப் பதிவு செய்யத் தொடங்கியுள்ளனர். ஏனெனில், தங்களை மற்றவர்கள் எவ்வாறு பார்க்க வேண்டும், தங்களின் பிம்பம் எங்ஙனம் கட்டமைக்கப்பட வேண்டும் என்பதை இந்த இளம் பெண்கள் தங்களின் சுய உழைப்பால் தாங்களே தீர்மானிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஆனால் இந்த மாற்றமும் முரண்பாடுகளற்றது அல்ல. சமூக ஊடகங்களில் காட்சிப் புலப்பாடு (Visibility) கிடைப்பது சில சமயங்களில் சுரண்டலாகவும் மாறுகிறது. தோட்டப் பெண்களின் வீடியோக்கள் 'village aesthetic', 'poor but happy people', 'raw beauty' போன்ற தலைப்புகளுடன் வைரலாகப் பரவும்போது, அவர்களின் மனித வாழ்க்கை மீண்டும் ஒரு நுகர்வு உள்ளடக்கமாக மாறுகிறது.

இதனுடன் இணைந்து கல்வி மற்றும் மொழி அரசியலும் கவனிக்கப்பட வேண்டும். சமூக ஊடகங்களில் செல்வாக்குப் பெற பெரும்பாலும் ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்ப அறிவு ஆகியவை தேவைப்படுகிறது. தோட்டப் பகுதிகளில் நீண்ட காலமாக இருந்த கல்வி சமத்துவமின்மை காரணமாக, பல பெண்களுக்கு இந்த டிஜிட்டல் சூழலியலில் தங்களை நிலை நிறுத்துவது சிரமமாகிறது. மேலும், நகர மையங்களில் உருவாகும் trends மற்றும் aesthetic மொழிகளைப் பின்பற்ற வேண்டிய அழுத்தமும் உருவாகிறது. இதனால் சிலர் தங்களுடைய இயல்பான மொழி, உடை, உச்சரிப்பு, உடல் தோற்றம் ஆகியவற்றை மறைக்க முயற்சிக்கிறார்கள். இது, சமூக ஊடகங்களில் வெறும் காட்சிப் புலப்பாட்டை (Visibility) பெறுவதற்காக, தங்களின் அசல் 'சுய அடையாளத்தையே' (Identity) சிதைத்துக் கொள்ள வேண்டிய ஒரு துரதிர்ஷ்டவசமான அடையாள நெருக்கடியைத் தோற்றுவிக்கிறது.

இருப்பினும், இன்று ஒரு முக்கியமான மாற்றம் மெதுவாக உருவாகிக்கொண்டிருக்கிறது. சமூக ஆய்வாளர்கள், பெண்ணிய செயற்பாட்டாளர்கள், ஆவணப்பட இயக்குநர்கள், இளம் content creators ஆகியோர் தேயிலைத் தோட்டப் பெண்களை 'labour symbol' ஆக அல்ல, முழுமையான மனிதர்களாக பதிவு செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களின் சிரிப்புகள் மட்டுமல்ல, அவர்களின் கோபமும், அரசியல் விழிப்புணர்வும், விருப்பங்களும், கனவுகளும் பேசப்பட ஆரம்பித்துள்ளன. இது பிரதிநிதித்துவ அரசியலில் ஒரு முக்கிய முன்னேற்றம். ஏனெனில் உண்மையான காட்சிப் புலப்பாடு (Visibility) என்பது முகத்தை மட்டும் காட்டுவது அல்ல; அந்த மனிதரின் அனுபவ உலகத்தையும் அங்கீகரிப்பதாகும்.

இதனால், 'தேயிலைத் தோட்டப் பெண்களின் முகங்கள் ஏன் சமூக ஊடகங்களில் பரவலாக வெளிப்படுத்தப்படுவதில்லை?' என்ற கேள்வி இறுதியில் ஒரு பெரிய சமூகக் கேள்வியாக மாறுகிறது. அது வெறுமனே ஊடக இல்லாமை பற்றிய கேள்வி அல்ல. அது யாருடைய வாழ்க்கைகள் நினைவில் வைக்கப்படுகின்றன, யாருடைய வாழ்க்கைகள் பின்னணியாக்கப்படுகின்றன, யாருடைய முகங்கள் சந்தைப்படுத்தப்படுகின்றன, யாருடைய முகங்கள் மறைக்கப்படுகின்றன என்ற அதிகார அரசியலின் கேள்வியாகும். தேயிலைத் தோட்டப் பெண்கள் பல காலமாக உலக பொருளாதாரத்தைத் தாங்கியிருந்தாலும், அவர்களின் மனித முகங்கள் இன்னும் முழுமையாக உலகின் மையக் காட்சிக்கு வரவில்லை. ஆனால் புதிய தலைமுறை, புதிய டிஜிட்டல் தளங்கள், மற்றும் பிரதிநிதித்துவம் பற்றிய புதிய அரசியல் இந்த நிலையை மெதுவாக மாற்றிக்கொண்டிருக்கின்றன. அந்த மாற்றம் முழுமையடைய வேண்டுமெனில், அவர்கள் வெறும் 'தேயிலைப் பெண்கள்' அல்ல; முழுமையான மனிதர்கள், சிந்தனையாளர்கள், கனவுகளைக் கொண்ட பெண்கள், சமூக வரலாற்றின் உரிமையாளர்கள் என்ற பார்வை சமூகத்தில் வலுப்பெற வேண்டும்.

Priyatharshini.yogarasa@thaiveedu.com

சிவா மாலதி

மணமுறிவு: பெண்களுக்குப் பேரனர்த்தமா பெருங்கனவா?

tg.theeban@gmail.com

பொருளாதார ரீதியாக மேம்பட்ட நிலையில் இருப்பினும், ஒரு மனைவியாகவும் இரு பிள்ளைகளின் தாயாகவும் விளங்கும் சங்கீதா, பணபலம், பிரபலம், ரசிகர் செல்வாக்கு மற்றும் அரசியல் அதிகாரம் ஆகியவற்றைக் கொண்ட விஜய் என்ற ஆளுமையால் ஓரங்கட்டப்படும் பின்னணியிலேயே, அவர் மீதான சமூக அக்கறை முதன்மை பெறுகின்றது. குறிப்பாக, விஜய் ஒரு பிரபலமாக இருப்பதனால் இயல்பாகவே எழும் அதீத பொதுக் கவனமும், தொடர்ச்சியான ஊடகச் செய்திகளும் இச்சம்பவத்திற்குத் தேவைக்கதிகமான முக்கியத்துவத்தை வழங்குகின்றன. இப்போக்கு, அதிகாரத் தரப்பிற்குச் சமூக அங்கீகாரத்தையும் கவனத்தையும் குவித்து வருகின்ற அதேவேளையில், மறுதரப்பிற்கு ஒடுக்கப்படும் உணர்வையும் தீவிர மன அழுத்தத்தினையும் ஏற்படுத்துகின்றது. தற்போதைய சமூக ஊடக வெளியில் சிலர் குறிப்பிட்டதொரு நடிகையின் படங்களைப் பதிவிட்டு மகிழ்கின்றனர்; வேறு சிலர் இதனை முற்றிலும் தனிப்பட்ட விவகாரமாகக் கருதுகின்றனர்; மற்றும் சிலரோ இத்தகைய நிகழ்வுகளைச் சாதாரணமான ஒன்றாகக் கடந்து செல்கின்றனர். எனினும், இது வெறும் தனிப்பட்ட விடயமா? அல்லது ஏன் இதுவொரு கட்டமைக்கப்பட்ட சமூகப் பிரச்சினையாக அணுகப்பட வேண்டும்? போன்ற கேள்விகளுக்கான பதில்களை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டியுள்ளது.

> **“இன்று பல பெண்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும் முன்னேறி தன்னிறைவு பெற்றவர்களாக இருக்கின்றபோதும், இன்றும் அவர்களது வெற்றியென்பது திருமண வாழ்க்கையினையும், பிள்ளைப் பேற்றினையும் மையப்படுத்தியே அளவிடப்படுகின்றது.”**

நூற்றாண்டுகளாகப் பெண்களுக்கு ஒருதார மண ஒழுக்கத்தைப் போதிக்கும் அதே சமூகம்தான், ஆண்களுக்கு என்று வரும்போது அதனைப் பாலியல் சுதந்திரம் எனவும், ஒருதார மணத்தை இறுக்கமாகப் பின்பற்றுவதைப் பிற்போக்குத்தனம் எனவும் பாடம் கற்பிக்கின்றது. உண்மையில், திருமணம் என்பது வெறுமனே பாலியல் உறவினை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு சமூக ஏற்பாடு மட்டுமல்ல; அது சட்டரீதியான, பொருளாதார ரீதியான மற்றும் பரஸ்பர உணர்வுப் பகிர்வுகளுக்காக உருவாக்கப்பட்டதொரு கூட்டுச் சமூக ஏற்பாடும் கூட. அதற்குள் பெண் சுரண்டப்படுபவளாக, தனக்கெனவோர் சுய அடையாளத்தை இழந்தவளாக, தாயாகவும் மனைவியாகவும் மட்டுமே அறியப்படுபவளாக மாற்றப்படுகின்றாள். தனக்கெனக் கனவுகளோடு திருமண உறவிற்குள் தம்மை உட்படுத்திக்கொள்ளும் பெண்கள் பலர், குடும்ப நலனுக்காகவும் துணைவரின் முன்னேற்றத்திற்காகவும் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் தமது சொந்தக் கனவுகளைப் புறந்தள்ளிவிட்டுத் தம்மை அர்ப்பணித்துக்கொள்ளுமாறே சமூகத்தால் எதிர்பார்க்கப்படுகின்றார்கள். தமது கனவுகளைக் கைவிடுவதென்பது துயரிலும் துயரை ஏற்படுத்தினாலும், பல பெண்கள் கணவனுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் தமது சொந்தக் கனவுகளைத் தியாகஞ் செய்வதன் மூலம் அல்லது காலந்தாழ்த்துவதன் மூலம் குடும்ப நலனையே முதன்மைப் படுத்துகின்றார்கள். அந்த வகையில், திருமண உறவில் ஈடுபடும் ஆண்களதும் அவ்வுறவில் உருவாகும் பிள்ளைகளினதும் வளர்ச்சியும் முன்னேற்றமும் பெண்களின் மறைமுக உழைப்பினாலும் அர்ப்பணிப்பினாலுமே சாத்தியப்படுத்

தப்படுகின்றது. 'திருமணம் ஆயிரங்காலத் துப் பயிர்' எனக் கூறி, அதற்காகப் பெண் கள் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்றே சமூகம் எதிர்பார்க்கின்றது. இவ் வாறு திருமண உறவிற்காகத் தம்மையே முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட பெண்களுக்கு, மணமுறிவு எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகின்றது என் பதை நாம் எப்போதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா? தமது கனவுகளையும், இதுவரை காலமும் எந்த உறவுக்காக தமது உழைப்பையும் காலத்தையும் அர்ப் பணித்துக்கொண்டார்களோ, அந்த உற வும் இனிமேல் இல்லை எனும்போது, திரு மணமுறிவு ஆண்களுக்கு பெண்களுக்கு ஏற்படுத்தும் இந்த வெறுமையையோ, ஏமாற்றத்தையோ, கால இழப்பையோ, கனவுகளை கைவிடவேண்டிய கட்டாயத் தையோ ஏற்படுத்தியிருக்கின்றதா எனச் சிந்தித்திருக்கின்றோமா?

இன்று பல பெண்கள் கல்வியிலும், பொரு ளாதாரத்திலும் முன்னேறி தன்னிறைவு பெற்றவர்களாக இருக்கின்றபோதும், இன் றும் அவர்களது வெற்றியென்பது திருமண வாழ்க்கையினையும், பிள்ளைப் பேற்றி னையும் மையப்படுத்தியே அளவிடப்படு கின்றது. இவை பெண்களுக்கென ஆணா திக்க சமூகத்தினால் விதிக்கப்படுகின்ற நியமங்களாக இருந்துவருகின்றன. இவ் வாறிருக்க இன்றும் பல பெண்கள் கல்வி யிலும், தொழிலிலும் சிறந்து விளங்கினாலும் குடும்பப் பரா மரிப்பு, பிள்ளைப் பேறும் பிள்ளைப் பராமரிப்பும் போன்ற பல காரணங்களுக்காக தமது தொழிலைவிட்டு வீட்டுப்பராம ரிப்பில் ஈடுபடவேண்டிய நிலையிலேயே உள்ளனர். அல்லது இவை இரண்டையுமே தமது தோளில் சுமக்க வேண்டிய கட் டாயத்தில் உள்ளனர். இத்தகைய சமூகச் சூழலில், திருமண உறவுக்கும், பிள்ளைப் பராமரிப்பிற்கும் என சமூக எதிர் பார்ப்புகளுக்கமைய தம்மை ஈடுபடுத்திக்கொண்ட பெண் களுக்கு மணமுறிவு எத்தகையதாக அமைகின்றது? இத்த கைய மணமுறிவுகளை சாதாரணமான அல்லது பரஸ்பர மணமுறிவுகளாகக் கொள்ள முடியுமா? மணமுறிவுகள் பரஸ்பரம் சமமான தாக்கங்களை உறவிலிருந்தவர்களுக்கு ஏற்படுத்துகின்றதா? என்பவற்றினை நாம் ஆராயவேண்டி யிருக்கின்றது.

ஒரு உறவு முறிவது என்பது இயல்பானது. ஆனால் ஒரு ஆணுக்கு உறவினை இலகுவாக முறித்துக்கொள்ள முடிகிற இந்த சமூகத்தில் பெண்ணுக்கு அந்த உரிமை மறுக்கப்படும் நிலையிலேயே ஆணுக்கு வழங்கப்படும் இந்தச் சலுகையினை யும், தனியுரிமையினையும் சுட்டிக்காட்டவும், கேள்விக்குட் படுத்தவும் வேண்டியிருக்கின்றது. குறிப்பாக மிகையான பிர பலமும், ரசிகர் பலமும், செல்வாக்கும் தற்போது இவையெல் லாவற்றிற்கும் மேலதிகமாக அரசியல் பலமும் பெற்றிருக் கின்ற ஒருவரின் வாழ்வில் இருந்தும் இல்லாமலிருக்கின்ற பெண்பற்றிய அக்கறை மனச்சாட்சியுள்ள பெண்விடுதலை பற்றிச் சிந்திக்கின்ற சமூகநீதிபற்றிச் சிந்திக்கின்ற எவருக் கும் இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு எது வுமில்லை.

“திருமணம் என்பது இயற்கையானதல்ல. அது மனித சமூகம் கட்டமைத்த ஒரு ஏற்பாடு. ஆயினும் திருமண உறவுகள் பெண்களை தமக்கென 'அடையாளமற்றவர்களாக' அல்லது 'சுயமற்றவர்களாக' மாற்றுகின்ற நிலையில், திருமணமுறிவு என்பது சில பெண்களுக்கு அந்த 'அடையாளமற்ற நிலையினை' தீவிரப்படுத்துகின்றது, ஏனைய சிலருக்கு அவர்கள் தமக்காக வாழ்வதற்கும், தம்மைக் கண்டடைந்து கொள்வதற்குமான வாய்ப்பினை வழங்குகின்றது.”

ஆண்கள் தொழிலிலும், தமது வளர்ச்சி யிலும் கவனத்தினைக் குவிக்கின்ற காலப் பகுதியில், அவர்களுடன் வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்ளும் பெண்கள் பெரும்பாலும் பிள்ளைப் பேற்றிற்குத் தயார்படுத்தப்படு கின்றனர். ஆண்கள் சமூக அங்கீகாரத் துடன் மேலெழுகின்ற அதேவேளை, இந்த உறவிலிருக்கும் பெண்களுக்கு தமக்கென்ற அடையாளம் காணாமலாக்கப்பட்டு மனைவி மற்றும் தாய் எனும் உறவுசார் அடையாளங் கள் வலிமையாக கட்டியெழுப்பப்படுகின் றன. ஆண்கள் தமது பெயராலும், அவர்க ளுடன் உறவிலிருக்கும் பெண்கள், அவர் களின் 'மனைவியராகவும்' மட்டுமே பரவலாக அறியப்படுகின்றனர். சமூகத்தின் ஒவ்வொரு அடுக்குகளிலும் இவ்வாறு இருந்தும் இல் லாமலாக்கப்படும் பெண்களைப்பற்றிப் பேசு வதற்கான ஒரு தருணமாகவே இது அமை கின்றது. திருமண உறவினைக் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பும் பெண்கள் மீதே சுமத்தப்பட்டிருக்கும் சமூகத்தில், திரு மண உறவுக்குள்ளும், திருமண உறவு முறி யும்போதும் அது பெண்களுக்கு ஏற்படுத் தும் தாக்கங்களையும் விளைவுகளையும் பற்றிப் பேசுவதற்கான ஒரு தருணமாக இது அமைகின்றது.

திருமணம் என்பது இயற்கையானதல்ல. அது மனித சமூகம் கட்டமைத்த ஒரு ஏற்பாடு. ஆயினும் திருமண உறவுகள் பெண்களை தமக்கென 'அடையாளமற்றவர்களாக' அல்லது 'சுயமற்றவர்களாக' மாற்றுகின்ற நிலையில், திருமணமுறிவு என்பது சில பெண்களுக்கு அந்த 'அடையாளமற்ற நிலை யினை' தீவிரப்படுத்துகின்றது, ஏனைய சிலருக்கு அவர்கள் தமக்காக வாழ்வதற்கும், தம்மைக் கண்டடைந்துகொள்வதற் குமான வாய்ப்பினை வழங்குகின்றது. மணமுறிவின் தாக்கங் களைத் தீர்மானிக்கும் காரணிகளாக பால்நிலைக்கும் மேல திகமாக, பொருளாதார நிலை / வர்க்கம், சாதி, கல்விநிலை போன்றவையும் காணப்படுகின்றன.

குடும்ப நலனை முதன்மையாகக்கொண்டு வாழ்வதற்கு எதிர் பார்க்கப்படும் பெண்கள் பெரும்பாலும் ஊதியமற்ற பராம ரிப்புப் பணிகளில் தமது உழைப்பினையும் காலத்தினையும் செலவு செய்வதனால் அவர்கள் பொருளாதார ரீதியாக தங்கி வாழும் நிலை ஏற்படுகின்றது. பொருளாதார ரீதியான அணுகும் தன்மையும் கட்டுப்பாடும் பெரும்பாலும் ஆண்க ளிடமே இருக்கும் நிலையில் உறவு முறிவென்பது மனரீதி யான தாக்கத்திற்கும் மேலதிகமாக, பொருளாதார ரீதியான நலிவுற்ற நிலைக்கும் உட்படுத்துகின்றது.

பெண்களை 'நலிவுற்றவர்களாக' மாற்றுகின்ற திருமணம் எனும் இந்தச் சமூகச் செயன்முறையினையும், அசமத்துவ

மற்ற சமூகக் கட்டமைப்பினையுமே நாம் கேள்விக்குட்படுத்த முயற்சிக்கின்றோம். இந்த அசமத்துவமான, அநீதியான சமூகச் சூழலிலேயே சங்கீதாவின் நிலை குறித்த எமது அக்கறை வெளிப்படுகிறது. சங்கீதா மட்டுமே இத்தகைய சமூக அசமத்துவங்களால் பாதிக்கப்படுவதில்லை. உண்மையில் சமூக, பொருளாதார, வர்க்க, சாதிய ஒடுக்குமுறைகள் திருமண உறவிற்குள்ளும் அவை உடையும்போதும் பெண்களை நலிவுறச்செய்து அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தீவிரப்படுத்துகின்றன. இத்தகைய சம்பவங்கள் சமூகத்தில் உறவுகள் தொடர்பில் நிலவும் அசமத்துவமான சிந்தனைகளையும், திருமண உறவில் பெண்களது நிலையினையும், திருமண முறிவின்போது சமூகம் அவர்களை நோக்கும் தன்மையினையும் எமக்கு வெளிப்படுத்துகின்றன.

குழந்தை பெற்றுக்கொள்வதென்பது அவரவர் விருப்பமாயினும், சமூகம் அந்தத் தெரிவினை திருமணம் செய்யும் பல பெண்களுக்கு வழங்குவதில்லை. பிள்ளைப் பேறென்பது ஒரு பெண்ணின் உடலிலும் வாழ்க்கையிலும் மீளமுடியாத பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இந்த மாற்றம் சமூக மீளுற்பத்திக்கு அவசியமானதாக இருப்பினும், இத்தகைய மாற்றங்களுக்குட்பட்ட பெண்ணுடலுக்கான 'பெறுமதி' என்பது குறைத்து மதிப்பிடப்படும் ஆணாதிக்க சமூகத்திலேயே நாம் வாழ்கின்றோம். ஆனால் ஆணுக்கு இந்த நிலை இல்லை. அவர்கள் ஒரு உறவிற்குள் எத்தகைய பிரச்சினைகளையும், முரண்பாடுகளையும் எதிர்கொண்டாலும் விலகும்போது அவர்களால் புதியதோர் வாழ்க்கையினை எந்தவொரு பாரிய சமூக எதிர்வினைகளுமின்றி அமைத்துக்கொள்ள முடிகின்றது. அதுபோல பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் திருமண உறவிற்குள் வரும்போது இருந்த உடற்பாங்குடனேயே அந்த உறவிலிருந்தும் வெளியேற முடிகின்றது. பிள்ளை பெற்ற ஆணுக்குரிய சமூக மதிப்பு என்பது பிள்ளை பெற்ற பெண்ணுக்குரிய சமூக மதிப்பிலிருந்து பாரியளவு வேறுபட்டதாகவே இருக்கின்றது.

இந்த அசமத்துவத்தை நிகழ்த்தும் சமூகம் திருமண உறவு முறிந்த நிலையில் பெண்களை இரண்டு விதமாக அணுகுகின்றது. ஒன்று, உறவு பிரிந்தால் இருவருக்கும் ஒரேமாதிரியான தாக்கமே ஏற்படும் எனக் கருதிக்கொள்ளுதல். இரண்டாவது, அவர்களைக் கழிவிரக்கத்துடன் அணுகுகுதல். இந்த இரண்டு முறைகளுமே சமூகநீதி, சமத்துவக் கண்ணோட்டங்களைக் கொண்டிருப்பதில்லை. இந்தக் கழிவிரக்கம் பெண்களைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக அவர்களைச் சிதைக்கும் தன்மையுடையதாக அமைகின்றது. அதனாலேயே பெண்களை 'நலிவுற்றவர்களாக மாற்றியமைக்கின்ற' இந்த அசமத்துவமான சமூக நடத்தைகளையும், செயன்முறைகளையும் நாம் கேள்விக்குட்படுத்துகின்றோம்.

குழந்தை பெறாத பெண்ணுடலை மேலானதாக சிந்திக்கும் ஆணாதிக்க மனதிற்கு தங்கள் வம்சவிருத்திக்கு பிள்ளைகளைப் பெற்றெடுக்கின்ற பெண்ணுடல் பெறுமதியற்றதாக தெரிகின்றது. சினிமாத் துறையில் இதனை வெளிப்படையாகவே காணமுடியும். இதனாலேயே சினிமாத்துறையில் இருக்கும் பல பெண்கள் பிள்ளைகள் பெற்றுக்கொள்ளத் தயங்குவதும், வாடகைத் தாய்மூலம் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வதையும் நாம் காண்கின்றோம். சினிமாத்துறை தொடர்ந்தும் பெண்களைச் சுரண்டல்களுக்குட்படுத்தும் ஒரு துறையாக இருப்பதனை பல கலைஞர்கள் பேசிவந்திருக்கின்றார்கள். ஆயினும், திருமணம் செய்த பெண்களும், பிள்ளைகள் பெற்றுக்கொண்ட பெண்களும் சினிமாத்துறையில் ஓரங்கட்டப்படுவதென்பது தொடர்ந்தும் நடந்துவருகின்றது.

இன்று நடிகைகளை 'அழகி', 'தேவதை' என வாய்கூசாமல் புகழும் ஆண்களைப் பார்க்கும்போது அந்த 'அழகைப்' பெற்றுக்கொள்வதற்கும், பேணுவதற்குமான பெண்களின் பயணம் தெரிந்துகொள்வதற்கு அவசியமானதாகப்படுவதில்லை. அது போல தங்கள் வாழ்விலுள்ள பெண்கள் ஏன் இளவயதிலேயே இளமைத் தோற்றத்தினை இழக்கின்றார்கள் என்பதையும் சிந்திக்கத் தோன்றுவதில்லை.

பல சத்திரசிகிச்சைகள், கட்டுக் கோப்பான (இயற்கை உணவுகள் விலையுயர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது) உணவுத் தெரிவுகள், உடற்பயிற்சி, மற்றும் பல மருந்துகள் என zero size உடலுக்கும், முதலாளித்துவ சமூக மதிப்பீடுகளில் அழகு எனக் கருதப்படும் தோற்றத்திற்கும் பின்னால் இத்தகைய பல காரணிகள் இருக்கின்றன. சினிமாத்துறையில் இயங்கும் பெண்களுக்கு அவர்களது 'அழகு' என்பது முதலீடு. 'சினிமா' எனும் சந்தையில் தமது உழைப்பினை விற்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித்தரும் நுழைவாயிலாகவும், முதலீடாகவும் அது அமைகின்றது. அதுபோல, அந்த முதலீடு பலதரப்பட்ட நலன்களை வழங்குகின்றபோதும், அவை ஏற்படுத்தும் 'அழகு' குறித்த பிம்பம் இயல்பானதாகவும், இயற்கையானதாகவும், சமூகநியமமாகவும் சினிமாவிலும்,

விளம்பரங்களிலும், ஊடகங்களிலும் எடுத்துக்காட்டப்படும் போது, பெண்கள் இயல்பாக இருக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுவதுடன், தாமும் 'அழகிற்கான' முதலாளித்துவத் தின் தரநிலைகளை உள்வாங்கிக் கொள்வதுடன், அதனை அடைந்துகொள்வதற்கான சமூக அழுத்தமும் அவர்களுக் குக் கொடுக்கப்படுகின்றது. தமது வாழ்விலுள்ள ஆண்கள் எங்கோ இருக்கும் நடிகையினை 'அழகி' எனும்போது, அன் றாடம் வீட்டுப்பணிகளில் உழலும் பெண்களுக்கு அது தாழ் வுச் சிக்கலை மேலும் அதிகப்படுத்துகின்றது. உறவுக்குள் வெறுப்பினையும், விரிசலையும் ஏற்படுத்துவதற்கும் இவை சில சமயங்களில் காரணங்களாக அமைகின்றன.

இவையனைத்தையும் புறந்தள்ளி 50 வயதிலும் 'அழகி' என திரையில் தோன்றும் ஒரு பெண்ணை விழிக்கும்போது, உங் கள் வீட்டுப் பெண்கள் ஒவ்வொருவரும் எப்படி அதே வயதில் இளமைத் தோற்றத்தினை இழக்கின்றார்கள் எனச் சிந்தித்தி ருக்கின்றீர்களா ?

நடிகைகள் இன்றிருக்கக்கூடிய தோற்றத்தினைப் பெற்றுக் கொள்வதற்குப் பின்னால் தாம் விரும்பியவகையில் தமது மூக்கினை வடிவமைத்துக்கொள்வதற்கும், புருவத்தினை அக லமாகவோ, மெல்லியதாகவோ வடிவமைத்துக்கொள்வதற் கும், தாடை விளிம்பு தெரியக்கூடியவகையில் முகத்தினை மாற்றிக்கொள்ளக்கூடிய வகையிலும் சத்திரசிகிச்சைகளைச் செய்துகொள்வதற்கான பொருளாதார வசதியும், வாய்ப்பும் அவர்களுக்கு இருக்கின்றது. இத்தகைய சத்திரசிகிச்சை களின் வலியையோ, பக்கவிளைவுகளையோகூட நாம் எவ ரும் அறிவதில்லை. அதனைப் பராமரித்துப் பேணுவதற்கான வசதியும் வாய்ப்பும் அவசியமானதாக இருக்கின்றது. முதலா ளித்துவ சமூகத்தில் இயல்பான உடலை 'அழகின்மை' என நம்பவைப்பதன் மூலம் ஆரோக்கியமான உடலுக்கு மருத்து வரீதியான சத்திரசிகிச்சையினைத் தீர்வாகக் காட்டி மக்களை ஏய்த்துப் பிழைப்பதே மருத்துவ மாபியாக்களின் வேலையாக இருக்கின்றது. பெண்களின் உடல் 'பண்டமாகவும்', அதே வேளை, 'மருத்துவ மாபியாக்களின் செயற்களமாகவும்', அழ குப் பொருட்களை விற்பனை செய்வதற்கான 'சந்தையாகவும்' மாற்றப்படுகின்றது.

நடிகர்களைத் திருமணம் செய்துகொள்ளும் பெண்களுக்கு இந்த 'அழகுசார்' தரநிலைகளும், அழுத்தங்களும் அதிகள வில் இருக்கக்கூடிய நிலையே தென்படுகின்றது. சமூகவ லைத்தளப் பதிவுகளில் இதன் பிரதிபலிப்புக்களைக் காண முடிகின்றது. இந்த அழகுசார் மதிப்பீடுகளும், ஆண்கள் குடும்பப் பொறுப்பினைக் கைவிடுவதனை ஒரு சமூகப் பிரச் சினையாகக்கொள்ளாத ரசிகமனோபாவமும், பலதார மணத் தினை ஆணுக்குரிய ஏகபோக உரிமையாகக் கொள்ளும் தன்மையும், பொருளாதார மற்றும் எனைய சமூக மதிப்பீடு களுக்கும் மேலதிகமான தாக்கத்தினை சங்கீதா போன்ற பெண்களுக்கு ஏற்படுத்துகின்றன.

பிள்ளைகளைப் பெற்று தம்மைப் பராமரிப்பதற்கே நேரமில் லாமல் வீட்டுவேலைகளிலும், பிள்ளைப் பராமரிப்பிலும் உழ லும் பெண்களையும், பிள்ளைகள் சாப்பிட்ட பிறகு மிஞ்சி யதைச் சாப்பிட்டு வாழும் தாய்மாரையும் எதிர்பார்க்கும் அதே சமூகம்தான் முதலாளித்துவ ஊடகங்கள் கட்டமைக்கும் 'அழகு' பற்றிய மிகைப்படுத்தல்களுக்குள்ளும், கற்பனை களுக்குள்ளும் எவ்வித விமர்சனமுமின்றித் தம்மைத் திளைத் துக்கொள்கின்றது.

முதலாளித்துவ ஆணாதிக்கம் கட்டமைத்த அழகுசார் கண் ணோட்டங்களை உள்வாங்கிக்கொள்ளும் பலர், இந்தக் கண் ணோட்டங்களை சமூகமயப்படுத்தும் நடிகை, நடிகர்களுக்கு தமது உடலையும், அழகையும் விரும்பியவாறு வடிவமைத் துக்கொள்வதற்குத் துணையாக அமையும் வர்க்க, சாதிய நலன்களையும், சமூக மூலதனத்தினையும் விமர்சன பூர்வ மாக அணுகுவதில்லை.

மிகையான ரசிகமனோபாவமானது எத்தகைய பிறழ்வுகளை யும், அநீதிகளையும் சாதாரணமயப்படுத்தும் தன்மையினைக் கொண்டிருப்பதனை இக்காலங்களில் பரவலாக அவதானிக்க முடிகின்றது. ஒரு திரைப்படத்தையோ, ஒரு கலைஞரின் நடிப் புத்திறனையோ ரசிப்பதென்பது வேறு, அக்கலைஞர்மீது அளவுக்குமீறிய பற்றுடன் செயற்படுவதென்பது வேறு. குறிப் பாக, வளர்ந்துவரும் இளைய சமூகம் திரையுலகத்தையும், ஊடக பிரசுரங்களையும் மட்டுமல்லாது தமது வாழ்வின் ஒவ் வொரு அம்சத்திலும் விமர்சனக் கண்ணோட்டத்துடன் அணு குவதற்கான திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். மாறாக, கண்மூடித்தனமான நம்பிக்கைகள் குறிப்பாக ரசிகமனோபா வத்தினால் விளையும் தீராத பற்று போன்றவை சமத்துவம், சமூகநீதி, அறம் போன்ற எமது சமூகத்தினை வழிநடத்துவ தற்கான அடிப்படை விழுமியங்களிலிருந்து விலகி எதையும் சாதாரணமயப்படுத்தும், எதையும் நியாயப்படுத்தும் நிலையை அடைவதானது ஆபத்துமிக்கதாகும். குறிப்பாக, ஒரு சம்ப வத்தினை சமூகநீதிக் கண்ணோட்டத்தில் அணுகாமல் அதில் சம்பந்தப்பட்ட நபர்சார்ந்து அணுகும்போது அது பக் கச்சார்பானதாகவும், இரட்டை நிலைப்பாடுடையதாகவும் அமைகின்றது. அந்தவகையிலேயே, விஜய் மற்றும் சங்கீதா வின் உறவு முறிவு அணுகப்பட்டமையானது பல பெண்களுக் கும் பெண்ணிலைவாதிகளுக்கும் அதிருப்தியினை ஏற்படுத் தியிருக்கின்றது. பெண்கள் பாரபட்சமாக நடத்தப்படுகின்ற சமூகக்கட்டமைப்பில், ஒரு உறவு முறிவு ஏற்படும்போது அதில் சம்பந்தப்பட்ட பெண்களே குற்றஞ்சாட்டப்படுகின்றனர். ஆனால் எவ்வித பொறுப்புக்கூறலும் இன்றி ஆண்களால் மற்றுமொரு உறவைநோக்கி நகர்வதற்கு முடிகின்றது. ரசிக மனோபாவம் அதனைப் பார்த்துப் பெருமையடைகின்றது. இந்த நிலை மாற வேண்டும். பொறுப்புக்கூறல்கள் ஏதுமின்றி குடும்பத்தினைக் கைவிடுவதற்கு ஆணுக்கு இருக்கும் சலு கைகளும், தனியுரிமைகளும் கேள்விக்குட்படுத்தப்பட வேண் டியவை. அந்தவகையில், சமத்துவமான உலகம் என்பது கண்ணுக்குத் தெரியக்கூடிய தூரத்தில் இல்லை.

siva.malathy@thaiveedu.com

Adolescence:

குறுந்திரைத்தொடர்

குழந்தைகள் மீது ஆதிக்கம் செலுத்தும் சமூக ஊடகங்கள்:

கொடுங்காலத்தின் பிடியில் இளமையும் மனித உறவுகளின் அந்நியமாதலும்

ரூபன் சிவராஜா

மிகச் சாதுவான தோற்றமும் மென்மையான உடல் மொழியும் பேச்சும் தொனியும் கொண்ட அந்தச் சிறுவன் எப்படி இத்தகு கொடூரமான கொலையைச் செய்யத் துணிந்தான்? அவனை அதற்குத் தள்ளிய காரணிகள் எவை? இந்தக் கேள்வியே திரைத்தொடரின் நான்கு பாகங்களிலும் கேள்வியாக ஊடறுத்தும் ஊடுருவியும் சென்று விடை தருகின்றது. ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு முடிச்சுகள் அவிழ்கின்றன. பல்வேறு சிக்கல்களின் பல்வேறு பரிமாணங்கள் வெளிப்படுகின்றன. அப்பாவிச் சிறுவன் என்பதே அந்தச் சிறுவனின் தோற்றம், குரல், உடல்மொழியிலிருந்து பார்வையாளருக்கு ஏற்படுகின்ற சித்திரம். தோற்றத்தையும் செயலையும் பொருத்திப்பார்ப்பது அத்தனை கடினம். அதுவே இந்தக் கதையின் மையமும், அதாவது கட்டற்ற வெளியாகவுள்ள இணையமும் சமூக ஊடகங்களும் எத்தகையை ஆபத்தான மனநிலைகளைப் பிஞ்சுகளின் மனங்களிலும் உருவாக்குகின்றது என்பதாகும்.



tg.theeban@gmail.com

பிரித்தானிய குறுந்திரைத்தொடரான Adolescence, 2025 மார்ச் நெற்பிளிக்ஸ் (Netflix) தளத்தில் வெளியாகி உல கெங்கும் பரவலாகப் பார்க்கப்பட்டது. பரந்த அளவிற் பேசவும் விவாதிக்கவும்பட்டது. இந்தத் தொடர் வெளியான மூன்று வாரங்களில் மட்டும் 100 மில்லியன் பார்வையாளர்களை எட்டி யிருந்தது. நான்கு பகுதிகளைக் கொண்ட குறுந்திரைத்தொடர். ஒவ்வொரு தொடரும் கிட்டத்தட்ட 60 நிமிட நீளம் கொண்டவை. Adolescence என்பதைத் தமிழில் 'வளரிளம் பராயம்' என லாம். இது குழந்தைப் பருவத்திற்கும் வளர்ந்த பருவத்திற்கும் இடைப்பட்ட வாழ்க்கைக் காலத்தைக் குறிக்கிறது. வயது அடிப் படையில் 10 - 19 வயதுக் காலத்தைச் சுட்டுகிறது.

குழந்தைகளின் உலகம் – சமகாலப் பிரதிபலிப்பு:

உலகளாவிய சமகாலத்தோடு நெருக்கமாக நோக்கக்கூடிய கதைக்களத்தினையும் பாத்திரங்களையும் கொண்டுள்ளது இக்குறுந்தொடர். குறிப்பாக, சமூக ஊடகங்களானது சிறுவர் கள், இளையவர்கள் மீது ஏற்படுத்துகின்ற தாக்கம், பெற் றோர் - பிள்ளைகள் இடையேயான இடைவெளிகளைப் பிரதி பலிக்கின்றது. சமூக ஊடகம் தாக்கம் செலுத்துகின்றது என்பது மென்மையான சொல்லாடல். ஆதிக்கம் செலுத்துகின்றது என் பதே பொருத்தமான மதிப்பீடு.

ஜேமி என்கிற 13-வயது சிறுவன் சகமாணவி ஒருவரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்படுவதோடு திரைப்படம் தொடங்குகின்றது. அச்சிறுவன் மீதான காவல் துறை விசாரணைகள், உளவியல் நிபுணர் சிறுவனுடன் மேற் கொள்ளும் உரையாடல்கள், கொலைக்கு இட்டுச் சென்ற சம் பவங்களின் நினைவுத் தெறிப்புக் காட்சிகள், வெவ்வேறு நபர் களைச் சந்தேகப்படும் விசாரணைகள் எனவாக ஒவ்வொரு பாகத் திலும் காட்சிகள் நகர்த்தப்படுகின்றன. அடுத்தடுத்த பாகங் களில் பாடசாலையில் ஆசிரியர்கள், மாணவர்களுடன் விசா ரணை அதிகாரிகளின் உரையாடற் காட்சிகள் எனவாகக் கதை விரிகின்றது. இவை அனைத்தின் பின்னணியிலும் மிகுந்த துயரும் பதற்றமும் அதிர்ச்சியும் கொண்ட சிறுவனின் குடும் பத்தினர். இரண்டாவது பாகம் ஜேமி கல்வி கற்கும் பாட சாலைச் சூழலைச் சுற்றியதாகவும் வகுப்பறைகளிலும் நிகழ் கிறது. மூன்றாவது பாகம் ஜேமிக்கும் மனநல மருத்துவர் பிரி யோனி அரிஸ்டன் (Erin Doherty) இற்கும் இடையிலான உரை யாடலாகவும், இறுதிப் பாகம் ஜேமியின் குடும்பச் சூழலின் பின்னணியில் அவர்களது உணர்வுகள், மனக்கொந்தளிப் புகள், பரிதவிப்புகளைக் காட்சிப்படுத்துகிறது.

கதை – களம் – பேசுபொருள் – திரைப்படைப் பாக்க உத்தி:

இந்தத் திரைத்தொடரினை இரண்டு அடிப்படைகளில் முக்கிய மானதாகப் பார்க்கலாம். ஒன்று இதன் கதையும் களமும் பேசு பொருளும். அது சமகாலப் பிரதிபலிப்புடையது. குழந்தை களின் உலகம் பற்றியதும்கூட. சமூக ஊடக 'அல்கோரிதங்க ளால்' (Algorithams) இயக்கப்படுகின்ற குழந்தைகளின் மனம், செயல், நடத்தைகள் பற்றியது. அடையாளங்கள், மதிப்பீடுகள், மனநிலைகள், அணுகுமுறைகள் திணிக்கப்படுகின்றன, கட்ட மைக்கப்படுகின்றன. வலி மிகுந்த சமூக ஊடக யதார்த்தங் கள் அவை. சமூக ஊடகங்கள் ஒருபுறம் தகவல் புரட்சி, கருத் துச் சுதந்திரத்திற்கான வெளிகளைத் திறந்துள்ளன. மறுபுறம் ஒரு பெரும் மானிட விரோத பேரழிவுக் கலாசாரத்தை உரு வாக்கியும் வருகிறன்றன.

இரண்டாவது இது படைப்புருவாக்க உத்திசார்ந்தும் செயல் முறை (Algorithams) சார்ந்தும் சற்று மாறுபட்டது. இந்தத் தொடர் ஒவ்வொன்றும் ஒளிப்படக் கருவி நிறுத்தப்படாமல் தொடர்ச்சியாகப் படமாக்கப்பட்டவை. அது ஆங்கிலத்தில் 'One take / Non-cut' முறைமை என அழைக்கப்படுகின்றது. பல காட்சிகள் எடுத்து பின்னர் ஒன்றாக இணைக்கும் முறை யைப் பயன்படுத்தவில்லை. வெட்டு, தொகுப்பு போன்ற வழமையான திரைத் தொழினுட்ப உத்தி பயன்படுத்தப்பட வில்லை. ஒளிப்படக் கருவியை எந்தவொரு காட்சியிலும் நிறுத் தாமல் படம் முழுவதும் தொடர்ச்சியாக இயக்கும் பொறிமு றையூடாகப் படமாக்கப்பட்டுள்ளது. அதற்கேற்றமுறையில் படத்திற்கான எல்லாக் காட்சிகளும் ஒத்திகைகள் பார்க்கப் பட்டு ஒரு நாடகத்தை ஒத்தமுறையில் தயார்ப்படுத்தப்பட்டி ருக்கிறது. ஆனால் நாடகம் போலல்லாமால் அதனுடைய காட்சி கள் வெவ்வேறு களங்களில் (Locations) நிகழும். நடிப்பு முறை யும் சினிமாவிற்குரியதாக (Cinematic acting) இருக்கும். இதுவொரு கடினமான திரைப்பட உருவாக்கச் செயல்முறை யாகும். மிகுந்த இயல்புத்தன்மையோடும் உரிய காட்சிப் பின் புலங்களோடும் உருவாக்கப்படுகிறது.

இந்தத் தொடர் கையாண்டுள்ள பேசுபொருள், அதன் மனித உறவுகள், சமூக வாழ்வியல் பிரதிபலிப்புகள் குறித்தும் படைப் பாக்க உத்திகள் குறித்துப் பேசுவது பயனுடையது. இதன் பிரதிபலிப்பினை இணைய, சமூக ஊடகங்களின் ஆபத்தும் அபத்தமுமான போக்கின் விளைவென மட்டும் சுருக்கிவிட முடி யாது. இது பெற்றோர் பிள்ளை உறவு, உரையாடல் இடை வெளி, உணர்வுப் பகிர்வின்மை, ஆண்-பெண் குழந்தைகளுக் கிடையேயான வளர்ப்பு முறை வேறுபாடுகள் சார்ந்தும் நோக் கக்கூடியது. ஆண் குழந்தைகள் வளர்க்கப்படும் முறை, ஆண்மை (Masculinity), ஆணாதிக்கச் சிந்தனை குறித்த உட் பொருளும் கட்டமைக்கப்பட்ட பிம்பமும் எனப் பல்வேறு சிக் கல்கள் குறித்த உரையாடல்களுக்கான தூண்டுதல்களையும் வெளிகளையும் கொண்டுள்ளது.

சிறுவன் ஏன் கொடூரமான கொலையைச் செய்யத் துணிந்தான்?

முதற் பாகத்தில் சிறுவனை கைது செய்யும் நடவடிக்கை யானது, சீருடை தரித்த காவல்துறையின் பெரும் படை ஆளணி கள், கனரக ஆயுதங்கள் வாகனங்களின் சுற்றிவளைப்பு ஊடாக

மேற்கொள்ளப்படுகிறது. ஒரு 13 வயதுச் சிறுவனை இப்படி யான ஒரு சுற்றிவளைப்பின் மூலமா கைதுசெய்ய வேண்டும். சாதாரணமாக சிவில் உடையுடன் இரண்டு - மூன்று காவல்து றையினர் மட்டும் போதாதா ஒரு சிறுவனைக் கைது செய்ய? பிரித்தானியக் காவல்துறைச் சட்டத்தில் இதற்கான இடம், அனுமதி உள்ளதா என்ற கேள்வி எழுகின்றது. நோர்வே போன்ற நாடுகளில் இத்தகைய முறையிற் சிறுவர்களைக் கைது செய் யமாட்டார்கள். அது சிறுவர்கள் மீதான வன்முறையிற் சேர்க் கக்கூடிய அணுகுமுறை.

பெற்றோர், தமக்கையுடன் வசித்துவருகின்ற சிறுவன் ஜேமி. பகிடிவதைகள், கேலிகள், அவதூறுகள், இழிவுபடுத்தல்கள், அச்சுறுத்தற் கலாசாரத்திற்கான களமாகச் சமூக ஊடகங்கள் உள்ளன. கொலைக்கு முன்பாக Instagram-இல் அவன் அவ மதிப்புகள், துன்புறுத்தல்களுக்கு உட்பட்டுள்ளான். ஆண்மைய இணையக் கருத்தியல் (Online Manosphere) கலாசாரத்தின் செல்வாக்கும் இந்தக் கொலைக்கான காரணி என்பதாகவும் சித்திரிக்கப்படுகின்றது.

முதற்பாகத்தில் காவல்துறை தலைமை விசாரணையாளர் அவரது மகனிடமிருந்து வந்த குரல் தகவல் (Voice message) ஒன்றினைச் செவிமடுக்கிறார். தனக்கு வயிற்று வலி என்பதால் பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டில் நிற்பதற்குத் தகப்பனி டம் அனுமதி கேட்கிறான் மகன். பாடசாலைக்குச் செல்ல மறுப்பதென்பது அல்லது தவிர்க்க எத்தனிப்பதானது சிறு வர்கள் மத்தியில் பொதுவாக இருக்கக்கூடிய மனநிலையை வெளிப்படுத்துகின்றது. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக் கின்றன. கல்வியின் கடினம், ஆசிரியர்களின் அணுகுமுறை என்பது ஒரு பக்கம். சிறுவர்கள் எதிர்கொள்ளும் பகிடிவதை கள், வார்த்தை ரீதியான துன்புறுத்தல்கள், கேலிகளும் கணிச மான காரணிகளாக உள்ளன.

இந்தத் தொடரின் முதலாவது பாகத்தில் கண்காணிப்புக் கமரா வில் பதிவுசெய்யப்பட்ட காணொளித் துண்டு ஒன்றில் கொலை நிகழ்ந்த காட்சி காண்பிக்கப்படுகின்றது. எனவே யார் கொலையை நிகழ்த்தியது என்பதற்கான விசாரணை அல்லது கேள்விக்குரிய தேவை அங்கு இல்லை. ஏன் கொலை நிகழ்த் தப்பட்டது என்பது தொடர்பான விசாரணையாகவே காட்சி களும் சித்தரிப்புகளும் நகர்கின்றன. மிகச் சாதுவான தோற்ற மும் மென்மையான உடல் மொழியும் பேச்சும் தொனியும் கொண்ட அந்தச் சிறுவன் எப்படி இத்தகு கொடூரமான கொலை யைச் செய்யத் துணிந்தான்? அவனை அதற்குத் தள்ளிய காரணிகள் எவை என்பது விசாரணைகளில் தெரியவருகின் றது. இந்தக் கேள்வியே திரைத்தொடரின் நான்கு பாகங்க ளிலும் கேள்வியாக ஊடறுத்தும் ஊடுருவியும் சென்று விடை தருகின்றது. ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு முடிச்சுகள் அவிழ்கின்றன. பல்வேறு சிக்கல்களின் பல்வேறு பரிமாணங் கள் வெளிப்படுகின்றன. அப்பாவிச் சிறுவன் என்பதே அந்தச் சிறுவனின் தோற்றம், குரல், உடல்மொழியிலிருந்து பார்வை யாளனுக்கு ஏற்படுகின்ற சித்திரம். ஆனால் அவன் இழைத்த கொடூரம் என்பது நேரெதிர் முரண். தோற்றத்தையும் செயலை யும் பொருத்திப்பார்ப்பது அத்தனை கடினம். அதுவே இந்தக் கதையின் மையமும். அதாவது கட்டற்ற வெளியாகவுள்ள இணையமும் சமூக ஊடகங்களும் எத்தகையை ஆபத்தான மனநிலைகளைப் பிஞ்சுகளின் மனங்களிலும் உருவாக்கு கின்றது என்பதாகும்.

One Take – Noncut – Live Location படைப்பாக்கச் செயல்முறை:

One Take-இல் படமாக்குவதென்பது சவாலானது. அதற்கு சிரத்தைமிகு ஒத்திகைகள் அவசியம். ஒத்திகைகள் மட்டு மல்ல, கமரா உலவும் காட்சிப்புலங்களை நுணுக்கமாக உரு வாக்கவேண்டும் அல்லது தெரிவுசெய்ய வேண்டும். Live lo-cation எனினும் கதை கோருகின்ற காட்சிப் பின்புலங்கள், பொருட்கள், தளபாடங்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். நடிகர்கள் தமக்கான உரையாடல்களிலோ, நடிப்பிலோ ஏதோ வொரு தவறு இழைத்தால், முதலிலிருந்து முழுக்காட்சியும் மீண்டும் தொடங்கப்படவேண்டும்.

Adolescence இதன் காட்சியாக்க (படமாக்கல்) உத்தியும் தேர்ந்துகொண்ட கதைக்களமும் ஒவ்வொரு பாகத்தையும் ஆர்வமூட்டும் வகையிலும் உணர்வுபூர்வமாகவும் பார்க்க வைக் கிறது.

ஒரே ரேக்கில் படமாக்கிய அனுபவத்தினை நெற்பிளிக்ஸ் நிறு வனம் பகிர்ந்துள்ளது. ஒவ்வொரு பாகமும் எத்தனையாவது 'ரேக்'-இல் படமாக்கப்பட்டது என்பதையும் அந்நிறுவனம் பகிர்ந்துகொண்டுள்ளது. ஒவ்வொரு பாகத்திற்கும் அதிகம் பத்து ரேக்குகள் வரை சென்றுள்ளன. காலை, மாலை என நாளுக்கு இரண்டு டேக்குகளாக ஐந்து நாட்களைத் திட்டமிட் டிருந்தனர். ஆனால் எப்போதும் எதிர்பாராத தடங்கல்கள் தவறுகளால் சில பாகங்களின் காட்சிப்படுத்தல் 10 தடவை களை விடக் கூடுதலான தடவைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முதலாவது பாகம் இரண்டாவது காட்சிப்படுத்தலில் நிறைவு செய்யப்பட்டது. பாகம் இரண்டு 13-வது காட்சிப்படுத்தலில் நிறைவு செய்யப்பட்டது. மூன்றாவது பாகம் 11-வது காட்சிப்ப டுத்தலிலும், இறுதிப்பாகம் 16-வது காட்சிப்படுத்தலிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கிறது.

படப்பிடிப்பிற்கு முன்னரான ஒத்திகைகள் பற்றிய குறிப்பு களும் வெளிவந்துள்ளன. ஒத்திகைகளில் உரையாடல்கள், பாத்திரங்களுக்கிடையிலான தொடர்பாடல், ஊடாட்டம், நகர் வுகள் (Movements) பயிற்சிசெய்யப்பட்டதாக பகிரப்பட்டுள்ளது.

கத்தரிப்புகள் (Cuts) இன்றி ஒரே காட்சிப்படுத்தலில் கதை சொல்லப்படும்போது தனித்துவமானதும் கூடுதல் ஒன்றுதலை யும் பார்வையாளர்களுக்கு ஏற்படுத்தமுடியும். அனைத்துக் காட்சிகளும் தொடர் படிமங்களாக நகர்ந்துகொண்டிருக்கும் போது, உண்மைத் தன்மையும் அழுத்தமும் உணர்வுபூர்வ மும் இயல்புத்தன்மையும் பேணப்படுகின்றது.

காட்சிச் சித்தரிப்புகளும் கதை நகர்வும்:

இரண்டாவது பாகம் சிறுவன் படிக்கும் பாடசாலையை மையப் படுத்தி நகர்கிறது. அதே பாடசாலையிற் தான் தலைமை விசாரணையாளரின் மகனான ஆதாமும் படிக்கிறான். விசா ரணை அதிகாரியும் உதவியாளரும் வகுப்பறைகளுக்கு விஜயம் செய்து, கொலைச் சம்பவத்தோடு தொடர்புபட்ட தகவல் உள் ளவர்களை முன்வருமாறு கேட்கின்றனர். அந்தப் பாடசாலை ஒரு கல்வி நிலையமாக இல்லாமல், பிரச்சினைகள் மிகுந்த

இடமாக இருக்கின்றது. மாணவர்கள் ஒருவரோடொருவர் நல்லுறவைக் கொண்டவர்களாக இல்லை. பெரியவர்களும் குழந்தைகளிடம் அன்பாக இல்லை. பெரியவர்கள் குழந்தைகளைப் பாராமுகமாக நடத்துவதைக் காட்சிகள் சித்தரிக்கின்றன. பெரியவர்கள் குழந்தைகளோடு ஒரே இடத்தில் இருக்கின்றனர். ஆனால் அவர்களோடு செலவிடவோ, குழந்தைகளைப் புரிந்து கொள்ளவோ பெரியவர்களுக்கு நேரமோ, வாய்ப்போ இல்லை.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தை பெற்றுக் கொடுத்ததாக தெரியவரும் இடத்தில் ஒரு மாணவருக்கும் விசாரணை அதிகாரிக்கும் இடையே நல்ல உறவு உருவாகிறது. ஆனால் திடீரென அந்தச் சிறுவன் வகுப்பறையிலிருந்து ஓட்டமெடுக்கிறான். அவனைத் துரத்திச் சென்று கைது செய்வதில் முடிகிறது அந்தக் காட்சி. பெரியவர்களாலும் தாம் அன்றாடம் ஊடாடும் மனிதர்களாலும் தாங்கள் கவனிக்கப்படவேண்டும் என்பது குழந்தைகளின் உள்ளக்கிடக்கை. ஆனால் பெரியவர்கள் தங்கள் வேலைகளிலும், பின்பற்றப்படவேண்டிய விதிமுறைகளிலும் கவனம் செலுத்துகினறனர். இங்கு நேரடியாக எவரும் தவறிழைப்பதாகக் குற்றம் சுமத்த முடியாது. ஆனால் பெரும்பாலான மனிதர்கள் குழந்தைகள் மீதான கரிசனைக்கு இடமளிக்காத ஒரு வாழ்வியல் அமைப்பில் (Life System) சிக்கிக்கொண்டுள்ளனர்.

அடிப்படையில் ஒரு தனிமனிதரோ, குழுவோ, சமூகமோ தாம் ஒடுக்கப்படுவதாகவும் அவமதிக்கப்படுவதாகவும் உணரும் போது, அது அவர்கள் மத்தியிற் கோபத்தை உருவாக்குகிறது. தீவிர சிந்தனைகளுக்கும் செயல்களுக்குமான தூண்டுதலை அமைத்துக்கொடுக்கின்றது. தீவிரத்தன்மை என்பது ஒரு நீண்ட செயல்முறையின் இறுதிநிலை. சிறுவனின் இந்த முடிவிற்கும் கொடூரச்செயலுக்கும் இட்டுச்சென்ற காரணங்களைப் புரிந்துகொள்வதற்கு அவனுடைய சுயவெறுப்பு எங்கிருந்து தொடங்கியது என்பதை விளங்கிக்கொள்தல் அவசியமாகுகின்றது. உலகம் முழுவதும் இப்படியாக தாம் கவனிக்கப்படாததாலும் மதிக்கப்படாமையினாலும் கோபமும் விரக்தியும் கொண்டவர்களாக மாறியிருக்கும் சிறுவர்களை, வளரிளம் ஆண்களை நாம் காணமுடியும். அவர்களின் கோபத்திற்கும் விரக்திக்குமான அடிப்படைக் காரணங்களும் சூழல்களும் களையப்படுவது அவசியமானது.

ஆண்மையவாத, பெண்வெறுப்புக் கருத்துகள் (Manosphere) மீதான ஈர்ப்பு:

குற்றமிழைத்த சிறுவன் ஆண்மையவாத, பெண்வெறுப்புக் கருத்துகளால் (Manosphere) ஈர்க்கப்பட்ட நபர் என்பதற்கான நேரடியான காட்சிகள் இல்லை. அவை மறைபொருளாக வெளிவருகின்றன. குறிப்பாக உளவியல் நிபுணர் - சிறுவன் உரையாடல்களிலிருந்து அது குறித்த புரிதல் ஏற்படுகின்றது. Manosphere என்பது பல்வேறு இணையத்தளங்கள், கருத்தாடல்கள், பிரபலங்கள் மற்றும் பல்வேறு துணைக் கலாசாரங்களைக் (Subculture) கொண்ட ஒரு வலைப்பின்னல் எனலாம். இவை அனைத்திற்கும் பொதுவான ஒரு போக்காக பெண் எதிர்ப்புவாத (Antifeminist) பின்னணி உள்ளது.

Manosphere குறித்துச் சற்று விரிவாகப் பார்க்கலாம். பல்வேறு இணையவழிக் குழுக்கள், இணையத்தளங்கள், வலைப் பதிவுகள், (Podcast) காணொளித்தளங்கள், ஒலிவடிவப் பதிவுகள் (YouTube) மற்றும் இன்னபிற சமூக ஊடகத் தளங்கள், தனிப்பட்ட மற்றும் மூடப்பட்ட தகவற்பரிமாற்றக் குழுக்கள் (WhatspApp, Viber, Telegram, Messanger, SnapChat) உட்பட்ட தளங்களில் பெண்-வெறுப்புக் கருத்துகள், கோட்பாடுகளைப் பகிர்வதையும் பரப்புவதையும் குறிக்கின்ற பொதுச் சொல்லாடல் இது. Manosphere சூழல்களில் பொதுவாக ஆண்மையக் கருத்துகளும் பெண் விடுதலைக்கு எதிரான மனப்பான்மையும் மேலோங்கிக் காணப்படுகிறது.

இந்தச்சொல் 2000-களின் நடுப்பகுதியில் வலைப்பதிவுகள் மற்றும் இணையதளங்கள் வளரத் தொடங்கியபோது உருவானது. 2020-ஆம் ஆண்டு, ஊடகர் Laura Bates, எழுதிய 'Men who hate women' (பெண்களை வெறுக்கும் ஆண்கள்) என்ற நூலில், ஆண்மையவாதக் குழுக்கள் இணையப்பரப்பில் பெண்களுக்கு எதிரான வெறுப்பையும், பெண் விடுதலைக்கு எதிரான மனப்பான்மையையும் வளர்க்கின்றன என்று விவரித்திருக்கின்றார்.

பெண்–பாலினம் குறித்த எதிர்மறைக் கற்பிதங்களின் (பெண்வெறுப்பு) செல்வாக்கு:

இக்கருத்து உயிரியல்சார் பாலினப் புரிதலின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டதாகும். அதாவது பாலினங்கள் இயற்கையாகவே வேறுபட்டவை என்று கருதப்படுகிறது. இயற்கையான சமநிலை ஒன்று உள்ளது என்று இவர்கள் கருதுவதோடு, பெண் என்பவள் ஆணுக்குக் கீழ்ப்படிந்தவளாகவும், ஆண் குடும்பத்தின் தலைவனாகவும் இயங்கவேண்டும் என்பதுவும் இவர்களது அடிப்படைவாதக் கருதுகோள். இக்கருத்தாளர்கள் ஆண்-பெண் சமத்துவம் இயற்கையின் இந்தச் சம நிலையை அழித்துவிட்டது என்றும், பெண் விடுதலைக் கருத்தியலும் செயற்பாடுகளும் ஆண்களின் 'ஆண்மையை' வெளிப்படுத்தும் வாய்ப்புகளைக் குறைத்துவிட்டது என்றும் கருதுகின்றனர்.

சமூக ஊடகங்கள் கட்டுப்பாடுகள் அற்றவை. குறிப்பாக அவை ஆசிரியர்களால் கட்டுப்படுத்தும் ஊடகங்கள் (Editorially controlled media) அல்ல. அந்த வகையில் இளைஞர்கள் அதிகம் பயன்படுத்தும் Tiktok, Instagram, Snapchat மற்றும் சமூக ஊடகங்கள் ஊடக விதிமுறைகளுக்கு உட்பட்டவை அல்ல. இத்தகு சமூக ஊடகங்களில், Andrew Tate போன்ற ஆணாதிக்க - பெண்வெறுப்பு தீவிர வலதுசாரிகள் செல்வாக்குச் செலுத்துகின்றனர். Andrew Tate குறித்தும் அந்நபரின் பிரபலமும் அவர் உலகளாவிய இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள எதிர்மறைத் தாக்கங்கள், செல்வாக்குகள் குறித்துச் சுருக்கமாகப் பார்ப்பது பொருத்தமானது. இந்நபர் 2007 - 2020 காலப்பகுதியில் ஒரு தொழில்முறைக் குத்துச்சண்டை வீரராக விளங்கியவர்.

நான்கு முறை குத்துச்சண்டைப் போட்டியில் உலகக்கிண்ணம் வென்றவர். அதுவே இவரின் உலகப் புகழுக்கான அடிப்படைக் காரணம். இணையத்தில் 10 மில்லியனுக்கும் அதிகமான பின்தொடர்பவர்களுடன் அதிக கவனம் பெற்றுள்ள பிரபலம்.

பெண்-வெறுப்பு மனநிலையை இளைஞர்களிடையே பரப்பி வருவதாக விமர்சிக்கப்பட்டுள்ளார். பல சமூக ஊடகங்கள் இவரைத் தடை செய்துமுள்ளன. 2018-இல் அவர் பெண்களைக் காதலில் விழச்செய்தல், பெண்-வெறுப்பு, எவ்வாறு இலகு வாகப் பணம் சம்பாதித்தல் மற்றும் முதன்மை ஆணாகத் திகழ (alpha male) என்ன செய்யவேண்டும் போன்ற உள்ள டக்கங்களுடன் காணொளிகளை உருவாக்கி வெளியிடத் தொடங்கினார்.

குத்துச்சண்டை விளையாட்டிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் பாலினம், அதிகார உறவுகள், பாலியல் வன்கொடுமை குறித்த சர்ச்சையான கருத்துகளை வெளியிட்டுப் பரப்பியதன் மூலம் சமூக ஊடகப் பிரபலமாகியதோடு இணையவெளியில் ஓர் ஆண்மைய மேலாதிக்கக் கருத்துகளால் இளைஞர்கள் மத்தியிற் செல்வாக்குப் பெற்ற மனிதராகவும் உள்ளார். பிரித்தானிய அமெரிக்க பின்னணியுடைய ஒரு தீவிர வலதுசாரி சமூக ஊடகப் பிரபலம் என்ற வகைமைக்குள் இவர் அடங்குகின்றார்.

தன்னை ஒரு பெண்வெறுப்பாளர் 'Misogynist' எனவும் அவர் வெளிப்படுத்திவருபவர். Misogynist' எனும் சொல் பெண்களை வெறுக்கின்ற, அவமதிக்கின்ற, இழிவு செய்கின்ற தீவிரச் செயல்களைக் கொண்டிருக்கும் நபரைக் குறிக்கின்றது. 2022-இல் Andrew Tate மற்றும் அவரது சகோதரர் Tristan Tate பாலியல் வன்கொடுமை மற்றும் மனிதக் கடத்தற் குற்றச்சாட்டில் ரோமேனியாவிற் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் 2025-இல் விடுவிக்கப்பட்டு அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டனர். இரு சகோதரர்களும் பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகளுக்காகப் பிரித்தானியாவில் தேடப்படும் நபர்களின் பட்டியலில் உள்ளனர். அத்தோடு வருமான வரி ஏய்ப்புக் குறித்த குற்றச்சாட்டுகளும் இவர்கள் மீது உள்ளன. தவிர வேறு பல சிவில் வழக்குகளும் இவர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பெண்கள் மீதான பாலியல், வன்முறை மற்றும் இழிவு படுத்தல் சார்ந்த இவர்கள் மீதான வழக்குகளைக் குறிப்பிடலாம்.

உளவியலாளர் – சிறுவன் உரையாடலின் உருக்கமிகு காட்சிகள்:

Adolescence திரைத் தொடரின் மூன்றாவது பாகம் ஜேமிக்கும் ஒரு பெண் மனநல மருத்துவருக்குமிடையிலான உரையாடல். அந்த உரையாடலின் நோக்கம் கொலைக்குப் பின்னாலிருந்த காரணிகளையும் ஜேமியின் உளவியலையும் கொலைக்குத் தூண்டிய காரணங்களையும் அறிவதும் மதிப்பிடுவதுமாகும். அந்தப் பாகத்தின் முடிவில் ஓர் உருக்கமிகு காட்சி. உளவியலாளர் பாத்திரம் ஒன்று இந்த விவகாரத்தில் தனது மதிப்பீடு முடிந்துவிட்டது என்று ஜேமியிடம் விடைபெறும் காட்சி அது. இனி தாம் சந்திக்க நேராது என்று கூறி முடிக்கிறார்.

உளவியலாளர் - ஜேமி இடையிலான உரையாடல் நேரத்தில் ஜேமி தன்னைப் படிப்படியாக முழுமையாக வெளிப்படுத்துகிறான், ஒப்புக்கொடுக்கிறான் என்றும் சொல்லலாம். தான் யாரென்பதை முழுமையாக, சுவாரசியமாக, குற்றவுணர்வுடன், கோபாவேசமாக எனப் பல்வேறு உணர்வு நிலைகளில் அவனது அந்த வெளிப்படுத்தல் நிகழ்கிறது. உரையாடலின் இறுதியில், உளவியலாளரின் மதிப்பீடு பற்றிய கூற்றினைக் கேட்டு அவன் குழப்பமடைகிறான். அச்சமும் விரக்தியும் தலை குனிவும் அவனை ஆட்கொள்கிறது. இருவருக்குமிடையில் ஒரு சுமூகமான தொடர்பாடல் ஏற்பட்டிருக்கும் நிலையில் உளவியலாளர் விலகுகிறார். ஜேமி பதற்றமடைகிறான். 'உங்களுக்கு என்னைப் பிடிக்குமா?' என்று திரும்பத்திரும்பக் கேட்கிறான். இது அவனது ஆழ்மனதிலிருந்து வந்த கேள்வி என்பதைப் பார்வையாளர் எளிதிற் புரிந்துகொள்வர். உளவியலாளரும் உள்ளன்போடு அவனது நிலைக்காக உள்ளுக்குள் உருகாமல் இல்லை. ஆனாலும் தொழில்முறை ஒழுக்கத்தைப் பேணவேண்டியவர் அவர் அல்லவா?

'நான் மற்றவர்கள் விரும்பத்தக்க மனிதனா?,

எனக்குள் உள்ளார்ந்த பெறுமதி ஏதேனும் உள்ளதா'

என்பவையே அவன் உண்மையிற் கேட்கும் விடயம். இங்கு உளவியலாளர் முற்றிலும் தோல்வியடைந்த ஒருவராக கையறு நிலையில் நிற்கிறார். தான் தொழில்முறை வகிபாகத்தை மட்டும் கொண்டிருப்பதாகத் எண்ணி அவ்விடத்திலிருந்து விடுவித் துக்கொள்கிறார். இங்கு மேலுமொரு வெறுமையான 'வளர்ந் தோர் முகம்' ஒன்று அந்தச் சிறுவனை எதிர்கொள்ளத் திரா ணியற்று நிற்கிறது.

ஆண்மையவாதச் சிந்தனைகளுக்கு ஆட்படாமல் சிறுவர்கள் வளர்வதற்கு அவர்களுக்கு சமத்துவ சிந்தனையுள்ள ஆண் முன்மாதிரிகள் (Male role models) இருக்க வேண்டும். மற்ற வர்களின் மீது அதிகாரம் செலுத்தாமல், குறிப்பாகப் பெண் கள் மீது அதிகாரம் செலுத்தாமல், வெறுப்புக் கொள்ளாமல் தமது 'ஆண்மையை - Masculine' வெளிப்படுத்துவதற்கு வழி காட்டல் அவசியம்.

சிறுவனாக Owen Cooper நடித்துள்ளான். அவனுக்கு இதுவே முதற்படம். தேர்ந்த நடிகனுக்குரிய ஆற்றுகைத் திறனுடன் முழுத்திரைப்படத்தினையும் தாங்கியிருக்கின்றான். குணாம் சத்தையும் இயல்பையும் எளிதில் வகைப்படுத்த முடியாத தந்தையின் பாத்திரத்தை உணர்ச்சிபூர்வமாகவும் அழுத்தமா கவும் Stephen Graham வெளிப்படுத்துகின்றார்.

சிறுவன் ஒருவன் பயங்கரமான கொலை ஒன்றினைச் செய்தி ருக்கின்ற பின்னணியில் 2000-ஆம் ஆண்டு ஒரு குறுந்தொடர் வெளிவந்தது. அதன் தலைப்பு Defending Jacob. அது அமெ ரிக்கத் தொடர். அதனை நோர்வேஜியரான Morten Tyldum இயக்கியிருந்தார். Defending Jacob தொடரில், தன் குழந்தை மோசமான வன்முறையைச் செய்திருக்கும் என்று அறிந் திராத, நம்பாத மன அமைதியின் குரலினைச் சித்தரித்தது. இந்த Adolescence கொலைக்குற்றம் சமத்தப்பட்ட குழந்தை முகம்கொடுக்கும் சட்ட ரீதியான நிகழ்வுகளையும் அவை அச் சிறுவனைச் சுற்றியுள்ள மனிதர்கள் மீத ஏற்படுத்தும் தாக் கங்கள் குறித்த இயல்பானதொரு சித்திரத்தினைப் பிரதிப லிக்கின்றது. அத்தோடு பெண்களுக்கு எதிரான ஜேமியின் வெறுப்பிற்கான தோற்றுவாய் எத்தகையது என்பதிலும் கவ னம் செலுத்துகின்றது.

பார்வையாளர்களுக்குள் பல கேள்விகளை உந்தக்கூடிய வகையில் காட்சிகள் Adolescende-இல் வருகின்றன. குறிப் பாக அந்தச் சிறுவன் கொலை செய்திருக்க வாய்ப்பில்லை, இதனை வேறெவரேனும் தான் செய்திருக்கக்கூடும் என்று பல சந்தேகத்திற்குரியவர்கள் மீது கவனம் செல்கிறது. சிக்கலான குடும்ப உறவுகள் திரையில் நம்பகமாகவும் யதார்த்தத்திற்கு நெருக்கமாகவும் வெளிப்படுகின்றன.

கதைக்கரு திறக்கின்ற உரையாடல் வெளி:

இத்தொடர் ஏற்படுத்திய விவாதங்களில் சமூக ஊடகப் பாவ னைக்கு, அதாவது அவற்றில் பாவனையாளர் ஆவதற்குரிய வயதெல்லையைக் கூட்டுவதோடு, தீங்கு விளைவிக்கும் உள் ளடக்கத்திற்கு கடுமையான கட்டுப்பாடுகள் நடைமுறைப்ப டுத்தப்படவேண்டுமென்ற கோரிக்கைகளும் சமூகச் செயற் பாட்டாளர்கள், அரசியல்வாதிகளிடமிருந்து முன்வைக்கப்படு கின்றன. சமூக ஊடகங்கள் ஊடான தீவிரவாத மற்றும் குற்ற வியல் செயற்பாடுகளைத் தடுக்கும் நோக்கில் இந்தத் திரைத் தொடரைப் பிரித்தானியப் பாடசாலைகளில் காண்பிக்க வேண் டும் என்ற ஆலோசனையை பிரித்தானியப் பிரதமர் கெய்ர் ஸ்ரார்மர் (Keir Starmer) முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.

சமூக ஊடக உலகத்தில் அவற்றின் பாவனை வெளியில் குழந்தைகள், சிறுவர்களுக்கு ஏற்பட்டுவரும் தீங்குகள் குறித் துப் பேசுவது அவசியம். அதேவேளை இன்றைய காலத்தின் பிள்ளைகள் மிக அதிகமாக கட்டுப்படுத்தப்பட்ட வாழ்க் கையை வாழ்கிறார்கள். அதாவது அவர்களுக்கான பௌதீக வெளிகள், சுதந்திரங்கள் கணிசமாகச் சுருக்கப்பட்டுள்ளன. மனித உறவுகளுக்கிடையிலான ஊடாட்டங்கள், பகிர்வுகள், உணர்வு வெளிப்பாட்டுக்கான வாழ்வியற் சூழல் அருகியுள் ளது. எனவே அவர்கள் அணுகக்கூடிய உலகத்தின் மீது கட் டுப்பாடுகளை விதிப்பது தீர்வாகாது, கண்காணிப்புகளும் தீர் வாகாது. கட்டுப்பாடுகளையும் கண்காணிப்புகளையும் குழந் தைகள் மீதான கரிசனை, பராமரிப்பு என்பதாகப் பொருளு ணத்துவதும் உகந்ததல்ல.

விதிகளால் பிள்ளைகள் நல்ல தன்னுணர்வையோ தம்மைப் பற்றிய உயர்ந்த எண்ணத்தையோ மதிப்பீட்டினையோ, தன் னம்பிக்கையையோ பெறுவதில்லை. பெற்றோர், ஆசிரியர் கள், குடும்பத்தவர் உட்பட்ட அவர்களைச் சுற்றியுள்ள பெரிய வர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் பாதுகாப்பு உணர்வு, அவர்களாற் தாம் நல்ல கவனிக்கப்படுகிறோம் (Security and Attention from the adults) என்ற உறுதிப்படுத்தல்களே அவர்களின் தன்னுணர்வும் தன்னம்பிக்கையும் வலுப்படுகிறது.

வளரிளம் பருவத்தினர் தம்மால் மனதளவிலும் உணர்வள விலும் கையாளமுடியாததும் ஆற்றுப்படுத்த முடியாததுமான சூழல்கள், செயல்களினால் ஏற்படும் மோசமான விளைவு களை இத்திரைப்படம் பிரதிபலிக்கின்றது. இதுவே இதன் அழுத்தமானதும் மையப்புள்ளியான விடயமும் எனத் தோன்று கிறது. அவற்றைத் தனித்துவமான அனுபவமாகக் கடத்து வதிலும் வெற்றிபெற்றிருக்கிறது. படைப்பு உத்தி, கதைக் களம், உரையாடல்கள், பாத்திரங்கள் போன்ற படைப்புக்கூறு களில் மேதமையைத் தரிசிக்க முடிகிறது. பாலினப் பாகுபாடு குறித்த விவாதத்தையும் உருவாக்கியுள்ளது. இந்தத் தொட ரானது குழந்தைகள் அவர்களது வளர்பருவத்தில் முகம்கொ டுக்கும் புறக்கணிப்பு, தனிமை, இழிவுபடுத்தல்களைப் பற்றி யதுமாகும். அத்தோடு ஒவ்வாததும் ஏற்கமுடியாததுமான கருத்தியல்கள் மற்றும் சமூகச் சூழல்களுக்குள் தம்மைப் பொருந்தவைக்க முயற்சிப்பது போன்ற விடயங்கள் சார்ந்த உரையாடல்களுக்கும் விவாதங்களுக்குமான வெளிகளையும் கொண்டிருக்கின்றது.

rooban.s@thaiveedu.com

நவீன நாடகங்களில் தமிழ்த்தொன்மங்கள்

ம. கருணாநிதி

tg.theeban@gmail.com

முன்னுரை

மனித சமூகம் தொன்மம் எனும் மரபுக் கதையாடல்களை ஆதிகாலம் தொட்டு இன்றள விலும் பல்வேறு வடிவங்களில் உருவாக்கி வருகின்றது. தொன்மங்கள் படிநிலை வளர்ச்சி கொண்டு சமூகத்தின் கூட்டு நிலைகளையும், சமூக முரண்களையும் எடுத்தியம்புகின்றன. இவை கருத்தியல் தளத்தை உருவாக்குவதோடு பரிணாமம் கொள்ளக்கூடியதாகவும் விளங்குகின்றன. வாய்மொழிப் பனுவல் மரபுடைய தொன்மங்கள் எழுத்துப் பனுவலாக் கமும் பெறுகின்ற நிலையைப் பெறுகிறது. தமிழ் அரங்கப் பண்பாட்டிலும் தொன்மங்கள் கையாளப்பட்டுள்ளதைப் பார்க்கமுடிகிறது. நவீன நாடகங்களில் தமிழ்த் தொன்மங் களின் செல்வாக்கினைப் பார்க்கலாம். தேசிய இன எழுச்சியோடும் ஒப்புநோக்கும் வகை யில் தமிழினம் சார்ந்த தொன்மங்களைக் கண்டடைவதும், கட்டியெழுப்புவதும், அடை யாளப்படுத்துவதும், தமிழ் நவீன நாடகங்கள் வழி அவதானிக்கலாம்.

ஐந்திணை சார்ந்த தொன்மம்:

ஐந்திணை எனும் தமிழ் நிலப்பரப்பு தொன்ம வாழ்வின் அடை யாளமாகும். சங்க இலக்கியப் பனுவல்களில் தமிழினத்தின் தொன்மைசார்ந்த அடையாளமாக விளங்கும் தொன்மங்க ளைக் காணமுடிகின்றன. தமிழ்ப் பண்பாட்டின் அடையாள மாக ஐந்திணையிலுள்ள தொன்மை சார்ந்த வாழ்வியலை சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. சங்க இலக்கியங் கள் பல்வேறு நிகழ்வுகளையும், உணர்வுகளையும், தொன் மங்களாலோ, சடங்குகளாலோ, குறியீடுகளாலோ வெளிப் படுத்தியுள்ளன. அவை தமிழ் இனத்தின் மற்றும் மனித இனத் தின் பண்பாடுகளை இனங்காணும் வகையில் அமைந்துள்ளன.

இன்குலாபின் 'குறிஞ்சிப்பாட்டு' நாடகம் தமிழ் இனத்தின் தொன்மை வாழ்க்கையை மீட்டுருவாக்கம் செய்துள்ளது. இந் நாடகம் சங்ககால அகவாழ்வைக் காட்சிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. கபிலர், பாரி, அங்கவை, சங்கவை எனும் வரலாற்றுப் பாத்திரங்களைக் கொண்டு கால, இடைவெளி களைக் கடந்து சங்ககாலம் தொடங்கி இன்றளவிலும் நீடிக் கும் இனப்பிரச்சினைகளைப் பற்றி இந்நாடகம் பேசுகின்றது. தொகுசொல், கபிலக்கல், பறம்புமலை, குறிஞ்சிக்கூத்து, மகட் கொடை மறுத்தல், பாயம்பாட்டு, மண்மனம், குன்றக்குறத்தி, கிளிவிளி, அற்றைத் திங்கள் எனும் தன்மையில் கபிலரின் குறிஞ்சிப்பாட்டு எனும் தொன்மப் பனுவல்களின் அடிப்படை யில் காட்சிகள் அமைந்துள்ளன.

நாடகத்தில் பறம்புமலையின் வளமும் இயற்கைக்கும் மனித உறவுகளுக்கும் இடையில் பிணைப்பும் காட்சிப்படுத்தப்பட் டுள்ளது. மரம் செடி கொடிகளை மனிதர்களின் மூதாதையாக எண்ணும் சங்ககால வாழ்வினை 'குறிஞ்சிப்பாட்டு' நாடகம் படம்பிடித்துக் காட்டுகின்றது.

'மூட்டும் அகில் மணக்கும்
மூட்டாமக் கள் மணக்கும்
காட்டுப்புதர் மறைவில்
காணாத சொல்மணக்கும்
பேர் சொல்லிக்கூப்பிட்டா
அருவிகள் குதிக்கும்
ஆர்ப்பரிப்போம் மழைவேண்டி
வான்பிறந்து கொட்டும்
நீர்தளும்பும் சுனைகளில்
நீந்துகிற மீன்கள்...'

இன்குலாப், 2003, குறிஞ்சிப்பாட்டு, பக். 297 - 298

எனும் பாடல் சங்ககாலத் தொன்மை வாழ்வினை நிகழ்த்து வெளியில் குறிஞ்சிப்பாட்டு நாடகத்தில் காட்சிகளாக விரிகிறது.

'நான் பொறக்குறதுக்கு முந்தியே முளைச்ச இந்த மரங்களை எனக்கு மூத்தவர்கள் என்று என் தந்தை சொன்னார். புதர்ப் பூக்கள் எல்லாம் என் தங்கைகள் என்று என்தாய் சொன்னார். எனக்கு மூத்த தங்கைகளும் கொஞ்சம் அந்தப் பறவைகள் எல்லாம் நம்முடைய தூரத்து உறவுகள் என்று எனக்குச் சொல்லித் தந்தாங்க. பறம்புமலைக் குறவர்களும் குறத்தி களுந்தான் எனக்கு ஆசிரியர்கள்... ஒவ்வொரு காட்டுப்பூவுக் கும் பெயர் சொல்லித்தந்தாங்க.' எனக் குறிஞ்சிப்பாட்டு நாட கம் காட்டுகிறது.

சங்ககாலத்துத் தொன்மை வாழ்வு இயற்கையோடு இயைந்த தாகவும், இயற்கையை நேசிக்கக்கூடிய வகையிலும் விளங் கியது. மரங்களையும் செடி கொடிகளையும் தன் உறவினர் களாகவும் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. நவீன கலா சாரத் தொழினுட்ப வளர்ச்சியால் இயற்கை மாசுபட்டு வருகின் றது. மலை, காடு, மணல், பாறைகள், நீர்நிலைகள் அனைத் தும் மாசுபடுத்தப்படுகின்றன. ஆதிச்சமூகத்தின் தொன்மங் களும் தொன்மைசார் வாழ்வியலும் மாற்றங்களுக்குட்பட்டு வரு கின்றது. இயற்கை எழில் நிறைந்த பறம்புமலையில் உள்ள

இயற்கை அழிக்கப்பட்டு மனித இனத்தைத் துரத்தப்பட்டதை யும் இன்றைய சூழலிலும் பொருந்திப் போகின்ற விதத்தினைப் பார்க்கமுடிகின்றது.

பாரியின் பறம்புமலை அழிக்கப்பட்டதை இன்குலாப்பின் குறிஞ் சிப்பாட்டு நாடகம் காட்சிப்படுத்தியுள்ளது. பறம்புமலையின் காடுகளை அழித்தது, மூவேந்தர் படை. பசுமைகள் சாம்பலா கியது. சுனைகள் சேறாகி அருவிகளில் ரத்தம் ஓடும் அளவிற்கு பறம்புமலை அழிந்தது. பறம்புமலை மக்கள் துரத்தப்பட்டார் கள் என்பதை இந்நாடகம் காட்டுகிறது. மேலும் இன்குலாப் பின் குறிஞ்சிப்பாட்டு நாடகம் போன்று, கி. பார்த்திபராஜாவின் நெடுபயணம் நாடகம் அமைந்துள்ளது. தமிழர் தம்வாழ்வில் அலைகுடிப் பயணத்தில் வாழ்தலுக்காக அலைவுற்ற சங்க கால மக்களின் வாழ்வினைப் பதிவுசெய்துள்ளது.

கண்ணகி தொன்மம்:

கண்ணகி பற்றிய தொன்மக்கதை பல்வேறு தன்மைகளில் தமிழகம், கேரளா, இலங்கை ஆகிய பகுதிகளில் வாய்மொழி மரபாக வழங்கிவருகின்றன. வாய்மொழியாக வழங்கி வரும் தொன்மக்கதை மரபு எழுத்திலக்கிய உருவாக்கமும் பெறு கின்றது. அவ்வகையில் உருவானதே சிலப்பதிகாரம். 'ஒரு வாய்மொழி இலக்கியமானது இதுபோன்ற சூழலில் ஓரிடத்தி லிருந்து பிற இடங்களுக்குப் பரவுகின்றது. அக்கதை சென்று வாழும் சூழலுக்கு ஏற்ப கதை வேறுபாடுகளும் அதில் உள் ளுறுத்தப்படுகின்றன.' ஒரு நாட்டிலிருந்து பிறநாட்டினர் வர்த் தகத் தொடர்பு மற்றும் குடியேறுதல் எனும் நிகழ்வினால் ஒரு நாட்டில் வழங்கும் தொன்மக்கதை பரவலாக்கம் பெறுகின் றது. அவ்வகையிலேயே கண்ணகி - கோவலன் கதை பரவலாக் கம் பெற்று பல்வேறு அமைப்புகளில் வழங்கிவருகின்றது.

இந்திரா பார்த்தசாரதியின் 'கொங்கைத்தீ', சே. இராமானுஜத் தின் 'புறஞ்சேரி' ஆகிய இரு நாடகங்களும் கண்ணகி பற்றிய தொன்மத்தை அடிப்படையாகக் கொண்டு உருவான நாடகங் களாகும். 'கொங்கைத்தீ' 1990-இல் பாண்டிச்சேரி நாடக விழா வில் அரங்கேற்றப்பட்டதாகும். இந்நாடகம் கண்ணகி பற்றிய தொன்மத்தினூடாகச் சிலப்பதிகாரக் கதையோட்டத்தைப் பிர திபலிக்கின்றது. கண்ணகியைத் தெய்வ நிலையிலிருந்து அணுகுவதைவிட மனிதர் நிலையிலே அணுகியுள்ளது இந் நாடகம். பெரும்பான்மையான கிரேக்க நாடகங்கள் துன்பியல்

சார்ந்த தொன்ம உருவாக்கங்களை நாடகங்களின் வழி உரு வாக்கியுள்ளன. இத்தொன்மம் சார்ந்த நாடகங்கள் விதியை அறமாகக் கொண்டுள்ள பாங்கினை அறியமுடியும்.

கிரேக்கத் துன்பியல் நாடகங்களைப் போல இந்திரா பார்த்த சாரதியின் 'கொங்கைத்தீ' விதியின் பயனாய் கோவலன் இறக் கிறான், பாண்டிய மன்னனும், கோப்பெருந்தேவியும் இறக்கி றார்கள். கண்ணகியும் தன் கணவனை இழக்கிறாள். இதற்குக் காரணமாக அமைவது விதி. இவ்விதியின் பிடியில் தப்பிக்க முடியாது எனும் பழைமைவாதம் நவீனப் படைப்புகளிலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையிலேயே 'கொங் கைத்தீ' நாடகம் அமைந்துள்ளது.

'கொங்கைத்தீ' நாடகம் 'அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாகும்; உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்; ஊழ் வினை உறுத்து வந்து ஊட்டும்' எனும் சிலப்பதிகார மையக்க ருத்தியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சிலப்பதிகா ரத்தில் இடம்பெற்றுள்ள துணைமைப் பாத்திரங்களான மாட லன், தேவந்தி, அரசன், பாண்டிமாதேவி, கவுந்தியடிகள், மாதவி முதலிய பாத்திரங்கள் உணர்த்தும் செய்தியை முதன்மையா கக் கொண்டும், சிலப்பதிகாரக் கதை அமைப்பினையும் கொங் கைத்தீ நாடகம் கொண்டுள்ளது. மனிதப் பெண்ணாக இருந்து தெய்வமாக உருவெடுத்துள்ள கண்ணகி தொன்மத்தை கொங்கைத்தீ காட்சிப்படுத்தியுள்ளது. நாடகத்தின் இறுதிக் காட்சியாக அரசன் நீ யார் ? என வினவ, கண்ணகி பாத்திரம் ஆவேசம் கொண்டெழுந்து உரையாடுவதாய் நாடகம் காட் சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நாடகத்தில் கண்ணகியின் உரையாடல் நாடகத்தில் முடி வாய் இடம்பெறுகின்றது. தன் வாழ்வில் நடந்தவையெல்லாம் விதியினால்தான் என நினைத்தாலும் தன் கணவன் இறப்பிற் குக் காரணமானவர்களும் அவ்விதியின் சாபத்தில் இறக்க நேர்கிறது. இவ்விறப்பு கண்ணகியின் மேன்மையால் நிகழ் கின்றது. கண்ணகி பற்றிய தொன்மம் கற்புடையவளாகக் காட் டப்பட்டுள்ளது.

சே. இராமானுஜத்தின் 'புறஞ்சேரி' நாடகம் கண்ணகி பற்றிப் பேசுகின்றது. இந்நாடகம் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கண்ணகி பற்றிய தொன்மத்தினை அடிப்படையாகக் கொண் டுள்ளது. கண்ணகி மதுரையை அழிக்கப் புறப்படுவதற்கு முன் புறஞ்சேரியில் கோவலனும் கண்ணகியும் இருக்கிறார்கள். இங்கு வருவதற்கு முன் இவர்களுக்குத் தீங்கு நேர இருப்பதை சிலப் பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள், மதில் மேலிருக்கும் கொடியின் வழியாக வரவேண்டாம் என்கிற குறிப்பினைக் காப்பியத்தில் பதிவு செய்துள்ளார். மதுரை மாநகர் எரிப்ப தற்கும் முன் மக்களின் எண்ணவோட்டம் பற்றிப் பேசுவதாய் புறஞ்சேரி நாடகம் அமைந்துள்ளது. புறஞ்சேரி நாடகமும் கொங்கைத்தீ நாடகமும் சிலப்பதிகாரத்தை ஒத்தே உருவாக் கப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. கண்ணகி, கோவலன், கவுந்தியடிகள், மாதரி, ஆயன், ஆய்ச்சியர் முதலிய பாத்திரங் களைக் கொண்டும் குழாம், முதியவர் எனும் கட்டியம் கூறும் பாத்திரங்களைக் கொண்டும் 'புறஞ்சேரி' நாடகம் அமைந் துள்ளது. 'புறஞ்சேரி' நாடகத்தில் விதி வலியுறுத்திக் கூறப்பட் டுள்ளது. கண்ணகிக்கு நேர்ந்ததும் மதுரை மக்களுக்கு ஏற் பட்ட துயரமும் விதிதான் காரணமா என புறஞ்சேரி நாடகம் கேள்வி எழுப்புகின்றது. இந்நாடகத்தில் விதியும் ஒரு பாத்திர மாக அமைந்திருக்கிறது.

'புறஞ்சேரி' நாடகம், கண்ணகிக்கு நேர்ந்ததையும், கோவலன் இறந்ததும், மதுரை எரிந்ததும் விதியால் தான் நடந்ததெனக் காட்டுகின்றது. விதியினை வலியதாகவும், விதியினால் நடக்க வேண்டியது நடந்தே தீரும். அதனை யாரும் தடுக்க முடியாது என்பதை கொங்கைத்தீ, புறஞ்சேரி ஆகிய இரு நாடகங்களும் வலியுறுத்துகின்றன.

இந்நாடகத்தில் நாட்டுப்புற நிமித்தங்கள் நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தீவினை நடக்கப் போவது குறிப் பிடப்பட்டுள்ளது. இயற்கைக்கு மாறான நிகழ்வுகள் நடப்பதே தீவினைக்குக் காரணமாகும். கடுமையான வெயிலில் புழுக் கள் துடிப்பது தீய நிமித்தமாக நாடகத்தில் பேசப்பட்டுள்ளது. கண்ணகியும் கோவலனும் மதுரைக்குள் வரப்போவதால் தீங்கு நேரிடப்போகிறது என்பதை மதில்மேல் உள்ள கொடி அசை வது வழி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

விதி: 'தீங்கு தடுக்கும் திறம் உங்களுக்கில்லை' (சி. அண்ணா மலை (தொ.ஆ), 2003, சே. இராமானுஜம் நாடகங்கள், புறஞ் சேரி, பக். 21-22.)

என உரையாடல் அமைந்துள்ளது. நாடகம் முழுக்க விதி வலி யுறுத்தப்படுவதை அறியமுடிகின்றது. சமூக நிகழ்வுகளுக்கு விதிதான் காரணம் என நினைத்தால் அதனை எதிர்த்துப் போராடும் மனநிலையே ஒழிந்துவிடும். நிகழ்வுகளுக்கான காரணகாரியங்களை அறிந்து செயற்படும் போதுதான் எல்லா வற்றினையும் புரிந்து எதிர்வினை ஆற்றமுடியும். அந்த வகை யில் கிரேக்கத் துன்பியல் நாடகங்களைப் போல தமிழ் நவீன நாடகங்களும் அமைந்திருக்கின்றன.

மணிமேகலை தொன்மம்:

இன்குலாப் எழுதிய மணிமேகலை நாடகம் மணிமேகலை தொன்மப் பாத்திரத்தை அறம் கூற முன்மொழியப்பட்டுள்ளது. மு. இராமசுவாமியின் ஆபுத்திரனின் தொன்மம் மணிமேகலை காப்பியத்தில் கிளைத் தொன்மமாக இடம்பெற்றுள்ளது.

ஆபுத்திரன் தொன்மம்:

மணிமேகலையில் இடம்பெறும் ஆபுத்திரனை மையமாகக் கொண்டு 'ஆபுத்திரன'; எனும் நாடகம் அமைந்துள்ளது. மணி மேகலையில் ஆபுத்திரன் குறித்த செய்தியினைப் பார்க்கும் போது, ஆபுத்திரனின் தாய் சாலி ஆவார். ஆபுத்திரன் பிறந்த வுடனே அக்குழந்தையை தோட்டத்தில் போட்டுவிடுகிறாள் அவள். பசுவின் பாலை உண்டு ஆபுத்திரன் வளர்கிறான். மண்முக முனிவன் உரைத்தது போன்று ஆபுத்திரன் பசிப்பி ணியால் வருத்தமுற்றிருக்கும் மக்களுக்காக உணவளித்துப் பின்னர் தானும் உண்ணாநோம்பிருந்து விட்டான். வேள்வி யில் பலியிடப்படும் பசுக்களைப் பேணிக்காத்தவன் ஆபுத்திர னாவான் எனக் குறிப்பிடுகிறது மணிமேகலை. மணிமேகலை யில் ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை, பாத்திர மரபு கூறிய காதை, பாத்திரம் கொண்டு பிச்சை புக்ககாதை ஆகியவை ஆபுத்திரனைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

மு. இராமசுவாமியின் 'ஆபுத்திரன்' நாடகம் ஆபுத்திரன் பழமர புக் கதையோடு தமிழ் இன விடுதலைக்காகப் போராடி உயிர் நீத்த திலீபன், சங்கரலிங்கம், சண்முகசுந்தரம் முதலியோர் களின் போராட்ட உணர்வுகளையும் தியாகங்களையும் இணைத் துப் பேசுகிறது.

தீக்குண்டு பரிமாறும்
போர்க்களத்தில் ஒருநாளு
திலீபனென்னும் புலியொன்னு
துவக்குகளைத்தூரப் போட்டு
உண்ணமாட்டேன் என்று சொல்லி
உயிர்விட்ட சேதி உண்டு.
செத்து மடிந்த கதை நித்தம்
செகமெல்லாம் பாடும் அதை - அது
ஆபுத்திரன் போட்ட விதை.
தமிழ்நாடு பேரு வைக்கத்
தன் உயிரைக் காவு வைத்து
உண்ணாமல் உதறாமல்
உறுதியென்றும் குலையாமல்
செவிடன் காதில் உயிரை ஓதி
சரித்திரத்தில் நிலைத்துப்போன
ஆபுத்திரன் சொந்தம் யாரு? - அது
சங்கரலிங்கம் என்னும் பேரு?
ஆசிரியரின் கோரிக்கைக்காய்
ஒரு பருக்கை உண்ணாமலே
கொள்கைப் பிடிப்பாலே
உயிரை விட்டவர் யாரு யாரு
சண்முகசுந்தரம் அவர் பேரு பேரு
எத்தனையோ நினைவிருக்கு - அதை
எடுத்துச்சொல்லும் துணிவிருக்கு
அத்தனையும் சொல்வதற்கு - நமக்கு
ஆபுத்திரனின் களம் இருக்கு'

மு. இராமசுவாமி, 2003, சாபம் விமோசனம், ஆபுத்திரன், பக். 65 - 66

எனும் பாடல், மு. இராமசுவாமியின் ஆபுத்திரன் நாடகத்தில் இடம்பெற்றுள்ளது. இந்நாடகத்தின் மூலம் ஆபுத்திரனைத் தமிழ் இனவிடுதலையின் குறியீடாகக் காட்சிப்படுத்தப்பட்டுள் ளது. மணிமேகலை காப்பியத்தை மையப்படுத்தியே இந் நாடகம் அமைந்துள்ளது. ஒரு பசு குழந்தைக்குப் பால் ஊட்டி வளர்த்ததால் ஆபுத்திரன் எனப் பெயர் பெற்றுள்ளதையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. சாலி குழந்தையை விட்டுச் சென் றாள்; அக்குழந்தையைப் பசு வளர்த்தது; பின்னர் செய்யும் வேள்விகளையும் யாகங்களையும் விமர்சனம் செய்தான் ஆபுத் திரன். அமுதசுரபி கொண்டு வறியவர்களுக்கு உணவளித் ததும், பின்பு, உண்ணாநோன்பு இருந்து உயிர் துறந்ததாக மணிமேகலை குறிப்பிடும் ஆபுத்திரன் தொன்மம் நாடகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

முடிவுரை:

நவீன நாடகங்களில் பெரும்பான்மை நாடகங்கள் மகாபார தத் தொன்மங்களை அடிப்படையாகக் கொண்டு உருக்கொண் டுள்ளன. இதிலிருந்து வேறுபட்டதாக கொங்கைத்தீ, புறஞ் சேரி, குறிஞ்சிப்பாட்டு, மணிமேகலை, ஆபுத்திரன் முதலான நவீன நாடக ஆக்கங்கள் தமிழினத்தின் தொன்மங்களை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்பட்டவையாகும்.

Karunanidhi.M@thaiveedu.com

வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலையாக காமன் கூத்து

- அருணாசலம் லெட்சுமணன் -

17

tg.theeban@gmail.com

தோட்டங்களில் வருடாந்தம் காமன் கூத்தின் நிறைவின் பின்னர் அக்கூத்து தொடர்பான அதிர்வலைகள் சில காலங்களுக்கு தொடர்ந்த வண்ணமே காணப்படும். தோட்டங்களில் சிறுவர் விளையாட்டுக் களங்கள் அதிகமாகவே காணப்படுவதை அவதானிக்கலாம். பாடசாலைகளில் ஓய்வு நேரங்களில் காமன்கூத்துப் பாடல்களைப் பாடியும் அதற்கேற்ற நடனங்களை இயல்பாகவே ஆடியும் மாணவர்கள் மகிழ்வதையும் நாம் கண்டுகளிக்கலாம். காமன் கூத்தில் பாடப்படுகின்ற பாடல்களை அத்தோட்டத்தில் உள்ள சிறுவர்கள் இயல்பாகவே பாடுகின்ற போக்கும் உள்ளது. அவ்வாறே, இக்கூத்தில் பிரயோகிக்கப்படும் தப்பிசையை இயல்பாகவே இசைக்கும் வல்லமையும் அவருக்குண்டு. காமன்கூத்து பயில் நிலையிலுள்ள தோட்டங்களில் சிறுவர்களிடத்தேயும் இக்கலை மரபு இயல்பாகவே ஊடுகடத்தப்படுகின்றமை அவதானத்திற்குரியதாகும். பார்த்தல், கேட்டல், செவிமடுத்தல், அவதானித்தல் ஊடாக மக்கள் கலைகள் அடுத்த தலைமுறையினருக்கு ஊடுகடத்தப்படுகின்றது. தோட்டத் தொழிற்துறை சார்ந்த தொழில்களின் மீதான அவதானிப்புக்களும் இத்தன்மையுடனே நோக்கப்படுகிறது. நேரடியாக பெயர் பதிவதும், கைக்காசு சம்பளத்தில் தொழிலுக்காக இணைக்கப்படுகின்ற தன்மையும் காலாதி காலமாக இங்கு நடந்தேறுகின்றது. இதன் பின்னணியில் குறைந்த சம்பளத்தில் நிறைந்த உழைப்பையும் சுரண்டிக் கொள்கின்ற போக்கும் காணப்படுகின்றது.

பெற்றோர்கள் வேலைக்கு சென்றவுடன் வீட்டிலுள்ள பிள்ளைகள், விளையாட்டு முற்றங்களில் காமன் கூத்தை அரங்கேற்றி மகிழும் இலாவகம் மிகுந்த கவனத்திற்குரியதாகும். வீட்டிலுள்ள சேலைகள், பவுடர், வளையல்கள், வீட்டுத்தோட்டத்திலுள்ள மஞ்சள் ஆகியவற்றைப் பிரயோகித்து தமக்குள்ளே ஒப்பனையை செய்து கொள்கின்ற நிலைமைகளையும் அவதானிக்கலாம். அவ்வாறே பலா இலைகளையும் ஈர்க்கில் துண்டுகளையும் பயன்படுத்தி கிரீடங்கள் செய்வதும் அதனை தலைகளில் மாட்டிக் கொண்டு மகிழ்வதும் கவனத்திற்குரியதாகும். வாழை மட்டைகளைப் பிரயோகித்து புஜங்கள் செய்வதும், காற்சட்டைகள், நீளமான சட்டையை அடையாளப்படுத்தும் செயற்பாடுகளும் இவர்களால் இன்றளவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சூழலில் உள்ள பொருட்களை வைத்து பந்தல் அமைத்தல், பீடம் அமைத்தல், இந்திர சபை அமைக்கும் செயற்பாடுகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அவ்வாறே தப்பு கருவிக்கு ஒத்ததாக கொத்துகள், உடைந்த பிளாஸ்டிக் வாளிகள், தகர வாளிகள் ஆகியவற்றை பிரயோகித்து தப்பிசையை ஒலிக்க செய்யும் இலாவகமும் இயல்பு நிலை பெற்றதாகவே விளங்குகிறது. பாடல் இசைக்கும் பாங்கும் அவதானத்தை பெறுகிறது. இவர்களில் இயல்பான அழகியல் உணர்ச்சி வெளிப்பாடுகளை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். இவ்வாறான தொடர் அவதானம், கலைகள் எவ்வாறு தலைமுறையினருக்கு ஊடுகடத்தப்படுகின்றது என்பதை அறிதலுக்கான முயற்சியாகவும் அமையப்பெறும். பார்த்து, கேட்டு, மகிழ்ந்த வகையிலேயே இக்கலை அடுத்த தலைமுறையினருக்கு ஊடுகடத்தப்படுகின்றன.

சிறுவர்கள் மத்தியிலும் இந்த காமன் கூத்து தொடர்பான உணர்வுகள் இயல்பாகவே உட்புகுந்து அவர்கள் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. மலையக பாடசாலைகளில் கலை நிகழ்வுகளின்போது காமன் கூத்தையும் அரங்கேற்றி மகிழ்ந்த தருணங்களும் உள்ளன. குறிப்பாக, 1990-களின் தொடக்கத்தில் அகில இலங்கைத் தமிழ் மொழிதினப் போட்டிகளில் கூத்து வடிவமும் ஒரு போட்டி நிகழ்வாக இணைக்கப்பட்டது. இப்போட்டிகளின் மாகாண மட்டம் வரை இக்கூத்துக் கலை வடிவம் முக்கிய பங்கு வகித்துள்ளது. இதன் மூலம் மத்திய, ஊவா, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணப் போட்டிகளில் காமன் கூத்தை அரங்கேற்றும் வாய்ப்புகள் கிடைத்தன. அதேவேளையில், வடகிழக்கு மாகாணங்களிலும் அம்மாகாணங்களுக்கே உரிய பாரம்பரியக் கூத்து வடிவங்கள் அரங்கேற்றம் கண்டன. பின்னர், 1997-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு அமைய, க.பொ.த. உயர்

தரப் பிரிவில் முதன்முறையாக 'நாடகமும் அரங்கிய லும்' பாடத்திட்டம் இணைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, மலையகத்தில் இப்பாடம் பொகவந்தலாவ ஹொலிரோசரி வித்தியாலயத்தில் தொடங்கப்பட்டது. அரங்கியல் தளத்தில் காமன் கூத்தின் வளர்ச்சிக்கு இப்பின்னணி யில் அதிபர் நாக லிங்கத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க தாக அமைந்தது. அதன் தொடர்ச்சியாக, தரம் 06 தமிழ் பாட நூலில் காமன் கூத்து குறித்த கட்டுரை ஒன்று இணைக்கப்பட்டது. இக்கல் விசார் நடவடிக்கைகளின் பின்னணியில், இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய அமரர் லெனின் மதிவானம் அவர்களின் பங்க ளிப்பு முதன்மையானதாகக் கருதப்படுகிறது.

1950-களின் பின்னர், பேராதனைப் பல்கலைக்கழகம் தமிழ் - சிங்கள நாடகங்களின் வளர்ச்சிக்கு வலுவான அடித்தளமிட்ட தாகப் பேராசிரியர் சி. மௌனகுரு குறிப்பிடுவார். இக்காலப் பகுதியில், தமிழ் நாடக மரபு பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையிலும், சிங்கள நாடக மரபு பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர தலைமையிலும் எழுச்சி பெற்றன. எனினும், இத் தகு முதன்மை நாடக மரபுகளுடன் மலையக நாடக வடிவங் களையும் இணைத்துக் கொள்வதில் நிலவிய தயக்க நிலை, ஈழத்து நாடக வரலாற்றில் ஒரு பெரும் இடைவெளியை ஏற்ப டுத்தியது. குறிப்பாக, மலையகப் பின்புலத்தில் இயங்கிய தேசபக்தன் கோ. நடேசய்யரின் 'தொழிலாளர்களின் அந்தரப் பிழைப்பு' என்ற நாடகப் பிரதியே, மலையகத்தின் முதலா வது அரசியல் நாடகப் பிரதியாகக் கருதப்படுகிறது. இப்பிர தியில் இடம்பெற்றுள்ள பாடல்கள், ஈழத்து முச்சந்தி இலக்கி யத்தின் தோற்றுவாயாகவும், ஈழத்து அரசியல் கவிதைகளின் தொடக்கப்புள்ளியாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றன. இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மலையக அரங்கியல் நடவடிக்கைகள், பிற்கால ஈழத்து நாடக ஆய்வு களிலும் ஆவணப்படுத்தல்களிலும் போதிய கவனத்தைப் பெறாமல் புறக்கணிக்கப்பட்டிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

பின்னாளில், தென்கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத் துறை பீடம் 1996-ஆம் வருடம் முதல் உலக நாடக விழாவை நடத்த தலைப்பட்டது. வடகிழக்கு மாகாணங்களில் பயில் நிலையில் இருந்த கூத்துகள் வருடாந்தம் அரங்கேற்றம் பெற்று வந்தன. இவ்அரங்கில் முதன் முதலாக 2002-ஆம் வருடமே மலையக கூத்துகளும் அரங்கேற்றம் கண்டன. இவ்அரங்கேற் றத்தில் பங்கேற்ற கலைஞர்களை தலைமையேற்று அழைத்து வந்ததில் பொன் பிரபாகரனுக்கு சிறப்பிடம் உள்ளதாக பேராசிரியர் சி. மௌனகுரு குறிப்பிடுவார். இந்நிகழ்வுகளில் பிரதான கலையாக காமன் கூத்தை அரங்கேற்றியதுடன் மலை யகத்தில் பயில் நிலையிலுள்ள பொன்னர் சங்கர், அருச்சுனன் தபசு ஆகிய கூத்துகளையும் அரங்கேற்றியுள்ளார்கள். அதன் பின்னர், மலையகக் களங்களிலும் உள்ளக அரங்கில் காமன் கூத்தை அரங்கேற்றும் முனைப்பு தொடர்ந்தது. 1987-ஆம் வருடம் அதிகாரப் பரவலாக்க நடவடிக்கைக்கு அமைய இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகிறது. இனப் பிரச்சினைக்கும் தீர்வு காணும் வகையில் மாகாண சபை முறைமை அமுலுக்கு வருகிறது. மாகாண சபை நடைமுறை யின் பின்னர் மத்திய மாகாணம், ஊவா மாகாணம் ஆகிய வற்றின் அமைச்சரவைகளில் இந்திய வம்சாவளி தமிழர்கள் ஒவ்வொருவர் அங்கம் வகிக்கும் வாய்ப்பு கிட்டியது. ஆட்சி யில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி மாகாண அரசுகளின் அதி காரத்தையும் தம் வசமே வைத்திருந்தது. ஐக்கிய தேசிய கட் சியுடன் கொண்டிருந்த உடன்பாடான நிலையின் நிமித்தம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அவ் அமைச்சு பொறுப்பை தீர்மானிக்கும் சக்தியாக திகழ்ந்தது. இரண்டு மாகாணங்க ளிலும் தொடர்ந்து சாகித்திய விழாக்கள் நடத்துவதுண்டு. அவ்விழாக்களில் காமன் கூத்தை அரங்கேற்றி மகிழ்ந்தமை யும் குறிப்பிடத்தக்கது. சாகித்திய விழாக்களின் விருத்தி நிலையில் மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு பற்றிய சிந் தனையும் அதனை நடைமுறைப்படுத்திய விதமும் கவனத் திற்குரியதாகும்.

ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரி, கொட்டகலை அரசினர் ஆசிரியர் பயிற்சி கல்லூரி ஆகியன மலையகச் சூழலில் அமைந்திருந்தமையினால், அவற்றின் உள்ளக அரங்குகளில் காமன் கூத்து தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்டு வந்தது. இவ்வாறு உள்ளக அரங்குகளில் மேடையேற்றப்படும் போது, கால எல்லையைக் கருத்திற்கொண்டு, காமன் கூத்தின் பிர தான கதையம்சங்கள் மாத்திரமே உள்ளடக்கப் பெற்றன.

இந்த உள்ளக அரங்காற்றுகை மரபின் தொடர்ச்சியாக, 2011-ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் காமன் கூத்தை மேடையேற்றுவதற் குக் கிடைத்த வாய்ப்பும் அதன் அரங்கேற்றமும் முதன்மை யான கவனத்தைப் பெறுகின்றன. கலைஞர் பி. ஹெலன் தலை மையிலான 'மலையக மக்கள் கலை அரங்கு' குழுவினர் இம் மாநாட்டில் இக்கூத்தினை அரங்காற்றுகை செய்தனர். இதன் பின்னர், கொழும்பில் நடைபெற்ற மலையகக் கல்வி அபி விருத்தி மன்ற நிகழ்விலும், மத்திய மாகாண சாகித்திய விழாவிலும் இக்குழுவினரால் காமன் கூத்து மேடையேற்றப் பட்டது.

பொதுவாக, பாரம்பரிய காமன் கூத்து வழிபாட்டுக் களங்க ளிலும் சரி, நவீன உள்ளக அரங்க முயற்சிகளிலும் சரி, 'ரதி' பாத்திரத்தை ஆண்களே ஏற்று நடிக்கும் மரபார்ந்த நடை முறையே பின்பற்றப்பட்டு வந்தது. இம்மரபினை உடைத்து, முதன்முதலில் ரதி பாத்திரத்தில் பெண் ஒருவரைப் பங்கேற் கச் செய்த பெருமை பிரான்சிஸ் அசுந்தா என்ற பெண்மணி யைச் சாரும். இவர், மலையக மக்கள் கலை அரங்கின் தலை வரும் கலைஞருமான பி. ஹெலனின் மூத்த சகோதரியாவார். செந்தூரன், வி.டி. தர்மலிங்கம் ஆகியோரின் மேடையாக்க முயற்சிகளின் போதே பிரான்சிஸ் அசுந்தா ரதி பாத்திரத்தை ஏற்று நடித்தார். அவரைத் தொடர்ந்து, மலையக மக்கள் கலை அரங்கின் கலைஞரான ஸ்ரீநிவேதா என்ற மாணவி ரதி வேடமேற்றுப் பல மேடைகளில் தன் திறமையை வெளிப்படுத் தியுள்ளார். கோவையில் அரங்கேறிய காமன் கூத்திலும் ஸ்ரீநிவேதாவே ரதியாகப் பாத்திரமேற்றிருந்தார் என்பது குறிப் பிடத்தக்கதாகும்.

பொதுவாக, காமன் கூத்துக் களங்கள் ஆணாதிக்கப் போக் குக் கொண்டவையாகக் காணப்பட்ட போதிலும், அவற்றின் வழிபாட்டு நோக்கம் ரதி முதலான பெண்களின் மேன்மை யையே மையமாகக் கொண்டிருந்தது. கூத்துக் களத்தில் ஆண்களின் செயற்பாடுகள் முழுமை பெறுவதற்கு, வீட்டுத் தரப்பிலிருந்து பெண்கள் வழங்கும் உழைப்பும் பங்களிப்பும் பின்னணியாக அமைகின்ற போதிலும், அவை எவ்வித மதிப் பீட்டிற்கும் உட்படுத்தப்படுவதில்லை. காமன் கூத்து அரங் கேற்றத்தின் வெற்றிக்குப் பின்னால், பெண்களின் உற்சா கமும் தியாகமும் உற்றுநோக்கப்பட வேண்டிய சமூகக் கூறு களாகும். சில பாரம்பரியக் களங்களில் பெண்கள் காமன் கூத்துப் பாடல்களை இசைப்பதைக் காண முடிகிறது. இது ஒரு அபூர்வமான நிகழ்வாகக் கருதப்பட்ட போதிலும், ஒட்டு மொத்த நாட்டார் பாடல் மரபைப் பேணிக்காப்பதில் பெண் களே என்றும் முதன்மை பெற்று விளங்குகின்றனர். சிறுவர் களைப் போலவே, செவிமடுத்தல் (கேட்டல்) வழியிலான வாய்மொழி மரபு நடைமுறையினூடாகப் பல காமன் கூத்துப் பாடல்களைப் பெண்கள் தங்கள் நினைவாற்றலில் தக்கவைத் துக் கொண்டுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இத்தகைய பின்னணியில், காமன் கூத்துக் களத்தில் பாடல்களைப் பாடும் பெண்களின் வரிசையில் சமகாலத்தில் முத்துக்குமார் சந்திரகுமாரி என்ற பெண்மணி முதன்மையான கவனத்தைப் பெறுகிறார். நாவலப்பிட்டி, கலமுதுனைத் தோட்டத்தைச் சேர்ந்த இவரின் தந்தை முத்துக்குமார், நீண்ட காலம் காமன் கூத்து அண்ணாவியாராக (வாத்தியாராக) விளங்கியவர் என் பது குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மைக்கால மலையகச் சமூக அசைவியக்கத்தில், அரங்கியல் புதுமைகளைப் புகட்டும் முக்கியமொரு களமாகச் சப்ரகமுவ மாகாணத்தின் கந்தலோயா தமிழ் வித்தியாலயம் விளங்கிவருகிறது. இப்பாடசாலைத் தரப்பினர் தங்கள் வளாகத்தினுள் 'காமன் நாட்டுதலைப்' (காமன் கம்பை நடுதல்) பாரம்பரியமாகத் தொடர்வதோடு, இக்கூத்து வருடாந்தம் அரங்கேற்றப்பட வேண்டும் என்ற உத்தரவாதத்தையும் வழங்கியுள்ளனர். பல தோட்டப் பகுதிகளில் காமன் கூத்து மரபு படிப்படியாக அழிந்து (மூடுவிழா) வரும் சூழலில், ஒரு நிறுவனமாக நின்று இப்புதிய நடைமுறையைத் தொடக்கி வைத்த பெருமை இப்பாடசாலையையே சாரும். 2024-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பணி, இவ்வருடமும் (2025 / 2026) வெற்றிகரமாகத் தொடர்ந்தது.

இக்களத்தில் பெண்களின் பங்களிப்பு என்பது மிகச் சிறப்பானதொரு பரிணாமத்தை எட்டியுள்ளது. குறிப்பாக, பெண்கள் காமன் கூத்துப் பாடல்களை இசைப்பதோடு மட்டுமன்றி, பாரம்பரிய இசைக்கருவியான 'தப்பிசையை' (தப்பு வாத்தியம்) முழங்குவதிலும் முன்னின்று செயற்படுகின்றனர். விடிய விடிய நிகழும் இக்கூத்தரங்கில் பெண்கள் வெறும் பார்வையாளர்களாக அன்றி, தீவிரச் செயற்பாட்டாளர்களாகக் களம் காண்கின்றனர். பல்கலைக்கழகங்களில் பயிலும் மற்றும் பயின்று முடித்த மலையக மாணவிகளும் இத்தகைய அரங்கியல் செயற்பாடுகளில் தங்களை முதன்மையாக இணைத்துக் கொண்டுள்ளனர். அதுமட்டுமன்றி, கூத்துக் களத்தில் வேடமேற்கும் தங்கள் வீட்டு ஆண்களுக்கான ஒப்பனைச் செயற்பாடுகளிலும் பெண்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். இதன் மூலம், நிறுவனமயப்பட்ட நவீனக் சூழலிலும், பாரம்பரியக் களங்களிலும் காமன் கூத்தை அடுத்த தலைமுறைக்குக் கடத்திச் செல்வதில் பெண்களின் பங்களிப்பு இன்றியமையாத சமூக விசை என்பது புலனாகிறது.

மலையக மக்கள் கலை அரங்கு கலைஞர்கள், செம்மொழி மாநாட்டு அரங்கேற்றத்தின்போது பிரதியாக்க நூல் ஒன்றினையும் வெளியிட்டு விநியோகித்தார்கள். இப்பிரதியாக்கம் காமன் கூத்தின் முழு கதையம்சத்தையும் எடுத்துரைக்கிறது. காமன் கூத்தில் இடம்பெறும் கிளைக்கதைகள் இந்நூலில் இணைக்கப்படாமல் இருப்பினும் கதையம்சத்தை முழுமையாக விளங்கிக்கொள்ளும் வகையில் இந்நூல் அமைந்திருந்தது. இப்பிரதியாக்கத்தோடு கவிஞர் சு. முரளிதரனின் 'இலங்கையில் காமன் கூத்தும் சில அர்த்தங் கோடல்களும்' எனும் கட்டுரையும் காமன் கூத்து தொடர்பான புரிதலுக்கு வழிவகுக்கிறது. இதேவேளை, வே. இராமரின் 'மலையகக் கலைகளும் இன்றைய நிலையும்' எனும் கட்டுரை, மலையகச் சமூகத்தின் கலை மரபுகளுக்கும் அதன் சமூகப் பின்னணிகளுக்குமான தொடர்புகளை வெளிப்படுத்தும் மற்றுமொரு முக்கிய பதிவாக அமைகிறது.

இக்காலப்பகுதியில், 'மலையக மக்கள்' என்ற தனித்துவமான சமூக அடையாளத்தை, இந்தியாவின் 'மலைவாழ் மக்கள்' (பழங்குடியினர்) என்ற பொதுப் புரிதலோடு ஒப்பிட்டு நோக்கியதால் ஏற்பட்ட கோட்பாட்டுச் சர்ச்சைகள் தமிழக அறிவுச் சூழலில் நிலவியமை இங்கு குறிப்பிடத்தக்கது. மலையக நாட்டார் பாடல்களைத் தொகுத்து ஆவணப்படுத்தும் முயற்சியில், எழுத்தாளர் மு. சிவலிங்கத்தின் முன்னெடுப்புகள் முதன்மையான கவனத்தைப் பெறுகின்றன. மலையகத்திற்கே உரிய தனித்துவமான பல நாட்டார் பாடல்கள் இவரது தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனினும், வாய்மொழி மரபுப் பாடல்களுடன் 'அரை நாட்டார் பாடல்களையும்' அவர் அத் தொகுப்பில் இணைத்துக் கொண்டமையால், தூய 'நாட்டார் பாடல்கள்' என்ற வரையறைக்குள்ளிருந்து அந்நூல் சற்றே விலகி நின்று நோக்கப்படுகிறது. இத்தகைய விமர்சனங்கள் இருந்தபோதிலும், அவரது நாட்டார் பாடல் தொகுப்பில் காமன் கூத்திற்குரிய முழுமையான பிரதியொன் றும் இணைக்கப் பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளமை, கூத்து ஆய்வாளர்களுக் குக் கிடைத்துள்ள மிக முக்கியத் தரவாகக் கருதப்படுகிறது.

2016-ஆம் ஆண்டு உலகத் தமிழ் நாடக விழாவை நடத்துவது தொடர்பில், மூத்த கலைஞரும் 'உடல்' சஞ்சிகையின் ஆசிரியருமான எம். அரியநாயகம் தலைமையில் ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 'உடல்' சஞ்சிகை மலையகச் சூழலோடு கொண்டிருந்த நெருக்கமான தொடர்பின் விளைவாக, இவ்விழாவில் பங்கேற்க மலையகக் கலைஞர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்கமைய, அ. லெட்சுமணன் தலைமையிலான 'நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்' குழுவினர் இவ்விழாவில் பங்கெடுக்கத் தயாராகியிருந்த போதிலும், விசா (Visa) அனுமதி மறுக்கப்பட்டமையால் அவர்களுக்கான பயண வாய்ப்பு கைநழுவிப்போனது. இவ்வாறு சர்வதேச மேடைக்கான வாய்ப்பு தவறவிடப்பட்ட போதிலும், இக் கலைஞர்களால் அங்கு அரங்கேற்றப்படவிருந்த 'காமன் கூத்து' பற்றிய உரையாடல்களும் அவதானிப்புகளும் அவ்விழாவில் முதன்மையாகப் பேசப்பட்டன. மேலும், இவ்விழாவை முன்னிறுத்தி 'நிகர்' அமைப்பானது மலையக அரங்கியல் தொடர்பிலான ஆவணச் சிறப்பிதழ் ஒன்றையும் வெளியிட்டிருந்தது. மலையக அரங்கியல் முயற்சிகள் மற்றும் அதன் சமகாலப் போக்குகள் குறித்த பல காத்திரமான கட்டுரைகள் இச்சிறப்பிதழில் உள்ளடக்கப்படிருந்தமை முதன்மையான வரலாற்றுப் பதிவாகும். இந்த சர்வதேச முயற்சிக்குப் பின்னரான காலப்பகுதியில், கலைஞர் வே. இராமர் தலைமையிலான குழுவினர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நிகழ்வொன்றில் காமன் கூத்தை வெற்றிகரமாக அரங்கேற்றியிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

அதனைத் தொடர்ந்து, 2018-ஆம் ஆண்டு இலங்கை அனைத்துப் பல்கலைக்கழகங்களின் தமிழ்ச்சங்க மாணவர் பேரவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்திய கலைவிழா நிகழ்வில், காமன் கூத்து அரங்கேற்றப்பட்டமை மற்றுமொரு முக்கிய மைல்கல்லாகும். 'மக்கள் கலை பண்பாட்டு அரங்கு', 'நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்' ஆகிய அமைப்புகள் இணைந்து பங்கேற்ற இந்நிகழ்வின் போதே, காமன் கூத்தின் பிரதியாக்கமும் உள்ளடக்கப்பட்டு 'மலையக மக்கள் கலையான காமன் கூத்து' எனும் தலைப்பிலான நூல் வெளியிடப் பட்டமை முதன்மையான கவனத்தைப் பெறுகிறது.

உலகளாவிய தமிழ் இலக்கியச் சூழலில், 'இலக்கியச் சந்திப்பு' இயக்கத்தின் செயற்பாடுகள் மிக முக்கியமான அறி

வுத்தள உரையாடல்களை உருவாக்குபவை. அவ்வகையில், மலையகத்தை மையப்படுத்தி நடத்தப்பட்ட 47-ஆவது 'இலக்கியச் சந்திப்பு' நிகழ்வில் காமன் கூத்து அரங்கேற்றப்பட்டதோடு, அது குறித்த விரிவான கலந்துரையாடல்களும் ஆய்வரங்கில் முன்னெடுக்கப்பட்டன. உலகெங்கிலும் வாழும் தமிழ் இலக்கியகர்த்தாக்களும் கோட்பாட்டாளர்களும் ஒன்று கூடி கருத்துப் பரிமாற்றம் செய்யும் இத்தகையதொரு சர்வதேசக் களத்தில், மலையகக் காமன் கூத்து பேசுபொருளாக்கப்பட்டமை அதன் அரங்கியல் முக்கியத்துவத்தை உலகளாவிய ரீதியில் பறைசாற்றுவதாக அமைந்தது.

அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டிகளில் இருந்து கூத்து மற்றும் சமூக நாடகப் போட்டிகள் நீக்கப்பட்டமை, மாணவர்களிடையே இளமைக் காலத்திலேயே பாரம்பரியக் கலைகள் குறித்த புரிதல் ஏற்படுவதைத் தடுத்துள்ளது. குறிப்பாக, 2023-ஆம் ஆண்டு முதல் ஆரம்பக் கல்விப் பிரிவினர் இப்போட்டிகளில் இருந்து முழுமையாக நீக்கப்பட்டமை பாடசாலைகளின் கலை, மொழி சார்ந்த உயிரோட்டத்தைப் பாதித்துள்ளது. இம்மாற்றத்தை ஒருசில ஆசிரியர்கள் வரவேற்ற போதிலும், ஆரம்பப் பிரிவினரை மீண்டும் போட்டிகளில் இணைக்க வேண்டுமென 'அகில இலங்கை பதில் அதிபர்கள் சங்கம்' தொடர்ச்சியாகக் கோரி வருகின்றது. சிறுவர் பருவத்தில் மொழிப்பற்றையும், கலை ஆர்வத்தையும் வளர்ப்பதே எதிர்காலத் தலைமுறையைத் தயார்படுத்த உதவும் என்பதால், தமிழ் மொழித்தினப் போட்டிகளில் விடுபட்டுப்போன சமூக நாடகங்களையும், கூத்துகளையும் மீளவும் இணைத்துச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியது தற்போதைய காலத்தின் தேவையாகும்.

பல்கலைக்கழகங்களில் அரங்கியல் மற்றும் நுண்கலைத்துறைகளில் மலையக மாணவர்கள் பலர் பயின்ற போதிலும், ஒப்பீட்டளவில் மலையக அரங்கியல் வளர்ச்சி வேகம் குறைவாகவே உள்ளது. இறுதி ஆண்டு ஆய்வுக்காகத் தேடப்படும் தரவுகள் பட்டம் பெற்ற பின் கிடப்பில் போடப்படுவதும், அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவித்தொகைக்காக வீதி நாடகங்களில் பங்கேற்றவர்கள் பின்னர் அக்கலைகளைக் கைவிடுவதும் வழமையாகியுள்ளது. இச்சூழலுக்கு மத்தியில், ஒரு சிலர் மாத்திரமே அரங்க நடவடிக்கைகளையும் எழுத்துப் பணிகளையும் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர். அவ்வகையில், கந்தலோயா சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களினதும் 'அரங்க வலையமைப்பு' கலைஞர்களினதும் பங்களிப்பு முக்கியமானது. குறிப்பாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் மெய்யநாதன் கேதீஸின் ‘மலையகத் தமிழர் பண்பாட்டியக்கவியல் அடிப்படையில் காமன் கூத்து ஆற்றுகை’ எனும் ஆய்வுக் கட்டுரை அண்மைக் காலத்தில் மிகுந்த கவனம் பெற்றுள்ளது. அவரைப் போலவே, குழந்தைவேல் ஞானவள்ளி, கண்டி இரா. நித்தியானந்தன், அ. லெட்சுமணன் மற்றும் அண்மைக்காலமாக யோகநாதன் சாலினி ஆகியோரின் காமன் கூத்து சார்ந்த ஆய்வு எழுத்து முயற்சிகள் மலையக அரங்கியலில் நம்பிக்கையூட்டும் பதிவுகளாக விளங்குகின்றன.

தொலைக்காட்சி ஊடகங்களின் ஆவணப்படுத்தல் செயற்பாடுகள், காமன் கூத்து மரபைப் பொதுவெளியில் கொண்டு சேர்ப்பதிலும், கலைஞர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் மத்தியில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. குறிப்பாகத் தங்கள் ஊர்களில் அரங்கேறும் காமன் கூத்து பற்றிய செய்திகள் ஊடகங்களில் வெளி

யாகும் போது, அது கலைஞர்களிடையே ஒருவகை உள வியல் தூண்டலையும், கலை ஈடுபாட்டிற்கான மேலதிக ஆர் வத்தையும் தோற்றுவிக்கிறது. இத்தகைய தூண்டல் நிலை கள் இக்கலையின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு ஊக்கமளிப் பவையாக அமைகின்றன.

அவ்வகையில், இலங்கையில் காமன் கூத்தை முறையான ஆவணப் படமாக மாற்றும் முயற்சியில், 2018-ஆம் ஆண்டள வில் 'வசந்தம் தொலைக்காட்சி' மேற்கொண்ட பிரயத்தனங் கள் முதன்மையான கவனத்தைப் பெறுகின்றன. மஸ்கெலியா, லெங்கா தோட்டத்தில் இடம்பெற்ற காமன் கூத்தை மைய மாகக் கொண்டு, முப்பது நிமிடங்கள் கொண்ட 15 பாகங்கள் (Episodes) அடங்கிய விபரணத் தொடராக இது வாராந்தம் ஒளிபரப்பப்பட்டது. இந்நிகழ்ச்சியின் தயாரிப்பாளராக கே. புண்ணியமூர்த்தி, தொகுப்பாளராகக் கலைஞர் வே. இராமர், ஒருங்கிணைப்பாளர்களாக பெ. விஜயகோபால் மற்றும் உதய சேகர் ஆகியோர் காத்திரமாகப் பணியாற்றியிருந்தனர்.

மத்திய கலாசார அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் பிர தேச செயலகங்கள் போன்ற அரச கட்டமைப்புகள் தேசிய அளவில் கலைகளை மேம்படுத்தி வருகின்ற போதிலும், தோட்டப்புறக் கலைகள் மற்றும் கலைஞர்கள் தொடர்பில் அவை பாராமுகமாகவே தொழிற்படுகின்றன. இக்குறையைக் களைந்து அரசோடு தொடர்புகளை ஏற்படுத்த பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட 'பெருந்தோட்ட வசதியளிப்பாளர்கள்' மற்றும் இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள அதிகாரிகள் இவ்விடயத்தில் போதிய அக்கறை செலுத்தத் தவறியுள்ளனர்.

இதற்குச் சான்றாக, மலையகக் கலைஞர்களில் கரகாட்டக் கலைஞர் கலஹா பச்சமுத்து, நாவலப்பிட்டி கலபட கோபால் அண்ணாவியார் (வாத்தியார்) போன்ற ஒரு சிலருக்கு மட் டுமே இலங்கை அரசின் உயரிய 'கலாபூசணம்' விருது வழங் கப்பட்டுள்ளது; ஆனால், தலைமுறை தலைமுறையாகக் காமன் கூத்தில் ஈடுபட்டுவரும் பெரும்பாலான கலைஞர்கள் இன்னும் அங்கீகாரம் பெறாமலேயே உள்ளனர். எனவே, பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் மலையகக் கலைஞர்கள் மீது தனிக்கவனம் செலுத்த வேண்டியதுடன், காமன் கூத்துக் குழுக்களைப் பிரதேச செயலகங்களில் முறைப்படி பதிவு செய்வதற்கான விழிப்புணர்வு நடவடிக்கை களையும் முன்னெடுக்க வேண்டியது தற்போதைய அவசியத் தேவையாகும்.

மேற்படி பிரயத்தனத்தில் 2023-ஆம் 2024-ஆம் வருடங்களில் தலவாக்கலை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கலா சார உத்தியோகத்தரின் முயற்சியில் இந்து கலாசார அலு வல்கள் திணைக்களம் மலையக நாட்டார் கலைகள் தொடர் பிலான ஆய்வரங்கு ஒன்றையும் கலை விழாக்களையும் நிகழ்த்தியிருந்தது. இந்நிகழ்வின்போது மலையக நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கப் பட்டன. இதனைத் தொடர்ந்து 2023, 2024-ஆம் வருடங்களில் ஆய்வாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிடும் முயற்சியை இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் தொடங்கியது. இருந்தபோதி லும், ஆய்வாளர்களினால் முன்வைக்கப்பட்ட ஆய்வுக்கட்டு ரைகள் இதுவரையில் முழுமையாக கிடைக்கப்பெறாமை யால் அம்முயற்சி இற்றைவரையும் கைகூடவில்லை. மேலும், 2023-ஆம் வருடம் ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரியில் மலையக நிகழ்த்துக் கலைகள் தொடர்பிலான ஆக்கங்கள் அடங்கிய 'மலைநாட்டார் கலை வளம்' தொகுப்பு நூல் வெளி யிட்டமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு சி.வி. வேலுப் பிள்ளை தொகுத்து வெளியிட்ட 'மாமன் மகனே' நாட்டார் பாடல் தொகுப்பு நூலும் பேராசிரியர் ஸ்ரீபிரசாந்தன் அவர் களால் மீள்பதிப்பு செய்யப்பட்டு வெளியிட்டமையும் குறிப்பி டத்தக்கது.' அவ்வாறே பேராசிரியர் வ. மகேஸ்வரன் எழுதிய 'பொன்னர் சங்கர்' கள ஆய்வு நூலும் வெளியிட்டு வைக்கப் பட்டது. நிறுவனங்கள், உத்தியோகத்தர்கள் கலாசார நட வடிக்கைகளை விரிவுபடுத்த எண்ணுகின்ற போதிலும் சமூக மும் கற்றவர்களும் அவற்றைக் கண்டுக்கொள்ளாமை என்பது துரதிர்ஷ்ட சம்பவங்களாகவே நிகழ்ந்து முடிந்துவிடுகின்றன.

மலையகத்திற்கான தனித்துவமான பல்கலைக்கழகம் ஒன் றின் அவசியம் குறித்த கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன் வைக்கப்பட்டு வருகின்றன. அது இன்னும் சாத்தியப்படாத சூழலில், இப்பிராந்தியத்தின் முதன்மை உயர்கல்வி நிறு வனமாக விளங்கும் ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரி, மலையகச் சமூக அசைவியக்கத்தில் மிக முக்கிய பங்கினை ஆற்றிவருகிறது. இக்கல்லூரியின் சமூகப் பங்களிப்புகள் உற்றுநோக்கத்தக்கவை. எனினும், அண்மைக்காலமாக அதன் செயற்பாடுகளில் மந்தநிலை நிலவியமை விவாதத்திற்குள் ளாகியிருந்தது. ஆனால், நடப்பு ஆண்டில் கல்லூரியின் செயற்பாடுகள் மீண்டும் திருப்திகரமான நிலையை எட்டியுள் ளதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக, இக்கல்லூரியின் ஆறாம் மற்றும் ஏழாம் தொகுதி மாணவர்களால் தொடங்கப் பட்டு, பின்னர் தற்காலிகமாகத் தடைப்பட்டிருந்த 'லயம்' சஞ் சிகையின் மீள்வரவு மலையக அறிவுச்சூழலில் பெரும் வர வேற்பைப் பெற்றுள்ளது. அத்தோடு, கடந்த மாதம் இக்கல் லூரியின் பயிலுநர்கள் ஒன்றிணைந்து 'காமன் கூத்தை' வெற் றிகரமாக அரங்கேற்றியிருந்தமையும் முதன்மையான கவனத் தைப் பெறுகிறது. ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியின் தமிழ்ச் சங்கத்தை மீளக் கட்டியெழுப்பும் கூட்டுப் பிரயத்தனத்தின் ஒரு பகுதியாக, இக்காமன் கூத்து ஆற்றுகை அமைந்திருந் தமை அரங்கியல் ஆர்வலர்களால் பெரிதும் பாராட்டத்தக்க சிறப்பம்சமாகும். ஒரு சமூகத்தின் கூட்டு அடையாளம் என்ற வகையில், மலையகப் பண்பாடு குறித்த இத்தகைய கரி சனையும் விழிப்புணர்வும் சமூகத்தின் அனைத்துத் தரப்பின ரிடையேயும் விரிவடைய வேண்டியது காலத்தின் கட்டாய மாகும்.

(தொடரும்...)

letsumanan.a@thaiveedu.com

சிற்பி என்னும் இலக்கிய ஆளுமை

– வே. விவேகானந்தன்

தமிழகத்தின் இலக்கிய உலகில் சிற்பி என்னும் பெயரில் வலம்வரும் எழுத்தாளர் பொ. பாலசுப்பிரமணியம் போல, இலங்கையில் சிற்பி என்னும் பெயரில் இலக்கிய உலகில் வலம் வந்தவர் சிவ. சரவணபவன். இவர், இலங்கையின் வடக்கே யாழ்ப்பாண மாவட்டத்தில் காரைநகர் என்னும் ஊரில் வாழ்ந்து வந்த, சிவசுப்பிரமணியக் குருக்கள் சௌந்தராம்பாள் இணையருக்கு மகனாக, 1933-ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 28-ஆம் திகதி பிறந்தார்.

சிவ. சரவணபவன் தனது ஆரம்பக் கல்வியைக், கந்தரோடை கந்தையா தமிழ் வித்தியாசாலையிலும், உயர் கல்வியை ஸ்கந்தவரோதயா கல்லூரியிலும் கற்றார். சிரேஸ்ட தராதரப் பரீட்சையில் (S.S.C.) சித்தியடைந்ததும், கொழும்பு உயர் நீதிமன்றப் பதிவாளர் காரியாலயத்தில் எழுதுவினைஞராகத் தனது பணியை ஆரம்பித்தார். எனினும், உயர் கல்வி கற்கவேண்டும் என்ற எண்ணம் தீவிரம் அடையவே, பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்காக 1953-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைகழகத்துடன் இணைக்கப்பட்ட, சென்னை கிறித்துவக் கல்லூரியில் இணைந்து கொண்டார். பட்டப்படிப்பினை நிறைவு செய்து இலங்கை திரும்பிய அவர், யாழ்ப்பாணம் திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகப் பதவி வகித்த பின்னர், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா பட்டத்தையும், யாழ். பல்கலைக் கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் (M.A) பெற்றவர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், ஆகிய மும்மொழிகளில் புலமையும், இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழில் திறமையும் மிக்கவர்.

சிவ. சரவணபவன் எழுத்துலகில் கால் பதிப்பதற்கு, சிறுவய திலேயே அவருக்கு ஏற்பட்ட வாசிப்புப் பழக்கம் அடிப்படைக் காரணமாக அமைந்தது. பாடசாலை மாணவனாகப் படித்த காலத்திலேயே ஈழகேசரி, இந்து சாதனம் மற்றும் தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் கலைமகள், கல்கி, ஆனந்தவிகடன் ஆகிய சஞ்சிகைகளை வாசிக்கும் பழக்கம் இருந்தது. அத்துடன் கல்கி, அகிலன், மு. வரதராசன் போன்றவர்களின் படைப்புகளையும் விரும்பி வாசித்தார். தந்தையார் தமிழ் ஆசிரியர் சிவசுப்பிரமணியக் குருக்களும், தாய் மாமனார் பண்டிதர், இலக்கியக் கலாநிதி ஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக் களும் இவரது இலக்கியப் புலமையைக் கூர்மைப்படுத்தினர். அவர்கள் சேகரித்து வைத்திருந்த சமய, இலக்கிய நூல்களை ஓய்வு நேரங்களில் வாசித்து வந்தார். வட மொழியிலும் தேர்ச்சி பெற்றார். கந்தரோடை கந்தையா தமிழ்ப் பாடசாலையில் படிக்கும் போதே, அங்கு ஆசிரியப் பணிபுரிந்து வந்த சி. பொன்னம்பலம், சிவ. சரவணபவனின் திறமையைக் கண்ட றிந்து, பாடசாலை மாணவர் மன்றம் இருவாரங்களுக்கு ஒருமுறை வெளியிட்டு வந்த 'மாணவர் போதினி' கையெ ழுத்துச் சஞ்சிகையில் இவரது கட்டுரையை வெளிவரச் செய்து ஊக்கமளித்தார். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் படிக்கும் போது ஆசிரியர் வித்துவான் சி. ஆறுமுகம் அவர்களின் தூண் டுதலால், ஈழகேசரி பாலர் பகுதியில் கவிதை ஒன்றும், சுதந் திரன் பத்திரிகையில் 'பழம் பண்பைப் பற்றிய பகர்வதில் பயனில்லை'. என்ற கட்டுரையும், 'ஸ்கந்தா' என்ற கல்லூரி சஞ் சிகையில் 'இளைஞர் கடன்' என்ற கட்டுரையும் வெளியாகின. ஒறேற்றர் சுப்பிரமணியத்திடம் ஆங்கில மொழியையும் கற்றுக் கொண்டார்.

கொழும்பு உயர் நீதிமன்ற பதிவாளர் காரியாலயத்தில், எழுது வினைஞராகப் பணியாற்றிய போது இவர் எழுதிய 'மலர்ந்த காதல்' என்ற முதலாவது சிறுகதை சுதந்திரன் பத்திரிகையில் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து 'மரணவாயில்', 'ஏழை யின் முடிவு', 'மனமாற்றம்', 'அவசர முடிவு', 'அமுதைப் பொழியும் நிலவு', 'கோயில் பூனை', 'வெறி முறிந்தது', 'பட்டுச் சட்டை', 'சோறும் மானமும்' ஆகிய சிறுகதைகளும் அப்பத்திரி கையில் வெளிவந்தன. 'பழக்கம் இல்லை', 'மக்கள் தொண்டு', 'யார் செய்த தவறு' போன்ற சிறுகதைகள் ஈழகேசரியில் வெளி வந்தன. சிந்தாமணி, மஞ்சரி, கல்கி, தீபம், கலைமகள் ஆகிய வெளியீடுகளிலும் இவர் எழுதிய படைப்புகள் பிரசுரமாகின. சிவ. சரவணபவன் எழுதி, இலங்கை வானொலிக்கு அனுப்பிய 'மாணிக்கம்' என்ற சிறுகதை இலங்கை வானொலியில் அங்கீக ரிக்கபட்டு, இவராலேயே வாசிக்கப்பட்டது. பின்னர் இச்சி றுகதை 'ஏழையின் இதயம்' என்னும் தலைப்பில் வீரகேசரியில் வெளியானது. இக்காலப்பகுதியில் தினகரன் வாரமலரிலும் இவரது சிறுகதைகள் வெளிவந்தன. 1955-ஆம் ஆண்டு இணுவில் மூர்த்தி அவர்களை ஆசிரியராகாக் கொண்டு வெளிவந்த 'உதயம்' பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் 'மறுமணம்' என்ற சிறுகதை, முதல் பரிசைப் பெற்றதோடு இலக்கிய உலகில் புகழ் பெறத் தொடங்கினார்.

சென்னை கிறித்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்ட போது, தமிழ் மொழியில் அதி கூடிய புள்ளி களைப் பெற்று, 'ராஜா சேதுபதி' தங்கப் பதக்கத்தினைத் தனதாக்கி, ஈழத்துத் தமிழ் மாணவர்களுக்குப் பெருமை சேர்த்தார். கல்வியோடு, பிற கல்விசார் செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்தித், தனது ஆளுமையை மேம்படுத்தினார். திருவல்லிக்கேணி ஔவை தமிழ்ச் சங்கம் நடத்திய கட்டுரைப் போட்டியில், இரண்டாவது பரிசைப் பெற்றார். இவர் தங்கியி ருந்த சோலையூர் மண்டபத் தமிழ்ச் சங்கம் வருடா வருடம் 'இளந்தமிழன்' என்ற கையெழுத்துச் சஞ்சிகையை வெளி யிட்டு வந்தது. அதன் ஆசிரியராக அழ. சிதம்பரம் இருந்தார். சிவ. சரவணபவன் அதன் ஆசிரியராகப் பொறுப்பேற்றதும், அச்சுப்பிரதியாக அதனை வெளிவரச் செய்தார். வரலாற்றுப் புகழ்மிக்க சென்னை கிறித்துவக் கல்லூரியின் விடுதி ஒன்றிலி ருந்து, அச்சுவாகனம் ஏறிய முதலாவது தமிழ்ச் சஞ்சிகை என்ற புகழை 'இளந்தமிழன்' பெற்றுக் கொண்டது. இவருக்குப் பின் கவிஞர் வி. கந்தவனம் ஆசிரியராகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை கிறித்துவக் கல்லூரியில் 'இளந்தமிழன்' சஞ்சி கையை நடத்தி, அதில் பெற்ற அனுபவமும், ஆர்வமும் காரணமாக, அவர் ஆசிரியராகவும் அதிபராகவும் பணி யாற்றிய பாடசாலைகளில் மாணவர்களின் இலக்கிய ஆர் வத்தினை ஊக்குவிப்பதற்காக, சஞ்சிகைகளை வெளி யிட்டார். செங்குந்தா இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணி யாற்றியபோது கல்லூரிக் கீதத்தை இயற்றியதோடு 'சுடரொளி' என்னும் சஞ்சிகையினையும் வெளியிட்டார். அதில் க. பரராஜ சிங்கம், யாழ். நங்கை, இரா. சிவச்சந்திரன், எஸ். திருச் செல்வம் போன்றவர்களின் கதை, கட்டுரை, கவிதைகளை வெளிவரச் செய்து, தரமான இலக்கிய சஞ்சிகையாக விளங் கச் செய்தார். உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றிய போது, 'இளந்தளிர்' சஞ்சிகையை வெளியிட்டு மாணவர்களின் மதிப்பை பெற்றார். தென்ம ராட்சிப் பாடசாலை ஒன்றில் இருந்து, முதன் முதலாக அச்சில் வெளிவந்த சஞ்சிகை என்ற பெருமையை இது பெற்றது. யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிய போது அங்கு தமிழ்ப் பேரவை ஒன்றை உருவாக்கி அதன் சார்பில் 'யாழோசை' என்ற சஞ்சிகை வெளிவரக் காரணமாக இருந்தார்.

சஞ்சிகைகளை வெளியிடுவதில் ஆர்வம் கொண்ட சிவ. சரவ ணபவன், ஈழத்து எழுத்தாளர்கள் இந்தியப் பத்திரிகைகளால் புறக்கணிக்கப்படுவதைக் கண்டு கவலையடைந்தார். இது பற்றி 1958 -ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி ஈழகே சரிப் பத்திரிகையில் 'ஈழத்து எழுத்தாளர்களும் இந்தியப் பத் திரிகைகளும்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையினையும் எழுதியிருந்தார்.

1956-ஆம் ஆண்டு, இனக்கலவரத்தைத் தொடர்ந்து பாதிக் கப்பட்ட களுத்துறை தமிழ்ச் சங்கச் செயலாளர் தமிழ்ச் செல்வன், மற்றும் உதயணன் ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு வந்தவேளை, சிவ. சரவணபவனைச் சந்தித்து, களுத்துறையி லிருந்து தாங்கள் வெளியீட்டு வந்த 'ஈழதேவி' சஞ்சிகையை, அங்கிருந்து வெளியிட முடியாத சூழ்நிலை காணப்படுவதா கவும், அதனை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடுமாறு கேட்டுக் கொண்டனர். ஈழத்து எழுத்தாளர்களுக்கு முன் னுரிமை கொடுக்க வேண்டும் எனக் கனவு கண்டு கொண்டி ருந்த சிவ. சரவணபவனுக்கு இது ஒரு இனிப்பான செய்தியாக இருந்தது. எனவே அதற்கு இணங்கிய அவர் 1958-ஆம் ஆண்டு ஜூலை மாதம் யாழ். தமிழ் இலக்கிய மன்றத்தின் ஆதரவில் 'கலைச் செல்வி' என்ற பெயர் மாற்றத்தோடு சஞ்சி கையினை வெளியிடத் தொடங்கினார்.

வளரும் எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத் ததோடு, அனுபவம் மிக்க எழுத்தாளர்களையும் கலைச் செல்வி அரவணைத்துச் சென்றது. தரமான இலக்கியப் படைப் புகளைக் கலைச்செல்விக்கு யார் அனுப்பினாலும், அவர் களது தனிப்பட்ட அரசியல், சமூக, சமய, பொருளாதாரப் பின் னணிகளைக் கருத்தில் கொள்ளாது, கலைச்செல்வியில் அவற்றைப் பிரசுரித்து வந்தார் சிவ. சரவணபவன். முற்போக்கு இலக்கியம், நற்போக்கு இலக்கியம் என்ற பிரிவுகள் மேலோங் கியிருந்த 1960-களில், அவற்றுள் சிக்குப்படாது, ஈழகேசரிப் பண்ணையில் வளர்ந்த சிவ. சரவணபவன், நிதானமாக கலைச் செல்வியை வளர்த்துச் சென்றார். அதனால், சிறுகதை, இலக் கியக் கட்டுரை, விமர்சனம், ஆய்வு போன்ற தரமான படைப்பு களைக் கொண்ட சஞ்சிகையாக அது மிளிர்ந்தது. கலைச் செல்வி அகில இலங்கை சிறுகதைப் போட்டிகளை நடத்தி, பல புதிய எழுத்தாளர்களை இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்தது: எழுத்தாளர்களைக் கௌரவித்தது. நாவல் போட்டி யில் எழுத்தாளர் மு. தளையசிங்கம் எழுதிய 'ஒரு தனிவீடு' முதல் பரிசைப் பெற்றது.

எனினும், நிதி நெருக்கடியாலும், மிக நெருக்கமாக இருந்து கலைச்செல்வி வெளிவர உதவியவர்கள், தொழில் நிமித்தம் இடமாற்றம் பெற்றுத் தூர இடங்களுக்குச் சென்றமையாலும் 1966-ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்துடன் வெளிவராது போனமை துரதிஷ்டமாகும்.

தமிழீழக் கல்வி பண்பாட்டு கழகம் வெளியிட்ட 'விளக்கு' என்ற கல்வி இதழின் ஆசிரியராகவும் இவர் செயற்பட்டுள்ளார். இது கல்வியாளர்களால் நன்கு மதிக்கப்பட்ட ஏடாகும்.

ஈழத்து எழுத்தாளர்களுக்கும், ஈழத்து இலக்கியத்துக்கும் முக் கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற அவரது ஆழமான சிந் தனையிலிருந்து உருவாகியதே 'ஈழத்துச் சிறுகதைகள்' என்ற தொகுப்பு நூலாகும். இது இலங்கையர்கோன், சி. வைத்தி லிங்கம், சம்பந்தன், கனக. செந்திநாதன், இராஜ அரியரத் தினம், தாழையடி சபாரத்தினம், வரதர், வ.அ. இராசரத்தினம், க. இராஜனாயகன், சகிதேவி தியாகராஜா, கே. டானியல், செ. கணேசலிங்கன் ஆகிய பன்னிரு ஈழத்து எழுத்தாளர்களின், சிறுகதைகளைத் தொகுத்து அவரால் முதன்முதலாக வெளியி டப்பட்ட நூலாகும்.

சிவ. சரவணபவனின் இரண்டாவது சிறுகதைத் தொகுதியாக 'சத்திய தரிசனம்' வெளிவந்தது. இளைஞர்களின் போராட்டத் தைக்கருவாகக் கொண்டு மறத்துக்கும் அன்பே துணை', என்ற சிறுகதையும், மண் மீது கொண்ட தீராக் காதலைக் கருவாகக் கொண்டு 'சொந்த மண்' என்ற சிறுகதையும், இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. சில இலக்கியவாதிகளின் போலித் தனங்களை எடுத்துக் காட்டும் கதைகளாக 'பணத்துக்காக' 'சத்திய தரிசனம்' ஆகிய கதைகள் விளங்குகின்றன. 'உயிரோ வியம்', 'ஒரே ஒருத்திக்கு', 'மகாவலியின் மடியில்' ஆகிய கதைகள், காதல் உணர்வின் மகத்துவத்தை எடுத்துக் காட்டு கின்றன. போலித்தனமான பெரியவர்களின் முகமூடிகளை 'மக்கள் தொண்டு' என்னும் கதை வெளிச்சம் போட்டுக் காட்டு கிறது. நாம் சந்திக்கும் பல்வேறு மனிதர்களின் பலம், பலவீனம் என்பவற்றை 'புரைதீர்ந்த நன்மை', 'ஒரு திருட்டின் கதை', 'இழப்பு' ஆகிய கதைகள் சித்தரிக்கின்றன. 'நினைவுகள் மடிவ தில்லை' இவரது மற்றுமொரு சிறுகதைத் தொகுப்பாகும். இவரது நாவல் படைப்புகளில் 'உனக்காகக் கண்ணே' சிறந்த நாவலாகும். 'கல்லில் கலை வடிவம் படைப்பவன் சிற்பி. சொல்லில் கலை வண்ணம் காணும் விளைவால் நான் சிற்பி ஆனேன்' எனக் கூறும் அவர் சிற்பி என்னும் புனை பெயரில் தனது படைப்புகளை வெளியிட்டார். 'கீதன்', 'சேயோன்', 'யாழ் வாசி' என்னும் புனை பெயர்களிலும் எழுதியுள்ளார்.

ஈழத்து எழுத்தாளர்கள் பற்றியும், இங்கு நடைபெறும் கலை, இலக்கிய, சமய, கலாச்சார நிகழ்சிகள் பற்றியும், தமிழக இலக்கியவாதிகள் அறியும் பொருட்டு, தீபம் ஆசிரியர் நா. பார்த்தசாரதியுடன் தொடர்பு கொண்டு, 'இலங்கைக் கடிதம்' என்ற பகுதியில் 'யாழ் வாசி' என்னும் புனைபெயரில் எழுதி வந்தார். இதன் மூலம் ஈழத்து இலக்கியவாதிகளுக்கும், தமிழக இலக்கியவாதிகளுக்கும் ஒரு பாலமாக செயற்பட்டார். இலக்கியப் பணிகளுக்கு அப்பால் பல்வேறு கலை இலக்கிய அமைப்புகளிலும் இணைந்து செயற்பட்டார். வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் பொருளாளராகவும், யாழ். தமிழ் எழுத் தாளர் சங்கம், அகில இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கம், ஆகியவற்றில் துணைச் செயலாளராகவும், யாழ். இலக்கிய வட்டம், இலங்கை சாகித்திய மண்டல மொழிபெயர்ப்பு பிரிவு ஆகியவற்றில் உறுப்பினராகவும், யாழ். மாவட்டக் கலாசாரப் பேரவையின் தலைவராகவும் பணியாற்றித் தனது பங்களிப் பினைச் செய்தார்.

சிற்பியின் இலக்கிய முயற்சிகள் பற்றி 1988-ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக மாணவி, செல்வி ப. வித்தியா தனது கலைமாணி இறுதி ஆண்டுப் பரீட்சையை நிறைவு செய்வ தற்காக, 'ஈழத்து சிறுசஞ்சிகை வரிசையில் கலைச் செல்வியின் பங்களிப்பு' என்னும் தலைப்பில், ஆய்வுக் கட்டு ரையினைத் தமிழ்த்துறையில் சமர்ப்பித்துப் பெருமைப்படுத் தியுள்ளார். 1998-ஆம் ஆண்டு, செல்வி சுதர்சினி சச்சிதா னந்தன் அதே பல்கலைகழகத் தமிழ்த்துறையில் தனது சிறப்புக் கலைமாணி இறுதிப் பரீட்சையை நிறைவு செய்வ தற்காக 'சிற்பி சிவ. சரவணபவன்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்துள்ளார். 'ஞானம்' சஞ்சிகை 2008-ஆம் ஆண்டு ஜூன் மாத இதழில், முன் அட்டையில் சிற்பியின் படத்தைப் பிரசு ரித்துப் பவளவிழா சிறப்பு மலராக வெளியிட்டு மதிப்ப ளித்தது. 2002-ஆம் ஆண்டு வடக்கு-கிழக்கு கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு ஆளுநர் விருதை வழங் கியது. 2006-ஆம் ஆண்டு கொழும்பு கம்பன் கழகமும், வலிகாமம் தெற்கு பிரதேச சபையும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்தன. 06.01.2008 கலைமுகம் இதழ் சிற்பி அவர்களின் நேர்காணலைப் பிரசுரித்து அவரைக் கௌரவப்படுத்தியது.

எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர், நாவலாசிரியர், சிறுகதை ஆசிரியர் எனப் பன்முக ஆளுமை கொண்டு, சிற்பி என்னும் புனை பெயரில் ஈழத்து இலக்கிய உலகில் பிரகாசித்த சிவ. சர வணபவன், 2015-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதி தனது எண்பத்திரண்டாவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது இலக்கியப் பணிகள் என்றும் நினைவு கூரப்பட வேண்டியன வாகும்.

vivekananthan.v@thaiveedu.com

முஸ்லிம் சமூகத்தின் சிந்தனை வளர்ச்சியும் மனிதநேயச் சமூகவியலும்: பேராசிரியர் ஏ.சீ.எல். அமீர் அலியின் வகிபாகம்

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் (பேராதனைப் பல்கலைக்கழக) ஆரம்பகால வரலாற்றில், பொருளியல் துறையில் பட்டப் படிப்பை நிறைவு செய்து, முதன்முதலில் அத்துறையைத் தமிழில் கற்பித்த விரிவுரையாளர் என்ற பெருமைக்குரியவர் பேராசிரியர் ஏ.சீ.எல். அமீர் அலி ஆவார். முதன்மையாக ஒரு சிறந்த கல்வியியலாளராகவும் ஆய்வறிஞராகவும் மிளிரும் அவர், தனது ஓய்வுக் காலத்தின் பெரும் பகுதியைச் சமூகம் சார்ந்த கட்டுரைகளை எழுது வதிலேயே செலவழித்து வருகின்றார். பொருளியல் துறையில் சிறந்த தேர்ச்சி பெற்றவரான இவர், இலக்கியத்தின் மீதும் தான் பிறந்து வளர்ந்த சமூகத்தின் மீதும் பற்றுக் கொண்டிருப்பதற்கு அவரது தந்தை கவிஞர் அப்துல் காதர் லெப்பையின் அறிவுரையே முக்கிய காரணமாகும். 'நீ எங்கு சென்றாலும், எந்த வொரு உயர் பதவியை வகித்தாலும் சமூகத்தோடு ஒன்றித்திருக்க வேண்டும்; சமூகத்திற்காக எழுத வேண்டும்; அதுவே காலத்தின் தேவை' என்று தந்தை தன் மகனுக்குக் கூறியிருந்தார். தந்தையின் இவ்வறிவுரைக்கு ஏற்ப, அவர் தற் போது புலம்பெயர்ந்து அவுஸ்திரேலிய மண்ணில் வாழ்ந்தாலும், தன் சமூக அடையாளத்துடனும் எதார்த்தப் போக்குடனும் வாழும் ஒருவராக விளங்கு வதை எவராலும் மறுக்க முடியாது.

இவர் தனது எழுத்துப் பணியைத் தொடங்கிய காலம் முதல் சமூகம், அரசியல், பொருளாதாரம் எனப் பல்வேறு தளங்களில், தற்காலத்திற்கும் எதிர்காலத் திற்கும் பொருந்தக்கூடிய ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளார். இது இவரது எழுத்தாளுமையை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான கட்டமைப்பை வடிவமைப்பதில் இவரது கல்வி சார் ஆய்வுக் கட்டுரைகள் தனித்துவமான அடையாளத்தைக் கொண்டுள்ளன. அதே நேரம், முஸ்லிம் சமூகத்தின் பூர்வீகம், தனித்துவம், அரசியல், சமயம் மற்றும் இருப்பு சார்ந்த ஆய்வுகளுக்கான பல புதிய வழிகளையும் இவை திறந் துவிட்டுள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவப் பருவம் பேராசிரியர் ஏ.சீ.எல். அமீர் அலியின் அறிவுசார் அணுகுமுறைகளைக் கூர்மையாக்கிய காலமாகும். பேரா சிரியர் சு. வித்தியானந்தன் இவரை ஒரு கூத்துக் கலைஞனாக உருவாக்க முயன்றபோது, இவரால் பாட முடிந்ததே தவிர ஆட இயலவில்லை; எனினும், தன்னை ஒரு சிறந்த எழுத்தாளராகவும் இலக்கிய ஆர்வலராகவும் அவர் தகவ மைத்துக் கொண்டார். ஆங்கில மொழியில் கற்ற பொருளியல் பாடத்தை, தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு இனிய இலக்கிய ஓசை நயத்தோடு கற்பித்தமை இவரது தனித்துவமாகும். இதனாலேயே, அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் அம் பலவாணர் சிவராசா, 'அமீர் அலியின் கவர்ச்சிகரமான தமிழ் இலக்கிய நயத் திலான கற்பித்தல் முறையால் ஈர்க்கப்பட்டே நான் விரும்பிப் பொருளியல் கற்றேன்' என்று பல மேடைகளில் குறிப்பிட்டுள்ளார். தீவிர தமிழ் இலக்கியப்

prasadbatti@gmail.com

பற்றாளராகவும் கூர்ந்த ஆய்வாளராகவும் விளங்கிய அமீர் அலி, பொருளியல் சார்ந்த தமிழ்க் கட்டுரைகள் மற்றும் விரிவுரைகள் மூலம் புதிய கலைச்சொற்களை அறிமுகப்ப டுத்தி, தமிழில் கற்பிக்கக்கூடிய புதியதொரு பொருளியல் தலைமுறையையே உருவாக் கினார் என்றால் அது மிகையாகாது.

அவர் அவுஸ்திரேலியாவில் தனது கலாநிதிப் (Ph.D) பட்டப் படிப்பை நிறைவு செய்த பின்னர், அங்குள்ள மர்டொக் (Murdoch) பல் கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணி யாற்றினார். பின்னர், அங்கேயே நிரந்தர மாகக் குடியேறிய அவர், சர்வதேச ஆங்கில ஆய்வுச் சஞ்சிகைகளுக்கும் நாளிதழ்களுக்கும் ஆங்கிலத்திலும் தமிழிலும் தொடர்ந்து எழுதி வருகின்றார். தான் பிறந்து வளர்ந்த தாய் நாடான இலங்கையின் மீதுள்ள பற்றினால், இங்கு நிலவும் அரசியல், சமூக, பொருளா தார மற்றும் சமய நெருக்கடிகள் குறித்துப் புள்ளிவிவரத் தரவுகளுடனும் நம்பகமான ஆதாரங்களுடனும் கட்டுரைகளை எழுதிவ ருகின்றார். சமகால மாற்றங்களுக்கு ஏற்ப, எதார்த்தப் போக்கோடு வினைத் திறனுடன் பதியப்படும் இவரது படைப்புகள் அனைத்தும், உன்னதமான நம்பகத்தன்மையையும் தீர்க் கமான உறுதியையும் பிரதிபலிக்கின்றன.

கொழும்பு சாஹிறாக் கல்லூரியின் தமிழ்ச் சங்கத் தலைவராக அமீர் அலி கடமையாற்றி யபோது, அதன் செயலாளராக எஸ்.எச்.எம். ஜெமீல் பணியாற்றினார். அக்காலத்தில் கல் லூரியின் விவாதக் குழுவில் எச்.எம். ஷெரீப், அமீர் அலி, சுபியான், இராஜபுவனேஸ்வரன், இரத்தினம், எம்.ஏ.எம். சுக்ரி, வை.ஏ. ஹமீத் போன்றோர் முக்கிய உறுப்பினர்களாகத் திகழ்ந்ததோடு, அதற்குக் பேராசிரியர் கா. சிவத்தம்பி பொறுப்பாசிரியராக விளங்கினார். இவ்வாறு சாஹிறாவில் கற்கும் காலத்திலேயே கலை, இலக்கியத் துறைகளில் கால்பதித்த அமீர் அலி, பாடசாலை மொழிதின விழாக்க ளிலும் தீவிரமாகப் பங்கெடுத்தார். ஆங்கி லத்தில் சிறந்த புலமைமிக்கவராக விளங்கிய அவர், பல்கலைக்கழகப் பிரவேசத்தின்போது தமிழ் மொழித் துறையில் அதிக புள்ளிகளைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. பேராத னைப் பல்கலைக்கழகத்திலிருந்து அவர் அவுஸ்திரேலியா சென்றதால் இலங்கை மாணவர்களுடனான நேரடித் தொடர்பு விடு பட்ட போதிலும், நாட்டின் பல்கலைக்கழகக் கட்டமைப்புடன் தொடர்ந்து இணைந்தே இருந்தார். குறிப்பாக, 1995-இல் தென்கி ழக்குப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது, இலங்கையிலேயே முதன்முறையாக 'செமஸ்டர்' (Semester) கல்வி முறையை அங்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்று அதன் நிர்வாகத்திற்கு அவரே ஆலோசனை வழங்கினார். அக்காலகட்டத்தில் இலங் கையின் வேறு எந்தவொரு பல்கலைக்கழ கத்திலும் இக்கல்விமுறை அறிமுகப்படுத் தப்பட்டிருக்கவில்லை என்பது அவரது தீர்க் கதரிசனத்திற்குச் சான்றா கும்.

அவுஸ்திரேலியாப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் பதவியை ஏற்ற அமீர் அலி கற்ற கல்வியை திறன்படச் செயற்படுத் தினார். அவர் பொருளியல் தளத்தில் நவீன நுண்ணறிவுகளைப் புகுத்தியதோடு, தனது முற்கால அனுபவங்கள் மற்றும் புதிய தேடல் களின் வாயிலாகப் புத்தம் புதிய சிந்தனைப் பரப்புகளை உருவாக்கினார். அவற்றைத் திறம்பட கற்கின்ற மாணவர் குழாத்தை சர்வதேச உலகில் உருவாக்கினார். வழக் கமான கற்றல், கற்பித்தல் நடவடிக்கைக ளுக்கு அப்பால் புதிய ஆய்வுப் பரப்புகளை அவர் விரிவுபடுத்தினார்; இது சர்வதேச பொருளியல் கல்வித் துறைக்கு அவர் வழங்கிய பெரும் பங்களிப்பாகும்.

ஓரு சிறந்த கட்டுரையாளரின் பணி தன் எழுத்துக்கான தனி அரங்கைக் கட்டி நிறுத் துவது அல்ல. தேவையான காலகட்டத்தில் தேவையான கருத்துகளைப் பரிமாற்றம் செய்து அதனைப் பொதுவெளியில் நிலை நிறுத்தல் வேண்டும். இந்தப் பொறுப்பை பேராசிரியர் ஏ.சீ.எல். அமீர் அலி இற்றைவரைக்கும் சரியாகவே செய்து கொண்டு வருகின்றார். கொரோனா தொற்றுக் காலத்தில் அவர் எழுதிய கட்டுரைகள், நாட்டின் பொருளாதார நெருக்க டியான காலகட்டத்தில் எழுதிய கட்டுரைகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது முஸ்லிம்கள் எதிர்நோக்கிய பிரச்சி னைகள் குறித்து அவர் எழுதிய கட்டுரைகள் என எத்தனையோ கட்டுரைகள் அவரின் ஆளுமையைப் பறை சாற்றி நின்றன. இவை அனைத்தும் மக்களை விழிப்புணர்வூட்டு தலுக்காக எழுதப்பட்டவையே.

அவர் வீரகேசரி, தினகரன், தினக்குரல், விடிவெள்ளி, சன்டே டைம்ஸ், நவமணி உள்ளிட்ட இலங்கையின் முன்னணி நாளிதழ்க ளிலும், சர்வதேசப் பல்கலைக்கழக ஆய்வுச் சஞ்சிகைகளிலும் ஏராளமான கட்டுரைகளை எழுதிப் பங்களித்துள்ளார். ஆயினும், தனது சிந்தனை வேகத்திற்கும் சமூக ஆதங்கத் திற்கும் ஏற்ப அனைத்து விடயங்களையும்

“அமீர் அலி கற்ற கல்வியை திறன்படச் செயற்படுத்தினார். அவர் பொருளியல் தளத்தில் நவீன நுண்ணறிவுகளைப் புகுத்தியதோடு, தனது முற்கால அனுபவங்கள் மற்றும் புதிய தேடல்களின் வாயிலாகப் புத்தம் புதிய சிந்தனைப் பரப்புகளை உருவாக்கினார். அவற்றைத் திறம்பட கற்கின்ற மாணவர் குழாத்தை சர்வதேச உலகில் உருவாக்கினார். வழக்கமான கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு அப்பால் புதிய ஆய்வுப் பரப்புகளை அவர் விரிவுபடுத்தினார்”

முழுமையாக எழுதித் தீர்க்க முடியவில்லையே என்ற தொரு பெருங்குறை அவரிடம் இன்றும் காணப்படுகிறது.

அவுஸ்திரேலியாவிலிருந்து சென்ற அவர், புருணை (Brunei) நாட்டிலுள்ள பல்கலைக்கழகமொன்றில் தனது அறிவுத் தாகத் துடன் சுதந்திரமாகப் பணியாற்றினார். சில ஆண்டுகள் ஆய்வுகளை மேற்கொண்டு அந்நாட்டின் பொருளாதார நிலை குறித்ததொரு நூலை எழுதினார். செல்வச் செழிப்பு மிக்க புருணையில் நிலவும் வறுமை நிலை குறித்துத் துணிச் சலாக அந்நூலில் அவர் அம்பலப்படுத்தியிருந்தார். அதன் காரணமாக, நூலை வெளியிடுவதாயின் அதன் தலைப்பை மாற்றுமாறு அந்நாட்டு நிர்வாகம் வற்புறுத்தியது. ஆனால், எழுத்து நேர்மையிலும் உண்மையிலும் சமரசம் செய்து கொள்ள விரும்பாத அவர், அதற்கு மறுத்துவிட்டார். இதன் விளைவாக அவர் தனது வேலையை இழக்க நேரிட்ட போதிலும், அதற்காகப் பெருமிதமே கொண்டார். பின்னர் மீண்டும் அவுஸ்திரேலியா திரும்பிய அவர், எவ்வித மாற்றமு மின்றி அந்த நூலை அங்கேயே பதிப்பித்து வெளியிட்டார்.

எழுத்து நேர்மையும் எளிமையும் கொண்ட பேராசிரியர் அமீர் அலி, தனது ஆய்வுத் திறனால் சர்வதேச அளவில் செல்வாக்கு பெற்றவர். புருணைப் பல்கலைக்கழகத்தில் நிலவிய தணிக்கைக்கும் அதிகார நெருக்குவாரங்களுக்கும் அஞ்சாமல், தனது கருத்துச் சுதந்திர நிலைப்பாட்டில் அவர் சமரசம் செய்துகொள்ளவில்லை. செல்வச் செழிப்புமிக்க அரபு நாடுகள் ஏழை எளியோரின் எதார்த்த நிலையை மறைப்பதையும், விமர்சிப்பவர்களின் பதவிகளைப் பறிப்ப தையும் அறிவுஜீவிதத்திற்கு விடுக்கப்பட்ட சவாலாகவே கருதினார். இத்தகைய தடைகளே அவரைத் தொடர்ந்து எழுதத் தூண்டின. தற்போது அவுஸ்திரேலியப் பிரதிநிதி யாகப் பயணிக்கும் அவர், முஸ்லிம் சமூகத்தில் சீர்திருத்தக் கருத்துகளை விதைத்து, ஓர் அறிவுசார் சமூகத்தை உரு வாக்கத் தீவிரமாகப் பணியாற்றி வருகிறார்.

குடும்பப் பின்னணி:

பேராசிரியர் அமீர் அலியின் தந்தையார் வழி மரபினர் பாரம் பரிய மருத்துவக் (பரிகாரக்) குடும்பத்தைச் சேர்ந்தவர்க ளாவர். இவர், இலங்கைக்குப் புலம்பெயர்ந்து திருமணம் முடித்த காயல்பட்டினத்தைச் சேர்ந்த முராதொளி மரைக் காரின் 13-ஆம் தலைமுறைச் சந்ததியினராவார். இவரது பாட்டனாரான அ.ப. பரிகாரியார் காத்தான்குடியில் வாத நோய்க்கான கைதேர்ந்த பாரம்பரிய மருத்துவராக விளங்கி யவர். பாட்டனாரின் தந்தையான அ.ப. அலியார் லெப்பை சம்மாந்துறையில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தியி ருந்தார். அவர் வணிகம் செய்த அப்பகுதி இன்றும் 'அ.ப. சந்தி' என்றே அழைக்கப்படுகின்றது. இக்குடும்பப் பின்னணி யானது, அன்றுதொட்டு இன்றுவரை காத்தான்குடிக்கும் சம் மாந்துறைக்கும் இடையே நிலவிவரும் வரலாற்று ரீதியான நெருங்கிய தொடர்பை வெளிப்படுத்துகின்றது.

அமீர் அலியின் தந்தையாரான அப்துல் காதர் லெப்பை புகழ்பெற்றதொரு கவிஞராவார்; அவர் தனது தர்மபத்தி னியான பாத்திமாவை மையமிட்டு 'பாத்திமா சரிதை காவியம்' எனும் கவிதை நூலை வெளியிட்டுள்ளார். அமீர் அலியின் தாயாரான பாத்திமா, காத்தான்குடியின் பாரம்பரிய மிக்க 'சின்ன மரைக்கார்' (கா.ம.சி) குடும்பத்தைச் சேர்ந்தவ ராவார். பேராசிரியர் அமீர் அலியும் தனது தாயாரின் வழிவந்த அதே குடும்பத்தைச் சேர்ந்த, முதியார் சின்னலெப்பையின் பேத்தியான ஹபீபா என்பவரை 1965-ஆம் ஆண்டில் விவாகம் செய்துகொண்டார். இத்தம்பதியினருக்கு நவீட், நஸ்ருல் என இரு மகன்கள் உள்ளனர்.

பேராசிரியர் அமீர் அலி 1940-ஆம் ஆண்டு காத்தான்கு டியில் பிறந்தார். இவரது பெயரிடலுக்குப் பின்னால் ஒரு சுவாரசியமான வரலாற்றுப் பின்னணி உள்ளது. இவரது தாயார் கர்ப்பமாக இருந்தபோது, பாட்டனார் சின்ன மரைக் காருக்கு ஒரு நீதிமன்ற வழக்கு இருந்தது. அவ்வழக்கில் ஆஜரான சட்டத்தரணி, புகழ்பெற்ற சட்ட அறிஞர் செய்யத் அமீர் அலியின் சட்டப் புத்தகத்தில் (Syed Ameer Ali's Muhammadan Law) உள்ள ஒரு முக்கிய ஆதாரத்தைச் சுட்டிக் காட்டி வழக்கை வென்று தந்தார். இதனால் மகிழ்ந்த சின்ன மரைக்கார், தனக்கு விடிவு தந்த அந்தச் சட்டத்தரணியின் நினைவாகவும், தன் பேரன் பிற்காலத்தில் ஒரு சிறந்த சட்டத் தரணியாக (அப்புக்காத்து) வர வேண்டும் என்ற அவாவிலும், பிறக்கப்போகும் குழந்தைக்கு 'அமீர் அலி' எனப் பெயரிடப் போவதாக அன்றே மகிழ்வுடன் அறிவித்தார்.

கல்விப் பின்புலம்:

பேராசிரியர் அமீர் அலி 1945-ஆம் ஆண்டு காத்தான்குடி - 05 அரசினர் பாடசாலையில் (தற்போதைய அல்-ஹிரா மகா வித்தியாலயம்) தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கி, ஐந்தாம் ஆண்டு வரை அங்கு பயின்றார். இக்காலகட்டத்தில் அவரது கல்வி வாழ்விற்கு அடித்தளமிட்டவர் ஆரையம்ப தியைச் சேர்ந்த சோமசுந்தரம் என்ற ஆசிரியராவார். அவர்

“ பேராசிரியர் அமீர் அலியின் கட்டுரைகள்
மனித மனங்களை நின்று நிதானித்து யோசிக்கக் கற்றுக்கொடுக்கின்றன.
அவரது கல்விப் பணிகளும் எழுத்துகளும் வெறும் அறிவுசார் சிந்தனைகளைத் தோற்றுவிப்பதோடு நின்றுவிடாமல், மனித வாழ்வியலையும் சீர்படுத்துகின்றன.
சமூக, அரசியல் நெருக்கடிகள் நிறைந்த காலகட்டங்களில், சாதாரண மக்களையும், குறிப்பாக இளந்தலைமுறையினரையும் நெறிபிறழ்வுகளிலிருந்து பாதுகாக்கும் அரணாக இவை விளங்குகின்றன. ”

கற்பித்த தமிழ் இலக்கணத்தின் ஆளுமை எத்தகைய தெனில், பிற்காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் 'நன்னூல்' கற்பித்த போதெல்லாம், தனக்கு ஆரம்பக் கல்வி புகட்டிய சோமசுந்தரம் ஆசிரியரின் நினைவுகளே தன் நெஞ்சில் நிழலாடியதாக அமீர் அலி குறிப்பிடுகின்றார். தமக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதப்படும் இந்த ஆசிரியருடன், ஐந்தாம் ஆண்டுக்குப் பின்னரும் அவர் மரணமடையும் வரை அமீர் அலி நெருங்கிய தொடர்பைப் பேணினார். பிற்காலத்தில் அவர் புருணைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய காலத்திலும் இவர்களுக்கிடையிலான கடிதத் தொடர்பு நீடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காத்தான்குடி மத்திய கல்லூரியில் 6, 7-ஆம் வகுப்புகளில் கல்வி கற்ற அமீர் அலி, பின்னர், வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் விடுதியில் தங்கித் தனது எச்.எஸ்.சி (S.S.C) வரையான கல்வியைத் தொடர்ந்தார். அன்றைய காத்தான்குடி சமூகம் வர்த்தகப் பின்னணியைக் கொண்டதாக இருந்ததால், கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த அவரது தந்தையார் இம்மாற்றத்தை ஏற்படுத்தினார். வந்தாறுமூலை மத்திய கல்லூரியின் அதிபராக விளங்கிய கல்லாற்றைச் சேர்ந்த சோமசுந்தரம், அமீர் அலியின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த கண்காணிப்புடன்கூடிய வழிகாட்டியாகத் திகழ்ந்தார். ஆங்கில மொழியறிவை வளர்த்துக் கொள்வதற்காகத் தனது தந்தைக்கு அமீர் அலி ஆங்கிலத்தில் எழுதும் கடிதங்களை, அவரது தந்தை பிழைகளைத் திருத்தித் திரும்ப அனுப்புவதும், அதனை அதிபர் சோமசுந்தரம் கண்காணித்து ஆற்றுப்படுத்துவதுமாக இவர்களது கல்விமுறை அமைந்திருந்தது. அமீர் அலியை ஒரு மருத்துவராக்க வேண்டும் என்ற அதிபரின் விருப்பத்திற்கு, 'தன் மகன் நோயாளிகளுடன் முடங்கிவிடாமல், சமூகத்தோடு உறவாடி வாழ வேண்டும்; அவனைச் சமூகத்திற்காகவும் இறைவனுக்காகவும் அர்ப்பணித்துவிட்டேன்' என்று தந்தை அப்துல் காதர் லெப்பை மறுத்துரைத்தார். இத்தகைய வழிகாட்டலுக்கு மத்தியில் வந்தாறுமூலையில் அமீர் அலி கல்வி கற்றுக்கொண்டிருந்த வேளையில்தான், அவரது வாழ்வில் திருப்புமுனையாக அமைந்த அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நட்பு அவரது உயர் கல்விக்கான பாதையைத் திறந்துவிட்டது. கொழும்பு சாஹிறாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸுக்கும், கவிஞரும் பதுளை மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபருமான அப்துல் காதர் லெப்பைக்கும் இடையே வாழ்நாள் வரை நீடித்த ஓர் ஆழமான நட்பிருந்தது. இந்தியாவில் இருந்து வெளிவந்த 'தாருல் இஸ்லாம்' இதழில், 'அதான்' என்ற புனைபெயரில் அப்துல் காதர் லெப்பை எழுதிய கவிதைகள் வழியாகவே இவர்களது நட்பு மலர்ந்திருந்தது.

ஒருமுறை பதுளைக்கு வருகை தந்த கலாநிதி அஸீஸ், தன் நண்பரின் மகனான அமீர் அலி வந்தாறுமூலையில் எஸ்.எஸ்.சி பயில்வதை அறிந்தார். அப்பரீட்சை முடிந்ததும் அவரது உயர் கல்விப் பொறுப்பைத் தான் ஏற்பதாக கலாநிதி அஸீஸ் உறுதியளித்தார். இத்தீர்மானமே, வந்தாறுமூலையில் கல்வியை முடித்த அமீர் அலி உயர் கல்வியைத் (H.S.C) தொடர்வதற்காகக் கொழும்பு சாஹிறாக் கல்லூரியில் நுழைவதற்கும், அவரது பிற்கால சர்வதேச அறிவுசார் ஆளுமை வளர்ச்சிக்கும் முதன்மை அடித்தளமாக அமைந்தது.

உயர் கல்வி வாழ்க்கை முறை:

1956-ஆம் ஆண்டு கொழும்பு சாஹிறாக் கல்லூரியில் எச்.எஸ்.சி (H.S.C) வகுப்பில் இணைந்த அமீர் அலி, அங்கு கா. சிவத்தம்பி, ஏ.எம். சமீம், எம்.எம்.எம். மஹ்ரூப் போன்ற சிறந்த ஆய்வறிஞர்களின் வழிகாட்டலில் கல்வி கற்றார். பின்னர், 1959-இல் இலங்கைப் பல்கலைக்கழகத்திற்குத் (பேராதனை) தெரிவானார். சாஹிறாவின் கலைப்பிரிவிலிருந்து அவருடன் எஸ்.எச்.எம். ஜெமீல், மூதூர் கே.எம்.எச். அக்பர், என்.டி. எதிரிசிங்க, ஏ.ஏ. ஜயசிங்க, ஏ.ஆர்.எம்.எச். சுஹைர் ஆகிய ஆறு பேர் பல்கலைக்கழகத்திற்குத் தகுதி பெற்றனர்.

அங்கு எச்.டி. சுமனசேகர, ஐ.டி.எஸ். வீரவர்தன, ஏ.ஜே. வில்சன், ஆனந்த மீகம, சு. வித்தியானந்தன், வி. செல்வநாயகம், க. கணபதிப்பிள்ளை போன்ற பேராசிரியப் பெருந்தகைகளிடம் கல்வி பயிலும் பேறு இவருக்குக் கிடைத்தது. பல்கலைக்கழக முதலாம் ஆண்டில் தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கற்ற சுமார் 75 மாணவர்களில் எச்.எம். ஜெமீல், அமீர் அலி, மக்பூல் ஆகிய மூன்று முஸ்லிம் மாணவர்களே 'ஏ' (A) சித்தியைப் பெற்றனர். எனினும், ஜெமீலும் அமீர் அலியும் பொருளியல் துறையைச் சிறப்புப் பாடமாகத் (Special Degree) தெரிவு செய்து பயின்றனர். பல்கலைக்கழகக் காலத்தில் 'முஸ்லிம் மஜ்லிஸ்' அமைப்பின் செயலாளராகவும் அமீர் அலி பணியாற்றினார். காத்தான்குடியிலிருந்து பல்கலைக்கழகம் புகுந்த முதல் பட்டதாரியான இவர், படிப்பை நிறைவு செய்து இறுதிப் பெறுபேறுகள் வெளியாகும் வரை கல்முனை சாஹிறாக் கல்லூரியில் அதிபர் அபூபக்கரின் கீழ் சில மாதங்கள் ஆசிரியராகப் பணியாற்றினார்.

கல்வி அதிகாரி கபூரின் ஆலோசனையின் பேரில் இப் பணியை ஏற்றிருந்தார். பொருளியல் துறையில் இரண்டாம் வகுப்பு உயர் பிரிவில் (Second Class Upper) தேர்ச்சி பெற்றதைத் தொடர்ந்து, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறைக்கான முதலாவது முஸ்லிம் விரிவுரையாளராக அமீர் அலி நியமிக்கப்பட்டார். பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி மூலம் பொருளியல் கற்பித்தலை ஆரம்பித்த முன்னோடி விரிவுரையாளர்களான அமீர் அலி, பாலகிருஷ்ணன் ஆகிய இருவரிலும் பேராசிரியரின் கற்பித்தல் முறையும் தமிழ் நடையும் பெரிதும் சிலாகிக்கப்பட்டன. பொருளியல் சாராத பிற மாணவர்கள்கூட இவரது விரிவுரைகளைக் கேட்க ஆர்வமுடன் வருகை தந்தனர்.

1964-ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அமீர் அலி மீது பேராசிரியர் சு. வித்தியானந்தன் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில், அமீர் அலியின் தமிழ் ஆளுமையால் கவரப்பட்ட பேராசிரியர் வித்தியானந்தன், அவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தம்மோடு அழைத்துச் செல்ல விரும்பினார். அமீர் அலிக்கும் அங்கு செல்ல விருப்பமிருந்த போதிலும், மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மாணவர்கள் அவரை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுமாறு விடுத்த வேண்டுகோள் மற்றும் சமகால அரசியல் குழப் பங்கள் காரணமாக அத்திட்டம் சாத்தியமற்றுப் போனது.

லண்டன் உயர் கல்வியை நிறைவு செய்து மீண்டும் வந்து ஏழு ஆண்டுகள் பேராதனையில் கற்பித்த நிலையில், 1977-ஆம் ஆண்டு மட்டக்களப்புத் தேர்தல் தொகுதியில் அவரை வேட்பாளராக நிறுத்தப் பலத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்ட பின்னணியிலேயே இச்சூழ்நிலை உருவானது. இத்தருணத்தில், கல்வி அமைச்சின் செயலாளர் பாரூக்கின் அழைப்பின் பேரில், அப்போதைய கல்வி அமைச்சர் கலாநிதி பதியுதீன் மஹ்மூத்தைச் சந்திப்பதற்காக அமீர் அலி கொழும்பு சென்றார். தினகரன் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பு அல்லது கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கான இடமாற்றம் ஆகிய இரு காரணங்களுக்காகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கலாம் என்ற எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில், அமைச்சர் பதியுதீன் மஹ்மூத் அவரை மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

அமைச்சர் கலாநிதி பதியுதீன் மஹ்மூத்துடனான சந்திப்பின் போது, அமீர் அலி ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மட்டக்களப்புத் தொகுதியில் போட்டியிடவுள்ளதாகக் கசிந்த தகவல்கள் குறித்து அமைச்சர் வினவினார். அதற்கு, சமூகப் பணியாற்றும் நோக்கில் ஊர்மக்களின் வற்புறுத்தலினாலேயே தான் இம்முடிவை எடுத்ததாகவும் அதனை பரிசீலித்துக் கொண்டு இருப்பதாகவும் அமீர் அலி குறிப்பிட்டார். இச்சந்திப்பின் போது, மட்டக்களப்புத் தொகுதியில் போட்டியிடும் தனது விருப்பத்தை அமைச்சர் வெளிப்படுத்திய போது, அமீர் அலி அதற்குத் தனது இணக்கத்தைத் தெரிவித்தார். எனினும், பதியுதீன் மஹ்மூத் மட்டக்களப்பில் போட்டியிடவுள்ள செய்தி காத்தான்குடி மக்கள் மத்தியில் பலத்த அரசியல் கிளர்ச்சியையும் எதிர்ப்பையும் தோற்றுவித்தது. இச்சூழ்நிலையில், அமீர் அலியின் தேர்தல் செலவுகள் முழுவதையும் ஏற்பதாகக் கூறி சில உள்ளூர் வர்த்தகர்கள் அவரை அணுகினர். இவ்விடயத்தை அவதானித்த அவரது தந்தையார் அப்துல் காதர் லெப்பை, மகனின் அரசியல் பிரவேசத்தைக் கடுமையாக எதிர்த்தார். தேர்தல் கால முதலீடுகள் பிற்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பயன்படுத்தி ஊழல் புரிவதற்கும், அதன் மூலம் குடும்பத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுவதற்கும் வழிவகுக்கும் என்று அவர் எச்சரித்தார். தந்தையின் இந்தத் தீர்க்கதரிசனமான அறிவுரையினாலும், தன்னை நம்பியிருந்த மாணவர்களின் எதிர்பார்ப்பினாலும் பேராசிரியர் அமீர் அலி இருதலைக்கொள்ளி எறும்பாகத் தத்தளிக்கும் ஒரு இக்கட்டான நிலையை எதிர்கொண்டார்.

அரசியல் மற்றும் மனப்போராட்டங்களுக்கு மத்தியில், 1977-ஆம் ஆண்டு பேராசிரியர் அமீர் அலிக்குப் பல்கலைக்கழக செபடிக்கல் (Sabbatical) விடுமுறை கிடைத்தது. இத்தருணத்தைப் பயன்படுத்தி, அவுஸ்திரேலியாவில் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த தனது முன்னாள் விரிவுரையாளர் வென்டன் ரீஜனுக்கு தற்காலிகப் பணிக்கான வாய்ப்புகள் குறித்து அவர் கடிதம் எழுதினார். அதற்குப் பதிலளித்த ரீஜன், ஓர் ஆய்வுத் திட்டவரைவை (Research Proposal) சமர்ப்பிக்குமாறு கோரினார். அக்காலகட்டத்தில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டிருந்த ஒபெக் (OPEC) நாடுகளின் எரிபொருள் நெருக்கடியை மையமாகக் கொண்டு அமீர் அலி அனுப்பிய ஆய்வுத் தலைப்பு உடனடியாகப் பேராசிரியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, எதிர்பாராத விதமாக அவருக்கு மூன்று ஆண்டுகளுக்கான முழுமையான ஆய்வுப் புலமைப்பரிசில் (Research Scholarship) வழங்கப்பட்டது. தந்தை விடுத்த எச்சரிக்கைக்குப் பொருத்தமாக, பேராசிரியரின் கல்விசார் உலகளாவிய பயணத்திற்கு இந்த நற்செய்தி மிக முக்கியத் திருப்புமுனையாக அமைந்ததுடன், இதனைக் கேட்ட அவரது தந்தையாரும் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்.

1977-ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா சென்ற பேராசிரியர் அமீர் அலி, 1979-ஆம் ஆண்டின் இறுதியில் தனது கலாநிதிப் (Ph.D.) பட்டப்படிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்தார். இரண்டு வருடங்களுக்குள் பொருளியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற முதலாவது ஆய்வாளர் அமீர் அலிதான் என அவரது துறைத்தலைவரே சான்று பகர்ந்தமை அவரது ஆளுமைக்குச் சான்றாகும். பட்டப்படிப்பின் இறுதியில் அவரது விசாகாலம் முடிவடைவதற்கு முப்பது நாட்களே இருந்த தருணத்தில், அவுஸ்திரேலியாவின் மெர்டொக் பல்கலைக்கழகத்தில் (Murdoch University) விரிவுரையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இவ்விடயத்தைத் தனது நெறியாளரான வென்டன் ரீஜனிடம் அமீர் அலி கலந்தாலோசித்த போது, அப்பல்கலைக்கழகத்தின் பிரதித் துணைவேந்தரான பேராசிரியர் அலஸ்க என்பவரைச் சென்று சந்திக்குமாறு அவர் வழிகாட்டினார்.

பிரதித் துணைவேந்தர் பேராசிரியர் அலஸ்கவை திங்கட்கிழமை சந்தித்த போது, மறுநாளே 'பொருளியல் அபிவிருத்தி' (Economic Development) சார்ந்த விரிவுரையொன்றை நடத்துமாறு அவர் அமீர் அலியிடம் கேட்டுக் கொண்டார். உடனடிச் சவாலாக அமைந்த இவ்வாய்ப்பை ஏற்றுக்கொண்ட அமீர் அலி, இரவு முழுவதுமாகத் தன்னைத் தயார்படுத்தி, மறுநாள் காலை அவ்விரிவுரையைத் திறம்பட நடத்தினார். அவரது கற்பித்தல் ஆளுமையைப் பின்வரிசையிலிருந்து நேரடியாகக் கண்காணித்து மதிப்பிட்ட பேராசி

ரியர் அலஸ்க, விசா காலம் முடிவடைய இருந்த அமீர் அலியின் குடியுரிமைப் சிக்கலைத் தங்களின் பொறுப்பாக ஏற்றுக்கொள்வதாக உறுதியளித்தார். இத்திறமைக்கான உடனடி அங்கீகாரமே அவரை அவுஸ்திரேலியாவில் நிரந்தரக் குடியுரிமையாளராக மாற்றியதுடன், 1980 முதல் 1986-ஆம் ஆண்டு வரை மெர்டொக் பல்கலைக்கழகத்தில் வெற்றிகரமான விரிவுரையாளராகப் பணியாற்றுவதற்கும் வழிவகுத்தது.

பேராசிரியர் அமீர் அலி, 1986 முதல் 1994-ஆம் ஆண்டு வரை புருணை பல்கலைக்கழகத்தில் (Universiti Brunei Darussalam) சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றினார். இக்காலகட்டத்தில் அந்நாட்டு மன்னரின் மகள்களான இளவரசி மஸ்னா, இளவரசி ரஷீதா ஆகியோர் இவரிடம் பொருளியல் பயின்றமை குறிப்பிடத்தக்கது. புருணையின் பொருளாதார வளர்ச்சி குறித்து அவர் எழுதிய 'Economic Development of Brunei Darussalam' என்ற நூலின் கையெழுத்துப் பிரதியை அந்நாட்டுக் கல்வி அமைச்சு பரிசீலித்தது. எனினும், நாட்டின் ஆரம்பகால வறுமை நிலையை நூல் சுட்டிக்காட்டியதாகக் கூறி, அதன் தலைப்பையும் உள்ளடக்கத்தையும் மாற்றுமாறு அமைச்சு அழுத்தம் கொடுத்தது. கல்விசார் உண்மைகளுக்கும் தனது ஆய்வு நேர்மைக்கும் துரோகம் இழைக்க விரும்பாத பேராசிரியர் அமீர் அலி, அக்கோரிக்கையைத் தீர்க்கமாக மறுத்தார்.இதன் விளைவாகப் பல்கலைக்கழகத்துடனான அவரது பணி ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அவர் மீண்டும் அவுஸ்திரேலியா சென்று அந்நூலை அங்கு வெளியிட்டார். அதன் பின்னர், மேற்கு அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகத்தில் (University of Western Australia) தனது கல்விப் பணியைத் தொடர்ந்த அவர், 2021-ஆம் ஆண்டு அப்பணியில் இருந்து ஓய்வு பெற்றார். தற்பொழுது அவர் அவுஸ்திரேலியாவில் தனது இல்லத்தில் ஓய்வு வாழ்வைக் கழித்து வருகின்றார்.

பேராசிரியர் அமீர் அலி கல்வி, பொருளாதாரம் மற்றும் முஸ்லிம் சமூக அரசியல் சார்ந்த 400-இற்கும் மேற்பட்ட பொதுக் கட்டுரைகளையும், சர்வதேச ஆய்வேடுகளில் (Journals) 25-இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். குறிப்பாக, லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரான கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வாவின் அரசியல் கருத்துகளுக்கு எதிராக அவர் எழுதிய கட்டுரை இலங்கையின் அரசியல் தளத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவரது தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு 'சிந்தனைச் சுவடுகள்' என்ற நூலாக வெளிவந்துள்ளது.

கல்விப் புலத்திற்கு அப்பால், அவுஸ்திரேலிய இஸ்லாமிய சபைகளின் கூட்டமைப்பில் (Australian Federation of Islamic Councils - AFIC) நான்கு ஆண்டுகள் தலைவராகவும், இரண்டு ஆண்டுகள் உபதலைவராகவும் அவர் பணியாற்றினார். அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹோவார்டின் (John Howard) ஆட்சிக்காலத்தில், அந்நாட்டு அரசின் 'முஸ்லிம் ஆலோசனைக் குழுவின்' (Muslim Advisory Board) தலைவராகவும் கடமையாற்றினார். இப்பதவியின் வழியே, அவுஸ்திரேலிய முஸ்லிம்களின் நலன்கள் குறித்துப் பேசுவதற்காக இந்தோனேசியா, தென்கொரியா, பிரித்தானியா, அமெரிக்கா, சவூதி அரேபியா, நியூசிலாந்து, பிஜி, தாய்லாந்து, கம்போடியா மற்றும் இந்தியாவின் கேரளா, பெங்களூர் போன்ற பல நாடுகளுக்கு அரச தூதுவராகச் சென்று சர்வதேச மாநாடுகளில் உரையாற்றியுள்ளார். இந்தோனேசியாவில் வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையைத் தொடர்ந்து அவர் ஆற்றிய உரை அவரது வாழ்வின் முக்கிய நிகழ்வாகும்.

பேராசிரியரின் இத்தகைய பன்முக ஆளுமையையும், அவரது அடுக்குமொழித் பேச்சாற்றலையும் சம்மாந்துறையின் புகழ் பெற்ற பேச்சாளரான 'ஈழமேகம்' பக்கீர்தம்பி அவர்கள் அவருக்கு எழுதிய கடிதமொன்றில் பாராட்டிச் சிலாகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பக்கீர்தம்பி அவர்கள் பேராசிரியரின் பன்முகத் திறமைகளைப் பாராட்டித் தன் கடிதத்தில் பின்வருமாறு கவிதை வடிவில் வாழ்த்துப் பூமாலை சூடியுள்ளார்.

'தாயில்லாத் தனயனாய்,
தமிழ்க்கலை ஆர்வம் பெற்றீர்,
நீதமாய்த் தமிழ்த்தாய் உன்னை
நிறைமகனாகக் கொண்டாள்!
எச்.எஸ்.சி ஆங்கிலத்தில்
அரிவரிப் பட்டம் வாங்கி,
காயல் மாநகரை ஒத்த
காத்தான்குடி காக்க வாரீர்!'

இத்தகைய உயரிய இலக்கியப் பாராட்டுகளும் சர்வதேச அங்கீகாரங்களும் இவரைத் தேடி வந்தபோதிலும், பேராசிரியர் அமீர் அலி அவர்கள் எவ்விதப் புகழுரைகளுக்கோ, பாராட்டுகளுக்கோ அல்லது விருதுகளுக்கோ ஆட்படாமல், விளம்பரமின்றி அவுஸ்ரேலியாவில் எளிமையாக வாழ்ந்து வருகின்றார் என்பது அவரது மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

மனிதகுலத்தின் அறிவு வளர்ச்சிக்கும், ஆழமான சிந்தனைக்கும், மன அமைதிக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக மனிதநேயத்தை வளர்ப்பதற்கும் எழுத்துகளும் கட்டுரைகளும் மிக முக்கியக் கருவிகளாகும். அவை புதிய தலைமுறையினரை நல்வழிப்படுத்தும் உன்னதமானதொரு கல்விக்கூடமாகத் திகழ்கின்றன. அந்த வகையில், பேராசிரியர் அமீர் அலியின் கட்டுரைகள் மனித மனங்களை நின்று நிதானித்து யோசிக்கக் கற்றுக் கொடுக்கின்றன. அவரது கல்விப் பணிகளும் எழுத்துகளும் வெறும் அறிவுசார் சிந்தனைகளைத் தோற்றுவிப்பதோடு நின்று விடாமல், மனித வாழ்வியலையும் சீர்படுத்துகின்றன. சமூக, அரசியல் நெருக்கடிகள் நிறைந்த காலகட்டங்களில், சாதாரண மக்களையும், குறிப்பாக இளந்தலைமுறையினரையும் நெறிபிறழ்வுகளிலிருந்து பாதுகாக்கும் அரணாக இவை விளங்குகின்றன. மேலும், இளம் பல்கலைக்கழக மாணவச் சமூகத்தை எழுதவும், ஆக்கபூர்வமாகச் சிந்திக்கவும் தூண்டும் உந்துசக்தியாக அவரது படைப்புகள் அமைந்துள்ளன. உலக நாடுகள் அமைதியின்றித் தவிக்கும் தற்காலச் சூழலில், மனிதநேயத்தைக் கட்டியெழுப்புவதற்கும், எதிர்கால அறிவார்ந்த உலக வாழ்வைச் சாத்தியமாக்குவதற்கும் உன்னதமான, ஆழமான, இலக்கிய நயம்மிக்கதொரு வாழ்க்கை முறையையும் சிந்தனை உரையாடலையும் அவர் நம் கண்முன்னே நிறுத்தியுள்ளார். சுருங்கக்கூறின், இந்த அறிவுசார் சமூகப் பணியே அவரது வாழ்வின் இறுதி மூச்சாகும்.

Iqbal.ali@thaiveedu.com

சந்திரெகளரி சிவபாலன்

வைத்திய கலாநிதி தி. ஞானசேகரன்: வாழ்க்கையும் ஐரோப்பியப் பயண அனுபவங்களும்

tg.theeban@gmail.com

மனித வாழ்வு என்பது ஒரு நெடிய பயணம். அப் பயணத்தில் சிலர் சாதாரணமாய் வாழ்ந்து மறைந்து விடுகிறார்கள். இன்னும் சிலரோ தங்களின் வாழ் நாளை முடித்த பின்னரும், மானுடச் சமூகத்தின் நீங்காத நினைவுகளாய் நிலைத்துவிடுகிறார்கள். தங்களின் வாழ்வையே சமூக நீதிக்கான, சமத்துவத் திற்கான, இலக்கியச் செழுமைக்கான ஒரு பெரும் செய்தியாக மாற்றிவிட்டுச் சென்ற அத்தகைய உன் னத நினைவாக நம்முள் என்றும் வாழ்பவர்தான் 'சாகித்யரத்னா' வைத்தியக் கலாநிதி அமரர் தி. ஞான சேகரன் அவர்கள்.

ஈழத்து இலக்கியப் பெருவெளியில் அறுபது ஆண்டு களுக்கும் மேலாகத் தடம் பதித்த காத்திரமான ஆளுமை அமரர் தி. ஞானசேகரன் ஆவார். நாவல், சிறுகதை, பயணக்கட்டுரை, விமர்சனம் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் எனப் பன்முகத் தளங்களில் மாண்புடைய தன் ஆக்கங்களைப் படைத்தவர். வெறும் படைப்பாளி என்ற எல்லைக்குள் சுருங்கி விடாமல், ஒரு சிறந்த தொகுப்பாசிரியராகவும், வெளியீட்டாளராகவும், கால் நூற்றாண்டு காலம் 'ஞானம்' மாத இதழின் ஆசிரியராகவும் இருந்து தமிழ் இலக்கிய உலகிற்கு அவர் ஆற்றிய பணிகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. சமூக நீதி யையும் மனிதக் கௌரவத்தையும் தன் எழுத்து களின் அடிநாதமாகக் கொண்டு இயங்கிய அவர், ஈழத்து நவீன இலக்கியப் பரப்பில் ஒரு புதிய உள் ளடக்கப் பாய்ச்சலை நிகழ்த்திக் காட்டியவர்.

தி. ஞானசேகரன் 1941-ஆம் ஆண்டு ஏப்பிரல் 15 அன்று யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவனில் தியாக ராஜா ஐயர் - பாலாம்பிகை தம்பதியரின் மூத்த மகனாகப் பிறந்தார். கெங்காதரக் குருக்கள், சாமி நாத சர்மா, லலிதாம்பாள் ஆகியோர் இவருடைய உடன்பிறந்தவர்கள் ஆவர். புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்ப் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய அவர், புன்னாலைக்கட்டு வன் மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலை மற்றும் உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் உயர் கல்வியைத் தொடர்ந்தார். பின்னர், கொழும்பு மருத் துவப் பீடத்தில் மருத்துவம் பயின்று, மருத்துவப் பட்டம் (MBBS) பெற்று வைத்தியக் கலாநிதியானார்.

மருத்துவத் துறையில் பணியாற்றியபடியே, பேராதனைப் பல் கலைக்கழகத்தின் வெளிவாரிப் பாடநெறி மூலம் கலைமாணிப் (BA) பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

கீரிமலை சமஸ்கிருத அறிஞர்களில் ஒருவராகத் திகழ்ந்த பேராசான் மகாமகோபாத்தியாயர் ப. ராமையார் அவர்களின் புதல்வியாகிய ஞானலட்சுமி அவர்களை 1972-ஆம் ஆண்டு திருமணம் செய்தார். இவர்களுக்கு இராஜேஸ்வரன், வசுந்தரா, பாலச்சந்திரன் ஆகிய மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள்.

1964-ஆம் ஆண்டு தன்னுடைய 23 வயதில் கலைச்செல்வி என்ற சஞ்சிகையில் வெளிவந்த 'பிழைப்பு' என்ற சிறுகதை யுடன் இலக்கிய உலகில் கால் எடுத்து வைத்தார். தொடர்ந்து பல சிறுகதைகளை இலங்கையில் வெளிவந்து கொண்டி ருந்த வாரப்பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதினார். இந்திய சஞ்சிகையான கலைமகளிலும் இவரின் சில கதைகள் பிரசுர மாகியுள்ளன. அன்றிலிருந்து வாழ்வியல், சமூகம், வரலாறு, அரசியல், பொருளாதாரம், இன முரண்பாடு மற்றும் சமூகப் போராட்டங்கள் எனப் பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட இவரது படைப்புகள், குறிப்பாக விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் சிக்கல்களைப் பிரதிபலிப்பனவாக அமைந்தன.

மலையக மண்ணில் ஒரு மருத்துவராகத் தனது வாழ்வைத் தொடங்கிய தி. ஞானசேகரன் அவர்களின் இலக்கியப் பயணம், 1973-ஆம் ஆண்டு பேராசிரியர் கைலாசபதி அவர்களின் முன்னுரையுடன் வெளிவந்த 'காலதரிசனம்' சிறுகதைத் தொகுப் பின் மூலம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தது. 12 சிறுகதை களை உள்ளடக்கிய அந்த முதல் தொகுதியில் தொடங்கி, அரை நூற்றாண்டிற்கும் மேலாகச் சிறுகதை, நாவல், பயண இலக்கியம், நேர்காணல், கட்டுரை எனப் பல்துறைகளிலும் அவர் ஆழமான தடம் பதித்துள்ளார். அவரது படைப்புலகில் 'புதிய சுவடுகள்', 'குருதிமலை', 'லயத்துச் சிறைகள்', 'கவ்வாத்து' மற்றும் 'எரிமலை' போன்ற நாவல்கள் சமூகப் பிரச்சினைகளை யும் வரலாற்றுப் பதிவுகளையும் காத்திரமாக முன்னெடுத்தன. குறிப்பாகப் பயண இலக்கியத் துறையில் அவுஸ்திரேலியா, வடஇந்தியா, இலண்டன், ஐரோப்பா மற்றும் கனடா ஆகிய நாடுகள் குறித்து அவர் எழுதிய பதிவுகள் நவீனத் தமிழ் இலக்கியத்தின் தனித்துவமான வரவுகளாகும். மேலும், தனது வாழ்க்கை வரலாற்றை 'எனது இலக்கியத் தடம்' நூலாகவும், 'ஞானம்' இதழின் ஆசிரியத் தலையங்கங்களைப் 'பகிர்தலும் புரிதலும்' தொகுப்பாகவும் அவர் ஆவணப்படுத்தியுள்ளார். ஈழத்து இலக்கிய முன்னோடிகள் மற்றும் தனது சொந்த ஊரான புன்னைநகர் குறித்த வரலாற்றுப் பதிவுகள் என இவரது இரு பத்தைந்திற்கும் மேற்பட்ட படைப்புகள் தமிழ்ச் சூழலுக்குக் கிடைத்த பெரும் அறிவுசார் சொத்துக்களாகும்.

தி. ஞானசேகரன் அவர்கள் ஓர் எழுத்தாளராகவும் ஆசிரியரா கவும் மட்டுமல்லாமல், பல்வேறு சமூக மற்றும் இலக்கிய அமைப்புகளில் தலைமைப் பொறுப்புகளை ஏற்றுத் திறம் படச் செயலாற்றிய ஓர் ஆளுமையாகவும் விளங்கியுள்ளார். ஞானம் இலக்கியப் பண்ணையின் அமைப்பாளராகப் பணி யாற்றிய அவர், புன்னைநகர் நலன்புரிச் சங்கத்தின் தலைவ ராகவும் (2009 - 2024) நீண்டகாலம் மக்கள் பணியாற்றியுள் ளார். சர்வதேச ரீதியில் சர்வதேச எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் இலங்கை இணைப்பாளராகவும் (2011) செய லாற்றியதோடு, இலங்கை எழுத்தாளர்களின் தேசிய அமைப் பின் உப செயலாளராகவும் (2011 - 2012) பங்களிப்பு செய் துள்ளார். குறிப்பாக, கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நூலகச் செயலாளர், இலக்கியச் செயலாளர், கவின் கலைக்குழுச் செயலாளர், பேரவை உறுப்பினர் மற்றும் துணைத்தலைவர் (2021 - 2023) எனப் பல்வேறு உயர் பொறுப்புகளைப் பல்வேறு காலகட்டங்களில் வகித்து, அச்சங்கத்தின் வளர்ச்சிக்குத் தூணாக நின்றுள்ளார். இத்தகைய விரிவான சமூக மற்றும் இலக்கியப் பணிகளுக்காக அவர் அகில இலங்கை சமாதான நீதவானாகக் கௌரவிக்கப்பட்டிருப்பது அவரது பொதுவாழ் வுப் பணிகளுக்குக் கிடைத்துள்ள மற்றுமொரு அங்கீகாரமாகும்.

தமிழ்ச் சிந்தனை வரலாற்றில் தனிப்பட்ட புகழுக்காக அன்றி, தான் வாழ்ந்த காலத்தில் ஒரு காத்திரமான அறிவுச் சூழலை உருவாக்கியதற்காகவே தி. ஞானசேகரன் காலத்தால் நினைவு கூரப்படுவார். அத்தகைய மகத்தான ஆளுமை, கடந்த 11.04.2026 அன்று தனது 84-ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது பிறப்பு முதல் மறைவு வரையிலான வாழ்க்கைச் சுவடுகளையும், அவர் இலக்கிய உலகிற்கு வழங்கிய 'ஐரோப்பிய பயண அனுபவங்கள்' போன்ற ஒப்பற்ற படைப்புகளையும் இந்த ஆய்வின் வழி மீட்டுப்பார்ப்பது அவ ருக்குச் செய்யும் மிகப்பொருத்தமான அஞ்சலியாகும்.

தி. ஞானசேகரனின் வாழ்க்கை வரலாறு என்பது வெறும் தனி நபர் சாதனைகளின் தொகுப்பல்ல; அது ஒரு தொடர்ச்சியான சிந்தனைப் பயணத்தின் சாட்சியம். தமிழ்ச் சமூகமும் அரசி யலும் தீவிர மாற்றங்களைச் சந்தித்த ஒரு காலகட்டத்தில் வளர்ந்தவர் அவர். அச்சூழலில் அவருக்கு ஏற்பட்ட வாசிப்புப் பழக்கமும், மொழி மீதான ஈடுபாடும், சமூக அக்கறையும் அவரை ஒரு சாதாரண இலக்கிய ஆர்வலரிலிருந்து 'அறிவுசார் செயற்பாட்டாளராக' உருமாற்றின. அதிகார மையங்களி லிருந்து விலகி நின்று, அடிப்படை மனித விழுமியங்கள், சமூக நீதி மற்றும் அறிவுசார் நேர்மை ஆகியவற்றை முன்னிறுத்தும் பண்பு அவரது வாழ்க்கைத் தேர்வுகளில் நிழலாடுகிறது. இத்தகைய ஆழ்ந்த வாசிப்பு அனுபவங்களும், சமரசமற்ற மனப்பாங்கும் அவரை ஒரு படைப்பாளியாக மட்டுமன்றி - சிந்தனையாளர், இதழாசிரியர், விமர்சகர் எனப் பன்முக அடை யாளங்களைக் கொண்ட ஒரு ஆளுமையாக வடிவமைத்தன.

தி. ஞானசேகரன் 1999-ஆம் ஆண்டு 'ஞானம்' கலை, இலக் கியச் சஞ்சிகையை ஆரம்பித்தார். தமிழ் அறிவுலகில் சஞ்சிகை கள் என்பன வெறும் படைப்புகளைத் தொகுக்கும் மேடைகள் மட்டுமல்ல; அவை ஒரு காலத்தின் சிந்தனைத் திசையை நிர்ணயிக்கும் சக்திகளாகவும் விளங்குபவை. அந்த வகை யில், 'ஞானம்' சமகாலத் தமிழ் இலக்கியம் மற்றும் அறிவுசார் விவாதங்களில் ஒரு தனித்துவமான அடையாளத்தைப் பெற்றுக் கொண்டது. அவரது வாழ்க்கைப் பயணம், படைப்புலகம் மற்றும் 'ஞானம்' சஞ்சிகையின் காத்திரமான பங்களிப்பு ஆகி யவை ஒருங்கிணைந்து ஈழத்து இலக்கியப் பரப்பில் ஒரு முக்கியமான வரலாற்று மரபை உருவாக்கியுள்ளன.

'ஞானம்' ஏற்படுத்திய தாக்கம் என்பது வெறும் வெளியீடு களின் எண்ணிக்கையால் மட்டும் அளவிடப்படக்கூடியதல்ல. அது வாசகர்களிடம் உருவாக்கிய தர்க்கரீதியான மனநிலை, சமரசமற்ற கேள்வி எழுப்பும் பண்பு மற்றும் மாற்றுச் சிந்தனை களை உள்வாங்கும் விஸ்தீரணம் ஆகியவையே அதன் உண் மையான வெற்றியாகும். பல இளம் எழுத்தாளர்கள், விமர்

சகர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் ஞானம் இதழ் மூலமே தங்களின் முதல் அடையாளத்தைப் பெற்றுள்ளனர். அந்த வகையில், ஒரு தலைமுறையின் அறிவுசார் பயிற்சிக் களமாக ஞானம் திகழ்ந்துள்ளது. புதுமையான படைப்புகள், மாற்றுச் சிந்தனைகள், காத்திரமான சமூக-அரசியல் விமர்சனங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து வாசகர்களிடம் கொண்டு சேர்த்தில் ஞானத்திற்குப் பெரும்பங்கு உண்டு. இதன் உள்ளடக்கத் தேர்வில் காணப்படும் தீவிரம், அறிவுசார் நேர்மை மற்றும் சுயாதீனத்தன்மை ஆகியவை அதன் ஆசிரியரின் ஆளுமைக்குச் சான்றாகும். இச்சஞ்சிகையின் காத்திரமான பங்களிப்பை உறுதிப்படுத்தும் வகையில், இலங்கையிலுள்ள பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த பல்கலைக் கழக மாணவர்கள் என இதுவரை பதினொருவர், ஞானம் சஞ்சிகையைத் தங்களின் ஆய்வுக் களமாகக் கொண்டு பட்டப்படிப்புகளை நிறைவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

ஐரோப்பிய பயண அனுபவங்கள் நூல்:



1999 அவுஸ்திரேலியப் பயணம், 2013-இல் வட இந்தியப் பயணம், 2015-இல் இலண்டன் பயணம், ஆகியன இவருடைய பயண இலக்கியங்களாக வெளிவந்தன. அதன்பின் இவருடைய 'ஐரோப்பிய பயண அனுபவங்கள்' என்னும் பயண இலக்கியம் ஞானம் பதிப்பக வெளியீடாக 2016-இல் வெளிவந்தது. இந்நூல் ஒரு சாதாரண சுற்றுலா குறிப்பேடு அல்ல. இது ஒரு இலக்கிய மனப்பாங்குடன் எழுதப்பட்ட பயண அனுபவக் கதை. ஐரோப்பிய நாடுகளுக்கான ஆசிரியரின் பயணம், இடங்களைப் பார்ப்பதோடு மட்டும் முடிவடையாமல், மனிதர்கள், மொழி, பண்பாடு, குடியேற்ற வாழ்க்கை, அந்நாடுகளின் வரலாற்று உண்மைகள், தமிழ் அடையாளம் போன்ற ஆழமான கூறுகளையும் இணைத்துக் கொண்டு விரிகிறது.

சாதாரணமாக தன்னுடைய அனுபவத்தை மாத்திரமே ஆசிரியர் பகிர்ந்துள்ளார் என்று நினைத்தே இந்த நூலுக்குள் நுழைந்தேன். அவர் பயணம் செய்த நாடுகளுக்கு நான் சென்று வந்த உணர்வை இந்நூல் கொடுத்தது. அபூர்வமான தகவல் களஞ்சியமாக இந்நூல் விளங்கியது. ஒரு வரியைக்கூட விடாமல் படிக்க வேண்டும் என்னும் உணர்வைத் தந்தது. ஞானசேகரன் அவர்கள் இந்த உலகத்துக்கு தன்னை அறியாமலே தன்னுடைய படைப்புக்கள் மூலம் பாரிய சேவையை ஆற்றியிருக்கின்றார்.

பயண இலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பற்றிய புவியியல் சார்ந்த தரவுகளையோ அல்லது வரலாற்றுத் தகவல்களையோ மட்டும் தொகுத்து வழங்கும் ஆவணமல்ல. நவீன இலக்கியக் கோட்பாடுகள் பயண இலக்கியத்தைத் தன்னிலை மற்றும் பிறநிலை ஆகியவற்றை ஒப்பீடு செய்யும் ஒரு கருவியாகவும், பண்பாட்டுச் சந்திப்புகள் மற்றும் அடையாள மறுவடிவமைப்பு நிகழும் களமாகவும் வரையறுக்கின்றன. இக்கோட்பாட்டு அடிப்படையில் அணுகும்போது, தி. ஞானசேகரனின் 'ஐரோப்பிய பயண அனுபவங்கள்' நூல் ஒரு முதிர்ச்சியான பயண இலக்கிய வடிவத்திற்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. பயணம் என்பது வெறும் ஒரு வெளிப்புற நகர்வு மட்டுமல்ல; அது ஒரு உள்ளார்ந்த தேடல் என்பதை இந்நூல் உணர்த்தி நிற்கிறது. ஆசிரியர் டென்மார்க், சுவீடன் (ஹெல்சிங்கோர் நகரம்), ஜேர்மனி, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளுக்குப் பயணம் செய்துள்ளார். எனினும், அவரது எழுத்துக்கள் அந்த நகரங்களையும் அங்கிருக்கும் கட்டடங்களையும் விவரிப்பதோடு நின்றுவிடவில்லை. மாறாக அங்கு வாழும் மக்களின் மனப் போக்குகள், புலம்பெயர்ந்த தமிழர்களின் வாழ்வியல் சவால்கள், மொழி மற்றும் அடையாளச் சிக்கல்கள், தனிமை மற்றும் பண்பாட்டு ஒப்பீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கி, அந்தப் பயணத்தை ஒரு செழுமையான அனுபவச் சிந்தனையாக மாற்றியுள்ளார். இத்தகைய ஆழமான பார்வைகளே இந் நூலைச் சாதாரணப் பயணக் குறிப்புகளிலிருந்து வேறுபடுத்தி, ஒரு காத்திரமான இலக்கியப் படைப்பாக உயர்த்துகின்றன.

புலம்பெயர் தமிழர் வாழ்க்கையின் பதிவுகள்:

இந்த நூலின் முக்கியமான பலம், ஐரோப்பாவில் வாழும் தமிழர்களின் வாழ்வியலை உள்ளிருந்து தரிசிப்பதாகும். அவர்கள் எதிர்கொள்ளும் அடையாளச் சிக்கல்கள், மொழி இழப்பு, பண்பாட்டு மோதல்கள் மற்றும் புதிய சமூகத்தில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள அவர்கள் நடத்தும் போராட்டம் ஆகியவற்றை ஆசிரியரின் நேரடிச் சந்திப்புகள் மற்றும் உரையாடல்கள் மூலம் இந்நூல் இயல்பாக வெளிப்படுத்துகிறது. இதனால், இது ஒரு சாதாரணச் சுற்றுலா நூலாக அமையாமல், சமூக, பண்பாட்டு மற்றும் வரலாற்றுத் தரவுகளை உள்ளடக்கிய ஒரு காத்திரமான சமூக ஆவணமாகத் திகழ்கிறது. விமானப் பயண நடைமுறைகள் தொடங்கி, ஐரோப்பிய நகர வாழ்க்கை, மக்களின் பழக்கவழக்கங்கள், போக்குவரத்து முறைகள் (குறிப்பாக நெதர்லாந்தின் சைக்கிள் பண்பாடு) மற்றும் இலக்கியச் சந்திப்புகள் எனப் பயணத்தின் ஒவ்வொரு தருணத்தையும் ஒரு தொடர்ச்சியான வாழ்வியல் கதையாகவும் அனுபவச் சிந்தனையாகவும் ஆசிரியர் இதில் பதிவு செய்துள்ளார்.

இந்த நூலின் முக்கிய சிறப்பு, உண்மை அனுபவங்களை நேர்மையாகவும் சுவையாகவும் வெளிப்படுத்தியிருப்பதாகும். விமான நிலையத்தில் தன்னுடைய கைப்பை தொலைந்த நிகழ்வு, பாதுகாப்பு சோதனைகள், மொழி பிரச்சினைகள், அந்நிய நாட்டில் ஏற்படும் மனஅழுத்தம் போன்றவை வாசகர்களுக்கு நேரடியாக அந்த அனுபவத்தை உணர்த்துகின்றன. ஆசிரியர் தனது பயணத்தை ஒரு சாதாரண சுற்றுலா பயணமாக மாற்றாமல், வாழ்க்கை அனுபவமாக மாற்றியுள்ளார்.

சமூக மற்றும் பண்பாட்டுப் பார்வை:

இந்நூல் ஐரோப்பியச் சமூக வாழ்வியலின் நுட்பங்களை மிகக் கூர்மையாகப் பதிவு செய்கிறது. குறிப்பாக, ஐரோப்பியர்களின் சைக்கிள் கலாசாரம், துல்லியமான நேர மேலாண்மை, சுற்றுச்சூழல் மீதான விழிப்புணர்வு, சமூக ஒழுக்கம் மற்றும்

பொது இடங்களிலான நாகரிகமான நடத்தை ஆகியவற்றை ஆசிரியர் வியப்புடனும் பாராட்டுடனும் எடுத்துரைக்கிறார். அதேவேளையில், அங்கே வாழும் தமிழர்களின் வாழ்வியல் போராட்டங்கள் மற்றும் சாதனைகளை ஆவணப்படுத்துவதன் மூலம், இந்நூல் புலம்பெயர் இலக்கியத்திற்குரிய ஆழமான தன்மையைப் பெறுகிறது. தான் பார்வையிட்ட இடங்களைத் தனது பார்வையின் வழியாகவும், ஒளிப்படக் கருவியின் வழியாகவும் உள்வாங்கி, அவற்றை வாசகர்களின் கண்களுக்கு முன்னால் ஒரு தத்துருபமான காட்சியாகவே ஆசிரியர் விரித்துக் காட்டியுள்ளார்.

டென்மார்க்:

ஜேர்மனியின் பிராங்போர்ட் நகரில் இறங்கி, தனது பயணப் பொதியைத் தொலைத்த இக்கட்டான சூழலில் டென்மார்க்கின் கொப்பன்ஹேகன் விமான நிலையத்தை அடைகிறார் ஆசிரியர். அங்கிருந்து தொடங்கும் அவரது குறிப்புகள், டென்மார்க்கின் பால் உற்பத்தி மற்றும் விவசாய மேன்மைகளான பார்லி, கோதுமை, சீனிக்கிழங்கு முதல் பன்றி, கோழி இறைச்சி மற்றும் மீன் உற்பத்தி வரையிலான விரிவான பொருளாதாரப் பதிவுகளை முன்வைக்கின்றன. நுகர்வோர் நேரடியாகப் பயன் பெறும் தெருவோரக் கடைகள், புகழ்பெற்ற 'குட்டிக் கடற்கன்னி' (The Little Mermaid) சிலை மற்றும் ஹொஸ்கில்ட் தேவாலயத்தின் வரலாற்றுப் பின்னணிகளைப் பகிரும் அவர், ஏரிப் பயண படகு அனுபவங்களையும் கலைவிழாக்களையும் தத்ரூபமாக விவரிக்கிறார். அரசன் மாளிகையாக உருமாறிய பெட்ரிக் மாளிகை, சுவீடன் ஹெல்சிங்கோர் நகரக் காட்சிகள் மற்றும் உலகின் அதிநீளமான கடற்பாலமும் சுரங்கப்பாதையும் இணைந்த 'உயசுன்ட்' (Oresund) கடற்பாலத்தின் பிரம்மாண்டம் எனப் பயணத்தின் ஒவ்வொரு கணமும் வியப்பூட்டும் தகவல்களால் நிரம்பியுள்ளது. இவற்றுடன் உலகப் புகழ் பெற்ற சிறுவர் இலக்கியப் படைப்பாளி ஹான்ஸ் கிறிஸ்டியன் அண்டர்ஸன் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும் இணைத்து, இப்பயணக் கட்டுரையை ஒரு செழுமையான ஆவணமாக ஆசிரியர் மாற்றியுள்ளார்.

ஜேர்மனி:

ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் முன்னெடுத்த 'செவ்வரத்தை' நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்பதற்காக ஆசிரியர் ஜேர்மனி சென்றடைந்தார். இலங்கை எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியில் வெற்றிபெற்ற கதைகள் உட்பட தெரிவு செய்யப்பட்ட 50 சிறுகதைகளைக் கொண்ட ஒரு முக்கியத் தொகுப்பாக இந்நூல் விளங்கியது. இப்பயணத்தின் ஊடாக ஜேர்மனியின் வரலாற்றுச் சுவடுகளை மிக நுட்பமாக அவர் பதிவு செய்துள்ளார். உலகின் அதிபழைமையான புனித கேளின் தேவாலயம் மற்றும் உலகின் முன்னணி மருந்து தயாரிப்பு நிறுவனமான 'பேயர்' (Bayer) ஆகியவற்றைப் பார்வையிட்ட அவர், பெர்லின் நகரின் ஊடாக இரண்டாம் உலகப் போரின் கசப்பான பக்கங்களை விரிவாக விவரிக்கிறார். ஹிட்லரின் வரலாறு, வதைமுகாம்கள், விஷவாயு அறைகள் மற்றும் பெர்லின் சுவர் குறித்த வரலாற்றுப் பதிவுகள் வாசகர்களுக்கு ஒரு தெளிவான சித்திரத்தை வழங்குகின்றன. அத்துடன், ஈழத்தமிழர்களின் புலம்பெயர் வாழ்வு, பெர்லின் ஸ்ரீ மயூரபதி முருகன் ஆலயம், ஹாய்சர் வில்ஹெல்ம் ஞாபகார்த்த தேவாலயம் மற்றும் ஒலிம்பிக் போட்டியில் நிகழ்ந்த துயரச் சம்பவங்கள் என அனைத்தையும் ரயின் நதிக்கரையின் அழகோடும் பிராங்க்போர்ட் நகரத்தின் சிறப்போடும் இணைத்து ஒரு முழுமையான வரலாற்று ஆவணமாக ஆசிரியர் தந்துள்ளார்.

நெதர்லாந்து:

நெதர்லாந்து நாட்டின் பயணக் குறிப்புகளில், அந்த நாட்டின் அடையாளமாகத் திகழும் சைக்கிள் பயணக் கலாசாரம் மற்றும் கண்கவர் காற்றாலைகள் பற்றிய பதிவுகள் முதன்மை பெறுகின்றன. உலகின் மிகப்பெரிய மலர் தோட்டங்களின் அழகையும், புகழ்பெற்ற இந்தியத் திரைப்படமான 'அந்நியன்' படமாக்கப்பட்ட எழில்மிகு இடங்களையும் ஆசிரியர் தனது ரசனையான மொழியில் விவரிக்கிறார். இத்தகைய காட்சி விவரிப்புகள் வாசகர்களுக்கு ஒரு நேரடிப் பயண அனுபவத்தைத் தருவதோடு, ஐரோப்பாவின் இயற்கை அழகையும் நவீன வாழ்வியலையும் ஒருசேரப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

சுவிட்சர்லாந்து:

சுவிட்சர்லாந்து பயணத்தில் ஆசிரியர் அந்நாட்டின் தனித்துவமான வரலாற்று அடையாளங்களையும், இயற்கை அதிசயங்களையும் மிக நுட்பமாக விவரிக்கிறார். லூசேர்ண் நகரில் நதியின் குறுக்கே மரத்தினால் கட்டப்பட்ட பழைமையான பாலம் மற்றும் புகழ்பெற்ற 'லூசேர்ண் சிங்கம்' நினைவுச் சின்னம் ஆகியவற்றைப் பற்றி குறிப்பிடும் அவர், மலைகளுக்குள் மறைந்திருக்கும் அதிசய நீர்வீழ்ச்சிகளையும், குறிப்பாக ரும்மல்பாச் (Trümmelbach) நீர்வீழ்ச்சியின் பிரம்மாண்டத்தையும் ரசனையுடன் பதிவு செய்துள்ளார். அத்துடன், செயின்ற் பீற்ஸ் குகை மற்றும் சுவிஸ் வங்கியின் உலகளாவிய முக்கியத்துவம் குறித்தும் அவர் விளக்குகிறார். இப்பயணத்தின் மற்றுமொரு முக்கிய அம்சம், ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக் காரியாலயத்திற்கான வருகையாகும். ஐ.நா.-வின் உருவாக்கம், அதன் வளாகத்திலுள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலை மற்றும் கண்ணிவெடிகளுக்கு எதிரான போராட்டத்தைச் சித்தரிக்கும் 'முறிந்த கதிரை' (Broken Chair) நினைவுச்சின்னத்தின் பின்னணி வரலாறு ஆகியவற்றை அவர் விரிவாகப் பதிவு செய்துள்ளார். மேலும், சுவிஸ் தமிழ் இலக்கிய சங்கம் அவருக்கு அளித்த கௌரவம், அந்நாட்டின் நாடாளுமன்றம் மற்றும் சுவிட்சர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் எல்லைக்காவல் நடைமுறைகள் எனப் பல பரிமாணங்களில் சுவிஸ் வாழ்வியலை ஒரு முழுமையான சித்திரமாக ஆசிரியர் வழங்கியுள்ளார்.

பிரான்ஸ்:

பாரிஸ் மாநகரின் லாச்சப்பல் (La Chapelle) பகுதியை ஒரு 'குட்டி யாழ்ப்பாணம்' என்றே ஆசிரியர் வர்ணிக்கிறார். அங்குள்ள தமிழ் புத்தகசாலைகள் மற்றும் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா எனப் புலம்பெயர் தமிழர்களின் ஆன்மீக மற்றும் பண்பாட்டு வாழ்வியலை அவர் மிக நெருக்கமாகப் பதிவு செய்துள்ளார். அதேவேளையில், உலகப் புகழ்பெற்ற லூவர் அருங்காட்சியகத்தில் பதினான்காம் லூயி மன்னனின் வரலாற்றுச் சுவடுகள், லியோனார்டோ டா வின்சியின் ஒப்பற்ற படைப்பான 'மோனலிசா' ஓவியம் ஆகியவற்

றின் சிறப்புகளை விளக்குகிறார். நவீன உலகின் பொறியியல் அற்புதமாகக் கருதப்படும் ஈபிள் கோபுரம், மாவீரன் நெப் போலியன் அமைத்த வெற்றி வளைவு (Arc de Triomphe) மற்றும் அங்கு தேசபக்தியின் அடையாளமாக அணையாது எரி யும் தீபம் எனப் பாரிஸின் வரலாற்றுச் சின்னங்களை ஆசிரி யர் வியப்புடன் விவரிக்கிறார். மேலும், பாரிஸையும் லண்ட னையும் இணைக்கும் உலகின் அதிநீளமான நீருக்கு அடியி லான சுரங்க ரயில் பாதை குறித்த தகவல்களையும் இணைத்து, இப்பயணக் குறிப்பைப் பூரணத்துவப்படுத்துகிறார்.

மொழி மற்றும் நடை:

இந்நூலின் மிகப்பெரிய வெற்றி அதன் எளிமையான மற்றும் வாசகர்களை ஈர்க்கும் நடையில் உள்ளது. தி. ஞானசேகர னின் தமிழ் அலங்காரமற்றது; அது வாசகனை, 'நானும் ஆசிரியருடன் இணைந்து பயணம் செய்கிறேன்' என்ற நெருக்கமான உணர்வைப் பெறச் செய்கிறது. இடையிடையே அவர் பகிரும் சுய அனுபவக் குறிப்புகள் வாசிப்பைத் தொய் வில்லாமல் உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன. பொதுவாகப் பயண நூல்களில் காணப்படும் சலிப்பூட்டும் தகவல் குவி யலோ அல்லது மிகைப்படுத்தப்பட்ட உணர்ச்சிகளோ இன்றி, வரலாறு, நகர அமைப்பு மற்றும் சமூகச் சூழல் போன்ற தரவுகளை இலக்கியச் சுவை குறையாமல் அவர் வழங்கி யுள்ளார். ஒரு சில இடங்களில் பயண விவரங்கள் நீளமாகத் தோன்றினாலும், சில இடங்களுக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தாலும், அவை இந்நூலின் ஒட்டுமொத்தத் தரத்தையோ அல்லது அதன் சமூக ஆவணப் பண்பையோ எவ்விதத்திலும் பாதிக்கவில்லை.

இந்நூல், ஐரோப்பாவிற்குப் பயணிக்க விரும்புபவர்கள், அந் நாட்டு வாழ்வியலைப் புரிந்துகொள்ள முனையும் ஆர்வலர் கள், வரலாற்று உண்மைகளைத் தேடுபவர்கள் மற்றும் புலம் பெயர் தமிழர்களின் அனுபவங்களை அறிய விரும்புபவர்கள் எனப் பலதரப்பட்ட வாசகர்களுக்கும் ஒரே நேரத்தில் வழி காட்டும் ஒரு சிறந்த படைப்பாகத் திகழ்கிறது. இதில் இடம் பெற்றுள்ள வரலாற்றுத் தகவல்கள், சமூகக் குறிப்புகள் மற் றும் ஆசிரியரின் தனிப்பட்ட உணர்வுகள் ஆகிய மூன்றும் ஒன்றையொன்று விஞ்சாமல், மிகச் சரியான சமநிலையுடன் பிணைந்துள்ளன. இத்தகைய சீரான தன்மையே இந்நூலின் கல்வியியல் தரத்தை (Academic Quality) உயர்த்துகிறது. சுருங்கக் கூறின், 'ஐரோப்பிய பயண அனுபவங்கள்' என்பது ஒரு சாதாரணப் பயண நூல் மட்டுமல்ல; அது நவீனத் தமிழ ரின் அடையாளத் தேடலைப் பதிவு செய்யும் ஒரு காத்திர மான சமூக ஆவணமாகும். இதன் ஆழமான தரவுகள் மற்றும் நுட்பமான அவதானிப்புகள் காரணமாக, இது M.A. மற்றும் M.Phil. நிலை ஆய்வுகளுக்கு ஒரு முக்கியமான ஆதார நூலாகப் பயன்படும் தகுதியை நிறைவாகக் கொண்டுள்ளது.

Chandragowry.Sivapalan@thaiveedu.com

ஞானம்

ஞானசேகரன் நினைவுகள்

எதிர்பாராத நிகழ்வுகளின் சங்கமம்தான் வாழ்க்கை. இந்த வாழ்க்கையில் நாம் சந்திக்கும் பலர் எம்முடன் தொடர்ந்து பயணிப்பார்கள். அவ்வாறு என்னுடன் பயணித்தவர்கள் பற்றியும், அவர்களிடமிருந்து பெற்ற அனுபவங்கள் தொடர்பாகவும் முன்னரும் எழுதி வந்திருக்கின்றேன். அவர்கள் திடீரென எம்மைவிட்டு பிரிந்துவிடும்போது, ஏற்படும் துயரத்தை தாங்கிக் கொள்வதற்கு மிகுந்த மன வலிமை வேண்டும். எனினும், அவர்கள் பற்றிய நினைவுகள் தானே எம்மிடம் எஞ்சி யிருக்கும்.

அந்தவகையில் மருத்துவ கலாநிதியும் ஈழத்தின் மூத்த படைப்பாளியும், தனது பல நூல்களுக்கு விருதுகள் பெற்றவரும், 'ஞானம்' இதழை நீண்ட காலம் வெளியிட்டவரும், ஞானம் இலக்கியப் பண்ணையின் வெளியீடுகளைப் பதிப்பித்தவருமான 'சாகித்திய இரத்தினா' ஞானசேகரன் அவர்களின் திடீர் மறைவு எம்மை மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இறுதியாக அவரை, 2023-ஆம் ஆண்டு நடுப்பகுதியில் கொழும்பில் அவரது இல்லத்தில் சந்தித்தவேளையில், தமது ஞானம் இலக்கியப் பண்ணையின் ஊடாக தெடர்ந்தும் தாம் மேற்கொள்ள விருக்கும் பணிகள் பற்றி சொன்னார். பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் - என்ற மகுட வாசகத்துடன் முந்நூறுக்கும் மேற்பட்ட ஞானம் மாத இதழை வெளிக்கொணர்ந்தவர்.

இறுதியாக இந்த வருடம் மே மாதம் வெளியான 311-ஆவது இதழ், ஞானசேகரன் அவர்களின் நினைவுகளை உள்ளடக்கிய இதழாக வெளிந்துள்ளது. ஏற்கனவே ஞானம் பல சிறப்பிதழ்களை வெளியிட்டிருக்கிறது. அவை சிறந்த ஆவணமாகத் திகழுகின்றன. சில வருடங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் நடைபெற்ற இலக்கியச்சந்திப்பிலும் நாமிருவரும் கலந்துகொண் டோம். 2023-ஆம் ஆண்டில் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் புகலிட இலக்கியம் தொடர்பாக நான் உரையாற்றிய போது, அந்த நிகழ்வுக்கு அவரே தலைமை தாங்கினார். அத்துடன் அதற்கு முன்னர் நான் எழுதிய இலங்கை யில் பாரதி நூல் அறிமுக நிகழ்வின்போதும் அவர் அந்த நூல் பற்றிய தனது விமர்சன உரையை நிகழ்த்தினார்.

ஞானசேகரனை 1990-ஆம் ஆண்டின் பின்னரே நான் சந்தித்தேன். அவ்வேளையில் அவர் மலையகத்தில் மருத்துவராக பணியாற்றிக்கொண்டிருந்தார். அவர் அவுஸ்திரேலியாவுக்கு வருகை தந்ததன் பின்னர் இங்கு நடந்த கலை, இலக்கிய சந்திப்புகளில் கலந்து சிறப்பித்தார். மெல்பன், சிட்னி, கன்பரா ஆகிய மாநில ங்களில் அவரது உரைகள் இடம்பெற்றன.

prasadbatti@gmail.com

> இலங்கை வட புலத்தில் புன்னாலைக் கட்டு வனிலிருந்து, தமிழர் புலம் பெயர்ந்த நாடுகள் எங்கும் பயணித்த இலக்கிய யாத்ரீகன்

நாம் 2001-ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் தொடக்கிய தமிழ் எழுத்தாளர் விழா இயக்கத்தில் ஞானசேகரனும் அவரது அன்புத் துணைவியாரும் செல்வப்புதல்வர்கள் ராஜசேகரனும் பாலச்சந்திரனும் இணைந்துகொண்டனர். 2001-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டு நாட்கள் மெல்பனில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் விழாவின்போது, மல்லிகை அவுஸ்திரேலிய சிறப்பிதழை மல்லிகை ஜீவா வரவாக்கினர். அச்சிறப்பிதழை அறிமுகப் படுத்திய வரும் ஞானசேகரன்தான். இவ்வாறு சகோதர இலக்கிய இதழ்களை ஆதரிக்கும் அரிய பண்பும் அவரிடம் குடியிருந்தது.

அவுஸ்திரேலியத் தலைநகர் கன்பராவில் 2004-ஆம் ஆண்டு நடந்த தமிழ் எழுத்தாளர் விழாவின்போது அதனை முன்னிட்டு ஞானம் சிறப்பிதழை வெளியிட்டார். அந்த விழாவில் கவிஞர் அம்பியின் பவளவிழாவும் ஒரு அங்கமாக நடந்தது. அக்காலப்பகுதியில் கவிஞர் அம்பியை ஞானம் இதழ் அட்டைப்பட அதிதியாகவும் கௌர வித்தமை குறிப்பிடத்தகுந்தது. சிட்னி இன்பத்தமிழ் வானொலியிலும் அவரது நேர்காணல் ஒலித்தது. ஞானசேகரன், தமது அவுஸ்திரேலிய பயணத்தை சுவாரசியமான கதையாகவும் எழுதி வெளியிட்டார். கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் 2011-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான்கு நாட்கள் நடந்த சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் செயற்பாடுகளில் அவர் முனைப்போடு இயங்கினார்.

இதுவரையில் சிறுகதை, நாவல், நேர்காணல், பயண இலக்கியம் உட்பட பல துறைகளில் 25 நூல்களுக்கும்மேல் வரவாக்கியிருக்கும் ஞானசேகரன், ஞானம் இதழையும் தொடர்ந்து வெளிக் கொணர்ந் திருப்பது அசுர சாதனைதான். வட இலங்கை, மேற்கிலங்கை மற்றும் கிழக்கிலங்கை, தென்னிலங்கை மலையகத்திலிருந்தெல்லாம் இலக்கிய இதழ்கள் வெளியாகியிருக்கின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து வரதர் சில இதழ்களையும், டொமினிக் ஜீவா 'மல்லிகை' இதழையும் (பின் னாளில் மல்லிகை கொழும்பிலிருந்து வெளியா கியது), சிற்பி 'கலைச்செல்வி' இதழையும், சிவஞா னசுந்தரம் 'சிரித்திரன்' இதழையும், அ. யேசுராசா 'அலை' இதழையும் வெளியிட்டனர். இவற்றைத் தவிர, தேசிய கலை இலக்கியப் பேரவையின் 'தாயகம்', திருமறைக் கலாமன்றத்தின் 'கலை முகம்', மற்றும் 'ஜீவநதி', 'மாருதம்' போன்ற இதழ் களும் வட இலங்கையிலிருந்து வெளிவருகின்றன.

மேல் மாகாணத்தை மையமாகக் கொண்ட மேற்கி லங்கையிலிருந்து 'அஞ்சலி', 'கதம்பம்', 'தமி ழமுது', 'மாணிக்கம்' என்பனவும், மலையகத்திலி ருந்து அந்தனி ஜீவாவின் 'கொழுந்து' இதழும் வெளி யாகின. அதேவேளை, கிழக்கிலங்கையிலி ருந்து அன்புமணியின் 'மலர்', செங்கதிரோன் கோபாலகிருஷ்ணனின் 'செங்கதிர்', மைக்கல் கொலின் வெளியிட்ட 'மகுடம்' மற்றும் சூர்யா நிறு வனத்தாரின் 'பெண்' ஆகிய இதழ்களும் வெளியாகின. பொருளாதார நெருக்கடிகள், விநியோகச் சவால் கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் இவற்றுள் சில இதழ்கள் காலப்போக்கில் தங்க ளின் வெளியீட்டை நிறுத்திக்கொண்டன.

ஞானசேகரன் அவர்களைப்பற்றி இரத்தினச் சுருக்கமாக ஒரு வரியில் கூறுவதானால், - இலங்கை வடபுலத்தில் புன்னாலைக்கட்டுவனிலிருந்து, தமிழர் புலம்பெயர்ந்த நாடுகள் எங்கும் பயணித்த இலக்கிய யாத்ரீகன் - என்று சொல்லலாம். அவ்வாறு உலகநாடுகள் பலவற்றுக்கும் பயணித் திருக்கும் ஞானேசேகரன், அங்கு வாழும் கலை, இலக்கிய வாதிகளின் பணிகளை தொடர்ந்து ஊடகங்களில் பதிவுசெய்து வந்திருக்கிறார். அத்த கைய பதிவுக ளின் தொகுப்பு நூல்தான் யாவரும் கேளீர். தினகரன் வாரமஞ்சரியில் அவர் 75 வாரங்கள் தங்கு தடையின்றி எழுதிவந்த தொடரில் பல்வேறு விடயங்கள் இடம்பெற்றுள்ளன. இலங்கை, இந்தியா உட்பட உலகின் பல நாடுகளில் அவர் பெற்ற அனுபவங்களையும், படித்தறிந்த செய்திக ளையும் வெகு சுவாரசியமாகத் தொகுத்திருக்கிறார்.

இலக்கியம், நாடகம், நடனம், சினிமா, ஓவியம், சிற்பக்கலை, நூதனசலைகள், ரயில் நிலையங்கள், அந்தந்த நாடுகளின் கலை, கலாசார சின்னங்கள், திருத்தலங்கள் பற்றியெல்லாம் தான் கண்டதை யும் கேட்டதையும் வாசகர்களுக்கு வெகு சுவையாக தந்திருக்கிறார். அத்துடன் தனது கூர்மையான பார்வையில் ஒரு முக்கிய விடயத்தையும் அவர் சுட்டிக்காண்பித்துள்ளார். இது தொடர்பாக, 2017-ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் மெல்பன் நகரில் நடைபெற்ற 17-ஆவது தமிழ் எழுத்தாளர் விழாவில், 'புலம்பெயர் எழுத்தாளர்களது எதிர் காலத் தலைமுறைகள் தமிழில் இலக்கியம் படைக் கப்போவதில்லை' என்ற தலைப்பில் விரிவான உரையொன்றையும் அவர் நிகழ்த்தினார். அதிலி ருந்து சில பகுதிகளை இங்கு தருகின்றோம்.

அவரது அன்றைய கருத்துகளை சமகாலத்தில் சீர் தூக்கிப்பார்க்கும்போது அதற்கான எதிர்வினைக ளையும் நாம் எதிர்பார்க்கின்றோம். சமகாலத்தில் தமிழர்புலம்பெயர்ந்த நடுகளில் தமிழ் அமைப்பு களின் தீவிர முயற்சியினால், நிலைமை முற்றாக மாறியிருப்பதை காணமுடிகிறது. புதிய தலைமு றையினரின் எழுத்துகள் வெளியாகிக்கொண்டிருக் கின்றன என்பதையும் இங்கே சுட்டிக்காண்பிக் கின்றோம்.

ஞானேசேகரனின் அன்றைய கருத்துகள் இவ்வா றுதான் இருந்தன என்பதையும் சொல்வதற்கா கத்தான் இங்கு குறிப்பிட்டோம்.

இனி, அவரது இதர கருத்துகளையும் பார்ப்போம்.

‘ஈழத்தில் இடம்பெற்ற போர் காரணமாக, ஈழத்து இலக்கியத்தின் இயங்குநிலை இருவேறு தளங்களில் இயங்கிவருவதை அவதானிக்க முடிகிறது. ஒன்று, ஈழத்தின் தேசிய புவியியல் மற்றும் வாழ்வியல் அமைவுகளுக்கு ஏற்ப படைக்கப்படும் இலக்கியம். இது ஈழத்தின் உள்ளே வாழ்ந்து கொண்டிருக்கும் இலக்கியவாதிகளால் படைக்கப்படுவது. மற்றது, போர் காரணமாக ஈழத்தில் இருப்பது பாதுகாப்பில்லை என்று அஞ்சி பல்வேறு நாடுகளுக்கும் சென்ற ஈழத்தவர்கள் படைக்கும் இலக்கியம். இது புலம்பெயர் இலக்கியம் என அழைக்கப்படுகிறது.

இந்த இரண்டு ஈழத்து இலக்கிய இயங்குதளங்கள் பற்றியும் இவற்றின் இன்றைய நிலை பற்றியும் விளக்குவதே இந்த உரையின் நோக்கமாகும். முதலில் புலம்பெயர் இலக்கியத்தின் இன்றைய நிலைபற்றிக் கூறுவது இந்த உரையின் ஒட்டுமொத்தமான உட்பொருளை விளங்கிக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் என நம்புகிறேன். புலம்பெயர் இலக்கியமானது ஈழத்து இலக்கியத்தின் நீட்சி எனக் கொள்ளப்படுகிறது. அதாவது ஈழத்து இலக்கியம் ஈழத்து இலக்கியமாக மட்டுமில்லாமல் புலம்பெயர் இலக்கியமாகவும் உள்ளது. இது ஈழத்தமிழர்கள் படைக்கும் இலக்கியமாக இருக்கிறதேயொழிய இந்தியத் தமிழர்களின் இலக்கியமாக இருப்பதில்லை.

ஆரம்பகாலத்தில் புலம்பெயர் எழுத்தாளர்கள் தமது நாட்டினைப் பிரிந்த ஏக்கத்தினையும் சென்றடைந்த நாடுகளில் தமக்கு ஏற்பட்ட துன்ப அனுபவங்களையும் பதிவு செய்த இலக்கியமாக புலம்பெயர் இலக்கியம் இருந்தது. புலம்பெயர் இலக்கியம் என்ற அடையாளப்படுத்தல் உருவான காலப்பகுதியில் இருந்த சூழல் இன்று இல்லை. பல நாடுகளிலும் புகலடைந்தவர்கள் அங்கு காலூன்றி நிலைத்துவிட்டார்கள். இவர்களுக்கு அறிவு விருத்தி, அனுபவ விசாலம், தொழினுட்பத் தேர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி, கலாசாரப் புரிந்துணர்வு முதலியன ஏற்பட்டுள்ளன. இவற்றிற்கேற்ப படைப்புகளின் உள்ளடக்க அம்சங்கள் மாற்றம் பெறத் தொடங்கிவிட்டன.

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் பலர் இன்று தமிழ்ப் படைப்புலகில் முன்னணி வகிக்கிறார்கள். இவர்கள் படைக்கும் இலக்கியங்களுக்கு தமிழ் மக்களிடையே உலகளாவிய ரீதியில் மதிப்பு இருக்கிறது. தமிழகப் பத்திரிகைகள் இந்தப் புலம்பெயர்ந்தோர் இலக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கின்றன. நடேசன், ஆசி கந்தராஜா, கே.எஸ். சுதாகர், முருகபூபதி, ஜே.கே. ஜெயகுமாரன், ஆவூரான் சந்திரன், படும்மீன் சு. ஸ்ரீகந்தராசா, பார்த்திபன், ஷோபாசக்தி, அ. முத்துலிங்கம், தேவகாந்தன், இ. தியாகலிங்கம், கருணாகரமூர்த்தி, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், விமல் குழந்தைவேல், வி. ஜீவகுமாரன், மாத்தளை சோமு, அகில், குரு அரவிந்தன், கிரிதரன், இரா. உதயணன், ஸ்ரீரஞ்சினி, அகில் சாம்பசிவம்... இப்படியாக ஒரு நீண்ட பட்டியலே தயாரிக்கலாம். ஈழத்தவர்களாகிய நாம் இந்த எழுத்தாளர்களின் எழுத்துகளையிட்டு பெருமை அடைகிறோம். இவை எம்மவர்களின் எழுத்துகள் எனக் கொண்டாடுகிறோம்.

இன்று புலம்பெயர் எழுத்தாளர்கள் தமிழகத்திலே புத்தகம் போடுகிறார்கள். தமிழக பிரபல்ய எழுத்தாளர்களிடம் முன்னுரைகள் வாங்குகிறார்கள். தமிழகத்திலே எம்மவர் பலருடைய நூல்கள் பரிசைப் பெறுகின்றன.

ஒரு காலத்தில் ஈழத்து எழுத்துகளை இளக்காரமாகப் பேசியவர்கள் தமிழக எழுத்தாளர்கள். 1960-இல் இலங்கை வந்திருந்த பகீரதன் என்ற எழுத்தாளர் ஈழத்து இலக்கியம் தமிழக இலக்கியத்தைவிட 20 வருடங்கள் பின்தங்கியுள்ளது என்றார். தொடர்ந்து வந்த காலப்பகுதியில் கலைமகள் ஆசிரியர் கி.வ. ஜகந்நாதன் ஈழத்துப் படைப்புகளில் வரும் மண்வளச் சொற்களுக்கு அடிக்குறிப்பு தேவை என்றார். கி. ராஜநாராயணன் ஈழத்து மண்வளச் சொற்களைப் புரிந்து கொள்ள அகராதி தயாரித்தல் நல்லது என்றார். ஜெயகாந்தன் புலம்பெயர் எழுத்துகளை புலம்பல் இலக்கியம் என்று கேலிசெய்த காலமும் இருந்தது.

இந்த நிலையை மாற்றியமைத்தவர்கள் புலம்பெயர் எழுத்தாளர்கள். இன்று ஈழத்தமிழர்களின் எழுத்துகளை விரும்பி வாங்கி பிரசுரிக்கும் நிலைமை தமிழகத்திலே ஏற்பட்டிருப்பதை எண்ணி நாம் பெருமை அடைகிறோம். இந்த எழுத்தாளர்கள் யாபேரும் ஈழத்திலே தமிழைக் கற்றவர்கள் பலர் முதலில் ஈழத்துப் பத்திரிகைகளில் எழுதியவர்கள். ஈழத்துப் பத்திரிகைகளில் எழுதிப்பழகி எழுத்தாளர் ஆனவர்கள். ஈழத்திலே இவர்கள் இருந்த காலத்தில் இவர்களுடைய எழுத்துகளுக்கு பெரிதாகப் பிரபல்யம் கிடைக்கவில்லை. ஆனால், புலம்பெயர்ந்து எழுதத் தொடங்கிய பின்னர் இவர்களுடைய எழுத்துகளுக்குப் பிரபல்யம் கிடைத்திருக்கிறது.

புலம்பெயர்ந்தோர் இலக்கியங்களை கனடியத் தமிழ் இலக்கியம், வட அமெரிக்கத் தமிழ் இலக்கியம், ஐரோப்பியத் தமிழ் இலக்கியம் என்று பெயர்சுட்டும் அளவுக்கு தற்கால புலம்பெயர் இலக்கியங்கள் பெயர்சுட்டி வகைப்படுத்தவேண்டிய பொருட்பரப்பைக் கொண்டுள்ளன. தற்போது அடுத்தகட்டமாக தமிழ் இலக்கியப்பரப்பானது ஒரு நாட்டின் தேசிய புவியியல் பண்பாடு மற்றும் அங்குள்ள வாழ்வியல் அமைவுகளையும் தாண்டி இலக்கியங்கள் புலம்பெயர் நாடுகளில் படைக்கப்படுவதைக் காண்கிறோம். இது உலகத்தமிழ் இலக்கியம் என்ற பொது அடையாளத்தைப் பெற்று விடுவதற்கான சாத்தியப்பாடுகளைக் கொண்டுள்ளமையைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் உலகத்தரமான இலக்கியங்களைப் படைப்பதையிட்டு நாம் மகிழ்வடைகிறோம்.

இன்றைய சூழ்நிலையில் தமிழக வணிகப்பத்திரிகைகள் புலம்பெயர் படைப்பாளிகளின் எழுத்துகளை ஆராதிக்கின்றன. அது நல்லது. எம்மவரின் எழுத்துகள் பிரபல்யம் பெறுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். பெருமை கொள்கிறோம். என்னால் வெளியிடப்படும் ஞானம் கலை இலக்கிய சஞ்சிகையிலேகூட ஒவ்வொரு இதழிலும் புலம்பெயர் எழுத்தாளர்களின் படைப்பைச் சேர்த்துக் கொள்கிறோம்.

ஆனால், இந்த புலம்பெயர் எழுத்துகளின் நிலைமை தற்காலிகமானது. இந்த நிலை ஒன்று அல்லது இரண்டு தசாப்தங்களில் மறைந்துவிடும். அதற்குப் பிறகு நிலைமை என்ன? ஏனெனில் புலம்பெயர் எழுத்தாளர்களது எதிர்காலத் தலைமுறைகள் தமிழில் இலக்கியம் படைக்கப்போவதில்லை. அதற்கான அறிகுறிகள் ஏதும் தென்படவில்லை. அவர்கள் யாரும் தமிழகப் பத்திரிகையில் எழுதுவதாகத் தெரியவில்லை. புலம்பெயர்ந்த நாடுகள் சிலவற்றில் அடுத்த தலைமுறையினரும் தமிழ் கற்றுத் தேறியிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். ஒருவேளை ஒருசிலர் எழுதினாலும் அவர்களின் அடுத்த தலைமுறை தமிழில் எழுதுமா? தமிழ் தெரிந்துவிட்டால் மட்டும் எழுத்தாளர்களாகிவிட முடியாது.

ஈழத்திலே இருந்து இலக்கியம் படைப்போரின் நிலைமை இதுவல்ல.

உலகத்தின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ்ச் சமூகத்தினினரிடமிருந்து வேறுபட்டு, நிலத்தால், வரலாற்றால், வாழ்க்கை முறைகளால், பண்பாட்டால் தனித்தன்மை கொண்டவர்களாக ஈழத்தமிழர்கள் இருக்கிறார்கள். ஈழத்தமிழரின் பேச்சு மொழி, வாழ்க்கைச்சூழல், சமூகக்கட்டமைப்பு, சமூக இயக்கமுறைமை, சமுகப்பிரச்சினைகள், இனவிடுதலைப் போராட்டம் போன்றவையெல்லாம் ஈழத்து இலக்கியத்தை தனித்துவமானதாக ஆக்கியிருக்கிறது. ஈழத்தில் இருந்து இலக்கியம் படைப்போர் ஈழத்துக்கேயுரிய தனித்துவத்துடன் இலக்கியம் படைக்கிறார்கள்.

எது எப்படி இருந்தபோதிலும் ஈழத்திலே காலத்துக்குக்காலம் சஞ்சிகைகள் வெளிவந்து தத்தம் நிலையில் சிறந்த பணியாற்றியிருக்கின்றன. ஈழத்தின் முதலாவது சஞ்சிகை பாரதி 1946 தை மாதத்தில் வெளிவந்தது. முதலாவது இலக்கிய சஞ்சிகை மறுமலர்ச்சி அதே ஆண்டு பங்குனியில் வெளிவந்தது. தொடர்ந்து கலைச்செல்வி, மரகதம், சிரித்திரன், விவேகி, மல்லிகை, குமரன், இளம்பிறை, மலர், பூரணி, சுடர், அலை, புதிசு, தீர்த்தக்கரை, பெருவெளி, வெளிச்சம், மூன்றாவது மனிதன், செங்கதிர்... இப்படி இன்னும் பல சஞ்சிகைகள் சங்கிலித்தொடர்போல காலத்துக்குக் காலம் தோன்றி தத்தம் நிலையில் இலக்கியப்பணி புரிந்து வந்துள்ளன.

இன்று ஞானம், ஜீவநதி, படிகள், மகுடம், கலைமுகம் என சஞ்சிகைகள் வருகின்றன. சஞ்சிகைகள் எதிர்கொள்ளும் சகல பிரச்சினைகளுக்கும் இவை முகம்கொடுத்து கஷ்டத்தின் மத்தியில் வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன.

சங்க காலத்து மக்களது வாழ்க்கைமுறைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால் நாங்கள் அகநானூறு, புறநானூறு போன்றவற்றைப் படிக்கிறோம். அவை இலக்கிய ஆதாரங்கள். அதே போன்று 20-ஆம் நூற்றாண்டில் ஈழத்தமிழர் எப்படி வாழ்ந்தார் என இன்னும் பல நூற்றாண்டுகளின் பின் வரப்போகும் தலைமுறை அறிந்து கொள்ள வேண்டுமானால் ஈழத்து இலக்கிய சிற்றிதழ்களை ஆதாரமாகக் கொள்ள வேண்டும். ஈழத்தமிழர் முகம் கொடுத்த போர் பற்றி அறிய வேண்டுமானால் ஞானம் சஞ்சிகை தொகுத்த போர் இலக்கியம், புலம்பெயர் இலக்கியம் போன்ற தொகுப்புகளை ஆய்வு செய்ய வேண்டும்.

நிறைவாக நான் கூறுவதானால் சமகால ஈழத்து இலக்கியச் செல்நெறியானது உள்நாட்டுப் போரின் தாக்கங்களால் பல பிரச்சினைகளை எதிர் கொண்டபோதும் ஈழத்து இலக்கியம் தனித்துவத்துடன் சிறப்பாக வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை எனது 53 வருடகால ஈழத்து இலக்கியத்துடனான தொடர்பின் அடிப்படையிலும் 17 வருடகால ஓர் இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர் என்ற நிலையில் பெற்றுக்கொண்ட அனுபவப் பின்னணியிலும் திடமாகக் கூறமுடிகிறது.'

என்று அவர் சுட்டிக்காட்டிய வரலாற்று வரிகள் இங்கு நினைவுகூரத்தக்கவை.

ஈழத்துத் தமிழ் இலக்கியச் சூழலில் சிறுகதை, நாவல், கட்டுரை, விமர்சனம், தன்வரலாறு, பயண இலக்கியம் எனப் பன்முக ஆளுமையாக அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர் தி. ஞானசேகரன். படைப்பாளியாக மட்டுமன்றி, இதழாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் வெளியீட்டாளராகவும் அவர் பதித்த தடங்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் மிகக் கனதியானவை.

1960-களில் சிற்பி சரவணபவன் நடத்திய 'கலைச்செல்வி' இதழில் தனது முதல் சிறுகதையை எழுதுவதற்கு முன்பே, தமிழ்நாட்டிலிருந்து வெளியான 'கண்ணன்' சிறுவர் இதழில் எழுதத் தொடங்கியவர்தான் மாணவப் பருவத்து ஞானசேகரன். பேராசிரியர் கைலாசபதியின் முன்னுரையோடு 1973-இல் வெளிவந்த இவரது முதல் சிறுகதைத் தொகுதியான 'காலதரிசனம்', இவரது அரிய தொடக்ககாலப் படைப்பாகும். தொடக்கத்திலிருந்தே பல்வேறு சிறுகதைப் போட்டிகளில் பங்கேற்று வெள்ளிப் பதக்கம் உள்ளிட்ட பல பரிசுகளை வென்ற பெருமை இவருக்கு உண்டு.

வடபுலத்தின் புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தனது மருத்துவப் பணி நிமித்தம் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் சேவையாற்றச் சென்றார். அங்குள்ள மக்களின் வாழ்வியல் கோலங்களையும், பண்பாட்டையும், பேச்சுவழக்கையும் ஆழமாகக் கிரகித்துக் கொண்டதன் விளைவாகவே இலக்கிய உலகிற்குப் பல காத்திரமான வரவுகள் கிடைத்தன.

சிறுகதைத் தளத்திலிருந்து நாவல் இலக்கியத்திற்கு நகர்ந்த ஞானசேகரன், வீரகேசரி பிரசுர நாவல் போட்டிக்காக எழுதிய படைப்பே 'புதிய சுவடுகள்' ஆகும். வடபுலத்தில் நிலவிய சாதியக் கொடுமைகளைப் பேசிய இந்நாவல், போட்டியில் பரிசு பெறாத போதிலும் 1977-ஆம் ஆண்டிற்கான 'தேசிய சாகித்திய விருதை' வென்று வியப்பளித்தது. அந்த ஊக்கம் அவரை அடுத்தடுத்த நாவல்களை எழுதத் தூண்டியது.

இலங்கையில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் மலையகத் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட போது நடைபெற்ற போராட்டத்தின் போது, சிவனு லட்சுமணன் என்ற தொழிலாளி சுட்டுக்கொல்லப்பட்டார். அந்த வரலாற்றுச் சம்பவத்தின் பின்னணியில் இவர் இயற்றிய நாவலே 'குருதிமலை' ஆகும். சிறிமாவோ அரசை விமர்சித்து எழுதப்பட்ட இந்நாவல், அடுத்து வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசின் காலத்தில் 1979-ஆம் ஆண்டுக்கான தேசிய சாகித்திய விருதையும், தமிழ்க் கலைஞர் வட்டத்தின் பரிசையும் பெற்று மற்றுமொரு வியப்பை ஏற்படுத்தியது. இந்நாவல் மதுரை அமெரிக்கன் கல்லூரியின் முதுகலை (M.A.) பாடநூலாகத் தெரிவு செய்யப்பட்டதுடன், சிங்கள மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, மலையகப் பின்னணியில் அம்மக்களின் வாழ்வியல் துயரங்களைப் பதிவு செய்து இவர் எழுதிய 'லயத்துச் சிறைகள்' (1994) நாவல் மத்திய மாகாண கலாசார அமைச்சின் சாகித்திய விருதையும், இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த நாவலுக்கான சான்றிதழையும் பெற்றது. இவரது 'கவ்வாத்து' (1996) குறுநாவல், இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவையும் தமிழ் நாட்டின் 'சுபமங்களா' இதழும் இணைந்து நடத்திய போட்டியில் பரிசு பெற்றதுடன், விபவி கலாசார மையத்தின் 'தங்கச்சங்கு' விருதையும், 1997-ஆம் ஆண்டின் மத்திய

மாகாண சாகித்திய விருதையும் வென்றது. இவருடைய சிறு கதையொன்று தெளிவத்தை ஜோசப் தொகுப்பில் 'துரைவி' வெளியீடாக வந்த மலையகக் கதைத்தொகுப்பிலும் இடம் பெற்றுள்ளது. மேலும், இவரது 'எரிமலை' நாவல் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையையும், அதன் விளைவாக உருவான பாரிய அரசியல் நெருக்கடிகளையும், தொடரும் இன முரண்பாடுகளையும் ஆழமாகப் பேசுகிறது.

1998-இல் இவரது 'அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்' என்ற சிறுகதைத் தொகுதி 'மல்லிகைப்பந்தல்' வெளியீடாக வந்தது. ஞானசேகரனின் கதைகள் எவையுமே 'மல்லிகை' இதழில் வெளிவராத சூழலில், அவரது கதைத்தொகுப்பை மல்லிகைப்பந்தல் வெளியிட்டது இலக்கிய உலகில் ஒரு வியப்பு கலந்த ஆரோக்கியமான பதிவாகும். இத்தொகுப்பு பின்னாளில் இலங்கை சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தில் பாடநூலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

படைப்புலகில் தடம் பதித்த ஞானசேகரன், தனது அவுஸ்திரேலியப் பயணத்தைத் தொடர்ந்து ஒரு சிறந்த பயண இலக்கியத்தையும் நேர்காணல் தொகுப்பையும் வழங்கிவிட்டு, தனது முழு நேரத்தையும் 'ஞானம்' இலக்கிய இதழுக்காக அர்ப்பணித்துக் கொண்டார். தனது 'ஞானம்' இலக்கியச் சிற்றிதழின் வாயிலாக இளைய தலைமுறை எழுத்தாளர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு நல்வழிகாட்டியாக விளங்கியதோடு, 'ஞானம்' சிறுகதைப் போட்டிகள் மூலம் புதிய படைப்பாளிகளின் தொகுப்புகளைத் தொடர்ந்து ஆவணப்படுத்தினார். இதனால் 'ஞானம்' இதழுக்குப் பெருமையும், அதன் வாசகர்களுக்குப் பயனும், படைப்பாளிகளுக்குச் சிறந்ததொரு தளமும் கிடைத்தன.

'ஞானம் பதிப்பகம்' வெளியீட்டகத்தின் ஊடாக இதுவரை 40-க்கும் மேற்பட்ட முக்கிய நூல்கள் ஈழத்து இலக்கிய உலகிற்கு வரவாகின. அதோடு நின்றுவிடாமல், 'ஞானம் இலக்கியப் பண்ணை' என்னும் அமைப்பின் வழி இலக்கிய விழாக்கள், சான்றோர் கௌரவிப்புகள், நூல் வெளியீட்டு நிகழ்வுகள், நினைவு அஞ்சலிக் கூடல்கள் மற்றும் இளையோருக்கான இலக்கியப் பயிற்சிப் பட்டறைகள் போன்ற வற்றைத் தொடர்ச்சியாக ஒருங்கிணைத்து, ஒரு பண்பாட்டுத் தளத்தையே அவர் கட்டியெழுப்பினார். 'ஞானம்' இதழ் இது வரையில் கொண்டுவந்துள்ள ஆண்டு மலர்கள், போர்க் காலச் சிறப்பிதழ், புகலிடச் சிறப்பிதழ் போன்ற வரலாற்று ஆவணங்கள் குறித்துத் தனியாக ஆராயப்பட வேண்டியவை.

சர்வதேச ரீதியிலான எழுத்தாளர் விழாக்களிலும் மாநாடுகளிலும் ஈழத்தின் முதன்மைப் பிரதிநிதியாகப் பங்கேற்ற தி. ஞானசேகரன், பத்துக்கும் மேற்பட்ட ஆழமான ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துத் தனது கல்விப்புல ஆளுமையை வெளிப்படுத்தினார். இம்மாநாடுகள் சிலவற்றில் அரங்கத் தலைமை ஏற்று, உலக அரங்கில் ஈழத்துத் தமிழரின் இலக்கியக் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்தார். அவரது இப்பேரிலக்கியப் பங்களிப்பைக் கௌரவிக்கும் முகமாக, இலங்கை அரசின் மிக உயரிய 'கலாபூஷணம்' விருது உட்படப் பல்வேறு தேசிய, சர்வதேச இலக்கிய நிறுவனங்களின் பத்துக்கும் மேற்பட்ட விருதுகளும் மாண்புகளும் அவருக்கு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டன.

படைப்பாளி, பதிப்பாளர், இதழாசிரியர் எனப் பன்முகத் தளங்களில் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் தடம் பதித்த டாக்டர் தி. ஞானசேகரன் அவர்களின் வாழ்வு, ஒரு தனிமனித வரலாறு என்பதைக் கடந்து அரை நூற்றாண்டு கால ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் ஒரு முக்கிய பதிவாக அமைகிறது.

'ஞானம்' இலக்கியச் சிற்றிதழின் வழியே அவர் உருவாக்கிய சிந்தனைச் சூழலும், அதன் பதிப்பகப் பண்ணை ஊடாக அவர் ஆவணப்படுத்திய இலக்கியப் பணிகளும், சர்வதேச அரங்குகளில் அவர் பதிவு செய்த ஆய்வுப் பங்களிப்புகளும் காலத்தால் அழியாத வரலாற்றுச் சான்றுகளாகும்.

உள்நாட்டுப் போர்க்காலச் சூழலிலும், புலம்பெயர் நிலங்களின் சவால்களுக்கு மத்தியிலும் புதிய தளிர் எழுத்துகளை அடையாளம் கண்டு ஆற்றுப்படுத்திய அந்தப் பெருந்தகை, ஈழத்து இலக்கியச் செல்நெறியை உலகளாவிய தளத்திற்கு நகர்த்திய செயற்பாட்டாளர் ஆவார். விருதுகளையெல்லாம் கடந்து, இறுதி மூச்சு வரை ஓர் இலக்கிய இயக்கமாகவே வாழ்ந்த தி. ஞானசேகரன் அவர்களின் சுவடுகளும் ஆவணங்களும், எதிர்காலத் தமிழ் தலைமுறையினருக்கு என்றும் வழிகாட்டும் ஒரு வரலாற்றுப் பேழையாகத் திகழும். அவர் ஆக்கிய இலக்கியப் பதிவுகளின் ஊடாக அவர் என்றும் நினைவு கூரப்படுவார்.

murugaboopathi@thaiveedu.com

தோழர் வேலு: போராட்டம் எங்கேயோ அங்கே...

மு. நித்தியானந்தன்

tg.theeban@gmail.com

'சிறையின் சுவர்களுக்கு மேலால்,
சூழப்பட்டிருந்த முள்வேலிக்குள்
நிலவு சிக்கிக்கொண்டுவிட்டது.
நாங்களோ,
பாடல் இசைத்தும்,
விவாதித்தும்,
புரட்சிக் கனவுகளில்
எங்களை இழந்திருந்தோம்.'

தெலுங்குக் கவிஞர் வரவர ராவ்

'துப்பாக்கிக் குழலிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது.' என்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட விரிவுரை மண்டபத்தின் முன்னால் நாங்கள் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தபோது, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மாஓ பிரிவு, அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆனால், 1971-இல் ஜே.வி.பி.-யின் ஆயுதக் கிளர்ச்சியின்போது, தென்னிலங்கையில் சிங்கள இளைஞர்களின் சடலங்கள் களனி கங்கையில் மிதந்தன.

1980 ஆண்டு காலப்பகுதியில் சென்னையில் நான் நின்றபோது, நக்சலைட்டுகளின் வேட்டைக்காடாய் தமிழகம் மாறியிருந்ததைப் பார்த்தேன்.

'நக்சலைட்டுகள் ஏன் உருவாகுகிறார்கள்?' என்பது பற்றி, இந்திய ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சரவை அக்காலப் பகுதியில் ஆய்வு நடத்தியது. 'கிராமப் புறங்களில் நிகழ்ந்து வரும் மாற்றங்கள்' என்பது பற்றிய அறிக்கையை அது வெளியிட்டிருந்தது.

'தமிழ்நாட்டில் வட ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்களில் நக்சலைட் நடவடிக்கைகள் அதிகரிப்பதற்குக் காரணம் அந்த மாவட்டங்களில் உள்ள நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களின் மோசமான நிலைமைதான். பெரும்பாலும் ஹரிஜனங்களான இந்த விவசாயக்கூலிகள், பேராசை பிடித்த வட்டிக்காரர்களாலும், நிலச்சுவாந்தர்களாலும் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். கொத்தடிமை முறை சகஜமாக உள்ளது. குறைந்தபட்சக் கூலி கொடுக்கப்படுவது இல்லை. தமிழ்நாட்டில் நடந்த நக்சலைட் நிகழ்ச்சிகளில் காணப்பட்ட முக்கியமான போக்குகளில் ஒன்று - உள்ளூர் நிலப்பிரபு, வட்டிக்கார சக்திகளுக்கு எதிராக, நக்சலைட்டுகள் நடத்திய தாக்குதலில் பாதிக்கப்படும் கிராமப் பணக்காரர்கள் 'தற்பாதுகாப்புக் குழுக்களை' அமைத்துக் கொள்வதற்கு அரசின் அதிகாரபூர்வமான உதவியையும் ஆதரவையும் பெறும் நிலையில் இருக்கிறார்கள் என்பதாகும். ஆனால், இதற்கு மாறாக சிறு விவசாயிகளும், விவசாயக் கூலிகளும் ஒன்றுதிரண்டு குறைந்தபட்சக் கூலியைப் பெறவும், கொத்தடிமைமுறை, தீண்டாமையை அகற்றவும், கடன் நிவாரணம் பெறுவதற்கும் அரசாங்கம் எந்த முயற்சியையும் எடுத்ததாகத் தெரியவில்லை' என்று ஒன்றிய அரசே ஆய்வறிக்கை வெளியிட்ட அரசியல் சூழல்.

1977-இல் ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்து, இந்தியாவில் உள்ள அனைத்து நக்சலைட் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்து விடலாம் என்று பரிந்துரைத்த பின்னும், தமிழ்நாடு அரசு மட்டும், அதனை ஏற்காது, நக்சலைட் கைதிகளை விடுதலை செய்ய மறுத்தது. போலீஸ் அராஜகம் தலைவிரித்தாடிய ஓர் அவலச் சூழலில், பூபாலன் என்னும் தோழர் வேலு என்ற அரசியல் புரட்சிக்காரன் தர்மபுரியில் பிறப்பெடுக்கிறான்.

கோர்ப்பரேட் நிறுவனங்களுக்கு எதிராக, கூலி உயர்வு கோரித் தொழிற்சங்க நடவடிக்கைகளில் தொடர்ந்து போராடிய புரட்சிகர இளைஞனாகத் தோழர் வேலு, புரட்சிகர அரசியலில் கால் பதிக்கிறார். அன்று தொடங்கிய அவரின் அரசியல் பயணம் இறுதிவரை தொடர்ந்தது.

அவர் நெருப்பாற்றில் நீந்தியிருக்கிறார். தர்மபுரியில் பாலக்காடு சம்பவம் ஒன்றில் வெடிகுண்டு வைத்தார் என்ற ஜோடிப்பு வழக்கில் தோழர் வேலு நான்கு ஆண்டுகாலம் சிறைவைக்கப்பட்டு, பிணையில் வருவதும் போவதுமாக பத்து ஆண்டுகள் கொடிய அடக்குமுறையை எதிர்நோக்கினார். ஆந்திராவில் நக்சலைட் சதி வழக்கில் ஆஜரான கே.ஜி. கண்ணபிரான் என்ற மனித உரிமை வழக்கறிஞர், அந்த வழக்கினை ஆரம்பித்தபோது தனக்கு 45 வயது என்றும், வழக்கு முடிவுக்கு வந்தபோது தனக்கு 60 வயது ஆகிவிட்டது என்றும் நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

தோழர் வேலுவின் நீண்டகாலச் சிறைவாசம் அவருக்குச் செழுமையான அனுபவங்களைத் தந்து, அவரைப் புடம் போட்டிருக்

கிறது. சிறைச்சாலையில் அவர் சந்திக்க நேர்ந்த ஈழவிடு தலைப் போராளிகளின் அரசியல் வறுமையைப் பற்றி தோழர் வேலு விரிவாகவே என்னிடம் பேசியிருக்கிறார். சக அரசியல் கைதிகளின் நலனுக்காக அவர் நிறையவே உழைத்திருக் கிறார். அவரை எங்கே நிறுத்தினாலும், அவரது போராட்டக் கனல் ஒருபோதும் அணைந்ததில்லை.

வெற்று சுலோகங்களை உச்சாடனம் செய்யும் போலிப் புத்தி ஜீவிகளின் கூடாரத்திலிருந்து அவர் வெகுதொலைவில் நிற்ப

வர். பேச்சுக்கும் செயலுக்கும் பேதம் தெரியாத பெருமகன் தோழர் வேலு நம் காலத்தில் நம்முடன் இத்தகைய மாசற்ற மனிதன் வாழ்ந்து சென்றிருக்கிறான் என்பதை நினைக்க மனம் சிலிர்க்கிறது. இத்தகு பெருமனிதர்கள் எப்போதாவது தான் தோற்றம் தருகிறார்கள். அந்த மனிதர் என் வீட்டிற்கு வந்தபோதெல்லாம் சூரியனைப்போல ஒரு பிரகாசம் வீட்டில் நிறைவதை உணர்ந்திருக்கிறேன். சொந்த சகோதரனுக்கும் மேலான பாசத்துடன், மனம் விட்டுக் கதைத்தும், சிரித்தும் உற வாடிய நாட்களைத் துயரத்தோடு நினைவுகூர்கிறேன். இனம் புரியாத நம்பிக்கையை அள்ளி வீசுபவராகத் திகழ்பவர். மனி தத்துவத்தின் சொரூபமாக அவர் மிளிர்ந்தார்.

அமரந்த்தாவின் நெருக்கமான இலக்கிய நண்பராக இருந் திருக்கிறார். மார்த்தா த்ராபா எழுதிய 'நிழல்களின் உரை யாடல்' என்ற அர்ஜென்டினிய நாவலை அமரந்த்தா தமிழில் மொழிபெயர்த்திருந்தார். லத்தீன் அமெரிக்க இலக்கியங்களைத் தமிழில் தருவதைப் பேரிலக்காகக் கொண்டு செயற்படுபவர் அவர். 'நிழல்களின் உரையாடல்' நாவலை விமர்சனம் செய்யு மாறு தோழர் வேலு அந்த நாவலை என்னிடம் தந்திருந்தார். விரிவான விமர்சனமொன்றை ஈஸ்ட் ஹாம், ட்ரினிட்டி மண்ட பத்தில் செய்திருந்தேன். அந்த நாவலின் எனது மதிப்பீட் டினை, தோழர் வேலு பாராட்டிப் பேசியது குறித்து நான் மன நிறைவுற்றேன்.

தோழர் வேலு கூர்மையான வாசகர். அம்பேத்கரிய, மார்க்சிய நூல்களைத் தொடர்ந்து பயில்பவர். முற்போக்கு இலக்கியங் களின் நல்வாசகன். விளிம்புநிலை மாந்தர், ஆதிவாசிகள், ஏகாதிபத்தியப் பொருளாதாரம் என்பன அவருக்கு உவப் பான வாசிப்புப் பரப்பாக இருந்தது. 'வெர்ரியர் எல்வினும் அவரது பழங்குடிகளும்' என்ற ராமச்சந்திர குஹா எழுதிய நூலை அவர் வாசித்து, வெகுவாக அதனைச் சிலாகித்துக் கூறியுள்ளார். அவருடைய புத்தக அலுமாரி கனதியான, அறி வார்ந்த நூல்களால் நிறைந்திருந்தது. தமிழகத்தில் அவ்வப் போது வெளியாகும் நல்ல மொழிபெயர்ப்பு நூல்களை, உட னுக்குடன் தெரிந்து அறிமுகம் செய்பவர் வேலு.

லண்டனில் நடைபெறும் அரசியல், கலை இலக்கியக் கூட்டங் களில் தோழர் வேலு எப்படியும் பிரசன்னமாகியிருப்பார். நூல் விமர்சனங்களில் கூர்மையான தனது பார்வையை முன்வைப் பார். தமிழ்ப்பிரபாவின் 'பேட்டை' என்ற நாவலை விமர்சிக் கையில், 'ஒடுக்கப்பட்ட மக்களின் மறுக்கப்பட்டிருந்த பேட்டை தமிழ் இலக்கியங்களில் வகைப்படுத்தப்பட்ட நிலப்பகுதியில் இல்லாத பகுதி. எந்தவிதத் திணைக்கோட்பாடுகளுக்கும் உட்படாதது. இந்தப் பேட்டையில் உள்ள மக்களும் அவர் களின் வாழ்க்கையும் மொழியும் பொதுப்புத்திகளில் சித்திரிக் கப்பட்ட வகைமாதிரி அல்ல' என்று நுணுக்கமான தன் வர்க் கப்பார்வையை முன்வைப்பவர்.

லண்டனில் நடைபெற்ற மிகப்பல இலக்கிய, அரசியல் கூட்டங் களில் நாங்கள் பங்குபற்றிப் பேசியிருக்கிறோம். பெரியார்மீது தமிழகத்தில் அவதூறுப் பிரச்சாரம் நிகழ்த்தப்பட்டபோது, அதனைக் கண்டித்து, நாங்கள் பவுசரின் நூல் விற்பனைக் கூடத்தில் கூட்டம் நடத்தியபோது, சீமானின் லும்பன் கூட்டம் நுழைந்து காடைத்தனம் பண்ணிய வேளையில், தோழர் வேலு, மீனாள் நித்தியானந்தன், ராகவன் ஆகியோருடன் நானும் கடும் வாதத்தில் இறங்கினோம். நிலைமை மோசமான நிலையில் போலீசார் வந்து அந்தக் காடைக்கூட்டத்தை வெளியேற்றி

யது. மோதலாக வெடிக்கும் அந்தச் சூழலில் தோழர் வேலு, உறுதியாகவும் நிதானத்துடனும் தீர்க்கமாகப் பதில் அளித் தார். எந்தக் கூட்டத்திலும் தோழர் வேலுவின் பிரசன்னம் பிர காசமாயிருக்கும்.

மகாராஷ்டிர மாநிலத்தில், பூனேயில், பீமா கொரேகானில் 2018, ஜனவரி முதலாந் திகதி தலித் செயற்பாட்டாளர்களுக் கும் இந்துத்துவ ஆதிக்கசாதி பேஷ்வா வலதுசாரிகளுக்கும் இடையே மூண்ட வன்முறையில், வழக்கறிஞர்கள், பத்திரிகை யாளர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், சமூகப்போரா ளிகள் என 16 பேர் கைது செய்யப்பட்டார்கள். இவர்கள் இந் தியப் பிரதமர் நரேந்திர மோடியைக் கொலை செய்யச் சதித் திட்டம் தீட்டினர் என்று, பத்தாயிரம் பக்கக் குற்றப்பத்திரி கையைத் தாக்கல் செய்து சிறையில் அடைத்தனர். சிறையில் அடைக்கப்பட்ட என்ற 83 வயதான ஸ்டான் சுவாமி, போதிய மருத்துவ வசதி இன்றி சிறையிலேயே மரணித்தார். ஸ்டான் சுவாமி அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வரு கைதந்திருந்தபோது, அவரோடு நான் உரையாடி இருக்கி றேன். எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போதுதான் ஒருவர் தவிர, 14 பேருக்குப் பிணை கிடைத்து, வெளியில் வந்துள்ளனர்.

சீரிய அம்பேத்கரியரான தோழர் வேலு, BK16 எனப்படும் இந்த இந்திய அரசின் அராஜகக் கைது நடவடிக்கைகளைக் கேட் டுக் கடும் அறச்சீற்றம் கொண்டிருந்தார். 1818-ஆம் ஆண்டு ஜனவரி முதலாந் திகதி பூனேயில், பீமா கொரேகானில், பார்ப் பனிய-பேஷ்வாக்கள் என்ற அடக்குமுறை ஆதிக்க சாதியின ருக்கும், தீண்டப்படாத மஹார் சிப்பாய்களைக் கொண்ட கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் இடையே நடந்த போரில், பேஷ் வாக்களை வென்று, மஹார் குழுமத்தினர் வெற்றிவாகை சூடி னர். அந்தப்போரில் மரணித்த மஹார் இனச் சிப்பாய்களுக்கு வெற்றித் தூணும் அந்த இடத்தில் நிர்மாணிக்கப்பட்டது. பாபாசாஹிப் அம்பேத்கர் 1927-ஆம் ஆண்டு, ஜனவரி முதல் திகதி பீமா கொரேகானுக்குச் சென்று, மறைந்த மஹார் தியா கிகளுக்கு வீரவணக்கம் செலுத்தியுள்ளார். ஒவ்வோராண்டும் தலித் அமைப்பினர் அங்கு கூடிச் சங்கமிக்கும் களமாக அது மாறியது. அந்த வெற்றித் திருநாளின் 200-ஆவது ஆண்டு நிறைவினை, 2018 ஜனவரி முதலாந் திகதி பெருமளவில் தலித் மக்கள் திரண்டு கொண்டாடிய வேளையில்தான், பேஷ் வாக் குண்டர்கள் திட்டமிட்டு வன்முறையில் ஈடுபட்டு, கலவ ரத்தை உருவாக்கினார்கள். இக்கலவரத்தை உருவாக்கி, பிர தமரைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டினர் என்று சமூகப் போராளிகளைக் கைது செய்த செயலால் தோழர் வேலு பெரும் மனக்கிலேசங் கொண்டிருந்தார். கைது செய்யப்பட்டிருந்த போராளிகளில் ஒருவரான புரட்சிகரத் தெலுங்குக் கவிஞரான வரவர ராவ் அவர்கள் தோழர் வேலுவிற்கு மிகவும் பரிச்சயமான தோழராவார். ஆயிரம் மைல் தொலைவில் இருந்தாலும், கைது செய்யப்பட்ட தோழர்களின் சிறைத் துயரைத் தோழர் வேலு நெஞ்சில் சுமந்தார். பெருந்துயரமும் சினமும் அவரை ஆட்கொண்டிருந்தன. போராட்டம் எங்கேயோ, அடக்குமுறை கள் எங்கேயோ அங்கெல்லாம் தோழர் வேலுவின் இதயம் ஊன்றிநின்றது.

பீமா கோரேகான் வன்முறையில் கைதுசெய்யப்பட்டவர்கள்

முற்போக்குச் செயற்பாட்டாளர்களை மாஓயிஸ்டுகள் என்று முத்திரை குத்தி, அவர்களுக்குப் பிணையும் வழங்காது, போலிஸ், அரசு, நீதிமன்றம் அனைத்தும் இணைந்து நடத்திக் கொண்டிருந்த அராஜகத்தைப் பார்த்து, தோழர் வேலு மனங் கொதித்தார்.

சிறைவைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் சிறையில் மோச மாக நடத்தப்பட்டு வருவதைக் கண்டு அந்த நல்ல மனிதரின் நெஞ்சம் வாடியது. இந்த வழக்கின் போக்கினை தோழர் வேலு தொடர்ந்து அவதானித்து வந்தார். டில்லிப் பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் ஹனி பாபுவின் கைது பற்றி, ஆனந்த் டெல்டும்ப்டே, கௌதம் நவ்லகா பற்றித் தொடர்ந்து தனது முகநூலில் தோழர் வேலு பதிவிட்டு வந்தார். பொய்வழக்குப் போடப்பட்டு பத்தாண்டுகள் சிறைவாசம் அனுபவித்து, வெளி யில் வந்த பேராசிரியர் சாய்பாபாவின் மறைவினைத் தனது பதிவில் கொணர்ந்து, அஞ்சலி செலுத்தியிருந்தார் தோழர் வேலு.

பீமா கொரேகான் வழக்கில் கைது செய்யப்பட்ட சமூகச் செயற் பாட்டாளர்கள் அனுபவிக்கும் சிறைக்கொடுமைகளை விபரிக் கும், அல்பா ஷா எழுதிய The Incarcerations என்ற ஆங்கில நூலின் தமிழாக்கத்தை, தோழர் வேலு நம் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

ஜெய்பூர் மாவட்டத்தில், நக்சலைட் போராளியான தோழி சுகுணா இந்திராவதி நதியில் தன்னை மாய்த்துக் கொண்ட சோகத்தை, தோழர் வேலு பதிவு செய்திருந்தார்.

ஜவஹர்லால் பல்கலைக்கழகத்தில் கைது செய்யப்பட்ட உமர் காலித், சர்ஜீல் இமாம் ஆகிய மாணவர் தலைவர்கள் கைது செய்யப்பட்ட கொடுமையை, தோழர் வேலு தொடர்ந்து சாடி வந்திருக்கிறார்.

பிரிட்டிஷ் மியூசியத்தில் புராதன மத்திய கிழக்குக் கலைக் கூடத் தில், 'பாலஸ்தீனம்' என்ற சொல் காலமுரண் (anachronic) கொண்டது என்று நீக்கப்பட்டது என்ற செய்தியை, தோழர் வேலு நம் கவனத்திற்குக் கொண்டு வருகிறார். நம் சாதாரண வாழ்வின் ஓட்டத்தில், நாம் கண்டுகொள்ளாமல் விடுகிற கோரங்களை, அவலங்களை, சூசகமான நச்சு வலைகளை, தோழர் வேலு நுணுக்கமாக அவதானித்து நம் அக்கறைக்கு உட்படுத்துகிறார்.

தனது முகநூலுக்கு 'மனிதன் முகம்' என்று அழகிய பெயரிட் டார். அவரது முகநூல் பதிவுகளில் வெற்று அரட்டைகள் இடம் பெறுவதில்லை. தாங்கள் சமைத்த பருப்பு சாம்பார், தாங்கள் விடுமுறையில் கொழும்பின் ஐந்து நட்சத்திர நீச்சல் தடாகங் களில் நீச்சல் அடிக்கும் படங்களை அவரின் முகநூல் பதிவில் காண்பதற்கில்லை.

அவர் இந்த உலகின் மனிதன் முகமாக நின்றார்; ஏழை மக் களின் கண்ணீரில் அவர் நிறைந்திருந்தார்; அதிகாரத்திற்கு எதிரான ஆதிவாசிகளின் போராட்டத்தில் அவர் தோய்ந்திருந் தார்; இந்தியச் சிறைகளில் வாடும் அரசியல் தோழர்களின் துயரில் அவர் கரைந்திருந்தார்; அடிமட்ட மக்களின் ஜீவாதா ரத்திற்கான குரல்கள் எங்கு ஒலித்தனவோ அங்கெல்லாம் அவரின் தாபம் நிறைந்திருந்தது; போர்த்துக்கலில் தொழிலா ளர் போராட்டம் நடத்தியபோது, அவர்களின் நெருக்கமான தோழராகத் தன்னை இனங்காட்டினார்; பாசிசப் போக்குகள் விடுதலை இயக்கத்தில் தலை தூக்கும்போதெல்லாம் அவற்றை எளிதாக இனங்காணும் நுண்ணறிவு கொண்டிருந்தார்; அடக் குமுறைகளுக்கு எதிரான போராட்டத்தில் அவர் என்றும் முன் னணியில் நின்றிருக்கிறார்; அரசியல் கலந்துரையாடல்களில், எந்தப் பிரச்சினையையும் தொழிலார் வர்க்கக் கண்ணோட்டத் தில் நின்று அணுகும் போக்கிலிருந்து அவர் விலகிச் சென்றது கிடையாது; மாற்றார் கருத்தை மதித்து, தனது தர்க்கத்தை அவர் வலியுறுத்துபவர்; 'தேடிச் சோறு நிதந்தின்று' வாழும் வேடிக்கை மனிதரல்ல அவர்; மானிடர் இங்கு நல்ல வாழ்வு வாழும் அற்புதக் கனவினை நெஞ்சில் சுமந்து திரிந்தவர்; அனைத்து தரப்பு மக்களையும் அரவணைத்துச் செல்லும் வசீகரம் அவரிடமிருந்தது.

அவர் வாழ்வெல்லாம் போராட்டமாயிருந்தது. இந்தியச் சிறை களில் அவரின் இளவயது வாழ்க்கை கழிந்தது. பிரிட்டனில் அவருக்கு அகதி அந்தஸ்து கிடைத்து அவர் பிரிட்டிஷ் பிரஜை ஆனார். இந்திய அரசு இண்டர்போலுக்கூடாக அவரைப் பயங் கரவாதி என்று அவர்மீது நாடுகடத்தும் வழக்கைத் தொடர்ந் தது. இந்திய அரசு எந்த வழக்குகளை இவர்மீது தொடர்ந் ததோ, அதே வழக்குகளை முன்வைத்தே பிரித்தானிய அரசு, அவற்றை ஏற்றுக்கொண்டு அவருக்கு பிரித்தானிய பிரஜை என்று அங்கீகாரம் வழங்கியது. ஆனால், அதே குற்றவழக்கு களை முன்வைத்து, தோழர் வேலு மீது இந்திய அரசு வழக் குத் தொடர்ந்தபோது, 'அகதியாய் இருந்தபோது ஏற்றுக் கொள்ளப்பட்ட மனு, பிரித்தானிய பிரஜை ஆன ஒருவருக்குப் பாதுகாப்பு வழங்காது; அவர் மீதான குற்றச்சாட்டு வழக்கினை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளலாம்' என்று நீதி மன்றம் அறுதியிட்டது. தோழர் வேலுவின் நண்பர் வட்டம் அதிர்ந்து போனது.

மூன்றாண்டுகளுக்கு மேலாக நீடித்த வழக்கு இறுதியில் வெற் றிகரமாக முடிந்தது என்று தோழர் வேலு நீதிமன்றிலிருந்து எனக்கு அறிவித்தபோது நான் சிந்தை நிறைந்தேன். ஆனால், இண்டர்போல் விரித்த வலையில் சிக்காது மீண்ட தோழர் வேலு, காலன் விரித்த வலையில் சிக்கிக்கொண்ட சோகம் நம் மனதைவிட்டு என்றும் அகலாது. எங்கெல்லாம் அநீதிக்கு எதிரான போராட்டம் ஒலிக்கின்றதோ, அங்கெல்லாம் மந்த காசப் புன்னகையோடு நீ ஒளிர்வாய், என் தோழனே!

nithiyananthan.m@thaiveedu.com

வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்

VASANTHAM TAMIL WELLNESS CENTRE

PRESENTS

சமூக உளவளம் பேணும் தொடர் - 117

Psychosocial Educational Series-117

VASANTHAM
HEALTH & WELLNESS CENTRE

புற்றுநோயைத் தடுக்கலாமா?
How can We Prevent Cancer?

June 1, 2026 (Monday)

Canada EST: 7:00pm - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 4:30a.m - 6:30am (Tuesday)

Zoom ID: 918 584 6813

No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588

Prof. Sri Navaratnam, MBBS, PhD, FRCPC
Professor of Internal medicine, university of Manitoba
Medical oncologist CancerCare Manitoba
Past president and CEO of Cancercare Manitoba
Strategic advisor, JMFOA Canada

ஒவ்வொரு முதலாம் மூன்றாம்
திங்கட்கிழமைகளில்
எங்களுடைய சூம் தொடரில்
இணைந்துகொள்ளுங்கள்

Join us via zoom: CLICK HERE or go to link below in the email

Hosted by
Dr. Parvathy Kanthasamy

CONTACT US: 416-847-4172

VASANTHAM **647-374-4685**
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW **VASANTHAM.CA**

சீரிய திரைப்பட முன்னோடி அருண் சிவகுமாரன்

ரதன்

tg.theeban@gmail.com

கனடா வாழ் தமிழ் இலக்கிய மற்றும் திரைப்பட உலகின் குறிப்பிடத்தக்க ஆளுமையான அருண் சிவகுமாரன் அவர்களின் மறைவு செய்தி, தமிழ் கலை - இலக்கிய வட்டாரங்களுக்கும், குறிப்பாக சீரிய திரைப்பட இயக்கத்தில் ஈடுபட்டவர்களுக்கும் பேரதிர்ச்சியையும் ஆழ்ந்த துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தாய்வீடு குடும்பத்தாருடனும் அவர் கொண்டிருந்த நீண்டகால நெருக்கமான உறவு, இந்த இழப்பை இன்னும் கனமாக உணரச் செய்கின்றது. ஒரு எழுத்தாளராக மட்டுமல்லாது, சினிமாவை ஒரு சமூக மொழியாகவும் கலாச்சார வெளிப்பாடாகவும் கருதிய சிந்தனையாளராகவும் அவர் நினைவுகூரப்படுகிறார்.

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அருளானந்தம் சிவகுமாரன், 'அருண்' என்ற பெயரால் இலக்கிய, திரைப்பட உலகில் பரவலாக அறியப்பட்டவர். கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக கனடாவில் வாழ்ந்த அவர், புலம்பெயர் தமிழ் சமூகத்தின் கலை, இலக்கிய மற்றும் திரைப்பட வளர்ச்சியில் தனித்துவமான பங்களிப்பைச் செய்துள்ளார். கனடாவில் அவர் தனது இலக்கியப் பயணத்தை தாயகம் இதழின் மூலம் ஆரம்பித்தார். தாயகத்தை தொடர்ந்து பல பத்திரிகைகள், சஞ்சிகைகள். இணைய இதழ்களில் அருணின் ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

குறிப்பாக சினிமா குறித்த அவரது எழுத்துகள் தனித்துவமானவை. திரைப்படத்தை வெறும் பொழுதுபோக்காக அல்லாது, ஒரு சமூக ஆவணமாகவும் கலை வடிவமாகவும் அணுகியவர் அருண். திரைப்பட மொழி, திரைக்கதை அமைப்பு, காட்சி வடிவமைப்பு போன்ற பல பரிமாணங்களில் அவர் எழுதிய கட்டுரைகள், கனடிய தமிழ்ச் சினிமாவுக்கான சிந்தனைக் களத்தை உருவாக்கியவை எனலாம்.

கூர் இலக்கிய இதழில் அவர் எழுதிய கனடிய தமிழ்த் திரைப்படங்கள் குறித்த விரிவான ஆய்வுக் கட்டுரை, இத் துறைக்கான ஒரு முக்கிய ஆவணமாகக் கருதப்படுகிறது. அந்தக் கட்டுரை வெறும் விமர்சனமாக இல்லாமல், புலம் பெயர் தமிழ்த் திரைப்படங்களின் ஆரம்பகால முயற்சிகள், அதன் பலவீனங்கள், எதிர்கால வாய்ப்புகள் ஆகியவற்றை பதிவு செய்த வரலாற்றுப் பதிவாகவும் அமைந்தது குறிப் பிடத்தக்கது.

திரை எனும் திரைப்பட இதழின் ஆசிரியராகவும் அவர் பணி யாற்றினார். சினிமாவைப் பற்றிய தரமான விவாதங்கள் உருவாக வேண்டும் என்ற நோக்கில் அந்த இதழை அவர் வழிநடத்திய விதம் பலராலும் பாராட்டப்பட்டது. எழுத்தாளர் தேவகாந்தன் பிரதம ஆசிரியராக இயங்கிய கூர் இதழின் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் அருண் செயற்பட்டார்.

2011-ஆம் ஆண்டில் அவர் எழுதிய ஒரு முக்கிய கட்டுரை யில், 'ஒரு சில குறும்படங்களைத் தவிர்த்து, பலவும் முறைப் படி எழுதி, சரிபார்க்கப்பட்ட திரைக்கதை பிரதியைக்கொண்டு உருவாக்கப்பட்டதாக அனுமானிக்க முடியாதுள்ளமை கவலையளிக்கின்றது' என்று புலம்பெயர் சினிமா பற்றி குறிப்பிட்டிருந்தார். இந்தக் கருத்து அவரது திரைப்படப் பார்வையை வெளிப்படுத்துகின்றது. சினிமா என்பது வெறும் தொழில்நுட்ப முயற்சி அல்ல; உறுதியான சிந்தனை, கட்ட மைப்பு, கலை ஒழுங்கு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாக இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையோடு அவர் இயங் கினார்.

அந்தக் கருத்தின் தொடர்ச்சியாக தாய்வீடு இதழ் நடத்திய திரைக் கதை எழுதும் போட்டியில் இணைந்து செயல்பட் டார். Our Visual Art Media (OVAM)) என்ற அமைப்பினூ டாக தாய்வீட்டின் திரைக்கதை போட்டியை அதன் தேர் வாளராக, நடுவராக திறன்படச் செயல்படுத்தினார்.

Our Visual Art Media (OVAM) மூலம் நடத்தப்பட்ட திரைக் கதை எழுதும் போட்டி, அக்காலத்தில் பெரும் வரவேற் பைப் பெற்றது. நூற்றுக்கும் மேற்பட்டோர் அதில் கலந்து கொண் டது, தமிழ் சமூகத்தில் தரமான திரைப்பட முயற்சி களுக்கான ஆர்வம் இருந்ததை வெளிப்படுத்தியது. இந் தப் போட்டி பல இளம் படைப்பாளிகளை ஊக்குவித்த தோடு, எம்மவர் சினிமா வில் ஒரு புதிய சிந்தனையை உரு வாக்க உதவியது.

இதனோடு அவர் தனது பணியை நிறுத்தவில்லை. சுயா தீன திரைப்பட மையமும் தாய்வீடு இதழும் இணைந்து சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தி வந்த சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவில், திரைப்படத் தேர் வாளர், நடுவர், விழாத் திரையிடல் இயக்குநர் போன்ற பல பொறுப்புகளை ஏற்று அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். உலகின் பல பாகங்களிலிருந்து வந்த தமிழ்த் திரைப் படங்களை ஆராய்ந்து, தரமான படைப்புகளை முன்னி றுத்துவதில் அவர் காட்டிய அக்கறை குறிப்பிடத்தக்கது. புதிய திரைப்பட இயக்குநர்கள், திரைக்கதை ஆசிரியர் கள் மற்றும் குறும்பட படைப்பாளிகள் பலர் அவரது வழி காட்டுதலால் ஊக்கமடைந்துள்ளனர்.

ரொரன்ரோவில் இயங்கி வரும் கனடியத் தமிழ்த் திரைப் பட மேம்பாட்டு மையம் அமைப்பின் ஐந்து பேர் கொண்ட இயக்குநர் சபையிலும் அவர் இயக்குநராக பணியாற்றியுள் ளார். புலம்பெயர் சமூகத்தில் திரைப்படத்தை ஒரு சீரிய கலை இயக்கமாக மாற்ற வேண்டும் என்ற கனவை அவர் தொடர்ந்து முன்னெடுத்தார்.

அவர் இயக்கிய அஃகம் குறும்படம் சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு பாராட்டைப் பெற் றது. விமர்சகர்களாலும் திரைப்பட ஆர்வலர்களாலும் கவ னிக்கப்பட்ட அந்தப் படம், அவரது கலைநோக்கையும் திரைமொழி பற்றிய புரிதலையும் வெளிப்படுத்தியது. மேலும் பல புலம்பெயர் தமிழ்த் திரைப்படங்களுக்கு அவர் திரைக் கதை எழுதியுள்ளார்.

திரைப்படம் மட்டுமல்லாமல், விளையாட்டிலும் அருண் ஆர்வமிக்கவராக இருந்தார். யாழ். பரியோவான் கல்லூரி பழைய மாணவரான அவர், கல்லூரி துடுப்பாட்ட அணி யில் இடம்பிடித்திருந்தார். ஒரு வேகப் பந்து வீச்சாளராக விளங்கிய அவர், துடுப்பாட்டம் குறித்தும் பல சுவாரஸ்ய மான கட்டுரைகளை எழுதியுள்ளார். குறிப்பாக உலகக் கிண்ணப் போட்டிகள் குறித்த அவரது எழுத்துகள் விளை யாட்டின் தொழில்நுட்பம், உளவியல் மற்றும் ரசனையை இணைத்துச் சொல்லும் தன்மையுடையவை.

'எமக்கான சினிமாவிற்கான தனித்துவமான திரை மொழி உருவாக்கப்பட வேண்டும்' என்ற நம்பிக்கையோடு நீண்ட காலமாக இயங்கிய அருண் சிவகுமாரன், கனடாவில் தமிழ்ச் சினிமாவை ஒரு சீரிய கலாச்சார இயக்கமாக மாற்ற முயன்ற முன்னோடிகளில் ஒருவராக நினைவுகூரப்படு வார். திரைப்படத்தை நேசித்தவர் மட்டுமல்ல, அதை சமூ கப் பொறுப்போடும் கலைத் தரத்தோடும் வளர்க்க வேண் டும் என்று வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர் அவர்.

அவரது மறைவு, கனடிய தமிழ்த் திரைப்பட மற்றும் இலக் கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவரது நினைவுகளும் பங்களிப்புகளும் புலம்பெயர் தமிழ்ச் சமூ கத்தின் கலை வரலாற்றில் நிலைத்திருக்கும்.

rathan@thaiveedu.com

எம்.எம். ஜெயசீலன்

அந்தனி ஜீவா: மலையக அடையாளத்தின் சமரசமற்ற குரல்

மலையகத் தமிழ் இலக்கியங்களையும் இலக்கியக் கர்த்தாக்களையும் ஆத்மார்த்தமாக நேசித்த அந்தனி ஜீவா, கருத்தியல் பேதங்களுக்கு அப்பால் படைப்பாளிகளையும் ஆய்வாளர் களையும் ஊக்குவித்தவராவார். எழுத்து, பதிப்பு, தொகுப்பு, இதழியல், அரங்கியல், இலக்கியச் செயற்பாடு எனப் பல தளங்களில் சோர்வற்று இயங்கிய அவர், தன் கருத்துகளை ஒழிவு மறைவின்றி துணிச்சலுடன் வெளிப்படுத்தி வந்துள்ளார். தமிழ் இலக்கிய உலகில் தனக்கெனத் தனிமுத்திரையைப் பதித்துக்கொண்டவர்களுள் அவரும் ஒருவராவார். அம்முத்திரை, மலையகக் கலை இலக்கியத்தின் முன்னணி அடையாளங்களுள் ஒருவராக அவரை முன்நிறுத்தியதுடன் மலையகக் கலை இலக்கியப் பிரதிநிதியாக அவரை எங்கும் வலம்வரச் செய்தது. தமிழ் இலக்கிய உலகமும் மலையகக் கலை இலக்கியப் பிரதிநிதியாக அவரை ஏற்றுக்கொண்டது, அவருக்கான இடத்தை வழங்கியது. இந்த அடையாளத்துக்கு அவர் எவ்வாறு வந்தடைந்தார், அவர் முன்னெடுத்த எத்தகைய செயற்பாடுகள் மலையகக் கலை இலக்கிய அடையாளமாக, பிரதிநிதியாக அவரை நிலைநிறுத்தின என்பன குறித்த அறிதல், அந்தனி ஜீவா எனும் ஆளுமையை மதிப்பிடுவதற்கு அவசியமானதாகும்.

தெளிவத்தை ஜோசப், சாரல்நாடன் ஆகியோருடன் இணைத்து மலையகக் கலை இலக்கிய முகமாக அந்தனி ஜீவா பேசப்பட்டாலும் தெளிவத்தை ஜோசப், சாரல்நாடன் ஆகியோரைவிட அந்தனி ஜீவாவின் தொடர்புகளும் அத்தொடர்புகளாலான அறிமுகங்களும் வெவ்வேறு தளங்களில் பரந்து விரிந்திருந்துள்ளன. மலையகத்தின் கலை இலக்கியப் பிரதிநிதியாக

tg.theeban@gmail.com

இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் பல நிகழ்வுகளில் அவர் கலந்துகொண்டுள்ளார். இரு பிராந்தியங்களிலும் மலையக கலை இலக்கிய நிகழ்வுகளை ஒருங்கிணைத்துள்ளார். சிங்களச் சமூகத்தினருடனும் அந்தனி ஜீவா நெருங்கிய ஊடாட்டத்தைப் பேணியுள்ளார். களச் செயற்பாட்டாளர் என்ற வகையில் பரந்த வலையமைப்பைக் கொண்டிருந்துள்ளார்.

தெளிவத்தை ஜோசப், சாரல்நாடன் ஆகியோருடைய பங்களிப்புகளுடன் அந்தனி ஜீவாவின் பங்களிப்புளை மேலோட்டமாக ஒப்பிட்டு நோக்கும்போதே, தெளிவத்தை அளவுக்கு அந்தனி ஜீவா படைப்பிலக்கியம் செய்தவர் இல்லை. சாரல் நாடன் அளவுக்கு ஆழமான ஆய்வுகளில் ஈடுபட்டவரும் இல்லை என்பதை அறிந்துகொள்ளலாம். அவ்வாறு இருக்கும் போது, அவருக்கான அடையாளம் எவ்வாறு உருப்பெற்று நிலைபெற்றது என்பது முக்கியமான கேள்வியாக மேலெழுகிறது. அந்தனி ஜீவா பல்வேறு தளங்களிலும் மலையகக் கலை இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டமைக்கு அப்பால், தன்னை மலையகத்தின் அடையாளமாக முன்நிறுத்தி, மலையகத்தின் குரலாய் - மலையகத்துக்கான குரலாய்ச் சமரசமற்ற வகையில் எங்கும் ஓங்கி ஒலித்தமை அவரின் அடையாளம் - தனிமுத்திரை உருவாக்கத்தில் முதன்மைக் காரணமாகத் தொழிற்பட்டுள்ளது எனலாம்.

மலையக மக்களிடையேயே மலையக அடையாளத்தை ஏற்றுக்கொள்ளும் குழுவினரும் அவ்வடையாளத்தை நிராகரிக்கும் குழுவினரும் இருக்கின்றனர். அண்மைய சனத்தொகைக் கணக்கெடுப்பு, பெருந்தொகையான மலையக மக்கள் தம் சுய அடையாளத்தைவிட்டு வெளியேறியுள்ளனர் என்பதை வெளிப்படுத்தி நிற்கிறது. இவ்வெளியேற்றத்தில் வர்க்கநிலை மாற்றம் உள்ளடங்கலாக வெவ்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. அதேவேளை, மலையக அடையாளத்தை ஏற்றுக்கொள்பவர்கள் எல்லோரும் சமூக யதார்த்த தளத்தில் நின்றும், ஆத்மார்த்த பிணைப்புடனும் அதனை ஏற்றுக்கொண்டனர் எனக் கூறுவதற்கு இல்லை. மலையக அடையாளத்தை இலாபந்தரும் ஒன்றாகக் காணும் பிழைப்புவாதக் குழுவினரும் உள்ளனர். அதில், அரசியல்வாதிகள், தொழிற்சங்கவாதிகள் முதல் அரச சார்பற்ற நிறுவனக்காரர்கள், கல்வியலாளர்கள் வரை உள்ளடங்கியுள்ளனர். அவர்களுக்கு மாறாக மலையக அடையாளத்துடன் ஆத்மார்த்த பிணைப்பை ஏற்படுத்திக்கொண்ட குழுவினர், அந்த அடையாளத்தை உணர்வுபூர்வாகப் பேணி வருகின்றனர்; அவர்கள் தம் இலாபங்களுக்காக மலையக அடையாளத்தை அடமானம் வைப்பவர்களோ சமரசம் செய்துகொள்பவர்களோ இல்லை; இடத்துக்கேற்ப தம் அடையாளத்தை மாற்றிக்கொள்பவர்களும் இல்லை. அக்குழுவிலிலேயே அந்தனி ஜீவா அடங்குகிறார்.

பெருந்தோட்டப் பகுதிகளிலிருந்து கொழும்பில் குடியேறுபவர்களுள் ஒரு தொகுதியினர் தம் அடையாளத்தை மறைத்து, மலையகத்திலிருந்து அந்நியமாகிச் செல்லும் நிலைமை வேகமாக வளர்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது. அதனையே அல் அஸ்மத் தன்னுடைய சிறுகதையொன்றில், 'கொழும்புக்கு வந்தவுடன் சில ஜீவன்கள் கொள்ளுப்பிட்டியிலோ குருந்துவத்தையிலோ பிறந்து கொள்வதைப் போல் என்னால் முடியவில்லை...' எனக் கிண்டலாக வெளிப்படுத்தியுள்ளார். இப்போக்கிற்கு மாறாக, கொழும்பில் பிறந்து வளர்ந்த அந்தனி ஜீவா தன்னை மலையக அடையாளத்துடன் நெருக்கமாகப் பிணைத்துக்கொண்டுள்ளார். கலை இலக்கியத் துறையில் மலையக அடையாளத்தைச் சமரசமற்ற வகையில் தன் காலம் முழுதும் இறுகப் பற்றிப் பயணித்துள்ளார். அத்துடன் அந்த அடையாளத்தின் இருப்பை நிலைநிறுத்தவும், பரவலாக்கவும் தொடர்ந்தும் செயற்பட்டுள்ளதுடன் அவற்றுக்காகத் துணிச்சலுடன் போராடியும் உள்ளார்.

மலையகத்துக்கான இடம் மறுக்கப்படுகின்றபோது அல்லது மறுக்கப்படுவதாகத் தான் உணருகின்றபோது தர்க்கபூர்வமாகவும் தர்க்கங்களைக் கடந்தும் அந்தனி ஜீவா எதிர்வினையாற்றி வந்துள்ளார். அவருடைய சமகால இலக்கியவாதிகள் பலரும் எதிர்வினையாற்றாது தயங்கிநின்றவேளையிலும் உணர்ச்சி வசப்பட்டு கொந்தளிக்காத தருணங்களிலும் அவர் எவ்வித சமரசமுமற்று தன் மறுப்பைத் தெரிவித்து வந்துள்ளார். உணர்ச்சி வசப்பட்டு நேரடியான வாதங்களில் ஈடுபட்டுள்ளார், முரண்பட்டுள்ளார், பொதுவெளியிலும் தன் எதிர்ப்பைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி வந்துள்ளார். அப்போக்கு அவரைத் தனித்து அடையாளங் காட்டியதுடன் மலையகத்தின் குரல் எனும் அடையாளத்துக்குப் பரவலான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளது. உதாரணமாக, ஸ்ரீ. பிரசாந்தன் தொகுத்த இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் நூல் வெளிவந்தபோது, அத்தொகுப்பில் மலையகத்துக்கான இடம் போதியளவு கொடுக்கப்படவில்லை என்ற எதிர்ப்பை அந்தனி ஜீவா முன்வைத்தமையைக் குறிப்பிடலாம். அந்த எதிர்வினையை ஏற்றும் நிராகரித்தும் வாதங்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொருவரும் தத்தம் நியாயப்பாடுகளை முன்வைத்துள்ளனர். அவற்றையெல்லாம் கடந்து, அந்தனி ஜீவா தன் எதிர்வினையை எந்தத் தளத்தில்நின்று வெளிப்படுத்தினார் என்பதை அவதானிக்கும்போது, அவர் தன்னை மலையகக் கலை இலக்கியக் குரலாக, அதனோடு உணர்வுபூர்வமான பிணைப்பைக் கொண்டவராக முன்நிறுத்தியுள்ளமையைக் கண்டுகொள்ள முடிகிறது. அவ்வாறே, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 'பிரித்தானியர் ஆட்சியும் நவீனமயமாதலும்' என்ற பொருண்மையில் நடத்திய சர்வதேசக் கருத்தரங்கில், மலையகம் தொடர்பான கட்டுரைகள் எவையும் இடம்பெறாமையைச் சுட்டிக்காட்டி, தன் விசனத்தை அவர் வெளிப்படுத்தியிருந்தார். இத்தகைய எதிர்வினைகளும் ஆவேசமும் அவரின் அடையாளத்தை வலுப்படுத்தின எனலாம்.

அரச திணைக்களங்களிலும் ஏனைய பொது நிகழ்வுகளிலும் மலையகத்தின் குரலாய் ஒலித்துள்ள அவர், அரச அதிகாரிகள், கல்வியலாளர்கள், எழுத்தாளர்கள், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் என யாவரிடமும் வெளிப்படையாகவே முரண்பட்டுள்ளார். சரி, பிழை என்பவற்றையெல்லாம் ஆராய்ந்தறியாமல் உடனடியாக எதிர்வினையாற்றியுள்ள அவர், அவ்வொவ்வொரு சந்தர்ப்பத்திலும் தன்னை, தனக்கான இடத்தை முன்நிலைப்படுத்தாது, ஒட்டுமொத்த மலையகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். மலையகம் புறக்கணிக்கப்படுகிறது, மலையகத்துக்கான இடம் மறுக்கப்படுகிறது, மலையகத்துக்கான போதிய இடம் வழங்கப்படவில்லை

முதலான கோரிக்கைகளை அவர் மீள மீள வலியுறுத்தி வந்துள்ளதைக் கண்டுகொள்ள முடிகிறது. எவ்விடத்திலும் எவரிடமும் எந்த அதிகாரப் பீடத்துடனும் மலையக அடையாளத்தைச் சமரசம் செய்துகொள்ளாத அவர், தன் நிலைப் பாட்டைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி வந்துள்ளார். இப் போக்கினால், கல்வித்துறை சார்ந்த சிலர் அந்தனி ஜீவா மீது ஓர் ஒவ்வாமை கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் இடம்பெறுகின்ற நிகழ்வு கள், கருத்தரங்குகள் முதலானவற்றில் அவர் நேரடியாகக் கலந்துகொண்டு உரைகள் நிகழ்த்தியுள்ளதுடன் கருத்து களையும் பகிர்ந்துள்ளார். அதன்போதெல்லாம், அவரிடம் மலையகத்தின் குரலாய், மலையகத்துக்கான குராலாய் ஒலிக்கும் தன்மையே வெளிப்பட்டுள்ளது. தான் செல்லும் இடங்களெல்லாம் மலையக நூல்களைச் சுமந்து சென்று அவற்றைப் பரவலாக்கும் செயற்பாடுகளையும் அவர் தொடர்ந்தும் மேற்கொண்டு வந்துள்ளார். தமிழ்நாட்டில் மலையக நூல்களைப் பரவலாக்கியதில் அவரின் பங்களிப் பும் முக்கியமானதாகும். அவ்வாறே, தன் சிங்கள நண்பர்கள் வட்டத்தில் பகிர்ந்துகொண்ட கருத்துகளும் செயற்பாடு களும் தமிழ்ச் சமூகத்துக்கு வெளியேயும் அவருக்கான மலையக அடையாளத்தை ஸ்திரப்படுத்தின. ஜே.வி.பி. உடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றிய அவர், அக்கட்சி சார்ந்த செயற்பாடுகளிலும் தன் மலையக அடையாளத் தைச் சமரசம் செய்துகொள்ளவில்லை. மலையகத் தொழி லாளர் வர்க்கக் குரலாகக் கட்சிச் செயற்பாடுகளில் அவர் ஈடுபட்டு வந்துள்ளமையை அறியமுடிகிறது.

இலக்கியச் செயற்பாட்டாளன் என்ற வகையில் மலையக இலக்கியம் குறித்த உரையாடல்களை, இளம் படைப்பாளி களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை அவர் தொடர்ந்தும் முன்னெடுத்து வந்துள்ளார். காந்திகிராம கிராமிய பல்கலைக் கழகம் முதலான நிறுவனங்களுடன் இணைந்து மலையகம் பற்றிய ஆய்வரங்குகளை முன்நின்று நடத்தியுள்ளார். இவை அவரின் அடையாளத்தை விரிந்தளவில் பரவலாக்கியதுடன் அவரை மலையகப் பிரதிநிதியாக முன்நிறுத்தின.

ஓர் இதழாசிரியன் என்ற வகையில் 'குன்றின் குரல்', 'கொழுந்து' ஆகியவற்றை நீண்டகாலமாக வெளியிட்டுள்ளதுடன் அவற் றுள் மலையக கலை இலக்கியங்கள் குறித்து தொடர்ந்தும் சிறு சிறு குறிப்புகளை எழுதியுள்ளார். இளம் படைப்பாளி களை ஊக்குவித்து அவர்களுக்கான களத்தினை அமைத் துக் கொடுத்துள்ளார். இளம் படைப்பாளர்களுக்கும், பெண் படைப்பாளர்களுக்கும் பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்கு செய்துள்ளார். நடேசய்யர், மீனாட்சியம்மாள் முதலான முன் னோடி படைப்பாளர்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் தொடர்ந்தும் அவர்கள் பற்றிய செய்திகளைப் பிரசுரித்துள்ளார். மலையகம் குறித்த படைப்புகள் எங்கு வெளிவந்தாலும் அவற்றைத் தான் நடத்திய இதழ்களில் மறுபிரசுரம் செய்து, அவற்றை மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்துள்ளார். மலையகப் படைப்பாளிகள் மற்றும் ஏனைய ஆளுமைகள் பற்றிய அறிமுகக் குறிப்புகளை வெவ்வேறு தளத்தில் எழுதியுள்ளார். மூத்த தலைமுறை படைப்பாளிகள் குறித்து மட்டுமன்றி தன் சமகாலத்து ஆளுமைகள், புதிய தலைமுறை ஆளுமைகள் என எல்லோருடைய பங்களிப்பு களையும் விதந்து போற்றியுள்ளார். திட்டமிட்டு இருட்டடிப் புச் செய்யும் சிறுமை, தனக்கு உவப்பில்லாத ஆளுமை களின் பங்களிப்புகளை மறைக்கும் சூழ்ச்சி முதலானவை யற்று, மன விசாலம் மிக்கவராக அவர் இயங்கியுள்ளதைக் கண்டுகொள்ள முடிகிறது. அதனால், மலையகத்துக்குள் ளும் மலையகத்துக்கு வெளியிலும் அவருக்குப் பரந்தள விலான அங்கீகாரம் கிடைத்துள்ளது.

சிற்றிதழாசிரியர் என்ற வகையில் சிற்றிதழ் வட்டத்துடன் நெருங்கி தொடர்பினைப் பேணிய அவர், தான் தொடர்பு கொண்டிருந்த சிற்றிதழ்களில் மலையகம் பற்றிய பதிவு களை வெளியிட வைத்ததுடன் சிற்றிதழாசிரியர்களுக்கும் மலையகப் படைப்புகளை வெளியிடுவதற்கு ஊக்கப்படுத்

தியுள்ளார். அச்சிற்றிதழ் வட்டத்தினர், மலையக இதழாசிரியர் என்ற வகையில் அந்தனி ஜீவாவை மலையக இலக்கிய அடையாளமாக முன்நிறுத்தியுள்ளனர்.

மலையகப் படைப்புகளில் தரம், தரமின்மை என்ற அளவுகோலையோ கருத்தியல் வேறுபாடுகளையோ கருத்தில் கொள்ளாமல் மலையகம் பற்றிய எல்லா எழுத்துகளையும் கொண்டாடும் இயல்புடையவராக அந்தனி ஜீவா விளங்கியுள்ளார். எழுதுபவர் எல்லோரையும் ஊக்குவித்துள்ளார். இளம் எழுத்தாளர்களை நேடியாகச் சந்தித்து ஊக்கப்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளார். மலையக இலக்கியம் மீதான இந்தப் பிணைப்பும் படைப்பாளிகளுடனான தொடர்பும் அவரை மலையகத்தின் பிரதிநிதியாக எங்கும் வலம்வரச் செய்தன.

இலங்கையில் மட்டுமல்லாது புலம்பெயர்ந்து இந்தியா சென்ற மலையக எழுத்தாளர்களுடனும் நெருங்கிய உறவை அவர் பேணியுள்ளார். அவர்களின் படைப்புகளை மக்கள்மயப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். அவ்வாறு புலம்பெயர்ந்த படைப்பாளிகளுக்கு நேசக்கரத்தை நீட்டி, அவர்களை மலையக அடையாளத்துடன் - மலையகச் சமூகத்துடன் பிணைக்கும் செயற்பாடு அந்தனி ஜீவா வழியே இடம் பெற்றுள்ளது. இதுவும் அந்தனி ஜீவாவின் தனித்த அடையாள உருவாக்கத்திலும் அந்த அடையாளத்தை அங்கீகரித்து ஏற்றுக்கொள்வதிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது எனலாம்.

அந்தனி ஜீவாவுக்குத் தனிச்சிறப்பைப் பெற்றுத்தந்த இலக்கியப் பங்களிப்புகளுள் முதன்மையானவொன்றாக அவரின் தொகுப்பு முயற்சிகளும் ஆவணப்படுத்தல்களும் விளங்குகின்றன. அதிலும் மலையகப் பெண் படைப்புகள் பற்றிய தொகுப்பு முயற்சிகள் தனித்துக் குறிப்பிடத்தக்கன. தான் ஈடுபட்டுவந்த எல்லாவிதமான இலக்கியச் செயற்பாடுகளினூடாகவும் பெண் எழுத்துகளை ஆவணப்படுத்தியும் பெண் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தியும் வந்துள்ள அவர், பெண்கள் படைப்புத்துறையில் அதிகமாக ஈடுபட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டிவந்துள்ளார். அவருக்கு இணையான வகையில் வேறு எவரும் மலையகப் பெண் எழுத்துகளைத் தொகுத்துப் பேணும் முயற்சிகளையோ பெண் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் செயற்பாடுகளையோ இதுவரை மேற்கொள்ளவில்லை எனலாம். அவரின் குறிஞ்சி மலர்கள், குறிஞ்சிக் குயில்கள் ஆகிய தொகுப்புகளுடனே மலையகப் பெண்கள் பலரின் படைப்புகளைத் தொகுத்து வெளியிடும் மரபு தொடங்குகிறது. அதனால் மலையகப் பெண் எழுத்துகளைத் தொகுத்து ஆவணமாக்கிய முன்னோடியாக அந்தனி ஜீவாவை அடையாளப்படுத்தலாம்.

மலையக வெளியீட்டகத்தின் மூலம் மலையக நூல்களை அதிகமாக வெளியிட்டமை, அவற்றைத் தான் செல்லுமிடங்கள் எல்லாம் கையளித்தமை முதலானவையும் அவரின் அடையாள வளர்ச்சியிலும் நிலைபேற்றிலும் தாக்கம் செலுத்தியுள்ளன. மலையகத்தில் நூல் வெளியீட்டு முயற்சிகளில் மலையக வெளியீட்டகத்தின் பங்களிப்பும் தனித்துவம் மிக்கதாகும். அதன் பெயரும் அது வெளியிட்ட நூல்களும் மலையக அடையாளத்தைப் பரந்த தளத்தில் நிலைநிறுத்தின. அதன் முன்னணி செயற்பாட்டாளர் என்ற வகையில் அந்தனி ஜீவாவின் பங்களிப்பு அவற்றில் முதன்மையானதாக இருந்துள்ளது. அத்துடன், மலையக இலக்கியப் பரப்பின் முக்கியமான ஆளுமைகளான சாரல்நாடன், சு. முரளிதரன் ஆகியோருடன் அவர் நெருக்கமாக இணைந்து செயற்பட்டுள்ளதுடன் அவர்களின் படைப்புகள் நூலாக்கம் பெறுவதிலும் அவற்றைப் பரவலாக்குவதிலும் அக்கறையுடன் ஈடுபட்டுள்ளார்.

அந்தனி ஜீவா அவர்கள், வெறும் எழுத்தாளராகத் தன்னோடு மட்டும் சுருங்கிவிடாமல் அல்லது தன்னையே முன்னிலைப்படுத்திக் கொள்ளாமல், ஒரு சிறந்த இலக்கியச் செயற்பாட்டாளராகத் தடம் பதித்துள்ளார். மூத்த மற்றும் இளம் படைப்பாளிகளுடன் நெருங்கிய உறவைப் பேணுதல், புதிய வர்களுக்குக் களங்களை அமைத்துக் கொடுத்தல், மலையக இலக்கியங்களுக்கான இடம் மறுக்கப்படுகின்றபோது, மறுக்கப்படுகின்றதாக உணர்கின்றபோது ஆவேசத்துடன் குரல்கொடுத்தல் என அவரது பங்களிப்பு விரிவானது. அத்துடன், கலை இலக்கிய நிகழ்வுகளில் நேரடியாகப் பங்கேற்று உரையாற்றுதல், தமிழ்நாட்டிற்குப் புலம்பெயர்ந்த மலையகப் படைப்பாளிகளுக்கு நேசக்கரம் நீட்டுதல், செல்லும் இடமெல்லாம் மலையக நூல்களைக் கொண்டு சேர்த்தல், ஆவணமாக்கல் மற்றும் தொகுப்பு முயற்சிகளை முன்னெடுத்தல் என அவர் அயராது உழைத்துள்ளார். இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் பல்வேறு இலக்கிய நிகழ்வுகளை ஒருங்கிணைத்துடன், அக்கறையுள்ள மலையக இதழியலாளராகவும் அவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை.

மேற்படி செயற்பாடுகள் யாவற்றிலும் மலையகக் கலை இலக்கியங்களை ஆத்மார்த்தமாக நேசிக்கும், தரப்படுத்தல்களுக்கு அப்பால் அவற்றைக் கொண்டாடும், அவற்றை எங்கும் பரவலாக்க முனையும், புதிய படைப்பாளிகளையும் படைப்புகளையும் உளப்பூர்வமாக ஆதரிக்கும் ஓர் ஆன்மாவின் குரல் உள்ளுறைந்து இருப்பதைக் காணலாம். இந்த உணர்வுபூர்வமான பிணைப்பே அந்தனி ஜீவாவின் இலக்கிய முகமாக விரிந்தது. அப்பிணைப்பு அவரை எங்கும் சமசரப்படுத்திக்கொள்ள இடந்தரவில்லை எனலாம். அதனாலேயே, அரச திணைக்களச் செயற்பாடுகள் முதல் ஏனைய கலை இலக்கிய நிகழ்ச்சிகள் வரையில் மலையகத்துக்கான இடம் மறுக்கப்படுகிறது அல்லது போதியளவு வழங்கப்படவில்லை எனத் தான் உணரும்போதெல்லாம் உணர்ச்சிவசப்பட்டுள்ளார், கொந்தளித்துள்ளார். அந்நிகழ்வுகளுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் வெளிப்படையாகவே முரண்பட்டுள்ளார், பொதுவெளியில் எதிர்வினையாற்றியுள்ளார். இந்தச் சமர சமற்ற தொடர் இயக்கமே அவரை மலையகக் கலை இலக்கியத்தின் முதன்மையான அடையாளங்களுள் ஒருவராக முன்நிறுத்தியதுடன் மலையகக் கலை இலக்கியப் பிரதிநிதியெனும் அங்கீகாரத்தையும் வழங்கியது எனலாம்.

jeyaseelan.mm@thaiveedu.com

டி.பி.எஸ். ஜெயராஜின் மறைவு :
இதழியலில் இலங்கை தமிழர் அரசியல் உரிமைப் போராட்ட ஆவணப்படுத்தலின்
ஒரு சகாப்தத்தின் முடிவு



tg.theeban@gmail.com

வீரகத்தி தனபாலசிங்கம்

கனடாவின் ரொறன்ரோ நகரில் 2026 மே 17-ஆம் திகதி இடம்பெற்ற டேவிட் பியூவெல் சபாபதி ஜெயராஜின் (72) மரணம் பத்திரிகைத் துறையில் இருந்து மாத்திரமல்ல, இலங்கைத் தமிழ்ச் சமூகத்திடமிருந்தும் ஒரு பேராளுமையை அபகரித்துச் சென்றுவிட்டது. அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது என்பதை விடவும் நிச்சயமாக ஈடுசெய்யப்பட வேண்டியது என்றே கூற வேண்டும். அவரைப் போன்ற ஒரு பத்திரிகையாளர் தமிழ்ச் சமூகத்துக்கு மீண்டும் தேவை.

ஜெயராஜ் ஒருபுறத்தில், நேசிக்கப்பட்ட அளவுக்கு மறுபுறத்தில் வெறுக்கப்பட்டவராகவும் விளங்கினார். சரியானது என்று தனது மனதிற்பட்டதை ஒளிவு மறைவின்றி துணிச்சலாக பொதுவெளியில் சொல்லும் அவரது சுபாவமே அதற்கு காரணம். அவர் பிரதானமாக அரசியலயே எழுதினார். அதனால், தங்களது அரசியல் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே ஜெயராஜை ஒவ்வொருவரும் நோக்கினார்கள். தன்னை மற்றவர்கள் எவ்வாறு பார்க்கிறார்கள் என்பது குறித்து அவர் கவலைப்பட்டிருப்பார் என்றால் தனித்துவமான பத்திரிகையாளராக விளங்கியிருக்க முடியாது.

அச்சமின்றி பகுப்பாய்வு செய்து எழுதவும் இலங்கை அரசியலின் குறிப்பாக, தமிழர் அரசியலின் வரலாற்றின் சிக்கலான பரிமாணங்களை அவை நிகழும்போதே பதிவு செய்யவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர் ஜெயராஜ். அரசியல் பகுப்பாய்வுத்துறையில் மகத்தான ஆளுமையாக இலங்கையில் மாத்திரமல்ல, தெற்காசியப் பரப்பிலும்கூட பல தசாப்தங்களாக விளங்கியவர் என்று அவரைக் கூறமுடியும்.

ஜெயராஜின் எழுத்துகள் சமகால அறிக்கைகளாக மாத்திர மல்ல, இன்றியமையாத வரலாற்று ஆவணங்களாகவும் அமை கின்றன. சிக்கலான புவிசார் அரசியல் பிரச்சினைகள், பிராந் திய மோதல்கள் மற்றும் உள்நாட்டு அதிகாரப் போக்குகளை அவிழ்த்து விளக்கும் அவரது இணையற்ற ஆற்றல் காரண மாக அவரது அரசியல் ஆய்வுக் கட்டுரைகள் நீண்டகாலமாக அரசாங்க தலைவர்கள், அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள் மற்றும் அரசியல் அக்கறையுடைய குடிமக்கள் என்று பல் வேறு தரப்பினரினதும் கண்டிப்பான வாசிப்புக்கு உரியவை யாக விளங்கின.

ஆழமான நினைவாற்றல்:

இரு வேறு உலகங்கள் போன்று இனரீதியாக துருவமயப்பட்டி ருக்கும் இலங்கைச் சமூகத்தில் ஜெயராஜின் பணி துல்லிய மாக உண்மைகளைச் சரி பார்ப்பதிலும் ஆழமான நினை வாற்றலிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் உறுதியான அர்ப் பணிப்பிலும் நிலைகொண்டிருந்தது. ஜெயராஜ்க்கு நாம் செய்யும் அஞ்சலி, அறிவு சார்ந்த துணிச்சலாலும் துல்லிய மான விபரிப்பாலும் வரையறுக்கப்பட்ட பத்திரிகையாளர் ஒரு வரின் வாழ்நாள் பணிக்கு வழங்கப்படும் பெரும் கௌரவ மாகும்.

ஜெயராஜின் பேனா, வரலாற்றின் போக்குகளை வெறும் பதி வாக மாத்திரம் செய்யவில்லை. அந்த போக்குகள் எந்த ஆழத்தில் இருந்து பாய்ந்து வந்தன என்பதையும் நாம் புரிந்துகொள்ள உதவியது.

அதிகாரத்தில் உள்ளவர்களை நோக்கி உரத்துப் பேசுதல், தெளிவுடனும் கண்ணியத்துடனும் தளராத நேர்மையுடனும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தல் ஆகியவையே ஊடகங்களின் உண்மையான பணி என்ற நம்பிக்கையைக் கொண்ட பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், அவதானி களுக்கும் எதிர்காலச் சந்ததியினருக்கும் ஜெயராஜின் பத் திரிகைத்துறைப் பங்களிப்பு என்றென்றைக்கும் நிலைத்திருக் கக்கூடிய வழிகாட்டியாகும்.

இலங்கையில் தமிழ்பேசும் ஆங்கில ஊடகவியலாளர்களின் அரசியல் எழுத்துகள் வரலாற்று ரீதியாக துருவமயப்பட்ட இலங்கைச் சமூகத்தின் பல்வேறு தரப்புகளினதும் அழுத்தங் களுக்கு உள்ளாகியிருந்தன. பல தசாப்தகால இன மோதல் களுக்கு மத்தியில், அரசின் தீவிர கண்காணிப்பு, வெளிநாட்டு இராஜதந்திர தலையீடுகள் மற்றும் ஆயுதமேந்திய தமிழ் இயக்கங்களின் அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட வண்ணமே அவர்கள் பயணம் செய்ய வேண்டியிருந்தது.

இத்தகைய சவால் மிகுந்த சூழலில் ஜெயராஜின் அரசியல் எழுத்துகள் அவரது பிரத்தியேகமான அணுகுமுறைகள் மற்றும் தனித்துவமான நிலைப்பாடு காரணமாக முற்றிலும் வேறுபட்ட வையாக அமைந்திருந்தன. உதாரணத்துக்கு சொல்வதானால், அவரது சமகாலத்தவரான 'தராக்கி' சிவராம் போன்றவர்களின் அரசியல் எழுத்துகள் வெளிப்படுத்திய நிலைப்பாடுகளில் இருந்து அவரது பாணி முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது.

வலிமையான அடித்தளம்:

கொழும்பில் ஆங்கில மொழி மூலம் கல்விகற்ற உயர்வர்க்க குடும்பம் ஒன்றில் இருந்து அல்லது பல்கலைக்கழக கல்விப் பின்புலத்தில் இருந்து வந்த தமிழ் பேசும் ஆங்கில ஊடக வியலாளர்களைப் போலன்றி ஜெயராஜ் தனது ஊடகப் பய ணத்தை தமிழ்ப் பத்திரிகைத்துறையின் அடிமட்டத்தில் இருந்தே தொடங்கினார். 1977-ஆம் ஆண்டில் வீரகேசரி பத்திரிகை யில் இணைந்து மூத்த பத்திரிகையாளர்கள் பலருடன் பணி யாற்றிய அவர், 1981-ஆம் ஆண்டில் 'தி ஐலண்ட்' பத்திரிகை மூலம் ஆங்கில ஊடகத்துறைக்கு மாறுவதற்கு முன்னர் யாழ்ப் பாணத்திலும் மட்டக்களப்பிலும் பிராந்திய நிருபராக பணி யாற்றிய அனுபவம் காரணமாக வளமான அடித்தளத்தை அமைத்துக் கொண்டார்.

அதனால் அவர், 1989-ஆம் ஆண்டில் கனடாவுக்கு புலம் பெயர்ந்த போதிலும், ஏற்கனவே வடக்கு, கிழக்கிலும் கொழும் பிலும் ஏற்படுத்தியிருந்த ஆழமான தொடர்புகள் மூலம் தங்கு தடையற்ற தகவல் வலையமைப்பை தொடர்ந்து பேணக் கூடியதாக இருந்தது. ஏனைய உள்நாட்டு அல்லது புலம் பெயர்ந்த ஊடகவியலாளர்கள் உத்தியோகபூர்வ அறிக்கை களை அல்லது ஏதேனும் ஒரு அரசியல் தரப்பை மாத்திரம் நம்பியிருந்தபோது ஜெயராஜ் ஒரு சம்பவத்தை அரசியல் வாதிகள், இராணுவத்தினர் மற்றும் சாதாரண பொதுமக்கள் என்று பல தரப்புகளிடமும் 'குறுக்கு விசாரணை' செய்து உறு திப்படுத்துவதில் பெயர் பெற்றவராக விளங்கினார்.

ஜெயராஜ் எழுதிய பகுப்பாய்வுக் கட்டுரைகளும் ஆளுமை களின் சுயசரிதையும் அனுபவமிக்க ஒரு நிருபரின் புலனாய் வுத் திறனும் வரலாற்றாசிரியர் ஒருவரின் நுணுக்கமான பார்வை யும் இணைந்த ஒரு கலை வடிவமாக அமைந்திருந்தன என் றால் மிகையில்லை.

ஜெயராஜின் மறைவு இலங்கை இதழியலில் தமிழ்த் தேசியப் போராட்ட ஆவணப்படுத்தலின் ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறித்து நிற்கிறது. உலகளாவிய ரீதியில் அறியப்பட்ட ஜெய ராஜின் பங்களிப்புகளை மதிப்பிடாமல் இலங்கை இதழிய லையும் தமிழ் தேசியப் போராட்டத்தின் ஆவணங் களையும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான தனது நீண்ட ஊடகப் பயணத்தில் இலங்கையின் இன மோதலுக்குரிய மிகவும் கடுமையான துருவமயப்

பட்ட சூழலிலும் ஜெயராஜ் முதன்மையான அரசியல் பதிவாள ராகவும் கூர்மையான ஆய்வாளராகவும் அச்சமற்ற குரலா கவும் தனக்கென்று தனித்துவமான இடத்தை உருவாக்கிக் கொண்டார்.

இருமொழிப் புலமை:

ஜெயராஜுக்கு இருந்த இருமொழிப் புலமை அவரை சமூகங் களுக்கு இடையில் தவிர்க்க முடியாத பாலமாகச் செயற்பட வைத்தது. அவரால் தமிழர் அரசியலின் சிக்கலான உள்விவ காரங்களை ஆங்கிலம் பேசும் உலகிற்கும் சிங்களப் பெரும் பான்மைச் சமூகத்துக்கும் விளக்கி எழுத முடிந்த அதே வேளை, தனது சமூகத்துடன் இயல்பான, ஆழமான பிணைப் பையும் பேண முடிந்தது. சார்புநிலைக் கதையாடல்களுக்கு இணங்க மறுத்ததால் இலங்கை இனமோதலின் முக்கியமான சகல தரப்புகளினதும் விரோதத்துக்கு அவர் முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

தமிழ்த் தேசியவாதத்தின் மீதான ஜெயராஜின் பற்றுதல் ஆழ மானது. ஆனால், அது குருட்டுத்தனமானதும் விமர்சனத் துக்கு அப்பாற்பட்டதுமான ஆயுதப் போராட்டப் போக்கைக் கொண்டிராமல், ஒரு ஜனநாயக ரீதியான மனிதநேயப் பார் வையினால் வரையறுக்கப்பட்டிருந்தது. தமிழர்கள் மத்தியில் ஜனநாயக மாற்றுக் கருத்துகளுக்கு ஆயுதமேந்திய தமிழ் இயக்கங்கள் இடமளிக்க மறுத்தபோது இறுதியில் அத்த கைய போக்கு அந்தச் சமூகத்தை வரலாற்றுப் பேரழிவுக்கு இட்டுச்செல்லும் என்பதை ஜெயராஜ் முன்கூட்டியே உணர்ந் திருந்தார்.

போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் அவர் மாயை களுக்கு எதிராக இடையறாது எழுதியதன் மூலம் தமிழ் மக்களுக்கான தனது கடமையை தொடர்ந்தார். யதார்த்தத் துக்கு முகங்கொடுத்து ஜனநாயக அரசியல் ஈடுபாட்டின் மூலமாக சமூகத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டும் என்று அவர் தமிழ் மக்களுக்கு தனது எழுத்துகள் மூலம் அழைப்பு விடுத்தார்.

சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அவர் பற்றுறுதிகொண்ட ஒரு தமிழ்த் தேசியவாதியாக இருந்த போதிலும், சிங்கள அல்லது முஸ்லிம் சமூகங்கள் மீது எந்த விதமான வெறுப்பையும் கொண்டிருக்கவில்லை.

எந்தவொரு கட்சியின் பதாகைக்காகவும் தனது பேனாவை ஜெயராஜ் பயன்படுத்தவில்லை. தமிழர்கள், சிங்களவர்கள் மற்றும் சர்வதேச அவதானிகளினால் சமமான மரியாதை, நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புடன் அவர் வாசிக்கப்பட்டார். அவரது பல தசாப்தகால ஆவணப்படுத்தல் இலங்கையின் கடந்த காலத்தைப் புரிந்து கொள்வதற்கும் நியாயமான பல் லின எதிர்கால சமூக எதிர்காலத்துக்கான போராட்டத்திற்கும் எதிர்காலச் சந்ததியினருக்கு என்றென்றைக்கும் ஒரு வழி காட்டியாக விளங்கும்.

எந்தவொரு குறிப்பிட்ட அரசியல் தரப்புக்கும் கட்டுப்படாத ஜெயராஜின் நிலைப்பாடுகள் வன்முறைத் தாக்குதல்களை யும் கைதுகளையும் பல தசாப்தகால புலம்பெயர் வாழ்வை யும் அவருக்கு பரிசாகக் கொடுத்த போதிலும், இறுதியில் அவருக்கு அது தனித்துவமான ஒரு அங்கீகாரத்தைப் பெற் றுத் தந்தது.

அவரது கருத்துகளுடன் முரண்பட்டவர்கள் கூட, நவீன இலங்கை வரலாற்றின் உண்மையானதும் துல்லியமானதுமான ஆவணப்பதிவாக அவரது கட்டுரைகளை நம்பியிருந்தனர். அவரை வெறுத்தவர்களே அவரது கட்டுரைகளை கூடுதலாக வாசித்தார்கள் என்று கூட கூறமுடியும்.

அரசியலும் போரும் ஜெயராஜின் தொழில்முறை வாழ்க்கையை ஆக்கிரமித்திருந்தாலும், இலங்கைத் தமிழர்களினதும் தென் னிந்தியாவினதும் கலாசாரங்கள் மீது அவர் ஆழமான காத லைக் கொண்டிருந்தார். எம்.ஜி. இராமச்சந்திரன், சிவாஜி கணேசன், ஜெயலலிதா முதல் உள்ளூர் கலைஞர்கள் வரை சினிமாவின் சகல துறைகளையும் சேர்ந்த ஆளுமைகளின் சுயவிபரங்கள் சுவாரஸ்யமான நினைவலைகளுடன் எழுதப் பட்டவை. தான் விரும்பிக் கேட்கும் திரைப்படப் பாடல்களைப் பற்றியும் கூட, ஆங்கிலத்தில் ஒரு முழுப்பக்க கட்டுரையை அவர் எழுதிவிடுவார்.

அவை வெறுமனே பொழுதுபோக்கு எழுத்துகள் அல்ல. சினி மாவும் அரசியலும் எவ்வாறு ஒன்றிணைந்து பாக்கு நீரிணை யின் இருபுறமும் தமிழ் மக்களின் கூட்டு மனநிலையை வடி வமைத்தன என்பதை ஆராய்ந்த சமூக வரலாறாகவே அவரது அந்தக் கட்டுரைகள் அமைந்தன.

தமிழ்நாட்டில் சினிமாவும் அரசியல் அணி திரட்டலும் எவ்வாறு பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பதை உடைத்துப் பேசிய தன் மூலம் ஜெயராஜ் தனது ஆங்கில வாசகர்களுக்கும் (முக்கியமாக ஆங்கிலம் வாசிக்கும் சிங்களவர்களுக்கு) தமி ழர்களின் அரசியல் அபிலாசைகளைப் புரிந்துகொள்வதற் கான ஆழமான கலாசார மற்றும் உளவியல் கட்டமைப்பை வழங்கினார். பெரும்பாலான ஆங்கில ஊடகவியலாளர்கள் கலாசார வரலாற்றையும் அரசியல் பகுப்பாய்வையும் தனித் தனியாகப் பிரித்துப் பார்த்தபோது ஜெயராஜ் அவற்றை ஒன் றோடொன்று பின்னிப் பிணைந்தவையாகவே நோக்கினார். இதழியலைப் பொறுத்தவரை, அவரின் இழப்பை வர்ணிப் பதற்கு வார்த்தைகளைத் தேட வேண்டியிருக்கிறது.

பணியாற்றிய பத்திரிகைகள்:

இலங்கையின் முன்னணி தமிழ்ப் பத்திரிகையான வீரகேசரி யில் 1977 ஏப்பிரலில் அலுவலக நிருபராக இணைந்து கொண்டதன் மூலம் பத்திரிகைத்துறையில் பிரவேசம் செய்த ஜெயராஜ் கொழும்பில் பணியாற்றிய அதேவேளை, வீரகேசரி யின் யாழ்ப்பாண நிருபராக ஐந்து மாதங்களும் மட்டக்களப்பு நிருபராக மூன்று மாதங்களும் செயற்பட்டார்.

'தி ஐலண்ட்' ஆங்கிலப் பத்திரிகையில் 1981-ஆம் ஆண்டில் இணைந்து ஆங்கிலப் பத்திரிகைத்துறையில் பிரவேசம் செய்த அவர் வெகு விரைவாகவே அந்த பத்திரிகையின் பிரதி செய்தி ஆசிரியரானார். 'கிடுகு வேலிக்குப் பின்னால்' (Behind the Cadjan Curtain) என்ற ஜெயராஜின் அரசியல் பத்தி மிகவும் பிரபல்யமானது.

இந்தியாவில் செல்வாக்குமிக்க ஆங்கில தினசரிகளில் ஒன் றான 'தி இந்து' மற்றும் ஃபுரொண்ட் லைன் சஞ்சிகையின் கொழும்பு செய்தியாளராகவும் பணியாற்றிய ஜெயராஜ் யாழ்ப் பாணத்தில் இருந்து வெளியான 'த சற்றர்டே றிவியூ' ஆங்கில வாரப் பத்திரிகையின் பிரதி ஆசிரியராகவும் குறுகிய காலம் பதவி வகித்தார்.

கனடாவுக்கு புலம் பெயர்ந்த பிறகு அவர் 'செந்தாமரை', 'மஞ்சரி' என்ற இரு தமிழ் வாரப்பத்திரிகைகளை ஆரம்பித்து அவற்றின் ஆசிரியராகப் பணியாற்றினார். சுயாதீனப் பத்திரிகையாளர் என்ற வகையில் ஜெயராஜ் கனடா அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, இந்தியா, நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் பல்வேறு சஞ்சிகைகளில் எழுதினார். இறுதியாக அவர் கொழும்பு தின சரிகளான 'டெயிலி மிறர்', ஃபைனான்சியல் ரைம்ஸ் ஆகிய வற்றில் வாரம் ஒரு தடவை அரசியல் பத்திகளை எழுதி வந்தார்.

ஜெயராஜ் அமெரிக்காவின் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறைக்கான நீமன் ஆய்வுநிலை மாணவராக 1988-ஆம் ஆண்டில் அனுமதி பெற்றார். அவர் இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தினால் (The Editors Guild of Sri Lanka) வழங்கப்படும் டி.ஆர். விஜேவர்தன விருதை ஒரு தடவையும் ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான (ஆங்கிலம்) பி.ஏ. சிறிவர்தன விருதை இரு தடவைகளும் பெற்றார். அவர் வடமராட்சி கரவெட்டியைச் சொந்த ஊராகக் கொண்டவர்.

அரை நூற்றாண்டு நட்பு:

ஜெயராஜுடனான எனது நட்பு சுமார் அரை நூற்றாண்டுகால நீட்சியுடையது. அவர் வீரகேசரியில் சேர்ந்து நான்கு மாதங் களுக்கு பிறகு நான் இணைந்துகொண்டேன். அவருடன் ஒன்றாக நான் ஒருபோதும் பணியாற்றவில்லை. தொடக்கத் தில் நான் ஓப்புநோக்காளராக பணியாற்றினேன். வீரகேசரி ஆசிரிய பீடத்தில் 1985 ஜனவரியில் நான் இணைந்தபோது ஜெயராஜ் அங்கு இருக்கவில்லை. நான்கு வருடங்கள் முன் னர் அவர் ஆங்கிலப் பத்திரிகைத்துறைக்கு சென்றுவிட்டார். ஆனால், இருவருக்கும் இடையிலான நட்புறவு இறுதிவரை நீடித்தது.

அவரை நாம் ஒருபோதும் முழுப்பெயரைக்கூறி அழைப்ப தில்லை. எமக்கு அவர் டி.பி.எஸ். தான். 38 வருடங்களுக்கு முன்னர் கனடாவுக்கு சென்றவர் 2013-ஆம் ஆண்டில் ஒரு தடவை மாத்திரமே தனது மனைவியுடன் இலங்கைக்கு வந் தார். ஆனால், வாரத்தில் குறைந்தது இரு தடவைகளாவது என்னுடன் தொடர்பு கொண்டு பேசுவார். சம்பாசணை சில நேரங்களில் ஒன்றரை அல்லது இரண்டு மணிநேரம் நீடிக் கும். நடுச்சாமத்திலும் அதிகாலை வேளைகளிலும் கூட அவர் தொடர்பு கொள்வார்.

ஜெயராஜுடனான கலந்துரையாடல் எப்போதுமே ஒரு அரசி யல் வகுப்பில் கலந்துகொண்ட அனுபவத்தைக் கொடுக்கும். சமகால அரசியல் பற்றி தொடங்கும் பேச்சு பல வரலாற்றுச் சம்பவங்களையும் ஆதுமைகளையும் நினைவுமீட்டுவதில் முடிவடையும். அவருடனான உரையாடல்களின் மூலமாக நான் கற்றுக் கொண்டவை ஏராளம். அத்தகைய ஒரு அறி வார்ந்த நண்பனை இனிமேல் என் வாழ்நாளில் சந்திப்பேன் என்று நான் நம்பவில்லை.

மனிதர் ஒரு அரசியல் மிருகம் என்றால் ஜெயராஜ் அதில் ஒரு பிரத்தியேகமான மிருகம். எந்த நேரமும் அவர் அரசியலைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார். உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான தமிழரின் அரசியல் நிலை குறித்து அவர் ஆழ்ந்த கவலை கொண்டிருந்தார். மூன்று தசாப்தகால போராட்டத்தில் கற்பனை செய்து பார்த்திருக்க முடியாத தியாகங்களுக்கும் இழப்புகளுக்கும் பிறகு இறுதியில் தமிழர் அரசியல் 'பூச்சிய நிலைக்கு' வந்திருப்பதாக ஜெயராஜ் வேத னைப்பட்டார்.

'எத்தனை வருடங்களாக எவ்வளவோ எழுதினோம். அதெல் லாம் வீணா' என்ற கேள்வி அவரிடமிருந்து அடிக்கடி வரும். இறுதிக் காலத்தில் இலங்கை தமிழ் அரசியலைப் பற்றி எழுது வதை பெருமளவுக்கு அவர் தவிர்த்துக்கொண்டார். கடந்த நான்கு வருடங்களாக அவரின் அரசியல் கட்டுரைகளை தமி ழில் மொழி பெயர்த்து வீரகேசரியில் பிரசுரிக்கச் செய்து வந்திருப்பவன் என்ற வகையில் இதைக் கூறுகிறேன்.

சுமார் அரை நூற்றாண்டு காலமாக எழுதிக்குவித்த மனிதன் ஒரு நூலைக் கூட வெளியிட்டதில்லை. 2024 செப்ரெம்பரில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசநாயக்க ஜனாதிபதியாக தெரிவான பிறகு அவரின் அரசியல் வாழ்வு குறித்து ஜெயராஜ் ஆங்கிலப் பத்திரிகையில் சில கட்டுரை களை எழுதினார். அவற்றை வீரகேசரிக்காக மொழி பெயர்த்த நான் குமரன் புத்தக இல்லத்தின் உதவியுடன் 'அரசியல் அதி காரத்தின் வர்க்க மாற்றம்' என்ற தலைப்பில் நூலாக வெளிக் கொணர்ந்தேன். அந்த நூல் வெளியீட்டு நிகழ்வு கொழுப்பு தமிழச்சங்க பிரதான மண்டபத்தில் 2026, மார்ச் 9-ஆம் திகதி மாலை நடைபெற்றது.

'சிங்கத்தின் முயற்சி இல்லையென்றால் எனது பெயரில் ஒரு நூல் கூட வெளிவந்திருக்காது' என்று ஜெயராஜ் அடிக்கடி கூறுவார். அவர் என்னை சிங்கம் என்றே அழைப்பார். அவரின் கட்டுரைத் தொகுப்பு நூல்களை வெளியிடுவதற்கு குமரன் புத்தக இல்லம் முன்வந்தபோதிலும், அவர் ஏனோ தெரிய வில்லை தற்போதைக்கு வேண்டாம் என்று தடுத்துவிட்டார். இனிமேல் தடுப்பதற்கு டி.பி.எஸ். இல்லை. சில தொகுப்பு நூல்களை வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம்.

எனது பத்திரிகைத்துறை அனுபவங்களை 'பத்திரிகைத்துறை யில் என் கதை' என்ற தலைப்பில் நூலாக அண்மையில் வெளியிட்டேன். அதற்கு ஒரு முகவுரையை ஜெயராஜ் ஆங் கிலத்தில் எழுதி 2026 மார்ச் 9-ஆம் திகதி எனக்கு அனுப்பி வைத்தார். அதை தமிழில் மொழி பெயர்க்காமல் ஆங்கிலத் தில் அப்படியே நூலில் பிரசுரித்திருக்கிறேன். அநேகமாக அவர் கடுமையான சுகவீனத்துக்கு உள்ளாவதற்கு முன்னர் எழுதியது அந்த முகவுரையாகத்தான் இருக்க வேண்டும் என்று நம்புகிறேன்.

எனது அந்த நூல் வெளியீடு 2026 மே 17-ஆம் திகதி மாலை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. நிகழ்வை ஆரம் பிப்பதற்கு நாம் தயாராகிக் கொண்டிருந்தபோது ஜெயராஜ் காலமாகிவிட்டார் என்ற அதிர்ச்சித் தகவலை அவரது மனை வியார் வட்ஸ்அப் மூலமாக எனக்கு அறிவித்தார்.

'நண்பரே உங்கள் முகவுரையைத் தாங்கிவரும் எனது நூலின் வெளியீட்டு நிகழ்வு நடைபெறும் தினத்தில் எங்களை விட்டு நீங்கள் பிரிந்தது எனது வாழ்வில் வேதனை மிகுந்த ஒரு கதையாகும்'

Thanabalasingham.V@thaiveedu.com

‘எங்கள் தொடர்புகள் இறுதிவரை தொடரட்டும்!’

டி.பி.எஸ். ஜெயராஜ்

ஊர் முதல் தொடரும் நினைவு

- எஸ்.எம். வரதராஜன்

tg.theeban@gmail.com

‘எங்கள் தொடர்புகள் இறுதிவரை தொடரட்டும்!’

இந்த வசனத்துக்கும் ஜெயராஜ் அண்ணருக்கும் உள்ள தொடர்பு அவரது அரசியல், சமூக, ஊடகப் பார்வையில் முக்கியமான ஒன்று. ஜெயராஜ் அண்ணருடன் - அவர் பார்த்த திரைப் படங்கள், அவர் படித்த பிறமொழி நாவல்கள், நூல்கள் ஊடக அனுபவங்கள் பற்றிக் கதைப்பது சுவைமிகு அனுபவமாகும். அவை நந்தவனப்பூக்கள் போன்றவை, பல்வகையானவை. ஒன்றில் ஒன்று அதிகாரம் செலுத்தாதவை. தனியானவை. சில ஒற்றுமையான ஒரே குடும்பத் தாவரங்கள் போன்றவை. அவருடைய உரையாடல் கூட ஒரு நந்தவனம் போன்றதே.

திரைக்குப் பின்னாலுள்ள, வெளியில் எழுத முடியாத அரசியல் விவகார அனுபவங்களை நாங்கள் அடிக்கடி பகிர்ந்து கொள்வதுண்டு. அப்படி அவர் மனந்திறந்து பேசிய மனிதர்களில் நானும் ஒருவன். சிறுவயதிலிருந்தே அவரை எனக்குத் தெரிந்திருந்ததும், ஊர்க்காரர் என்ற நெருக்கமும் மட்டுமன்றி, எனது எழுத்துப் பதிவுகள் மீது அவர் வைத்திருந்த மதிப்பும் அதற்கு முக்கிய காரணம் எனலாம். ஒருமுறை அவர், 'நீர் ஜனரஞ்சகமாக எழுதுகிறீர் ஐஸே!' என்றார். அது எனக்கு மோதிரக் கையால் குட்டு வாங்கியது போலிருந்தது. 'எனக்கு அப்படித் தெரியவில்லை அண்ணர்' என்று நான் மறுத்தபோது, 'உமக்குத் தெரியாது, ஆனால் உமது நடை அப்படிப்பட்டது. ஊடகவியலாளர்களுக்குச் செய்தி எழுதும்போது கூட, அந்தப் பாணியில் எழுதத் தெரிந்திருக்க வேண்டும்' என்று என்னை வழிநடத்தினார்.

ஜெயராஜ் எனும் நூலகம்:

'நெற்பிலிக்ஸ்' இணையத்தில் நடிகை சாய் பல்லவி நடித்த 'விரதபர்வம்' என்ற திரைப்படத்தை நான் சில மாதங்களுக்கு முன் பார்த்திருந்தேன். தெலுங்கானா மாநிலத்தில் இயங்கிய 'மக்கள் போர் இயக்கமான 'PWG' என்ற 'நக்சலைற்' இயக்கம்' பற்றிய படம் அது. 'நக்சலைற்' இயக்கத்தின் தலைவர் மீதான அதீத விசுவாசத்தில் இணைந்து, இயங்கி தலைவருக்கு அடுத்த நிலைக்கு வந்த சாய் பல்லவி (பாத்திரம்: வெண்ணிலா) மீது இயக்கத்துக்குள்ளேயே எதிர்ப்புத் தொடங்குகிறது. அவரை அகற்றுவதற்காக அடுத்த நிலையிலுள்ளவர்கள் செய்யும் சதி முயற்சியில் சாய் பல்லவி பலியாகிறார். அவரை, அரசாங்கத்தின் புலனாய்வு முகவர் எனக் கூறி தலைவரை நம்பச்செய்யும் வகையிலான காரியங்களை ஒப்பேற்றுகின்றனர். அதில் வெற்றியும் அடைகின்றனர். சாய் பல்லவி தான் சதி செய்தார் என்று தலைவரே முடிவு செய்ய வைத்துத் தலைவரே சாய் பல்லவியை அழிக்கும் தீர்மானத்துக்கு வரும் கதையைக் கொண்ட படம் அது. சாய் பல்லவியின் நேர்மையையும் விசுவாசத்தையும் தலைமை உணரும்போது வெண்ணிலா துரோகியாய் மறைந்துவிடுகிறார்.

ஜெயராஜ் அண்ணருக்கு இந்தப்படத்தைப் பார்த்த கதையைச் சொன்னேன். அவர் தாம் அந்தப் படத்தைப் பார்க்கவில்லை என்றும் - ஆனால் நக்சலைற் அமைப்பிலிருந்து கொலை செய்யப்பட்ட பெண் போராளி ஒருவரின் கதை - தொண்ணூறுகளில் நடந்ததென்றும் அது கதைகளாக வந்துள்ளது என்றும் சொன்னார். இப்படிப் பல தகவல்கள் கொண்ட பெட்டகம் அவர். ஒருக்கால் அந்தப் பெட்டியைத் திறந்து விட்டால் நிமிடக்கணக்காக பல பக்கங்கள் அவரிடமிருந்து வந்துகொண்டேயிருக்கும். கல்லூரிகளிற் கற்ற காலத்திலிருந்து ஊடகப் பணியிற் கிடைத்த அனுபவத்துடன் பன்முக வாசிப்பில் பெற்ற அறிவும் அவருடைய வளமாகும்.

அவர் வெள்ளவத்தையிலிருக்கும்போதே வீட்டுக்குப் போகும் போது புத்தகக் கொத்துடன் செல்வார். பிள்ளையொன்றைத் தூக்கிச் செல்லும் தாயைப்போல புத்தகங்கள் மீதான அன்புறவுடன் அவர் நடந்து செல்வதைக் காணலாம். இலக்கியம், நாவல், திறனாய்வு, வரலாற்று நூல்கள் என்பன மட்டுமன்றி திரைச்சித்ரா, பொம்மை, குமுதம், விகடன், துக்ளக் என எல்லாச் சஞ்சிகைகளும் அவரிடமிருக்கும். பைபிளிலும் வசனங்கள், அதிகாரங்கள் தொடர்பான அவரது உதாரணங்கள் அவருடைய மதத்துடன் இணைந்த ஒன்று.

ஜெயராஜ் அண்ணரை நான் முதலில் பார்த்தது எனது ஊரான கரவெட்டியில். அவரது வீடு எங்கள் வீட்டிலிருந்து ஒரு மைல் தூரம் எனலாம். நான் படிக்கின்ற காலத்தில் எனது சக மாணவ நண்பர்கள் பலர் துன்னாலையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தான் ஒருமுறை இவர் கொடிகாமம் வீதியில் சைக்கிளில் போகும்போது - இவர்தான் வீரகேசரி 'டீ.பீ.எஸ். ஜெயராஜ் 'என்று காட்டினர். பின்னர், நான் நிருபரான பின்னர், அவர் ஊருக்கு வந்தபோது வடமராட்சி நிருபர் தில்லைநாதன் அண்ணர் எனக்கு அவரை அறிமுகம் செய்தார். துன்னாலை எங்கள் கிராமத்துக்கு அடுத்த கிராமம். அதற்கு இடையில் உள்ள பகுதி கட்டைவேலி. ஒல்லாந்தர் கட்டைவேலியையும் வதிரியையும் நிர்வாகப் பிரிவுகளாக வைத்திருந்தனர். இரண்டிலும் மெதடிஸ்த திருச்சபை ஆலயங்கள் உள்ளன. எனது வீடு கரவெட்டிப் பகுதி என்றும் அவரது பகுதி கட்டைவேலி என்றும் அழைக்கப்பெற்றது.

'சருங்கலே' திரைப்படக் காட்சிகள் பலவற்றை இந்தப் பிள்ளையார் கோயிலில் தான் எடுத்தனர். இதன் அருகில்தான் இதன் திரைப்பட ஒருங்கிணைப்பாளர் அமரர் யோகா பாலச்சந்திரனின் பெற்றோர் வீடுமிருந்தது. மெதடிஸ்த ஆலயத்தின் முன்னாலும் ஒரு காட்சி எடுத்தனர். காமினி பொன்சேகா, பரீனாலை வீனா ஜெயக்கொடி ஆகியோர் படப்பிடிப்பின்போது யோகாவின் வீட்டிற் தான் ஓய்வு எடுத்தனர். நாங்கள் பாடசாலை நாட்களில் இதனைப் பார்ப்பதற்காக 'டியூசன்' வகுப்பு முதற்பாடத்தைக் 'கட்' பண்ணினோம்.

பின்னர், இரண்டாயிரங்களில் திரை இயக்குநர் பராக்கிரம நிரியல்ல, திரு. பி. விக்னேஸ்வரனுடன் போய் இந்த இடச் சூழலை ஒரு படத்திற்காகத் திட்டமிட்டதாக அறிந்தேன். நானும் திரை இயக்குநர் சிட்னி சந்திரசேகரவுக்கு இந்தச் சூழலைக் காட்டிய போது தமது அடுத்த படத்திற்கு இங்குதான் வர வேண்டும் என்று அவர் விரும்பினார்.

நெல்லியடிக்கூடாகப் போகும் பருத்தித்துறை - கொடிகாமம் வீதி இந்த வயலைக் கடந்தே போகும். வயல் வெளியில் நின்று பார்க்கும்போது வயலுக்கப்பால் - தூரத்தில் இன்னுமொரு பிள்ளையார் கோயில், அம்மன் கோயில், தச்சன் தோப்பு விநாயகர் கோயில் என்பவை மறைவாகக் காட்சி தரும்; அவற்றின் மணியோசை கேட்கும். இத்தகைய ரம்மியமான இயற்கையும் ஆன்மீகமும் கலந்த பின்புலமே சிறுவர் ஜெயராஜின் சமூகமயமாக்கற் சூழல்களில் ஒன்றாயிருந்துள்ளது.

புகழ்பெற்ற தென்னிந்திய நாதஸ்வரக் கலைஞர்கள், தமிழ்ப் பேராசிரியர்கள் மற்றும் அறிஞர்களின் குரல்களும் இசையும் தூரத்தே ஒலிக்கும் ஒரு பின்னணியில் தான் இவரது இல்லம் அமைந்திருந்தது. வயலும் வயல் சார்ந்த அந்தப் பகுதியின் ஆலய மணிகளின் ஓசையைத் தென்றல் காற்று அசைத்துக் கொண்டு வரும். 'இந்த வயலும் வயல் சார்ந்த அழகை நாம் இனி எப்போது காணப்போகிறோம்?' என்று கலைஞர் கே.எஸ். பாலச்சந்திரன் அடிக்கடி கூறுவார்; அவரும் இந்த வயல் காற்றுக்குச் சொந்தமானவர் தான்.

மாமனிதர் மருத்துவர் ஜெயகுலராஜா, மாமனிதர் பொன். சத்தியகுமார், தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் பூரணம்பிள்ளை, முன்னாள் வானொலிப் பணிப்பாளர் அரச. ஐயாத்துரை, ஜனா

திபதி சட்டத்தரணி சுமந்திரன் மற்றும் கலைஞர் கே.எஸ். பாலச்சந்திரன் எனப் பல கல்விமான்களையும் கலைஞர்களை யும் தன் உறவாகவும் சுற்றமாகவும் கொண்டவர் ஜெயராஜ்.

இராசையா ரீச்சர், வடிவேலு ரீச்சர், தணிகாசலம் ரீச்சர் என ஆங்கில ஆசிரியர்களைச் சுற்றமாகவும் உறவாகவும் கொண் டவர் ஜெயராஜ். அவரது தாயாரான திருமதி மங்கையற்கரசி சபாபதி அவர்களும் ஒரு ஆங்கில ஆசிரியையாவர்.

நான் ஒருமுறை மாமனிதர் சத்தியகுமார் பற்றி இவரிடம் கேட்ட போது, மூத்த போராளி பொன் சிவகுமாரன் 'சயனைட்' கடித்து யாழ். மருத்துவமனையிலிருந்தபோது சத்தி இளநிலை மருத் துவராயிருந்தே சிவகுமாரனை வெளியில் கடத்துவதற்கு உதவியமை பற்றிக் குறிப்பிட்டுப் பழைய கதைகளை மீட் பார். அதுபோல, மாமனிதர் ஜெயகுலராஜா பற்றிக் கேட்டபோது அவர் சிறையிலிருந்த காலத்தில் நடந்த தமது அனுபவத்தை யும் உறவு முறையையும் பகிர்ந்தார்.

நான் ஈழநாடு, தினபதி நிருபராகவிருந்த காலத்தில் அவர் 'தி ஐலண்ட்' இதழில் அலுவலக நிருபராகப் பணியாற்றினார். அவர் ஊருக்கு வந்தபொழுது என்னை நேரில் அவருக்கு அறிமுகம் செய்தவர் தில்லைநாதன், அதன் பின்னர், அவர் ஊர் வரும்போதெல்லாம் நாம் அவரைச் சந்திப்பது வழக்கம்.

'தி ஐலண்ட்' இதழில் Behind the cudgen cuirtains' பத்தியை எழுதிக்கொண்டிருந்தார். ஊருக்கு வரும்போதெல்லாம் அவர் எனது வீட்டுக்கு வந்து, தான் வந்திருக்கும் தகவலைச் சொல்லி விட்டுச் செல்வார். என்னைப் போன்ற இளம் ஊடகர்களுக்கு செய்தி சேகரிப்பதிலும் உடனுக்குடன் அனுப்புவதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். அந்நேரம், வடமராட்சியில் முக்கிய இயக் கங்கள் வளர்ந்து கொண்டிருந்தன. இயக்கங்களின் மூத்த வர்கள் பலர் எனது சக மாணவர்கள், உறவினர்கள் என்ப தால் இயக்கக் கதைகளை என்னிடம் அறிவதில் அவருக்கு ஆர்வமிருந்தது. என்னிடம் பெற்றவை பல பின்னர் அவர் பத்தியில் வந்திருக்கின்றன.

தகவற் கனிகளைக் கதையாடல் மூலம் கொக்கை போட்டுப் பிடுங்குவதில் அவர் வல்லவர் என்பதை அவருடன் பழகிய வர்கள் அறிவர். அதேபோல, அவற்றை அளவுப் பரிமாணத் துடன் கலந்து சுவைபடச் சாறாக்கி வாசகர்களுக்கு தேவை யான வகையில் வழங்கும் ஆற்றலும் அவருக்கேயுரியது.

ஐலண்டிலிருந்து விலகிய பின்னர் அவர் Saturday Review இதழில் அமரர் காமினி நவரத்னவுடன் இணைந்து பணியாற் றிய காலத்தில் எனது சகோதரருடன் நட்பாகவிருந்தார். எனது அண்ணர் அப்போது ஈழமுரசில் பணியாற்றினார். Saturday Review முதல் ஏனைய நாளிதழ்களும் அப்போது ஆரம் பத்தில் 'லெட்டர் பிரஸ்' அச்சு முறையில் வெளிவந்தன. சில வேளைகளில் படங்கள் தேவைப்படும்போது அதற்கான பட அச்சுகளை ஈழமுரசில் கடன் வாங்குவதாகவும் அதற்காக அவர் நேரில் வந்துவிடுவார் என்றும் எனது தமையனார் சொல் வார். ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் தேவையில் ஏனைய யாழ். இதழ்கள் ஆற்றிய பங்களிப்புகள் அளப்பெரியது. சற்றடே நிறுவனத்தின் தோற்றத்தில் ஈழநாடு நிறுவுநர் கே.சி. தங்க ராஜா அவர்களுடைய பங்களிப்பு முக்கியமானது.

அவர் சிலகாலம் 'திசை' இதழின் பொறுப்பாளராகவும் இருந் தார். அப்போது, இலங்கை வானொலியில் பணியாற்றிய வரும் எனது அறைச் சகாவுமான குகமூர்த்தி அண்ணரின் நல்லூர் வீட்டில் அவர் தங்கியிருந்தார். அந்த வீட்டில் தான் அதற்கு முன்பு அமரர் ஏ.ஜே. கனகரத்னாவும் தங்கியிருந்தார். இந்திய இராணுவம் போரைத் தொடங்கிய வேளையில், ஜெயராஜ் அண்ணர் கொழும்புக்குத் திரும்பிவிட்டார். அக்கா லப்பகுதியில் நான் ரூபவாஹினியில் பணியாற்றிக்கொண்டி ருந்ததால் ஹம்டன் லேனில் (Hampton Lane) தங்கியிருந் தேன். ஜெயராஜ் அண்ணர் 'பசல்ஸ் லேனில்' (Fussell's Lane) வசித்துவந்தார். அவர் ரூபவாஹினிக்கு வரும்போது அர்ச்சுனா ரணதுங்க, ரவி ஜோன் ஆகியோரைச் சந்திப்பார்; அர்ச்சுனா வுடனான அவரது நட்பு அந்த ஊடக நிறுவனத்தில் தான் தொடங்கியிருந்தது.

இதற்கிடையில், எனது அறையில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டபோ துதான் குகமூர்த்தி என்னுடன் வந்து தங்கினார். அவரது வரு கைக்குப் பின்புதான் எங்கள் அறை ஒரு முக்கிய சங்கம இடமாக மாறியது. குகமூர்த்தியைச் சந்திப்பதற்காக ஜெயராஜ் அண்ணர் அடிக்கடி எங்கள் அறைக்கு வந்து, நீண்ட நேரம் அமர்ந்து பேசி மகிழ்ந்துவிட்டுச் செல்வார். வீரகேசரி ஊடகவி யலாளர் கேதாரநாதனும் இடையிடையே வந்து இந்த உரை யாடல்களில் கலந்துகொள்வார். 'சரிநிகர்' இதழ் தொடங்கிய காலம் முதல் அதன் ஆசிரியராக இருந்த பேராசிரியர் சேரன், எஸ்.கே. விக்னேஸ்வரன், சிவகுமார், கனகலிங்கம், நிலாந் தன், ஏ.எஸ். பன்னீர்ச்செல்வன், அ. யேசுராசா எனப் பல ஆளுமைகளும் வந்து சங்கமிக்கும் ஓர் இடமாக, குகமூர்த் தியின் வருகை எனது அறையை மாற்றியமைத்தது.

ஜெயராஜ் அண்ணருடன் ஆரம்பத்தில் தொடர்பிலிருந்த நான் இடையில் அந்தத் தொடர்பைத் தவிர்த்திருந்தேன். நண்பர் குகமூர்த்தி காணாமலாக்கப்பட்டதற்குப் பின்னர் அவருடன் தொடர்பு இருக்கவில்லை. குகமூர்த்தி காணாமலாக்கப்பட முன்னர் இவர் விசாரிக்கப்பட்டார்.

குகமூர்த்தி கைதானதற்கு (அவர் வேலை முடிந்து வெளியில் வரும்போது ஜீப் ஒன்றில் ஏற்றப்பட்டுத்தான் அழைத்துச் செல்லப்பட்டார்) இவர் மீதான விசாரணையும் காரணமாயி ருக்கலாமோ - என்று அப்போது பேசப்பட்டது. ஆனால், அவ ரது விசாரணை அவர் பற்றியதில்லை என்று அவர் பின்னர் விளக்கினார். எனக்கும் சொன்னார்.

யாழ்ப்பாணத்தில் இந்திய இராணுவ - புலிகள் மோதல் நடை பெற்றபோது அவர் பேட்டி எடுத்துச் செய்தியும் சேகரிக்க 'வான்' ஒன்றிற் போனார். குகமூர்த்தியும் அவருடன் போனார். என்னையும் அழைத்தனர். எனக்கு ஒளிப்பதிவு வேலையிருந் ததால் நான் போகவில்லை. அங்கிருந்து வரும்போது பல படங்கள் விபரங்களுடன் வந்தனர். கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற அனர்த்தங்கள் உட்படப் பல படங்கள் இவர் கொண்டுவந்ததாக அறிந்தேன். பிரதித் தலைவர் மாத்தை யாவைப் பேட்டி கண்டு வந்தார். மாத்தையா ஏற்கனவே இவ ருடன் நட்பும் மதிப்பும் வைத்திருந்தார். இவருடன் நட்பைப் பேணிய மற்றவர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம். அந்த நட்பு எண்பதுகளிற் தொடங்கியது. அதுபற்றிப் பின்னர் வருவேன்.

நல்லூரில் வைத்து மாத்தையாவைப் பேட்டி காணும்போது அவர் அவசரமாகக் களத்திற்குப் போக வேண்டியிருந்ததால் 'அண்ணர் நீங்கள் விரிவாக எழுதுங்கள் 'என்று சில விடயங் களைச் சொல்லிப் போனதாக அறிந்தேன். மாத்தையா இவர் மீதான நம்பிக்கையிலேயே அப்படிச் சொல்லியுள்ளார். இன்றுள்ள ஊடகர்களுக்கு 'நீங்களே எழுதுங்கள்' என்று எவராவது அரசியற் பிரமுகர் சொல்லமுடியுமா, என்ன?. அப் படியான நம்பகத்தன்மை மிக்க ஊடகர்கள் மிக்க ஊடகப் பாரம்பரியம் ஒன்று ஜெயராஜ் அண்ணரின் காலத்தில் இருந் திருக்கிறது என்பதைக் குறிப்பிடவே இந்தக் கதையைச் சொன்னேன்.

'ஆப்கானிஸ்தானில் சோவியத் ஒன்றியம் பெற்ற பாடத்தை இந்தியா எங்களிடம் பெறும்' - மாத்தையா. மறுநாள் 'தி ஐலண்ட்' (The Island) பத்திரிகையில் இப்படியொரு செய்தி பெரிய கொட்டை எழுத்துகளில் தலைப்பாக வெளியானது. இந்தச் செய்தி வெளியானதைத் தொடர்ந்து, ஜெயராஜ் அண் ணனிடம் விசாரணை நடத்தப்பட்டது. அன்றைய காலகட் டத்தில் தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத் துலத்முதலி, கடும்போக்குடன் செயற்பட்ட மூன்று தமிழ்ப் பத் திரிகையாளர்கள் மீது இந்த விவகாரத்தில் கடுமையான (தீவி ரமான) நடவடிக்கை எடுப்பதில் உறுதியாக இருந்தார்.

அந்த மூன்று பத்திரிகையாளர்களும் முறையே த. சபாரத் தினம் (டெய்லி நியூஸ்), டி.பி.எஸ். ஜெயராஜ் (தி ஐலண்ட்) மற்றும் இ. கந்தசாமி (ஈழநாடு) ஆகியோர் ஆவர். இத்த கவலை சபாரத்தினம் அவர்களே குறிப்பிட்டிருந்தார். இது பற்றி ஒருமுறை கந்தசாமி அண்ணனுடன் நான் பேசிக்கொண் டிருந்தபோது, 'தங்களை எச்சரிக்கையாக இருக்குமாறு 'வீர கேசரி' பத்திரிகையாளர் அன்ரன் எட்வார்ட்டும் கூறியிருந்தார்' என்று அவர் என்னிடம் தெரிவித்தார்.

ஜெயராஜ் அண்ணர் எழுதி 'தி ஐலண்ட்' (The Island) பத்திரி கையில் வெளியிட்ட மாத்தையாவின் பேட்டி அன்றைய ஜே.ஆர். அரசுக்கு உவப்பாக அமையவில்லை. மாறாக, புலிகளின் அந்த எச்சரிக்கை அரசுக்கு பெரும் அதிர்ச்சியை யும் கோபத்தையுமே தந்தது. அந்த ஆத்திரத்தை அவர்கள் பத்திரிகையாளர் மீது காட்ட முற்பட்டனர்.

'தி இந்து' நாளிதழின் கொழும்பு நிருபராகவும் பணியாற்றி வந்த ஜெயராஜ் அண்ணரை ஜே.ஆர். அரசின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கு, இந்தியாவின் முன்னணி ஊடகவியலாளர் கள் சிலரின் தலையீடும் 'பிரண்ட்லைன்' (Frontline) சஞ்சிகை யின் பின்னணியும் பெரும் உதவியாக இருந்தன. எனினும், அவரை விடுவிப்பதற்கு அன்றைய அதிபர் ஜே.ஆர். ஜெய வர்த்தன விதித்த பிரதான நிபந்தனை - அவர் இனி இலங் கையில் இருக்கக் கூடாது என்பதாகும். இதன் காரணமாக, விடுதலையான கையோடு அவர் நாட்டிலிருந்து வெளியேறி, பின்னர் கனடாவில் நிரந்தரமாகக் குடியேறினார்.

எனது அறை நண்பரான குகமூர்த்தி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து வெளியே வரும்போது கடத்தப்பட் டார். அவர் காணாமல் ஆக்கப்பட்டார். இது தொடர்பாக நாலாம் மாடியில் நான் விசாரிக்கப்பட்டேன். இதற்குப் பின்னர் ஜெயராஜ் அண்ணருடன் எனக்குத் தொடர்பிருக்கவில்லை. மீண்டும் சமாதான காலத்திற் தான் அவருடன் தொடர்பு ஏற் பட்டது. முகநூலில் எனது மெசெஞ்சரில் வந்து தனக்கு அழைப்பு எடுக்கும்படி செய்தி அனுப்பியிருந்தார். 'மெசெஞ் சரில்' முதலாவது நாள் நீண்ட நேரம் பேசியதுடன் எமது ஊடாட்டம் மீண்டும் தொடர்ந்தது. ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் 'மெஸெஞ்சரில்' வாழ்த்து அனுப்புவது அவரது பழக்கங்களில் முக்கியமானதொன்று.

தென்னிலங்கை அரசியல் பிரமுகர்கள் மற்றும் கலைஞர் களின் வரலாறுகளைத் தான் எழுதும்போது, அவர்களின் உற வினர்களே தமக்கு நன்றி தெரிவித்துக் குறுஞ்செய்திகளை அனுப்புவதாகவும், தொலைபேசியில் அழைத்துப் பேசுவதா கவும் ஜெயராஜ் அண்ணர் குறிப்பிட்டிருந்தார். அவர் அவ் வாறு சுட்டிக்காட்டிய பெயர்களில் ஒருவர், இலங்கையின் முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல்லின் (Ronnie de Mel) மகள் ஆவார்.' நம்மைப் போன்ற ஊடகவியலாளர்களுக்கு, நாம் எதிர்பாராத இடங்களிலிருந்து கிடைக்கும் இத்தகைய நன்றியறிதல்கள்தான், நாம் பெறும் ஏனைய விருதுகளையும் பாராட்டுகளையும் விடப் பெரியவை; அவை தரும் மனநிறைவே தனி' என அவர் அன்று கூறிய வார்த்தைகள் இன்றும் என் மனத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

அவருடன் பேசும் ஒவ்வொரு நாள் உரையாடல்களின்போதும், 'ஓஃப் த ரெக்கார்ட்' (Off the record) தவிர்ந்த ஏனைய விப ரங்களைத் தொகுத்து ஒரு சிறு நூலாகவே வெளியிடலாம் என்று அவரிடமே நான் நகைச்சுவையாகக் கூறியதுண்டு. நாம் அவரிடம் ஒரு தகவலைப் பகிர்ந்தால், அவர் அதற்குப் பதிலாக இரண்டு மட்டுமல்ல, மூன்று நான்கு தகவல்களை மேலதிகமாகத் தருவார். ஆங்கிலப் பத்திரிகைத்துறையில் அவருக்கிருந்த நீண்ட அனுபவம், அவருக்குப் பலதரப்பட்ட நண்பர்களைப் பெற்றுத் தந்திருந்தது. குறிப்பாக, அவரது சிங்கள மற்றும் ஆங்கில மொழியாற்றல் அவரது பத்தி எழுத்து களுக்கு (Column writing) மேலும் வளம் சேர்த்தது. இவ்வா றாக நாங்கள் அமர்ந்து பேசிய சந்திப்புகளில் கிடைத்த தக வல்களையும், தனது சொந்தத் தேடல்களையும் ஜெயராஜ் அண்ணர் 'தி ஐலண்ட்' (The Island) பத்திரிகையில் தான் எழு திவந்த 'Behind the Cadjan Curtain' (கிடுகுக் கிடுகிற்குப் பின்னால்) என்ற புகழ்பெற்ற அரசியல் பத்தியில் பதிவு செய் தார். அந்தப் பத்திக்கு அக்காலகட்டத்தில் வாசகர்கள் மத்தி யில் பெரும் வரவேற்பும் மதிப்பும் இருந்தது. வடமராட்சி நெல் லியடியைச் சேர்ந்தவரும், 'தி ஐலண்ட்' பத்திரிகையின் தீவிர வாசகருமான பேராசிரியர் துரைராஜா அவர்கள், இப்பத்தி யின் முதன்மை அபிமானிகளில் ஒருவராகத் திகழ்ந்தார்.

'கிடுகுவேலிக்குப் பின்னால்' (Behind the Cadjan Curtain) என்ற பொருள்படும் அந்த அரசியல் பத்தியில், பல உள் வீட்டு விவகாரங்களையும் இரகசியங்களையும் துணிச்சலு டன் எழுதுவதற்கு, நாங்கள் மேற்கொண்ட பல மாலைநேரச் சந்திப்புகள் தனக்குப் பெரிதும் உதவியதாக அவர் குறிப் பிடுவார். அவரது ஆங்கில, சிங்கள மொழியாற்றலில் பேச்சுச் சிங்களமும் (Colloquial Sinhalese) மிக முக்கிய பங்கினை வகித்தது. அவரது தந்தையார் சட்டத் தொழில் புரிந்ததன் காரணமாக அவர்கள் குருநாகலில் வசித்து வந்தனர்; அந்தச் சூழலே ஜெயராஜுக்கு இயல்பான சிங்கள உரையாடல் புலமை யைத் தந்திருந்தது. அவர் 'வீரகேசரி' நாளிதழின் நிருபராகத்

தனது ஊடகப் பயணத்தைத் தொடங்கியதும் இந்தக் குரு நாகல் காலகட்டத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

1983 ஜூன் காலப்பகுதியில், ஆங்கில ஊடக நண்பர்களுட னும் பிரபல சிங்களத் திரைப்பட இயக்குநர் ஒருவருடனும் மாலைப்பொழுதில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த வேளை யில், அந்த இயக்குநர் கதையோடு கதையாக ஒரு திடுக் கிடும் தகவலைப் பகிர்ந்துகொண்டதாக ஜெயராஜ் அண்ணர் குறிப்பிட்டார். 'இங்கு ஒரு பெரிய அசம்பாவிதம் (சம்பவம்) நடைபெறப்போகிறது. வடக்கில் ஏதாவது அசம்பாவிதம் நடந் தால், அதனைச் சாட்டாக வைத்து தெற்கில் இதனை அரங் கேற்றலாம்; அப்படித்தான் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிந்துகொண்டேன்' என்று அந்த இயக்குநர் தன்னிடம் கூறியதாக அவர் தெரிவித்தார்.

ஒருமுறை மூத்த ஒலிபரப்பாளர் எஸ்.கே. பரராஜசிங்கம் அவர் களும் நானும் மறைந்த தலைவர் தங்கதுரை அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபொழுது தங்கத்துரையிடம் பரா அண் ணர் 'நீங்கள் எப்படித் தமிழ் ஈழம் கேட்டீர்கள்? அதற்கு எப் படித் துணிவு வந்தது?' என்று கேட்டார். அதற்குத் தங்கதுரை 'பரா... அது நாங்கள் சில முடிவுகளை எடுக்கவேண்டி வந்த மைக்கு ஒரு பக்கபலம் அன்று எமக்கிருந்தது. இரண்டு நாடு கள் எமக்கு உதவத் தயாராகவிருந்தன' என்றார்.

நாடுகள் எவை? என்றார் பரா.

'அதைச் சொல்ல மாட்டேன். ஆனால், நாங்கள் அந்தப் பலத் துடன் தான் இருந்தோம்' என்றார்.

இந்தக் கதையை நான் ஜெயராஜ் அண்ணருக்குப் பகிடியா கச் சொன்னபோது, 'இல்லை ஐசே! அதில உண்மை இருக்கு. அவர் உண்மையைத்தான் சொன்னார். நிறை மாலை நேரத் தில் சொல்லவில்லை; நிறைவாய்த்தான் சொன்னார்' என்றார். தான் சென்னையில் ஒரு தடவை சிவசிதம்பரம் அவர்கள் தனியாக இருந்தபோது இதே கேள்வியைக் கேட்டபோது அவர் சில கதைகளைச் சொன்னார் என்றார். (அவை இங்கு இப்போது அவசியமில்லை என்று நினைக்கிறேன், மன்னிக் கவும்) அதுவும் தங்கண்ணர் சொன்னதை ஒத்ததாகவேயி ருந்தது.

இதனை நான் சொல்வதற்குக் காரணம் அவருக்குப் பலவிட யங்கள் தெரிந்திருந்தன, நாங்கள் ஏதாவது ஒன்றைக் கதைக் கும்போது அவை அவர் வாயில் இருந்து புறப்படும். அப்படி யானதொரு தகவற்களஞ்சியமாயிருந்தார். விடுதலைப்புலி கள், போராளி இயக்கங்கள் பற்றிய தகவல்களும் அப்படியே. மூத்த தளபதிகளுடனான நீண்டகால நட்பும் உறவுமே அதற் குக் காரணமாயிருந்தது எனலாம்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூத்த ஆளுமையான முத்துக்கு மாரசாமி காலமானபோது, அவரைப் பற்றிய நினைவுகளை நான் ஜெயராஜ் அண்ணருடன் பகிர்ந்துகொண்டேன். அன் றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பொலிஸ் அத்தியட்ச கராக (SP) இருந்த ஆரியசிங்க, முத்துக்குமாரசாமி ஒரு நீத வானின் (Magistrate) மகன் என்று என்னிடம் கூறிய தகவலை யும் அவரிடம் குறிப்பிட்டேன். இதைக் கேட்டதுமே ஜெயராஜ் அண்ணர், முத்துக்குமாரசாமியுடனான தனது தனிப்பட்ட நட்பு, அவர்கள் ஒன்றாக உணவருந்தச் சென்ற நினைவுகள், கொழும்பு டிக்மன்ஸ் வீதி (Dickman's Road) அனுபவங்கள் மற்றும் அவருடன் இருந்த நாகராஜா (வாத்தி) உள்ளிட்ட நண்பர்களைப் பற்றிய பல விபரங்களை அடுக்கிக்கொண்டே போனார். மேலும், பொலிஸ் அதிகாரி ஆரியசிங்கவை ஒரு முறை சந்திப்பதற்காக யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) கிரிக்கெட் அணியினர் நிதி திரட்டச் சென்றபோது, மாணவனாகத் தானும் அங்கு சென்றிருந்த ஒரு சுவாரசி யமான கதையையும் அவர் குறிப்பிட்டார். அன்று தங்களைச் சந்தித்த ஆரியசிங்க, 'உங்களுடைய வசதிபடைத்த கல்லூ ரிக்குக் கொடுக்கும் பணத்தை, நான் எனது பிரதேசத்தில் உள்ள ஏழைப் பாடசாலை ஒன்றுக்குக் கொடுக்கலாம் அல் லவா?' என்று கூறி, பணம் தராமல் தங்களைத் திருப்பி அனுப்பிய சம்பவத்தை அவர் விவரித்தார். இவ்வாறாக, அவரிடம் ஒரு கதையைத் தொடங்கினால் அது அப்படியே நீண்டதொரு நினைவலைத் தொடராக நீண்டு கொண்டே செல்லும். அவருடன் பேசிய உரையாடல்களை முழுமையாக எழுதிச் சென்றால், இந்தப் பத்தி இன்னும் நீண்டு கொண்டே போகும்.

ஜெயராஜ் அண்ணரின் சொந்த ஊரான கரவெட்டியின் மத மற்றும் பண்பாட்டுச் சூழல் இங்கு குறிப்பிடத்தக்கது. குறிப் பாக, அங்குள்ள கத்தோலிக்க, மெதடிஸ்த திருச்சபைகளின் உறவுநிலையும் வழிபாட்டு முறைகளும் தனித்துவமானவை. பொதுவாகவே, இவ்விரு பாரம்பரியங்களிலும் வழிபாட்டின் போது ஆண்களும் பெண்களும் கூட்டாக இணைந்து, முழுக் குரலில் பாடல்களைப் பாடும் வழக்கம் இருந்தது. கத்தோ லிக்க வழிபாட்டு முறையில் விவிலிய (பைபிள்) வாசிப்பைக் காட்டிலும் கூட்டுப் பாடல்களுக்கே (Chorus) அதிக முக்கி யத்துவம் வழங்கப்பட்டது. ஆனால், புரட்டஸ்தாந்து (மெத டிஸ்த) மரபில் விவிலிய வாசிப்பும், அதுகுறித்த விளக்கங் களுமே பிரதானமாக இருந்தன. அதேபோல், கத்தோலிக்க மரபில் இயேசு கிறிஸ்துவின் தாயான கன்னி மரியாவை (மாதா) வழிபடுவதும், குருவானவர் (பாதிரியார்) முன்னிலையில் பாவ மன்னிப்புப் பெறும் 'பாவசங்கீர்த்தனம்' செய்வதும் முக்கிய வழிபாட்டு முறைகளாகும். ஆனால், மெதடிஸ்த அல்லது புரட் டஸ்தாந்து மரபில் மாதாவை வணங்குவதோ, கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் ஒரு இடைத்தரகர் (குருவானவர்) மூலமாகப் பாவமன்னிப்புப் பெறுவதோ கிடையாது. இறை வனுக்கும் மனிதனுக்கும் இடையில் தூதர்கள் எவரும் தேவை யில்லை என்ற இந்த இறையியல் கருத்தே அவர்கள் கத்தோ லிக்கத்திலிருந்து பிரிவதற்கும் முக்கிய காரணமாக அமைந்தது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் பார்வையில், நமது சமூகச் சூழலில் கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்தாந்து மரபு கள் தொழிற்பட்ட முறைகளுக்குப் பின்னால் ஒரு வர்க்கநிலைச் சாயல் (Class structure) இருந்தது. இந்தச் சமூக, மதப் பின் னணியிலிருந்தே தந்தை செல்வநாயகம் போன்ற ஆளுமை கள் உருவாகி வந்தனர். ஒரு புரட்டஸ்தாந்து மரபுப் பின்ன ணியைக் கொண்டிருந்த போதிலும், தந்தை செல்வா அவர் களால் பெரும்பான்மையான சைவ மக்களுக்கும் கத்தோ லிக்க மக்களுக்கும் ஒட்டுமொத்தத் தலைமையாகப் பரிண மிக்க முடிந்ததன் வரலாற்றுப் பின்னணியை இதனூடாக நாம் புரிந்துகொள்ளலாம்.

பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிட்ட அந்த வர்க்கநிலைச் சாயல் ஒருபுறமிருந்தபோதிலும், கரவெட்டியில் எமது கத்தோலிக்க சமூகத்திற்கும் மெதடிஸ்த சமூகத்திற்கும் இடையே ஆழமான தொரு பண்பாட்டுத் தொடர்பு நிலவி வந்தது. நான் சிறுவனாக இருந்த காலத்தில், நத்தார் பண்டிகை நாள்களில் எமது கரவெட்டி கத்தோலிக்க நத்தார் பாடல் குழுவினர், ஜெயராஜ் அண்ணரின் ஆலயமான கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை ஆலயத்திற்குச் சென்று ஓர் இரவு முழுதும் நத்தார் பாடல்களைப் பாடுவது வழக்கம். அதேபோல, மெதடிஸ்த திருச்சபையினரும் எமது கத்தோலிக்க ஆலயத்திற்கு வந்து பாட்டிசைப்பார்கள். சில பாடல்களை இரு குழுவினரும் இணைந்து கூட்டுக்குரலில் (Chorus) பாடிய நெகிழ்ச்சியான நினைவுகளும் உண்டு.

ஜெயராஜ் அண்ணருடன் இதுபற்றி நான் பேசியபோது, அவர் சில முக்கிய வரலாற்றுத் தரவுகளைப் பகிர்ந்துகொண்டார். புரட்டஸ்தாந்து (மெதடிஸ்த) மதப்பரப்பலானது ஆரம்பத்திலிருந்தே கல்வியோடு மிக நெருக்கமாகத் தொடர்புபட்டிருந்ததாகவும், அதனாலேயே சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்ட வர்க்கநிலைச் சார்பு ஏற்பட்டிருக்கலாம் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். இதற்குச் சான்றாக, யாழ்ப்பாண வளாகம் (யாழ். பல்கலைக்கழகம்) தொடங்கப்பட்ட ஆரம்பகாலத்தில், அங்கு நூலக வசதிகள் இல்லாதபோது, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியே (Jaffna College) தனது பெரும் நூலக வளங்களை வழங்கி உதவியதை அவர் நினைவூட்டினார். எனினும், பிற்காலத்தில் உருவான தமிழ் அரசியல் புறச்சூழ் நிலைகளும் ஒடுக்குமுறைகளுமே, அதுவரை விலகியிருந்த கத்தோலிக்கக் குருவானவர்களுக்கும் மெதடிஸ்த போதகர்களுக்கும் இடையில் ஒரு வலுவான ஒன்றிணைவை ஏற்படுத்தின என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன் தொடர்ச்சியாக, 1970-களில் கொண்டுவரப்பட்ட இலங்கையின் முதலாவது குடியரசு அரசியலமைப்பின் (தமிழர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திய பின்னணி) விளைவாகவே, 'தைப்பொங்கல்' பண்டிகையைக் கத்தோலிக்கக் கிறிஸ்தவ மக்களும் தமிழர்களின் தேசியத் திருநாளாக எழுச்சியோடு கொண்டாட வேண்டும் என்று அன்றைய யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை அவர்கள் அதிகாரபூர்வமாக அறிவித்தார் என்பதும் இங்கு கூர்ந்து கவனிக்கத்தக்கது.

நான் இறுதியாக ஜெயராஜ் அண்ணரைத் தொடர்புகொள்ள முயன்றது, கனடாவில் காலமான எமது நீண்டகால நண்பர் ஈசன் அண்ணாவின் (கௌரீசன்) பிரிவின் போதாகும். ஜெயராஜ் அண்ணரும் ஈசன் அண்ணாவும் நீண்டகால நண்பர்கள்; இருவரும் இந்தியாவில் ஒன்றாகக் கல்வி கற்றவர்கள். ஈசன் அண்ணாவின் சகோதரர்களான கௌரிசங்கர் மற்றும் கண்ணன் ஆகிய இருவருமே எனது நெருங்கிய நண்பர்கள் ஆவர். இதில் கண்ணன் என்பவரே பிற்காலத்தில் 'சுசீலன்' என்ற பெயரில் அறியப்பட்டவர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை நெல்லியடி மற்றும் கரவெட்டிப் பகுதிக்குள் முதன்முதலில் கொண்டுவந்த குடும்பம் என்று இவர்களது குடும்பம் பரவலாகப் பேசப்பட்ட (விமர்சிக்கப்பட்ட) காலகட்டம் அது. ஒருநாள், கண்ணன் என்னை அழைத்துச் சென்று கோழிச்சாயத்திலும் வேறு பல நிறங்களிலும் சுவரொட்டிகளை எழுதிய அந்த ஆரம்பகால நாள்களை நான் இப்போதும் நினைவுகூர்கிறேன். இவர்களது வீட்டில் வைத்துச் சுவரொட்டிகளை எழுதிய பின்னர், தயா மாஸ்டரின் வீட்டிற்குச் சென்று அங்கும் சுவரொட்டிகளை எழுதுவது வழக்கம். தயா மாஸ்டருடன் எனக்கு நட்பு ஏற்பட்டதும் அன்றிலிருந்துதான். மேலும், ஈசன் அண்ணாவின் இணையர் (மனைவி) எனக்கு மைத்துனி உறவுமுறையானவர் என்பதால், அந்தத் துயரமான செய்தியை ஜெயராஜ் அண்ணருடன் பகிர்ந்து கொண்டு எனது ஆறுதலைத் தெரிவிப்பதற்காகவே நான் அவருக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவரால் அந்த அழைப்பை எடுக்க முடியாமல் போய்விட்டது.

வழக்கமாக நாங்கள் பேசி முடிக்கும்போதெல்லாம், 'நேரமிருந்தால் அழையுங்கள் ஐசே... நான் எப்பொழுதும் இருப்பேன்' என்று கூறுவதுதான் அவரது விடைபெறும் மங்கள கீதமாக இருக்கும். அப்படி நாம் அழைத்து, உடனடியாக அவரால் பதில் தர முடியாவிட்டாலும், பின்னர் அவராகவே எங்களைத் தொடர்புகொள்வார். ஆனால், அன்று அவர் எனது அழைப்பை ஏற்கவில்லை; அதன் பின்னர் அவர் மீண்டும்

வரவும் இல்லை! எனினும், அவர் தனது எழுத்துகளூடாகவும் நினைவுகளூடாகவும் இன்றும் நம்மோடு தொடர்பில்தான் இருக்கிறார். 'தொடர்புகள் என்றும் தொடரட்டும்...' என்று அவர் ஒருமுறை என்னிடம் சொன்ன அதே வார்த்தைகளுடன், இந்த நெகிழ்ச்சியான நினைவுப்பதிவை இத்துடன் நிறைவு செய் கிறேன்.

சென்னை மெரீனா கடற்கரையில், 'தி ஐலண்ட்' பத்திரிகை யின் நிருபராக ஜெயராஜ் அண்ணர் முதன்முதலாக அன்ரன் பாலசிங்கம் அவர்களைச் சந்திக்கிறார். அப்போது தினசரி நாளிதழ்களில் 'கலாநிதி எஸ்.ஏ. பாலசிங்கம்' என்றே அவரது பெயர் வெளிவந்து கொண்டிருந்தது. அந்த முதல் சந்திப்பில், பாலசிங்கம் அவர்கள் ஜெயராஜிடம் கேட்ட முதலாவது கேள்வி மிகவும் சுவையானது; 'நீர் கொழும்பா?' என்பதுதான் அது. அதற்கு ஜெயராஜ் அண்ணர், 'இல்லை, நான் கரவெட்டி' என்று சொன்னதும், பாலசிங்கம் அவர்களின் முகத்தில் ஏற் பட்ட அதிர்ச்சியையும், அதைத் தொடர்ந்த மலர்ச்சியையும் ஜெயராஜ் அண்ணர் (பிற்காலத்தில்) எனக்கு நேரில் செய்து காட்டியது இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது. அவர் இதனை விவரிக்கும்போது தில்லைநாதன் அண்ணரும் என்னுடன் இருந்தார். 'உமது பெயர் 'ஜெயராஜ்' என்றதும், நீர் கொழும்புப் பின்னணியைச் சேர்ந்தவராக இருப்பீரோ என்று தான் அப்படி நினைத்தேன்' என்று பாலசிங்கம் அவர்கள் பின்னர் கூறினாராம்.

'வீரகேசரி' நாளிதழ் மற்றும் அவர்களின் சொந்த ஊரான 'கர வெட்டி' ஆகிய இரு பொதுவான விடயங்களும், அவர்களுக்கு இடையிலான உரையாடலை மேலும் சுவாரசியமாக்கின. வீர கேசரி மற்றும் கரவெட்டியின் பழைய நினைவுகளைப் பால சிங்கத்தார் ஆர்வம் பொங்கப் பகிர்ந்து கொள்ளத் தொடங்க, அன்று மாலை தொடங்கிய அந்த உரையாடல் நிறைவடை வதற்கு இரவு எட்டு ஒன்பது மணியாகிவிட்டது. இச்சந்திப்பு முடிந்து (யாழ்ப்பாணத்து) ஊருக்கு வந்திருந்த ஒரு காலகட் டத்தில்தான் ஜெயராஜ் அண்ணர் இந்த விபரங்களை என்னி டம் பகிர்ந்துகொண்டார்.

'என்னை ஊரில் எல்லாரும் 'ஸ்ரனி' (Stanny) என்றுதான் அழைப்பார்கள்' என்று குறிப்பிட்ட ஜெயராஜ் அண்ணர், தனது நெருங்கிய நண்பர்கள் சிலரைப் பற்றியும் அன்று பாலசிங்கத் தாரிடம் சொல்லியுள்ளார். கட்டைவேலி, துன்னாலை தொடங்கி குடாரப்பு, சாரையடி, உடுப்பிட்டி, கூவில் எனத் தங்களின் பூர்வீக நிலப்பரப்புகள் சார்ந்த பல ஊர் அனுபவங்களை, அவர்கள் இருவரும் சந்தித்த முதல் நாளிலேயே ஒருவரோடு ஒருவர் அத்தனை நெருக்கமாகப் பகிர்ந்து கொண்டார்களாம்.

அந்தச் சந்திப்பு முடியும் போது, 'எழுதும், தொடர்ந்து எழு தும். 'தி ஐலண்ட்' பத்திரிகையின் போக்கிற்கு ஏற்ப நீர் எழுதி னாலும், எங்களை மறந்துவிடாதேயும் தம்பி. உம்முடைய உதவி எங்களுக்கு எப்போதும் வேண்டும். எங்கள் தொடர்பு என்றும் தொடரட்டும், தொடரும்' என்று கூறி, ஜெயராஜ் அண் ணருக்குக் கைகுலுக்கித் தோளோடு அணைத்து விடைபெற் றாராம் பாலசிங்கத்தார். பிற்காலத்தில், தனது இறுதிக்காலப் பகுதியில் பாலசிங்கம் அவர்கள் ஜெயராஜ் அண்ணரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, மிகுந்த உரிமையுடன் மனம்விட்டுப் பேசிய பல கதைகளை அவர் என்னிடம் பகிர்ந் துகொண்டார். அப்போது, மெரீனா கடற்கரையில் பாலசிங் கத்தார் அன்று அவரிடம் சொன்ன அதே வார்த்தைகளை நான் ஜெயராஜ் அண்ணருக்கு நினைவுபடுத்தினேன். அதைக் கேட்டு வியந்தவர், 'நீர் இன்னும் அதை நினைவில் வைத்தி ருக்கிறீரே ஐசே!' என்றார். அதற்கு நான், 'அன்று ஊரில் வைத்து எனக்கும் தில்லை அண்ணருக்கும் நீங்கள் சொன்ன கதை இது; எப்படி மறக்கும்?' என்றேன்.

1990-களில் ஜெயராஜ் அண்ணருக்கு ஒரு பெரும் அனர்த்தம் (நெருக்கடி) ஏற்பட்டபோது, 'ஸ்ரனி அங்கிள்' (ஜெயராஜ் அண்ணர்) அந்தச் சம்பவத்தோடு தொடர்புடையவர்களைக் கடுமையாகச் சாடியதாகப் பின்னாட்களில் நான் அறிந்தி ருந்தேன். நான் மேலே குறிப்பிட்டிருந்த அவரது நெருங்கிய ஊர் நண்பர்களில் ஒருவரிடமும், இந்த விவகாரம் குறித்த தனது ஆழமான கவலையை அவர் பகிர்ந்துகொண்டதாக அறிந்தேன்.

எண்பதுகளில் மெரீனா கடற்கரையில் வைத்து பாலசிங்கத் தார் ஜெயராஜிடம் சொன்ன, 'எங்கள் தொடர்பு என்றும் தொட ரட்டும்...' என்ற அந்த வார்த்தைகள், பிற்காலத்தில் (2002) ஏற்பட்ட சமாதான ஒப்பந்தக் காலகட்டத்தில் மீண்டும் புதுப் பிக்கப்பட்டுத் தொடர்ந்தன. பாலசிங்கத்தார் தனது இறு திக்கால நாள்களில், தான் மிகவும் மதித்துப் போற்றிய தனது உன்னதமான நண்பர்களுள் ஒருவராக இந்த ஊர் பழைய நண்பரான ஜெயராஜ் அண்ணரையும் கருதிப் பேசினார்.

இருவரதும் சிறுவயதுக் காலத்தில், கரவெட்டி கத்தோலிக்க புனித அந்தோனியார் ஆலயத்திலும் மெதடிஸ்த தேவாலயத் திலும் போதிக்கப்பட்ட மன்னிப்பு, தியாகம், புரிந்துணர்வு போன்ற ஆன்மீக விழுமியங்களின் பிணைப்போ, அல்லது 1982-இல் சென்னையில் தொடங்கிய 'தொடர்புகள் தொட ரட்டும்' என்ற வார்த்தையின் வலிமையோ என்னவோ - அந் தப் பந்தம் அவர்கள் இருவரதும் இறுதி நாள்கள் வரை நீடித் திருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, நேர்த்தியானதும் நேர் மையானதுமான ஊடகப் பரிமாணத்தோடு, அவர்கள் இரு வரும் வாழ்ந்த அந்த சகாப்தத்தின் வரலாற்றுப் பின்புலமே இத்தகையதொரு உன்னதத் தொடர்புக்கு முதன்மைக் கார ணமாய் அமைந்திருந்தது எனலாம்.

ஜெயராஜ் அண்ணருடனான எமது இந்த இனிய, அறிவார்ந்த உறவு எமது நினைவுகளிலும் ஊடகப் பயணங்களிலும் என்றும் நிலைத்திருக்கும்! எதிர்காலத்தில் இலங்கையின் அர சியல் வரலாறு குறித்து எழுதப்படும் ஆய்வுகளின்போதும், அவரது எழுத்துகளும் பதிவுகளும் புதிய ஆய்வாளர்களுட னும் அரசியல் மாணவர்களுடனும் தங்களது ஆழமான தொடர்பை எப்போதும் தொடர்ந்துகொண்டே இருக்கும்!

varatharajan.m@thaiveedu.com

பீ.எம். ஜமாஹிர்

மகாகவி அல்லாமா இக்பால் மற்றும் நீட்ஷே: சம்பூரண மானுடர் எதிர் அதிமானுடர்



tg.theeban@gmail.com

இக்கட்டுரை பிரித்தானிய ஆளுகைக்கு உட்பட்டிருந்த இந்தியாவின் முஸ்லிம் தத்துவக் கவிஞர், சீர்திருத்தவாதி, எழுத்தாளர், சிறந்த சிந்தனையாளர், மனிதநேயவாதி மற்றும் இந்தியப் பிரிவினையின் பின்னர் பாகிஸ்தானின் 'தேசியக் கவிஞர்' எனப் பன்முகம் கொண்ட 'அல்லாமா' (மிகவும் அறிந்தவர் - மிகவும் கற்றவர்) என்ற மரியாதைக்குரிய பெயரால் பொதுவாகக் குறிப்பிடப்படும் மகாகவி சேர் முஹம்மத் இக்பாலின் (Sir Muhammad Iqbal, 1873 - 1938), 'இன்ஸானுல் காமில்' (Insan al-Kamil-Perfect man) என்ற 'சம்பூரண மானுடர்' மற்றும் ஜேர்மானிய மெய்யியலில் தீவிர இருப்பியல்சார் மெய்யியலாளரான பிரெட்ரிக் நீட்ஷேயின் (Friedrich Nietzsche, 1844 - 1900), 'அதிமானுடர்' - 'மகாமானுடர்' (Übermensch - Superman) என்ற சிந்தனைகளை ஒப்பாய்வு செய்வதைப் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

இக்பாலின் 'இன்ஸானுல் காமில்' அல்லது 'சம்பூரண மானுடர்' என்ற கோட்பாடு, அடிப்படையில் அப்துல் கரீம் அல்-ஜீலி (1365 - 1424) என்ற முஸ்லிம் சிந்தனையாளரின் கருத்துருவாக்கமாகும். இக்கோட்பாட்டிற்கு முதன்முதலில் தெளிவான வடிவத்தைக் கொடுத்தவர் இப்னு அல்-அறபி (1165 - 1240) ஆவார். அவரின் தத்துவ முறையை விரிவாக விளக்கிய முக்கிய அறிஞராகவே அல்-ஜீலி அறியப்படுகிறார். அல்-ஜீலியின் 'Al-Insan al-Kamil fi ma'rifat al-Awakhir wa-l-Awail' (Universal Man) என்ற நூல், சிருஷ்டிகளின் ஆதி அந்தங்களைச் (முதன்மை மற்றும் இறுதித் தன்மைகளை) சம்பூரணமாய் உணர்ந்த 'ஏகாந்த மனிதர்' பற்றிய விளக்கவுரையாகும். இந்நூல் உருவான காலம் தொட்டே, சூஃபித்துவ இலக்கியங்களின் மிகச்சிறந்த படைப்புகளில் ஒன்றாக மதிப்பிடப்பட்டு வருகிறது. அல்-ஜீலி 'முழுமுதல் இருப்பு' (Absolute Being) என்பதை இறையின் 'தன் சுயம்' எனக் கருதினார். இச்சிந்தனை பிற்காலத்தில் 20-ஆம் நூற்றாண்டின் தத்துவஞானியும் கவிஞருமான முஹம்மத் இக்பாலிடத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இக்பாலின் பார்வையில், 'சம்பூரண மானுடர்' என்பது தீர்க்கதரிசன அருளில் (Prophetic Grace) தன்னை வெளிப்படுத்திக் கொண்டவராவார். மேலும், அவரின் இக்கோட்பாடு ஃபிரெட்ரிக் நீட்ஷேயின் மெய்யியல் மற்றும் இஸ்லாமியத் தீர்க்கதரிசன நிலை ஆகியவற்றின் தனித்துவமான கலவையாகும். நீட்ஷேயின் தத்துவங்களால் தான் ஈர்க்கப்பட்டதை இக்பால் பலமுறை ஒப்புக்கொண்டுள்ளார். அத்தத்

> ***"வாழ்வின் நிச்சயமற்ற தன்மை, நோக்கமின்மை மற்றும் பிரயோசனமற்ற நிலை ஆகியவற்றை ஆன்மாவைத் தொற்றியதொரு பிணியாகக் கருதும் இவர்கள், தங்களின் புதிய சிந்தனைகளின் வழியே முன்னேற்றம், புதிய உன்னதப் பார்வை, இயற்கையை வெல்லும் ஆற்றல் மற்றும் பண்பாட்டில் சிறந்த 'புதிய மனிதர்' போன்ற கூறுகளை உள்ளடக்கிய ஒரு புதிய உலக ஒழுங்கையும் சமூக மாற்றத்தையும் உருவாக்க விழைந்தனர்."***

துவம் இஸ்லாமிய விழுமியங்களுக்கு மிக நெருக்கமானது என்பதும் அவரது கருத்தாகும். நீட்ஷே ஒரு தீவிர நாத்திகராக இருந்தபோதிலும், 'அவரது இதயம் ஒரு விசுவாசி (முஃமின்)' என்று இக்பால் குறிப்பிட்டுக் கூறுவார். ஒட்டுமொத்தமாக, இவ்விருவரினதும் மெய்யியல் சிந்தனைகளும் மனிதமையவாத (Humanistic) இலட்சியங்களைக் கொண்டவையாகவே அடையாளப்படுத்தப்படுகின்றன.

வாழ்வின் நிச்சயமற்ற தன்மை, நோக்கமின்மை மற்றும் பிரயோசனமற்ற நிலை ஆகியவற்றை ஆன்மாவைத் தொற்றிய தொரு பிணியாகக் கருதும் இவர்கள், தங்களின் புதிய சிந்தனைகளின் வழியே முன்னேற்றம், புதிய உன்னதப் பார்வை, இயற்கையை வெல்லும் ஆற்றல் மற்றும் பண்பாட்டில் சிறந்த 'புதிய மனிதர்' போன்ற கூறுகளை உள்ளடக்கிய ஒரு புதிய உலக ஒழுங்கையும் சமூக மாற்றத்தையும் உருவாக்க விழைந்தனர். சமூக, பொருளாதார மற்றும் அரசியல் தளங்களில் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டிருந்த ஐரோப்பியச் சூழலையும், 'அனைத்து இருப்புகளும் வெறுமையானவை' என்ற இன்மைவாதத்தையும் (Nihilism), உயர் விழுமியங்களின் மதிப்பீட்டுச் சிக்கல்களையும் அடிப்படையாகக் கொண்டு, பண்பாட்டில் உயர்ந்த 'அதிமானிடர் என்ற கருத்துருவை அவர்கள் தோற்றுவித்தனர். ஆத்திகரான இக்பால் இக்கோட்பாட்டைச் சூஃபித்துவக் கண்ணோட்டத்திலும், நாத்திகரான நீட்ஷே தனது 'இவ்வாறு ஜரதுஸ்டிரா பேசினார்' (Thus Spoke Zarathustra) என்ற நூலின் வழியே முன்வைத்த 'கடவுள் இறந்துவிட்டார்' (God is dead) என்ற பிரகடனத்தின் ஊடாகவும் அணுகினர். இதன் மூலம் நீட்ஷே, கடவுள் என்ற ஆன்மீகக் கட்டமைப்பிலிருந்து முற்றிலும் விடுபட்ட, சுயாதீனமான ஓர் 'அதிமானிடர்' என்ற கருத்தை உருவாக்கினார்; அதிலும் குறிப்பாக, கடவுளற்ற இப்பிரபஞ்சத்தில் மனிதர் தன் அகவலிமையைப் பெருக்கி, அதியுயர் நிலையை அடைய வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார். இத்தகைய தத்துவப் புரிதல்களே இவ்விருவரினதும் மெய்யியல் சிந்தனைகளின் அதியுயர் பங்களிப்பாக அமைகின்றன என்பதையும் இக்கட்டுரை விரிவாகப் பதிவு செய்கின்றது.

அறிமுகம்:

சேர் முஹம்மத் இக்பால் மேற்கத்திய மெய்யியலில் தனக்கிருந்த முறையான பயிற்சியின் காரணமாக இஸ்லாமிய மெய்யியலையும் அதன் அந்தரங்கங்களையும் முறையாக ஆராய்ந்து இவ்விரு மெய்யியல் சிந்தனைகளிலிருந்தும் தம் மெய்யியலை வடிவமைத்தார். இந்தப் பின்னணியில் இஸ்லாத்தின் போதனைகளைத் தற்காலச் சூழ்நிலைக்கு ஏற்ப விளக்க முற்பட்டதுடன் மேற்கத்திய மெய்யியல் சிந்தனைகளின் பலத்தையும் பலவீனத்தையும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தினார். அவர்களது சொந்த பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்ட இலக்கு நோக்கிய ஓர் அறிவையும் வழங்கினார். இக்பால் தனது உயர் கல்வியை மேற்கத்திய கல்வி நிறுவனங்களில் (Trinity College, University of Munich) கற்றதால் அவரது எழுத்து மனித குலத்தின் நலன் குறித்த பிரச்சினைகளைக் காட்டுகிறது. அதிலும் குறிப்பாக, 1905-ஆம் மற்றும் 1908-ஆம் ஆண்டுகளுக்கு இடையே தனது ஐரோப்பிய ஆய்வுக் காலத்தில் நீட்ஷே, ஹென்றி பெர்க்சன் (Henri Bergson) மற்றும் கோதே (Goethe) போன்ற மேற்கத்திய மெய்யியலாளர்களின் கருத்துகளால் அவர் ஆழமாக ஈர்க்கப்பட்டார். பாரசீக பெருங்கவிஞரான ஜலாலுத்தீன் முஹம்மத் ரூமியின் (Jalal ad-Din-Muhammad Rumi) கவிதை மற்றும் தத்துவமும் கூட இக்பாலை வலுவாக பாதித்தது. இத்தகைய பின்னணியில்தான், 'முழுமைபெற்ற மனித ஆளுமை' அல்லது 'சம்பூரண மானுடர்' என்ற கருத்துருவத்தைக் குறிக்கும் அவரது 'அல்-இன்ஸானுல் காமில்' (Al-Insan al-Kamil) என்னும் தத்துவம் உருப்பெற்றது.

ஃபிரெட்ரிக் நீட்ஷேயின் வாழ்வும் சிந்தனைகளும் அல்லாமா இக்பாலைப் பெரிதும் கவர்ந்திருந்தன. இக்பாலின் உரை நடைகளிலும் கவிதைகளிலும் பெரும்பாலானவை நீட்ஷேயின் தத்துவப் பார்வையை மேற்கோள்காட்டி விவாதிக்கின்றன. குறிப்பாக, இக்பால் தனது 'இயக்கவியல் தத்துவத்திற்கான' (Dynamic Philosophy) மூலஆற்றலை அவரிடமிருந்தே பெற்றார் என்பதும் கவனிக்கத்தக்கது. இக்பாலின் 'அஸ்ராரே குதி' (Asrar-i-Khudi - அகத்தின் இரகசியங்கள், 1915) என்ற நூலில் வெளிப்படும் சில சிந்தனைகளும் குறிப்புகளும், நீட்ஷேயின் 'இவ்வாறு ஜரதுஸ்டிரா பேசினார்' (Thus Spoke Zarathustra) என்ற படைப்பின் தாக்கத்தைக் கொண்டிருப்பதை அறிய முடிகிறது. மேலும், இக்பாலின் 'பாயாமே மஷ்ரிக்' (Payam-i-Mashriq - கிழக்கின் செய்தி, 1924) என்ற நூலின் ஒட்டுமொத்தத் தொகுப்பையும், அதில் அவர் முன்வைக்கும் 'சம்பூரண மானுடர்' பற்றிய முக்கிய கோட்பாட்டையும், நீட்ஷேயின் 'அதிமானுடர்' (Übermensch) என்ற சிந்தனையோடு ஒரு குறிப்பிட்ட தளத்தில் ஒப்பீடு செய்ய முடியும்.

அதேநேரம், ஜேர்மன் மெய்யியலில் தீவிர நாத்திக இருத்தலியல்சார் தத்துவஞானியாக ஃபிரெட்ரிக் நீட்ஷே அறியப்படுகிறார். 'இருத்தலியல்வாதத்தின் மையப்பிரச்சினை தனிநபரும் அவரது வாழ்க்கையுமேயாகும்' (Seyed Latif Hussain Kazmi, 1997:102). அதாவது, தனிநபரும் அவரது இருப்பும் சார்ந்த தேடலே இதுவாகும். சுருக்கமாகக் கூறின், இக்கோட்பாடு ஒட்டுமொத்த மானுடத்தையும் தத்தமது சொந்த இருப்பைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டுகிறது. மனித வாழ்வில் எதிர்கொள்ளப்படும் கவலை, துயரம், தனிமைப்பாடு (Alienation), வெறுமை மற்றும் சுதந்திரமின்மை ஆகியவை விவாதிக்கப்படும்போது, அங்கு இருப்புச் சார்ந்த ஆழமான வினாக்கள் எழுகின்றன. ஒரு சுயஆய்வு வலியுறுத்தப்படும் இடங்களிலெல்லாம் இருத்தலியல்வாதத்தின் ஆழமான அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியும். மேலும், சுதந்திரம், பொறுப்புணர்வு மற்றும் அபத்தமான உலகொன்றில் அர்த்தத்தைக் கட்டமைத்தல் ஆகிய கருப்பொருள்களைக் கொண்ட இருத்தலியல்சார் சிக்கல்கள் பழைய ஏற்பாட்டிலும், கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய நெறிகளிலும் ஏற்கனவே விவாதிக்கப்பட்டுள்ளதால், இக்கோட்பாடு ஒரேநேரத்தில் பழைமையானதாகவும் புதுமையானதாகவும் விளங்குகிறது. புவிசார் அரசியல் சூழலிலும் இச்சிந்தனையின் தாக்கத்தைக் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக, அடால்ஃப் ஹிட்லர், சதாம் உசேன், முஅம்மர் அல்-கத்தாஃபி மற்றும் அண்மைக்கால அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் போன்ற ஆட்சியாளர்கள், நீட்ஷேயின் 'அதிமானுடர்' என்ற தத்துவக் கோட்பாட்டைத் தத்தமது அரசியல் அதிகாரத்திற்கும் பிராந்திய / உலகளாவிய ஆதிக்கத்திற்கும் சாதகமாகத் தவறாகப் புரிந்துகொண்டனர் அல்லது அர்த்தப்படுத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இருத்தலியல்வாதம் தனிநபருக்கு முழுமையான தன்னாதிக் கத்தையும் (Autonomy) உரிமையையும் வழங்கி, மனித இருப்பையே உலகியலின் மையப் புள்ளியாகக் காட்ட முயற் சிப்பதோடு, அதற்கு அப்பாற்பட்ட மரபார்ந்த நம்பிக்கைகள் அனைத்தையும் மறுதலிக்கிறது. இதனால், இருத்தலியலா ளர்கள் மனிதர்களைத் தனிநபர் ஆளுமை கடந்த (Imper-sonal) புறவயக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆராய் வதை முற்றாக எதிர்த்தார்கள். ஏனெனில், ஆளுமையற்ற தன் மையிலோ அல்லது வெறும் சடவாத (Materialistic) அடிப் படையிலோ மனித இருப்பு ஆய்வு செய்யப்படும்போது, அங்கு வாழ்வின் அர்த்தமற்ற நிலையே தோற்றம் பெறுகிறது. இதன் காரணமாகவே, அகவயத்தன்மை (Subjectivity) மற்றும் புற வயத்தன்மை (Objectivity) குறித்த விவாதங்களில், இருத்த லியலாளர்கள் தனிநபரின் அகவய அனுபவங்களுக்கே முதன்மை முக்கியத்துவம் வழங்கினார்கள். இவ்வாறு மனி தனுடைய தனிநபர் இருப்பையும், அகவய உணர்வுகளையும், உள்ளார்ந்த விழிப்புணர்வையும் முதன்மைப்படுத்தும் தத்து வப் போக்குகளுக்கு இருத்தலியல்வாதம் மிக முக்கிய அடித் தளமாக விளங்குகிறது. இச்சிந்தனை மரபில்தான், பிரீட்ரிக் நீட்ஷே மரபார்ந்த விழுமியங்களின் வீழ்ச்சியைக் குறிக்கும் வகையில், 'கடவுள் இறந்துவிட்டார்; நாம் அவரை எதிர்கொள் ளத் தவறிவிட்டோம்' என்ற தனது புகழ்பெற்ற தத்துவப் பிர கடனத்தை முன்வைத்தார்.

'கடவுள் இறந்துவிட்டார்' (God is Dead) எனப் பிரீட்ரிக் நீட்ஷே பிரகடனப்படுத்தியபோது, அது வெறும் சமய எதிர்ப்பு முழக் கம் மட்டுமல்ல; மாறாக, அதுவரை சமூகம் பின்பற்றி வந்த மரபார்ந்த விழுமியங்களையும் நிறுவனமயப்பட்ட சமயக் கோட்பாடுகளையும் சமகால மனித இருப்பிற்குள் மேலும் நீட்டிக்க முடியாது என்ற தத்துவார்த்த எச்சரிக்கையாகும். நீட்ஷேயின் பார்வையில், மானுடம் அறிவு மற்றும் சிந்தனை ரீதியாகப் பெருமளவு முதிர்ச்சியடைந்து விட்டதால், பழைய தார்மீகக் கட்டமைப்புகள் அதன் வளர்ச்சிக்குப் பொருத்தமற் றவையாகி விட்டன. உதாரணமாக, யூத-கிறிஸ்தவ மரபின் பழைய ஏற்பாட்டில் (Old Testament) சித்தரிக்கப்படும் கட வுள் விம்பம், மனிதர்களின் ஆரம்பகால அச்சங்களையும் ஆதிக்க விதிகளையும் பிரதிபலிப்பதாகும் எனக் குறிப்பிட்ட அவர், மானுட அறிவுப் பரிணாமத்தின் வழியே இத்தகைய விம்பங்கள் கடந்துபோகப்பட வேண்டியவை என விளக்கினார். மானுடம் இத்தகைய பழைமைவாதக் கட்டுப்பாடுகளில் இருந்து முழுமையாக விடுபட வேண்டும் என்பதே நீட்ஷே யின் கருத்தாகும். இதனால்தான், திணிக்கப்பட்ட மரபுவழி அறநெறிகளை ஒதுக்கித்தள்ளிவிட்டு, புதிய பண்பாடுகளை யும் சுயசார்பான விழுமியங்களையும் உள்ளடக்கிய புதிய தொரு ஒழுக்கவியலைத் தனிநபர்கள் சுயமாக உருவாக்க வேண்டும் என அவர் முயன்றார். இத்தகைய உன்னத ஒழுக் கநிலையே தன்னாதிக்கமும் (Autonomy) தனித்துவமும் கொண்ட உயர்நிலை மனித ஆளுமைகளைத் தோற்றுவிக் கும் என்று குறிப்பிட்ட நீட்ஷே, இதனை 'ஆள்நிலை ஒழுக்கம்' (Master Morality) என வரையறுத்தார் (F.A. Lea, 1957:235). சாதாரணப் பொதுமக்களை வழிநடத்தும் மற்றும் கட்டுப் படுத்தும் அக ஆற்றலை இயல்பாகவே கொண்டிருக்கும் இத்த கைய ஒழுக்கவியலின் உன்னத வடிவமாகவே அவர் 'அதிமா னுடம்' (Übermensch) என்ற கருத்துருவத்தை அடையாளப் படுத்தினார் (F.A. Lea, 1957:199).

நீட்ஷேயின் அதிமானுடர் இதுவரை ஐரோப்பிய கிறிஸ்தவ சமய மரபு இருந்ததாகக் கூறுகின்ற மானுடரை விட வேறுபட்ட நிலையை அது பெற்றிருந்தது. இதன்மூலம் ஒரு புதிய அதி யுயர் மனித வகுப்பை உருவாக்க அவர் முயன்றார். அது கிறிஸ்தவ சமய சிந்தனைக்கு வெளியே இருந்தது. அதுவரை மெய்யியலாளர்கள் கிறிஸ்தவ சமய சிந்தனைக்கு வெளியே வரவில்லை. உண்மையில் நீட்ஷே விளக்க முயன்றது மெய்யி யலும் கிறிஸ்தவ சமயமும் அதிமானுடரையும் அதற்கான சூழலையும் உருவாக்க வேண்டும் என்பதாகும். எனவேதான், எல்லாச் சமயமும் மெய்யியலும் மானுடருக்காக மானுடர் தொடர்பான ஓர் உயரிய கோட்பாட்டை பரிணாமரீதியாக விருத்தி செய்வதுடன் தொடர்புபட வேண்டும் என்பதே இருப் பியல்வாதிகளின் மைய இலட்சியங்களில் ஒன்றாகும். ஆக, நீட்ஷே வாழ்கையில் பிரயோகப்படுத்த முடியாமல் இருக் கின்ற இந்த கடவுளின் இடைவெளியை ஈடுசெய்ய தனது அதி மானுடர் என்ற கருத்தை ஜரதுஸ்டிராவின்வழி அறிமுகம் செய்வதை அறியலாம்.

நீட்ஷே ஓர் இருப்பியல்வாதி மட்டுமல்ல, அவர் மனிதரின் 'ஆழ்நிலைச் சித்தம்' (Will to power) என்ற வல்லமைக்கான மனவுறுதியின் ஆசானாகவும் இருந்தார். மனிதரின் ஆழ் நிலைச் சித்தத்தின் தர்க்க முடிவே 'அதிமானுடம்' என்னும் நிலை ஆகும். இங்கு 'ஆழ்நிலைச் சித்தம்' என்பது அதிமானுட அல்லது மகாமனித நிலையை அடைவதற்கு மனிதரிடம் இருக்கும் இயற்கையான வல்லமையாகும். நீட்ஷே ஆழ் நிலைச் சித்தத்தை கடவுள் நம்பிக்கைக்கு பிரதியீடாகவே விளக்க வருகிறார். அதாவது கடவுளின் பண்புகளாக நாம் கருதுகின்ற அனைத்து ஆற்றல்களும் சக்திகளும் மனிதருடை யவை என விளக்க முயல்கின்றார். நீட்ஷேயின் கற்பனையில் உருவான 'ஜரதுஸ்டிரா' இவ்வாறான ஓர் அதிமானுடர் ஆவார். இந்த மானுடர் கடந்த கால மனித குலத்தைக் காட்டிலும் மிக உயர்ந்த மட்டத்தில் வாழ்கின்றவர். இவர் மரபுநெறிகளை உடைக்கின்றவர் (எஸ்.வீ. ராஜதுரை,1983:152). இதன் மூலம் மனிதகுலம் சமகால மனிதர்களை விட மிக உயர்ந்த ஒன்றாக பரிணமிக்கும் என்று அவர் அர்த்தப்படுத்துகிறார்.

ஜரதுஸ்டிராவின் உண்மையான அடையாளங்கள் அல்லது பண்புகள் வெளிப்புறத்திலிருந்து வருவதில்லை. அது அவரின் உட்புற இதயத்திலிருந்து ஓர் அமைதியான இருத்தலினூடாக மாத்திரமே வருகின்றன. ஜரதுஸ்டிராவின் அடிப்படைப் பண்பு கள் சாதாரண மனித அறிவுக்கு அப்பாற்பட்டவையாகும். இயற்கையாகவே, இத்தகைய உன்னத ஆளுமைகள் ஒவ் வொரு சூழ்நிலைக்கும் தங்களைப் பொருத்திக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவர்கள். அவர்களின் மிக முக்கியமான அடிப் படைப் பண்பாகச் சுதந்திரம் விளங்கும். அறிவுச் செறிவானது அவர்களுக்குக் கருணை, நீதி, அழகியல், பேரின்பம் மற்றும் நல்லெண்ணம் ஆகியவை சமநிலையில் அமைந்ததொரு வாழ்வை வழங்குகிறது. அவர்கள் பேராற்றல் (Super power) கொண்டவர்களாகத் திகழ்ந்த போதிலும், அத்தகு வல்லமை யைப் பிற மனிதர்கள் மீதோ, பலவீனமான அல்லது வளர்ந்து வரும் நாடுகள் மீதோ ஆதிக்கம் செலுத்தப் பயன்படுத்துவ தில்லை. சுருக்கமாகக் கூறின், உலகரங்கில் 'எல்லாம் நானே' என்ற ஏதேச்சதிகாரப் போக்கைக் கொண்ட ஆதிக்கச் சிந்தனையாளர்களைப் போலன்றி, நீட்ஷே முன்வைக்கும் அதிமானுடம் என்பது ஒடுக்குமுறைகளுக்கு அப்பாற்பட்ட,

சுய ஒழுக்கமும் உலகளாவிய மனிதநேயமும் கொண்ட ஓர் உன்னத ஆளுமைப் பரிணாமமாகும்.

உலகளவில் மிகவும் விரும்பப்படும் ஸ்பெயின் அதிபர் பெட்ரோ சான்செஸின் வார்த்தைகளில் கூறுவதாயின், அதிமானிடர் என்பவர், 'உலகிற்கு தீ வைப்பவரல்ல', பள்ளிகள், பல்கலைக் கழகங்கள், மருந்துத் தொழிற்சாலைகள், தடுப்பூசி ஆராய்ச்சி மையங்கள், மின்உற்பத்தி நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள், உள்கட்டமைப்புகள் ஆகியவற்றின் மீது குண்டு வீசுபவரல்ல, உலகளாவிய சந்தையை சிதைப்பவருமல்ல, ஒரு முழு நாகரிகத்தையே அழிப்பவருமல்ல, ஆயிரக்கணக்கான பொது மக்களைக் கொல்பவருமல்ல, மேலாதிக்கத்தை நிலைநாட்டுபவருமல்ல, அவர் தற்பெருமையை விரும்புபவருமல்ல,' மொத்தத்தில் அவர் நேரம் ஒரு கதையைக் கதைப்பவருமல்ல, வார்த்தை வன்முறையாளருமல்ல, நவீன செங்கிஸ் கானுமல்ல. ஆனால், அவர் பாரபட்சமான இந்த உலக ஒழுங்கை மாற்றியமைக்கும் வல்லமை கொண்டவராக இருப்பார்.

மேற்கருத்தினை பிரேசில் அதிபர் லூலாடா சில்வாவின் காட்டமான வார்த்தைகளில் கூறுவதாயின், 'நெதன்யாகு அடிக்கடி பேசும் அந்த சர்வதேச சட்டம் எங்கே போனது, மனித நேயத்தைத் தனது கால்களால் மிதித்துத் துவைக்கும் அழிவைக் கண்டு இன்புறும், மற்றும் தனது நாளை மரணத்தையும் இரத்தத்தையும் காலை உணவாகக் கொண்டே தொடங்குவது போலத் தோன்றும் அந்த மனிதனுக்கு அது ஏன் பொருந்தவில்லை. இதுதானா நீதி, சர்வதேச சட்டம் பலவீனமானவர்களுக்கு ஏதிராக மட்டுமே தனது அதிகாரத்தைக் காட்டுகிறதா. ஹோர்முஸ் நீரினை திறந்தே இருக்க வேண்டும் என்பதும், வர்த்தகம் எவ்விதப் பாதிப்புமின்றித் தொடர வேண்டும் என்பதும் மட்டும்தானா இப்போது உங்கள் ஒரே கவலை. இந்தக் கவலையை, அக்கறையை, லெபனானில் உயிரிழக்கும் ஏழை மற்றும் நிரபராதிகளின் இரத்தத்தின் மீது ஏன் நாம் காண்பதில்லை.' ஆக உங்கள் ஹோர்முஸ் நீரினையை விட மனித உயிரின் மதிப்பு ஆயிரம் மடங்கு அதிகம் என்பதை புரியாத நெதன்யாகு மற்றும் டொனால்ட் டிரம்ப் போன்றவர்களுக்கு இருப்பியல்வாதத்தின் சமகாலத் தேவை குறித்து புரிய வைக்கவோ, அவர்களது நடவடிக்கைகளுக்கு ஒரு வரம்பு நிர்ணயிக்கவோ யாராலும் முடியாத கையறுநிலையில் வேடிக்கை பார்க்க வேண்டிய கட்டாயத்திற்கு உலகம் தள்ளப்பட்டுள்ளது. யுத்தத்தில் நாடுகளுக்கிடையே உரையாடல்களை வலியுறுத்துவதன்வழி நீதிக்காகவும் அமைதிக்காகவும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் லியோவின் அழைப்பைக் கூட அரசியலாகப் பார்க்கும் இன்றைய நிலையில் நீட்ஷேயின் கற்பனையில் உருவான அதிமானுடரின் தேவை முக்கியம் பெறுகின்றது.

இந்த அதிமானுடத்தின் பேராற்றலானது சக மனிதர்கள் மீதான அன்பாகவும், கருணையாகவும், நீதியாகவுமே வெளிப்படும். இத்தகைய உன்னத ஆளுமைகள் தங்களின் ஆற்றலை ஒட்டுமொத்த மானுடத்திற்கும் பகிர்ந்தளிக்கக்கூடிய ஒரு பெரும் பொக்கிஷமாகக் கருதுவர். அவர்கள் தங்களின் அன்பில் அபரிமிதமானவர்களாகவும், மானுடப் பொது அறிவைக் கடந்த பேரறிவில் தெய்வீகத் தன்மை கொண்டவர்களாகவும் திகழ்வர். நீட்ஷே மரபார்ந்த கடவுள் கோட்பாட்டின் வீழ்ச்சியைப் பிரகடனப்படுத்திய போதிலும், அன்பின் உன்னத சக்தியையும் மனித ஆன்மாவின் ஆற்றலையும் ஆழமாக உணர்ந்திருந்தார். அதனால்தான், பகுத்தறிவின் வழியே நின்று, நீதியும் மனிதாபிமானமும் கொண்ட ஒரு புதிய பரிணாமமாகத் தனது அதிமானுடக் கருத்துருவத்தை அவர் சிந்தித்துள்ளார் என்பதை அறியலாம்.

இவ்வாறே இந்திய சமய மரபில் விபரிக்கப்படும், 'ஜீவன் முக்தி நிலை' அல்லது ழீன்-போல் சார்த்தரின் (Jean-Paul Sartre), 'சுதந்திர மனிதர்' பற்றிய கருத்தும் அறியத்தக்கது. சார்த்தரின் வார்த்தைகளில் கூறுவதானால், 'மனிதன் சுதந்திரமாக இருக்கிறான், சுதந்திரமே மனிதன் ஆவான்' (Man is free, Man is freedom), (Seyed Latif Hussain Kazmi, 1997: 103). அதிமானுடரைப் போன்று, இந்தச் சுதந்திர மனிதரும் ஒரு சுயநல வாழ்வை வாழாது அவருடைய சுற்றுப்புற சூழலுக்கும் சமூகத்திற்கும் அவர் மாபெரும் சொத்தாக இருக்கிறார். அவரது நடத்தையும் வழிகாட்டலும் பெருமளவில் மனித குலத்திற்கு நன்மையாக இருக்கிறது. இங்கு மறை ஞானிகளும் இருப்பியல்வாதிகளும் ஒத்துக்கொள்கின்ற அம்சம் அது மனிதரில் உள்ள சுயஉயர்நிலைக்கான வல்லமையாகும்.

நீட்ஷே அதிமானுடர் என்ற கருத்தாக்கத்தினை, கிறிஸ்தவ சமயத்தில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டிருந்த 'உயர் நிலை நன்மை பொருந்திய கீழ்படிவுடைய மனிதர்' என்பதற்கு எதிராகவும், 'எல்லாம் நானே' என்று தன்னைத்தானே முற்றானதாக்கிக் கொள்ளும் ஹெகலிய 'முழுமுதல் ஆன்மா'வுக்கு (Ubermensch), பதிலீடாகவும் முன்னிலைப்படுத்துகிறார். அதிமானுடர் தனது செயல்களுக்குத் தானே காரணம் என்ற தன்சித்தத்தை கொண்டவராக இருப்பதனால் நீட்ஷே பௌத்தத்தின் 'போதிசத்துவர்' நிலையை அண்மித்தவராகக் காணப்படுகின்றார். இத்தகைய கருத்தை இஸ்லாமிய மறைஞானப் பாரம்பரியத்தின் இலட்சியமான 'இன்ஸானுல் காமில்' என்ற சம்பூரண மனித நிலையுடன் சமப்படுத்தலாம்.

சம்பூரண மானுடர்:

சூஃபி மரபிற்குரிய 'இன்ஸானுல் காமில்' என்ற குறிப்பான் சம்பூரண மானுடர், இலட்சிய மானுடர், ஏகாந்த மானுடர், கடவுளின் பிரதிநிதி, கலிபா, முஃமின் என்ற குறிப்பீடுகளில் அழைக்கப்படுகிறது. இந்தக் குறிப்பானுக்கு ஏனைய மறை ஞான மரபுகளில் மகாபுருடர், ஜீவன் முக்தர், போதிசத்துவர் என்றும் நீட்ஷேயின் மெய்யியலில் அதிமானுடர் (Ubermensch), என்றும் குறிப்பீடுகள் உண்டு. இஸ்லாமிய மறை ஞானப் பாரம்பரியத்தின் இலட்சியமான 'இன்ஸானுல் காமில்' (சம்பூரண மனிதர்), குறித்த கருத்திற்கு முதலில் தெளிவான வடிவம் கொடுத்தவர் முஸ்லிம் சிந்தனையாளரான இப்னு அறபி ஆவார். இவர் பூரண மானுடரை மெய்ப்பொருளின் ஒரு பிரதியாகக் காட்ட முயல்கிறார்: 'பூரண மானுடர் தெய்வீக சாரத்தின் ஒரு மாதிரியாகும். அவருடைய ஆன்மா பிரபஞ்ச ஆன்மாவின் ஒரு மாதிரியாகும். அவருடைய உடம்பு பிரபஞ்ச உடம்பின் ஒரு மாதிரியாகும். அவருடைய அறிவு தெய்வீக அறிவின் ஒரு பிரதி அல்லது பிரதிபலிப்பாகும்' எனக் கூறப்படுகிறது (Affifi.A.E, 1979:82).

இப்னு அறபியின் கருத்துப்படி, கண்ணிமை கண்ணுக்காக இருப்பது போல பூரண மானுடர் கடவுளுக்காக இருக்கிறார். அதாவது, பூரண மானுடரூடாக கடவுள் அவரின் படைப்பினங்களைப் பார்ப்பதுடன் அவற்றின் மீது கருணையும் அன்பும் கொள்கின்றார். மேலும், பூரண மானுடரில் மட்டுமே படைப்பின் செயற்பாடு உணரப்படுகிறது. பூரண மானுடர் இல்லாவிட்டால் படைப்பு நோக்கமற்றதாக இருக்கும். ஏனெனில், கடவுள் அறியப்பட்டிருக்கமாட்டார். பூரண மானுடரை புனித ஆன்மாவாகவும் கடவுளின் பிரதிநிதியாகவும் அடையாளப் படுத்தலாம். இதனால்தான் சூஃபித்துவக் கொள்கையில் கடவுளுடைய வெளிப்பாட்டிற்கு முழுமையான ஆடியாக விளங்கும் உத்தமரே 'சம்பூரண மானுடர்' என அழைக்கப்படுகின்றார். அதாவது, பூரண மானுடர் உலகில் கடவுளின் குணங்கள், பண்புகள் உடைய மனித குலத்தின் மீட்பாலன் என அறியலாம். இஸ்லாமிய விசுவாசத்தின்படி, முஹம்மத் நபி (ஸல்) எனும் சமூகப் புரட்சியாளர் இவ்வாறான சிறப்புக் கொண்ட மாமனிதராகவே அடையாளப்படுத்தப்படுகிறார்.

இக்பால் சம்பூரண மானுடரைக் குறிக்க 'முஃமின்' என்ற சொற் பதத்தைப் பயன்படுத்துகின்றார். சாதாரண பொருளில் நம்பிக்கை (ஈமான்), கொண்ட ஒவ்வொருவரும் முஃமின்தான். ஆனால், இக்பால் இந்த சொற்பதத்தை உபயோகிப்பது சம்பூரணமடைந்த மானுடருக்கேயாகும். இதற்கு முன்மாதிரியாக நபி (ஸல்) அவர்களை இக்பால் சுட்டிக்காட்டுகின்றார். ஒரு 'முஃமின்' அன்பு நிறைந்தவராகவும், உலக இச்சைகளில் பற்றுதலற்று மனத்திருப்தி உள்ளவராகவும், தீரமுடையவராகவும், அனுமதிக்கப்பட்ட உணவை உண்பவராகவும், சகிப்புத்தன்மை உடையவராகவும், அசலான செயலாற்றும் தன்மையை வளர்த்தவராகவும் விளங்குவார். அவர் அச்சத்தையும், யாசித்தலையும், அடிமைத்தனத்தையும், வம்சப் பெருமை பேசுதல் முதலியவற்றிலிருந்து முற்றிலும் விடுபட்டவராக இருப்பார். மேலும், அவர் ஒரு குறிப்பிட்ட சட்டத்துக்குக் கட்டுப்பட்டவராகவும், தன்னைச் சுயகட்டுப்பாடு செய்து கொள்பவராகவும், கடவுளின் பிரதிநிதித்துவத்தை ஏற்றவராகவும் இருப்பார் (ஆர்.பீ.எம். கனி 2001:161). இத்தகைய இலட்சிய மனிதரை இக்பால் பின்வருமாறு வர்ணித்தார்.

'ஒரு முஃமினின் கரம்
உண்மையில் கடவுளின் கரமேயாகும்.
ஆதிக்க சக்தியும், சிருஷ்டி சக்தியும், தகுதியும்,
எதையும் சமாளிக்கும் திறனும் உடையவர் அவர்.
மானிடர்தான்; ஆயினும்
தன்மையில் தேவ தூதர் போன்றவர்.
அடிமைதான், எனினும்
எஜமானரின் குணங்களை (சிபத்துக்களைக்) கொண்டவர்.
அவர் சுதந்திர இதயம்
எவ்வுலகைப் பற்றியும் கவலைப்படுவதில்லை...'

ஆர்.பீ.எம். கனி 2001: 161 - 162

இக்பால் கடவுள் கடந்து நிற்பவரல்ல (Not transcendent) மனிதர் வாழ்க்கையில் உறைந்து நிற்பவர் (God immanent) எனக் கூறுகிறார் (W.C.Smith, 1963: 122). இக்பால் கடவுளுக்கு மனிதப் பண்பையும் மனிதனுக்கு கடவுள் பண்பையும் சொந்தமாக்குகின்றார். இஸ்லாமிய சமயத்தைப் பொறுத்தமட்டில் இது பூரணமான மாற்று நம்பிக்கையாகும். கடவுள் மனிதருடைய வாழ்க்கையில் உறைந்து அதாவது உள்ளார்ந்து நிற்பவர் என்பது கடவுளைத் திரும்பவும் உலகத்திற்குள் புகுத்துகின்றது என்ற அம்சம் அதில் உள்ளது. இக்பாலின் கடவுள் எண்ணக்கரு உள்ளிருந்து எமது பிரச்சினைகளை எதிர்நோக்கியும் எங்களுடனும் எங்களூடாகவும் ஒரு புதியதும் சிறந்ததுமான உலகை உருவாக்கியும் இப்போது உலகில் இருக்கின்றார். இக்பால் தனது சம்பூரண மானுடரை இவ்வாறு இருபக்கத் தொடர்புடையவனாக்குகின்றார். இந்த சம்பூரண மானுடர் மறைந்து கிடக்கும் அனைத்தையும் வெளிக்கொணர்ந்து அதன் ஒளியில் உண்மையையும் இறைவனையும் தரிசிக்கின்றார். இந்தச் சட உலகினை அடக்கியாளும் வழியையும் பெறுகின்றார். இத்தகைய பண்பு பெற்ற வரையே முழுச் சான்றோராக இக்பாலின் தத்துவம் காட்டுகின்றது.

உண்மையில் இக்பால் சம்பூரண மானுடரூடாக இறைவனின் பிரதிநிதித்துவத்தையே (கலிபா) கோருகிறார். மானுடர் கடவுளின் பிரதிநிதி என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். 'உங்களுக்குள் கடவுளின் பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள்' என்பது நபி வழியாகும். கடவுளின் பண்புகளுக்கு மிக அருகில் வருபவர் அதாவது இறை நெருக்கமுடையவரே சம்பூரண மானுடர் ஆவார். ஆன்மீக பலம் கொண்ட ஒருவர் கடவுளின் பண்புகளை தனக்குள் உள்வாங்குகிறார். அதாவது அவர் மனித வரம்புக்குள் கடவுளின் பண்புகளின் முழுமையான பிரதிபலிப்பாக இருக்கிறார். இது மனிதருக்கு கிடைத்த மகத்தான ஒரு பேறாகும். கடவுளுக்குள்ள தெளிந்த அறிவும் படைப்பாற்றலும் மகத்தானது. எனவே, அவருடைய பிரதிநிதித்துவத்திலும் அவ்வாற்றல்கள் குறிப்பிடத்தக்க அளவு இருந்தேயாக வேண்டும் என்பது இக்பாலின் கருத்தாகவுள்ளது. ஆக, மனிதரின் திறன்களிலுள்ள தெய்வீகத்தை மனிதர் இறைவனை நோக்கி கூறுவது போன்று இக்பால் பின்வருமாறு சித்திரிக்கின்றார்

'நீ இரவைப் படைத்தாய்;
நான் விளக்கைச் சமைத்தேன்,
நீ மண்ணைச் சிருஷ்டித்தாய்,
நான் பாத்திரத்தை ஆக்கினேன்,
நீ பாலையை, மலையை,
காட்டை உண்டுபண்ணினாய்,
நான் தோட்டத்தை, தோப்பை, சோலையை
அமைத்தேன்,
கல்லிலிருந்து கண்ணாடி செய்தவன் நான்,
நானே விஷத்தை மூலிகையாக்கியவன்.'

ஆர்.பீ.எம். கனி, 2001: 190

மானுடம் சுதந்திரமாகவே பிறக்கின்றது என்பது இக்பாலின் துணிபாகும். இத்தகைய சுதந்திரமே அவரது சமய மற்றும் ஒழுக்கவியல் மெய்யியலின் அஸ்திவாரமாகத் திகழ்கிறது. அடிமைத்தளையின் வெளியில் நிகழும் பிரார்த்தனைகள் எவ்விதப் பயனும் தருவதில்லை எனக் குறிப்பிடும் அவர், அகத்திலும் புறத்திலும் முழுமையான சுதந்திரம் கொண்ட ஆளுமைகளால் மட்டுமே கடவுளுடன் நேரடியான, ஆழமான தொடர்பை ஏற்படுத்த முடியும் என வாதிடுகிறார் (Syed Latif

Hussain Kazmi, 1997: 111). இச்சிந்தனையானது, சுதந்திரமான ஆளுமைகளின் உன்னத விருப்பங்களுக்கும் ஆற்றலுக்கும் இப்பிரபஞ்சமே பதில் அளிப்பதையும்; அவ்விருப்பம் என்பது அடிமைத்தனமற்ற சுதந்திரம், ஆன்மாவின் அழியாத் தன்மை போன்ற உன்னத விழுமியங்களை நோக்கியது என்பதையும் புலப்படுத்துகிறது. இக்பால் தனது 'பரிபூரண மானுடம்' (அல்-இன்ஸானுல் காமில்) என்ற தத்துவக் கருத்துருவத்தில், 'சுதந்திர ஆளுமை' என்பதற்கு மிக ஆழமானதொரு இடத்தை வழங்கியுள்ளார்.

இந்த அடிப்படையில் சுதந்திரம் மனிதருடைய சொந்தத் தெரிவாகும். சுதந்திரம் மனித இருத்தலின் மாதிரியாகும் என்ற கருத்து ஹைடெகர், சார்த்தர், இக்பால் ஆகியோரின் சிந்தனைகளில் ஒரே விதமான இடத்தைப் பெற்றுள்ளது. 'சுதந்திரம் ஓர் அருட்கொடையாகும்' (Freedom is a blessing) என்பது இருப்புவாதிகளின் அபிப்பிராயமாகும். இந்த அருட்கொடை வெளியில் இருந்து மனிதருக்கு வழங்கப்படுவதில்லை. அவரது சுயத்தன்மையை பூரணப்படுத்துவதற்கான போராட்ட முயற்சியினூடாக அவர் அவரது சுதந்திர அருட்கொடையை வென்றெடுக்க வேண்டும். அதாவது சுயம் அதன் வழியிலுள்ள சகல தடங்கல்களையும் அகற்றுவதன் மூலமாக சுதந்திரத்தை அடைகிறது. இக்கட்டத்தில் சுதந்தர மனிதரின் விருப்பு இறைவிருப்புக்குச் சமனாக வருவதையே இக்பாலின் சமயம் குறித்த கருத்து வெளிப்படுத்துகிறது.

இக்பால் மற்றும் நீட்ஷே ஒப்பீடு:

இக்பால், நீட்ஷேயையும் அவரது சக்திவாய்ந்த அதிமானுடரையும் பாராட்டினார். ஆனால், இந்தக் கருத்துக்கு ஆன்மீகத்தை சேர்க்கிறார், இந்தப் போற்றுதல் சம்பூரண மானுடர் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது. இருப்பினும், இக்பாலின் சம்பூரண மானுடர் என்ற கருத்து கலாசாரம் மற்றும் வரலாற்றின் அதிமானுடர் பற்றிய ஒரு கருத்தாகும், சம்பூரண மானுடர்தான் அதிமானுடர் என்ற மேற்கத்திய கருதுகோள்களை அவர் பின்வரும் வார்த்தைகளில் கடுமையாக மறுத்தார், 'நான் இருபது ஆண்டுகளுக்கு முன்பு, நீட்ஷேயைப் பற்றி எதையும் படிப்பதற்கோ அல்லது கேட்பதற்கோ முன்பு, சம்பூரண மானுடர் என்ற சூஃபி கோட்பாட்டைப் பற்றி எழுதினேன்.' இக்பால் நீட்ஷேயின் அதிமானுடர் என்ற கருத்துக்கு மாறாக, சம்பூரண மானுடர் கிழக்கு மற்றும் மேற்கத்திய விழுமியங்களின் இணைப்பாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். கிழக்கில், மனிதரின் ஆன்மீகம் அவரது பொருள் சார்ந்த இருப்பைப் போலவே முக்கியமானது, மேலாக சம்பூரண மானுடர் என்பவர் மானுடர், ஆன்மீகம் மற்றும் கடந்த நிலைக்கூறு ஆகிய மூன்றினதும் சேர்க்கையாகும். இக்பாலின் சம்பூரண மானுடர் சிறப்பிக்கப்பட்ட பரிபூரணத்தின் உச்சத்தைத் தாண்டி 'இன்ஸானுல் காமில்' என்று அழைக்கப்படுகிறார். இந்த சம்பூரண மானுடர் இருப்பின் மிக உயர்ந்த சாத்தியக்கூறுகளை உணர்ந்து கொள்வதோடு ஆன்மீகக் கூறு அவரை பிரபஞ்சத்தின் கிரீடமாக்குகிறது (R. Bilquees Dar, 2013: 450).

இக்பாலைப் பொறுத்தவரை, 'சம்பூரண மானுடர்' என்பவர் தீர்க்கதரிசன அருளில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டார், மேலும் சம்பூரண மானுடர்; (அதிமானுடர்) பற்றிய இக்பாலின் பார்வை நீட்ஷே மற்றும் இஸ்லாத்தின் தீர்க்கதரிசன நிலையின் கூட்டு இணைப்பாகும். முஹம்மத் நபி சமூகம், வரலாறு, கலாசாரம் மற்றும் முழு மனிதகுலத்திற்கும் உத்வேகம் அளித்த ஒரு முழுமையான சம்பூரண மானுடர் ஆவர். அவர் முழு மனிதகுலத்திற்கும் முன்மாதிரியான சம்பூரண மானுடர். மாறாக, நீட்ஷே கிறிஸ்தவ ஒழுக்கத்தை கடுமையான விமர்சனத்திற்கு உட்படுத்துகிறார். அவர் கடவுளை மறுப்பதால் அவர் மனம் கடவுளை நம்பவில்லை, எனினும் அவருடைய கருத்துகள் இஸ்லாமிய சமயத்திற்கு மிக நெருக்கமானவையாகும். இக்பாலின் சம்பூரண மானுடர் என்ற கருத்து கடவுள் மீதான நம்பிக்கையைச் சார்ந்துள்ளது. சம்பூரண மானுடரின் 'கை உண்மையில் கடவுளின் கையாகும்'. ஆதிக்கம் செலுத்துவதில் தேவதூதர் போன்ற மனநிலையுடையவர், எஜமானரின் பண்புகளைக் கொண்ட ஒரு சேவகராகவும் இருப்பார் (R. Bilquees Dar, 2013: 450). இக்பாலின் சம்பூரண மானுடர், சாமானிய மானுடரை விஞ்சிய எஜமானர் அல்ல. அவர் சாராம்சத்தில் வெளியிலும் காலத்திலும் தன்னை உணர்ந்து கொள்ளும் ஓர் ஆன்மீக மனிதராவார். மேலும் அவர் சார்ந்த சமூகத்தில் உரிமைகள் மற்றும் கடமைகளைக் கொண்ட ஓர் உயிருள்ள சக்தியாக இருப்பார்.

இக்பாலின் சம்பூரண மானுடர், கெடுதியின் மூலம் துன்பகரமான இன்பத்தைப் பெற்று, தலைமுறைகளின் படுகொலையிலிருந்து வெளிப்படும் ஒரு இரக்கமற்ற மானுடர் அல்ல. சுயமாக விதிக்கப்பட்ட பௌதிக மற்றும் ஆன்மீக ஒழுக்கத்தால் தனது சுயத்தை (ஈகோ) வலுப்படுத்தி, அதன் மூலம் தனது தற்போதைய நிலைக்கு மேலே உயர்ந்து, அர்த்தத்திலும் சாத்தியக்கூறுகளிலும் எல்லையற்ற புதிய உலகத்தை உருவாக்குபவர். சுயத்தின் இறுதி நோக்கம் என்பது எதையாவது பார்ப்பது அல்ல, மாறாக, எதாவது ஒன்றாக இருப்பதாகும். தனது செயல் முறையைக் கூர்மைப்படுத்துவதற்கு மிகவும் அடிப்படையாக 'நான்' என்ற சுயம் இருப்பதை இக்பால் கண்டறிந்து குறிப்பிட்டார்.

இக்பாலின் சம்பூரண மானுடர், முழுமையான மற்றும் உண்மையான சுதந்திரத்தையும் அழியாமையையும் பெற்ற ஒரு வளர்ந்த ஆளுமையாகும். 'கடவுள் இறந்து விட்டார்' என்ற பரவலான ஏற்றுக் கொள்ளலின் விளைவாக ஏற்படும் அனைத்து சமய மற்றும் ஒழுக்க கொள்கைகளின் இன்மைவாத (Nihilism), நிராகரிப்புக்கு விடையாக நீட்ஷே தனது அதிமானுடரைக் கண்டார். நீட்ஷேக்கு அதிமானுடர் உண்மையான மனிதகுலத்தின் முன்மாதிரியாக இருந்தார், அவர் நீண்ட பரிணாம வளர்ச்சியின் விளைவாக இருக்க மாட்டார், ஆனால், உயர்ந்த ஆற்றலைக் கொண்ட மானுடர் மட்டுமே தன்னை முழுமையாகக் கட்டுப்படுத்திக் கொண்டு, இந்த பூமியில் முழுமையாக வேரூன்றிய தனது சொந்த விழுமியங்களை உருவாக்க கிறிஸ்தவத்தின் மரபார்ந்த தீய - போலியான ஒழுக்கத்தைத் தாக்கும்போது அவர் வெளிப்படுவார். ஜேர்மானிய நாஜிக்களின் (ஹிட்லர்) மிருகத்தனமான அதிமானுடர் எனப் பரவலாகப் புரிந்து கொள்ளப்பட்டாலும், நீட்ஷே விரும்பியது கிறிஸ்துவின் ஆன்மாவுடன் ஒரு 'சீசர்' ஆகும் (R. BilqueesDar, 2013: 450). எனவே, நீட்ஷே அமைதி மற்றும்

சகோதரத்துவத்தின் தூதரான இயேசுவை (அதிமானுடர்), விமர்சிக்கவில்லை, அவர் கிறிஸ்தவத்தின் மரபார்ந்த ஒழுக் கத்தையே அதாவது கிறிஸ்தவ இறையியலின் தவறான விளக்கத்தையே விமர்சிக்கின்றார். 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நீட்ஷேயையும் விஞ்சிய டொனால்ட் டிரம்ப் தான் ஒரு கடவுள் வழிபாட்டுக்குரியவர் எனக்கருதி, சமூக ஊடகங் களில் இயேசு கிறிஸ்து வடிவத்தில் தோன்றி மறைந்த அற்பு தத்தை நாம் இங்கு தற்செயலானது என இலகுவாக கடந்து போக முடியாது. விவிலியத்தில் இயேசு கிறிஸ்துவே இது குறித்து எச்சரித்துள்ளதாக புதிய ஏற்பாடு கூறுகிறது; 'அநே கர் என் நாமத்தைத் தரித்துக் கொண்டு வந்து: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பர்' (மத்தேயு 24:5). இவ்வாறு உலக கிறிஸ்தவர்களின் விசுவாசத்தினை நிந்தனை செய்யும் டிரம்ப் போன்றவர்களின் கோமளித்தன மான காட்டுத்தார்பாருக்கும், வல்லரசு ஆணவத்திற்கும் எதிர் வினையற்றக் கூடிய ஓர் அதிமானுடர் தேவை இன்றளவும் வெற்றிடமாகவுள்ளதும் மனங்கொள்ளத்தக்கது.

முடிவுரை:

நீட்ஷே தனது உன்னத ஆன்மீகத் தேவையைத் துல்லியமாக அறிந்திருந்தார். சமய நிறுவனங்களின் மீதான தீவிர விமர் சனத்தின் ஊடாக, மானுடப் பரிணாமத்தில் ஒரு புதிய மாற் றம் நிகழும் என அவர் திடமாக நம்பினார். அம்மாற்றம் என்பது மனித இருப்பைத் தெய்வீக நிலைக்கு உயர்த்துவ தாகும். இந்தத் தத்துவப் புள்ளியில்தான் இக்பாலும் நீட்ஷே யும் இணைகிறார்கள். அவர்கள் மானுட எதார்த்தத்தை நிறுவ வும், மனித ஆளுமைகளைச் சுதந்திரமானதொரு நிலைக்கு மாற்றவும் விழைந்தனர். அதன் பொருட்டு, புறவயமான சமூ கக் கட்டுப்பாடுகள், நிறுவனமயப்பட்ட விதிகள் மற்றும் மரபுகள் ஆகியவற்றை உடைத்தெறிய முற்பட்டனர். இவ்விரு வரும் தத்துவார்த்த ரீதியாக ஏற்கும் பொதுவான அம்சம் 'சுய உயர் நிலைக்கான மானுட வல்லமை' ஆகும். எனவே, சுதந் திரத்தைக் கட்டுப்படுத்தும் புறக் காரணிகளுக்குத் தரப்படும் 'மறுப்பு விடை'யே, பண்பாட்டு ரீதியாக மேம்பட்ட உயர்ந்த ஆளுமையை உருவாக்குகிறது. இத்தகைய உன்னதப் பண் புகளின் சங்கமமே, 'அல்-இன்ஸானுல் காமில்' (சம்பூரண மானுடர்) மற்றும் 'அதிமானுடர்' என்பதாகும். சாமானிய நிலை யிலிருந்து இத்தகைய உன்னத நிலையைப் பிரித்தறிவிப்பது அதற்கேயுரிய உன்னதச் செயல்பாடுகளேயன்றி வேறில்லை. சமகாலச் சூழலில் இத்தகைய ஆளுமை என்பது, ஆரவார மற்ற அமைதி, சுய ஒழுக்கம், 'நிழல் மனிதர்களின்' புற அழுத் தங்களுக்கு மத்தியிலும் நிதானம் குலையாமை, நம்பகத் தன்மை மற்றும் நுணுக்கமான செயல்வேகம் ஆகியவற்றால் கட்டமைக்கப்பட்டிருக்கும்.

Jamahir.pm@thaiveedu.com

மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜாவின்

‘முனையிலே முகத்து நில்’

நூலினை முன்வைத்து



மாவிலி மைந்தன் சி. சண்முகராஜாவின் நூல் மற்றும் இசைப்பேழை வெளியீட்டு விழா, அண்மையில் ரொறன்ரோ மாநகர சபையின் 'ஸ்காபரோ சிவிக் சென்டர்' (Scarborough Civic Centre) மண்டபத்தில் நடைபெற்றது. மகாகவி பாரதியாரின் 'புதிய ஆத்திசூடி'யின் 110 சொற்றொடர்களைத் தலைப்பாகக் கொண்டு, மரபுக்கவிதை வடிவத்தில் எழுதப்பட்ட நூலே இந்த ‘முனையிலே முகத்து நில்’ ஆகும்.

நூலாசிரியர் அறிமுகம்:

மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா அவர்கள் விஞ்ஞானம் கற்று செவிலியராக இலங்கை அரசாங்கத் தாதியர் சேவையில் தனது பணியைத் தொடங்கியவர். தொடர்ந்து, தாதியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராக, மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரியின் பிரதி முதல்வராகப் பதவி உயர்வுபெற்று பணியாற்றியவர். பின்பு, ஓமான் நாட்டுக்குச் சென்று, அங்கும் செவிலியர் பயிற்சி கல்லூரியில் விரிவுரையாளராகவும் பணியாற்றிக் கனடாவில் தனது குடும்பத்தினருடன் குடியேறியவர். கனடாவிலும் Toronto East York பொது வைத்தியசாலையின் அவசர நோயாளர் பிரிவில் செவிலியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். வார விடுமுறை நாட்களில் அமரர்கள் பண்டிதர் மா.செ. அலெக்ஸ்சாந்தர், கவிநாயகர் வி. கந்தவனம் ஆகிய தமிழ் அறிஞரிடம் யாப்பிலக்கணத்தையும், தமிழ் இலக்கியத்தையும் முறையாகக் கற்று சிறந்த மரபுக் கவிஞராகத் தன்னை வளர்த்துக் கொண்டவர். கவிச்சக்கரவத்தி கம்பனையும், மகாகவி பாரதியாரையும் ஆராதிப்பவர், இருவரதும் படைப்புகளில் தோய்ந்தவர். அண்ணாமலை பல்கலைக்கழகம், கனடா வளாகத்தில் கல்வி கற்று, தமிழ் முதுமாணிப் பட்டம் பெற்று தனது தமிழ் அறிவை மேலும் வளமாக்கியவர். அண்ணாமலை பல்கலைக்கழகம் கனடா வளாகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர்.

பாவலர், எழுத்தாளர், சிறந்த பேச்சாளர், ஆய்வாளர், சமூகச் சேவையாளர் எனப் பன்முகத் திறமை கொண்ட மாவிலி மைந்தன், தமிழ் மீதும் தாயக விடுதலை மீதும் ஆழமான ஈடுபாடு உடையவர். கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் தோற்றுவிப்புத் தலைவராகவும், தற்போதைய தலைவராகவும் விளங்கும் இவர், அக்கழகம் நடத்திவரும் யாப்பிலக்கண வகுப்புகளின் முதன்மை ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறார். சிறந்த மர

tg.theeban@gmail.com

புக்கவிஞரான இவர், கனடா வாழ் தமிழ் அறிஞர்களில் ஒருவ ராகத் திகழ்கின்றார். இதற்கு முன்னர் 'வைகறை வானம்', 'மன வெளி மேகங்கள்' ஆகிய இரண்டு கவிதைத் தொகுப் புகளை வெளியிட்டுள்ள கவிஞரின் மூன்றாவது கவிதை நூலாக இந்த 'முனையிலே முகத்து நில்' அமைகிறது.

நூல் உருவாக்கம் பெற்ற பின்புலம்:

தமிழகத்தைச் சேர்ந்த பாவரசு பாரதி சுகுமாரன், மகாகவி பாரதியாரின் 'புதிய ஆத்திசூடி'யில் உள்ள 110 சொற் றொடர்கள் ஒவ்வொன்றையும் தனித்தனித் தலைப்பாகக் கொண்டு, 110 கவிஞர்கள் மூலம் 110 நூல்களை வெளியிடும் உலகளாவிய திட்டமொன்றை முன்னெடுத்தார். இத்திட்டம் குறித்த தகவல் புலனம் (WhatsApp) வழியாக மாவிலி மைந்தன் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. மகாகவி பார தியாரின் கவிதைகளால் ஈர்க்கப்பட்ட மாவிலி மைந்தன், இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்த 110 தலைப்புகளிலும் கவிதைகளை இயற்றினார். அவ்வாறு அவர் எழுதிய கவிதை களின் தொகுப்பாக உருவானதே இந்த 'முனையிலே முகத்து நில்' என்னும் நூலாகும்.

கவிதை உலகுக்குத் தன்னை ஈர்த்தவர்களுள் கம்பனையும் பாரதியாரையும் முதன்மையானவர்களாகக் குறிப்பிடும் மாவிலி மைந்தன், பாரதியார் மீது தான் கொண்டுள்ள பற்று தலைத் தனது நூலில் பதிவு செய்துள்ளார். குறிப்பாக, 'உன்னை படித்ததால் என்னை வடித்தவன் நான்' என்று அவர் பாரதியாரைக் குறித்து எழுதியுள்ளார். கவிஞரின் இக் கூற்று வெறும் வார்த்தை அல்ல என்பதை, இந்நூலில் இடம் பெற்றுள்ள கவிதைகளின் ஆழமும் மொழிநடையும் வெளிப் படுத்துகின்றன.

பாரதியின் புதிய ஆத்திசூடியில் உள்ள 110 சொற்றொடர் களில் 79-ஆவது தொடர் 'முனையிலே முகத்து நில்'. இதுவே கவிஞருக்கு வழங்கப்பட்ட தலைப்பாகும். அதையே தனது நூலுக்குத் தலைப்பாகக் கொடுத்திருப்பது மிகப் பொருத்த மாகும். முனையிலே முகத்து நில் என்பதற்கு, நாம் எந்த வேலையை எடுத்தாலும் அதில் முனைப்பாக முன்னணியில் நிற்க வேண்டும் என்பது பொருளாகும். எடுத்துக்காட்டாக மாணவனாக, விளையாட்டு வீரனாக, தொழிலாளியாக, தொழில் அதிபராக, உற்பத்தியாளனாக, நாட்டைக்காக்கும் போர் வீரனாக, விடுதலை வீரனாக ஈடுபடும்போது முனைப் பாக முன்னணியில் இருக்க வேண்டும் என்பதாகும்.

பாவலர் மாவிலி மைந்தன் அவர்கள் தனக்கு வழங்கப்பட்ட 'முனையிலே முகத்து நில்' தொடருக்கு மட்டுமல்லாது பாரதி யின் புதிய ஆத்திசூடியிலுள்ள ஏனைய 109 சொற்றொடர்க ளுக்கும் மரபுக்கவிதையின் பல்வேறு வடிவங்களில் பாடல் கள் தந்துள்ளார், யாவும் யாப்பிலக்கணத்துக்கு அமைய ஆக்கப்பட்ட மரபுக் கவிதைகளாகும். அவை மரபுப் பாக்க ளான ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா வடிவங்களிலும், பாவினங்களான தாழிசை, துறை, விருத்தம், மற்றும் இசைப் பாடல்களான கும்மி, சிந்து, கிளிக் கண்ணிகள் முதலிய வடி வங்களிலும் படைத்துள்ளார்.

உள்ளத்தில் ஊறும் ஆழமான உணர்வுகளையும், உன்னத அனுபவங்களையும், உயர்ந்த கருத்துகளையும் அழகிய, அளவான சொற்களால் கவித்துவ வடிவாக்குவதே கவிதை எனப்படுகிறது. இதற்கு இன்னும் ஒருபடி மேலே சென்று, 'கற் பனையின்றிக் கவிதை இல்லை' என்கிறார் கவிநாயகர் வி. கந்தவனம். கற்பனையும் கலைத்திறனும் (விற்பன்னமும்) இணையும் போதே கவிதை முழுமையடைகிறது என்பதை இக்கூற்று உணர்த்துகிறது. கவிநாயகரின் கூற்றுக்கு அமைய இந்த நூலில் இடம்பெற்றுள்ள மாவிலி மைந்தன் கவிதை களில் கற்பனை, உணர்ச்சி, ஓசை நயம், சொற்சுவை, பொருள் நயம், அணிச் சிறப்பு என அத்தனையும் அமைந்துள்ளன. இவையாவும் மாவிலி மைந்தன் அவர்களைச் சிறந்த மரபுக் கவிஞர் என்பதை உறுதிசெய்கின்றன.

சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், திருமந்திரம், கம்பராமாயணம் மற்றும் பாரதியார் பாடல்கள் முதலான வற்றைக் கற்றுத்தேர்ந்த மாவிலி மைந்தன், அவற்றி லுள்ள முதன்மையான கருத்துகளையும் சொற் றொடர்களையும் உரிய இடங்களில் கவிதை நயத்துடன் கையாண்டுள்ளார். இவருடைய இயல்பான கற்பனைத் திறன் கவிதகளின் ஓட்டத்திற்கு மேலும் துணையாக நிற்கி றது. 120 பக்கங்களைக் கொண்ட 'முனை யிலே முகத்து நில்' என்னும் இந்நூலில்,

பாரதியாரின் 110 ஆத்திசூடித் தொடர்களுக்கான கவிதைகள் முழுமையாக இடம்பெற்றுள்ளன. அவற்றுள் சில கவிதைகள் இங்கு ஆய்வு நோக்கில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

புறநானூற்றுப் பாடல்கள் தரும் நெகிழ்ச்சி யான போர்க்களக் காட்சிகளை நமது கவிஞர் தனது பாணியில் தந்துள்ளார். கணவனையும் தந்தையையும் இழந்த ஒரு பெண் தன் ஒரே மகனை போர்க்களத்துக்கு அனுப்பி முன்னரங்கத்தில் நின்று போரிடுமாறு கூறுவதை நாம் அனைவரும் அறிவோம். அந்தக் காட்சியைக் கவிஞர் தனது பாடலில் பின்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறார்.

'போர்முனைக் கேசென்று போரிட நேர்ந்தாலும்
போரின் முகத்திலே சேர்ந்துநில்லு
மார்பை உயர்த்தியே மானத்தைக் காத்திட
மண்டியிடாது நிமிர்ந்துநில்லு!...'

அதேபோன்று புறநானூற்றுப் பாடல்களில் உள்ள புகழ் பெற்ற பிசிராந்தையார் பாடலில் வரும் 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்' என்ற தொடரை 'முனையிலே முகத்து நில்' தொடருக்காக வரும் கவிதைகளில் காணலாம். இதோ கவிஞரின் பாடல்,

'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கையில்
ஆழ்ந்த அறிவை வளர்த்துவிட்டால்
சான்றோர் அமர்ந்த சபையில் அவரோடு
சாலவும் முன்னே யமர்ந்திடலாம்'

இவ்வாறாக, முனையிலே முகத்து நில் தொடரை விளக்கி ஆறு பாடல்களை இயற் கும்மி வடிவத்தில் தந்துள்ளார். யாவும் அற்புதமான கவிதைகளாகும்.

நூலில் நான்காவது தொடராக வரும் 'ஈகை திறன்' தொட ருக்கு கலி வெண்பா வடிவத்தில் கவிதை தந்துள்ளார். ஈதல் இசை பட வாழ்தல் அதுவல்ல என்ற வள்ளுவரின் குறளில் தொடங்கி, பாரதியாரின் ஈகை மனம் அதாவது தன் குடும் பமே வறுமையில் வாடும்போதும், மனைவி சேர்த்துவைத்த தானியத்தை உயிரினங்களுக்கு வழங்குவதையும், பொன் னையும் பொருளையும் சேர்த்துவைப்போர் சமூகத்துக்கு உதவாது தனது நலத்தையே பேணுவர் ஏன் மண்ணுள் வளரும் மரம் செடிக்குக்கூட உதவமாட்டார் என்பதையும், ஏழைகளுக்குக் கொடுத்தால் அது இறைவனுக்குச் சேரும் எனும் திருமந்திரம் கூறும் கருத்தையும், விடுதலைப் போரா ளிகளின் உயிர்த் தியாகத்தையும், ஈகம் செய்யாது கஞ்சத் தனமாக வாழ்வோரையும், வறியார்க்கு ஈகை செய்வோர் அடையும் நன்மை, ஈகையால் வரும் பயன் முதலியவற்றை கவிஞர் அழகாக தனது வரிகளில் வடித்துள்ளார். இதோ அந்தக் கவிதை,

'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதிய மில்லை உயிர்க்கென்ற வள்ளுவத்தைப்
பாட்டில் பதித்துவைத்த பாரதியும் தன்வறுமைக்
கோட்டுக்குள் வாழ்ந்தாலும் கொள்கை பிறழாமல்
சோற்றுக்குத் தன்மனையாள் சேர்த்துவைத்த
நெல்மணியைக்
காக்கை, குருவிகட்கும் கைநிறையப் பங்குவைத்தான்!
மாகவிஞன் ஈகைதிறன் மாண்பை உலகறியும்
ஈகைதரு மின்பத்துக்(கு) ஈடும் இணையுமில்லை!
பொன்னைப் பொருளைப் புதைத்துவைத்துக்
காத்திருப்போர்
தன்னை வளர்ப்பார்கள் தன்நலமே காப்பார்கள்
மண்ணுள் புதைந்தும் மரஞ்செடிக்கும் தாமுதவார்
எண்ணில் சிறப்பில்லை எப்பயனும் மில்லை...'

பாரதியின் 'ஆண்மை தவறேல்' என்ற தொடருக்கு அறுசீர்க் கழிநெடிலடி விருத்தத்தில் மூன்று பாடல்களைத் தந்துள் ளார். இதில் செய்யுள் உறுப்புகளில் ஒன்றான தொடையை சிறப்பாகக் கையாண்டுள்ளார். தொடை என்னும் போது மோனைத் தொடை, எதுகைத் தொடை, இயைபுத் தொடை, முரண் தொடை, அளபெடைத் தொடை ஆகிய ஐந்தும் முக் கியமாக பாடல்களில் கையாளப்படுகின்றன. இவையே பாட லுக்கு ஓசை நயத்தைத் தருவதாகும். எனவேதான் நம் முன் னோர்கள் 'தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்' என்ற பழமொழியால் அழைத்தனர்.

ஆண்மை தவறேல் என்ற பாடல்களில் இயைபுத் தொடை யின் சிறப்பைக் காணலாம்... இயைபுத் தொடை என்பது ஒரு அடியின் இறுதியில் வரும் ஓர் எழுத்து அல்லது ஒரு சீர் ஒவ் வொரு அடியிலும் தொடர்ந்து வருவதாகும். பின்வரும் இந் தப் பாடலில் அந்தத் தொடையழகைக் காணலாம்,

'உறுதிகொள் உடலே ஆண்மை
உள்ளத்திலே வலிமை ஆண்மை
பொறுமையில் நிறைதல் ஆண்மை
பொற்பொடு வாழ்தல் ஆண்மை
வறுமையில் துணிதல் ஆண்மை
வாய்ச்சொலை மதித்தல் ஆண்மை
அறுதியாய் அனைத்தும் ஆண்மை
ஆதலால் தவறேல் ஆண்மை'

என்று பாடியுள்ளார்.

பாரதியின் மற்றொரு தொடரான 'ஞாயிறு போற்று' என்னும் தொடருக்கு நிலைமண்டில ஆசிரியப்பா வடிவத்தில் கவிதை தந்துள்ளார். சிலப்பதிகாரம் என்னும் முத்தமிழ்க் காப்பி யத்தை தந்த இளங்கோவடிகள் காப்பியத்தை தொடங்கும் போது மங்கல வாழ்த்து பகுதியில் கடவுள் வாழ்த்துக்குப் பதிலாக திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும் என்று இயற்கையை வாழ்த்திப் பாடுகின்றார். இதில் ஞாயிறு போற்று

தும் தொடரை நமது கவிஞர் பாரதியின் ஞாயிறு போற்றுதும் தொடருக்குத் தொடக்க அடியாகக் கொண்டு நிலைமண்டில ஆசிரியப்பா வடிவத்தில் சிறப்பான கவிதை தந்துள்ளார்.

'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
மாயிருள் அகற்றும் ஞாயிறு போற்றுதும்
அண்டமும் அண்டத்துக் கப்பாலும் மாந்தன்
கண்டதும் கண்டறி யாதபல் கோள்களும்
எண்ணுக் கடங்கா திருப்பதை அறிவோம்...
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
மாயிருள் அகற்றும் ஞாயிறு போற்றுதும்'

என முடிகின்றது.

பாரதியின் மற்றொரு தொடரான 'ஔடதம் குறை' இதுபற்றி குறள் வெண்பா வடிவத்தில் 12 குறள்களைத் தந்துள்ளார்.

(ஔடதம் - மருந்து) குறள் வெண்பா பற்றிய வடிவத்தைச் சிலர் கூறும்போது அது ஒன்றே முக்கால் அடியால் ஆன தென்பர். அது தவறாகும். குறள் வெண்பா அளவடி, சிந்தடி ஆகிய இரண்டு அடிகளையும் கொண்டு அமைவது. இங்கே ஔடதம் குறை என்ற தொடருக்கான அத்தனை வெண்பாக் களும் முத்துக்களாகும். மனம் மொழி, மெய்யில் தூய்மை இருந்தால் மருந்தே தேவையில்லை, ஏற்ற உணவு, அள வான உடல் எடையும் இருந்தால் மருந்து தேவையில்லை என்கிறார். மேலும் நோயைக்கட்டுப்படுத்து நாம் மாளாந்தம் எடுக்கும் மருந்து மாத்திரைகள் பக்கவிளைவைத் தருபவை என்பதையும், மது, புகைத்தல் பழக்கத்தால் வரும் தீமைக ளையும் கூறியுள்ளார். வள்ளுவரின் மருந்து பற்றிய கருத்து களையும் தனது கருத்துகளையும் இணைத்துப் பயனுள்ள தகவல்களைப் படிப்போரின் சிந்தனைக்கு விருந்தாக குறள் வெண்பாவில் பதிவு செய்துள்ளார்.

சான்றாச் சில குறட்பாக்கள்,

'மருந்தை விருந்தாய் மகிழ்ந்தால் மருந்தே
வருந்தும்நோய் கொண்டு வரும்.

மருந்தென வேண்டாம் மனம்மொழி மெய்யில்
இருக்குமே தூய்மை யெனில்.

ஏற்ற உணவும் எளிதாய் உடலெடையும்
போற்றிவர நோயெட்டிப் போம்.

எந்த மருந்துக்கும் உண்டாம் எதிர்விளைவு
சிந்தித்து ஏற்றபடி செய்...'

இவ்வாறாக, 110 தொடர்களிலும் நேரிசை, நிலைமண்டிலம் ஆகிய ஆசிரியப்பா வடிவங்களையும் அறுசீர் முதல் பதி னான்கு சீர் வரையிலான கழிநெடிலடி விருத்த வகைகளை யும் கையாண்டு இந்நூலை ஆக்கியளித்துள்ளார். மேலும், நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, கலிவெண்பா, குறள் வெண்பா, குறள்வெண் செந்துறை, தரவுகொச்சகக் கலிப்பா, கட்டளைக்கலிப்பா, கலித்துறை, வெண்கலிப்பா, கலிவிருத்தம், சந்தக் கலிவிருத்தம் போன்ற பல்வேறு யாப்பு வடிவங்களையும் கும்மி, சிந்து, கிளிக்கண்ணி முதலான இசைப்பாடல் வடிவங்களையும் கையாண்டு, இலக்கணச் சுத்தியுடனும் இலக்கிய நயத்துடனும் சிறந்த கவிதைகளைப் படைத்துள்ளார்.

நூற் பயன்:

பாவலர், மரபுக்கவி வித்தகர், மாவலி மைந்தன் அவர்களின் 'முனையிலே முகத்து நில்' கவிதை நூல் செய்யுள் யாப்புக் கமைய மரபு பாக்களாலும் பாவடிவங்களாலும் அமைக்கப் பட்ட சிறந்த நூல். இதிலுள்ள கவிதைகள் சொற்சுவை, பொருட்சுவை அணிநயம் முதலியனவற்றைச் சிறப்பாகக் கொண்டுள்ளன. இந்நூல் வளரும் கவிஞர்களுக்கு வழிகாட் டியாகவும், யாப்பிலக்கணத்தைக் கற்று, மரபுக் கவிதை எழு துவோருக்குச் சிறந்த கைந்நூலாகவும் பயன்படும் என்றால் மிகையாகாது. மேலும், கவிதை நயத்தைத் விரும்பும் இலக் கியப் பிரியர்களுக்கு நல்ல விருந்தாக அமையும் என்பதும் திண்ணம்.

தமிழர் இலக்கிய மையமும் தகடூர் கலை இலக்கியப் பண் பாட்டுத் தளமும் இணைந்து, 11-03-2022 அன்று தருமபு ரியில் நடத்திய தமிழ் இலக்கியத் திருவிழாவில், இக்கவிதை நூலுக்காகக் கவிஞர் மாவிலி மைந்தன் அவர்களுக்கு 'பாரதி விருது' வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

மெட்டுக்குப் பாட்டெழுதுவதைப் போன்றதொரு பெரும் சவா லான இப்பணியை ஏற்று, பாரதியின் புதிய ஆத்திசூடியின் 110 தொடர்களுக்கும் இலக்கணச் சுத்தியுடன் மிகச் சிறப்பான பாடல்களைத் தந்து கவிஞர் மாவிலி மைந்தன் சாதனை படைத்துள்ளார். 'எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினை உடைய காவியம் ஒன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோன் ஆகின்றான்' என்ற மகாகவி பாரதியாரின் கூற்றை நிறைவு செய்யும் நோக்கில், 'முனையிலே முகத்து நில்' என்னும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இத்தகைய நூலைத் தந்துள்ள கவிஞர் மாவிலி மைந்தன் அவர்களின் தமிழ்ப் பணி, மேலும் பல புதிய படைப்புகளோடு தொடர்வது தமிழ் இலக்கிய உலகிற்குப் பெருமை சேர்ப்பதாக அமையும்.

kumaraguru.sk@thaiveedu.com

‘பத்திரிகைத்துறையில் என்கதை’ ஒரு வரலாற்று ஆவணம்!

- எஸ்.கே. விக்னேஸ்வரன்

ஓய்வுபெற்ற மூத்த ஊடகவியலாளரும், சிறந்த மொழிபெயர்ப்பாளரும், கவனத்துக்குரிய அரசியற் கட்டுரைகள், பத்திகள் மூலம் பரவலாக அறியப்பட்ட பத்திரிகையாளரும், தனது பணி ஓய்வு நிலையிலும், தொடர்ந்தும் அதே ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதி வருபவருமான மதிப்புக்குரிய நண்பர் வீரகத்தி தனபாலசிங்கம் அவர்களது தற்போது வெளியாகியுள்ள புதிய நூல் தான் ‘பத்திரிகைத் துறையில் என்கதை’ என்ற இந்தச் சுய வரலாற்று நூல்.

இலங்கையிலிருந்து அவர் எனக்கு அனுப்பி வைத்திருந்த இந்த நூலை வாசிக்கத் தொடங்குமுன் அந்தத் தலைப்பு தொடர்பாக என் மனதில் ஓடிய எண்ணங்கள் இவை: எனக்குத் தெரிந்த அளவில் பாரதி முதல் மஹாத்மா காந்தி உட்பட பல முக்கிய எழுத்துலக அறிஞர்கள் ‘என்கதை’ என்ற தலைப் பில் அல்லது அதற்கொப்பான தலைப்பில் எழுதிய பல நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் பாரதியின் கவிதையிலமைந்த சுயசரிதத்தைத் தவிர்த்து, உரைநடையிலேயே மற்றைய அனை வரும் தங்கள் கதைகளையே எழுதியுள்ளனர். அதிலும் உ.வே.சா. அவர்களின் ‘என் சரித்திரம்’, நாமக்கல்லாரின் ‘என்கதை’, அண்மைக் காலங்களில் வெளிவந்த நமது மூத்த எழுத்தாளர் டானி யல் எழுதிய ‘என்கதை’ கமலாதாஸ் மலையாளத்தில் எழுதி தமிழில் வெளிவந்த ‘என்கதை’ என்று தொடர்ச் சியாக ஞாபகத்துக்கு வந்த நூல்களின் பட்டி யலைப் பற்றி யோசிக்கையில் ஒவ்வொரு எழுத்தா ளருக்கும் தத்தமது கதையைச் சொல்வதற்கான கதை - ஒரு நூலை எழுதுவதற்கான - ஒரு கதை இருந்திருக்கத்தான் செய்கிறது என்று தோன்று கிறது.

தாம் வாழும் சமூகம் சார்ந்த, அதற்கு வழிகாட்டும் அல்லது அதுபற்றிப் பேசும் ஒருதுறையில் செயற் படும் எவருக்கும் - அவர் ஒரு அரசியற் செயற்பாட்ட ளராகவோ, சமூக செயற்பாட்டாளராகவோ, அல் லது மொழிசார்ந்து கவிதை, உரைநடை, மொழி யாக்கம், இலக்கிய ஆய்வுகள், பதிப்பு நடவடிக் கைகள் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுப வராகவோ, அல்லது மேலும் குறிப்பாக, இவற்றில் ஏதாவதொன்று, தொடர்பாகப் பத்திரிகை அல்லது வேறு ஏதாவது ஊடகத் துறையில் இருந்து செயற்ப டுகின்றவராகவோ - இருக்கும் எவருக்கும் அவை பற்றிச் சொல்வதற்கான அனுபவங்கள் நிறையவே கிடைக்கின்றன. அவர்களில் மிகச்சிலரே தமது அனுபவங்களை, தமது அடுத்த சந்ததிக்கு வழங் கும் முயற்சியில் சிரத்தையெ டுத்துச் செய்கின்றனர்; செய்திருக் கின்றனர். நான் மேலே குறிப்பிட்ட அனைத்துச் செயற்பாடுகள் சார்ந்த எழுத்துகளும் அந்த வகைப்பட்ட முயற்சிகள் தான். அவை, ஒரு காலகட்டத்தின் வரலாற்றை, வாழ்வியலை, நில வின அரசியற் போக்குகளை, நிலவிய பண்பாட்டை அப்ப டியேயோ அல்லது விமர்சனபூர்வமாகவோ, தமது பார்வையில் அடுத்த தலைமுறைகளை நோக்கி முன்வைக்கின்றன. அவற்றை ஆக்கியோர்களது விருப்பமும் நோக்கமும் சில வேளைகளில் வெறுமனே தமது அனுபவங்களைப் பகிர்வது மட்டுமேயானதாக இருக்கக்கூடும். ஆனால் அவற்றின் பயன்களோ, அவர்கள் எதிர்பார்ப்புக்கு அதிகமாகவே பல ருக்கும் ஏதோ ஒருவகையில் பயன்படுகின்ற நூல்களாக அமைந்துவிடுகின்றன.

இன்னமும் சரியாகச் சொல்வதானால், அவை ஒரு நூலாசிரியர் செயற்பட்ட காலத்தில் அவரது துறைசார்ந்து நிலவிய அரசியல், சமூக செயற்பாடுகள், வரலாற்று நிகழ்வுகள், சிந்தனைப் போக்குகள் போன்ற பல விடயங்கள் தொடர்பாகவும்

அவர் பெறுகின்ற நேரடி அனுபவப் பகிர்வுகளாக அமைவ தால், அவை அடுத்த தலைமுறைக்கான வரலாற்றுத் தகவல் களாக மட்டுமன்றி, அவர்களது வாழ்வுக்கான அடையா ளங்களை தாமே உருவாக்கிக் கொள்வதற்கான வழிகாட்டிக ளாகவும் அமைகின்றன. இதை மேற்குறிப்பிட்ட நூல்களை வாசித்திருப்பவர்கள் நிச்சயமாக அறிந்தும் உணர்ந்தும் இருப் பார்களென்று நம்புகிறேன். அந்த வகையில் இலங்கையின் ஒரு முக்கியமான காலகட்டத்தின் பத்திரிகைத்துறை சார்ந்த நிகழ்வுகளையும், தகவல்களையும் முன்வைக்கும் குறிப்பிடத் தக்க ஒரு நூலாக மதிப்புக்குரிய ஊடகவியலாளர் நண்பர் வீரகத்தி தனபாலசிங்கம் அவர்களுடைய பத்திரிகைத்துறை சார்ந்த அவரது அனுபவங்களைக் கூறும் 'என்கதை' என்ற இந்த நூலும் இணைந்து கொள்கிறது.

நூல் பற்றி இன்னும் குறிப்பாகச் சொல்வதானால், எழுபது களின் கடைக்கூறுகளில், ஒரு இளைஞனாக, வீரகேசரி பத்திரி கையில் ஒப்புநோக்காளராக இணைந்து அவர் ஆரம்பித்த எழுத்துப் பயணம், ஒரு செய்தியாளராக, ஆசிரியர் குழு உறுப் பினராக, உதவி ஆசிரியராக என்று வளர்ந்து, பின்னாளில் ஆரம்பிக்கப்பட்ட தினக்குரலின் பிரதம ஆசிரியராக உயர்ந் தது, தனது பத்திரிகைத்துறை சார்ந்த பணியிலிருந்து அவர் ஓய்வு பெற்றது என்பவை வரையான அவரது எழுத்துப்பணி, அதன் பின்னராக திரும்பவும் வீரகேசரியில் 'சமகாலம்' என்ற சஞ்சிகையை நடத்தியது சார்ந்த அனுபவங்கள், அக்கால கட்ட அரசியல் தொடர்பாக ஒரு பத்திரிகையாளராக அவரது பார்வை, தலைவர் சண்முகநாதனுடனான தொடர்பு, அவரது கட்டுரைகளை (வீரகேசரிக்கு அவை யாருடையவை என்று தெரிவிக்காமலே) மொழிபெயர்த்து தமிழில் ஒரு புனைபெ யரில் வெளியிட்டது என்று பல சுவாரசியமான விடையங்க ளையும் தன்னுள் அடக்கியதாக அமைகிறது இந்த நூல். அளவில் சிறியதாயினும் மிகுந்த கவனத்தைக் கோருகின்ற, ஒரே மூச்சில் வாசித்துவிடத் தூண்டுகின்ற ஒரு நூல் இது என்று துணிந்து சொல்லலாம்.

இந்த நூலின் பின்னிணைப்புக்கள் போன்று வந்துள்ள 'எனது நூல்கள்', 'கம்யூனிஸ்ட் தலைவர் சண்முகதாசன்', 'என் கதையை எழுத வைத்தவர்கள்' என்ற மூன்று குறுங் கட்டுரை களும் கவனத்துக்குரிய குறிப்புகளாக அமைந்துள்ளன. குறிப்பாக இவற்றுள் மதிப்புக்குரிய தலைவர் சண்முகதாசன் பற்றிய குறிப்பு மிகவும் கவனத்துக்குரிய ஒரு குறிப்பாகும். வீர கேசரியில் வெளிவந்த அவரது பத்திகள் என்று தெரியாமலே வாசிக்கக் கிடைத்த அவரது 'சத்தியன்' கட்டுரைகள் இ ப்போது ஓரளவு ஞாபகத்தில் வருகின்றன. யாரிந்தச் சத்தி யன் என்பதை அறிய முடியாமல் இருந்தபோதும், யாரோ ஒரு முக் கியமான கம்யூனிஸ்ட் கட்சி ஆளாகத்தான் இருக்க வேண் டும் என்ற எண்ணம் எனக்குள் எழுந்திருந்தது. பின்னாளில் நானும் அவர் சொல்லச்சொல்ல எழுதி சரிநிகரில் வெளியிட்ட 'சண் எழுதுவது...' என்ற சிறு பத்திக் குறிப்புகள் வெளிவந்த போது நிறையவே அவருடன் நான் உரையாடியிருந்தபோதும் ஒரு போதும் அவரிடமிருந்து வீரகேசரியில் அக்கட்டுரைகள் எழுதி யவர் தான்தான் என்பதை சண் என்னுடன் ஒருபோதும் பகிர்ந்து கொண்டதில்லை.

இன்னுமொன்றையும் இங்கு குறிப்பிட வேண்டும். தினக்குரல் வெளிவரத் தொடங்கியபோது, நாங்கள் நடத்திவந்த சரிநிகர் கிட்டத்தட்ட ஏழாண்டுகளைக் கடந்து வெளிவந்து கொண்டி ருந்தது. அது முதலில் இன்னொரு வீரகேசரியே என்ற எங்களது எண்ணத்திலிருந்து விடுபட்டு கவனத்துக்குரிய சில தனித்துவமான மாற்றங்களை வெளிப்படுத்தியபோது நமது ஆசிரியர் குழுவில் இந்த மாற்றங்களுக்கான காரணம் அதன் ஆசிரியர் தனபாலசிங்கம் அவர்கள் தான் என்று நாம் எங்க ளுக்குள் பேசிக்கொண்டது ஞாபகத்துக்கு வருகிறது. அங்கு பணியாற்றிய எமக்குத் தெரிந்த சூரிய குமாரி, தேவகௌரி போன்றவர்கள் மூலம் நாம் இதை உறுதிசெய்துகொண்டி ருந்தோம். பேராசிரியர் சிவத்தம்பி பேராசிரியர் சிவசேகரம் ஆகியோரது பத்தி எழுத்துகள் தொடர்ச்சியாக அதில் வரு வது எமது தினக்குரல் மீதான ஆர்வத்தை மேலும் அதிகரித்தி ருந்தது. வீரகேசரி மூலமாக தனபாலசிங்கம் அவர்களது எழுத் துகள் பற்றி நாங்கள் அறிந்திருந்த போதும், அவரது முழுமை யான கவனக்குவிப்பையும் பத்திரிகை தொடர்பாக அவர் கொண்டிருந்த நோக்கங்களையும் மேலும் சிறப்பாக செயற்ப டுத்துவதற்கான களமாக அமைந்தது தினக்குரலே என்பது எனது கணிப்பாக இருந்தது.

ஆயினும், சமகால அரசியல் சார்ந்த ஒரு முக்கியமான கவனத்துக்குரிய எழுத்தாளராக அவரது செயற்பாடு இந்த நூல் குறிப்பிடும் காலத்துடன் முடிந்துவிடவில்லை. இன்று வரை, அவரது பேனா பல பத்திரிகைகளிலும் பிற ஊடகங்க ளிலும் தொடர்ச்சியாகவும் அதே வீச்சுடனும் எழுதிக்கொண் டுதான் இருக்கிறது. நமது சமகாலத்தின், முக்கியமான அரசி யல் துறைசார் எழுத்துச் செயற்பட்டாளரான அவரது இந்த நூல், கிட்டத்தட்ட கடந்த அரை நூற்றாண்டு காலமாக நடந்த பல முக்கியமான சம்பவங்களை, சுவாரசியமான முறையில் முன்வைக்கின்ற ஒரு அரிய, அனைவரும் வாசிக்க வேண்டிய ஒரு நூல்.

பேராசிரியர் நுஃமான் அவர்கள் நூலுக்களித்த முகவுரையின் முடிவுரையில் குறிப்பிட்டுள்ள வரிகள் இவை: '...இப்போது வெளிவரும் 'பத்திரிகைத்துறையில் என்கதை' என்ற அவரது நான்காவது நூல் மிகவும் பயனுடையது. அவருடைய தன்வர லாற்று பதிவு என்பதற்கு மேலாக இலங்கைப் பத்திரிகைத்து றையின் நெளிவு சுழிவுகளை, நுட்பங்களி பிரச்சினைகளை மட்டுமன்றி அங்கு நடக்கும் குத்துவெட்டுக்களைக் கூட பொது வாசகர்கள் அறிந்துகொள்வதற்கு இந்த நூல் பயன் படும். அவ்வகையில் இதை ஒரு சுய வரலாற்று ஆவணமாக மட்டுமன்றி ஒரு பொது வரலாற்று ஆவணமாகவும் நாம் கருதலாம்'

பேராசிரியர் சுட்டிக் காட்டியது போல ஒரு ஆவணமாகவும் இருக்கும் அதே வேளையில் இளம் பத்திரிகையாளர்களுக் கான ஒரு வழிகாட்டியாகவும், ஒரு காலகட்ட இலங்கை அரசியல் போக்குகள் தொடர்பான பதிவாகவும் கூட அமை யக்கூடிய இந்த நூல் தொடர்பாக நிறையவே பேசலாம். ஆனால் இது இந்த நூலுக்கான ஒரு அறிமுகக் குறிப்பு மட் டுமே என்பதால் இவ்வளவுடன் நிறுத்துகிறேன். ஆர்வமுள்ள வாசகர்கள் அனைவரும் கட்டாயமாக வாசிக்க வேண்டிய ஒரு நூல் இது.

vickneaswaran.sk@thaiveedu.com

அ. இரவி அவர்களின் 'பம்பாய் சைக்கிள்' நாவல்

ஒரு காலத்தின் கதை

தாமரைச்செல்வி

tg.theeban@gmail.com



உறவுகளுடன் இணைந்த, இயல்பான வாழ்வொன்று எமக்கானதாக ஒரு காலத்தில் இருந்தது. அந்த வாழ்வு எழுபதுகளின் பின் கொஞ்சம் கொஞ்சமாய் மாறத் தொடங்கியது. பயமும் பதட்டமுமான சூழல் உருவாகி எல்லோர் வாழ்வையும் வேறு விதமாக எழுத முனைந்தது. படித்தவர்களிலிருந்து பாமரர் வரை ஊடுருவிய அரசியல் நினைத்தும் பார்க்க இயலாத துயரங்களை விதைத்துச் சென்றது. ஒரு கட்டத்தில் இந்திய இராணுவத்தின் வருகையும் தொடர் துயரமாய் அமைந்தது. எங்கிருந்தோ வந்தவர்கள் எம்மைத் தாக்குவதா என்ற ஆதங்கமும் ஆவேசமும் மனதுக்குள் உட்புகுந்து வெகுண்டு எழ வைத்தது. அந்த வாழ்வுதான் பம்பாய் சைக்கிளில் வரி வரியாய் நம் கண்முன் தரிசனம் தருகிறது.

எத்தனையோ இழப்புகளையும் துயரங்களையும் பார்த்து நொந்து வெளிதேசம் போனவனின் நனவிடை தோய்தல் இந்த வரலாறு. எமது வரலாற்றை அந்நியர்கள் எழுதிய துயரத்தின் விளைவு, பரிதி என்ற இளைஞனின் பார்வையில் விரிகிறது. அவன் நண்பன் அருணனின் வாழ்வனுபவங்கள் ஆசிரியர் கூற்றாக வெளிப்படுகின்றன. பொதுவாக, அ. இரவி அவர்களின் எழுத்து நம் மனங்களுடன் உரையாடிக் கொண்டே நகரும் தன்மை வாய்ந்தது. இந்நாவலிலும் அதுவே நிகழ்ந்திருக்கிறது. ஒவ்வொரு காலத்துக்குள்ளும் நம் கையைப் பிடித்து அழைத்துச் செல்கிறார் ஆசிரியர். எழுபது, எண்பதுகளின் காலப்பகுதி இங்கு களமாகிறது. ஈழத்தமிழர் வாழ்வின் முக்கிய திருப்புமுனையாகப் பார்க்கப்பட்ட காலம் அது. ஆயுதம் ஏந்த தலைப்பட்ட ஒரு தலைமுறையின் வரலாறு ஆரம்பமாகிய காலம். இளம் மனங்களில் உருவான எழுச்சி, எந்த இயக்கமானாலும் சரி அதனோடு சேர்ந்து ஆக்கிரமிப்புக்கு எதிராக போராட வேண்டும் என்ற முனைப்பைக் கொடுத்தது. அந்த நேர நெருக்கடிகளையும், அதன் பின்னான விளைவுகளையும் அவை தந்த அதிர்வுகளையும் அசை போட்டு, துயர் பட்டு அ. இரவி அவர்கள் தந்த எழுத்துக்கள் இவை. என்றோ நடந்தவைகளை மறுபடியும் மீட்டிப் பார்க்க வைக்கிறது. ஒரு இராணுவத்தின் அடக்கு முறைக்குள் சிக்கித் தவித்த மக்கள் மீது இன்னொரு இராணுவத்தின் அடக்கு முறைகள் ஆரம்பமான வரலாறு எழுதப் பட்ட காலம்.

இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் எம்மண்ணில் நுழைந்த பொழுது மக்களின் மனநிலை எவ்வாறு இருந்தது என்பது அனைவரும் அறிந்ததே. சிங்கள இராணுவத்தினரிடமிருந்து தம்மை மீட்க வந்த மீட்பர்களாகவேதான் அனைவரும் பார்த்தார்கள். மாலை போட்டு ஆரத்தி எடுத்து வரவேற்ற நிகழ்வுகளும் நடந்தன. முகத்தில் மகிழ்வு பொங்க வீதிகளில் நின்றார்கள். ஆனால், நடந்ததோ வேறாய் ஆனது. தம்மைக் காப்பாற்ற வந்தவர்கள் என்று யாரை நினைத்தார்களோ அவர்களின் துப்பாக்கி முனை தம்பக்கம் திரும்பிய போதுதான் நிலைமையின் விபரீதத்தைப் புரிந்து கொண்டார்கள். இந்திய இராணுவம் தமிழ் மண்ணில் நிலை கொண்டிருந்த காலங்களில் நடந்த கொடுமைகள் எல்லாம் வரலாற்றில் பதிந்து போயிருப்பவை. பிரம்படி லேனில் நடந்த படுகொலைகள் உட்பட பல சம்பவங்கள் அவர்களது கோர முகத்தைக் காட்டி நின்றன. அவையெல்லாம் இன்றைய தலைமுறையினர் அறிந்து கொள்ளாத வரலாறு. மனிதர் அனுபவித்துக் கடந்த அவைகளை இலக்கியங்கள்தான் கதைகளாக, கவிதைகளாக பதிந்து வைத்து அடுத்த தலைமுறைக்கு கையளிக்கிறது. இன்றைய தலைமுறையினரை அதிரச் செய்கின்ற பல நிகழ்வுகள் அரங்கேறிய காலம் அது. அப்படியொரு காலத்தின் கதையை அ. இரவி அவர்கள் பம்பாய் சைக்கிள் மூலம் ஆவணப்படுத்தியிருக்கிறார்.

ஒரு கதைசொல்லியாக ஆரம்பித்தும் முடித்தும் வைத்திருப்பவன் பரிதியாக இருந்தாலும் அருணன் பாத்திரமும் அவனுக்கு இணையான முக்கியத்துவத்தைப் பெற்று கதை முழுவதும் இணைந்தே பயணிக்கிறது. அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் பணி புரியும் பரிதிக்கு ஏழ்மை மிக்க எளிமையான மனிதர்களுடன் பணியாற்றும் சந்தர்ப்பங்கள் அதிகம். அவன் பார்வையிலேயே அந்த மக்களுக்கான பிரச்சனை

கள் பேசப்படுகின்றன. அன்றைய வாழ்வு முறைகள் எந்த விதமாக இருந்தன, அந்த மக்கள் எப்படி அவற்றை எதிர் கொண்டார்கள் என்பதை பரிதியின் பார்வையில் உணர முடிகிறது. அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் அன்றைய நாட்களில் மக்களுக்கு எத்தனையோ உதவியாக இருந்தன என்பது மறுக்க முடியாத உண்மை. அதன் செயல் வழி ஏழை மக்களின் நிலமை பேச முடிந்தது நாவலுக்கு பெரும் பலமாக அமைந்தது. மக்களின் நிலைமையை வெளிச்சம் போட்டுக் காட்டவும் பரிதியின் பாத்திரம் உதவியிருக்கிறது. இராணுவத்தின் கொடூரத் தாக்குதல்கள் பற்றியும் மக்கள் அழிப்பு பற்றியும் பல சம்பவங்களை இந்நாவல் விவரிக் கிறது. ஊர் பெயருடன் கூடிய உண்மைத் தகவல்கள் அவை.

பரிதி ஓரளவு வசதியான குடும்பத்தில் பிறந்தவன். விளை யாட்டுக் குணமும் மென்போக்குத் தன்மையும் கொண்டவன். இரக்கம் கொண்டு உதவிகளைச் செய்ய முன்வருபவன். பார்வைக்கு அழகானவன். கொஞ்சம் பலவீனமானவன். நாம் அன்றாடம் காணும் சராசரி இளைஞனாக தன்னை அடையா ளப்படுத்துபவன். அவன் விரும்பிப் பழகும் பெண்கள் ஒவ் வொரு கட்டத்திலும் அவனை விட்டு விலகிப் போக இறுதி யில் தனித்தவனாக வெளி தேசத்துக்கு விமானம் ஏறுகிறான்.

அவனுக்கு இணையாக அல்லது கொஞ்சம் மேலாக மன துக்குப் பிடித்தவனாக அருணன் பாத்திரத்தைப் பார்க்க முடிகிறது. பரிதியின் அறைத் தோழனாக வரும் அருணன் எல்லோரையும் நேசிக்கும் நல்மனம் கொண்டவன். மெலிந்த தோற்றம், கண்ணாடி அணிந்த முகம். அருணனை ஏனோ ஆரம்பத்திலிருந்தே பிடித்துப் போகிறது. பெரும் லட்சி யத்தை மனதுள் சுமந்து கொண்டிருப்பவன். தான் சார்ந்த இயக்கத்துக்கு விசுவாசமாக இருக்க நினைப்பவன். ஒரு கட் டத்தில் மனம் நொந்து விலகிக் கொள்கிறான். மனிதர்கள் மீது இரக்கமும் கருணையும் கொண்டவனாக அவன் அறி முகமாகின்றான். சேகரித்த பழைய உடுப்புகளை சைக்கிளில் கட்டிக் கொண்டு பல மைல்கள் தூரம் ஓடி முறிப்புக் குளத் தில் தோய்த்துக் காய வைத்து அகதிகளுக்குக் கொடுக் கின்ற அருணன் அக்கணத்திலிருந்தே நமக்கு நெருக்கமாகி விடுகிறான். மண் மீதான தீராக் காதலும் மனிதர்கள் மீதான நேசிப்பும் அவனை தொடர்ச்சியாக இயங்க வைத்துக் கொண்டேயிருக்கிறது. அவன் தேர்ந்தெடுத்த போராட்ட வாழ்வின் நடுவே மெலிதாய் ஒரு காதலும் மலர்கிறது. சுபா வுடனான தருணங்கள் அழகியலோடு சித்தரிக்கப்பட்டிருக் கின்றன. கடமைக்கும் காதலுக்குமான தத்தளிப்பு அவனை அலைக்கழித்துக் கொண்டேயிருக்கிறது. இறுதியில் கை விட்டுப் போன காதலின் துயரமும் அவனை அழுத்துகிறது. நாம் காணும் பக்கத்து வீட்டு இளைஞனாக அருணன் செதுக்கப்பட்டிருக்கிறான். அதனாலேயே அவன் முடிவை ஏற்றுக் கொள்ள இயலாமல் மனம் பாரமாகிறது. அதிர்வைத் தரும் அக்கணத்தைக் கடக்க முடியவில்லை.

ஒரு போர்க்காலத்தின் வரலாற்றைச் சொல்வதற்காக அ. இரவி தேர்ந்தெடுத்த பாத்திரங்கள் நம்முடன் கூட வாழ்ந்த வர்கள். தான், வாழ்ந்த நிலத்தில் மக்களின் பாடுகள் எப்படி இருந்தன, அவற்றை எப்படி கடந்தனர் என்பதன் விபரிப்பு ஒரு கலை வடிவமாக மாறியிருக்கிறது. அந்த மக்கள் மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைகள், அதன் விளைவுகள், அதனால் ஏற்பட்ட இழப்புகள் என ஒரு காலத்தின் துயரைச் சுமந்திருக்கிறது இந்த நாவல். ஒரு நேர்கோட்டு வடிவத்தில் இந்நாவல் சொல்லப்படாவிட்டாலும் காலத்தைக் குறிப்பிடு வதன் மூலம் எத்தகைய குழப்பமும் இல்லாமல் வாசகரை உள்ளீர்த்துக் கொள்கிறது. அதற்கு இவரது எழுத்து நடை பிரதான பங்கு வகிக்கின்றது.

'கிராமத்தைப் பேய்கள் சப்பத் தொடங்கின. சூழ்ந்து நின்று சப்புகின்றன. கடவுளால் கை விடப்பட்ட கிராமங்கள்' என்ற அடையாளப்படுத்தலோடு தொடங்கும் நாவல், அன்றைய நாளின் சூழலை தெளிவாக பதிவு செய்து கொண்டே போகிறது.

'உறவுகளிடம் சொல்லி அழ முடியாத நிலை. ஒவ்வொருவரி டமும் துயரம் இருக்கிறது. இழப்பு இருக்கிறது. யார் யாருக்கு முறையிட முடியும். அப்படியான நிலை.' என்ற வரிகளில் உள்ள ஏக்கம், தவிப்பு எத்தகைய இயலாமைகளில் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை உணர்த்துகிறது. நாவலில் அங்கங்கே தூவிச் செல்லும் இயற்கை மீதான பரவச உணர்வு, எம் முந்தைய சந்ததியினரின் சொல்லாடல்கள், எல்லாம் இன்றைய தலைமுறையினருக்கு புதிய அனுபவத் தைத் தரும். ஓரிடத்தில் பசுமையான நெல்லின் பால்மணம் பற்றியும் வயல்களில் வெள்ளம் நொதும்பி வழிந்தது என் றும், காற்றில் அசைந்தாடிய நெல்தார் பற்றியும் எழுதியிருப் பார். நொதும்பி என்ற வார்த்தை நம் அப்பு ஆச்சிமாரால் இயல்பாகப் பாவிக்கப்படும் சொல்.

'முத்தத்தில தண்ணி நொதும்பி நிற்குது. எக்கணம் நுளம்பு வரப்போகுது.' என்று ஆச்சி அங்கலாய்ப்பதை நான் பார்த்தி ருக்கிறேன். காலநகர்வில் அழிந்து போய்விட்ட பல வார்த் தைகள் இங்கே நினைவூட்டப்படுகின்றன. அவை நம் முன் னோர்களின் வாழ்வியலை நம் கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்துகின்றன.

எத்தனையோ துன்ப துயரத்தை அனுபவித்த பின்னால் வாழ் தலுக்கான உரிமையை ஒருவன் பெற்றுக் கொண்டதும், இந்த மண்ணுக்காகவும் மனிதர்களுக்காகவும் மனதார வாழ்ந்த ஒரு வனுக்கு அவ்வுரிமை மறுக்கப்பட்டதும் காலம் தந்த துயரம் என்பது தாண்டி வேறெப்படி எடுத்துக்கொள்ள முடியும்... பரிதியை, அருணனை தனித் தனி மனிதர்களாக பார்க்க முடியாது. பரிதி போல் அருணன் போல் அவர்களின் பிரதி களாக ஆயிரம் பேர் இருந்தார்கள், இருக்கிறார்கள். அத் தனை பேருக்குமான கதை இது.

இனவன்செயல் ஆரம்பமான காலமும், அதில் அரசியலின் வகிபாகமும் ஒரு இனத்தின் வரலாறாக மாறிப் போனது. அவை தந்த காயங்கள் இன்றும் ஆறாமலேதான் இருக்கிறது. அவற்றை மறுபடி நினைத்துப் பார்க்க வைத்திருக்கிறது பம்பாய் சைக்கிள். இந்நூலுக்கு கனடா இலக்கியத் தோட் டத்தின் 2024-ஆம் ஆண்டுக்குரிய விருது கிடைத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. எப்போதும் இலக்கியங்கள் காலத்தின் சாட்சியங்களாகவே இருக்கின்றன. அதை தன் உள்ளடக் கத்தின் மூலம் நிரூபித்திருக்கிறது பம்பாய் சைக்கிள்.

thamaraichelvi@thaiveedu.com

■ சு. வேணுகோபால்

குறியீடுகளால் கருத்தாடலை உருவாக்கும் படைப்பு: சாயாவனம்



அறுபதுகளின் இறுதியிலேயே குறிப்பால் உணர்த்தக் கூடிய எழுத்துத்துறை ஒன்று கூடிவந்தது. அதன் மூலவராகத் திகழ்பவர் சா. கந்தசாமி. நவீனத்துவத்தால் தாங்கள் பாதிப்புற்றவர்கள் என்பதை விருப்பத்துடன் தங்கள் எழுத்துகளில் இனங்காட்டிக் கொண்டவர்கள் ஜி. நாகராஜன், அசோமித்திரன், சுந்தரராமசாமி, இந்திராபார்த்தசாரதி, சுஜாதா போன்றவர்கள். இவர்களுக்குச் சற்றுப்பின் எழுத வந்த ஆதவன், ந. முத்துச்சாமி, சா. கந்தசாமியிடமும் இப் போக்குக் காணப்பட்டது. என்றாலும் வெளிப்பாட்டு முறையில் சா. கந்தசாமியிடம் தனித்துவமான பாணி ஒன்று இயங்கியது. குரல் உயர்த்தாத குறிப்புணர்த்தும் பாணி இயல்பாகவே அமைந்துவிட்டது. சா. கந்தசாமியின் சமூகப் பின்புலத்தை உற்றுநோக்கும் போது, அவருக்கு இத்தகைய தொரு நுட்பமான ஒரு கூறல்முறை அமைந்தது ஆச்சரியம் தான். ஏனெனில், அவர் எதையும் வெளிப்படையாகவும், நாசூக்கற்ற நேரடித்தன்மையுடனும், உரத்த குரலில் நிலை நாட்டிக் கொள்ளும் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட தொரு சமூகக் குழுமத்தைச் சேர்ந்தவர். அத்தகையதொரு பின்புலத்திலிருந்து வந்த கந்தசாமியின் எழுத்தில், ஆரவாரங்களுக்குப் பதிலாக மௌனம் வந்து கூடுவதென்பது, இலக்கியப் படைப்பிற்காகத் தனது மனதை அவர் முற்றிலும் செப்பனிட்டு வேறுபடுத்திக் கொண்டார் என்பதையே காட்டுகிறது. ஜி. நாகராஜனோ, சுந்தர ராமசாமியோ நவீனத்துவ எழுத்தைக் கையாண்டதற்கும் சா. கந்தசாமி கையாண்டதற்கும் உள்ள வேறுபாடு இது. அவர்களிடம் தொனிப்பொருள் இயல்பாகக் கூடிவரவில்லை. சா. கந்தசாமியிடம் எளிமையுடன் கூடி வந்திருக்கிறது. எனவே கலைவெளிப்பாடு யாரிடம் எப்படி வெளிப்படும் என்று சொல்லிவிட முடியாது. விளக்கத்திற்குச் சிக்காத புதிர் கலைவெளிப்பாடு.

இவருடைய படைப்புகள் உள்ளுறைத்தன்மை மேவியவை எனலாம். படைப்பின் வெளிப்புறம் வெறும் நிகழ்வு போலவும் அதனடியில் நுட்பமான விமர்சனத்தையோ, பார்வையையோ, முரணையோ, ஒரு தெளிவையோ, ஆழ்மன வெளிப்பாட்டையோ தக்கவைத்திருப்பதை இலக்கியத்தொனிப் பொருளாகவே கொண்டிருக்கின்றன. இவ்விடத்தில் இவருடைய கதைகள், நாவல்களை நினைத்துப் பார்க்கலாம். கொந்தளிப்பற்ற நிதானமான நிகழ்வை விவரிப்பதுபோல தோற்றம் தரும். அந்த நிதானம்மிக்க பார்வையின் ஆழத்தில் ஒரு கொந்தளிப்புப் புதைந்திருந்தபடி அமைதிபோல அசைவதைக் காட்டுகிறார். 'தக்கையின் மீது நான்கு கண்கள்' சிறுகதையும் 'அவன் ஆனது' நாவலும் உடனடியாக நினைவிற்கு வருகின்றன. சா. கந்தசாமியின் படைப்புகளில் காலம் என்ற ஒன்றின் இயக்கம் அழுத்தமாக இருக்கிறது. காலமாற்றத்தைப் பொருட்படுத்திப் பார்த்தவர்கள் நவீனத்துவவாதிகள். அதனை மிகச் சிறப்பாக உற்று நோக்கியவர் சா. கந்தசாமி. மற்ற நவீனத்துவவாதிகள் சிந்தனைகளின் மாற்றத்தைப் பெரிதுபடுத்திப் பார்த்தனர். சா.க.-விடம் இது சற்று மங்கலாகவே இருக்க, காலம் அழுத்தமாகத் துலங்குகிறது.

tg.theeban@gmail.com

படைப்பாளியின் முதல் நாவலில் சுயம்புவான இலக்கிய நுட் பங்கள் கூடி வந்துவிடுகின்றன. மேலான படைப்புகளின் வாசிப்பு வழியல்லாமல் படைப்பூக்கம்மிக்க உந்துதலால் முதல் நாவல் எழுதப்படுவதால் நுட்பங்கள், நுட்பங்கள் என்று கவனப்படுத்தாமலே பிறந்துவிடுகின்றன. சாயாவனம் அவ்வ கையில் அமைந்த நல்ல இலக்கியப் படைப்பு.

காட்டை அழித்துப் பணப்பயிரைக் கொண்டுவருவதுதான் சாயாவனத்தின் கதை. சாயாத வனத்தை ஒரு மனிதன் சாய்த் துத் தள்ளும் பகுதிக்குள் இயற்கையின் அற்புதப் படைப் புகள் மனிதக் கரங்களால் சின்னாபின்னப்பட்டு அழிவதைக் காட்டுகிறார். தனது இலக்கை அடைய எதையும் செய்யத் துணிகிற நவீனத்துவ மனிதனைக் காட்டுகிறார். மண்ணோடு பிணைந்திருக்கிற ஒருவராலோ, மரபில் உழல்பவராலோ ஒரு காட்டை அழிக்கிற துணிவு உண்டாகாது. மண்ணிலிருந்து அந்நியப்பட்டு கொழும்பு, சிங்கப்பூர் என்று வேற்றுத் தேசங் களில் வளர்ந்து உழைத்துப் பணம் திரட்டி வருகிற சிதம் பரத் தால் காடழிகிறது. இரண்டு வயதில் தாயோடு கொழும்புக்குச் சென்ற சிதம்பரத்திற்கு இந்த மண்ணுடனும் மனிதர்களுடனும் நினைவுகளால் பிணைப்பில்லை. எனவே வேற்று நாட்டில் கண்ட ஒரு விவசாய முறையை இங்கு செயற்படுத்தினால் நல்ல வருமானம் பெற்று சிறப்பாக வாழலாம் என்று விரும்பு கிறான். உலகம் முழுக்கக் கரும்பு என்ற பணப்பயிர் மரபான தானிய வகைகளுக்கு மாற்றாக நல்ல லாபம் தரும் விவசாய மாக மாறி இருப்பதை சிதம்பரம் போன்ற உலகமயமாக்கப் பட்ட ஆளுமைகள் நன்கு உணர்ந்துள்ளனர். 'வேளாண்மை என்பது ஒரு வாழ்க்கையாக இருந்ததை சிதம்பரம் போன் றோர் அதனைத் தொழிலாக' மாற்றிய புதிய காலத்தைத் தோற்றுவிப்பதை அறியலாம். சிதம்பரம் என்ற கதாபாத்திரம் ஒரு தனிநபர் அல்ல ஒரு குறியீடு. நவீன கருவிகளும் நவீன விவசாய முறைகளும் நவீன நுகர்வுக்கலாசாரமும், அவர் களுக்கான உற்பத்தி சாதனங்களும் ஒவ்வொன்றாக நாட்டுக் குள் இறங்கியதைக் கற்பனை செய்து கொள்ளலாம். உள்ளூரி லிருந்து ஒருவர் அழிப்பதைவிட வெளியூரிலிருந்து வருப வருக்கு அந்த அழிவு பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது. அவரு டைய நோக்கமெல்லாம் செல்வம் திரட்டுதலிலேயே குறியாக இருக்கும். இன்றும் கொக்கோகோலா, பெப்ஸி போன்ற கம் பெனிகளின் நுழைவை வைத்துப் பார்க்கலாம்.

சா. கந்தசாமி சாயாவனம் எழுதியபோது புதிய விவசாயமுறை கள் தமிழகத்தில் நுழைந்து ஏற்படுத்திய மாற்றத்தைச் சொல் லவேண்டும் என்று மட்டும்தான் இருந்திருக்கும். அதற்காக அவர் உருவாக்கிய பாத்திரமும், இடமும் அன்று இயல்பான ஒன்றாகக் கூட இருந்திருக்கும். பல்லாண்டு விவசாயம் செய் துவந்த நிலத்தை ஒரு விவசாயி விற்கமாட்டார் என்ற அடிப் படையில்தான் வெறுமனே கிடக்கும் காட்டை விற்பதற்கும், வாங்குவதற்கும் சூழல் கை கொடுக்கிறது. வெறுமனே கிடப் பது என்பது இன்று பாழான நிலை என்பதல்ல பொருள். அது ஒரு மகத்தான செல்வம். திருநெல்வேலிக்குக் கொண்டுவந்த டாடாவின் டைடானியம் தொழிற்சாலையைச் சூழலியலாளர் எதிர்ப்பது தம் செல்வம் கொள்ளை போய்விடக்கூடாது என்பதே!

சா. கந்தசாமி சாயாவனக்காட்டின் அழிவிலிருந்து இரண்டு பார்வைகளை முன்வைக்கிறார். ஒன்று கால மாற்றத்தில் கரும்பு விவசாயம் வருதலையும் காட்டை அழித்து விவசாய நிலங்களை உண்டாக்கியதையும் சொல்கிறது. எவ்வித பட்சா தாபம் இல்லாத சிதம்பரத்தால் இது நடந்தேறுகிறது. சிதம்ப ரத்தின் பார்வையில் அச்செயல் சரியானதே. உறவுகளைவிட பொருளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நவீன மனிதரின் வகைமாதிரி சிதம்பரம். சொர்ணத்தோடு கொண்டிருக்கும் உறவு வெளிப்படையாகத் தெரிகிறது. தேவரின் மருமகளான குஞ்சம்மாளோடு கொண்டிருக்கும் உறவு அந்தரங்கமானது இன்னொரு சமயம் சாம்பமூர்த்தி ஐயர் வீட்டுக்குள் அவர் இருக்கக்கூடாது என்று ஆழ்மன விருப்பப்படி தேடிச் செல்லும் போது அவ்விதம் அவர் இல்லாதது சிதம்பரத்திற்கு மகிழ்ச்சி தருகிறது. ஐயரின் மனைவி இச்சைக்கு இணங்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு ஏமாற்றத்தில் முடிகிறது. பின் சொர்ணத்திடம் செல்கிறான். குஞ்சம்மாள் மகளுக்குத் திருமணச் செலவைப் பார்த்துக் கொள்கிற சிதம்பரம் காமத்தைத் தீர்த்துக் கொள் ளும் வடிகாலாகத்தான் பெண்களைப் பார்க்கிறான். அவனு டைய நோக்கமெல்லாம் கரும்பாலை அமைப்பதே! ஒருவகை யில் சுயத்தையும் சுயநலத்தையும் விரும்புகின்ற நவீனத்துவ வாதி. உறவுகளின் மீது பிடிப்பற்றவன். திருமண பந்தத்தில் சிக்கிக்கொள்ள விரும்பாதவன். பந்தத்தை ஏற்படுத்த நினைப் பவர்களிடமிருந்து நழுவுபவன். காட்டின் அழிவு என்பது அவ னைப் பொறுத்தளவில் நன்றாக வாழ்வதற்கான இலக்கு. இப் படி சிதம்பரத்தைத் தோலுரிக்க முடியாதபடி ஓர் இயல்புமிக்க நவீனமனிதனாக இருக்கிறான். குறிப்பால் உணரலாமே தவிர இவ்விதம் பகுத்து சா. கந்தசாமி சிதம்பரத்தை எழுதவில்லை. காலம் கொண்டு வரும் ஒரு மாற்றமாகச் சிதம்பரத்தைக் காட்டு கிறார்.

இன்னொரு பார்வை காட்டை அழிப்பதிலிருந்து உருவாகும் ஜீவராசிகளின் வேதனைமிக்க குரல். காட்டின் அழிவில் சிவனாண்டித்தேவர் ஈடுபட்டாலும் மனதளவில் அதற்கு எதி ரானவராகவும் இருக்கிறார். மூங்கில் குருத்தை வெட்டாமல் அவர் அங்கு வேலை இங்கு வேலை என்று இழுத்தடிப்பது, புளியந்தோப்பின் மறைவிற்குச் சென்று அவர்படும் வேதனை இவற்றிலிருந்து அறியலாம். சிவனாண்டித்தேவர் லட்சியவாதி யும் அல்ல, நவீனத்துவவாதியும் அல்ல. மண்ணின் மைந்தர். அவருக்கு இயற்கையோடு இருக்கும் மெல்லிய தொடர்பு அறும்போது வேதனைப்படுகிறார். நம்மோடு இருந்த இயற்கை யான உலகம் மெல்ல சிதைவுற்று மறைவதை இங்கு பார்க் கிறோம். அந்த உலகத்தின் மகத்தான குடும்பம் மனிதனால் அழிவுறுகிறது. அதுகுறித்து கவலையற்று மனிதன் வீழ்த்திய படி இலக்கை அடைகிறான். முக்கியமாக அவன் மீது எவ்வித குற்றச்சாட்டையும் சா.க. சுமத்தாமல் இக்கால மனிதரின் உள்ள மாகக் காட்டுவதுதான் சிறப்பு.

பெரும்பண்ணையாரான சாம்பமூர்த்தி ஐயர் ஓர் உல்லாசப் பேர்வழி. அவருக்குத் தேவை மகிழ்ச்சி. காட்டை விற்பதில் எவ்வித தயக்கமும் எழாது என்பது உண்மை. அந்தரங்கத்து ணைக்கும் மூன்றாவது மனைவிக்கும் நகைகளை வாங்கிக் கொடுத்து தேகசுகம் தேடுபவர். நாவலில் அவர் நொடித்து ஓட்டாண்டியாகப் போய்விடுவதாகவோ, மனம் திருந்தி வாழக் கூடியவராகவோ செயற்கையான ஒரு முடிவிற்கு திருப்பாமல்

அவர் சொத்துக்களை விற்றுத் தனது உல்லாச வாழ்க்கை யைத் தொடர்ந்தபடி இருக்கிறார் என்றே காட்டுகிறார். ஒரு காட்டைவிற்க முன்வருபவர் எப்படிப்பட்டவர் என்பதை வெளிப் படையாக முன்வைக்கிறார்.

காட்டைச் சிறுகச் சிறுக அழிக்க முற்படும் சிதம்பரத்தை ஒரு வில்லனாகப் பாவிக்காமல் அவனுடைய தீராத வேட்கை கரும்பாலை வைப்பதிலேயே இருப்பதாகக் காட்டுகிறார். சா. கந்தசாமி எந்தப் பக்கமும் சாய்ந்து கொண்டு இந்நாவலைப் படைக்கவில்லை. அவரவர் நோக்கிலிருந்து காடு அழிவு அமைகிறது. சிதம்பரம் காட்டைப் பார்ப்பதற்கும், காட்டை அழித்து என்னவோ செய்யவிருக்கிறான் என்று ஊர்மக்கள் எதிர்பார்ப்போடு நோக்குவதற்கும் இரு சிறுவர்களின் காட ழிப்பு வேலைக்கு முரண்பாடுகளோடு சிவனாண்டித் தேவர் காட்டை அழிப்பதில் கைகொடுப்பதற்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன. காட்டை அழித்து என்னவிதமாய் ஒரு தோட்டத் தையும் கரும்பாலையையும் எவ்வாறு உருவாக்கப் போகி றது? என்ற ஆர்வமிக்க மக்களைத்தான் பார்க்கிறோம். காட ழிவு என்பதை அக்காலத்தில் பொருட்படுத்திப் பார்க்கிற பார்வையும் இல்லை. மக்களிடம் அக்கறையும் இல்லை என்ற நிலையில் வைத்தே பார்க்கலாம். அது ஒரு தவறான செயலும் அல்ல. யாரோ வெளியூரிலிருந்து சம்பாதித்துக் கொண்டு வந்து விநோதமான காரியத்தில் ஈடுபடுபவதாகத்தான் பார்க் கின்றனர். காட்டின் அழிவிற்கு நம் அறியாமையும் விழிப்பு ணர்வு இன்மையும் ஒரு காரணமென்பதை அறியமுடிகிறது. அப்படியொரு சிந்தனை உருவாகாத காலமும் காட்டை இழக் கச் செய்திருக்கிறது.

புளியந்தோப்பும் சேர்ந்து வீழப்போகும் நிலையை எண்ணி சிவனாண்டித்தேவர் ஐயரிடம் தனது மனக்குமுறலை வெளிப் படுத்துகிறார். அவருக்கு அந்தப் புளியமரங்களோடு தீராத பந்தம் இருக்கிறது. ஐயர் தனது தோட்டங்களைப் பார்த்துக் கொள் என்று சொன்னதால் ஆறுதலடைகிறார். காட்டின் அழி வின் ஆரம்பத்தில் சஞ்சலமடைந்தவர் சிறுகச் சிறுக சிதம் பரத்தின் போக்கோடு கலந்து விடுகிறார். காட்டிற்குத் தீ வைப்பதற்கு மூன்று முறை தள்ளி வைக்கிறார். அவரால் செய்யமுடிந்தது அவ்வளவுதான். தீ என்று சொல்லும்போது துணுக்குறுகிறார். பின் இவரால் தன் குடும்பத்திற்கு ஆதரவு ஏற்படலாம் என்ற கணிப்பினால் அடங்கிவிடுகிறார். பொருள் உள்ளவனர் முன் இப்படித்தான் மதிப்புகள் பொருள் இழந்து போகின்றன. மரபுவாத நவீனத்துவத்தைத் தொடக்கத்தில் ஏற்றுக்கொள்வதில் உள்ள தடுமாற்றத்தையும் பின் அவனும் நவீனத்துவத்தில் கரைந்து அமிழ்வதையும் குறிப்புணர்த்துவ தாகக் கொள்ளலாம். மருமகளுக்கும் சிதம்பரத்திற்கும் அந்த ரங்க உறவு இருப்பதை சிவனாண்டித்தேவர் புரிந்திருப்பார் போலத்தான் தெரிகிறது. தேவரின் பேத்தியைக் கரை சேர்ப் பதில் சிதம்பரத்தின் பங்கு விழுந்திருப்பது இறுதிப்பகுதியில் தெரிகிறது. பணம் என்பது எல்லா மதிப்புகளையும் மாற்றிய மைக்கிறது. அதற்கு உடன்படக்கூடிய மனிதர்களாகவும் மாறு வதை காலம் வெளிப்படுத்துகிறது. பழைய மதிப்புகளிலி ருந்து விடுபட்டுப் புதிய உலகத்திற்குள் அடங்கி ஒடுங்கு வதைக் காட்டுகிறது. இந்தப் புதிய உலகம் பணத்திற்கு முக் கியத்துவம் அளிக்கும் உலகம்.

காட்டின் பார்வை ஒன்று எழுந்து வருகிறது. அதற்கே உரிய வல்லமையோடு பெருகி வருகிறது. காட்டுப்பூக்களைப் பறிக்க வருகிற சிறுவர்களிடமிருந்து காட்டின் உருவம் நம் பார்வைக்கு வருகிறது. பூக்களோடு சிறுவர்களுக்கிருக்கிற உறவு மென்மை யானது. அவற்றை வைத்துக்கொண்டு எழுச்சிமிக்க கற்பனை களை விளையாட்டில் வெளிப்படுத்துபவர். நெருப்பில் எரியும் காட்டைச் சிறுவர்கள் பதட்டத்தோடு பார்க்கின்றனர். அவர் கள் முதல்நாள் பார்த்துவிட்டு வந்த பூக்கள் பறிக்கப்பட முடியாமல் நெருப்பு வளையத்திற்குள் சிக்கிக் கொண்டதை நினைத்து ஏங்குகின்றனர்.

சாயாவனத்தை வீழ்த்த ஆட்கள் கிடைக்காதபோது சிதம்பரம் தன்னந்தனியாகவே கிளம்புகிறான். அதன்படி மெல்ல காட் டோடு மோதுகிறான். அழிக்க முடியாது என்ற மலைப்பைக் காடு தருகிறது. மனம் சோர்வுறுகிறது. அதன் பிரமாண்டம் மலைப்பைத் தருகிறது. கரும்பாலை உள்ளிருந்து உந்து கிறது. திரும்ப வெட்டத் தொடங்குகிறான். மனிதரால் ஆற்றல் மிக்க யானையை அடக்கி ஆள முடிந்தது. சிறிய மனித ஆளுமை எவற்றையும் நொறுக்கவும் ஆளவும் தெரிந்திருப் பது பேராபத்துத்தான். ஆனால் அவ்விதம் இயற்கை அவனுக்கு அறிவை வழங்கியிருக்கிறது. சிதம்பரம் நம்மில் ஒருவனா கிறான்.

அவனுடைய ஆயுதம் காட்டைப் பதம்பார்க்கத் தொடங்கு கிறது. வெட்ட வெட்ட மலர்கள் உதிர்கின்றன. இழுத்தெறிந்த செடிகளும், கொடிகளும் வாடுகின்றன. கிளையிலிருந்து குரு விக்கூடு தகர்ந்து விழுகிறது. அக்கூட்டிலிருந்து நீண்ட நேரம் இடைவிடாது கத்துகிறது குருவிக்குஞ்சு. சிறிய தடுமாற்றம் ஏற்படுகிறது. மீண்டும் மனது வெறிகொள்கிறது. முன்னேறு கிறான். கருணையற்றவனை அடுத்து தேனீக்கள் படை கொண்டு வந்து தாக்குகின்றன. அதன் கடுக்குத் தாங்கமாட்டாமல் ஓடு கிறான். திரும்ப மோதுகிறான். நேற்று வெட்டி சாய்த்த செடி கொடிகள் வாடிக் கிடப்பதை தாண்டிச் செல்கிறான். காரை, நாயுருவி, ஓணான் கொடி, கோவைக்கொடி, புளி, கடம்பம், புற்கள் வீழ்ந்து விழ்ந்து காடு பின் நகர்கிறது.

குரங்குகள், நரிகள், மாடுகள், பாம்புகள், பறவைகள் எல்லாம் தங்கள் இருப்பு அழியக் கிடக்கும் காட்டின் வாசலுக்கு வந்து அறிவித்துவிட்டுச் செல்கின்றன. எதற்கும் மனிதர் மசிவ தில்லை. காடும் தன்னுடைய வலிமையைக் காட்டுகிறது. நெருங்கி விடாதபடி மூங்கிலின் பிணைவும், கொடிகளின் இணைவும், முள்ளும், எதிர்ப்பைக் காட்டுகிறது. அரிப்பைக் கொடுக்கிறது. வீழ்த்துகிறது. கைகளை வலுவிலக்கச் செய் கிறது. இயற்கையின் கூட்டுக்குடும்பம் மறிக்கிறது. சோர்வுறு கிறான் மனிதன் காடுதரும் மலைப்பு பின்வாங்கச் செய்கிறது. திரும்ப வெறிகொண்டு மோதுகிறான். தீ வைப்பதற்குத் துணி கிறான். முன்னமே சொன்னது போல இலக்கிய வாசிப்பிலி ருந்து அல்லாமல் படைப்பெழுச்சி மிக்க மனநிலையில் சாயா வனத்தை உருவாக்குகிறார். இப்படைப்பை மேலை அளவு கோல் கொண்டு அளக்க முடியாது. தமிழரின் திணைக்கோட் பாடு அற்புதமாகப் பொருந்தி வருகிறது. காடும் காடு சார்ந்த பகுதியின் கருப்பொருட்கள் தங்கள் இருப்பியல் பிரச்சினை

களை எடுத்துரைப்பது போல இருக்கிறது. சங்க இலக்கியத் தில் இயல்பாக உலாவும் கருப்பொருட்களை காணும்தோறும் மாந்தன் பிரிவின் துயரத்தையோ, நேசத்தையோ தனக்குள் கிளர்த்திக் கொள்கிறான். இங்கு காட்டின் உயிரினங்கள் மனி தனுள் புதைந்துகிடக்கும் குரூரம் மிக்க சுயநலத்தைத் தங்கள் அழிவின் மூலம் வெட்ட வெளிச்சமாக்குகின்றன.

நெருப்பிலே வெந்தும் வேகாமல் நல்லபாம்பு ஓடுகிறது. முயல் ஓடுகிறது. இறக்கை பாதி கருகியபடி அலறலோடு வந்துவிழு கிறது காகம். அதை எடுத்து நெருப்பில் வீசுகிறான் சிதம்பரம். காட்டுக்குள் கட்டுக்கடங்காமல் திரிந்த காளைகள் நெருப் பிலே தீய்கின்றன. விதவிதமான புளிப்பைத்தந்த புளியம ரங்கள் கரிக்கட்டையாக நிற்கின்றன. வைத்த நெருப்பு எட்டு நாட்களாக எரிந்து சாம்பலாக்குகிறது. ஆதி மனிதருக்கு இயற்கை வாழ்வியல் முறைகளைக் கற்றுத்தருவதாக திணைக் களங்கள் எடுத்துரைக்கின்றன. பறவையிலிருந்து மாடுகளிலி ருந்து, எறும்புகளிடமிருந்து, மரங்களிலிருந்து, மருத்துவகுணம் மிக்க செடிகளிலிருந்து ஒவ்வொரு விதமான முறைமை களைக் கற்றுக்கொள்கிறார். உயிரினங்களின் பல்வேறு சாரங் களைத் திரட்டித் தனதான சிந்தனையாக மாற்றிக் கொள் கிறான் மனிதன். நவீன மனிதன் தானே எல்லாம் என்ற அகங் காரத்தை வெளிப்படுத்துகிறான். மனிதன் ஒரு மரத்தைபோல பூரணவாழ்வு வாழ்கிறவனாக இல்லை. அதனுடைய பயன் பாடு அளவிட முடியாதது. முல்லைக்குத் தேர் தந்த பாரி யையோ மயிலுக்குப் போர்வை தந்த பேகனையோ பறவைக் குப் பதிலாகத் தொடைக்கறி கொடுத்த சிபியையோ நவீன மனிதரிடம் காண முடியாதது பேரிழப்பே.

அவன் காட்டை வெட்டத் தொடங்கும்போது மூன்று மாதங்க ளாகக் கேட்ட வண்டுகளின் ரீங்காரம், தேனீக்களின் ஓசை, மூங்கிலின் கிரீச்சிடும் ஓசை, சருகுகளின் சலசலப்பு, மலர் உதிரும் பரப்பு, மரத்திற்கு மரம் தாவும் குரங்கு, எல்லாம் கல வரமுறுவதைக் காட்டுகிறார். அத்தோடு சிவனாண்டித்தேவர், பாலு ஐயர் வீடு தீ பற்றி எரிந்தபோது மனிதர்கள் திரண்டு போராடி அணைத்ததையும், பலவீடுகள் நாசமாகியதையும், மாடுகள், பொருட்கள், குழந்தைகள், பெண்கள் கருகித் தீய்ந் ததை சொல்லும்போது மனிதன் தனக்கு என்று வரும்போது எப்படி செயல்பட்டான் என்பதை தொனிப்பொருளாகப் பார்க்க வைக்கிறார். காட்டின் அவலம் நமக்குப் பெரிய துயரத்தைத் தருகிறது. மனிதன் இயற்கையின் குடும்பத்தைப் பற்றிக் கரு ணைகொள்வதில்லை. அவனைப் பொறுத்தளவில் அவன் தான் முக்கியம். இந்நாவலில் சாயாவனத்தின் முக்கியத்துவம் அதுகொண்டிருக்கும் பிரம்மாண்டக் குடும்பத்தின் அழிவை முன்நிறுத்திக் காட்டுகிறார் என்பேன். ஆனால் மனிதன் அழித்து வேறொன்றை நோக்கி நகர்கிறான். அழிவின் கொடூரங்கள், அதன் நினைவுகள் தனக்குள் விவாதத்திற்கு வைக்காமலே கடந்து இன்னொன்றைத் தனக்கு விருப்பமான ஒன்றை உரு வாக்குகிறான் என்றே இப்படைப்பு அறிவிக்கிறது.

இயற்கைக்கும் மனிதருக்கும் இடையறாத போர் நிகழ்ந்த படியே இருக்கிறது. தாக்குதலுக்கு இயற்கை நேரடியாகவும் உடனடியாகவும் பதில் தாக்குதலைத் தொடுப்பதில்லை. மனிதரின் நாசவேலைகளைத் தாங்க முடியாமல் பின்வாங்கு கிறது. இயற்கை இல்லாமை மூலம் பெரிய பாதிப்பைத் தர ஆரம்பித்திருக்கிறது. மழையில்லாமலும், நாளுக்கு நாள் அதிகரிக்கும் வெப்பத்தையும் மனிதர்கள் அனுபவிக்கத் தொடங்கிவிட்டனர். திருப்பித்தாக்கும் குணம் இயற்கைக்கு இல்லை. அவ்விதம் கற்பனை செய்யலாம். அப்போதும் தனது மிச்ச மீதிகளின் மூலம் மனிதருக்குக் கருணையையே காட்டு கிறது.

சாயாவனத்து மனிதர்கள் தனித்துவமானவர்கள் அல்ல. நம் மின் பொதுப்புத்தி சார்ந்த மாதிரிகள். இயற்கையை வெறுப்ப வர்கள் அல்ல அவர்கள். அதனுடைய முக்கியத்துவம் குறித்தோ மகத்துவம் குறித்தோ பரிசீலித்து முடிவெடுக்காத சாதாரண மனிதர்கள். மனிதர்களுக்கு ஒவ்வொன்றின் மீதும் அக்கறை தேவை என்பதை வலியுறுத்துகிறது இந்நாவல். ஒன்றின் இழப்பை இன்னொன்றினால் ஈடுகட்ட முடியாது என்ற உண்மையை அழுத்தமாகச் சொல்கிறது. தனது முன் னேற்றத்திற்காக இயற்கையை அழிக்கலாம் என்ற எண்ணப் போக்குக் கொடூரமானது. அமெரிக்காவில் ஐரோப்பியர்கள் காலடி வைத்ததும் செய்த முதல் வேலை. நிலங்களை ஆக்கி ரமித்திருந்த லட்சோப லட்ச குதிரைகளைக் கொன்று கைய கப்படுத்தியதுதான். இந்தியாவில் ஆங்கிலேயன் காடுகளை அழித்து வெறியாட்டம் ஆடினான். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ் வொரு அழிவு வந்தேறிகளால் நிகழ்ந்திருக்கிறது. கடவுள் இல்லாத உலகை மனிதர்கள் ஆட்டிப் படைக்கின்றனர். இந்த நவீன மனிதன் ஈவு இரக்கம் அற்றவன். அவனுடைய உலகில் அவனைத் தவிர வேறு எவர்க்கும் வெற்றிற்கும் முக்கியத்து வம் இல்லை. மரபுவாதியிடம் மூடத்தனங்கள் இருந்தாலும் மற்றவரை நேசித்தலையும், மற்றவற்றிற்கு மதிப்பளித்தலை யும் பேணுகிறவனாக இருந்திருக்கிறான். மயில், எலி, கோழி, பருந்து, பாம்பு, நாய், காளை, குதிரை, யானை, ஆலமரம், அரசமரம், வேப்பமரம், துளசி என இயற்கையின் படைப்பை கடவுள்நிலைக்கு உயர்த்தி வைத்திருந்தான். அழிவிலிருந்து காப்பாற்ற ஏற்படுத்திய புனைவுகள்தான் அவை பற்றிய கதை கள். கொண்டும் கொடுத்தும் வாழ்ந்த வாழ்க்கையை உணர்ந்த வர்கள் ஆதிமனிதர்கள். ஆதிமனிதர்உண்டாக்கிய கருத்து களிலேயே இதுதான் உயர்ந்ததாக இருக்கிறது. இயற்கை யோடு இயைந்த வாழ்வை வாழக் கற்றுத்தந்தவர்கள் அவர் கள். இவ்விதமான எண்ணங்களையெல்லாம் சாயாவனத்தின் அழிவு ஏற்படுத்துகிறது. சாயாவன நாவல் அதனுள்ளே வைத் துக் கருத்தாடலை நிகழ்த்தவில்லை. நாவலுக்கு வெளிப்பு றத்தில் விவாதிக்கத் தக்க விசயங்களை வைத்திருக்கிறது. இந்தக் குறிப்புணர்த்தும் தன்மையால் சாயாவனம் நல்ல கலை வடிவமாகத் தன்னை நிலைநாட்டிக் கொண்டுள்ளது.

venugopal@thaiveedu.com

tg.theeban@gmail.com

கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும்

12

தொல்காப்பியமும் ஏனைய மொழிகளும்

நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

மொழியியல் வளர்ச்சிக்கு ஐரோப்பியர், அரேபியர் களைத் தொடர்ந்து இந்திய அறிஞர்களின் பங்களிப்பு மிகப் பெரிதாகப் பார்க்கப்படுகிறது. இவ்வரிசையில் யாக்ஸர், பாணினி, பதஞ்சலி போன்ற வட நாட்டு அறிஞர்களும், தொல்காப்பியர், புத்தமித்திரனார், பவணந்தி முதலான தென்னாட்டு அறிஞர்களும் முக்கிய இடத்தைப் பெறுகின் றனர். வடநாட்டு இலக்கணங்கள் பெரும்பாலும் சொற்களைப் பற்றியும் தேவையான அளவிற்கு ஒலியியல் பற்றிய செய்திக ளையும் கூறுகின்ற அதே நேரம் திராவிட மொழியான தமிழ் மொழியைச் சார்ந்த இலக்கண ஆய்வுகளின் நோக்கங்களோ முற்றிலும் மாறுபட்டு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அந்த வரிசையில் மொழியில் காணப்படும் எழுத்து, சொல், அதன் பிறப்பு, அவை தனித்து நிற்கும் போதும், பிற எழுத்துக்களோடு கூட்டுச் சேரும் போது ஏற்படக் கூடிய மாற்றங்களை முக்கி யத்துவம் கொடுத்துக் காட்டப்பட்டதை தமிழ் இலக்கண நூல்களில் அவதானிக்கக் கூடிய தாக உள்ளது. இத்துடன், தமிழ் இலக்கணத் தின் சிறப்பாக கூறப்படும் பொருள் இலக்கணக் கூறுகளும் அமைந்துள்ளது. மனித வாழ்வி யல் கூறுகளை இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சிறப்புத்தன்மைகளை விளக்கும் பாங்கு தொல்காப்பியரைத் தலை சிறந்த இலக்கண ஆசிரியராக மட்டுமல்லாது ஒரு சிறந்த மானுடவியல் அறிஞராகவும் காட்டு கிறது. ஆகவே, இந்திய வடநாட்டு இலக்கண அறிஞர்களும், தென்நாட்டு இலக்கண அறி ஞர்களும் மொழியியல் வளர்ச்சிக்கு தமது இலக்கண நூல்கள் மூலம் பெரும் பங்காற்றி உள்ளமை தெளிவாகப் புலப்படுகிறது. ஐரோப் பிய அறிஞர்களின் மொழியியல் ஆய்வும் இலக்கண ஆய்வும் சொற்பிறப்பும், அதன் பொருள் வெளிப்பாடுமாக அமைய வடநாட்டி னரும், அரோபியரும் மொழியை சமய நூலோடு தொடர்புபடுத்தி அதன் சிறப்பினை காட்டி நிற்க தமிழ் இலக்கண நூல்கள் இதற்கு சற்று மாறாக அமைந்திருப்பதனைக் காணலாம்.

> ***இந்திய மண் இன்று மட்டுமல்லாது அன்று தொட்டே மொழியியல் ஆய்விற்கான மிகச்சிறந்த களமாக விளங்கி வந்துள்ளது. மேலைநாட்டு மொழியியலாளர்கள் மொழியமைப்பை விளக்குவதற்குப் பயன்படுத்தும் வர்ணனை மொழியியல் கோட்பாடுகளைத் தெளிவுபடுத்தியவர்கள் இந்திய மொழியியலா ளர்களே ஆவர்.***

இந்திய மண் இன்று மட்டுமல்லாது அன்று தொட்டே மொழி யியல் ஆய்விற்கான மிகச்சிறந்த களமாக விளங்கி வந்துள் ளது. மேலைநாட்டு மொழியியலாளர்கள் மொழியமைப்பை விளக்குவதற்குப் பயன்படுத்தும் வர்ணனை மொழியியல் (Descriptive Linguistics) கோட்பாடுகளைத் தெளிவுபடுத்தி யவர்கள் இந்திய மொழியியலாளர்களே ஆவர். 19-ஆம் நூற்றாண்டு வரையிலான மேலைநாட்டு வர்ணனை மொழி முறை, இந்திய இலக்கணக் கோட்பாடுகளின் அடிப்படை யிலேயே வளர்ச்சி பெற்றது எனலாம். இந்திய மொழியியல் கோட்பாடுகள் மேலைநாட்டு அணுகுமுறைகளிலிருந்து சற்று வேறுபட்டுக் காணப்பட்டன. மொழியின் எதிர்காலத் தேவைகளையும் மாற்றங்களை யும் மனதிற்கொண்டே இந்திய இலக்கண ஆசிரியர்கள் தங்கள் கோட்பாடுகளை உரு வாக்கினர். இதன் காரணமாகவே, கிரேக்க மற்றும் ரோமானிய மொழி அறிஞர்கள் இந் திய இலக்கணக் கோட்பாடுகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டனர்.

பொதுவாக, மொழிகள் வேதத்திலிருந்து தோன்றியது என்றும், மொழி ஒலிப்பும், இலக்கணமும் வேதத்தை அடியொற்றியே எண்ணப்பட்டது. வேதத்தை பிழையின்றி படிப்பதற்கும், மந்திரங்களைப் பிழையின்றி ஒலிப்பதற்கும் இலக்கணம் தேவைப்பட்டது. மந்திரங்களை ஒலிக்கும் போது சிறிது மாறி னாலும் பொருள் மாறிவிடும் என்பதால் ஒலியியல் இலக்கணமும், சொற்பிறப்பி யலும், தொடர் இலக்கணங்களும், செய்யுள் இலக்கணங்களும் பழங்காலம் தொட்டு பேணப்பட்டு வந்தது. இத்தகைய நிலை கிரேக்க, ரோமானிய மொழியியலில் காணப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வடமொழி மரபு:

இந்திய மொழியியல் வரலாற்றில், வடமொழி மரபு (Sanskrit Grammatical Tradition) என் பது வெறும் ஒரு மொழிக்கான இலக்கணம் மட்டுமல்லாது, மிக முக்கியமானதோர் இடத் தைப் பெற்றுத் திகழ்கிறது. ஏனெனில், அது மொழியை ஓர் அறிவியலாக அணுகிய உல கின் முதல் மற்றும் மிகச்சிறந்த முயற்சி யாகும். உலகிலேயே மொழிப் பகுப்பாய்வு (Language Analysis) மற்றும் இலக்கணக் கட் டமைப்பில் மிகவும் செம்மையான, அறிவியல் பூர்வமான அணுகுமுறையை வடமொழி அறி ஞர்கள் கையாண்டுள்ளனர். இந்த இந்திய மொழியியல் மரபின் உச்சக்கட்டமாக விளங் குவது, பாணினி என்பவரால் இயற்றப்பட்ட 'அஷ்டாத்தியாயி' என்னும் இலக்கண நூலா கும்.

18-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய அறிஞர் கள் வடமொழி இலக்கணத்தைக் கற்றபோது தான், மொழிகளுக்கு இடையே உள்ள உற வைக் கண்டறிந்தனர். இது ஒப்பியல் மொழி யியல் (Comparative Linguistics) பிறக்க வழிவகுத்தது. பொ.ஆ.மு. 4-ஆம் நூற்றாண் டின் தொடக்கத்திலேயே மொழி பற்றியும், மொழி இலக்கணம் பற்றியும், மொழியியல் உள்ளீட்டோடு உணர்ந்து கூறிய வர்கள் இந்திய மொழியியல் அறிஞர் குழுவினர்தான். நேரடியாக மொழியின் அமைப்பைப் பற்றியும், இலக்க ணத்தைப் பற்றியும் கூறும் பாங்கு இந்திய மொழி யியல் வர லாற்றில்தான் முதன் முதலில் காணமுடிகிறது. கிரேக்க ரோமானிய மொழியியல் வரலாற்றிலெல்லாம் மெய் விளக் கமும் மொழியும் கலந்து மொழியியல் கோட்பாடுகள்தான் நிலவின. மொழி ஆராய்ச்சியில் பண்டைக் கிரேக்கமும், இந்திய நாடும் முதன்மை பெற்று நின்றன. இந்த இரு நாடுக ளிலிலும் இலக்கண ஆராய்ச்சியும் மொழியை மெய் விளக்க அடிப்படையில் நோக்கும் ஆராய்ச்சியும் முன்நின்றன.

வடமொழி மரபில் ஒலிகள் பிறக்கும் விதம் மிகவும் துல்லிய மாக ஆராயப்பட்டுள்ளது. தமிழின் 'பிறப்பியல்' இலக்கணத் திற்கு (தொல்காப்பியம்) வடமொழியின் இந்த ஒலிப்பியல் மரபு ஒரு ஒப்பீட்டுத் தளமாக அமைந்துள்ளது. சொற்களை பகுதி (Prakriti) மற்றும் விகுதி (Pratyaya) எனப் பிரிக்கும் முறை இம்மரபில் ஆழமாக விவரிக்கப்பட்டுள்ளது. ஒரு சொல் லின் வேர்ச்சொல்லைக் (Root) கண்டறிந்து, அதிலிருந்து ஆயிரக்கணக்கான சொற்கள் உருவாவதை விளக்கும் 'தாது பாட' (Dhatupatha) முறை மொழியியலில் ஒரு புரட்சிகரமான அணுகுமுறை. இந்திய மொழியியல் மரபில் வடமொழி என்பது வெறும் வழிபாட்டு மொழியாக இல்லாமல், மொழி யைப் பகுப்பாய்வு செய்யும் ஒரு கருவியாகவே பார்க்கப் பட்டது. இந்த மரபு பிற்காலத்தில் தமிழ் உள்ளிட்ட அனைத்து இந்திய மொழிகளின் இலக்கண உருவாக்கத்திலும், தர்க்க ரீதியான வளர்ச்சியிலும் ஏதோ ஒரு வகையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

> ***இந்திய மொழியியல் பரப்பில் வடமொழி (சமஸ்கிருதம்) ஏற்படுத்திய தாக்கங்கள் மிகவும் ஆழமானவை; பன்முகத்தன்மை கொண்டவை. செவ்வியல் காலத்திலிருந்தே இந்தியாவின் பெரும்பாலான மொழிகள் வடமொழியின் செல்வாக்கிற்கு உட்பட்டுள்ளன.***

இந்திய மொழியியல் பரப்பில் வட மொழி மரபு ஏற்படுத்திய தாக்கங்கள்:

இந்திய மொழியியல் பரப்பில் வடமொழி (சமஸ்கிருதம்) ஏற்படுத்திய தாக்கங்கள் மிக வும் ஆழமானவை; பன்முகத்தன்மை கொண் டவை. செவ்வியல் காலத்திலிருந்தே இந்தியா வின் பெரும்பாலான மொழிகள் வடமொழியின் செல்வாக்கிற்கு உட்பட்டுள்ளன. தமிழ் தவிர்த்த பிற திராவிட மொழிகளான தெலுங்கு, கன்ன டம், மலையாளம் மற்றும் வட இந்திய மொழி கள் அனைத்தும் தங்களின் இலக்கணக் கலைச்சொற்களுக்கு வடமொழியையே பெரிதும் சார்ந்துள்ளன. 18-ஆம் நூற்றாண்டில் வில்லி யம் ஜோன்ஸ் போன்ற மேலைநாட்டு அறிஞர் கள் வடமொழியை ஐரோப்பிய மொழிகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்த பிறகே, 'இந்தோ-ஐரோப் பிய மொழிக் குடும்பம்' என்ற உலகளாவிய கருத்தாக்கமே உருவானது. அந்த வகையில், இந்திய மொழியியல் என்பது வடமொழியின் முறையான பகுப்பாய்வுத் திறனும், தமிழின் தனித்துவமான இலக்கிய, இலக்கண மரபும் இணைந்த ஒரு செழுமையான களமாகும். இந்தி யாவின் பெரும்பாலான மொழிகளின் அகராதி யில் வடமொழிச் சொற்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. இதற்காகவே, வடமொழிச் சொற்களைப் பிற மொழிகளில் பயன்படுத்த 'தத்சமம்', 'தத்பவம்' ஆகிய இரு முறைகள் உருவாயின. வடமொழிச் சொற்களை எவ்வித மாற்றமும் இன்றி அப்படியே கையாளுதல் 'தத்சமம்' என்றும், அந்தந்த மொழியின் இயல்புக்கு ஏற்பத் திரித்துக் கையாளு தல் 'தத்பவம்' என்றும் அழைக்கப்படுகின்றன. அறம், பொருள், சமயம், தத்துவம் மற்றும் அறிவியல் சார்ந்த கலைச் சொற்கள் பெரும்பாலான இந்திய மொழிகளில் வடமொழியை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. பழைய மொழியின் இலக்கணத்தை தெளிவாகவும் முறையாகவும் அறிவதற்கு அதற்கான தீர்வுகளை அறிஞர்கள் கூறினர். இதன் அடிப்படையில் பல்வேறுபட்ட இலக்கண நூல்கள் காலத்துக் காலம் எழுந்தன. அந்த வகையில் வடநாட்டு இலக்கணங்கள் பல பல்வேறு காலங்களில் எழுந்தாலும் 'பாணினி' என்பவரால் எழுதப்பட்ட அஷ்டத்தாயி எனும் இலக் கண நூல் பற்றி சற்றுப்பார்ப்போம்.

அஸ்டாத்தியாயி:

அஸ்டாத்தியாயி எனும் இலக்கண நூலை பொ.ஆ.மு. 4-ஆம் நூற்றாண்டளவில் பாணினி என்னும் அறிஞர் எழுதினார். அஷ்டாத்தியாயி சமஸ்கிருத அமைப்புகளையும் மொழி யியல் கூறுகளையும் சுருக்கமாக சூத்திர வடிவில் விளக்கும் நான்காயிரம் சூத்திரங்களைக் கொண்ட இலக்கண நூலா கும். நான்காயிரம் சூத்திரங்களில் பெரும்பாலான சூத்தி ரங்கள் சொல்லாக்கம் பற்றியே அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும். இந்த நூலில் கையாளப்பட்ட உத்திகள் இலக் கண பாரம்பரிய மரபுகள், இலக்கண கூறுகளை விளங்க வைக்கும் திறம் என்பவற்றைக் கொண்டு இன்றும் மொழியி யல் மேதைகள் வியக்க வைக்கும் தன்மை கொண்டு காணப்

படுவது குறிப்பிடத்தக்கது. காலத்திற்கு காலம் மொழியில் ஏற்பட்ட மாற்றங்களால் இவ்இலக்கணம் விளங்கிக் கொள்ள முடியாத நிலையில் அஸ்டாத்தியாயிக்கு மகா பாஷ்யம் எனும் பேருரையை பொ.ஆ.மு. 2-ஆம் நூற்றாண்டளவில் பாணினியைப் போல மிகச்சிறந்த அறிஞரான பதஞ்சலி என்ப வரால் எழுதப்பட்டது. வடநாட்டு இலக்கண பாரம்பரியத்திற்கு முதலில் வித்திட்ட பெருமைக்குரியவர்களாக இவர்கள் இரு வரும் காணப்படுகிறார்கள். பின் இவர்களது நூலைப் பின் பற்றி பல இலக்கண ஆசிரியர்கள் எழுதினார்கள்.

இந்நூலுக்குப் பல உரைகள் எழுதப்பட்டுள்ளன. இது எட்டுப் பிரிவுகளைக் (அத்தியாயங்களை) கொண்டு விளங்கியதால், 'அஷ்டாத்தியாயி' எனும் பெயர் பெற்றது. உலக மொழியியல் வரலாற்றில், ஒலியியல் பற்றி முதன்முதலில் குறிப்பிட்ட நூல் அஷ்டாத்தியாயி ஆகும். ஒலிப்பிறப்பியல் முதன்முதலில் உருவான இந்திய மண்ணில், குரல் நிறைவொலி (Voice sounds) மற்றும் சந்தி இலக்கணம் பற்றி முதன்முதலாகப் பேசியது பாணினியின் அஷ்டாத்தியாயி என்பது குறிப்பிடத் தக்கது. மேலும், அடிச்சொல்லோடு ஒட்டுகள் சேரும் விதி களை வகுத்தும், தொகுத்தும் இந்நூல் விரிவாக விளக்கு கிறது. இவர்கள் இருவருமே சமஸ்கிருதச் சொற்களை எவ் வாறு உச்சரிப்பது அல்லது ஒலிப்பது என்பதிலும், அச்சொற் களின் அமைப்பியல் முறையை ஆராய்வதிலும் மிகுந்த கவனம் செலுத்தினர். பாணினியின் தொடரமைப்பில் வினைச் சொல் இல்லாத தன்மையும் காணப்படுகிறது. எடுத்துக்காட் டாக, தமிழில் 'அது மாடு' எனும் தொடரில் வினைச்சொல் இல்லாமல் அமைவதைப் போன்றதே இதுவும் ஆகும். அது மட்டுமன்றி, சமஸ்கிருதத்தில் எட்டு வேற்றுமைகள் இருக்கின் றபோதிலும், பாணினி தனது இலக்கண அமைப்பில் ஐந்து வேற்றுமைகளை மட்டுமே கையாண்டுள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது.

பாணினி தனது அஷ்டாத்தியாயி நூலில் கராக கொள் கையை அதாவது வேற்றுமை இலக்கணத்தை நுண்மான் நுழை புலத்தோடு எடுத்துக் கூறியுள்ளார். தனக்கொன்று ஒரு கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இவர் கூறிய இலக் கணமே, இன்றைய மொழியியல் அறிஞர்களின் வேற்றுமை இலக்கண முன்மாதிரிக்கு அடித்தளமாக விளங்குகிறது. அத் துடன், இலக்கண வரலாற்றில் முதன் முதலாக வேற்றுமை இலக்கணத்தை தெளிவாகவும், கோட்பாட்டுடனும், விளக்க மாகவும் கூறிய பெருமைக்குரியவர் பாணினி என்பது குறிப்பி டத்தக்கது.

நவீன கணினி அறிவியலின் 'புரோகிராமிங்' (Programming) தர்க்கத்திற்கு முன்னோடியாக இது திகழ்கிறது. எட்டு அத்தி யாயங்களைக் கொண்ட அஷ்டாத்தியாயியின் ஒவ்வொரு அத்தியாயமும் நான்கு பாதங்களாகப் (Padas) பிரிக்கப்பட் டுள்ளது. இந்நூல் ஒட்டுமொத்தமாகச் சுமார் 3,996 சூத்திரங் களைக் (நூற்பாக்கள்) கொண்டுள்ளது. இவை அனைத்தும் மிகவும் சுருக்கமான, செறிவான சூத்திர வடிவில் எழுதப் பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. அஷ்டாத்தியாயியின் தனித்துவமான கூறுகளை ஆராயும்போது, பாணினி தனது இலக்கணத்தை வெறும் விதிகளாகத் தராமல், ஒரு தர்க்கரீ தியான உருவாக்க இயங்குமுறையாக (Generative Machine) வடிவமைத்துள்ளார் என்பதை அறியலாம். இந்நூலின் முக் கிய அங்கங்களாகச் சிவ சூத்திரங்கள் (Shiva Sutras), தாது பாடங்கள் (Dhatu-patha / வினைமூலப் பாடங்கள்), கண பாடங்கள் (Gana-patha) என்பன காணப்படுகின்றன. இவற் றில் 'சிவ சூத்திரங்கள்' என்பது சமஸ்கிருத ஒலிகளின் அகர வரிசையாகும். இதனை ஒரு குறியீட்டு அமைப்பாகப் பயன்ப டுத்தி, சிக்கலான இலக்கண விதிகளை மிகச் சுருக்கமாகப் பாணினி விளக்குகிறார். 'தாது பாடங்கள்' என்பவை வினைச் சொற்களின் மூலங்களை (Verb roots) முறைப்படி பட்டியலிடு கின்றன. 'கண பாடங்கள்' என்பவை பொதுவான இலக்கண விதிகளை ஏற்கும் பெயர்ச்சொற்களின் குழுக்களை வகைப் படுத்துகின்றன.

இந்திய மொழி இலக்கண மரபு பொ.ஆ.மு. 4-ஆம் நூற்றாண் டிற்கு முன்பே தோன்றி வளர்ந்து பண்பட்டிருந்தது. இந்த இலக்கண பாரம்பரியத்தின் அடிச்சுவட்டில் பாணினி நல்ல தொரு இலக்கணத்தை உலகிற்கு கொடுத்தார். இந்திய மொழியியல் வரலாற்றில் பாணினி சிறப்பிடம் வகிப்பதற்கு அவர் பேச்சொலிகளுக்கு இடையே என்னென்ன வேறுபாடு கள் தோன்றும் என்னென்ன ஒற்றுமைகள் காணப்படும் என விளக்கிய விதம் காரணமாக அமைந்தது எனலாம். இதனால் தான் 'புளும்பீல்டு (Bloomfield)' எனும் அமெரிக்க மொழி யியல் அறிஞர், பாணினி இலக்கணத்திற்கு ஒப்பான பழைய இலக்கணம் உலகில் வேறொன்றும் கிடையாது என வியந்து கூறுவார்.

ஐரோப்பியர்கள் முதன்முதலில் அறிந்துகொண்ட, முழுமை யும் நுண்மையும் நிறைந்த ஒரு மொழியியல் இலக்கணம் இந்திய இலக்கணமே (வடமொழி இலக்கணம்) ஆகும். இது மொழியின் அமைப்பைத் துல்லியமாக ஆராய்ந்து எழுதப் பட்டதாகும்; கிரேக்கர்கள் மற்றும் ரோமானியர்களின் இலக்க ணங்களைப் போல வெறும் தத்துவ அடிப்படையில் மட்டும் உருவானதல்ல. இந்த வடமொழி இலக்கண அறிவே, ஐரோப் பாவில் ஒப்பிலக்கணமும் (Comparative Linguistics) வர லாற்று இலக்கணமும் (Historical Linguistics) தோன்றுவதற் குக் அடிப்படைக் காரணமாக அமைந்தது. 19-ஆம் நூற் றாண்டு முழுவதும் இந்த இரு துறைகளுமே முதன்மையான மொழியியல் ஆராய்ச்சிகளாகக் கருதப்பட்டன. பின்னர், 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண் டின் தொடக்கத்திலும் வருணனை மொழியியல் (Descriptive Linguistics) பிறந்தது. இந்த வருணனை மொழியியலின் கோட்பாடுகள் வடமொழி இலக்கண மரபோடு மிக நெருங் கிய தொடர்பு கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்...)

nageswary@thaiveedu.com

21

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள்

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்

tg.theeban@gmail.com

இதுவரை...

மகாவம்சம்: பல நூற்றாண்டுகளாக, மக்கள் மத்தியில், நாட்டார் பாடல்களாகப் பாடப்பட்டுவந்த கதைகளை, பொ.ஆ.பி. 6-ஆம் நுற்றாண்டளவில், மகாநாம தேரர் என்னும் பௌத்த பிக்கு பாளி மொழியில் தொகுத்த தாக நம்பப்படுகிறது.

பௌத்தத் துறவிகள் ஒருங்கிணைந்து, மகிந்தன் மூல மாக பௌத்தம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட வரலாறு, பல்லாயிரக்கணக்கான மக்கள் இலங்கையில் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டது, பௌத்த மதத்தின் பெருமையைக் காட்டும் வகையிலான, செவி வழிக் கதைகள் முதலியவற்றைத் திரட்டி 'அட்டகதா' என்னும் பெயரில் 'பாளி' மொழியில் தொகுத்தார்கள். இது, பின் ஒரு காலத்தில், காலவரிசைப்படி ஒழுங்கு செய்யப்பட்டு 'அட்டகதா-மகாவம்சம்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டது.

பதிற்றுப்பத்து: வரலாற்றில், தொடர்ந்து ஆட்சி செய்த பத்துச் சேர மன்னர்களின் அரசியல் சாதனைகள், கொடைமுதலிய சிறப்புகளை, சங்க இலக்கியத்தில் சிறந்த புலவர்களாகப் போற்றப்படும் கபிலர், பரணர், அரிசில் கிழார், காக்கைபாடினியார் முதலிய பத்துப் புலவர்கள் தனித் தனியாகப் பாடியிருக்கும் நூல் பதிற் றுப் பத்து என்னும் சங்க இலக்கியம்.

தமிழ் நாட்டினது வரலாற்றை வரைவதற்குச் சங்க இலக் கியங்களை ஆவணங்களாக ஏற்றுக் கொள்ளாத காலம் ஒன்று இருந்தது. இலக்கியச்சான்றுகளை ஏற்றுக்கொள் ளத்தக்க புறச் சான்றுகள் கேட்கப்பட்ட அதே காலகட் டத்தில் மகாவம்சம் வரலாற்று ஆவணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது இன்றைய ஆய்வாளர்களுக்கு வியப்புத் தரும் செய்தியாகும்.

இந்த ஆய்வில், பத்துச்சேர மன்னரின் தொடர் வரலாறு ஆவணப்படுத்தப்பட்டுள்ள பதிற்றுப்பத்து என்னும் வர லாற்று இலக்கியம், நாடோடிப் பாடல்களாகப் பல நூற் றாண்டுகளாக எடுத்துவரப்பட்டு பௌத்த பிக்குகளால் நூல் வடிவம் பெற்ற மகாவம்சம் என்னும் வரலாற்று நூலுடன் ஒப்பாய்வு செய்யப்படுகிறது.

தொடர்கிறது...

மகாவம்சமும் பதிற்றுப்பத்தும்:

மகாவம்சம்:

மகாவம்சம் ஒரு 'வரலாற்று நூல்' என்று சிங்கள அரசியல்வாதி களாலும் வரலாற்று ஆசிரியர்களாலும் மீண்டும் மீண்டும் கூறப் பட்டு இன்று உலகமே அதனை உண்மை என்று நம்பும் அள வுக்கு வளர்ந்திருக்கிறது. நாடோடிப் பாடல்களாகப் பல நூற் றாண்டுகளாக எடுத்துவரப்பட்ட நிலையில் அது திரித்தும் மாற் றப்பட்டும் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்திருக்கிறது. மதச் சார் புள்ள வரலாறு என்னும் பொழுது நம்பகமற்ற, அறிவுக்குப் புலப் படாத, அறிவுக்குப் பொருந்தாத கதைகள் இணைக்கப்படுவது இயல்பு. மிக அண்மைக் காலம் வரை இவற்றின் உண்மைத் தன்மை ஆராய்ச்சி நோக்கில் பார்ப்பதற்கும் பேசுவதற்கும் அரசி யல் காரணங்கள் தடையாக இருந்து வந்திருக்கின்றன.

இன்று, மகாவம்சம், அறிவியலுக்குப் பொருந்தாதவற்றை விலக்கி, அது கூறும் இன, மத, பண்பாட்டு இயல்புகளின் அடிப்படையில் ஆராய முற்படும் நிலை உருவாகியிருக்கிறது.

37 அத்தியாயங்களைக் கொண்ட மகாவம்சத்தில் 22-ஆம் அத்தி யாயம் வரையிலான பகுதிகளை நாம் கண்டோம்.

மகாவம்சம், பொ.ஆ.பி. 3-ஆம் நூற்றாண்டளவில் பௌத்தம் இலங்கையில் நிலைபெற்றதன் பின், தேவநம்பியதீசனால் கட்டப் பட்ட மகா விகாரையில், இந்தியாவிலிருந்து வந்திருந்த பௌத்த பிக்குகள், இலங்கையில், ஏனைய விகாரைகளில் இருந்துவந்த பௌத்த பிக்குகள் என பௌத்த மதம் சார்ந்த அனைவரும் இணைந்து தொகுத்த ஒரு நூலாகும்.

இந்நூலில், பௌத்தமதம் வட இந்தியாவில் தோன்றிய பின்னணி, வளர்ந்த வரலாறு, பௌத்தம் அண்டை நாடுகளுக்குப் பரப்பப் பட்ட வரலாறு, மதம் பரப்புவதற்காக மகிந்தன் ஈழத்திற்கு அனுப் பப்பட்டமை, மகிந்தன் தேவநம்பியதீசன் என்னும் ஈழத்து அரச னைச் சந்தித்தது, மகிந்தன் அசோகச் சக்கரவர்த்தியின் மகன் (இது சான்றுபடுத்தப்படாத தகவல்) என்று கூறப்படும் தகவல், அசோகச் சக்கரவர்த்தியின் மகள் என்று கூறப்படும் சங்கமித் திரை (சான்றாதாரம் அற்ற தகவல்) வெள்ளரசுக் கிளையை இலங்கைக்குக் கொண்டு வந்தமை, பௌத்தம் மக்களிடையே பரவிய அல்லது பரப்பப்பட்ட செவிவழிக் கதைகள், தேவநம்பிய

தீசன் அவன் பின் வந்த மன்னர்கள் பௌத்த விகாரைகள் அமைத்து பௌத்த மதத்தை இலங்கைத் தீவு முழுமைக்கும் பரப்பியமை, இலங்கையின் வடபகுதியில் வெள்ளரசுக் கிளை வந்து இறங்கியமை, ஈழத்தின் வடபகுதியில் வெள்ளரசுக் கிளை வந்து இறங்கிய இடத்தில் பௌத்த மத விகாரை கட்டப்பட்டமை, முதலிய செய்திகளைக் கண்டோம்.

இச்செவிவழிக் கதைகள், அட்டகதா என்னும் பெயரில் பாளி மொழியல் செய்யுள் வடிவில் பாடப்பட்டது. பின் ஒரு காலகடடத்தில், காலவரிசையாக ஒருங்கிணைக்கப்பட்டு 'அட்டகதா-மகாவம்சம்' என்ற பெயரில் தொகுக்கப்பட்டது. அட்டகதா-மகாவம்சச் செய்யுட்களை அடிப்படையாக் கொண்டு பொ. ஆ.பி. 4-ஆம் நூற்றாண்டில் தீபவம்சமும் பொ.ஆ.பி. 6-ஆம் நூற்றாண்டில் மகாவம்சமும் இயற்றப்பட்டது. அசோகர் தமது ஆட்சிக்குட்பட்ட பகுதியில் மட்டுமின்றி அண்டை நாடுகளான 'சேர சோழ, பாண்டிய, சத்தியபுத்திர, தம்பபர்ணி (ஈழம்)... மற்றும் பல அண்டை நாடுகளுக்கும் இருவகைச் சிகிச்சைகள் அளிக்கப்பட வேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளதை அசோகரின் கிர்னார் இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டு உறுதிசெய்கிறது.

மகாவம்சம், பொ.ஆ.மு. 543-ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து விஜயன் என்னும் இளவரசன் வந்தது முதல் பொ.ஆ.பி. 361-ஆம் ஆண்டு மகாசேனன் என்னும் மன்னன் ஆண்டது வரையிலான இலங்கை வரலாறு தொடர்பான குறிப்புகளைக் கால வரிசையாக விபரிக்கின்றது.

- மகாவம்சம் என்ற இந்த இலக்கியம் சிங்கள அரசியலைப் போதுமான அளவுக்குக் கூறினாலும் ஈழத் தமிழர் பற்றிய தகவல்களை, குறிப்பாக, ஈழத் தமிழரது ஆதிக்குடியேற்றம் பற்றிய தகவல்களை மிகக் குறைந்த அளவிலேயே கூறுகின்றது.
- சிங்களவரின் முதலாம் மன்னனாக விஜயன் என்னும் இந்திய இளவரசன் ஒருவன் சித்தரிக்கப்படுகிறான். அவன் வரவு பற்றிப் பல்வேறுபட்ட கதைகள் உலவுகின்றன.

எது எப்படியாயினும், இந்திய இளவரசனான விஜயனுக்கும் தென்னிந்திய இளவரசிக்கும் ஏற்பட்ட திருமண பந்தத்தில் உருவானதே சிங்கள வம்சம் என்பதில் மாற்றுக்கருத்துக் கிடையாது. அவ்வாறே கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னனான ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் வரையிலான அரசர்களுக்குத் தென்னகத்திலிருந்தே மணமக்கள் வருவிக்கப்பட்டார்கள் என்பதற்கு வலுவான சான்றுகள் உள. ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனின் தாயார் ஸ்ரீசுப்பம்மாள். கண்டி இராச்சியத்தின் அரச பரம்பரை தென்னிந்தியாவுடன் இரத்தத் தொடர்பு கொண்டது என்பதில் ஐயமில்லை. எனவே கண்டி அரச பரம்பரை, தொடர்ந்து தென்னக அரசுகளின் இரத்தத் தொடர்பின் கலப்பினால் உண்டாக்கப்பட்டு வந்திருக்கிறது என்பது தெளிவு.

மகாவம்சம் எழுந்த காலம், அது கூறும் வரலாற்றுத் தகவல்கள், அத்தகவல்களின் உண்மைத் தன்மை முதலியவை மேற்கொண்டு ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட வேண்டியவை.

அவற்றில் சில தகவல்கள் சிறந்த வரலாற்றுச் சான்றுகள் கொண்டு உறுதிப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, விஜயன் வருகைக்கு முன் இலங்கையில் இருந்த சமூகம் பற்றிய தகவல்கள், இலங்கையில் அரச உருவாக்கம், மகிந்ததேரர் வருகை, பௌத்தம் மதம் தீசன் என்னும் அரசனால் ஏற்றுக் கொள்ளப்பட்டமை, விகாரைகள் பல கட்டப்பட்டமை, சங்கமித்தை என்னும் தேரி மூலம் புத்தர் ஞானம் பெற்ற புனித வெள்ளரசு மரத்தின் கிளை கடல் வழியாக இலங்கைக்கு எடுத்துவரப்பட்டு யாழ்ப்பாணக் கரையில் இறக்கப்பட்டமை, யாழ்ப்பாணத்தில் விகாரை கட்டப்பட்டமை, யாழ்ப்பாணத்திலிருந்து வெள்ளரசுக்கிளை அனுராதபுரிக்கு எடுத்துவரப்பட்டு அனுராதபுரியில் நாட்டப்பட்டமை, பௌத்தமதம் அரச ஆதரவுடன் இலங்கை முழுமைக்கும் பரப்பப்பட்டமை, மகிந்த தேரர், சங்கமித்தை, அவர்களை ஒத்த பல தேரர்கள் இலங்கையில் நிரந்தரமாக வாழ்ந்து பௌத்தமதத் தொண்டாற்றியமை, போன்ற தகவல்கள் நம்பகத்தன்மை பெறுகின்றன.

மகாவம்சத்தில் 'புராணக் கதைகள்' வகையில் பல நம்பக மற்ற தகவல்களைத் தந்தாலும், அவற்றை அகற்றி மூலக் கதைகளை மட்டும் எடுத்துக் கொள்ளக்கூடியதாக உள்ளது. 23-ஆம் அத்தியாயம் முதல் 37-ஆம் அத்தியாயம் ஈறாக உள்ள பகுதி பார்க்கப்படும்.

பதிற்றுப்பத்து:

- **சங்ககாலச் சேரர் ஆட்சி – சேர மன்னர்களின் வரலாறு:**

பதிற்றுப்பத்து என்பது பத்துச் சேர மன்னர்களின் தொடர் வரலாற்றை, சங்க இலக்கியங்களால் சிறப்பாக அறியப்பட்ட கபிலர், பரணர் முதலாய பத்துப் புலவர்கள் பாடிய பத்து நெடும்பாடல்களின் தொகுப்பாகும்.

பதிற்றுப்பத்து தவிர, புறநானூறு, பரிபாடல், கலித்தொகை முதலிய சங்கத் தொகை நூல்களும் பெரும்பாணாற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை முதலிய ஆற்றுப்படை இலக்கி யங்களும் மன்னர் புகழ் பாடும் நோக்கில் அமைந்தவையே. சங்க இலக்கியங்களுக்கு முன்னையதாக, பொ.ஆ.மு. 711-ஆம் ஆண்டளவில் தொகுக்கப்பட்டதாக அறியப்படும் தொல் காப்பியத்திலிருந்து மன்னராட்சியின் தொடக்கம், வளர்ச்சி, போர் முறைகள் முதலியவை பற்றிய தகவல்களை அறியக் கூடியதாகவுள்ளது.

தமிழ் இலக்கியங்கள் எடுத்துவரும் சேர அரசு, ஆட்சி, மன னர்கள் பற்றிய தகவல்கள் சிலவற்றை, இந்த ஆய்வின் நோக் கத்திற்காக அறியலாம்.

▸ சேரர் குடி:

தமிழ்நாடு சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர் களால் ஆளப்பட்டு வந்தது. சேர அரசர்கள் தமிழ் நாட்டின் மேற்குக் கடற்கரைப் பகுதியையும், சோழர் கிழக்குப் பகுதி யையும், பாண்டியர் தெற்குப் பகுதியையும் ஆண்டு வந்தனர்.

கடல் சார்ந்த நிலம், தொன்று தொட்டு, 'சேர்ப்பு' என்னும் சொல்லால் வழங்கப்பட்டு வந்தது. நீர் சூழ்ந்த கடலும் நிலமும் சேருமிடத்தைத் தமிழர் 'சேர்ப்பு' என்று அழைத்தனர். சேரநாட்டின் பெரும்பகுதி சேர்ப்புநிலம். சோழ நாட்டிலும், பாண்டிய நாட்டிலும் சேர்ப்புக்கள் காணப்பட்டாலும் இவற் றில் உள்நாட்டுப் பகுதிகள் அதிகமாக இருப்பதார் இவற் றைச் சேர்ப்பு என்று அழைக்கும் வழக்கம் இல்லை.

சேரநாட்டை ஆண்ட மன்னர்கள் அனைவரும் 'சேரமான்' என் னும் குலப் பெயரைத் தம் பெயருடன் இணைத்துக் கொண் டுள்ளார்கள். இவ்வாறு, சேரமன்னர் பெயர்கள், முதலில் குடிப் பெயர், அதனை அடுத்துச் சொந்தப் பெயர்கள் என இணைக்கப்பட்டு, அகரவரிசைப்படுத்துவதற்கு உரியதாக்கப் பட்டுள்ளன. அரசர் பெயரை அடுத்து அவர்கள் பாடப்பட் டுள்ள புறநானூற்றுப் பாடல்-வரிசை எண்ணும் கீழே தரப்பட் டுள்ளது.

இந்தத் தொகுப்பில் உள்ள சேர அரசர்கள் புறநானூற்றுப் பாடல்களில் வருபவர்கள். பதிற்றுப்பத்து நூலில் குறிப்பிடப் படும் சேர அரச பரம்பரையில் கால நிரல் தெரிகிறது. எனவே அவர்கள் கால நிரல் வரிசையிலேயே காட்டப்படுகின்றனர்.

சேரர்களின் கொடி 'வில்' ஆகும். சேரர் அம்பு எய்வதில் சிறந் தவர்களாக இருந்த காரணத்தால் அவர்கள் வில்லைத் தமது அடையாளமாகக் கொண்டார்கள் எனலாம். சேரர், கருரை யும், வஞ்சியையும் தலை நகராகக் கொண்டு ஆட்சி செய் தனர். சில சேர அரசர்கள் தொண்டியையும் தலைநகராகக் கொண்டு ஆண்டனர்.

முற்காலச் சேரர் பற்றி மிகவும் அரிதான செய்திகளே அறியப் படுகின்றன. தொல்காப்பியத்தில் சேரர் தமது அடையாளப் பூவால் அறியப்படுகிறார்கள்.

'போந்தை வேம்பே ஆர்என வரூஉம்
மாபெருஞ் தானையர் மலைந்த பூவும்'

தொல்காப்பியம், புறத்திணை இயல். 5

போந்தை என்பது பனை. பனம்பூ, இது சேரனை அடையாளப் படுத்துகிறது. ஆதிகாலத்தில், போர்க்களங்களில் வீரர் அணி யும் பூவினைக் கொண்டு அவர்கள் யார் என்பது அடையாளப் படுத்தப்படும் வழக்கு இருந்திருக்கிறது. இது, அரச வரலாற் றின் தொடக்க காலத்தைக் குறிக்கிறது.

சங்க காலச் சேர அரசர்களைச் சங்க இலக்கியங்கள் பாடு கின்றன. குறிப்பாக, பத்துச் சேர மன்னர்களைப் பாடிய பதிற் றுப்பத்து சேர மன்னர்கள் பற்றிய போதிய செய்திகளைத் தரு கின்றது.

▸ சங்க காலச் சேர நாட்டு எல்லைகள்:

சங்க காலச் சேரரது எல்லைகள் கொங்கணத்தின் எல்லைக ளாகும். ஆனால் பிற்காலத்தில் வடமொழித் தாக்கத்தால் அங்கு தமிழ் அழிந்தது. சங்க காலம், பக்திக் காலச் சேரர்கள் (சேரமான் பெருமாள், குலசேகரர் ஆகியோர்) கரூரிலிருந்தே ஆட்சி புரிந்தனர்.

▸ சேர நாட்டுத் துறைமுகங்கள்:

சேர நாட்டின் தலைநகரம், கரூர் அல்லது வஞ்சி என்னும் நகரம். முசிறி சேர நாட்டின் முக்கிய துறைமுகங்களில் ஒன்றா கும். இத்துறைமுகத்தின் நடவடிக்கைகள் பற்றியும், அதன்

வளம் பற்றியும் பண்டைத் தமிழ் நூல்களிலே குறிப்புகள் உள்ளன. தொண்டி, சேர நாட்டின் இன்னொரு புகழ் பெற்ற துறைமுகமாகும். தென்மேற்கு இந்தியாவில் உள்ள மலபார் கரைசார்ந்த நிலப்பகுதிகளையே சேரர் ஆண்டனர்.

- **சேர நாட்டு மன்னர்கள்:**

சங்கப் புறப்பாடல்கள் பெரும்பாலும் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள்மேல் பாடப்பட்டவையே. அரச உருவாக்ககாலத்தில், மன்னர்களது வீரம், கொடை, அறம் முதலாய சாதனைகள் மக்களிடையே எடுத்துச்செல்லப்படவேண்டியது அவசிய மாயிற்று. இத்தேவையை நடைமுறைப்படுத்தியவர்கள் புலவர்களே. புலவர்கள், நாடோடிகளாக, கூட்டம் கூட்டமாக, ஊரூராகச் சென்று மன்னர் புகழ்பாடினார்கள் என்பது ஆற்றுப்படை இலக்கியங்கள் வாயிலாக நாம் அறியும் உண்மை.

சங்கத் தொகை நூல்களில் சேரமன்னர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சங்க நூல்களில் ஒன்றாகிய பதிற்றுப்பத்து, கால அடிப்படையில், பத்து சேர மன்னர்களைத் தொடராகப் பாடிய நெடும்பாடற் தொகுப்பாகும். பதிற்றுப் பத்துப் பாடல் தொகுதியின் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் உள்ள பதிகங்கள் எமது ஆய்வுக்கு முக்கியமானவை. அவை தரும் தகவல் தொடர்பாகச் சில சிக்கல்கள் இருப்பினும் தமிழர் வரலாற்றைத் தொகுப்பதில் இப்பதிகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

- **பதிற்றுப்பத்து மற்றும் பிற சங்க இலக்கியங்கள் வழியும் அறியப்படும் அரசர் பெயர்கள்:**

- உதியஞ்சேரல் - பதிற்றுப்பத்து 1-ஆம் பத்தின் பாட்டுடைத் தலைவன் என்று அறியப்படுகிறான். இவன் ஆண்ட காலப் பகுதி தெரியவில்லை.
- இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் - பதிற்றுப்பத்து 2-ஆம் பத்தின் பாட்டுடைத் தலைவன். 58 ஆண்டுகள் அரசு செலுத்தியதாகக் கூறப்படுகிறது.
- பல்யானைச் செல்கெழு குட்டுவன் (இமயவரம்பன் தம்பி) - பதிற்றுப்பத்து 3-ஆம் பத்தின் பாட்டுடைத் தலைவன். 25 ஆண்டுகள் அரசாண்டதாகக் கூறப்படுகிறது.
- களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் - பதிற்றுப்பத்து 4-ஆம் பத்தின் பாட்டுடைத் தலைவன். கல்லாடனார் என்னும் புலவர், தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றியும் பாடியுள்ளார். இதனால் தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டிய மன்னனும், நார்முடிச் சேரல் இரும்பொறையும் ஏறத்தாழ ஒரே காலத்தவர் எனக் கொள்ளலாம். இவன் 25 ஆண்டுகள் அரசாண்டதாக இணையத் தகவல் கூறுகிறது.
- கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் - பதிற்றுப்பத்து 5-ஆம் பத்தின் பாட்டுடைத் தலைவன். இவன் 55 ஆண்டுகள் அரசாண்டதாகக் கூறப்படுகிறது. 5-ஆம் பத்தின் பதிகம் 'குடவர் கோமான் நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்'. நெடுஞ்சேரலாதன் மகன்.
- சேரலாதன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் - பதிற்றுப்பத்து 6-ஆம் பத்தின் பாட்டுடைத் தலைவன். 38 ஆண்டுகள் அரசாண்டதாகக் கூறப்படுகிறது. 6-ஆம் பத்தின் பதிகம் 'குடக்கோ நெடுஞ்சேரலாதற்கு வேளள் ஆவிக் கோமான் தேவி ஈன்ற மகன்' என்கிறது.
- செல்வக் கடுங்கோ வாழியாதன் - பதிற்றுப்பத்து 7-ஆம் பத்தின் பாட்டுடைத் தலைவன். இவன், 25 ஆண்டுகள் அரசாண்டதாகக் கூறப்படுகிறது.

  அந்துவன் - (7 ஆம்பத்தின் பதிகம் 'நெடு நுண் கேள்வி அந்துவற்கு ஒரு தந்தை ஈன்ற மகள் பொறையன் பெருந்தேவி ஈன்ற மகன்')

  சேரமான் அந்துவஞ் சேரல் இரும்பொறை, முடமோசியார் என்னும் புலவரிடம் சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளியை யார் என்று வினவியபோது மோசியார் சோழனைப் பற்றிப் பாடிய பாடல் புறநானூற்று (13) அடிக்குறிப்பால் அறியப்படுகிறது. எனவே அந்துவன், மோசியார், கோப்பெருநற்கிள்ளி மூவரும் ஒத்த காலத்தவர்.
- இரும்பொறை, பெருஞ்சேரல் இரும்பொறை, தகடூர் எறிந்தவன் - பதிற்றுப்பத்து 8-ஆம் பத்தின் பாட்டுடைத் தலைவன். 17 ஆண்டுகள் அரசாண்டதாகக் கூறப்படுகிறது.
- இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை - பதிற்றுப்பத்து 9-ஆம் பத்தின் பாட்டுடைத் தலைவன். 16 ஆண்டுகள் அரசாண்டதாகக் கூறப்படுகிறது. 9-ஆம் பத்தின் பதிகம் - 'குட்டுவன் இரும்பொறைக்கு மையூர் கிழாஅன் வேண்மாள் அந்துவஞ் செள்ளை ஈன்ற மகன்'
- 10-ஆம் பத்து கிடைக்கவில்லை.

மன்னர்களின் ஆட்சி ஆண்டுகள் பற்றிக் கூறப்பட்ட ஆண்டு எண்ணிக்கைகளுக்குப் போதிய சான்றுகள் இல்லை.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் - 58 ஆண்டுகள், பல்யானைச் செல்கெழு குட்டுவன் - 25 ஆண்டுகள், களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் - 25 ஆண்டுகள், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் - 55 ஆண்டுகள், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் - 38 ஆண்டுகள், செல்வக் கடுங்கோ வாழியாதன் - 25 ஆண்டுகள், ஆக மொத்தம் 6 அரசர்களும் (58 + 25 + 25 + 55 + 38 +25) 226 ஆண்டுகள் அரசாண்டிருக்கலாம். தென் இந்திய பிற்கால வரலாற்று அரசுகளின் ஆட்சி ஆண்டுகளை ஒப்பீட்டு நோக்கி பார்க்கையில் அரசுகளின் எழுச்சி வீழ்ச்சிகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதி ஏறக்குறைய 300 ஆண்டு காலமாகக் கொள்ளக்கிடக்கிறது. இந்த அடிப்படையில் ஆதிச் சேரர்களின் ஆட்சிக் காலமும் 300 ஆண்டுகளாக இருந்திருக்கலாம் என்பது எனது கருத்து.

அடுத்த இதழில் பதிற்றுப்பத்தில் பாடப்பட்ட மன்னர்கள், அவர்கள் பற்றிப் பதிற்றுப்பத்தில் கூறப்பட்ட தகவல்கள், அவை வரலாறாக எடுக்கும் தகைமை உடையனவா போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

(தொடரும்...)

selvanayaki.s@thaiveedu.com

காட்சி மொழியும் உளவியல் மெய்ப்பாடுகளும்

ஈழத்துப் பூதந்தேவனார்

ஒரு மீள்வாசிப்பு

கி. ரமேஷ்

ஈழத்துப் பூதந்தேவனார் ஈழத் தமிழரின் தொன்மையான இலக்கிய அடையாளமாக மதிப்பிடப்படும் சங்கப் புலவர்களில் முக்கியமானவர். சங்க இலக்கிய வரலாற்றில் அவருடைய பெயர் இடம்பெறுவது வெறும் ஒரு தனிப்பட்ட புலவரின் சாதனையாக அல்ல; மாறாக, ஈழத்துக்கும் தமிழ்ச் சங்க மரபுக்கும் இடையிலிருந்த தொன்மையான பண்பாட்டு மற்றும் இலக்கியத் தொடர்பின் வரலாற்றுச் சான்றாகும்.

மதுரைக் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவராக விளங்கிய இவர், 'ஈழத்துப் பூதந்தேவனார்' எனச் சங்க நூல்களின் செய்யுள் முகப்புகளில் குறிப்பிடப் படுகிறார். நற்றிணை, குறுந்தொகை போன்ற நூல்களில் இவரது பெயருக்கு முன்னர் 'ஈழத்து' என்ற அடைமொழி தொடர்ச்சியாக வழங்கப்படுவது, அவர் ஈழ நாட்டைச் சேர்ந்தவர் என்பதை உறுதிப்படுத்தும் முக்கிய ஆதாரமாகக் கருதப் படுகிறது. இவரது பாடல்கள்:

- கநானூறு - 88, 231, 307
- குறுந்தொகை - 189, 343, 360
- நற்றிணை - 366

என சங்க இலக்கியத் தொகுப்புகளில் இடம்பெற்றுள்ளன.

இவர் ஈழநாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்குச் சென்று மதுரைச் சங்கத்தில் புலவராக விளங்கியவர் என்றும், தனது தந்தையான 'ஈழத்துப் பூதன்' உடன் மதுரை வந்து கல்வி கற்று புலமையடைந்தவர் என்றும் இலக்கிய மரபுச் செய்திகள் கூறுகின்றன. இதன் மூலம் அக்காலத்திலேயே ஈழம் மற்றும் தமிழகம் இடையே கல்வித் தொடர்பு, இலக்கியப் பரிமாற்றம், புலவர் மரபு, பண்பாட்டு ஒற்றுமை ஆகியவை நிலவியிருந்தன என்பதை உணர முடிகிறது.

இவரது இன மற்றும் பூர்வீக அடையாளம் குறித்து ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகளும் காணப்படுகின்றன. பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை போன்றோர், 'ஈழத்து' என்ற அடைமொழி வெறும் பெயர்ச்சுட்டல்ல; அது அவரின் புவியியல் மற்றும் பண்பாட்டு அடையாளத்தைக் குறிக்கிறது என்று வலியுறுத்துகின்றனர். சங்க நூல்களில் புலவர்களின் ஊரடையாளம் பொதுவாக உண்மையான பூர்வீகத் தைக் குறிக்கும் மரபில் வழங்கப்பட்டுள்ளதால், பூதந்தேவனாரும் ஈழத்தைச் சேர்ந்தவரே என அவர்கள் நிறுவுகின்றனர்.

ஆனால் மு. வரதராசனார் போன்ற சில அறிஞர்கள் இதனை எச்சரிக்கையுடன் அணுகுகின்றனர். 'ஈழத்து' என்ற அடைமொழி வர்த்தகத் தொடர்பு, குடியேற்றம் அல்லது மரபுச் சுட்டாகவும் இருக்கலாம்; அவசியமாக பிறப்பிட அடையாளம் என்றே கொள்ள வேண்டியதில்லை என அவர்கள் கருதுகின்றனர். எனினும், சங்க நூல்களின் உள்சான்றுகள் மற்றும் செய்யுள் முகப்புகள் அடிப்படையில் பெரும் பாலான ஈழத் தமிழ் ஆய்வாளர்கள் அவரை ஈழத் தமிழரின் ஆரம்பகாலப் புலவரா கவே ஏற்றுக்கொள்கின்றனர்.

prasadbatti@gmail.com

இந்த அடிப்படையில், ஈழத்துப் பூதந்தேவனாரை ஈழத் தமிழரின் தொன்மையான இலக்கியக் குரலாகக் காண முடிகிறது. அவருடனேயே ஈழத்து கவிதைப் பாரம்பரியம் தொடங்குகிறது எனக் கூறப்படுவதற்குக் காரணம், சங்க இலக்கியங்களில் தெளிவாக அடையாளப்படுத்தப்பட்ட முதல் ஈழப் புலவர் அவராக இருப்பதுவே ஆகும். இதனால், ஈழத்தில் தமிழ்க் கவிதை மரபு பிற்காலத்தில் தோன்றிய தல்ல; சங்கக் காலத்திலேயே அது செழித்திருந்தது என்ற புரிதல் வலுப்பெறுகிறது.

அவரது இருப்பு, ஈழத் தமிழ் இலக்கியம் தமிழக இலக்கி யத்தின் புறவட்டத்தில் அல்லாது, அதன் உட்பகுதியாகவே வளர்ந்திருந்ததைக் காட்டுகிறது. மதுரைச் சங்கத்தில் பங்கு பெற்றதன் மூலம், ஈழப் புலவர்களும் தமிழ்ச் செம்மொழி இலக்கிய உருவாக்கத்தில் செயற் பாட்டுத் தொடர்பு டையவர்களாக இருந்தனர் என்பது தெளிவாகிறது. எனவே, ஈழத்துப் பூதந்தேவனார் ஈழத் தமிழரின் முதல் இலக்கியக் குரல் என்றும் சங்க இலக்கியத்தில் ஈழத்தின் அடையாளச் சின்னம் என்றும் தமிழர் பண்பாட்டு ஒற்றுமையின் வரலாற்றுச் சான்று என்றும் ஈழக் கவிதைப் பாரம்பரியத்தின் தொடக்கப்புள்ளி என்றும் எனப் பல அடுக்குகளில் மதிப் பிடப்பட வேண்டியவர் ஆவார்.

சங்க இலக்கியப் பரப்பில் ஈழத்து மண்ணிலிருந்து தடம் பதித்த முன்னோடிப் புலவர்களில் முக்கியமானவர் ஈழத்துப் பூதந்தேவனார். இவரது பாடல்கள் வெறும் அகத்திணைச் சித்திரிப்புகளாக மட்டுமன்றி, உலக இலக்கியத்தில் பேசப் படும் 'படிமக் கோட்பாடு' (Imagism) சார்ந்த கவித்துவக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டிருப்பதால் தனித்துவம் பெறுகின்றன. இயற்கையை வெறும் பின்னணிக் காட்சி யாகப் பயன்படுத்தாமல், மனித மன உணர்வுகளின் உயிர் ப்பான வெளிப்பாடாக மாற்றும் இவரது கவித்திறன் வியப் பூட்டுகின்றது. புலி, யானை, அருவி, வாடைக்காற்று, மலை வழி போன்ற தீவிரமான படிமங்களின் மூலம் அச்சம், காதல், பிரிவு, வீர உணர்வு ஆகியவற்றை நுணுக்கமாக வெளிப்படுத்தும் திறன் அவருக்கு உண்டு. வேகம், ஒலி, ஒளி ஆகிய அனுபவங்களைக் காட்சிப் படிமங்களாக மாற்றும் அவரது கவித்திறன், அவரை சங்க இலக்கியத்தின் தனித்துவமான படிமப் புலவராக உயர்த்துகிறது.

மேலைத்தேய இலக்கிய உலகில் 'Imagist' இயக்கத்தின் முன்னோடியாகக் கருதப்படும் எஸ்ரா பவுண்ட் 'ஒரு கணத்தில் அறிவும் உணர்வும் ஒன்றாகத் தீவிரமாக வெளிப் படும் அனுபவமே கவிதை' எனக் கருதினார். குறுகிய சொற்களில் ஆழமான காட்சிப் பிம்பங்களை உருவாக்குவதே அவரது கவிதைக் கோட்பாட்டின் மையமாகும். இவ்வகை படிம மையக் கவித்துவம் சங்ககாலத்திலேயே ஈழத்துப் பூதந்தேவனாரின் பாடல்களில் செழுமையாகக் காணப்படுகிறது. அருவியின் வேகம், புலியின் உக்கிரம், வாடைக்காற்றின் தீவிரம், மலைவழியின் கொடூரம் போன்ற இயற்கைக் காட்சிகள் அவரது பாடல்களில் வெறும் வர்ணனைகளாக இல்லாமல், மனித மனத்தின் ஆழமான உணர்வுகளின் அடையாள ங்களாக அமைகின்றன. இதனால், சங்க இலக்கியத்தில் காணப்படும் படிமவியல் நுட்பம், நவீன மேலைத்தேய Ima-gism இயக்கத்திற்கு முற்பட்ட கவித்துவ மரபாகக் கருதத் தக்கதாக விளங்குகிறது.

சங்க இலக்கியமான அகநானூற்றில், குறிஞ்சித் திணையில் அமைந்த 88-ஆவது பாடல் ஈழத்துப் பூதந்தேவனாரின் கவித்திறனுக்குச் சான்றாகத் திகழ்கிறது. இரவு நேரத்தில் தலைவியைச் சந்திக்க வரும் தலைவனிடம் (இரவுக்குறி), அவன் வரும் வழியின் ஆபத்துகளைக் கூறி, அவனை விரைவில் திருமணம் செய்துகொள்ளத் தூண்டும் (வரைவு கடாதல்) தோழியின் கூற்றாக இப்பாடல் அமைந்துள்ளது.

இப்பாடல் அகவற்பா யாப்பில் இயற்றப்பட்டுள்ளது. இதன் நடை மிக வேகமாகவும், அதே சமயம் அழுத்தமாகவும் அமைந்துள்ளது. காட்டின் அடர்த்தியையும், அங்கிருக்கும் விலங்குகளின் அசைவுகளையும் விவரிக்கும்போது, சொற்கள் ஒன்றோடொன்று கோக்கப்பட்ட விதம் வாசகரின் மனதில் ஒருவிதப் பதற்றத்தையும், அதே நேரம் கவிதை நயத் தையும் ஏற்படுத்துகிறது.

அச்சுறுத்தும் காட்சிப்படிமங்கள் ஈழத்துப் பூதந்தேவனார் அவர்களின் கவித்துவ ஆற்றலை வெளிப்படுத்தி நிற்கி ன்றன. புலவர் இப்பாடலில் இயற்கையை ஒரு பயங்கரமான பின்புலமாகச் சித்தரித்துள்ளார். அவரது படிமக் கட்டமைப்பு மிக நுட்பமானது. நள்ளிரவின் நிசப்தத்தில் கேட்கும் பல்லியின் குரல், ஒரு கெட்ட நிமித்தத்தைப் போலவும், வழியின் அபாயத்தை அறிவிக்கும் எச்சரிக்கையாகவும் கையாளப்பட்டுள்ளது. பன்றியை வேட்டையாடப் பதுங்கி யிருக்கும் புலி, அதைக் கண்டு அஞ்சிப் பிளிறும் யானை, இடியொலி கேட்டு நடுங்கும் பாம்பு போன்ற விலங்கு அசைவுகள் வழியாக காட்டின் கொடூரத் தன்மை உயிரோட்டத்துடன் வெளிப்படுத்தப்படுகிறது. மேலும், இடி மற்றும் மின்னல் போன்ற இயற்கைச் சூழல்களும் அச்ச உணர்வை தீவிரப்படுத்துகின்றன. இவ்வாறு இயற்கைக் காட்சிகளையும் உள்ளுணர்வையும் ஒன்றிணைத்து பதற்ற மிக்க சூழலை உருவாக்கிய விதம், பூதந்தேவனாரின் சிறந்த காட்சிப்படிமப் புனைவுத் திறனை எடுத்துக்காட்டுகிறது.

ஒரு சிறந்த அகப்பாடல் என்பது சொல்லப்படும் செய்திக்கு அப்பால் ஓர் உட்பொருளைக் கொண்டிருக்க வேண்டும். தோழி காட்டின் அபாயங்களை அடுக்குவது, தலைவனை அச்சுறுத்துவதற்காக மட்டுமல்ல; 'இவ்வளவு இடர் நிறைந்த வழியில் நீ வருவதைக் கண்டு தலைவி அஞ்சி நடுங்கு கிறாள். அவளது அச்சத்தைப் போக்க நீ அவளை விரைவில் மணம் முடிக்க வேண்டும்' என்ற கோரிக்கையை மறைமுகமாக முன்வைக்கிறது. இதுவே சங்க இலக்கியத்தின் உயர்ந்த 'உள்ளுறை' மரபாகும்.

தலைவியின் 'காதல்' ஒருபுறமும், தலைவனின் பாதுகாப்பு குறித்த 'அச்சம்' மறுபுறமும் இப்பாடலில் மோதிக் கொள்கின்றன. காதலனின் வருகை மகிழ்ச்சியைத் தர வேண்டிய ஒன்று. ஆனால், அவன் வரும் வழியின் ஆபத்து அந்த மகிழ்ச்சியை விஞ்சிய கவலையாக மாறுகிறது. இந்த முரண்பட்ட உணர்வுகளை இயற்கைக் காட்சிகளின் ஊடாகப் புலவர் வெளிப்படுத்தியிருப்பது அபாரமானது.

ஈழத்துப் பூதந்தேவனாரின் அகநானூறு 88-ஆம் பாடல், வெறும் கற்பனைச் செறிவல்ல; அது இயற்கையை உற்று நோக்கிய ஒரு கவிஞனின் நுட்பமான பதிவு. இயற்கையின்

கொடூரத்தையும், மனித மனதின் மென்மையான காதலையும் ஓரிடத்தில் இணைத்ததன் மூலம், பூதந்தேவனார் ஒரு தலைசிறந்த 'படிமக் கவிஞராக' சங்க இலக்கிய வரலாற்றில் நிலைபெறுகிறார்.

ஈழத்துப் பூதன்தேவனார் பாடிய அகநானூற்றுப் பாடல் (231), பிரிவினால் வருந்தும் தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறும் சூழலில் அமைந்துள்ளது. இப்பாடல், தொடக்க த்தில் தலைவனின் வீரத்தையும் ஆண்மையையும் போற்றி, பின்னர் அவன் கடந்து செல்லும் பாலை நிலத்தின் வெப்பத்தையும் பயங்கரத்தையும் காட்சிப் படிமங்களாகச் சித்தரிக்கிறது.

'கொடு விற் கானவர்', 'மயிர்த் தலைப் பதுக்கை', 'கள்ளி அம் பறந்தலை', 'ஊக்கு அருங் கடத்து', 'வெஞ்சுரம்' போன்ற படிமங்கள் வழியாக அச்சமூட்டும் காட்டுவழியை ஆசிரியர் உயிரோட்டத்துடன் காட்சிப்படுத்துகிறார். இவ்வாறு இயற்கைக் காட்சிகளை அடுக்கி அமைக்கும் முறை, தலைவன் எதிர்கொள்ளும் துன்பப் பயணத்தை உணர்த்து வதோடு, தலைவியின் அகத் தவிப்பையும் (மன அழுத்தம்) பிரதிபலிக்கிறது. இத்தகைய அச்சம் நிறைந்த சூழலுக்கு மத்தியிலும், 'வருவர் வாழி தோழி!' என்ற நம்பிக்கையூட்டும் முடிவை அமைத்ததன் மூலம் காதலின் உறுதியைப் பூதந்தேவனார் வலுப்படுத்துகிறார். இதன் மூலம் அவர் வெறும் இயற்கைச் சித்திரிப்பாளராக மட்டுமல்லாமல், உணர்வுகளைக் கட்டமைக்கும் 'உளவியல் கவிஞராகவும்' திகழ்கிறார். வீரச் சிறப்பிலிருந்து தொடங்கி, பாலைநில அச்சக் காட்சிகளைக் கடந்து, காதல் நம்பிக்கையில் முடியும் இப்பாடலின் கட்டமைப்பு ஓர் உயர்ந்த உணர்ச்சி வளர்ச்சியைப் புலப்படுத்துகிறது. இயற்கை, வீரம், காதல் மற்றும் மனப்போராட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் இக்கவிதை நடை, பூதந்தேவனாரின் கவித்துவ நயத்திற்குச் சான்றாகும்.

அவ்வகையில் மதுரை ஈழத்துப் பூதந்தேவனாரின் இப்பாடல், புறச்சூழலுக்கும் அக உணர்வுக்கும் இடையிலான உறவைச் சித்தரிப்பதில் உலகளாவிய கவிதை மரபுக ளோடு வியக்கத்தக்க வகையில் ஒத்துப்போகிறது.

பூதந்தேவனார் பாலை நிலத்தின் வெப்பத்தையும் பயங்கரத்தையும் சித்தரிப்பது என்பது வெறும் புறநிலை வர்ணனை அன்று; அது டி.எஸ். எலியட் (T.S. Eliot) முன்வைத்த 'ஆப்ஜெக்டிவ் கோரிலேட்டிவ்' (Objective Correlative) என்னும் நவீன கவிதைக்கோட்பாட்டிற்கு ஒரு மிகச் சிறந்த செழுங்கால உதாரணமாகத் திகழ்கிறது. எலியட்டின் கூற்றுப்படி, ஒரு குறிப்பிட்ட உணர்ச்சியை வாசகருக்கு நேரடியாகச் சொல்லாமல், அந்த உணர்ச்சியைத் தூண்டக் கூடிய ஒரு தொகுப்புப் பொருட்களை அல்லது ஒரு சூழலை (A set of objects, a situation, a chain of events) கவிஞர் உருவாக்க வேண்டும்.

இங்கு பூதந்தேவனார், தலைவியின் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரியும் பிரிவாற்றாமையையும், தனிமையின் அச்சத்தையும் நேரடியாகப் புலம்பலாக வெளிப்படுத்தாமல், பாலை நிலத்தின் தகிப்பை ஒரு புறவயக் கருவியாக மாற்றுகிறார். நிலம் பிளந்து கிடப்பதும், கானல் நீர் பேய்த்தேராகத் தெரிவதும் வெறும் புவியியல் மாற்றங்கள் அல்ல; அவை தலைவியின் சிதைந்த மனநிலையையும், அவநம்பிக்கையையும் பிரதிபலிக்கும் படிமங்கள். இவ்வாறு, மனதின் அக-தகிப்பு நிலத்தின் புற-தகிப்பாக உருமாற்றம் பெற்று, வாசகரின் மனதில் அதே துயரத்தை மிகச் சரியாகக் கடத்துகிறது.

இத்தகைய உத்தியின் மூலம், பூதந்தேவனார் சங்க காலத்திலேயே எலியட்டின் நவீனக் கோட்பாட்டைத் தன் கவிதைக்குள் இயல்பாகப் பொருத்தியுள்ளார் என்பது புலனாகிறது. அந்தப் பயங்கரமான சூழலுக்கு நடுவிலும் 'வருவர் வாழி தோழி' என்று அவர் முடிப்பது, தகிக்கும் பாலை நிலத்தின் மேல் பெய்யும் ஒரு துளி மழையைப் போல, நம்பிக்கையின் உச்சமாக அமைகிறது.

பூதந்தேவனார் குறிப்பிடும் 'இல் இருந்து அமைவோர்க்கு இல்' (வீட்டிற்குள் முடங்கிக் கிடப்பவருக்குப் புகழ் இல்லை) என்ற வரி, ராபர்ட் பிரௌனிங்கின் புகழ்பெற்ற 'குறைபாடற்ற முழுமை' என்ற கருத்தாக்கத்தோடு மிக நெருக்கமான தொடர்புடையது. பிரௌனிங்கின் 'Andrea del Sarto' அல்லது 'The Last Ride Together' போன்ற கவிதைகளில், தோல்வியைப் பற்றிய கவலையின்றி இலக்கை நோக்கி நகர்வதே உயர்வாகப் பேசப்படும். 'ஒரு மனிதனின் இலக்கு அவனது பிடிக்குள் அடங்குவதாக இருக்கக்கூடாது; இல்லை யென்றால் வானம் எதற்கு?' ('Ah, but a man's reach should exceed his grasp, Or what's a heaven for?') என்பது பிரௌனிங்கின் வாதம். அதேபோல், பூதந்தேவனார் 'இல் இருந்து அமைவோர்க்கு இல்' என்று கூறும்போது, பாதுகாப்பு

உணர்வுகளைக் கட்டமைக்கும் 'உளவியல்' வீரச் சிறப்பிலிருந்து தொடங்கி, பாலைநில அச்சக் காட்சிகளைக் கடந்து, காதல் நம்பிக்கையில் முடியும் இப்பாடலின் கட்டமைப்பு ஓர் உயர்ந்த உணர்ச்சி வளர்ச்சியைப் புலப்படுத்துகிறது. இயற்கை, வீரம், காதல் மற்றும் மனப்போராட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் இக்கவிதை நடை, பூதந்தேவனாரின் கவித்துவ நயத்திற்குச் சான்றாகும்.

வளையத்திற்குள் தங்குவதை ஒரு வாழ்வியல் வீழ்ச்சியாகக் கருதுகிறார். தலைவன் பாலை நிலத்தின் 'அஞ்சுவரு நெறி' யைத் தேர்ந்தெடுப்பது, வெறும் பொருளுக்காக அல்ல; தன் ஆற்றலை நிரூபிக்கும் ஒரு 'அகப்போராட்டம்'.

பிரௌனிங்கின் நாயகர்கள் ஆபத்துகளை எதிர்கொள்ளும் போது அடையும் அதே மனக்கிளர்ச்சியை, பூதந்தேவனார் தலைவனின் 'நாணுடை மனத்தர்' என்ற சொல்லாட்சியில் பொதித்து வைக்கிறார். இங்கு 'நாண்' என்பது தோல்வி க்கோ வறுமைக்கோ அஞ்சுவது அல்ல; தன் கடமையைச் செய்யத் தவறிவிடுவோமோ என்ற அறச் சீற்றத்தைக் குறிக்கிறது.

பிரௌனிங்கின் கவிதைகளில் காதல் என்பது பாதுகா ப்பான அறையில் வளர்க்கப்படும் செடி அல்ல; அது போராட்டங்களுக்கு இடையே உறுதிப்படுத்தப்பட வேண்டிய ஒன்று. பூதந்தேவனாரும் இதையே செய்கிறார். பாலை நிலத்தின் பயங்கரத்தை அவர் நீட்டிப்பது தலைவியை அச்சுறுத்த அல்ல; அத்தகைய பயங்கரமான சூழலிலும் தலைவியின் நினைவு தலைவனை வழிநடத்தி வரும் என்பதைத் தோழியின் மூலம் உணர்த்தவே. அதாவது, 'புறத்தின் கடுமை அகத்தின் வலிமையை அளவிடும் உரைகல்' ஆகிறது.

ராபர்ட் பிரௌனிங் தனது 'நாடகப் பாங்கான தனி மொழிகள்' வழியாக ஒரு பாத்திரம் தன்னுள் நிகழ்த்தும் உரையாடல் அல்லது ஒரு மௌனமான கேட்பாளரிடம் பேசும் பேச்சின் மூலம் அந்தப் பாத்திரத்தின் சிக்கலான ஆழ்மனதை வெளிப்படுத்துவார். அகநானூறு 231-இல் பூதந்தேவனார் கையாண்டிருக்கும் 'தோழியின் கூற்று' என்பது ஒரு வகையில் இந்த நாடகத் தனிமொழியின் பண்பைக் கொண்டுள்ளது. இங்கே தோழி பேசுவது வெறும் சமாதானம் அல்ல; அது தலைவியின் அச்சத்தைப் போக்கி, தலைவனின் வீரத்தின் மீது ஒரு 'வீரயுக மதிப்பீட்டை' உருவாக்கும் ஓர் உளவியல் உத்தி. பிரௌனிங்கின் நாடகத் தனிமொழிகள் எப்படி ஒரு பாத்திரத்தின் மன அடுக்குகளைத் திறக்கின்றனவோ, அதேபோல் பூதந்தேவனாரின் இப்பாடல் கூற்று, பாலை நிலத்தின் அச்சத்தைப் போக்கி நம்பிக்கையை விதைக்கும் ஒரு நாடகப் பாங்கான உளவியல் உரையாடலாக அமைகிறது. பூதந்தேவனாரும் பிரௌனிங்கும் ஒரு புள்ளியில் சந்திக்கிறார்கள். 'வாழ்வு என்பது தேக்கமடைவ தல்ல; சவால்களைக் கடந்து தன்னைத் தகவமைத்துக் கொள்வதே மேன்மை.'

ஈழத்துப் பூதந்தேவனார் பாடிய குறுந்தொகை 343-வது பாடல், சங்க இலக்கியத்தின் 'குறிஞ்சித் திணை' மரபில் அமைந்தது. தலைவன் தன்னை மணந்து கொள்ளாமல் காலம் தாழ்த்துவதைக் கண்டு வருந்தும் தலைவி, தன் தோழியிடம் தன் ஆற்றாமையை வெளிப்படுத்தும் விதமாக இக்கவிதை கட்டமைக்கப்பட்டுள்ளது. சொற்களுக்குப் பின்னால் ஒளிரும் உக்கிரமான காட்சிப்படிமங்களே இப் பாடலின் உயிர்நாடியாகும். இப்பாடலின் மையப்பகுதி, மலைநாட்டின் வீரத்தையும் பயங்கரத்தையும் ஒருசேரக் காட்டும் விலங்குப் படிமங்களால் (Animal Imagery) அடுக்குமுறையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. மதங்கொண்ட யானையைத் தாக்கி வென்ற கொடிய புலியின் சித்திர த்தைப் புலவர் வரைகிறார். நிலத்தின் தன்மையை விளக்க புலவர் பயன்படுத்தும் குறியீடு ஆழமானது. யானையைத் தாக்கியதால் புலியின் நகங்களும், கொம்பும் (உகிர்) குருதியால் சிவந்து காணப்படுகின்றன. இது அந்த நிலத்தின் வீரத்தையும், அங்கு நிலவும் வாழ்வாதாரப் போராட்டத்தையும் குறியீடாக உணர்த்துகிறது. அத்துடன் காற்றால் உதிர்ந்து கிடக்கும் வேங்கை மலர்கள், அந்தச் செந்நிறக் குருதி படிந்த நிலத்திற்கு ஒரு வண்ணச் சேர்க் கையைத் தருகின்றன. இந்தக் காட்சிகள் வெறும் இயற்கை விவரிப்புகள் அல்ல; இத்தகைய வீரம் செறிந்த நிலத்தைச் சேர்ந்த தலைவன், ஏன் என் மென்மையான காதலை உணரவில்லை என்ற தலைவியின் 'உள்ளுறை' (Inherent Meaning) ஆதங்கத்தை இவை வெளிப்படுத்து கின்றன. இயற்கையின் உக்கிரத்தையும் வீர உணர்வையும் ஒன்றி ணைக்கும் திறனிலும் பூதந்தேவனார் தனித்துவம் பெறு கிறார். இப்பாடலில், புலி தாக்கிய யானையின் இரத்தத் தால் சிவந்த நகங்களை வேங்கை மலர்களோடு ஒப்பிடுவது தீவிரமான நிறப்படிமத்தை உருவாக்குகிறது. இயற்கையின் கொடூரமும் வீரத்தின் அழகும் ஒரே காட்சியில் புலப்படு கின்றன.

அதேபோன்று, அகநானூறு 231-ஆம் பாடலில் பாலை நிலத்தின் வெம்மையும் அச்சமூட்டும் சூழலும் சித்தரிக்கப் படுகின்றன. ஆனால் அந்த அச்சத்தின் மத்தியில் கூட தலைவனின் வீரத்தையும் காதலின் உறுதியையும் புலவர் வலியுறுத்துகிறார். 'வருவர் வாழி தோழி!' என்ற நம்பிக்கையூட்டும் முடிவு, காதலின் நிலைத்தன்மையை உணர்த்துகிறது.

தலைவன் தன்னை மணந்து கொள்ளாமல் காலம் தாழ்த்துவதைக் கண்டு வருந்தும் தலைவி, தன் தோழியிடம் தன் ஆற்றாமையை வெளிப்படுத்தும் விதமாக, சொற்களுக்குப் பின்னால் ஒளிரும் உக்கிரமான காட்சிப்படிமங்களே இப்பாடலின் உயிர்நாடியாகும். இப்பாடலின் மையப்பகுதி, மலைநாட்டின் வீரத்தையும் பயங்கரத் தையும் ஒருசேரக் காட்டும் விலங்குப் படிமங்களால் அடுக்குமுறையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

ஈழத்துப் பூதன்தேவனார் பாடிய குறுந்தொகை 360-வது பாடல் (குறிஞ்சித் திணை), சங்க காலத் தமிழ்ச் சமூகத்தின் வழிபாட்டு முறையையும், அக உணர்வின் உளவியல் சிக்கல்களையும் இணைத்துப் பேசும் ஒரு சிறந்த படைப்பாகும். தலைவியின் மெலிவிற்குக் காரணம் அறியாத செவிலித்தாய், அதனைத் தெய்வக் குற்றம் எனக் கருதி 'வெறியாடல்' சடங்கிற்கு ஏற்பாடு செய்கிறாள். இச்சூழலில், தலைவியின் உண்மையான காதல் துயரத்தைத் தோழி வெளிப்படுத்தும் விதமாக இக்கவிதை கட்டமைக்கப்பட்டுள்ளது. மானுட உளவியலைச் சமூகச் சூழலோடு பிணைப்பதில் பூதன்தேவனார் இக்கவிதையில் வெற்றி பெற்றுள்ளார். தாய் நிகழ்த்தும் 'வெறியாடல்' என்ற சமூகச் சடங்கிற்கும், தலைவியின் உள்ளத்தில் ஒலிக்கும் காதல் நினைவுகளுக்கும் இடையிலான முரண்பாடு இதில் நுட்பமாக வெளிப்படுகிறது. குறிப்பாக, சோலையில் எழும் எதிரொலி தலைவியின் அக உணர்வுகளின் குறியீடாக (Symbol) அமைகிறது. சடங்குகளால் தீர்க்க முடியாத அகத்தவிப்பினை இப்பாடல் மிக மென்மையாகப் பதிவு செய்கிறது.

ஈழத்துப் பூதந்தேவனார் பாடிய நற்றிணை 366-ஆம் பாடல், சங்க இலக்கியத்தின் 'வாடைப் பாசறை' அல்லது 'நெடுநல்வாடை' மரபின் சாரத்தை ஒரு சிறிய அகக்கவிதைக்குள் அடக்கிய உன்னதப் படைப்பாகும். இப்பாடல், போர்க்களம் அல்லது தொழில் நிமித்தம் பிரிந்து சென்ற தலைவன், வாடைக்காற்றின் குளிர்ச்சியில் தலைவியின் நினைவால் வாடி, அவளைப் பிரியும் காதலர்களை 'மடவர்' (அறிவற்றவர்) எனச் சாற்றும் விதமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. பாடலின் முதல் பகுதி தலைவியின் அழகையும், அவள் கூதிர் காலத்திற்காக (குளிர் காலம்) தன்னைத் தயார் செய்துகொண்டிருக்கும் விதத்தையும் மிக நுட்பமான படிமங்களால் சித்திரிக்கிறது.

'அரவுக் கிளர்ந்தன்ன... நுண் துகில்' என்ற வரி, பாம்பின் சட்டை போன்ற மெல்லிய ஆடையைத் தலைவி அணிந்திருப்பதைச் சுட்டுகிறது. அந்த மெல்லிய ஆடையின் ஊடாகத் தலைவியின் மேனி ஒளிர்வது, கார்மேகக் கூட்டங்களுக்கு இடையே மின்னல் மின்னுவதைப் போன்றதொரு ஒளிப் படிமத்தை (Light Imagery) உருவாக்குகிறது. மேலும், குளிர் காலத்தில் பூக்கும் முல்லை மலர்களை வண்டுகள் மொய்க்கும் வண்ணம் தலைவி தன் கூந்தலில் சூடியிருக்கிறாள். இது வாசனை மற்றும் வண்ணப் படிமங்களின் (Visual Imagery) ஒரு தொகுப்பாகக் கவிதையில் உயிரோட்டத்துடன் வெளிப்படுத்தப்படுகிறது.

பாடலின் இரண்டாம் பகுதி, குளிர் காலத்தின் தீவிரத்தை இயற்கையின் அசைவுகள் மூலம் விளக்குகிறது. இது கவிதைக்கு ஒரு புறவயமான சூழலைத் தருகிறது. அறிவு மிக்க தூக்கணாங்குருவி, மூங்கில் கிளையில் கட்டியிருக்கும் கூட்டை, வாடைக்காற்று அசைத்து மோதுவதாகக் கூறுவதும் கரும்பின் வேல் போன்ற மொட்டுகள் விரியுமாறு வாடைக்காற்று மோதுவதாகக் கூறுவதும் அக்காற்றின் வலிமையையும் வேகத்தையும் காட்டுகிறது. இது தலைவியின் மென்மையான மனநிலைக்கு நேர்மாறான ஒரு 'வன்முறை' மிகுந்த இயற்கைச் சூழலாகும். இப்பாடலில் கவிதையின் கட்டமைப்பு ஒரு பெரும் முரணால் பிணைக்கப்பட்டுள்ளது. ஒருபுறம் மென்மையான தலைவி, மெல்லிய ஆடை, மணக்கும் முல்லை மலர், மெத்தென்ற அணை மறுபுறம் வீசும் வடபுல வாடை, அசையும் குருவிக்கூடு, முட்டும் காற்று. இந்த இரண்டுக்கும் இடையே 'பிரிவு' என்ற ஒரு புள்ளியைப் புலவர் வைக்கிறார். இத்தகைய இன்பமான சூழலையும், கொடிய காற்றையும் உணர்ந்தும் தலைவியைப் பிரிந்து செல்வது எவ்வளவு கடினமானது என்பதை இது உணர்த்துகிறது.

கவிதையின் இறுதி வரிகள் ஒரு வலுவான கருத்துடன் முடிகின்றன. 'இவ்வுலகில் காதலியைப் பிரிந்து வாழ்பவர்கள் அறிவில்லாதவர்கள்' என்று தலைவன் கூறுகிறான். தன்னையும் உள்ளடக்கி அல்லது பொதுவாகப் பிரிந்து சென்ற ஆடவர்களை நோக்கிக் கூறப்படும் இக்கூற்று, தலைவியின் மீதான அவனது அடங்காத காதலையும், பிரிவின் பெருந்துயரையும் ஒருசேர வெளிப்படுத்துகிறது.

அகவற்பா அமைப்பில், தொடர்ச்சியான சொற்செலவுடன் இப்பாடல் அமைந்துள்ளது. குறிப்பாக, வடபுல வாடையின் வேகத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள், வாசிப்பவருக்கு ஒரு குளிர்ந்த காற்றை நேரில் உணரும் அனுபவத்தைத் தருகின்றன. தலைவியின் நுட்பமான எழில் - வாடைக்காற்றின் உக்கிரம் - பிரிந்துறைவோரின் அறியாமை என மூன்று அடுக்குகளாக இப்பாடல் கட்டமைக்கப்பட்டுள்ளது. இயற்கையை ஒரு

தலைவியின் மெலிவிற்குக் காரணம் அறியாத செவிலித்தாய், அதனைத் தெய்வக் குற்றம் எனக் கருதி 'வெறியாடல்' சடங்கிற்கு ஏற்பாடு செய்கிறாள். இச்சூழலில், தலைவியின் உண்மையான காதல் துயரத்தைத் தோழி வெளிப்படுத்தும் விதமாக இக்கவிதை கட்டமைக்கப்பட்டுள்ளது. மானுட உளவியலைச் சமூகச் சூழலோடு பிணைப்பதில் பூதன்தேவனார் கவிதையில் வெற்றி பெற்றுள்ளார்.

தூதுவனாகவும், சாட்சியாகவும் மாற்றித் தலைவனின் காதலை வெளிப்படுத்தும் பூதந்தேவனாரின் கலைத்திறன் இப்பாடலில் உச்சம் தொடுகிறது.

ஈழத்துப் பூதந்தேவனார், சங்க இலக்கியப் பரப்பில் ஈழத் தமிழரின் ஆதி இலக்கிய அடையாளமாகத் திகழ்கிறார். இவரது பாடல்கள் வெறும் அகத்துறைக் கோவைகளல்ல; அவை ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே நிலவிய தொன்மையான அறிவுசார் உறவின் வரலாற்று ஆவணங்கள்.

இயற்கையின் உக்கிரத்தையும் மனித மனதின் மென்மையையும் ஒரே புள்ளியில் சந்திக்க வைத்த இவரது கவித்துவக் கலை, சங்க இலக்கியத்தின் தரத்தை உலக ளாவிய செவ்வியல் தரத்திற்கு உயர்த்தி நிற்கிறது. ஈழத்தில் பிற்காலத்தில் தோன்றிய செழுமையான கவிதை மரபிற்குப் பூதந்தேவனாரே காலத்தால் அழியாத அஸ்திவாரத்தைப் போட்டுத் தந்துள்ளார். சுருங்கக் கூறின், ஈழத்துப் பூதந் தேவனார் தமிழ்ச் செம்மொழி வரலாற்றில் ஈழம் ஏற்றிய அணையா விளக்கு ஆவார்.'

பூதந்தேவனாரின் பாடல்களில் இயக்கவியல் படிமங்கள்:

பூதந்தேவனாரின் கவிதைகளில் 'இயக்கவியல் கற்பனை' (Dynamics) மிகத் தீவிரமாக வெளிப்படுகிறது. குறிப்பாக குறுந்தொகை 189-ஆம் பாடலில் தலைவன் தேரில் வரும் வேகத்தை 'குன்றிழி அருவி' மற்றும் 'விசும்பு வீழ் கொள்ளி' ஆகிய படிமங்களோடு ஒப்பிடுவது, சங்க இலக்கியத்தில் அரிதாகக் காணப்படும் உயிர்ப்புள்ள காட்சிப்படுத்தலாகும். இவ்விரு படிமங்களிலும் வேகம், ஒளி, ஒலி ஆகிய மூன்றும் ஒன்றிணைந்து, வாசகரின் மனதில் நிகழ்வு நேரடியாக நிகழ்வதைப்போன்ற அனுபவத்தை உருவாக்குகின்றன. இந்தக் காட்சிசார் உயிரோட்டமே பூதந்தேவனாரை ஒரு சிறந்த 'படிமக் கவிஞராக' உயர்த்துகிறது.

பூதந்தேவனார் கையாளும் இயக்கவியல் கற்பனையும் காட்சிப் படிமங்களும், நவீன மேலைத்தேயக் கவிதைக் கோட்பாடுகளோடும் வியப்பூட்டும் வகையில் ஒத்திசை வடைகின்றன. 'Dynamic Imagery' எனப்படும் இயக்கவியல் படிமம் என்பது, ஒரு காட்சியை நிலையான உருவமாக அல்லாது, உயிரோட்டமுள்ள நிகழ்வாக வாசகரின் மனக்கண்ணில் இயக்கிக் காட்டும் கலைநயமாகும். இதன் மூலம் கவிதை வெறும் சொற்களின் அமைப்பாக இல்லாமல், கண்முன் நிகழும் அனுபவமாக மாறுகிறது.

ஒரு படிமம் இயக்கவியல் தன்மையைப் பெற மூன்று முக்கிய கூறுகள் அவசியமாகின்றன: திசைவேகம், ஒளி-ஒலி உணர்வு, காலமாற்றம். அதாவது ஒரு பொருள் குறிப் பிட்ட திசையில் வேகமாக நகர்வதும், அதன் இயக்கத்தால் ஒளி அல்லது ஒலி உருவாகுவதும், ஒரு நிலைமை யிலிருந்து மற்றொரு நிலைக்கு அதிவேக மாற்றம் நிகழ்வதும் இயக்கவியல் படிமத்தின் அடிப்படைகளாகும்.

இந்த நோக்கில் குறுந்தொகை 189-ஆம் பாடலைப் பார்க்கும்போது, தலைவனின் தேர்ப்பயணத்தைப் புலவர் ஓர் அரிய இயக்கக் காட்சியாக வடிவமைத்திருக்கிறார். 'குன்றிழி அருவி' என்ற அடியில் மலையிலிருந்து வேகமாக விழும் அருவியின் தொடர்ச்சியான அசைவு உணர்த்தப் படுகிறது. இங்கு 'வீழ்தல்' என்பது நிலையான காட்சி அல்ல; இடையறாத இயக்கத்தைக் குறிக்கும் செயற் படிமமாக அமைகிறது. மேலும் அருவியின் பேரொலி வாசகரின் செவியிலும் எதிரொலிக்கிறது. ஆகவே இது ஒலிசார் இயக்கப் படிமமாகத் திகழ்கிறது.

அதேபோல் 'விசும்பு வீழ் கொள்ளி' என்ற அடியில் வானிலிருந்து பாய்ந்து விழும் எரிகல்லின் வேகமும் பிரகாசமும் ஒன்றாகச் சித்தரிக்கப்படுகின்றன. இங்கு ஒளியும் இயக்கமும் இணைந்து தீவிரமான காட்சியுணர்வை உருவாக்குகின்றன. எனவே இது ஒளிசார் இயக்கப் படிமமாகக் கருதத்தக்கது.

இவ்விரு படிமங்களையும் இணைத்துப் பார்க்கும்போது, தலைவனின் தேர் சாதாரணமான வருகையாக இல்லாமல், மின்னலின் வேகத்துடனும் அருவியின் பேரிரைச்சலுடனும் உயிர்ப்புடன் நகரும் ஆற்றல்மிக்க நிகழ்வாக மாறுகிறது. வாசகர் அந்தக் காட்சியை வெறுமனே கற்பனை செய்வ தில்லை; மாறாக, அது அவரின் மனக்கண்ணில் ஒரு காணொலிபோல் இயங்குகிறது. இதுவே பூதந்தேவனாரின் கவித்துவப் படிம ஆளுமையின் தனிச்சிறப்பாகும்.

இந்த இயக்கவியல் கற்பனையை உலக இலக்கிய மற்றும் கலை மரபுகளோடும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இத்தாலியில் தோன்றிய 'எதிர்காலவாதம்' (Futurism) என்ற கலை இயக்கம், 'வேகத்தை' (Speed) ஒரு புதிய அழகியலாகக் கொண்டாடியது.

இயற்கையின் உக்கிரத்தையும் மனித மனதின் மென்மையையும் ஒரே புள்ளியில் சந்திக்க வைத்த இவரது கவித்துவக் கலை, சங்க இலக்கியத்தின் தரத்தை உலக ளாவிய செவ்வியல் தரத்திற்கு உயர்த்தி நிற்கிறது. ஈழத்தில் பிற்காலத்தில் தோன்றிய செழுமையான கவிதை மரபிற்குப் பூதந்தேவனாரே காலத்தால் அழியாத அஸ்திவாரத்தைப் போட்டுத் தந்துள்ளார்.

பிலிப்போ டோமாசோ மரினெட்டி (Filippo Tommaso Marinetti) போன்ற கவிஞர்கள், இயந்திரங்களின் வேகத்தை கர்ஜிக்கும் சிங்கங்களோடு ஒப்பிட்டு அதன் இயக்க ஆற்றலைப் புகழ்ந்தனர். ஆனால், இதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பூதந்தேவனார், தலைவனின் தேரின் வேகத்தை 'விசும்பு வீழ் கொள்ளி' என்ற படிமத்தின் மூலம் எரிகல் விழுவதோடு ஒப்பிட்டுள்ளார். வானிலிருந்து பாய்ந்து விழும் எரிகல் என்பது ஒளியையும் வேகத்தையும் ஒரே தருணத்தில் உணர்த்தும் மாபெரும் இயக்கவியல் படிமமாகும். இதன் வழி, சங்க காலத் தமிழர்கள் 'வேகத்தின் அழகியலை' (Aesthetics of Speed) நுணுக்கமாக உணர்ந்திருந்தனர் என்பதைக் காணமுடிகிறது.

அதேபோல், பெர்சி பைஷ் ஷெல்லி (P.B. Shelley) தனது Ode to the West Wind கவிதையில் இயற்கையின் சீற்றத்தையும் இயக்க ஆற்றலையும் தீவிரமான படிமங்களின் வழி வெளிப் படுத்துகிறார். மேகங்கள் சிதறி ஓடுவதும், அலைகள் பொங்கி எழுவதும் போன்ற காட்சிகளில் வெளிப்படும் அந்த ஆற்றல் உணர்வு, பூதந்தேவனார் தேரின் வேகத்தை விவரிக்கப் பயன்படுத்தும் உக்கிரமான இயக்கப் படிமங்களோடு ஒத்திசைவடைகிறது. இதனால், பூதந்தேவனாரின் கவித்துவம் சங்க இலக்கியத்தின் எல்லைகளைத் தாண்டி, உலகக் கவிதைகளின் இயக்கவியல் அழகியலோடும் உரையாடும் உயரத்தை அடைகிறது.

படிமவாதக் கவிஞரான H.D. (Hilda Doolittle) தனது Oread கவிதையில், கடலலைகள் மரங்களைப் போல எழுந்து வருவதைச் சித்தரிக்கிறார். இதுவும் ஒரு வகை இயக்கவியல் படிமமாகும். வாசகர் ஒரு காட்சியைத் தூரத்திலிருந்து பார்ப்பதில்லை; மாறாக, அந்த நிகழ்வின் நடுவே இருப்பதைப் போன்ற அனுபவத்தை இப்படிமம் உருவாக்குகிறது. இதன் மூலம் கவிதைக்கு தனித்துவமான ஆற்றலும் வேகமும் கிடைக்கின்றன.

அதேபோல் அகநானூறு 231-இல் பாலை நிலத்தின் வெப்பம் 'பரவுவது' போலச் சித்தரிக்கப்படும்போது, அது தலைவியின் உள்ளார்ந்த பதற்றத்தை வாசகருக்கும் உணர்த்துகிறது. சுருக்கமாகச் சொன்னால், இயக்கவியல் படிமம் என்பது கவிதையை ஒரு புகைப்படமாக அல்ல, ஒரு திரைப்படமாக மாற்றும் கலைநயமாகும்.

படிமவாதிகள் ஒரு கருத்தை விளக்குவதைவிட, ஒரு கணத்தில் ஒரு சிக்கலான உணர்வையோ காட்சியையோ வாசகரின் மனக்கண்ணில் உயிர்ப்புடன் நிறுத்த விரும்பினர். இதனை எஸ்ரா பவுண்ட் தனது புகழ்பெற்ற In a Station of the Metro கவிதையில் மிகத் துல்லியமாக வெளிப் படுத்துகிறார். கூட்ட நெரிசலுக்கிடையே மின்னும் முகங்களை, ஈரமான மரக்கிளையில் ஒட்டியிருக்கும் இதழ்களோடு அவர் ஒப்பிடுகிறார்.

அதுபோலவே, பூதந்தேவனார் தேரின் வேகத்தை வெறும் 'வேகம்' என்று கூறாமல், ஒளி (கொள்ளி), ஒலி (அருவி), இயக்கம் (வீழ்தல்) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த படிமமாக வடிவமைக்கிறார். இது எலியட் அல்லது பவுண்ட் வலியுறுத்திய 'துல்லியமான படிமக் கலைக்கு' மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக அமைகிறது.

பூதந்தேவனாரின் கவிதைகள் வெறும் சங்ககால வாழ்க் கைப் பதிவுகளாக அல்லாது, இயக்கம், வேகம், ஒலி, ஒளி ஆகியவற்றை ஒருங்கிணைத்து உயிர்ப்புள்ள காட்சிகளை உருவாக்கும் உயர்ந்த படிமக் கலையாகத் திகழ்கின்றன. அவரது 'இயக்கவியல் படிமங்கள்' வாசகரின் மனத்தில் ஒரு நிகழ்வை நேரடியாக அனுபவிக்கச் செய்கின்றன. இதனால், அவரது கவித்துவம் சங்க இலக்கியத்தின் வரம்புகளைத் தாண்டி, நவீன படிமவாதம், எதிர்காலவாதம் மற்றும் உலகக் கவிதைகளின் இயக்க அழகியலோடும் உரையாடும் தன்மையைப் பெறுகிறது. இவ்வகையில், பூதந்தேவனார் தமிழ்ச் சங்க இலக்கியத்தின் முன்னோடி 'படிமக் கவிஞர்களில்' ஒருவராகக் கருதத்தக்கவர்.

ஈழத்துப் பூதந்தேவனாரின் கவித்துவ ஆளுமை, 'காட்சி - உணர்வு - மொழி' என்ற மூன்று கூறுகளின் செம்மையான ஒருமைப்பாட்டில் அமைகிறது. தேவையற்ற அடைமொழி களின்றி, காட்சிகளை உயிரோட்டத்துடன் வாசகர் முன் நிறுத்துவதிலேயே அவரது கவிதைகளின் முக்கிய பலம் அமைந்துள்ளது. மேலும், மனித மனத்தின் அரூபமான உணர்வுகளுக்கு இயற்கையின் உருவமுள்ள படிமங்களை ஒப்புமையாகப் பயன்படுத்தும் திறன் அவரிடம் சிறப்பாகக் காணப்படுகிறது.

அதுமட்டுமல்லாது, மனித உணர்வுகளும் இயற்கைச் சூழலும் ஒன்றுக்கொன்று பிரதிபலிக்கும் அமைப்பை அவர் உருவாக்குகிறார். இதன் மூலம் பாத்திரங்களின் மனநிலை கள் வாசகருக்கு துல்லியமாகப் புலப்படுகின்றன. ஒளி, ஒலி, இயக்கம், நிறம் ஆகியவற்றின் வழி உணர்வுகளை உயிர்ப் புள்ள காட்சிகளாக மாற்றும் திறனே அவரது கவிதைகளின் தனிச்சிறப்பாகும்.

முடிவுரை:

ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ச் செம்மொழி வரலாற்றில் ஈழம் ஏற்றிய அணையா விளக்காகத் திகழ்கிறார். சங்க மரபின் செழுமையையும் நவீன படிமக் கவிதையின் கூறுக ளையும் ஒருங்கிணைக்கும் கவிஞராக அவர் விளங்குகிறார். இயற்கை, உளவியல், காதல், வீரம், சமூகச் சடங்கு ஆகியவற்றை ஆழமான காட்சிப் படிமங்களின் வழி வெளிப் படுத்தியதால், அவர் சங்க இலக்கியத்தின் மிக முக்கியமான படிமக் கவிஞர்களில் ஒருவராக உயர்கிறார்.

பிற்கால ஈழத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கான அடித் தளத்தை அமைத்த முன்னோடி கவிஞராகவும் அவர் மதிக்கப்படுகிறார். எனவே, ஈழத்துப் பூதந்தேவனாரின் கவித்துவ ஆளுமை காலங்களைக் கடந்தும் தமிழ் இலக்கிய ஆய்வு லகில் நிலைத்த பெருமையாகத் தொடரும்.

ramesh.s@thaiveedu.com

tg.theeban@gmail.com

மாயோகி கோவிந்தசாமியும் மகாகவி பாரதியாரும்

■ கிருங்கை சேதுபதி

இன்னார் இனியார் என்று பார்க்காமல், தன் மனதில் பட்டதைப் பொட்டில் அடித்தாற்போல் எதையும் பட்டென்று சொல்லிவிடுகிற வழக்கம் குவளைக்கண்ணனுக்கு உண்டு. பொதுநாகரிகம் கருதி, தயங்கித் தயங்கிப் பேசுவதும், முகத்தாட்சண்யம் காரணமாகப் பேச வேண்டியதைக்கூடப் பேசாமல் இருப்பதும், பேச நேர்ந்தாலும் நேரடியாகச் சொல்லாமல் சுற்றிவளைத்துச் சூசகமாகப் பேசுவதும், குவளைக் கண்ணனைச் சீடராய்க் கொண்ட பாரதிக்கும் ஆகாது. குருவையும் சீடரையும் நேர் வரிசையில் நிறுத்தி வைக்கும் இப்பண்பில், குருவையும் மிஞ்சிய சீடராக, குருவிடமே முகத்தில் அடித்தாற்போல் பேசிவிடும் குணம் குவளைக்கண்ணனுக்கு இருப்பதைத் தொடர்ந்து பார்த்து வருகிறோம். அந்த வரிசையில், நாம் காணவேண்டிய அடர்த்தி மிகுந்த வரலாற்றுச் சொல்லாடலாக அமைவது, 'கோவிந்தஸ்வாமி பாரதியாருடைய காலில் முதலில் வீழ்ந்தாலும் பிறகு பாரதியாரைத் தம்முடைய காலில் வீழச்செய்தார்.'

சாதாரணமாக நிகழ்ந்த அசாதாரணமான நிகழ்வு இது. இந்த மாற்றத்திற்கும், கோவிந்தசாமியின் மகிமையை, பாரதி உணர்ந்து கொண்டாடுவதற்கும் அதன்வழி அவர் பெற்ற ஏற்றத்திற்கும், முழுக் காரணர் குவளைக்கண்ணன்தான். அது எப்படிச் சாத்தியமானது? குவளைக்கண்ணனே கூறுகிறார்.

•

‘எனக்குப் பரதேசிகளென்றால் பைத்தியம் அதிகம். எவ்வ ளவோ துறவிகளை என்னுடைய இளமை தொடங்கிப் பார்த்து அவர்களோடு பழகியிருக்கிறேன். அவர்களுக்குள் கோவிந் தஸ்வாமியும் ஒருவர். நான் அவரோடு ஸம்பாஷிக்கும் காலங் களில் பாரதியாரைப் பற்றிப் பேசுவேன். ‘அவர் சக்திவெறி பிடித்தவர்’ என்பதைச் சொன்னேன். ‘அப்படிப்பட்டவரைப் பார்க்க வேண்டும்’ என்று அவர் சொன்னார்.

‘மாலை வேளைகளில் இந்த இடத்துக்கு அவர் வருவார். அப் போது பார்க்கலாம்’ என்று நான் சொல்லியிருந்தேன்.’

•

அது எந்த இடம்?

மகாகவி பாரதியாருக்குப் பிடித்த இடம். பாரதியின் பாடலால் பிரசித்தி பெற்ற ‘பிழைத்த தென்னந்தோப்பு’ இருக்கும் இடம். அதுவும் பாரதியாரின் பாடல்பெற்ற தலமான கருவடிக்குப்பம் சித்தானந்த சுவாமியின் கோயிலுக்கு அருகில் உள்ள இடம். அந்த இடத்தில்தான், பாரதியார் - கோவிந்தசாமி சந்திப்பு நிகழ்கிறது. சந்திப்புக்குப் பின்னர் நிகழ்ந்த அதிசயத்தைக் குவளைக்கண்ணன் கூறுகிறார்.

‘பாரதியார் சித்தானந்தசாமி கோயிலுக்கு அருகிலுள்ள தனி யான இடத்தில் உலாவுவார். ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு தம்முடைய மனோரதத்தை ஓட்டிக் கொண்டிருப்பார். இப்படி இருந்தபோதுதான் கோவிந்தஸ்வாமி அவரைக் கண்டு அவரே பாரதியாரென்று கண்டுகொண்டு அவருடைய பாதத்தில் விழுந்தார். பாரதியாருடைய விழியிலுள்ள ஒளியிலே அந்தச் சாமியார் சக்திவெறியைக் கண்டிருக்கவேண்டும். இல்லாவிட் டால் அப்படிப் பணிவதற்கு நியாயமில்லை.’

•

குவளைக் கண்ணனுக்குத் தோழமை தந்த குரு பாரதியின் பாதங்களில் கோவிந்தசாமி வீழ்ந்ததனால், பாரதி உயர்ந் தவர், கோவிந்தசாமி அவரினும் குறைந்தவர் என்று எண்ணி விட முடியாது. அவரது ஆற்றலை, அப்போது குவளைக்கண் ணன் அறிந்த அளவிற்கு, பாரதி அறிந்திருக்கவில்லை.

அதுமட்டுமல்ல, புறத்தோற்றத்தில் அவர் அஞ்சத்தக்க யானைக்கால் வியாதி உடையவராகவும் இருந்திருக்கிறார். நோயச்சம் பாரதிக்கு மிக உண்டு. பரவவிடாமல், பாதுகாத் துக் கொள்ளும் விரதங்களை அவர் கடைப்பிடிப்பதைவிட வும், குடும்பத்தாரைக் கடைப்பிடிக்க வைப்பதில் தீவிரம் கொண்டவர். இது தொடர்பான செய்திகளை, ஆக்கூர் அனந் தாச்சாரி எழுதிய ‘கவிச்சக்கரவர்த்தி சுப்ரமண்ய பாரதி சரித் திரம்’ (பதிப்பாசிரியர் - கிருங்கை சேதுபதி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு, 2024) நூலில் காணலாம். பாரதிதான், ‘நோய்க்கு இடம் கொடேல்’ என்ற ஔவையாரின் ஆத்திசூடித் தாக்கத்தால், ‘நோற்பது கைவிடேல்’ என்று ‘புதிய ஆத்திசூடி’ பாடியவராயிற்றே.

நோயுற்றவராக இருந்தாலும், பின்னர் அவர் மகிமை தெரிந்து தான் நோற்கும் தவ வாழ்வினைக் கைவிடாமல் கோவிந்த சாமியையும் தன் குருவாக ஏற்றுக் கொண்டு ஒழுகியவர் என் பதற்கு இந்த ஆத்திசூடி வரிகளே சான்றுகளாவதும் அழகு. அதுமட்டுமன்றி, அவர் எழுதிய ‘ஆனைக்கால் உதை’ கதைக் கும் கூட, மூலகாரணராக, கோவிந்தசாமி இருப்பாரோ என்கிற ஐயமும் எனக்கு உண்டு.

வேடிக்கையாகப் புனைந்த அக்கதைக்குள் பல்வேறு விளக் கச் செய்திகளை உள்ளடக்கி இருப்பார் பாரதி. தன்னை ஒரு சிறுவனாய் பாவித்து, தன்னொத்தவர்களுக்கு நீதி போதிக் கும் கதை. அதையும் பார்க்கலாம்.

•

பாரதி எழுதிய ‘ஆனைக்கால் உதை’ வேடிக்கைக் கதை.

‘ஓர் ஊரில் ஆனைக்கால் வியாதி கொண்ட ஒருவன் பழக் கடை வைத்திருந்தான். அந்தத் தெருவின் வழியாகச் சில பிள்ளைகள் அடிக்கடி போவது உண்டு. போகும்போதெல் லாம் அவர்களுக்கு அந்தப் பழங்களில் சிலவற்றை எடுத்துக் கொண்டு போக வேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. கிட் டப் போனால் ஆனைக்கால்காரன் தனது பிரம்மாண்டமான காலைக் காட்டி, ‘பயல்களே, கூடையில் கை வைத்தால் உதைப்பேன் ஜாக்கிரதை!’ என்பான்.

‘சாதாரணக் காலால் அடித்தால்கூட எவ்வளவோ நோகிறதே, இந்த ஆனைக் காலால் அடிபட்டால் நாம் செத்தே போவோம்’ என்று பயந்து பிள்ளைகள் ஓடிவிடுவார்கள்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் கடைக்காரன் பராக்காக இருக் கும் சமயம் பார்த்து, ஒரு பையன் மெல்லப்போய்க் கூடையி லிருந்து ஒரு பழத்தைக் கையிலெடுத்தான். இதற்குள் கடைக் காரன் திரும்பிப் பார்த்து, தனது பெரிய காலைச் சிரமத்துடன் தூக்கிப் பையனை ஓர் அடி அடித்தான். பஞ்சுத் தலையணை யால் அடித்ததுபோலே அடி மெத்தென்று விழுந்தது. பையன் கலகல வென்று சிரித்துத் தெரு முனையிலே இருந்த தனது நண்பர்களைக் கூவி ‘அடே, எல்லோரும் வாருங்களடா! வெறும் சதை; எலும்பில்லை’ என்றான் மனிதர்களெல்லாரும் பல விஷயங்களில் குழந்தைகளைப் போலவே காணப்படு கிறார்கள். ‘வெறும் சதை’யாக இருக்கும் கஷ்டங்களைத் தூரத்திலிருந்து ‘எலும்புள்ள’ கஷ்டங்களாக நினைத்துப் பிறர் அவதிப்படுவதை நாம் பார்த்ததில்லையா? நாம் அங்ஙனம் அவதிப்பட்டதில்லையா?’

•

கதையில் பழக்கடை வைத்திருந்த முதலாளியிடம் ‘ஆனைக் கால் உதை’ வாங்கிய சிறுவன், எதார்த்தத்தில், ஞானமாகிய கனி தரும் குருநாதராக, யானைக்கால் வியாதி உடைய கோவிந்த சாமியைக் கண்டு அவர் கழல் பணிந்த சீடராகி யிருக்கிறார். தொடக்கத்தில் அந்நோய் காரணமாக அச்சம் கொண்டு அவரை விலகினாலும், அதுகுறித்துக் குவளைக்

கண்ணனிடம் கோபித்துக் கொண்டாலும், பின்னர் அவர்தம் ஞானத்தால் ஈர்க்கப்பெற்று பலகாலம் அவருடன் பாரதி பழகி வந்திருக்கிறார் என்பது குவளைக்கண்ணனின் கூற்றால் விளங் கிக் கொள்ள முடிகிறது.

மாங்கொட்டை போல முகத் தோற்றமும் உயரத்தில் குள்ள மாகவும் விளங்கிய காரணத்தால், 'குள்ளச்சாமி, மாங்கொட் டைச் சாமி' என்று காரணப் பெயர்கள் பெற்றிருந்தாலும், அவரது சித்தாடல்களை நன்கு உணர்ந்து கொண்டபின், அவரையே குருவாகக் கொண்டு பின்தொடர்ந்து உபதேசம் பெற்றுத் தன்னையும் சித்தராக உயர்த்திக் கொண்ட பாரதிக் குக் கோவிந்த சாமியின் யோக ஆற்றலைக் காணும் வாய்ப்பு, தொடக்கத்தில் கிட்டவில்லை. அவ்வாறான நிலையில் குவ ளைக்கண்ணனும் அவருக்குக் கோவிந்த சாமியை அறிமுகம் செய்து வைக்கவில்லை. மாறாக, பாரதியின் பெருமையைக் கோவிந்தசாமிக்கு எடுத்துக் கூறிய அளவிற்கு, குவளைக் கண்ணனுக்கே, அந்தச் சித்தரின் அருளாற்றலை உணர்ந்து கொள்கிற வாய்ப்பு இல்லை என்பது பின்வரும் அவர்தம் கூற்றில் இருந்தே தெரிய வருகிறது.

•

'கோவிந்தஸ்வாமி சாமான்யமானவரல்லர். அவர் பரமஸாது. அவர் முகத்திலே எப்போதும் புன்னகை தவழும். அவர் கால் மாத்திரம் வீங்கியிருக்கும். மந்திர சக்திகூட இருந்ததென்று எனக்குத் தோன்றியது.'

கோவிந்தசாமி, மந்திர சக்தி உடையவர் என்று எந்தப் பின்பு லத்தில் குவளைக்கண்ணன் தெரிந்துகொண்டார் என்பது தெரியவில்லை. ஆனால், அந்த அனுபவங்களைத் தனது குருநாதரான பாரதியிடம் பலபட எடுத்து மொழிந்திருக்கிறார். அதன் காரணமாக, கோவிந்தசாமியுடன் பாரதி பழகவும் செய் திருக்கிறார். அதுகுறித்து, குவளைக்கண்ணனிடம் வினவிப் பெரிதாக விளக்கம் பெற யாரும் முயலவில்லை. ஒருவேளை முயற்சி செய்திருந்தால், குள்ளச்சாமி போல் இவர் புரிந்தி ருக்கும் சித்தாடல்கள் கவனத்திற்கு வந்திருக்கும்.

நல்லவேளையாக, பாரதி தன் வாழ்வில் நிகழ்ந்த ஓர் அற்பு தத்தைத் தன் பாடலில் குறித்து வைத்திருக்கிறார். அதற்கு மெய் விளக்கமாகக் குவளைக்கண்ணன் கூறியிருப்பதும் ஈங்குக் கருதத்தக்கது.

'முதலில் பாரதியார் அந்தச் சாமியாரை வெறுத்தாலும் என்னு டைய வார்த்தைகளாலும் நாளடைவில் அவரோடு பழகிய தாலும் அவர் பெருமை பாரதியாருக்குத் தெரிய வந்தது. சாமியார், பாரதியார் வீட்டிற்குச் சிலமுறை வந்தார்.'

•

அப்படி வந்த ஒரு சந்தர்ப்பத்தில்தான் அந்த அற்புத அதி சயம் அரங்கேறியிருக்கிறது.

'ஒரு சமயம் பாரதியாரைப் பார்த்து, 'உங்கள் தகப்பனாரின் முகம் ஞாபகம் இருக்கிறதா?' என்று கேட்டார். அவர், 'ஏதோ ஒருவிதமாக இருக்கிறது; தெளிவாக இல்லை' என்றார்.

'இப்போது கண்டால் அடையாளம் தெரிந்துகொள்ள முடி யுமா?' என்று கேட்டார் சாமியார்.

பாரதியார் சிரித்தார். 'இப்பொழுதாவது, காண்பதாவது!' என்றார்.

'உண்மையாகச் சொல்கிறேன்; இதோ பாருங்கள், உங்கள் தந்தையாரை' என்று சாமியார் கூறினார்.

ஆச்சரியம்! பாரதியார் கண்களுக்கு அவர் தந்தையாரின் திருமுகம் தோற்றியது. 'மெஸ்மெரிஸமோ', 'ஹிப்னாடிஸமோ' ஏதோ பழகிக் கை வந்தவர் அவரென்பதைப் பாரதியார் கண்டு கொண்டார். 'என்னுடைய தந்தையைத் தரிசித்தேன். தாயைப் பார்க்க வேண்டுமே' என்றார் அவர்.

'அப்படியே பார்க்கலாமே; உங்கள் தாயை நினைத்துக் கொள்ளுங்கள்.' அடுத்த கணம் பாரதியார் தம் தாயின் திரு முக மண்டலத்தைப் பார்த்தார். உடனே அது மறைந்துவிட்டது. அப்பால் கோவிந்தஸ்வாமியை அவர் புகழ்வதற்கு என்ன தடை? அவர் கூறுவதைக் கேளுங்கள்'

என்று கூறி, அவரே பாரதியின் பாடலையும் எடுத்துக்காட்டு கிறார்.

'பொன்னடியால் என்மனையைப் புனிதம் ஆக்கப் போந்தான் இம் முனி; ஒருநாள் இறந்த எந்தை தன்னுருவம் காட்டினான்; பின்னர் என்னைத் தரணிமிசைப் பெற்றவளின் வடிவம் உற்றான்; அன்னவன்மா யோகிஎன்றும் பிரமஞானத்(து) அனுபூதி யுடையன்என்றும் அறிந்து கொண்டேன்; மன்னவனைக் குருஎனநான் சரண் அடைந்தேன்; மரணபயம் நீங்கினேன்; வலிமை பெற்றேன்.'

•

குவளைக்கண்ணன் இந்தப் பாடலை முன்னிறுத்தி, அன்று நிகழ்ந்த அற்புதத்தை மட்டும் பாரதியின் பாடலில் சரி பாதிக்கு உரை விளக்கம் தந்தாரே ஒழியப் பின்பாதியைக் கண்டுகொள்ளவில்லை. ஹிப்னாடிசமோ, மெஸ்மரிசமோ கற்றவர் என்கிற அளவிலேயே, கோவிந்தசாமியை மதிப்பிட்டி ருக்கிறார். ஆனால், பாரதி உணர்ந்த மகிமையை அவரால் உணர்ந்து கொள்ள முடியவில்லைபோலும். காரணம் இந்த அற்புத நிகழ்வுக்குப் பிறகு, பாரதிக்கும் கோவிந்தசாமிக்கும் இடையில் நடந்த சம்பாஷணையைக் குவளைக்கண்ணன் காணவோ, கேட்கவோ வாய்ப்பில்லாது போயிருக்கலாம். ஆனால், பாரதி, கோவிந்தசாமியைச் சிக்கெனப் பற்றிக் கொண்டுவிட்டார். அதற்கு இந்த நிகழ்வே அடித்தளம் என் பதை, மேற்சுட்டிய பாடலில் சொல்லியும் காட்டிவிட்டார்.

அவர் உணர்ந்து கொண்ட உண்மைகள் இரண்டு. ஒன்று, அவர் மாயோகி என்பது. மற்றொன்று அவர் பிரமஞானத்து அனுபூதி உடையவர் என்பது. பிரமஞானத்தை அனுபவித்து அதன் பலன் கைவரப்பெற்றமையால் அவர் பெருமைக்கு உரிய யோகியாக விளங்குகிறார் என்பதைக் கண்டுணர்ந்த பின்னர். அவரையும் குருவாக ஏற்று, 'சரண்' அடைந்துவிடுகிறார். அதனால் பாரதிக்கு மரணபயம் நீங்கிற்று; வலிமை பெற்ற வராகியிருக்கிறார்.

இது நிகழ்ந்தது, பாரதியின் இல்லத்தில். அப்போது, செல்லம் மாவோ, பாரதியின் புதல்வியோ, குவளைக்கண்ணன் போன்ற நண்பர்களோ வீட்டில் இல்லையா அல்லது பாரதி எழுதப் புகும் அவ்வீட்டு மெத்தை (மாடியினை, மெத்தை என்றழைப் பது புதுச்சேரியினர் வழக்கம். எனவே, மாடி) யில் தனித்துச் சந்தித்தாரா என்பது தெரியவில்லை. அந்தப் பொழுது, பகலா, இரவா, மாலையா, காலையா என்று பாரதி, குவளையார் இரு வராலும் சுட்டப்பெறவில்லை இது தொடர்பாக வேறு அகச் சான்று ஏதும் கிட்டவில்லை.

இது முதல் முறை. இதற்கு அடுத்துச் சிலமுறையேனும் இவர் கள் சந்தித்து உரையாடியிருக்க வேண்டும். அவற்றை முழு மையாகப் பதிவு செய்ய அவகாசமோ, அவசியமோ பாரதிக்கு நேர்ந்திருக்கவில்லை. ஆனால், தன்னைச் சித்தராகப் பாவித் துக்கொண்டு எழுதப் புகுந்த பாரதி அறுபத்தாறில், அதற்கு அடித்தளமிட்டு வளர்வித்த சித்தர்களைப் பேசுமிடத்து, தன் இல்லத்திற்கு மீளவும் ஒரு பகலில் கோவிந்தசாமி வந்ததாகக் குறிப்பிடுகிறார்.

அறிமுகப்பாடலில், இவரை, 'மன்னவன்' என்ற பாரதி, 'வீர ஞானி' என்றும், 'பூமியினை ஆளவந்தவன்' என்றும், 'அவனி வேந்தர் அனைவருக்கும் மேலானோன்' என்றும், 'அன்பு வேந்தன்' என்றும் பெருமிதம் பொங்கப் பாராட்டுகிறார். அவர் வரவு கண்டு தான் பெற்ற மகிழ்வை,

'நாளைப் பார்த்து ஒளிர்தரு நன் மலர்போலே நம் பிரான் வரவு கண்டு மனம் மலர்ந்தேன்' என்று உவமை மூலம் உணர்த்திக் காட்டுகிறார். இது அவர்தம் ஆன்ம பரிபக்குவநி லையினைக் காட்டுகிறது. பாரதியின் ஞானத் தேடல் அரும்பிய நிலையில், ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந் தர் குருநாதர்களாகச் சுடர்கிறார்கள். நேருற வந்து ஞானம் போதித்தவராக, அருட்சகோதரி நிவேதிதாதேவி திகழ்கிறார். இவர்களை அடுத்து, குள்ளச்சாமியை அணுகிப் பெற்ற அனுபவம், அவரை யோகத்தில் ஆழ்த்திவிடுகிறது. பின்னர் தேடிவந்து தாள் வணங்கித் தன் தாய் தந்தையர் வடிவு காட்டிய கோவிந்தசாமி, பாரதியை ஆளும் மன்னவன் ஆகி றார். அவரையும் குருவாக வரித்துச் சரணாகதி அடைகிறார். மொட்டென வளர்ந்து நின்ற பக்குவம் மலரத் தொடங்கிவிடு கிறது. ஞானக் கதிரவனாய்க் கோவிந்தசாமி தானே வந்து முன்நிற்கிறார்.

அந்த வேளையில், உடனடியாகச் செய்து முடிக்கவேண்டிய அவசரக் கடமைகள் பாரதிக்கு இருக்கத்தான் செய்திருக் கின்றன. அடுத்த வேளை உலைக்கு உதவும் பத்திரிகைக் கான பங்களிப்புக்கு உரிய படைப்புப் பணியோ, பிறவோ இருந்திருக்கலாம். அவை எவையோ, அவற்றை அப்படியே ஒதுக்கிவிட்டு, 'தானே வந்து தனையாட்கொண்ட ஞான குருவை மகிழ்வுடன் எதிர்கொள்கிறார்.

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும் அல்லவா? இது உழவுத் தொழில் வழி வந்த பழமொழி. பதரைக் காற் றின் துணையால் சிதற அடித்துவிட்டு, நெல்மணிகளைத் தன் வசம் சேர்க்கும் செயல் அது. இது வெளிப்படைப் பொருள். அதுபோல், இந்த உடலில், உயிராகிய மூச்சுக் காற்று உள்ளபோதே, அதன் வலியடங்குமுன் உடலைக் கட்டவும், உயிரைக் கட்டவும் பயன் கொள்ள வேண்டும் உள்பொருள். இப்பழமொழியை முன்னிறுத்தி மேலும் சில புதுமொழிகளை அவர் பின் மொழிகிறார். பின்னர், தன் வேண்டுகோளைக் குருமுன் வைக்கிறார். இப்படியான அந்த நேரத்துத் தன் மன வோட்டத்தை அப்படியே பாரதி பதிவு செய்கிறார்.

'மீளவும் அங்கு ஒருபகலில் வந்தான் என்றன்
மனைஇடத்தே கோவிந்த வீர ஞானி,
ஆளவந்தான் பூமியினை, அவனி வேந்தர்
அனைவருக்கும் மேலானோன், அன்பு வேந்தன்
நாளைப்பார்த்து ஒளிர்தருநன் மலரைப்போலே
நம்பிரான் வரவுகண்டு மனம் மலர்ந்தேன்;
வேளையிலே நமதுதொழில் முடித்துக் கொள்வோம்,
வெயிலுள்ள போதினிலே உலர்த்திக் கொள்வோம்.

காற்றுள்ள போதேநாம் தூற்றிக் கொள்வோம்;
கனமான குருவைஎதிர் கண்டபோதே
மாற்றான அகந்தையினைத் துடைத்துக் கொள்வோம்;
மலமான மறதியினை மடித்துக் கொள்வோம்;
கூற்றான அரக்கர் உயிர் முடித்துக் கொள்வோம்;
குலைவான மாயைதனை அடித்துக் கொள்வோம்;
பேற்றாலே குருவந்தான்; இவன்பால் ஞானப்
பேற்றையெல்லாம் பெறுவோம்யாம்' என்றென் உள்ளே,
சிந்தித்து 'மெய்ப்பொருளை உணர்த்தாய் ஐயே!
தேய்வென்ற மரணத்தைத் தேய்க்கும் வண்ணம்
வந்தித்து நினைக்கேட்டேன் கூறாய்'என்றேன்.

பா.அ. 57 - 58

அதற்கு ஞான சூரியனாகிய கோவிந்தசாமி யாது கூறினார் என்பதைக் கொண்டே, பாரதி மரணபயம் நீங்கி வலிமை பெற்ற பாங்கினை அறியலாகும்.

sethupathi@thaiveedu.com

கம்பனின் கருவூலம் திறந்து...

– மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

50

> ***இதுவரை, கற்பனையிலும், உருவெளித் தோற்றத்திலும், கனவிலும் கண்ட சீதையின் உருவத்தை, இப்போது கண்முன்னே கண்டான் என்பதைக் கண்ணினின் நோக்கினான் என்று இரு சொற்களுக்குள்ளேயே சொற்செறிவுடன் கம்பர் அடக்கியுள்ள சிறப்பைக் காண்கிறோம்.***

இந்த இதழில், கம்பராமாயணம், ஆரணிய காண்டம், சடாயு உயிர் நீத்த படலத்தில் நிகழ்வனவற்றைத் தேர்ந்தெடுக் கப்பட்ட கம்பரின் கவிதைகளோடு சுவைத்து மகிழ்வோம். மாயமான் வடிவில் வந்த மாரீசன் இராமனின் அம்புக்கு இலக் காகி வீழ்ந்தபோது இராமனைப்போல உரத்த குரலில் சீதையை யும் இலக்குமணனையும் அழைத்ததனால் தனக்கு ஏதோ இன்னல் விளைந்திருக்குமோ என்று எண்ணி அவர்கள் என்ன செய்வார்களோ என்று பதறியபடி இராமன் விரைந்து திரும்பு கிறான்.

மறுபக்கம் மாரீசனது கூக்குரலைக் கேட்ட சீதை இராமனுக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டுவிட்டதென்று நினைத்துப் பெருந் துயரடைந்து வருந்துகின்றாள். கூக்குரலைச் செவிமடுத்தும் இலக்குமணன் தன் அண்ணனைக் காப்பாற்றச் செல்லாமல் இருக்கிறானே என்று அவள் சினமடைகின்றாள்.

குற்றம் வீந்த குணத்திலெங் கோமகன்
மற்றை வாளரக் கன்புரி மாயையால்
இற்று வீழ்ந்தன னென்னவு மென்னயல்
நிற்றியோ விளையோ யொருநீ யென்றாள்

கம்ப. ஆரணிய. 815

குற்றம் வீந்த குணத்தில் எம் கோமகன் - குற்றமில்லாத குணங்களையுடைய எம் தலைவன், மற்றை வாள் அரக்கன் புரி மாயையால் - பகைவனாக வந்த கொடிய இராக்கதன் செய்த மாயையால், இற்று வீழ்ந்தனன் என்னவும் - ஆபத்துக் குள்ளாகி வீழ்ந்தான் என்பதை அவனது கூக்குரலால் அறிந்த பின்னும் அவனுக்கு உதவிசெய்யச் செல்லாமல், இளையோய் ஒரு நீ - இராமனின் தம்பியாக அவனோடு ஒற்றுமையுடைய நீ, என் அயல் நிற்றியோ என்றாள் - எனது அருகிலேயே நிற்கலாமோ என்று சீதை சொல்வதாகச் செய்யுள் பொருள் தருகிறது.

'இளையோய் ஒரு நீ' என்னும் கம்பரின் சொற்றொடருக்கு, இராமன் உடனிருந்த காலத்திலெல்லாம் அவனோடு ஒற்றுமை கொண்டவனான நீ, அவனுக்கு ஆபத்து நேர்ந்தபோது அதனை அறிந்து தடுத்திருக்க வேண்டிய நீ, தனியே நின்று பகைவெல்லும் ஆற்றலுடையவனான நீ, என்பதாகப் பல கருத்துகள் பொதிந்துள்ளதாக உரையாசிரியர் வை.மு.கோ கூறுகின்றார். இப்படிப்பட்டவனான நீ, இராமனது கூக்குர லைக் கேட்டவுடனேயே அவன் சென்ற இடத்துக்குப்போய், அவனுக்கு நேர்ந்த ஆபத்தைக் களைவதல்லவா தகுதியான செயல். அதனைச் செய்யாது கணவனில்லாது தனியே தவித் துக்கொண்டிருக்கின்ற எனதருகே நின்றுகொண்டிருக்கின்றாய். உன் அண்ணன் உனது துணைவேண்டிக் கூப்பிடவும், நீ அங்கே செல்லாமல் என்னருகே ஏன் நிற்கின்றாய். வெளியிலே அண்ணனுக்கு வேண்டியவனைப்போலக் காட்டி, உள்ளுக் குள்ளே பகைமை கொண்டு அயோத்தியிலிருந்து தொடர்ந்து வந்ததெல்லாம் இதற்குத்தானா? என் தலைவனுக்கு ஆபத்து நேரும்போது என்னைக் கவர்ந்து கொள்ளலாம் என்று நினைத்துத்தானோ அயோத்தியில் உன் மனைவியை விட்டு விட்டுத் தனியாக எம்மைத் தொடர்ந்து வந்தாய்? உன்னை ஒருபோதும் நான் மதியேன். என் கண்முன்னே நில்லாதே! போ! என்று சீதை இலக்குமணனை இகழ்ந்து பேசுவதாக வான்மீகத்திலே விரித்துக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இத்த கைய ஆழமான விடயங்களையெல்லாம் 'இளையோய் நீ இற்று வீழ்ந்தனன் என்னவும் என்னயல் நிற்றியோ' என்னும் சிறு தொடரில் கம்பர் அடக்கி வைத்துள்ளார். இவ்வாறான சிறப்புகளினாலேதான் கம்பரின் செய்யுள்களைக் கம்ப சூத் திரம் என்பார்கள்.

ஒப்பற்ற வலிமையுடைய இராமனுக்கு எத்துன்பமும் நேராது. அவன் எல்லாம் வல்லவனான திருமால் என்பதனை அறியா மல் ஒரு மனிதன் என்று எண்ணி மயங்க வேண்டாம். வஞ் சனையுடன் வந்த அரக்கன் இராமனது அம்பு பட்டு இறந் தபோது எழுப்பிய வஞ்சகக் குரலே என்காதில் பட்டது. அண் ணனுக்கு இன்னல் எதுவும் நேராது, என்று கூறிச் சீதையை

tg.theeban@gmail.com

அமைதியாக இருக்குமாறு இலக்குமணன் அவளுக்கு ஆறு தல் கூறுகின்றான்.

இலக்குமணன் சொன்னவற்றைக்கேட்டுச் சீதை ஆறுதலடை யாது மேலும் சினமடைகின்றாள். இராமனைக் காப்பாற்றச் செல்லாது நீ இங்கேயிருப்பது முறையன்று. எனக்கு வேறு வழியில்லை. நான் நெருப்பில் வீழ்ந்து இறப்பேன் என்று துணி கின்றாள்,

துஞ்சுவ தென்னைநீர் சொற்ற சொல்லையான்
அஞ்சுவென் மறுக்கிலெ னவலந் தீர்ந்தினி
இஞ்சிரு மடியனே னேகு கின்றனென்
வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ

கம்ப. ஆரணிய. 826

துஞ்சுவது என்னை - நீர் இறக்க வேண்டுவதென்ன? நீர் சொற்ற சொல்லை யான் அஞ்சுவென் - நீர் சொன்ன சொல் லுக்கு நான் அஞ்சுவேன். மறுக்கிலென் - உமது கட்டளையை நான் மறுக்கமாட்டேன். அவலம் தீர்ந்து இனி இஞ்சு இரும் - துன்பத்தைப் போக்கி நீர் இவ்விடத்தே இருப்பீர், அடியனேன் ஏகுகின்றனென் - அடியேன் செல்கின்றேன். வெஞ்சின விதி யினை வெல்ல வல்லமோ - கடும் சினமுடைய ஊழ்வினையை நாம் வெல்ல வல்லமை உடையோமோ? என்று இலக்கு மணன் நெருப்பில் விழச்சென்ற சீதையைத் தடுத்து நிறுத்து கின்றான்.

'நீர் சொல்லியபடி நான் செல்வதானால் உமக்கு ஆபத்து நேருமென்று அஞ்சினேனே அல்லாது உமது கட்டளையை மீறக்கருதியன்று. விதியை வெல்ல வல்லவர் யார்?' என்று கூறியபடி இலக்குமணன் விடைபெறுகின்றான். 'ஊழிற் பெருந் தக்க யாவுள மற்றொன்று சூழினும் தான்முந் துறும்' என்னும் திருவள்ளுவர் வாய்மொழியைக் கம்பர் இங்கே வழிமொழிந் திருக்கின்றார். தான் செல்லாது இங்கே இருந்தால் சீதை நெருப்பிடை விழுவாள்; இவளைவிட்டுச் சென்றுவிட்டால் இவளுக்கு ஆபத்து நேரக்கூடுமே என்றவாறெல்லாம் எண்ணி இருதலைக் கொள்ளியிடைப்பட்ட எறும்புபோல இலக்கு மணன் சிந்தை நொந்தான். தான் போகாதிருந்து அவள் நெருப்பிடை வீழ்ந்து இறக்கவேண்டாம். நான் விலகிச் செல்வ தால் வரக்கூடிய பெருந்துயரை அறம் காப்பதாக என்று மன துக்குள் வேண்டிக்கொண்டு, 'நான் போகின்றேன். தங்களுக் குத் தீமையேதும் ஏற்படாமல் சடாயு காப்பான்' என்று சீதை யிடம் தெரிவித்துவிட்டு இலக்குமணன் அங்கிருந்து செல் கிறான்.

இலக்குமணன் சென்றபின்னே இராவணன் தான் நினைத் ததை நிறைவேற்ற ஒரு முனிவன் வேடங்கொண்டு அவ்விடம் வருவதைக் கம்பர் நான்கு செய்யுள்களிலே தருகின்றார்.

பூப்பொதி யவிழ்ந்தன நடையன் பூதலந்
தீப்பொதிந் தாமென மிதிக்குஞ் செய்கையன்
காப்பரு நடுக்குறு காலன் கையினன்
மூப்பெனும் பருவமு முனிய முற்றினான்

கம்ப. ஆரணிய. 833

பூப்பொதி அவிழ்ந்து அன நடையன் - பூவிலே இதழ்கள் மெல்ல மெல்ல விரிவதைப்போன்ற மெத்தென்ற நடையை உடையவனும், பூதலந் தீப்பொதிந்து ஆம் என மிதிக்குஞ் செய்கையன் - நிலத்திலே நெருப்புச் சிதறியிருந்தால் அவ் விடத்திலே தனது கால்கள் பதியாதபடி பார்த்துப் பார்த்து அடி யெடுத்து வைப்பவர்களைப்போல நடப்பவனுமாக, காப்பரு நடுக்குறு காலன் கையினன் - தடுக்கமுடியாது நடுங்குகின்ற கால்களையும், கைகளையும் கொண்டவனாக, மூப்பெனும் பருவமும் முனிய முற்றினான் - வெறுக்கும் படியான முதுமை யென்னும் பருவத்தோடு இராவணன் அவ்விடம் வருகின்றான் என்பது செய்யுளின் பொருள்.

அழகான உவமை நயம் இச்செய்யுளிலே காணப்படுகிறது. அரும்பு பூவாக மலரும் வேளையில் இதழ்கள் ஒவ்வொன் றாக இடம் பெயர்ந்தாற்போல அவன் நடை இருந்தது என் றும், நெருப்புப் பொறிகள் சிதறிக் கிடக்கின்ற நிலத்திலே அவற்றின் மேல் கால்கள் படாது பார்த்துப் பார்த்து அடி யெடுத்து வைத்து நடப்பது போலவும் அவனது நடைக்குப் புதுமையான உவமை கூறியிருப்பது கம்பரின் கவித்திறனா கும். தரையில் ஊர்கின்ற எறும்பு போன்ற சிற்றுயிர்கள் காலில் பட்டு இறக்கக்கூடாது என்பதாலும், தரையிலுள்ள கழிவுகள் ஏதும் காலில் படக்கூடாது என்பதாலும் அறவோ ராகிய அந்தணர்கள் இவ்வாறு நடப்பார்கள் என்று கூறப்படு கின்றது. தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணையியல் வரைவுரையில் 'பார்ப்பாராயின் குந்தி மிதித்துக் குறுநடை கொண்டு வந்து தோன்றலும்' என்று சாதித்தன்மை குறித்துக் கூறப்படுவதையும் இதனோடு ஒப்பு நோக்கலாம்.

இவ்வாறாக, இராவணன் அவ்விடம் ஒரு முனிவனின் வேடத் தில் வருகின்ற காட்சியை நான்கு செய்யுள்களிலே கம்பர் அழ காக வருணித்திருப்பதைக் காணலாம். முற்றிய முதுமைத் தோற்றத்துடன் சீதையிருக்கும் பர்ணசாலை வாயிலுக்கு

வந்த இராவணன், 'இங்கே யாருள்ளார்?' என்று முதுமையால் நாக்கு உழறச் சொல் தடுமாறக் கேட்பதைப்போலக் கேட்கிறான். குரல்கேட்ட சீதை வெளியே வந்து முதுமையடைந்த முனிவன் வேடத்திலிருக்கும் இராவணனைப் பார்க்கிகிறாள். சூர்ப்பணகை வாயிலாகக் கேட்ட மங்கையை இராவணன் அப்போது நேரில் காண்கிறான்.

வெற்பிடை மதமென வியர்க்கும் மேனியன்
அற்பின்நற் றிரைபுர ளாசை வேலையன்
பொற்பினுக் கணியினைப் புகழின் சேக்கையைக்
கற்பினுக் கரசியைக் கண்ணி னோக்கினான்

கம்ப. ஆரணிய. 837

வெற்பிடை மதமென வியர்க்கும் மேனியன் - யானையிலிருந்து மதநீர் பெருகுவதைப்போல வேர்வை பெருகும் உடம்பை உடையவனும், அற்பின் நல் திரைபுரள் ஆசை வேலையன் - அன்பாகிய பெரிய அலைகள் புரளுகின்ற ஆசை என்னும் கடலில் ஆழ்ந்தவனுமாகிய இராவணன், பொற்பினுக்கு அணியினை - அழகுக்கே அழகு சேர்க்கும் அணிகலனாக இருப்பவளை, புகழின் சேக்கையை - புகழுக்கு இருப்பிடமாக இருப்பவளை, கற்பினுக்கு அரசியை - கற்புக்கு அரசியாக இருப்பவளுமாகிய சீதையை, கண்ணின் நோக்கினான் - எதிரிலே தனது கண்களால் பார்த்தான் என்பது செய்யுளின் பொருள்.

இந்தச் செய்யுளிலே ஒரு நிகழ்வைக் காட்சிப்படுத்தும் கம்பர், இராவணனை இரண்டு அடிகளாலும், சீதையை இரண்டு அடிகளாலும் அடைமொழி கொடுத்து வேறுபடுத்திக் காட்டியிருக்கும் சிறப்பைக் காணலாம். முன்னிரண்டு அடிகளிலும் சீதை மீதான இராவணனது பெரு விருப்பின் மேலீட்டைக் காட்சிப்படுத்தியவர் பின்னிரண்டு அடிகளில் சீதையின் அழகையும் பண்பையும் காட்சிப்படுத்துகிறார். அவளது அழகுக்கு மிஞ்சியதோர் அழகு இல்லை என்பதைச் சொல்லப்பொற்பினுக்கு அணி என்றார். தனது கற்பினைக் காக்கும் பண்பினால் பிறந்த இடத்துக்கும், புகுந்த இடத்துக்கும் புகழைச் சேர்த்ததால் புகழின் சேக்கை, கற்பினுக்கு அரசி என்னும் சொற்றொடர்களை வைத்தார். இதுவரை, கற்பனையிலும், உருவெளித்தோற்றத்திலும், கனவிலும்கண்ட சீதையின் உருவத்தை, இப்போது கண்முன்னே கண்டான் என்பதைக் கண்ணினின் நோக்கினான் என்று இரு சொற்களுக்குள்ளேயே சொற்செறிவுடன் கம்பர் அடக்கியுள்ள சிறப்பைக் காண்கிறோம். சீதையைக் கண்ட மாத்திரத்திலேயே ஏற்பட்ட வேட்கை நோயினால் இராவணன் பட்ட வேதனையைக் கம்பர் பலவாறு வருணிக்கின்றார். சீதையினுடைய அழகைப் பார்ப்பதற்குத் தனது இருபது கண்களும் போதாதே. இமைமூடாத ஆயிரம் கண்கள் தன்னிடம் இல்லையே என்று வருந்துகின்றான். சிவபிரானிடம் வரத்தினால் பெற்ற மூன்றரைக்கோடி வாழ்நாள் போதாதே என்று வருந்துகிறான். தனது ஆட்சியையும், அதிகாரங்களையும், அத்துணை செல்வங்களையும் இவளுக்குக் கொடுத்துவிட்டு இவளுக்கு அடிமையாவதே தான் பெற்ற பேறு என்று எண்ணுகிறான்.

அவ்வேளை, துறவி வேடம் கொண்டிருந்த இராவணனை வரவேற்று அவள் கொடுத்த இருக்கையில் இராவணன் அமர்கின்றான். அமர்ந்தவன், 'இப்பர்ணசாலைக்கு உரியவர் யார், நீ யார் மகள்?' என்றெல்லாம் கேட்டு உரையாடுகின்றான். 'நீர் எங்கிருந்து வருகின்றீர்' எனச் சீதை கேட்டதற்கு, அவள் மனதை ஈர்க்கக் கருதி, இராவணனது சிறப்பைப் பிறர் கூறுவது போலப் பலவாறாக விரித்துக் கூறி, 'இலங்கையிலிருந்து வருகின்றேன்' என்கிறான். இராவணனின் வாயிலாகவே அவனது சிறப்புகளைக் கூறும் பல செய்யுள்களில் ஒன்று:

வெம்மைதீ ரொழுக்கினன் விரிந்த கேள்வியன்
செம்மையோன் மன்மதன் திகைக்கும் செவ்வியன்
எம்மையோ ரனைவரு மிறைவ ரென்றெணும்
மும்மையோர் பெருமையும் முற்றும் பெற்றியான்

கம்ப. ஆரணிய. 859

வெம்மை தீர் ஒழுக்கினன் - கொடுமை எதுவுமற்ற நல்லொழுக்கமுடையவன், விரிந்த கேள்வியன் - பரந்த, ஆழமான நூலறிவுடையவன், செம்மையோன் - நடுவுநிலைமை காப்பவன், மன்மதன் திகைக்கும் செவ்வியன் - மன்மதன் கூடக் கண்டு மதி தடுமாறும்படியான அழகுடையவன், எம்மையோர் அனைவரும் இறைவர் என்றெண்ணும் - எவ்வுலகத்தவரும் தமது தலைவர் என்று எண்ணுகின்ற, மும்மையோர் பெருமையும் முற்றும் பெற்றியான் - மும்மூர்த்திகளினுடைய மகிமை முழுவதும் நிறைந்த தன்மை உடையவன் இராவணன் என்பது இச்செய்யுளின் பொருள்.

இவ்வாறு பலவாறான சிறப்புகளைக் கொண்ட இராவணன் ஆட்சி புரியும் இலங்கையிலிருந்து வருகின்றேன் என்று அவன் கூற, 'நீர் அரக்கர்களது நாட்டில் வாழ்வது ஏன்? தீயவர்

களைச் சேர்ந்தவர்களும் தீயவர்களே. இனி இராமனால் அரக்கர் குலம் அழிய உலகம் இன்புறும்.' என்கிறாள் அவள். 'இச்சிறு மனிதர்கள் அரக்கர் குலத்தை அழிக்க வல்லவரோ?' என அவன்கேட்க, 'விராதன், கரன் முதலியோரை இராமன் கொன்றதை நீர் அறியவில்லையா? இராமனால் அரக்கர் குலம் முழுவதும் அழிந்து படும்.' என்று சீதை சொல்லக் கேட்ட இராவணன் பெரும் சீற்றமடைகின்றான்.

மேருவைப் பறிக்க வேண்டின் விண்ணினை யிடிக்க வேண்டின்
நீரினைக் கலக்க வேண்டின் நெருப்பினை யவிக்க வேண்டின்
பாரினை யெடுக்க வேண்டிற் பலவினை சிலசொல் லேழாய்.
யாரெனக் கருதிச் சொன்னா யிராவணர்க் கரிதென் னென்றான்

கம்ப. ஆரணிய. 873

சிலசொல் லேழாய் - மனதில் தோன்றியவாறு சிறுமையான சொற்களைக் கூறுகின்ற பேதமை உடைய பெண்ணே! மேரு வைப் பறிக்க வேண்டின் - மேரு மலையைப் பறித்தெடுக்க விரும்பினாலும், விண்ணினை யிடிக்க வேண்டின் - அண் டத்தின் மேல் முகட்டை இடிக்க வேண்டுமானாலும், நீரினைக் கலக்க வேண்டின் - பூவுலகைச் சுற்றியுள்ள கடலினைக் கலக்க விரும்பினாலும், நெருப்பினை அவிக்க வேண்டின் - ஊழித்தீயை அணைக்க வேண்டுமானாலும், பாரினை எடுக்க வேண்டின் - பூமி முழுவதையும் ஒன்றாகத் தூக்கி எடுக்க வேண்டுமானாலும் பலவினை இராவணர்க்கு அரிதுஎன் - இவ்வாறான செயல்களெல்லாம் இராவணர்க்கு மிக எளிதா னது. அவனால் செய்ய முடியாதது என்ன இருக்கிறது? யாரெ னக் கருதிச் சொன்னாய் என்றான் - அப்படியிருக்க அவனை யாரென்று நினைத்து எளிமைப்படக் கூறினாய் என்று வெகுண்டான்.

திடீரெனத் தோன்றிய பெருஞ் சீற்றத்தால் அவனது செயற் கையான மாய வடிவம் மாறத் தனது இயற்கையான உரு வத்தை அடைகின்றான். அதனைக் கண்ட சீதை அஞ்சி நடுங் குகின்றாள். 'என்னுடைய வல்லமையை உணராமல் என்னை நிந்தித்த நீ பெண் என்றதாலும், நான் உன்னிடத்து மிக்க காதல் கொண்டதாலும் உயிர்பிழைத்தாய். நான் உன்னை எனது தலை மீது வைத்துக் கொண்டாடும்படி எனக்கு உரிய வளாவாய்' என்று இராவணன் கூறக் கேட்ட சீதை மிகுந்த நடுக்கமுற்றுக் கைகளால் தனது காதுகளைப் பொத்திய படியே அவனைப் பலவாறு நிந்தித்து, 'என் கணவன் இராம னின் அம்பு பட்டு இறப்பதற்கு முன்னே ஓடி ஒளித்துக்கொள்.' என்று அதட்டுகிறாள். தனது எண்ணத்துக்குச் சீதை உடன்பட மாட்டாள் என்று அறிந்த இராவணன் அவளைத் தரையுடனே பெயர்த்தெடுக்கிறான்.

ஆண்டா யிடைதீ யவனா யிழையைத்
தீண்டா லெனுமே லுரைசிந் தைசெயாத்
தூண்டா னெனலா முயர்தோள் வலியாற்
கீண்டா னிலமோ சனைகீழ்ப் புடையே

கம்ப. ஆரணிய. 885

ஆண்டு ஆயிடை தீயவன் - அப்பொழுது அவ்விடத்தில், தீயவனான இராவணன், ஆயிழையைத் தீண்டால் எனும் மேல் உரை சிந்தை செயா - எந்தப் பெண்ணையும் அவளின் உடன்பாடில்லாது தொடக்கூடாது என்று தனக்கு உள்ள சாபத்தை நினைத்து, தூண்தான் எனலாம் உயர் தோள்வலி யால் - தூண்களே என்று சொல்லத்தக்கதான தனது உயர்ந்த தோள்களின் வலிமையால், கீண்டான் நிலம் யோசனை கீழப் புடையே - சீதை இருந்த இடத்தைச் சுற்றி ஒரு யோசனை தூரமுள்ள நிலத்தைப் பெயர்த்து எடுக்கின்றான்.

இராவணன் முன்னர் குபேரனின் மகனான நளகூபரனின் காமக் கிழத்தியான அரம்பையைக் கண்டு காமுற்று அவளை வன்புணர்வு செய்ததனால், அவன் எப்பெண்ணையும் அப் பெண்ணின் உடன்பாடின்றி வலியத் தீண்டினால் தலை வெடித்து இறக்கக் கடவன் என்ற சாபத்தைப் பெற்றான் என் பது புராணத்திலுள்ள செய்தியாகும். அதனால் சீதையைத் தொட்டுத் தூக்காமல் தரையோடு பெயர்த்து எடுத்து தேரில் வைத்துக்கொண்டு வான்வெளியாகச் செல்கிறான்.

அப்போது சீதை பித்துப் பிடித்தவளைப் போலக் கண்ணில் படும் மரங்கள், விலங்குகள், சுனைகள் எல்லாவற்றையும் அழைத்து என்நிலையை என்கணவருக்குத் தெரிவியுங்கள் என்று அலற இராவணன் இராமனை இழிவாகக் கூறி அவ ளைக் கேலி செய்கிறான். அப்போது அவள் இராவணனை நோக்கி 'நீ வல்லவனானால் தேரைச் செலுத்தாதே! நில்!' என்கிறாள்.

வாக்கினா லன்னான் சொல்ல மாயையால் வஞ்ச மானொன்று
ஆக்கினாய் ஆக்கி யுன்னை யாருயி ருண்ணும் கூற்றைப்
போக்கினாய் புகுந்து கொண்டு போகின்றாய் பொருது நின்னைக்
காக்குமா காண்டி யாயிற் கடவலுன் றேரை யென்றாள்

கம்ப. ஆரணிய. 894

வாக்கினால் அன்னான் சொல்ல - இராவணன் அவ்வாறு இழி மொழிகளைக் கூறச் சீதை அவனை நோக்கி, மாயையால் வஞ்ச மானொன்று ஆக்கினாய் - நீ மாயையினால் ஒரு பொய் யான மானை உண்டாக்கினாய், ஆக்கி உன்னை ஆருயிர் உண்ணும் கூற்றை போக்கினாய் - அதனைக் கொண்டு உனது அருமையான உயிரைக் கவர்ந்து ஒழிக்கும் கூற்றுவன் போலும் இராமனை இவ்விடத்தை விட்டுப் போகச் செய்தாய், புகுந்து கொண்டு போகின்றாய் - இராமன் இங்கு இல்லாத வேளையில் கள்வனைப் போல இங்கு வந்து என்னைக் கவர்ந்து கொண்டு செல்கின்றாய், பொருது நின்னைக் காக் குமா காண்டியாயிற் கடவல் உன் தேரை என்றாள் - அவ ரோடு போரிட்டு உன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் வல்லமை உள்ளவனானால் உனது தேரைச் செலுத்தாதே! நில் என்று அவள் அவனை அதட்டுகிறாள். மனிதரோடு பொருதுதல் இழிவல்லவா என்று இராவணன் கூறியபடி தேரைச் செலுத்து கிறான். அடுத்து என்ன திருப்பங்கள் ஏற்படப் போகின்றன என்பவற்றை கம்பரின் கவிச்சுவையோடு அறிந்து அனுப விக்க அடுத்த இதழ்வரை காத்திருப்போம்.

(வளரும்...)

shanmugarajah@thaiveedu.com

தமிழ்வலை - 128

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

பெயர்:

முகவரி:

தொலைபேசி எண்:

மின்னஞ்சல்வரி:



தமிழ்வலை-128 வினா

இடமிருந்து வலம்

1 மா-பலா-வாழை
4 கம்பு
5 நூதனசாலை
6 உலா
7 பணம்
11 இலங்கையில் ஒரு மாநகரம்
12 அம்பு
14 மய்யோர்
16 கூரையில் குறுக்குமரம் பொறுக்கும் கப்பு
17 (பறவை) பழத்தைக் கொத்தி உண்

மேலிருந்து கீழ்

1 முன்னாள் தமிழக முதல்வர்
2 ஒரு வாயளவு உணவு
3 அரிகலம்
6 எம்.ஆர். ராதாவின் பட்டம்
8 களவு
9 குதிரையில் அமர்வோரின் இருக்கை
10 இளம்பெண்
13 ஒரு கண்டம்
14 ஒருவகைக் குரங்கு
15 வெறிக்காத கள்

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
thamilvalai@thaiveedu.com
தொலைநகல்: **416 849 0594**

Thaiveedu
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

தமிழ்வலை-127-க்கான விடைகள்



தமிழ்வலை-127 பெறுபேறுகள்

முன்னணிப் போட்டியாளர்

பி. அக்கிதா, ரொறன்ரோ.
த.செ. நடராசா, ரொறன்ரோ.
உமா கதிர், ஏஜக்ஸ்.

பரிசுபெறும் போட்டியாளர்

தமிழ்வலை 127-க்கான சரியான விடை கிடைக்கப் பெறாததால், 128-ஆவது தமிழ்வலைக்கான பரிசு இரட்டிப்பாகிறது.

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிவுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

முலையறுகாதை!

பெண் துயரப் பெருங்கதை

16

மா.சித்திவினாயகம்

அலையின் கொடுஞ் சீற்றம் அந்த மரப்பலகையைத் தூக்கித் தூக்கி எறிந்தது. அந்த கொடிய அலைகளின் சீற்றத்திலும் கணேசனின் கைகள் தன் காதலி செம்பகத்தின் கையை இறுக்கமாகப் பிடித்திருந்தன. கங்காணியின் சூழ்ச்சிகளும், சொந்த இனத்தின் துரோகங்களும், வெள்ளைய, பார்ப்பனிய வெறியும் அவர்களை கப்பலில் இருந்து இந்த நடுக் கடலில் குதிக்கப் பண்ணியிருந்தன.

அவனுடைய உடல் குளிர்ந்து நடுங்கியது. மூளைக்குச் செல்லும் சுவாசக் காற்று குறையத் தொடங்கியது. மெல்ல மெல்ல அவனுடைய கண்கள் மூடின. இருள் சூழ்ந்தது.

ஆனால், அடுத்த நொடி ஒரு விசித்திரமான மாற்றம் அவனுள் நிகழ்ந்தது.

அவன் கண்கள் திறக்கவில்லை. ஆனால், அவனால் எல்லாவற்றையும் பார்க்க முடிந்தது. அவன் உடல் மரப்பலகையில் கிடந்தாலும் அவன் வானத்தில் வெகு லேசாக மிதந்து கொண்டிருந்தான். கீழே, கடலின் நீலப் பரப்பில் செம்பகத்தின் உடலும், அவனுடைய சொந்த உடலும் அலைகளால் அலைக்கழிக்கப்படுவதை அவன் கண்டான்.

பூமி பிரபஞ்ச வெளியில் உருண்டையாய் சுற்றிக் கொண்டிருந்தது.

‘நான் இறந்துவிட்டேனா ?’

அவனது சிந்தனை ஒளியை விட வேகமாக இருந்தது.

அவன் உடல் ஓர் ஒளிக்கீற்றாக மாறியிருந்தது. மனிதர்கள் காலம் காலமாகச் சொல்லும் ‘மரணத்திற்குப் பின் ஆன்மா உடலை விட்டுப் பிரிதல்’ என்ற ஆன்மீகக் கதை இப்போது அவனுக்கு முற்றிலும் அறிவியல் பூர்வமாக விளங்கத் தொடங்கியது. நான் இறந்து போய்விட்டேனா ? என அவன் தன்னைத்தானே மீண்டும் கேட்டுக் கொண்டான்.

உண்மையைச் சொன்னால், மனிதர்கள் இந்தப் பூமியில் ஒரு 'வாடகைக்குத் தங்கியிருக்கும் அகதி' தான். பிறக்கும்போது தாய் வயிற்றிலிருந்து வெளியேற்றப்பட்டு,

tg.theeban@gmail.com

பூமியில் தஞ்சம் புகுகிறான். இங்கே கொஞ்ச நாள் 'விசா'க் கிடைக்கிறது. அதன் பின் நான் என்று ஆடிய உடலை அழித்துவிட்டு ஆன்மாவாகி இல்லாதொழிகின்றான்.

நான் என்பது யார் ? உடலா ? ஆன்மாவா ? ரமணர் கேட்ட கேள்வி. இற்றைவரை விடையறியாக் கேள்வி ஆன்மாவாகி நிற்கும் கணேசனால் இப்போ அதை அறிய முடிகிறது.

நாம் மற்றவர்களை நம்மிடமிருந்து வேறானவர்களாகப் பார்க்கிறோம் ஆனால் உண்மையில் இருப்பது ஒரே ஒரு ஆன்மா தான். மற்றவர்களுக்குச் செய்யும் உதவி நம்முடைய ஆன்மாவிற்கே நாம் செய்யும் உதவியென்று நாம் என்றும் எண்ணுபவர்களல்ல...

நாம் எதை உலகிற்குத் தருகிறோமோ, அதுவே பல மடங்காக நம்மிடம் திரும்ப வருமென்பதையோ அன்பு காட்டினால் அன்பு கிடைக்கும்; உதவி செய்தால் உதவி கிடைக்கும். கோபமெனில் கோபமே கிடைக்கும்...

நான் கொடுக்கிறேன்' என்ற அகந்தையை நீக்கிவிட்டு, எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி பிறருக்கு உதவுவதே உண்மையான புண்ணியம் என்பதை வானில் ஆன்மாவாகப் போனபின்புதான் கணேசனாலும் புரிய முடிந்தது. தீதும் நன்றும் பிறர் தர வாரா என்பதை நாம் எத்தனை பேர் அறிவார்த்தமாகப் புரிந்து வைத்துள்ளோம்.

மனித உடல் என்பது வெறும் அணுக்களின் தொகுப்பு மட்டுமே. அந்த அணுக்களை இயக்கும் ஆற்றல் ஒருபோதும் அழிவதில்லை. வெப்ப இயக்கவியலின் முதல் விதி அவனுக்கு நினைவுக்கு வந்தது: 'இவ்வுலகில் ஆற்றலை உருவாக்கவோ அழிக்கவோ முடியாது, அதை ஒரு வடிவத் திலிருந்து மற்றொரு வடிவத்திற்கு மாற்ற மட்டுமே முடியும்.'

அவனுடைய உடலின் மின் வேதி ஆற்றல் இப்போது பிர பஞ்சத்தின் அலைவரிசையோடு கலந்திருந்தது.

வானத்தில் மிதந்தபடி அவன் தன் உடலையே உற்று நோக்கினான்.

மூளை முற்றிலும் செயலிழக்கும் முன் நடக்கும் இறுதி வித்தையை அவன் உணர்ந்தான்.

அறிவியல் பூர்வமாக, மனித மூளை சாகும்போது 'எண்டோர் பின்கள்' மற்றும் டிஎம்ரி போன்ற இரசாயனங்களை அதிக அளவில் சுரக்கிறது. இது மனிதருக்கு ஒரு மாயத்தோற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றது. தான் உடலை விட்டு வெளியேறி மிதப்பது போன்ற உணர்வு இதனால்தான் ஏற்படுகிறது என்பதை அவன் வாசித்திருக்கவில்லை. ஆனால் அவன் தன் நண்பன் குமார் என்றோ உண்மையைப் போல் சொன்ன கதையை நினைத்துக் கொண்டான். ஒரு நாள் உடலை விட்டுப் போன ஆன்மாவாகி என்னைப் போல் நீயும் உன்னைப் பார்க்கிற போதுதான் அதன் உண்மையை உணர்வாய் என்கிற காட்சியை இப்போது காண்பதை எண்ணி வியந்தான்.

கீழே கடல் பரப்பில் ஒரு விசித்திரமான காட்சி தெரிந்தது.

அவர்களைத் தாங்கியிருக்கும் பலகையைச் சுற்றிப் பல 'கூளக் கடாக்கள்' கடல் நீரில் வட்டமிட்டும், நீந்தியும் கொண்டிருந்தன. அவை மீனை வேட்டையாடவோ, பலகையிலிருந்தவர்களை கொல்லவோ வரவில்லை. மாறாக, அந்தப் பறவைகள் செம்பகத்தின் உடலையும், கணேசன் உடலையும் அலைகளில் மூழ்கிவிடாமல் தங்கள் சிறகுகளாலும் அலகுகளாலும் தாங்கிப் பிடிப்பது போல கூட்டமாக உதவின. அவைகள் மரப்பலகையோடு அவர்களை கூட்டமாக கரையை நோக்கி நகர்த்திக் கொண்டிருந்தன.

'இயற்கையின் படைப்பு எவ்வளவு அற்புதம்!' விலங்குகளுக்கு ஐந்தறிவு என்கிற விந்தை மனிதர்களையே காப்பாற்றும் டொல்பின்களும், இந்தக் கூளக்கடாக்களும் எத்துணை அறிவார்ந்தவை.

மனிதர்கள் துரோகத்தால் கடலில் தத்தளித்த இவர்களை ஐந்தறிவுப் பறவைகள் காப்பாற்ற முயல்கின்றன. ஒளியாய் நின்ற அவனது ஆன்மா, பூமியின் காந்தப்புலத்தையும் பறவைகளின் மூளையில் உள்ள கிரிப்டோக்ரோம் என்ற புரதத்தையும் கண்டது.

அந்தப் பறவைகள் அலையின் நகர்வையும், இவர்களின் உடலின் வெப்பத்தையும் கூட துல்லியமாகக் கணித்துச் செயல்பட்டுக் கொண்டிருந்தன. ஆன்மீகம் இதைத்தான் 'தேவதூதர்கள்' என்றும் கடவுள் என்றும் சொல்லுகின்றனவா ? ஆனால் அறிவியல் இதை 'பரிணாமக் கூட்டுறவு' என்று சொல்லுமா, கணேசன் ஆன்மா கட்டற்றுச் சிந்தித்தது.

கணேசனின் ஆன்மா இப்போது மனிதப் பிறப்பிற்கும், ஆவியுலகத்திற்கும் இடையில் தத்தளித்துக் கொண்டிருந்தது. இதை இயற்பியல் 'குவாண்டம் சூப்பர்பொசிஷன்' என்பதை அவன் ஆன்மா இப்போ உணர்கிறது. அவன் ஒரே நேரத்தில் உயிருடனும் இருக்கிறான், அதே நேரத்தில் இறந்தும் இருக்கிறான்.

அவனால் கடந்த காலத்தையும் பார்க்க முடிந்தது.

நிகழ்கால, எதிர்காலங்களையும் தரிசிக்க முடிந்தது.

அவர்களுக்கு ஆதிக்க மனிதர்கள் காலங்காலமாக இழைக் கப்பட்ட வரலாற்றுத் துரோகத்தின் காட்சிகள் அத்தனையும் அவன் நினைவடுக்கில் ஓடின. சாதிபிரித்த வர்ணாச்சிரமக் கொடூரம், பெண்களைச் சட்டையே அணிய விடாத பார்ப்பனிய அதிகாரம், வெள்ளையர்களுக்கு தம்மினத்தையே சுய லாபத்திற்காக விற்கிற துரோகிகள், மதங்களாய், இனங்களாய், சாதிகளாய் மொழிகளாய்ப் பிரிந்து அழிகிற போர்கள், இவர்களைக் கடலில் தவிக்கவிட்ட ஆதிக்கப் பேய்களென அனைத்தும் அணுக்களின் பதிவுகளாகப் பிரபஞ்சத்தில் அலைந்து கொண்டிருப்பதை கணேசனின் ஆன்மா உணர்ந்தது.

இவை பூமியை விட்டுப் போகப் போபவையல்ல. மறுபடி மறுபடி இவை மனித விந்துகளில் ஒட்டிப் பூமியை போர்க்களமாக்கத் துடிப்பவை.

இனிப் பிறந்து வரப் போகிற ஸ்டுவர்ட் ஹேமராஃப் மற்றும் ரோஜர் பென்ரோஸ் ஆகிய விஞ்ஞானிகளின் 'Orch-OR' கோட்பா டெனப்படும் மனித உணர்வு எவ்வாறு உருவாகிறது என்பதை விளக்கும் அறிவியல் கருதுகோள் அத்தனையும் ஆன்மாவான கணேசனுக்கு இப்பவே புரிந்தது.

மனித மூளையின் மைக்ரோடியூபுல்களுக்குள் (Micro-tubules) இருக்கும் குவாண்டம் தகவல்கள் தான் மனிதரின் ஆன்மா. உடல் அழியும்போது, இந்தத் தகவல்கள் பிரபஞ்சத்திலுள்ள அனைத்து அணுக்களிலும் கசிந்து விடுகின்றன.

கணேசன் இப்போது ஒரு தனிமனிதன் அல்ல. அவன் பிர பஞ்சத்தின் ஒரு பகுதி. எங்கோ இனிப் பிறக்கப் போகிற விந்து.

கணேசன் ஆன்மாவாக அனைத்தையும் உணர்கின்ற தருணமது.

கீழே செம்பகம் இன்னும் சுவாசித்துக் கொண்டிருந்தாள். அவளது இதயத் துடிப்பு படிப்படியாகக் குறைந்து நிமிடத்திற்கு முப்பது முறை மட்டுமே துடித்தது. அவளது உடல் 'ஹைபோதெர்மியா' என்ற கடுமையான குளிர் நிலைக்குச் சென்றிருந்தது. இன்னும் சில மணிகளில் அவளும் ஆன்மாவாகப் போகின்றாள்.

கூளக் கடாக்கள் திடீரென சத்தமிட்டன. அவை கடலின் ஒரு குறிப்பிட்ட திசையை நோக்கித் தன் சிறகுகளை அசைத்தன. சொண்டுகளால் அந்த மரப்பலகையில் சிக்குண்ட மனிதர் களைத் தள்ளின.

வானத்திலிருந்து பார்த்த கணேசனுக்கு அத்தனையும் தெரிந்தது, ஆனால் அவனால் எதுவும் உதவ முடியா ஒளி அவன். இப்படித்தான் கடவுளும் இருக்கிறாரோ கண்ணால் நடக்கும் அனைத்தையும் பார்த்துக் கொண்டு கைகால் இல்லாமல் எவருக்கும் உதவ முடியாமல் தவிக்கிற இந்த ஆன்மா கொடியதாக கணேசனுக்குப் பட்டது.

தூரத்தில் ஒரு பெரிய கரை தெரிந்தது. அந்தக் கரையிலிருந்து பார்த்த மனிதர்களுக்கு பறவைகள் வட்டமிடுவது ஒரு விசித் திரமான அறிகுறியாகத் தெரிந்தது. அவர்கள் இந்தப் பலகை மனிதர்களை கண்டு கரைக்கு இழுத்து வந்தார்கள்.

கணேசனின் ஒளிக்கீற்றான ஆன்மா இப்போது ஒரு முடிவுக்கு வர வேண்டியிருந்தது.

பிரபஞ்சத்தோடு அணுவாகி முழுமையாகக் கலந்துவிடுவதா? அல்லது மீண்டும் அந்தச் சிதைபடா மனித உடலுக்குள் செல்வதா? செம்பகத்தின் கைகள் பலகையை இன்னும் தளர்த்தாமல் பிடித்திருந்த அந்த அன்பு, அவனது ஆன்ம ஒளி பெற்ற குவாண்டம் ஆற்றலை ஈர்த்தது. குவாண்டம் பிணைப்பு தூரத்தால் அழியாதது. காதலைப் பிரிக்காதது.

அவனது ஆன்மாவும் செம்பகத்தின் ஆன்மாவும் பிரபஞ்ச விதிகளால் பிணைக்கப்பட்டிருந்தன.

அந்த தீவு மனிதர்கள் அவர்கள் உடலை இழுத்து வந்து கரையில் போட்டபடி 'இவனுக்கு இன்னும் நாடித் துடிப்பு அடங்கவில்லை! சூடிருக்கிறது உடனே முதலுதவி கொடுங்கள்!' என்று கத்தினான் ஒருவன்.

அவர்கள் அவனது நெஞ்சில் அழுத்தி, செயற்கை சுவாசம் கொடுத்தனர். மூளைக்கு மீண்டும் ஆக்ஸிஜன் பாயத் தொடங்கியது. செயலிழந்த உறுப்புகள் மீண்டும் இயங்கத் தொடங்கின.

வானத்தில் மிதந்த அந்த ஒளிக்கீற்று, ஒரு பெரிய ஈர்ப்பு விசையால் இழுக்கப்பட்டு, மீண்டும் அந்த மனித உடலுக்குள் சுருங்கியது.

கணேசன் பலத்த அதிர்ச்சியோடு கண்களைத் திறந்தான். வாயிலிருந்து கடல் நீரை இருமித் துப்பினான். அவனது கண்கள் முதலில் தேடியது செம்பகத்தைத்தான். அவளும் மாற்று உடைகள் உடுத்தப்பட்டு, சூடான சாக்கால் போர்த் தப்பட்டுப் படுக்க வைக்கப்பட்டிருந்தாள். அவளது சுவாசம் சீராக இருந்தது.

அவர்கள் தப்பித்துவிட்டார்கள். வெள்ளைய ஆதிக்கம் அவர்களைக் கொல்ல நினைத்தது, ஆனால் இயற்கை கூளக் கடாக்களாகி அவர்களைக் காப்பாற்றின.

ஊர்மக்கள் பேசிக் கொண்டார்கள்: 'இவர்கள் பிழைத்தது ஓர் அற்புதம்! கடவுள் தான் காப்பாற்றினார்.'

கணேசன் புன்னகைத்துக் கொண்டான். மனிதர்கள் அறியாததைத் தான் 'அற்புதம்' என்றும் 'ஆன்மா' என்றும் சொல்கிறார்கள். ஆனால், மரணத்தின் விளிம்பில் அவன் கண்டது முற்றுணர்ந்த தூய அறிவியல். மரணம் என்பது முடிவல்ல, அது ஆற்றலின் வடிவ மாற்றம் மட்டுமே.

இந்தப் பூமியின் துரோகங்கள் தற்காலிகமானவை, ஆனால் காதலும், பிரபஞ்சத்தின் விதிகளும் என்றுமே அழியாதவை என்பதை உணர்ந்தபடி, கணேசன் செம்பகத்தின் கைகளை மீண்டும் இறுக்கமாகப் பற்றிக்கொண்டான்.

(தொடரும்...)

sithivinayagam@thaiveedu.com

சோலை வரி

‘அப்பா என்ர காணி உறுதியளை நான் எடுக்கிறன்’ என்ற கவிதாவை ஆச்சரியத்துடன் பார்த்த அப்பா ‘ஏன் நான் உயிரோடதானே இருக்கிறன் பிள்ளை. சரி ,சரி எடு. கவனமாப் பாத்து எடுத்துக் கவனமா வை’ என்பதோடு நிறுத்திக் கொண்டார். இது நடந்தது இற்றைக்குப் பதினைந்து ஆண்டுகளிற்கு முன். அப்ப கவிதா கலியாணம் கூடச் செய்யவில்லை.

காலங்கள் உருண்டது. கவிதாவும் கலியாணம் செய்தாள். மாப்பிள்ளை வெளியூரில் வேலை. மூன்று பிள்ளைகள் பெற்று, மூச்சுவிட நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருந்தாள். அம்மா இருந்த காலத்தில பிள்ளைகளை அம்மாவின் உதவியோடு வளர்க்கக் கூடியதாக இருந்தது. அம்மா இறந்த பின் கவிதாபாடு திண்டாட்டம்தான்.

அம்மா, அப்பாவை எப்பவுமே இராசா போலத்தான் தாங்கிக் கொண்டார். அது பயத்தினால் இல்லை. அன்பினால் வந்த அக்கறை. அப்பாவும் அம்மா மீது அக்கறையாய்த்தான் இருந்தார். அம்மா இறந்த பின் அப்பா தன்பாட்டிலேயே சமைச்சுச் சாப்பிட்டுத் தனித்து வாழ்ந்து வந்தார். அப்பா வேற்றூர்களில வேலை செய்த காலத்தில் செலவைக் குறைக்கத் தானேதான் சமைத்துச் சாப்பிட்டதால் அவருக்கு அது புதுசில்லை. பிள்ளைகளும் ‘அவற்றை இடத்தில அவர் இருப்பதுதான் அவருக்குச் சுகம்’ என்று சொல்லி அப்பாவைத் தனியாய் விட்டுட்டினம்.

அம்மா இல்லாத தனிமை அப்பாவை நிறையவே தின்றது. ஒரு நேர சமையலே மூன்று நேரமும் சாப்பாடானது. அடிக்கடி வெளியே செல்வதையும் அப்பா விரும்பவில்லை. தன்னுடைய நிலையை யாரும் கேட்டால் சங்கடம் என்று தவிர்த்துக் கொண்டார். பழைய புத்தகங்களும் தினசரி பத்திரிகைகளுமாக அவர் பொழுது போனது.

பிள்ளைகளைப் படிப்பிக்கோணும் அவைக்கு வேண்டிய தெல்லாம் செய்யோணும் என்று அப்பா நிறையவே உழைத்தார். லீவு நாட்களில் தோட்டம் செய்தார். பென்சனுக்குப் பிறகு இங்கிலீசும் வீட்டில படிப்பிச்சார். பிள்ளைகள் நால்வரும் படித்துத் திருமணம் செய்து தங்கள் குடும்பங்களைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

tg.theeban@gmail.com

அம்மா இல்லாத கடைசிக் காலத்தில அப்பாக்குப் பாரிச வாதம் வந்து படுக்கையில விழுந்துவிட்டார். கதையும் போச்சுது. அவரை ஆர் வச்சுப் பார்க்கிறது எண்டதில கவிதாவுக்கும் சகோதரங்களிற்குமிடையில ஒரு இழுபறி.

'உனக்குத்தானே கூடக் காணி பூமி தந்தவர், உனக்குத்தானே கூடச் செலவழிச்சுப் படிப்பிச்சவர், உன்ர பிள்ளையளைத் தானே அவை கூடப் பாத்தவை' என்று சகோதரங்கள் வாக்குவாதப்படப் படுக்கையிலிருந்த அப்பாவிற்குப் பரலோகம் மேலாகத் தோன்றியது.

'இதுகளுக்காண்டிப் பாடுபட்டது வீண்' என்று அப்பா கண் கலங்கினார். 'படிப்பிச்சதும் வீண்' என்று நினைத்துக் கொண்டார். தன்னுடைய பிள்ளை வளர்ப்பில் ஏதோ பிழை இருக்கிறது என்று அப்பா மனம் நொந்து கொண்டார்.

ஏதோ ஒரு மாதிரி நான்கு பிள்ளைகளுமாக ஒரு முடிவுக்கு வந்து, ஒரு நாளைக்கு ஒருதரம் அப்பாவை வந்து பார்க்க ஓர் ஆம்பிளையை ஒழுங்குபடுத்தியாச்சு. அவர் அப்பாக்குக் குளிக்க வார்த்து உடுப்புத் தோச்சிட்டுப் போவார். அப்பான்ர பென்சன் காசிலை வேலையாளுக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டது. பிள்ளைகள் ஒவ்வொருவரும் மாறி மாறிச் சாப்பாடு கொடுக்கலாம் என்று முடிவும் செய்யப்பட்டது. பிள்ளைகள் அருகிலில்லாத இடைநேரத்தில் அப்பாவை அந்த ஆண்டவன்தான் கவனிக்க வேண்டியிருந்தது. அது கனநாள் நீடிக்கேல்லை. புத்திரர்களின் புத்தி கண்டு கடவுளே கலங்கி அப்பாவைத் தன்னுடன் அழைத்துக் கொண்டார்.

கவிதாவின் காணிகளிற்குச் சோலை வரி கட்டப் பிரதேச சபை செல்லவேண்டி வந்தது. அங்கு 'காணி ஆற்ற பேரில பதிஞ்சிருக்கு?' என்ற கேள்விக்கு 'உறுதி என்ர பேரிலதான் இருக்கு' என்ற கவிதாவை ஏற இறங்கப் பார்த்த உத்தி யோகத்தர்,' அது உறுதி, நாங்கள் பிரதேச சபையில உள்ள பதிவைக் கேட்கிறம். முந்தி எப்பாலும் சோலைவரி கட்டியிருக் கிறிங்களோ?' என்று கேட்டார். 'இல்லையே, அப்பா கட்டினாரோ தெரியாது. அவரிட்டை இனி என்னண்டு கேட்கிறது' என்று வாய்க்குள் முணுமுணுத்தாள் கவிதா. 'பதிவை உங்கட பேருக்கு மாத்தோணுமெண்டால், தாய் உறுதி, தோம்பு எல்லாம் கொண்டாங்கோ' என்றதும் தான், 'அட! தாயுறுதி, தோம்பு என்றால் என்ன? இப்படியெல்லாம் இருக்கோ!' என்று அகலக் கண் விரித்தாள் கவிதா.

அப்பான்ர இறப்புக்குப் பின் அவற்றை சாமானுகளை உரப் பையில கட்டிச் சாய்ப்பில இருந்த பரணில போட்ட கவிதா, அங்கை ஓடிப் போய்ப் பார்க்க எல்லாம் துண்டுத்துணிக்கை களாகச் சொரிந்து விழுந்தன. மீன் பூச்சியும் எலியும் தம் கை வரிசையைக் காட்டியிருந்தன. 'சீ! அப்பா இதுகளைச் சொல்லாமல் விட்டுட்டாரே, கோபமாக்கும்' என்று கவிதா புறுபுறுத்துக் கொண்டாள். மீண்டும் பிரதேச சபை நோக்கி ஓட்டம்.

'தாயுறுதி, 1975-ஆம் ஆண்டில இருந்து, அதோட முப்பது வருசத் தோம்பெல்லாங் கொண்டாங்கோ, எல்லாம் கச்சேரியில எடுக்கலாம்' என்று பிரதேசசபை ஊழியர் நயமாகக் கூறினார். ஒருமாதிரிக் கச்சேரி எல்லாம் அலைஞ்சு, காசு செலவழிச்சு உறுதி, தோம்பு எல்லாம் எடுத்துக் கொண்டு மீண்டும் பிரதேச சபை ஏகினாள் கவிதா.

'நீங்கள் எந்த வட்டாரம், முந்திச் சோலைவரி கட்டின துண்டி ருக்கோ? அல்லாட்டிப் பக்கத்தில ஆரும் சோலை வரி கட்டின துண்டு எடுக்கலாமோ?' என்று துளைத்த பிரதேச சபை ஊழியர், கையைப் பிசைந்து கொண்டு முழித்த கவிதாவிடம் 'காணி எங்க கிடக்கெண்டு தெரியுமோ?' என்ற அணுகுண்டுக் கேள்வியைப் போட்டார். 'நாங்கள் இருக்கிறது அம்மான்ர இடம். என்ர காணியிருக்கிறது அப்பான்ர இடம். இங்கை நாங்கள் அடிக்கடி வாறதில்லை. யாரோ குத்தகைக்குத் தோட்டம் செய்யினம். எப்பாலும் இருந்திட்டுக் குத்தகை தருவினம்' என்ற கவிதாவின் பரிதாபநிலை கண்டு தாமாகவே பதிவைத் தேடிக் கண்டு பிடித்த ஊழியர்கள், 'உங்கள் காணிகள் வீரகத்தி கந்தப்பிள்ளை என்ற பெயரில் இங்கு பதிவிலுள்ளது. யார் கந்தப்பிள்ளை?' என்றதும் 'அவர்தான் எங்கட அப்பப்பா 'என்ற கவிதாவிற்குத் தலையில் தலைப்பாகையும், வெறும் மேலும், சாரமும், தினம் வாழைக் குலைகளைச் சைக்கிளில் கட்டிக் கொண்டு சந்தைக்குப் போகும் அப்பப்பா நினைவில் வந்தார். நாள் முழுக்கத் தோட்டத்தில நின்று செம்பாடு பத்திப்போன கால்களும், மண்வெட்டி புடிச்சுக் கன்றிப்போன கைகளும், வெயிலில் நிண்டு செம்படை பத்திப்போன உடல் மயிர்களுமென்று அவர் கோலம் கண் முன் வந்து போனது.

உழைச்சுச் சிக்கனமாக வாழ்ந்து, ஓலைப்பெட்டிக்குள்ள ஒளிச்சுச் சேர்த்த காசில காணி வாங்கித் தன் மகனிற்கு எழுதி வைச்ச உழைப்பாளி அப்பப்பா. நேரமொதுக்கித் தோளில ஒரு துண்டும் சாரமுமாக வந்து இந்தக் கந்தோரில தன்ர பெயரில காணியைப் பதிஞ்சிருப்பார் போல. இவ்வளவு காலத்தில ஒரு துண்டு காணி தமக்கு வாங்க நினைக்கேலாமல் இருந்ததையிட்டு வெட்கித்தாள் கவிதா. தன் ஒரே மகனைக் கம்ப்ஸ் அனுப்பிக் கவுண்மென்ற் வேலைக்கு அனுப்பின பெருமிதத்தோடு, அவன் படிச்சிட்டான் நல்லாய் வாழ்வான் என்ற ஆறுதலோட கண்ணை மூடீட்டார் அப்பப்பா. ஆனால்...

Panchakalyany@thaiveedu.com

ஒரு நாள் கூத்து

உஷாதீபன்

tg.theeban@gmail.com

‘ஆர்த்தி...! என்ன இந்நேரத்துல...?’ ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டே கதவைத் திறந்தாள் பிரேமா. பதில் சொல்லாமல் வீட்டுக் குள் போனவளைப் பின் தொடர்ந்தாள்.

‘ஆபீசுக்குப் போகாமே இங்கே வந்திருக்கே...? லீவு போட்டுட்டியா?’ கேள்வி மேலும் தொடர்ந்தது.

உறாலில் இருந்த காற்றாடியை உயிர் பெறச் செய்துவிட்டு ஸ்ஸ்ஸ்... என்று ஆசுவாசப்பட்ட வாறே அங்கிருந்த சோபாவில் சாய்ந்தாள் ஆர்த்தி. அருகில் வந்து அமர்ந்து தலையைத் தடவிக் கொடுத்தாள் பிரேமா.

‘எதும் பிரச்னையா?’ என்றாள்.

‘அக்கா... கொஞ்ச நேரத்துக்கு எதுவும் கேக் காதே... முடியுமானா எனக்கு ஒரு ஸ்டாராங்க் காஃபி கொடு...’ கேட்டுக்கொண்டே சட்டென்று அவள் மடியில் படுத்துவிட்டாள் ஆர்த்தி. நண்ப னின் மனைவி. எவ்வளவு நெருக்கம்...! பிரேமாவின் மனம் இளகியது.

‘ஏண்டீ இப்டீ...? சரி, படுத்திரு... எடுத்திட்டு வர் றேன்...’ என்றவாறே அவள் தலையைத் தூக்கி ஒரு தலையணையை அண்டக் கொடுத்து எழுந் தாள் பிரேமா.

‘நல்ல சூடா இருக்கணும்... இல்லன்னா வேணாம்... ’

‘சரீடீ... சரி...’ என்றவாறே உள்ளே போனாள் பிரேமா. அதற்குள் ஆர்த்தி அசந்து விட்டதுபோல் இருந்தது.

‘உடம்பு எதுவும் சரியில்லையோ? லீவு போட்டு, வீட்டில் ரெஸ்ட் எடுக்க வேண்டியதுதானே? அந்த மூன்று நாளின் முதல் நாளில் வயிற்று வலி, வயிற்று வலி என்று பிதற்றுவாளே? அதுவாய் இருக்குமோ?’

தொலைபேசி அலறியது. யாராய் இருக்கும்? அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த பாலை சிம்மில் வைத்து விட்டு, போய் எடுத்தாள்.

‘பிரேமா... நான்தான்... அங்க டேபிள் டிராயர்ல என் பர்ஸ் இருக்கா பாரு...?’ ரவீந்திரன் பதற்றத் தோடு கேட்டான்.

‘போச்சு, மறந்திட்டீங்களா? சமீபமா உங்களுக்கு இதே வேலையாப் போச்சு... எங் கிருக்கீங்க...?’

‘பர்ஸ் இருக்கா பாருன்னா? ரோட்டுலதான் நிக்கிறேன்... திடீர்னு டிக்கெட் பாக் கெட்டைப் பார்க்கிறேன்... பர்ஸைக் காணோம்... பயந்திட்டேன்...’

‘சரி, பதறாதீங்க... ஒரு நிமிஷம்...’ போனை வைத்துவிட்டுப் போய்ப் பார்த்தாள்.

ஏ.டி.எம். டெபிட் கார்டு பர்ஸில்தான் இருக்கும். எடுத்து உபயோகித்துவிட்டு அப்படியே மறந்து வைத்து விட்டுப் போயிருக்கிறான். கொண்டு வந்து டிராயரில் வைத்தாள். கிளம்புவதற்கு முன் தேவையானவற்றை டேபிளில் கண்பார்வையில் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள் என்று எத்தனையோ முறை சொல்லிப் பார்த்திருக்கிறாள். அவன் செய்வதாயில்லை. இப்படித்தான் வழியில் பதறிக்கொண்டு நிற்பதா?

ஃபோனை எடுத்தாள். லைன் துண்டிக்கப்பட்டிருந்தது. அவன் செல்லுக்கு அடித்தாள். ரிங் போய்க்கொண்டேயிருந்தது. டிராபிக்கில் இருப்பான். ஆபீஸ் போய்ச் சேரட்டும், பிறகு சொல்லலாம் என்று நினைத்து வைத்தாள். அதற்குள் அவனிடமிருந்தே மீண்டும் போன்.

'இருக்கு...' என்றாள். கண்டேன் சீதையை என்பதுபோல் சொன்னால்தான் அவனுக்குப் பிடிக்கும்.

'நல்லவேளை... அதுல ரெண்டாயிரம் பணம் இருக்கும். அதை எடுத்து பீரோவுல வை. பணத்தோட டிராயர்ல வைக்காதே... பயந்தே போயிட்டேன்...' சொல்லிவிட்டுப் போனைக் கட் பண்ணிவிட்டான். ஆர்த்தி வந்திருப்பதைச் சொல்ல வாயெடுத்தாள். ஏனோ சொல்லவில்லை. 'ஆபீஸ் போகாம இங்கே வந்து என்ன பண்றா? அவுங்க வீட்ல சத்தம் போடப் போறாங்க...' என்பான்.

'யக்கா... என்னாச்சு காபி...?' கத்தினாள் ஆர்த்தி.

'இதோ வந்துட்டேண்டி...' சொன்னவாறே அடுப்படியை நோக்கி ஓடினாள் பிரேமா. நல்லவேளை சிம்மில் வைத்திருந்ததால் பால் மெல்லப் பொங்கி சாவகாசமாய் மேலே வந்து கொண்டிருந்தது. அணைத்து, ஆர்த்தி கேட்டதுபோல் ஸ்டாராங்க் காபி கலந்து எடுத்து வந்தாள்.

ஆர்த்திக்குப் பிடித்தது அவள் வீட்டின் காபிதான். எப்போது வந்தாலும் முதலில் அதை நீட்டிவிட வேண்டும் அவள் முன். 'ஆனாலும் தொழில் சுத்தம்கா உங்கிட்டே... எப்டி இப்டி ஒரு காபி போடறே...? பாலுக்குச் சொட்டுத் தண்ணி கலக்க மாட்டே போலிருக்கு... கள்ளிச் சொட்டா டிகாக் ஷன் இறக்கிடுறே... அப்புறம் உன் காபியை எப்படித் தவிர்க்க முடியும்? இந்தக் காபியைக் கொடுத்தே ரவியை உங்க முந்தானைல முடிஞ்சி வச்சிருக்கீங்க....'

'சீ... போடி... அதெல்லாமில்லை... அவர் ஒரு சுதந்திரப் பறவை... அவரை யாரும் கட்டுப்படுத்த முடியாது...'

'அப்டியா? வேறே எங்கேயாச்சும் கூடு கட்டிடப் போறார்க்கா...' சொல்லி விட்டுச் சிரித்தாள் ஆர்த்தி.

விளையாட்டுக்குத்தான் சொன்னாள் என்றாலும் அந்த வார்த்தைகள் பிரேமாவுக்குச் சற்றுக் கலக்கத்தைத்தான் தந்தன.

'என்னக்கா... நானும் வந்ததுலேர்ந்து பார்க்கிறேன்... உன்கிட்டே ஒரு கலகலப்பே இல்ல இன்னிக்கு...? அங்க என்ன டான்னா எங்கம்மா பால் உறைல தண்ணிய விட்டு விட்டு அலசுவாங்க... அதுவே நூறு மிலி கலந்திடும். அப்புறம் எப்டி காபி நல்லாயிருக்கும்? சொன்னாக் கேட்க மாட்டாங்க...? பிரேமாக்கா மாதிரிப் போடு அப்பத்தான் எனக்குப் பிடிக்கும்னு ஆயிரந்தடவை சொல்லிட்டேன்... அப்போ அங்கயே போய் குடிச்சிக்கோன்னுவாங்க... அம்புட்டுக் கோபம் வருமாக்கும்...'

'அந்தக்காலத்துப் பெரியவங்க அப்டித்தாண்டீ இருப்பாங்க... அவுங்களுக்கு எதையும் பொட்டுக்கூட வீண் பண்ணப் பிடிக்காதாக்கும்... அவுங்ககிட்டேயிருந்து நாம நிறையக் கத்துக்கணும்... நீ இத்தனை ஸ்டாராங்கா குடிக்கிறது சரியில்லை. அவ்வளவும் பித்தமாக்கும். ஒரு நாளைக்குத் தலையைச் சுத்திக் கிறு கிறுன்னு வரப்போவுது... வாமிட் பண்ணப்போறே... ஜாக்கிரதை...'

'என்னக்கா, காபியையும் கொடுத்திட்டு, இப்டியும் சொல்றே... என்னை அனுபவிச்சுக் குடிக்க விடு... அடா... அடா... அடா... காபின்னா நரசுஸ்தான்... அதோட சுவையும் மணமுமே தனி...' விளம்பரத்தில் வருவதைச் சொல்லிக்கொண்டே அவள் அனுபவித்துக் குடிப்பதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் பிரேமா.

'அதெல்லாம் இருக்கட்டும்... இப்போ திடீர்னு இங்கே ஏன் வந்தே...? ஏன் ஆபீஸ் போகலை...?'

'ஆபீசுக்கு இன்னைக்கு லீவு போட்டுட்டேன்...'

'அப்போ வீட்டுலதானே இருக்கணும்... கரெக்டா ஆபீஸ் டயத்துக்குக் கிளம்பினாப்ல இருக்கு நீ இங்கே வந்திருக்கிறது...?'

'வர்ற வழில திடீர்னு வயித்து வலி... அதான் அப்டியே இங்க ஒதுங்கிட்டேன்' எவ்வளவு உரிமையோடு சொல்கிறாள்?

'ஏய்ய்ய்ய்...! பொய் சொல்ற பார்த்தியா? அப்போ ஆபீசுக்குன்னு கிளம்பிட்டே... அப்டித்தானே?'

'அதாங்க்கா... கிளம்பி போறச்சே... வயித்து வலி வந்துட்டதுனால இங்க வந்திட்டேன்ங்கிறேன்ல...' அவள் முழிக்கும் முழி சந்தேகத்தைக் கிளப்பியது இவளுக்கு.

'சரி, அப்பக் கிளம்பு வீட்டுக்கு... போய் நல்லா ரெஸ்ட் எடு... எல்லாம் சரியாப் போயிடும்...'

'ஏன், இங்கே ஓய்வெடுத்தா ஒத்துக்க மாட்டியா? எதுக்கு விரட்டறே...? படுத்திருந்திட்டு சாயங்காலமாப் போறேன்...'

'அப்போ மதியச் சாப்பாடு...?'

'இங்கதான்... நீதான் போடணும். ஏன் போட மாட்டியா?'

'இதிலேர்ந்தே நீ சொல்றது பொய்ன்னு தெரியிதுல்ல... ஆபீசுக்குக் கிளம்பியிருந்தேன்னா சாப்பாடு எங்கே? உன் டிபன்

பாக்ஸைக் காட்டு... இல்லன்னா கேரியரைக் கொண்டா பார்ப்போம்...'

'யக்கா, போட்டு அறுக்காதே... வீட்டுல சமையல் ஆகலை.... அதான் கிளம்பி வந்துட்டேன்...!'

'எப்பவும் எட்டரைக்கெல்லாம் ரெடியாகிடும் உங்க வீட்டுல... எனக்கு நல்லாத் தெரியும்... அப்டியிருக்கைல, இன்னைக்குத் தயாராகலைன்னு சொன்னா என்னா அர்த்தம்? அம்மாவுக்கு உடம்பு சரியில்லையா? அப்டின்னா உங்கப்பா சமைக்க ஆரம்பிச்சிடுவாரே...! உங்கம்மாவுக்கு முன்னே சமையலைச் செய்து முடிச்சிடுவாரே...? உள்ளதைச் சொல்லு.... நீ எதையோ மறைக்கிறே...?'

'விட மாட்டே போலிருக்கே... ஒரு காபியைக் கொடுத்துப் பிட்டு, என்னல்லாம் கேள்வி கேட்கிறே? உன்னோட பெஸ்ட் காபிக்காகவே உன்கிட்டே பொய் சொல்லக் கூடாதுதான்... சொல்லிப்புடறேன்...'

'சொல்லு... என்ன விஷயம்... ஏனிப்படி இங்கே ஓடி வந்தே?'

'இதை நான் சொல்லித்தான் உனக்குத் தெரியணுமாக்கும்... எல்லாம் வழக்கம் போலத்தான்...'

'என்னாச்சு...! உன்னைப் பெண் பார்க்க வர்றாங்களா? எந் தூர்லேர்ந்து?'

'சென்னையிலேர்ந்து...'

'சென்னையா...? அப்டின்னா காலைலயே வந்திருக்கணுமே...?'

'காலைலயே வந்திட்டாங்கதான்... காலேஜ் உறவுஸ்ல ரூம் எடுத்துத் தங்கியிருக்காங்களாம்... கோயிலுக்குப் போயிட்டு வருவாங்க போலிருக்கு...'

ஆர்த்தி சொல்லிக் கொண்டிருந்த அதே நேரத்தில் அங்கே பாலாமணி அலறிக் கொண்டிருந்தாள்.

'பார்த்தீங்களா உங்க பொண்ணு செய்திருக்கிறதை...? எப்போ வெளியேறினான்னு கூடத் தெரியலை... யாருகிட்டயும் சொல்லிக்கவும் இல்லே... அவபாட்டுக்குக் கிளம்பிப் போயி ருக்காளே... இப்போ பன்னெண்டு மணிக்குள்ளே அவங்க வந்திடுவாங்களே... நான் என்ன செய்வேன்...'

மனைவிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டு நின்றார் சந்திரசேகர். உறாலி லிருந்து அவரைக் கடந்துதான் ஆர்த்தி வெளியேறியாக வேண்டும். அவர் குளிக்கப் போன நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு கிளம்பியிருக்கிறாள்.

முதல் நாள் விபரம் சொன்னபோது சரிப்பா என்று ஒப்புத லாகப் பதில் சொன்னாளே...? நான் நம்பியதுதான் தவறோ? என்னவோ மனதில் தோன்ற செல்லில் எண்களை இணுக் கினார். எதிர்முனையில் எடுத்தது பிரேமா...! உறலோ என்றவு டனேயே பேசுவது யாரென்று தெரிந்து போனது பிரேமாவுக்கு.

'ஏம்மா... ஆர்த்தி அங்கே வந்திருக்காளா?' சந்திரசேகரிடமி ருந்து வந்த முதல் கேள்வியிலேயே சுதாரித்துக் கொண்டாள் பிரேமா.

'இல்லையே அங்கிள்... இங்க எதுக்கு வர்றா? இன்னிக்கு ஆபீஸ் உண்டுதானே...?' தன் குரல் எத்தனை இயல்பாய் இருக்கிறது? அவளுக்கே ஆச்சரியமாயிருந்தது.

'ஆபீஸ் உண்டும்மா... யாரு இல்லேன்னு சொன்னா... அங்க வந்திருக்காளான்னு கேட்டேன்...'

'என்ன அங்கிள் இப்டி கேட்கிறீங்க...? ஆபீசுக்குக் கிளம் பினா அங்கதானே போயிருப்பா... இங்கே ஏன் வரணும்?'

'டிமிக்கி கொடுத்திட்டு அங்க வந்திட்டாளோன்னுதான்... அவளை நம்ப முடியாது... அதான் கேட்டேன்...'

'வரல்லை அங்கிள்... அப்டியெல்லாம் வரமாட்டா... வந் தான்னா எதாச்சும் சொல்லணுமா... வேணும்னா சொல்லுங்க...'

'இன்னைக்கு அவளைப் பெண் பார்க்க வர்றாங்கம்மா... சரின்னு சொல்லிப்புட்டு, திடீர்னு கிளம்பிப் போயிட்டா... இப் டியெல்லாம் பண்ணினா எப்படிச் சொல்லு? வயசான காலத் துல ஒரு பொண்ணை வச்சிக்கிட்டு படாத பாடு பட வேண் டிர்க்கு... இன்னும் கொஞ்ச நேரத்துல அவுங்க வந்துடு வாங்க... சரி, நான் ஆபீசுக்கே பேசறேன்...'

'அங்கிள்... அங்கிள்...' போனை வைத்து விடுவாரோ என்று பதறினாள் பிரேமா.

'என்ன, சொல்லும்மா...? நான் பதட்டத்துல இருக்கேன்... சீக்கிரம் சொல்லு...'

'நான் வேணும்னா ஆபீசுக்குப் பேசிப் பார்க்கட்டுமா...?'

'எதுக்கும்மா உனக்கு சிரமம்... நானே பேசிக்கிறேன்... என்ன ஒரு சங்கடம்னா செல்லுல பேசினா எடுக்க மாட்டா... ஆபீஸ் லேன்ட் லைனுக்குப் பேசினா அது எங்கேஜ்ட்டாகவே இருக் கும்... லைன் கிடைச்சாலும் யாரும் வாங்கிக் கொடுக்க மாட்டாங்க...'

'அதான் அங்கிள், என் நம்பர்னு தெரிஞ்சிதுன்னா எடுப் பால்ல... நான் பேசி வரச்சொல்றேன் அங்கிள்... நீங்கள் கவ லைப்படாதீங்க...'

'ஓ.கே.ம்மா... சரியான ஐடியா... ரொம்ப தேங்க்ஸ்... வச்சிடட் டுமா?' லைன் துண்டிக்கப்பட்டது.

'உன் பொண்ணு ஒரு வேளை அவ க்ளாஸ்மேட் ஃப்ரெண்டு

அந்த ரவீந்திரன் வீட்டுக்குப் போயிருப்பாளோன்னு கேட்டேன். அங்கே வரல்லியாம்...'

'பொண்ணு பார்க்கிற நாளும் அதுவுமா அங்க போய் உட் கார்ந்தா நல்லாத்தான் இருக்கும்? எல்லாம் என் தலையெ ழுத்து... யாராவது கேள்விப் பட்டாங்கன்னா மானம் போகும்...'

'அங்க போகலையாம்டீ... அதுக்கு எதுக்கு டென்ஷனாகிறே?'

'அப்போ ஆபீசுக்குப் போடுங்க...'

'ஆபீசுக்குப் போட்டாத்தான் கிடைக்காதே... செல்லுக்குப் பேசினா எடுக்கமாட்டா உன் பொண்ணு... ஆபீஸ் லைன் கிடைக்கவே கிடைக்காது...'

'அவ ஆபீசுக்குப் போயிருக்க மாட்டா... அந்த பிரேமா வீட் டுக்குத்தான் போயிருப்பா... எனக்கு நல்லாத் தெரியும்...'

'அவதான் அங்க வரலேங்கிறாளே...'

'அப்டித்தான் சொல்லுவா... எல்லாம் கூட்டுக் களவாணிங்க... வேறே போக்கிடம் ஏது அவளுக்கு. அந்த பிரேமாதான் இவளை ஆட்டி வைக்கிறா... போனைத் திரும்ப அவள் லைனுக்குப் போட்டு எங்கிட்டக் கொடுங்க சொல்றேன்...' படபடத்தாள் பாலாமணி.

எண்களைச் சொடுக்கினார் சந்திரசேகர். பாலாமணியிருக் கும் பதட்டத்தில் எண்களை மாற்றி அமுத்தி விட்டார். அது எதுவோ ஆஸ்பத்திரிக்குப் போனது. 'சாரி... சாரி...' என்று கொண்டே மீண்டும் அழுத்தினார். லைன் கிடைக்கும் முன் சந்திரசேகரிடமிருந்து கோபமாய்ப் பிடுங்கி, உறலோ... என்று கர்ஜித்தாள் பாலாமணி. எதிர்முனையில் பிரேமா.

'இந்த பார், என் பொண்ணு அங்கே வந்திருந்தான்னா உடனே அவளை நல்ல வார்த்தை சொல்லி இங்கே அனுப்பிச்சு வை... அநாவசியமா அவளுக்கு எதையாவது அட்வைஸ் பண் ணிட்டிருக்காதே... இன்னைக்கு அவளைப் பெண் பார்க்க வர் றாங்க... அவ அங்கேயிருந்தான்னா இன்னும் அரை மணி நேரத்துல இங்கே இருந்தாகணும்... ஞாபகம் வச்சிக்கோ... இல்லைன்னா நான் போலீசுக்குப் போக வேண்டிர்க்கும்... என் னடா இப்டி பேசறேனேன்னு நினைக்காதே... சொன்னா செய் வேன்...' பாலாமணி போனை வைத்துவிட்டாள்.

சந்திரசேகரன் அசந்துவிட்டார். ரொம்பவும் பழகியவர்களிடம் எப்படி இந்த மாதிரித் திடீரெனக் கோபமாய்ப் பேசுகிறாள். ஆர்த்தி அங்குதான் சென்றிருப்பாள் என்று உறுதியாய் நினைத்து இப்படிப் பேசுகிறாளோ? எப்படி இத்தனை உறுதி யாய் ஊகிக்கிறாள்?

'என்ன பாலா இப்டி, போலீஸ் அது இதுன்னு? நல்லாவாயி ருக்கு? சாதாரணமாக் கேட்க வேண்டியதுதானே... பழகின வங்ககிட்டே போய் திடீர்னு இப்டியா பேசறது...?'

'பரவால்ல, ஒண்ணும் கெட்டுப் போகாது. வீட்டுல உங்களுக்கு அடங்கிப் போறது போதும்... வெளிலயும் என்னை அடக்கா தீங்க...'

தன்னால் இப்படியெல்லாம் முடியாது என்றுதான் தோன்றியது சந்திரசேகருக்கு. நாளைப் பின்ன முகம் பார்க்க வேண் டாமா? இப்படியா முறித்துப் பேசுவது இங்கிதமில்லாமல்? அந்த ரவீந்திரன் எவ்வளவு நல்ல பையன்? அவனுக்காக வாவது இவள் சாந்தமாய்ப் பேசலாமே? நினைத்துக் கொள் ளத்தான் முடியும். சொன்னால் சண்டை வரும்... பெரிதாகும்... பிறகு தலையில் அடித்துக் கொண்டு டென்ஷனாகிப் படுக் கையில் விழுந்து விடுவாள். பெண்களே ஏனிப்படி எல்லாவற் றிற்கும் நிதானமில்லாமல் திரிகிறார்கள்? எந்த விஷயத்தை யும் ஆர அமரக் கடந்து செல்ல வேண்டும் என்ற பக்குவம் ஏன் இல்லை இவர்களுக்கு?

'என்னடீ, உங்கம்மா என்னென்னமோ பேசறாங்க...?' ஆர்த் தியைப் பார்த்துக் கேட்டாள் பிரேமா.

'நாந்தான் உன்னைப் பிடிச்சு வச்சிட்டிருக்கிறதா நினைச்சிட் டுப் பேசறாங்க... ஏற்கனவே உங்கம்மாவுக்கு என்னை அவ் வளவாப் பிடிக்காது. இதுல நீவேறே இப்டி வந்து உட்கார்ந் திருக்கே... இதுக்கு மேலே என்னால சமாளிக்க முடியாது. நீ கிளம்பு உன் வீட்டுக்கு... இங்கே வந்ததாச் சொல்லாதே...'

'போயீ? என்னக்கா இப்டி வெரட்டுறே?'

'போயி, அலங்காரம் பண்ணிட்டு நில்லு. வர்றவனுக்கு உன் னைப் பிடிச்சிருந்தா சம்மதம் சொல்லு...'

'நாந்தான் சொல்லியிருக்கேன்லக்கா... எனக்கு வெளிநாட்டுல வேலை பார்க்கிற மாப்பிள்ளைதான் வேணும்னு... அதில்லாம ஏன் பார்க்கிறாங்க...?'

'நல்லாயிருக்குடி... நீ இங்க வேலை பார்க்கிறே...? வர்றவன் வெளிநாட்டுலன்னா, நீ என்ன செய்வே?'

'என் வேலையை ரிசைன் பண்ணிட்டுப் போவேன்...'

'அப்படி என்னடி வெளிநாட்டு மோகம்? நம்ம நாட்டுல இல் லாத பெருமையா?'

'அதெல்லாம் எனக்குத் தெரியாது. ரொம்ப நாளா, ஏன் ரொம்ப வருஷமான்னு கூடச் சொல்லலாம்... என் மனசுல இருக்கிற ஆசை இதுதான். கல்யாணம் பண்ணினா வெளிநாட்டுல வேலை பார்க்குற பையன்தான். என் வேலையைப் பார்க் காமே, என் அழகைப் பார்த்திட்டு விரும்பி என்னைக் கல் யாணம் பண்ணிக் கூட்டிக்கிட்டுப் போகணும்... ராணி மாதிரி நான் சந்தோஷமா இருக்கணும்... எனக்குப் பிடிச்சிருந்தா அங்க ஒரு வேலையைத் தேடிக்குவேன்... சம்பாதிப்பேன்...'

'நீ சொல்றது அதீதக் கற்பனையாயிருக்கே... விரலுக்கேத்த வீக்கமாத் தெரிலயே?'

‘அப்டித்தான்... வருதா இல்லையா பாரு... எனக்குன்னு ஒருத் தன் நான் நினைக்கிறமாதிரியே வருவான்...’

‘நீ என்னமோ விளையாட்டாப் பேசற மாதிரி இருக்கு... சீரியஸா மனசில சிந்திச்சு முடிவு பண்ணிப் பேசற மாதிரித் தெரிலயே... ?’
‘எல்லாம் அதிரடிதான். எங்கப்பா அம்மாவ இப்டித்தான் ஒரு ஆட்டு ஆட்டப் போறேன்...’

‘நீ அயல்நாட்டுக்குப் போனேன்னா, உங்கப்பா, அம்மா ?’

‘அவங்க எங்க ரெண்டு அண்ணன்ல யாரோடயாச்சும் போய் இருக்கட்டும்... பெத்த பிள்ளைகதானே வச்சிக் காப்பாத் தணும்... அவங்களுக்குத்தானே கடமையிருக்கு. நான் வேறொரு குடும்பத்துல போய் வாழப் போறவதானே ?’

மீண்டும் போன் மணி அடித்தது. எடுத்தாள் பிரேமா. எதிர் வரிசையில் பாலாமணி... அவளை முந்திக் கொண்டு இவள் பேச ஆரம்பித்தாள்.

‘இந்தா பாருங்கம்மா... நான் ஒண்ணும் உங்க பெண்ணை இங்கே பிடிச்சு வைக்கலை... அவ இங்கேயிருந்தான்னா நீங்க வந்து தாராளமாக் கூட்டிட்டுப் போகலாம். திடீர்னு போன் பண்ணி இப்படி அநாவசியமா மிரட்டிட்டிருந்தீங் கன்னா அது நல்லாயில்லே. எதோ பெரியவங்களாச்சேன்னு பார்க்கிறேன்... அப்புறம் நானும் போலீசுக்குப் போக வேண்டி யிருக்கும்... உங்க பொண்ணு இங்கே வரல்லை... அவ்வள வுதான்...’

‘என்னக்கா இப்டிப் பேசிட்டே போலீசு அது இதுன்னு ?’

‘சாரீடீ... கோபத்துல... சரியா யோசிக்கலை... உங்கம்மாவும் அப்டிப் பேசினாங்களா... எனக்கும் பதிலுக்கு அப்டியே வந்தி டுச்சு... உளறல்னு வச்சிக்கயேன்... இந்த டி.வி. சீரியல்கள்ல பொம்பளைக்குப் பொம்பளை சவால் விட்டுக்கிறாங்களா... அதப் பார்த்துப் பார்த்து நமக்கும் அந்த வேகந்தான் வருது... இதுக்குத்தான் அந்த அசட்டுப் பிசட்டு சீரியல்களையெல் லாம் பார்க்கக் கூடாதுன்னு நினைக்கிறது... பொழுது போக ணுமேன்னு போட்டு விட்டா... அது பைசாசம் மாதிரி நம்மளப் பிடிச்சிக்கிது. ஐயையோ, அடுத்தாப்ல உங்கம்மா முகத்துல நான் எப்டி முழிப்பேன் ? இப்டி உளறிட்டேனே... ? பேசாம மன் னிப்புக் கேட்ற வேண்டிதான்...’ கையைப் பிசைந்தாள் பிரேமா.

‘அதெல்லாம் ஒண்ணும் ஒர்ரிப் பண்ணாதே... எல்லாத்தையும் ரவி சரி பண்ணிப்பார்... எனக்காக அவளை மன்னிச்சிடுங் கன்னு ஒரே வார்த்தைல ப்ளேட்டையே திருப்பிடுவார் கவ லைப்படாதே...’ ஆர்த்தி சமாதானப்படுத்தினாள்.

ஆர்த்திக்கு ரவீந்திரனுடனான நட்பு பால்ய காலத்திலிருந் தானது. இருவரும் ஒரே ஊர். ஒரே பள்ளி. சிறு பிராயத்திலி ருந்து பழகிய பழக்கம் அவன் கல்யாணம் ஆகி மனைவி யோடு தனிக் குடித்தனம் வந்தபோது மேலும் நெருக்கமா கியது. பிரேமா இவளைத் தன் தங்கைபோல்தான் நினைத் தாள். பாலாமணி கூட அடிக்கடி அங்கெல்லாம் போகக் கூடாது என்று தடுத்திருக்கிறாள். ஆர்த்திதான் கேட்பதில்லை. ஆரம்பத்தில் பிரேமாவுக்கே சற்றுச் சங்கடமாய்த்தான் இருந் தது. ஆனால் அதை முற்றிலும் தகர்த்தவன் ரவீந்திரன்தான். அவனது பக்குவமான பேச்சில் அவளுக்கு நம்பிக்கை வந்தது.

‘உனக்கு எதுக்கெடுத்தாலும் சந்தேகம்... யாரையும் நீ நம்ப மாட்டே... ரவீந்திரனைப்பத்தி எனக்கு நல்லாத் தெரியும்... அவருக்கு நான் ஒரு நல்ல தோழி மாதிரி. ஒண்ணும் தப்புத் தண்டா நடந்துடாது...’ என்பாள் இவள்.

அவளது விகல்பமில்லாத பேச்சை பிரேமாவும் ரசிக்க ஆரம் பித்தாள். நாளடைவில் அவளைத் தன் தங்கையாகவே வரிக்க ஆரம்பித்து விட்டாள். அவ்வளவு சுதந்திரம் அவள் வீட்டில் ஆர்த்திக்கு.

அப்பாவும் அம்மாவும் சென்னைக்கு ஒரு முறை சுதாகரன் அண்ணாவைப் பார்க்கப் போயிருந்த போது, நான் வரலை என்றுவிட்டு ரவீந்திரன் வீட்டில்தான் இருந்தாள் ஆர்த்தி. அம்மா எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். வயசுக்கு வந்த பொண்ணை இப்படி இன்னொரு வீட்டுல விட்டிட்டு நான் வரலை என்று மறுத்தாள். அப்பாதான் தடுத்தார். ரவீந்திர னைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும் என்று சொன்னவர் அவர்தான். அந்த நம்பிக்கை இன்றுவரை காப்பாற்றப்பட்டுத் தான் வருகிறது. அப்படியான ஒரு கண்ணியமான குடும்பத் தில் உள்ளவர்களோடு பாலாமணி சர்வ சாதாரணமாய் வார்த்தையை விட்டுப் பேசி விடுகிறாளே ? பெண் கல்யாணம் இப்படித் தள்ளிப் போகிறதே என்கிற ஆதங்கம் அவளுக்கு. ஆர்த்தியின் விருப்பப்படி வெளிநாட்டில் வேலை பார்க்கும் பையன் வரன் ஒன்றிரண்டு வரத்தான் செய்தது. போய் ரெண்டு நாள்ல விபரம் சொல்றோம் என்று போனவர்கள் தகவல் எதுவுமே தெரிவிக்கவில்லை.

‘இவ வாயை வச்சிட்டு சும்மா இருந்தாத்தானே... ? அந்தப் பையன்ட்ட என்ன பேசினாளோ ? அவன் என்ன நினைச் சானோ ? யம்மாடீ... இவளைச் சமாளிக்க முடியாதுப்பான்னு கம்முனு போயிட்டான். பதில் வரலை... ஊருல அவனவன் விருப்பத்துக்குப் பொண்ணா இல்லை... அதெல்லாம் கிடைக் கும். இந்த மாதிரி வாயாடிகளுக்குத்தான் கிடைக்காது... எல் லாம் நம்ம தலையெழுத்து...’ பாலாமணி கோபமும், கொந்த ளிப்புமாய்ப் புலம்பினாள்.

‘எங்க அம்மா எப்பவுமே அப்டித்தான்... உங்களுக்குத்தான் தெரியுமே அக்கா... அதைப் பொருட்படுத்தாதீங்க... இவள் தான் சமாதானம் செய்தாள். அங்கிருந்து கிளம்பும்போது, சாயந்தரம் நான் திரும்பவும் வருவேன்... ஒரு முக்கியமான விஷயத்தை ரவி கூடப் பேசணும்... என்னோட இந்தப் பெண் பார்க்கப் போகிற நாடகத்தில் நீங்க ரெண்டு பேரும்தான் பிரதான பாத்திரம்... ஞாபகம் வச்சிக்குங்க... ரவிகிட்டே சொல் லிடுங்க... நான் என்ன சொன்னாலும் கேட்பான் அவன்... உங் களைத்தான் நான் கெஞ்ச வேண்டிர்க்கும்... கால்ல கூட

விழ றேன்... உங்க வீட்டுக்காரர் கூடச் சேர்ந்து நீங்கதான் இதை முடிச்சு வைக்கணும்...'

'என்ன, என்னென்னவோ புதிர் போடுகிறாள்? என்ன திட்டம் வைத்திருக்கிறாள்? பிரேமா விழித்தாள்.

அர்த்தம் பொருத்தம் இல்லாமல், தான் கோபப்பட்டு விட் டோமோ என்று அங்கே பாலாமணி நினைத்துக் கொண்டி ருந்த அதே வேளையில், வாசலில் நுழைந்தாள் ஆர்த்தி.

'எங்கடீ கிளம்பிப் போயிட்டே... இன்னைக்கு அவுங்க வர்றாங் கன்னு உனக்குத் தெரியுமில்லே... ஏன் அநாவசியமா இப்படி எங்களைப் படுத்தறே?

'உனக்கு அது மட்டும்தான் தெரியும்... வேறென்ன தெரியும்... காலைலேர்ந்து எனக்கா ஒரே வயித்துவலி... ஏதாச்சும் கேட் டியா நீ? உன் காரியந்தான் உனக்குக் குறி...'

'வயித்து வலியா? இன்னைக்குன்னு அந்தச் சனியன் வந்து தொலைச்சிடுச்சா? இல்ல பொய் சொல்றியா?'

'ஆமா பொய் சொல்றேன்... இதோ பார்... டாக்டர் சீட்டு... கொஞ்சமாச்சும் எனக்கு நாள் எப்படி? ஒத்துவருமா? வரச் சொல்லலாமான்னு ஏதாச்சும் என்கிட்டக் கேட்டியா? நீபாட் டுக்கு உன் இஷ்டத்துக்கு எல்லாம் செய்வே... அதுக்கு நான் ஒத்துப் போகணும்... அதானே...? கல்யாணம் எனக்கா உனக்கா? எதை எடுத்தாலும் தாம் தூம்னு கிளம்பிடுவியா? எப்படியாவது என்னை ஒருத்தன்ட்டப் பிடிச்சுக் கொடுத்திட்டு சனியன் ஒழிஞ்சிதுன்னு நிம்மதியா இருக்கணும் உனக்கு... அதானே...?'

'உன்கிட்டக் கேட்டுட்டுத்தானேடீ சொன்னோம்... நாங்களா எங்கே செய்தோம்...?'

'ஆமா, இதுக்காக நான் நாளை எண்ணிட்டே இருக்கணுமாக் கும்... என்ன கண்றாவி...? வர்ற ஒதுக்கம் சொல்லிட்டா வருது... இல்ல நம்ம உடம்பு ஒரே மாதிரியா வருஷம் பூராவும் இயங்கிட்டிருக்கு? அப்பப்போ மாறுதல் ஏற்படுதுதானே? நீயும் பொம்பளைதானே? தாயாருக்குத் தெரியாதா, பொண் ணோட பாடு?'

'என்னடி தப்பு? என்னென்னவோ பேசறே? உன்கிட்டே கேட் டுட்டுத்தானே இறங்கினோம்... இப்ப வந்து என்னென்னவோ சொல்றே?'

'என்ன கேட்டீங்கங்கிறேன்... வர்றவன் ஒரு காலேஜ் லெக் சரர்... எத்தனை பெரிய சம்பளம் இருக்கப் போகுது...? அப் டியே இருந்தாலும் போஸ்ட் நிரந்தரமா? பார்த்தீங்களா? எனக்கு வேணாம்னு சொன்னேன்ல... யாராச்சும் கேட்டீங் களா? நீ எப்பவுமே நான் சொல்றதைக் கேட்கமாட்டே... அப் பாவாச்சும் கேட்டாரா? அவர் நீ சொல்றதைத்தான் கேட் பாரு... வேறே எதுவும் அவர் காதுலயே ஏறாது... எதாச்சும் ஒண்ணை முடிச்சு என்னை வெளில தள்ளி விடணும்... இது தானே உங்க ரெண்டு பேரோட குறிக்கோள்... இந்த வரன் எனக்குப் பிடிக்கலை... அதான் வெளில போனேன்...'

'அப்போ இப்போ எதுக்கு திரும்பி வந்தே?'

'மனசு கேட்கலை... வந்தேன்... டாக்டர்ட்டப் போயி, காட்டிட்டு, ஆபீசுக்கு லீவு சொல்லிட்டு, கடனேன்னு வர்றேன்...'

தொலைபேசி மணி அடித்தது. ஓடிப்போய் எடுத்தார் சந்திர சேகர். எதிர் முனையில் அவர்கள்.

'சார், நான் பரமநாயகம் பேசறேன்... நாங்க இப்போ கோயில் முடிச்சிட்டு வந்திட்டிருக்கோம்... இன்னும் அரை மணி நேரத் துல கிளம்பிடுவோம்... ரூமுக்குப் போயிட்டுக் கொஞ்ச நேரத் துல புறப்படுறோம்...'

'சார், நான் வேணும்னா டாக்ஸி அனுப்பட்டுமா... புது ஊராச்சே...'

'புது ஊருன்னா என்ன? கேட்கிற காசைக் கொடுத்தா வர் றான்... இங்க லாட்ஜ் வாசல்லயே டாக்ஸி ஸ்டான்ட் இருக்கு... ஒண்ணும் சிரமமில்லே...'

'ஓ.கே. சார்... கிளம்பினவுடனே போன் பண்ணுங்க...'

'கண்டிப்பா... சொல்லாம வருவனா? டாக்ஸிக்காரனுக்கு சரியா வழி தெரியலைன்னா உங்ககிட்டேதானே கேட்கணும்... வச்சிடறேன்...'

'அவுங்க சரியா இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ள வந்திடு வாங்கம்மா... நம்ம கச்சேரியை அப்புறமா வச்சிக்கலாம்... அது என்னைக்குந்தான் இருக்கு... நீ கொஞ்சம் உன்னை ரெடி பண்ணிக்கோ...'

'இப்போ நீங்க ரெண்டு பேரும் சேர்ந்துதான் என்னைப் படுத் தறீங்க... எனக்கு உடம்பு முடியாத நாள்ல இதென்ன கூத்து?'

சொல்லிக் கொண்டே பாத்ரூமுக்குள் போய் கதவைப் படா ரென்று அடைத்துக் கொண்டாள் ஆர்த்தி. உடம்பும் முடில... மனசும் முடிலதான்... அது அவளுக்கு மட்டுமே தெரியும்... எப்படிச் சொல்வது? எப்போது சொல்வது?

அவள் உடல் நலத்தை மேலும் அல்லது மறுபடியும் உறுதி செய்யாமல் முடிவு செய்தது தவறுதானோ என்று நினைத்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பாலாமணி யும் சந்திரசேகரும்.

ushadeepan@thaiveedu.com

ஃப்ரெடிரிக்கோவின் வல்லூறு

ஜியோவன்னி பொக்காஷியோ

தமிழில்: **என்.கே. மகாலிங்கம்**

(ஜியோவன்னி பொக்காஷியோ (ஜூன் 16, 1313 - டிசம்பர் 21, 1375) இத்தாலிய தேசத்தவர். மறுமலர்ச்சி கால மனிதநேயவாதி, கவிஞர், எழுத்தாளர். இடைக்கால, மறுமலர்ச்சிகாலச் செல்வாக்கு இவருடைய படைப்புகளில் இருப்பதற்காக இவர் கொண்டாடப்படுகிறார். இவரும் பெற்றாக்கும் லத்தீன் மொழியைக் கைவிட்டு, ஆரம்ப கால தஸ்கான் வட்டார மொழியைத் தங்கள் படைப்புகளில் பயன்படுத்தி எழுதினார்கள். அவருடைய தலைசிறந்த படைப்பாக டெக்காமரன் கணிக்கப்படுகிறது. அதில் நூறு கதைகள் உள்ளன. டெக்காமரன் என்றால் பத்து நாட்கள். பத்து நாட்கள் கொள்ளை நோய்க்குப் பயந்து ஃப்ளொரென்ஸ் நகரில் இருந்து வெளியேறி ஒரு வீட்டில் ஏழு பெண்களும் மூன்று ஆண்களும் வாழ்கிறார்கள். அவர்கள் மாறி மாறி நூறு கதைகள் சொல்கிறார்கள். அந்தக் கதைகளே அவை. அவற்றில் காதல்கள், பகிடிகள், குறும்புகள், நன்னெறிப் பாடங்கள் ஆகியவை கலந்துள்ளன.

அவரும் தாந்தேயும் பெற்றாக்கும் இத்தாலிய மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர்கள். அவரின் பாதிப்பு ஆங்கில இலக்கியத்தின் ஆரம்ப கால எழுத்தாளரான ஜியஃப்ரி சோசரிடமும் (கன்டர்பெரி ரேல்ஸ் எழுதியவர்), ஸ்பெயின் நாட்டவரான டொன் கயாற்றோ எழுதிய மிக்கேல் செர்வான்ரிஸ், நாடக ஆசிரியரான லோபெ டி வேகவிடமும் உள்ளது என்று சொல்கின்றனர். 14-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய இலக்கியத்தில் மிக முக்கியமான எழுத்தாளர்களில் இவரும் ஒருவர்.

இறுதிக் காலத்தில் உடல் பருமன் அடைந்து பல நோய்களுக்கு உள்ளானார். இறுதியில் அறுபத்திரண்டு வயதில் மாரடைப்பால் காலமானார்.)

ஒரு காலத்தில் ப்ளொறென்ஸ் நகரத்தில் ஃப்ரெடிரிக்கோ என்ற பெயருடைய ஓர் இளைஞன் வாழ்ந்தான். அவன் திருவாளர் ஃபிலிப்போ அல்பேறிகியின் மகன். அவன் போர்களில் காட்டிய வீரத்திற்காக மேல் மத்திய இத்தாலிப் பகுதியிலுள்ள தஸ்கனி நகரத்தில் மிகவும் புகழ்பெற்றவன். கௌரவமானவன். தஸ்கனி அரசின் தலைநகரம் ப்ளோறென்ஸ். பல கனவான்களுக்கும் நிகழ்வது போல அவனும் மொனா ஜியோவன்னா என்ற சீமாட்டியிடம் ஒரு தலையாகக் காதல் கொண்டான். அவளும் அவள் காலத்தில் ப்ளொறென்ஸ் நகரிலே அழகானவள் என்றும் கவர்ச்சிகரமானவள் என்றும் பெயர் பெற்றவள். அவளின் காதலை வெல்லக் குதிரையில் ஏறி யுத்தம் செய்யும் போட்டிகளில் அவன் பங்கு பற்றினான். விருந்துகள் கொடுத்தான். பணத்தைக் கண்டபடி செலவளித்தான். அவள் அழகானவள் மட்டுமல்ல ஒழுக்கத்திலும் சிறந்தவளாக இருந்தாள். தன் மேல் கொண்ட ஒரு தலைக் காதலால் அவன் செய்யும் செயல்களைப் பற்றி அவள் அதிகம் அக்கறை காட்டவில்லை. அவனைப் பற்றிக் கவலைப்படவும் இல்லை. அப்பொழுது அவன் தன்னிடம் உள்ள செல்வத்திலும் பார்க்க அதிகமாக செலவழித்ததனால் அவனிடம் இருந்த செல்வம் முழுவதும் கரைந்து அவன் ஏழையாகிவிட்டான். கடைசியில் அவனிடம் எஞ்சி இருந்தது, ஒரு சிறிய பண்ணையும் ஒரு வல்லூறும் மட்டுமே. அந்தப் பண்ணையிலிருந்து வந்த சிறிய வருமானத்தில் மட்டும் தான் அவன் வாழ்ந்தான். அவனிடம் இருந்த மற்றச் செல்வம், வல்லூறு. அது அவனுக்கு உலகிலே மிகவும் சிறந்த செல்வம்.

ஒருபோதும் இல்லாத அளவு மொன்னா ஜியோவின்னாவில் அவன் காதல் கொண்டிருந்ததனால் அவன் விரும்பியது போல அந்த நகரத்தில் வாழ முடியாது என்று நினைத்து அவனுடைய சிறிய பண்ணை இருந்த காம்பி என்ற இடத்திற்கு வாழ்வதற்குச் சென்றான். அங்கே அவனால் முடிந்த நேரம் எல்லாம் தன் பறவையை வைத்து வேட்டையாடித் தன் நேரத்தைப் போக்கினான். எவரிடமும் அவன் எதையும் யாசிக்காமல் ஏழ்மையை பொறுமையாகத் தாங்கி வாழ்ந்தான். வாழ்வதற்கு அவனிடம் எதுவுமே இல்லை என்ற நிலைமை.

அந்த நேரத்தில்தான் மொன்னா ஜியோவன்னாவின் கணவனும் நோய்வாய்ப் பட்டான். மரணம் அண்மிக்கப் போகிறதென்று தெரிந்து அவன் தன் கடைசி உயிலை எழுதினான். அவன் பெரும் பணக்காரன். அவனுடைய மகன் வளர்ந்து கொண்டு வந்தான். அவன்தான் அவனுடைய ஒரே வாரிசு. அவனுக்கே தன் முழுச் சொத்தையும் எழுதி வைத்தான். மொன்னா ஜியோவன்னாவையும் மிகவும் நேசித்தான். அவனுடைய மகன், முறையான வாரிசு எவரும் இல்லாமல் இறந்து போனால் அவளுக்கு அந்தச் சொத்துகள் போக வேண்டும்

tg.theeban@gmail.com

என்றும் அந்த உயிலில் எழுதி வைத்திருந்தான். அதன் பின் அவன் இறந்து போனான்.

மொன்னா ஜியோவன்னா இப்பொழுது விதவையாகிவிட்டாள். எங்கள் பெண்களிடையே உள்ள வழக்கத்தின்படி ஃப்ரெடிரிக் கோவின் பண்ணைக்கு அருகில் இருந்த கிராமத்திற்கு அவள் தன் மகனுடன் சென்றாள். அங்கேயும் அவளுக்கு நிலபுலம் இருந்தது. அங்கே அவளுடைய இளம் மகன் ஃப்ரெடிரக்கோ வுடன் நட்பாகினான். பறவைகளுடன் விரும்பி விளையாடி னான். நாய்களுடன் வேட்டைக்குச் சென்றான். ஃப்ரெடெரிக் கோவின் வல்லூறு பலமுறை பறப்பதைக் கண்ட அவன், அது அவனுடையதாக இருக்கக் கூடாதா என்று ஏங்கினான். ஆனால் அதைக் கேட்க அவனுக்குத் துணிவு வரவில்லை. ஏனெனில் ஃப்ரெடிக்கோ அதை அப்படி அன்புடன் வளர்த்து வந்தான். அப்பொழுது அந்தச் சிறுவன் நோய்வாய்ப்பட்டான். அவனுடைய தாய் மிகவும் கவலையடைந்தாள். அவன்தான் அவளுடைய ஒரே மகன். அவனை அவள் மிகவும் நேசித் தாள். நாள் முழுவதும் அவன் பக்கத்தில் இருந்து அவனைச் சீராட்டினாள். அவன் எதையாவது விரும்புகிறானா என்று கேட்டாள். எதை விரும்பினாலும் அவள் நிச்சயமாக வாங்கித் தருவதாகச் சொன்னாள். அதைப் பலமுறை அவள் சொன்ன தும் அவன் சொன்னான். 'அம்மா, ஃப்ரெடிரிக்கோவின் வல் லாறை வாங்கித் தந்தால் நான் விரைவில் குணமடைந்து விடுவேன்,' என்றான்.

அவன் அதைக் கேட்டபோது அவள் ஒரு கணம் திகைத்து விட்டாள். என்ன செய்யலாம் என்று யோசித்தாள். ஃப்ரெடி ரிக்கோ அவளைப் பல காலம் விரும்பினான் என்பது அவ ளுக்குத் தெரியும். ஆனால் அவள் அவனை ஒரு நாளும் திரும்பிப் பார்த்தது கூட இல்லை. அதனால் அவள் தனக் குள்ளே இப்படிச் சொல்லிக் கொண்டாள்.

'எப்படி நான் அவனிடம் போய் அல்லது யாரை விட்டாவது அதைக் கேட்க முடியும்? அதுதான் அவன் வருவாய்க்கு உத வும் அவனிடம் இருக்கும் ஒரேயொரு பறவை என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அத்துடன் அந்தப் பறவை அழகாகப் பறக் கும் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். கூர் உணர்ச்சியற்ற ஒருத்தி போல எப்படி நான் அதை அவனிடம் இருந்து வாங்கு வது?

இப்படியான எண்ணங்களில் அவள் மூழ்கினாள். ஆனால் அவள் கேட்டால் அவன் நிச்சயம் தருவான் என்பதையும் அவள் உள்ளூர அறிந்திருந்தாள். அவளுடைய மகனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திகைத்தாள். இறுதியில், அவள் தன் மகனில் வைத்த அன்பினால் அவனை மகிழ்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தினால் என்ன விளைவு வந்தாலும் பரவாயில்லை என்று நினைத்து ஃப்ரெ டிக்கோவிடம் எவரையும் அனுப்பாமல் தானே சென்று அதைக் கேட்க விரும்பினாள். அதனால் தன் மகனுக்குச் சொன்னாள்,

'மகனே, ஆறுதலாக இரு. நீ குணமடைய வேண்டும் என்று விரும்பும் நான் உனக்கு உறுதி அளிக்கிறேன். நாளை காலையே அங்கே சென்று அதை வாங்கி வருவேன்,' என்றாள்.

மகன் மகிழ்ந்து போனான். அடுத்த நாள் காலை, அந்தச் சீமாட்டி இன்னொரு பெண்ணுடன் ஒரு சிறு நடை போவது போல ஃப்ரெடிக்கோவின் எளிய வீட்டுக்குச் சென்று அவன்

இருக்கிறானா என்று கேட்டாள். வல்லூறை வைத்துப் பறவை பிடிக்கும் பருவம் அது இல்லாதபடியால் அவன் தன் பழத் தோட்டத்தில் நின்று ஏதோ வேலை செய்து கொண்டிருந்தான். வீட்டின் கதவடியில் மொன்னா ஜியோவன்னா தன்னை விசா ரிப்பதைக் கேட்டு அவன் மிகவும் ஆச்சரியப்பட்டு அங்கே ஓடி வந்தான். அவன் வருவதைக் கண்டு அவளும் பெண்ணுக் குரிய வசீகரத்துடன் அவனுக்கு வணக்கம் சொன்னாள். ஃப்ரெ டிரிக்கோ அவளை மரியாதையாக வரவேற்றவுடன் அவள் சொன்னாள்.

'வணக்கம், ஃப்ரெடிரிக்கோ! நீ என்னை ஒரு தலையாகக் காத லித்தது எனக்குத் தெரியும். அதனால் எனக்காக தேவையில் லாமல் அடைந்த துன்பமும் எனக்குத் தெரியும். அதற்காக வருந்தி, ஈடுசெய்யத்தான் இப்பொழுது நான் வந்திருக்கிறேன். நானும் என்னுடன் வந்திருக்கும் இவளும் இன்றிரவு உன் வீட்டில் உன் எளிய உணவை உண்ண வந்திருக்கிறோம்.'

அதற்கு ஃப்ரெடிரிக்கோ பணிவாக விடையளித்தான். 'மடொன்னா, உன்னால் நான் எந்தவித துன்பத்திற்கும் ஆளானதாக எனக்கு நினைவில்லை. மாறாக, உன்னால் நான் பெரும் நன்மையே பெற்றிருக்கிறேன். அதற்கு நான் தகுதி பெற்றவனானது உன்மேல் வைத்த காதலால் தான். உன்னுடைய தாராளமான வருகை எனக்கு மிகவும் அருமை யானது. அது என் இறந்த காலத்தை நான் திரும்பவும் வாழ அனுமதிக்கும். ஆனால் நீ இப்போது ஓர் ஏழை விருந்தாளி யிடம் வந்திருக்கிறாய்.'

அதை அவன் சொன்ன பிறகு அவளைத் தன் வீட்டுக்குப் பணிவாக அழைத்துச் சென்றான். அங்கிருந்து தன் தோட்டத் திற்கு அழைத்துச் சென்றான். அங்கே அவளுக்குத் தகுதியான துணையாக இருப்பதற்கு வேறெவரும் இல்லாததால் அவன் சொன்னான்.

'என் சீமாட்டியே, இங்கு வெறெவரும் இல்லாததால் நான் மேசையை ஒழுங்குபடுத்தும் வரை இந்தத் தொழிலாளியின் மனைவி உன்னுடன் துணையாக இருப்பாள்,' என்றான்.

அவன் மிகவும் ஏழையாகி விட்டாலும், தான் எப்படி ஏழை ஆனேன், எப்படித் தன் செல்வத்தை அழித்தேன் என்பதைப் பற்றி அவன் சிறிதும் யோசிக்கவில்லை. அவளை உபசரிப்ப தற்கும் கௌரவப்படுத்துவதற்கும் தன்னிடம் எதுவும் இல்லை என்பதை உணர்ந்தபோது தான் அவன் தன் காதலுக்காக எண்ணற்ற மனிதரை முன்பு உபசரித்துத் தன் செல்வத்தை எல்லாம் வீணடித்தான் என்பதை நினைத்துக் கொண்டான். அந்தத் துக்கத்தில், அவன் தன்னையும் தான் அழித்த செல் வத்தையும் சபித்துக் கொண்டான். கடுமையான மனவெழுச் சியில் அங்குமிங்கும் ஓடினான். இருந்தும் அவனால் பணத் தையோ அடகுவைக்கக் கூடிய பொருளையோ எங்கும் எடுக்க முடியவில்லை. நேரம் இரவாகிக் கொண்டிருந்தது. கனிவான சீமாட்டியைக் கௌரவிக்கும் விருப்பம் பெரிதாக இருந்தது. ஆனால் மற்றவர்களிடம் உதவி கேட்க அவன் விரும்ப வில்லை. தன் வேலையாளிடம் கூடக் கேட்க விரும்பவில்லை. அந்த நேரத்தில் தன்னிடம் இருந்த வல்லூறைப் பார்த்தான். அது சிறியதொரு அறையில் குந்தி இருந்தது. வேறொரு வழி யும் இல்லாதபடியால் அந்தப் பறவையை எடுத்துக் கொண் டான். அது பருமனாக இருந்தது. அந்தச் சீமாட்டிக்கு நல்ல உணவாக அது இருக்கும் என்று நினைத்தான். மேலும் எதையும் சிந்திக்காமல் அதன் கழுத்தைத் திருகி தன் வேலை யாளிடம் கொடுத்தான். அதன் இறகுகளைப் பிடுங்கிய பின் நெருப்பில் கவனமாக வாட்டுவதற்கு அதைத் தயார் செய்யச் சொன்னான். பின் உணவு மேசையில் தன்னிடமிருந்த மிகவும் வெண்மையான மேசை விரிப்பை விரித்தான். பின் மகிழ்ச் சியான முகத்துடன் தோட்டத்திலிருந்த சீமாட்டியை சந்தித்து இரவுணவு தயார் வாருங்கள் என்றான்.

சீமாட்டியும் அவளுடன் வந்தவளும் எழுந்து ஃப்ரெடிரிக்கோ வுடன் மேசைக்குச் சென்றார்கள். ஃப்ரெடிரிக்கோ பெரும் பக் தியுடன் அவர்களுக்கு உணவு பரிமாறினான். அவர்கள் வல் லூறு இறைச்சியை அது என்ன என்று தெரியாமல் சாப்பிட் டார்கள். இரவுணவு முடிந்த பின், மேசையை விட்டு நீங்கி, சில நிமிசங்கள் அவர்கள் இனிய உரையாடலில் நேரத்தைச் செலவழித்தார்கள். சீமாட்டி தான் சொல்ல வேண்டிய விச யத்தைச் சொல்கிற நேரம் வந்து விட்டதை உணர்ந்து ஃப்ரெ டிரிக்கோவிடம் கனிவான வார்த்தைகளில் இப்படிச் சொன்னாள்.

'ப்ரெடிரிக்கோ, உன்னுடைய கடந்த கால வாழ்க்கையையும் என்னுடைய நல்லொழுக்கத்தையும் எண்ணிப்பார். என் நல் லொழுக்கத்தை சிலவேளை கொடுமையானது என்றோ, குரூ ரம் என்றோ நீ நினைத்திருக்கலாம். நான் ஏன் இங்கே வந் தேன் என்பதைப் பற்றி நீ வியப்படைந்திருக்கலாம் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. நான் இங்கு வந்ததின் முக்கிய காரணம் இதுதான். உனக்குக் குழந்தைகள் இருந்திருந்தால் பெற்றோர் அவர்களின் மேல் வைத்த அன்பு எப்படி வலிமை யானதென்று உனக்குத் தெரிந்திருக்கும். அதை நான் சொல் வதையிட்டு நீ என்னை மன்னிக்க வேண்டும். ஆனால், உனக் குக் குழந்தைகள் இல்லை. எனக்கு ஒரு குழந்தை இருக் கிறான். அதனால் தாய்மாருக்கே உரித்தான குழந்தைமேல் வைத்த பாசத்தைப் புரிந்து கொள். அந்தப் பாசத்தை என் னால் தவிர்க்க முடியவில்லை. அதன் இயற்கை விதி என்னு டைய சொந்த விருப்பத்துக்கு எதிராக, என் நல்லொழுக்கத் துக்கெதிராக, கடமைக்கு எதிராக என்னையும் அதைச் செய் யும்படி உந்தியது. அதாவது, உன்னிடம் ஒரு பரிசு தரும்படி கேட்கத் தூண்டியது. அந்தப் பரிசு உனக்கு மிகப் பெரும் விலைமதிப்புள்ளது. அது இயற்கை. உன்னுடைய கடுமை யான சூழல் அப்படி. வேறு இன்பமோ மகிழ்ச்சியோ ஆறு தலோ இல்லாதவிடத்து அப்படியான நிலைமைக்கு உன்னை அது உள்ளாக்கி உள்ளது. அந்தப் பரிசு தான் நீ ஆசையாக வளர்க்கும் வல்லூறு. அதை என்னுடைய மகன் மிகவும் விரும் புகிறான். அதை நான் அவனுக்கு அளிக்காவிட்டால் அவனு டைய நோய் மோசமாகி அவனை நான் இழந்து விடவும் கூடும். அதனால் உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன். என்னில் நீ வைத்திருக்கும் காதலினால் அல்ல, அது உன்னை எந்த வகையிலும் கடப்பாடுடையவனாக ஆக்காது. ஆனால் உன் னுடைய பெருந்தன்மையால் இதைச் செய். அந்தப் பெருந் தன்மையால் மேலான அந்தப் பரிசை எனக்களித்து உன் மேன்மையைக் காட்டுவாய் என்று கேட்டுக் கொள்கிறேன். அதை அளித்தால் அந்தப் பரிசினால் என்னுடைய மகனை என்னால் காப்பாற்ற முடியும். அப்படி அளித்தால் அவனை உன்னிடம் என்றும் கடன்பட்டவனாக ஆக்குவேன்.'

அந்தச் சீமாட்டி சொன்னதை அவன் கேட்டபோது அவனால் அதைச் செய்ய முடியாது என்பதையும் அந்த வல்லூறைத்

தான் சமைத்து அவர்களுக்கு விருந்து வைத்தான் என்பதை யும் எண்ணி அவளுடைய முன்னிலையிலேயே அவன் அழுதான். ஏனென்றால் எந்த வார்த்தையையும் அவள் கேட்ட தற்குப் பதிலாக அவனால் சொல்ல முடியவில்லை. அவன் ஏன் கண்ணீர் வடிக்கிறான் என்பதைப் பற்றி அவள் யோசித் தாள். தான் வளர்த்த தன் அருமையான பறவையைக் கொடுக்க வேண்டி இருக்கிறதே என்ற கவலையால் தான் அவன் அழு கிறான் என்று அந்தச் சீமாட்டி நினைத்தாள். அதனால் அது வேண்டாம் என்று சொல்லும் தறுவாயில் அவள் இருந்தாள். இருப்பினும் அவன் அழுதடங்கிய பின் அவனுடைய பதிலுக் காக அவள் காத்திருந்தாள். அப்பொழுது அவன் சொன்னான்.

'என் சீமாட்டியே, உன்னை நான் காதலிப்பதற்கு கடவுள் விரும்பியபோதிலும் அதிர்ஷ்ட தேவதை என் மேல் பலவகை யிலும் பகைமை கொண்டவளாகவே இருந்தாள். அவளிடம் பலமுறை நான் முறைப்பாடு செய்திருக்கிறேன். அவள் செய் தவற்றைப் பார்க்கிலும் இது அப்படிப் பெரிய காரியமல்ல. அவளுடன் திரும்பவும் இனிமேல் எக்காலமும் சமாதானமாக என்னால் இருக்க இயலாது. என் ஏழையின் வீட்டுக்கு எப்படி நீ வந்தாய் என்றும் நான் செல்வந்தனாக இருக்கும்போது நீ என்னில் இரங்கிக்கூட வரவில்லை என்று சிந்தித்துக் கொண் டிருந்தேன். இப்பொழுது நீ சிறியதொரு பரிசு கேட்டாய். ஆனால் அதிர்ஷ்ட தேவதை அதை உனக்குக் கொடுக்க இய லாமல் ஆக்கிவிட்டாள். அது என்ன என்பதை நான் உனக்குச் சுருக்கமாகச் சொல்கிறேன், கேள் என்றான்.

'நீ என்மீது கொண்ட அன்பால் என்னுடன் உணவுண்ண வேண்டும் என்று சொன்னபோது நான் உன்னுடைய மேன்மை யையும் மதிப்பையும் கணக்கில் எடுத்து, உன் நிலைமைக் குப் பொருத்தமான, சரியான உணவு ஒன்றை அளித்து உன்னைக் கௌரவிக்க விரும்பினேன். மற்றவர்களுக்குக் கொடுப்பதிலும் பார்க்க அதிக விலைமதிப்புள்ள உணவைக் கொடுக்க விரும்பினேன். வேறு மதிப்புள்ள பொருள்களிலும் பார்க்க என்னிடமிருந்தது நீ சொன்ன அந்த வல்லூறுதான். அதுதான் என் நினைவுக்கு வந்தது. அதைத்தான் உனக்கு நெருப்பில் வாட்டிக் கொடுத்தேன். இப்பொழுது அதையே நீ வேறொரு காரணத்துக்காகக் கேட்கிறாய். உனக்கு அதை அளிக்க முடியவில்லையே என்ற என்னுடைய துக்கம் எல்லா வற்றிலும் பெரிதாக மேலோங்கி நிற்கிறது. அந்தத் துக்கத் தைத் திரும்பவும் என்னால் தணிக்க முடியாது என்றான்.

அதை அவன் சொன்னதின் பின் வல்லூறின் இறகுகளையும் கால்களையும் மூக்கையும் பறவை இறந்து விட்டது என்பதை நிரூபிப்பதற்காக கொண்டு வந்து அவள் முன்னால் பரவி வைத்தான். அந்தச் சீமாட்டி அதைப் பார்த்த பிறகு, பறவை யைக் கொன்று தனக்கு உணவளித்ததற்காக முதலில் அவ னைக் கடிந்து கொண்டாள். அதன் பின் அவனுடைய பெரும் தாராள மனதிற்காக அவனைத் தனக்குள்ளே பாராட்டிக் கொண்டாள். அந்தத் தாராள மனதை வறுமையால் கூட குறைக்க முடியவில்லை என்பதையும் நினைத்துக் கொண் டாள். அந்தப் பறவையைப் பெற முடியாது என்பதையும் தன் மகனுடைய நோயையும் குணப்படுத்த முடியாது என்பதனை யும் தெரிந்த பின், தன்னைக் கௌரவப்படுத்தியதற்காகவும் அவனுடைய நல்ல குணத்திற்காகவும் ஃப்ரெடிக்கோவிற்கு நன்றி சொல்லிவிட்டு, துயரத்துடன் தன் மகனிடம் சென்றான். தாயினுடைய பெரும் கவலையைக் கண்டு, தன்னால் அந்த வல்லூறைப் பெற முடியவில்லை என்ற கவலையால் அவ னுடைய நோய் முற்றி ஒரு சில நாட்களின் பின் அந்தச் சிறுவன் இறந்து விட்டான்.

துக்கம் அனுட்டிக்கும் காலம் முடிந்த பின் வாழ்வின்மீது இருந்த கசப்பு அவளுக்கு மறைந்தது. அவளிடம் இளமையும் அழகும் அத்துடன் பணமும் இருந்ததால் அவளுடைய சகோ தரர்கள் அவளைத் திரும்பவும் மணம் முடிக்கும்படி வலியுறுத் திக் கொண்டே இருந்தார்கள். இருந்தும் அவளுக்கு அதில் விருப்பம் இருக்கவில்லை. அவர்கள் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருந்தபோது ஃப்ரெடிரிக்கோவிடம் அவள் கண்ட நற் பண்புகளையும் கடைசியாக அவனிடம் கண்ட தயாள குணத் தையும் நினைத்துப் பார்த்தாள். அவளைக் கௌரவப்படுத்து வதற்காக அவன் விரும்பி வளர்த்த பறவையைக் கொன்று தனக்கு விருந்து அளித்ததையும் நினைத்தாள். அந்த விச யத்தைத் தன் சகோதரர்களுக்கு அவள் சொன்னாள்.

'நான் விதவையாகவே இருக்க விரும்புகிறேன். ஆனால் அது உங்களுக்கு விருப்பமில்லை என்றால் நான் ஒரு கணவனைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால் நான் ஃப்ரெடிரிக்கோவைத் தவிர வேறெவரையும் தேர்ந்தெடுக்க மாட்டேன் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள் என்றாள்.'

அதற்கு அவர்கள் அவளை நையாண்டி செய்து விட்டுச் சொன்னார்கள்.

'நீ ஒரு முட்டாள் பெண். நீ என்ன சொல்கிறாய்? எப்படி அவனை நீ விரும்பலாம். அவன் பெயரில் ஒரு சதம் கூடக் காசில்லை.'

அதற்கு அவள் பதிலளித்தாள். 'என் சகோதரர்களே, நீங்கள் சொல்வது எனக்கு நன்றாகப் புரிகிறது. ஆனால் நான் பணம் இல்லாத ஒருத்தனை விரும்புவேனே ஒழிய பணத்திற்காக என்னைத் தேடி வரும் ஒருத்தனை விரும்ப மாட்டேன்,' என் றாள். அவளுடைய சகோதரர்கள் அவள் அதில் பிடிவாத மாகவே இருக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டார்கள். அத்துடன், ஃப்ரெடிரிக்கோ பிரபுக்கள் வர்க்கத்தைச் சேர்ந் தவன் என்பதையும் அறிந்து அவன் எவ்வளவுதான் ஏழையாக இருந்தாலும் சகோதரி அவனை விரும்பியதால் அவளுடைய விருப்பத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டு, அவளுக்கு செல் வம் முழுவதையும் கொடுத்து, அவனை மணம் முடித்து வைத் தார்கள். அவனும் அப்படியான பெரும் சீமாட்டிக்கு கணவ னாக வந்தான். அவளை அவன் எவ்வளவோ விரும்பினான். அதன் பின் அவன் முன்பு போல் அல்லாமல் அவளுடைய நிதி விவகாரங்களைக் கவனமாகக் கையாண்டான். அதன் பின் அவளுடன் தன் எதிர்கால வாழ்க்கையை இன்பமாகக் களித்தான்.

mahalingam.k@thaiveedu.com

உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...

STANDARD MORTGAGES INC

- Mortgages
- Refinance
- Second Mortgages
- Short Term Secured Loans

SMI

STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial

சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட

Raj Subrayam AMP
Director

80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

Lower rates.
Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

Senthooran Punithavel

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

குறைந்த கட்டணங்கள்
பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பளவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You®

BUYERS

If Yathavann Doesn't Negotiate at Least

$10,000 Off The List Price,

He'll Give You $2000 Cash on Closing.

FREE Home Inspection When You Buy With Us.

Sellers

Your Home SOLD in 60 Days Guaranteed!

OR I'LL SELL IT FOR FREE**

**SOME CONDITIONS MAY APPLY

For More Information On My Exclusive Guaranteed Sales Program

ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA

Free Home Evaluation.
No Cost. No Obligations

RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002

YATHAVANN
SELVARAJAH
Sales Representative

416-992-4474

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவைகள்

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, வாகனம் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agencyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் வழங்கினோரால் பறிமுதலாகப்போகிறது என்ற கவலையா?

- ✔ சேவைக்கான கட்டணம் (Consultation fee) நாங்கள் அறவிடுவதில்லை.
- ✔ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது.
- ✔ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✔ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடன் அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

Corporate Bankruptcy	Bankruptcy	Consumer Proposal
$ 5000 to $7000 + HST	$1800 - $3000 + HST	Zero fee

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

"Empowering Financial Freedom"

309-80 Corporate Drive

Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**

Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

creditsolutioncentre@gmail.com

BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE

Visit your one stop solution center
for all your super visa insurance needs...

SuperVisa.Today

www.supervisa.today #416 321 6000

BUY OR SELL

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com

POWER BROTHERS REAL ESTATE

UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777

@uthayansivarajah @uthayansivarajah

ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED

INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK

MORTGAGE FINANCIAL

Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties

SUBRA
MORTGAGE SOLUTIONS

புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

Residential Mortgages

- 1st & 2nd Mortgages
- Refinance, Renewal & Switches
- Equity Line of Credits

Commercial Mortgages

- 1st & 2nd Mortgages
- Refinance, Renewal & Switches
- Equity Line of Credits

NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com

Powered by MORTGAGE ALLIANCE

WE DEAL WITH ALL BANKS Brokerage # 10330

TD Canada Trust | Scotiabank | First National Financial LP | radius financial
RFA | Equitable Bank | Home Trust | RMG | MCAP

O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.

வீடு வாங்க விற்க...

18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்

ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

வாங்கப் போகிறீர்களா?

- ☒ தரமான வீடு தவறிப்போகாது
- ☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- ☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
- ☒ பெருவருவாய் தரும் முதலீடு

விற்கப் போகிறீர்களா?

- ☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
- ☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- ☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- ☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்

Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: **416-786-0760**
info@vela4homes.com
www.vela4homes.com

Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8

STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

SARVAA CPA
PROFESSIONAL CORPORATION

Our passion is to solve your tax problems:

- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice

Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111

Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com

புது
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6

Daniels FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE

"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licensed Funeral Preplanning Director & After Care Advisor
Licensed Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com

Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN
PURCHASING A NEW
HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Scarborough : C103-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future
Realty Inc., Brokerage
416.568.4301
Vettyvel Law
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah
Realtor
Dir. 647-888 3500
DILEEP Thangavel
Realtor
Dir. 416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை குறைய வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொகையைப் அல்ல
கனவை விலக்க...
Thana
Yoganathan
416.418.5749

வீடு விற்பனை நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225

Ahilan
Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd.,
Brokerage

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMIDGROUP

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
RE/MAX ACE

Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Orbit Solution Centre
416.439.0224
Cell: 416.450.5011


Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
RE/MAX
COMMUNITY
REALTY INC.,

Avazen
416-264-6787
www.4162646787.com
3466 Lawton Ave. East Unit 124, Toronto ON M3K 5J8

Uthayan Alex Sivasambu
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
COLDWELL
BANKER

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
RE/MAX ACE
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
Brokerage

NOW HIRING
JOIN OUR
DYNAMIC TEAM
iNFORCE LIFE
Financial Services Inc.
416-909-0400 Bus. 416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN
RASALINGAM CIM
President & CEO

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
Cell: 416 505 8532

DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524

RE/MAX
077 866 0000
LATHAN VARATHARAJAH
Broker Owner